உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மதுரை மெய்ப்பாத புராணிகரால்

வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட

# திருப்பைஞ்ஞீலி புராணம்

இஃது

சென்னை வரகவி,

திரு - அ. சுப்பிரமணிய பாரதியார் அவர்களால்

பரிசோதிக்கப் பட்டு

திருப்பைஞ்ஞீலி-வாசி ரெயில்வே

ஆபீஸ் ரிடைர்டு ஹெடகிளார்க் - சி. பொன்னுசாமயயர்,

என்கிற

அனந்த நாராயண சாஸ்திரியால்,

சென்னை திருவல்லிக்கேணி

நோபில் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1927

Copy Right Registered.

விலை ரூ 2/-

Forms 1 to 22 and 44 have been printed in this Of
and the rest in Tata Printing Works, Madras.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

---

தமிழ் நாட்டில் பாடல்பெற்ற சிவஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் பலவுள என்பதை பக்திமான்கள் அனைவரும் நன்கறிவார்கள். பெரும்பான்மையான ஸ்தலங்களுக்கு ஸம்ஸ்கிருத பாஷையிலேயே புராணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அத்தகைய புராணங்களைத் தமிழ்ப்புலவர்கள் தமிழில் செய்யுட்களாகப் பாடியிருக்கின்றனர். அப்படிப்பட்ட தமிழ்ப்புராணங்கள் பல உரையுடனும், குறிப்புரையுடனும், பொழிப்புரையுடனும் இவைகளில்லாமலும் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இன்னும் பல ஸ்தலபுராணங்கள் வெளிவாராமல் பனைஓலை ஏட்டுப்பிரதியிலேயே இருந்து வருவதாகவும் அறிகிறோம்

அதுபோல் திருப்பைஞ்ஞீலி என்னும் இந்த திவ்விய ஸ்தலபுராணமும் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுச் செய்யுள் வடிவாய், சொற்பொருட்சுவையுடனும், பாட்டிற்குரிய இலட்சணங்களுடனும், உயர்ந்த நீதிகளும் கற்பனைகளும், மூர்த்தி, ஸ்தல, தீர்த்த விசேஷங்களைப் பாமர ஜனங்கள் எளிதில் உணர்ந்துகொள்ளத் தக்கபடி செய்யுட்களுக்கெல்லாம் பொழிப்புரையுடனும் பனை ஓலை ஏட்டுப்பிரதியில் அமையப்பெற்றதாயிருந்தமையால், முதலில் புராண முழுவதையும் கடுதாசியில் எழுதி முடித்தோம். பின் அதனை அச்சிட வேண்டுமென்கிற அவாவுண்டாயது. அச்சிடுவதற்குத் தக்க பண்டிதருடைய உதவியும் வேண்டியிருந்தமையினால் சென்னை வரகவி ஸ்ரீ அ. சுப்பிரமணிய பாரதியார் அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டு அவர்களிடம் எனது புராணத்தைக்காட்டி எமது கருத்தைத் தெரிவித்துப் பரிசீலனை செய்து தரவேண்டிய பொறுப்பை அவரிடம் ஒப்புவித்தோம். அவர்களும் அன்புடன் அந்தக் கைங்கரியத்தை ஒப்புக்கொண்டு இனிது முடித்தார்கள்

இக்காலத்தில் இப்படிப்பட்ட புராணங்களில் சிரத்தை செலுத்துகிறவர்களைக் காண்பதரிதாயிருக்கின்றமையினாலும் இதைத் தமிழ்நாடெல்லாம் பிரசுரம் செய்யவேண்டியும், ஊர் ஊராய்ச்சென்று பக்தசீலர்களைத் தேடியடைந்து விஷயத்தைக்கூறி அவரவர்களால் அன்புகூர்ந்து அளிக்கப்பட்ட உதவியைக்கொண்டும் இப்புராணத்தை அச்சிட்டு முடித்தோம்

எம்மிடம் அன்புகூர்ந்து எமது வேண்டுகோளுக்கிணங்கி இந்த நூலைப் பக்தி சிரத்தையாய் முழுமனதுடன் நாம் விரும்பியபடி பரிசோதித்துத் தந்த

சென்னை வாசகி, திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் அவர்களுக்கும் பொருளுதவிசெய்த புண்ணியசீலராகிய கனதனவான்களுக்கும் திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியுள்ள நீலிவனநாதர் சகல நன்மைகளையும் போகபாக்யங்களையும் விசேஷ சௌகரியங்களையும் நீடித்த ஆயுளையும் தந்து இதுபோன்ற உத்தமமான ஈச்வரகைங்கர்யங்களை இன்னும் சிறந்த ஊக்கத்துடன் செய்யத்திருவருள் புரிய வேண்டுமென்று அந்த நித்யவஸ்துவின் திருவடி தொழும்பொழுதெல்லாம் நாம் அவர் திருமுன் எடுத்துச் சொல்லாமலிருக்கமுடியாது. அவர்களின் நன்றி என்றும் மறக்கத்தக்கதன்று.

தமிழ்ப் புலவர்களுக்கும், சாஸ்திரவித்பன்னர்களுக்கும், மற்றும் அனுபவத்திலே சிறந்த பெரியோர்களுக்கும் வணக்கமாய்ச் செய்துகொள்ளும் விண்ணப்பம்.—இப்புராணம் பலவேலைத் தொந்தரவுகளுக்கும், பல கஷ்டங்களுக்கும் இடையே கொஞ்ச சாவகாசத்தைக்கொண்டு அச்சிடப்பட்டதாகையால் இதிலுள்ள பிழைகளைப் பொருட்படுத்தாமல், இது சிறந்த சிவபுராணம் என்பதையும் பனைஓலை ஏட்டுப்பிரதியிலிருந்து இப்படிப் பட்ட உருவமடைந்ததைப்பற்றியும் எண்ணி மகிழ்ந்து இதற்குக் கௌரவந்தந்து சகலலோக சரண்யனுகிய அந்த நீலிவன நாதருடைய கிருபை ஏற்படுமாறு ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்

திருப்பைஞ்ஞீலி
வாத்தலை கூடலூர் போஸ்ட்
திருச்சிறுப்பள்ளி ஜில்லா
1927ஆ ஏப்ரலு

இங்ஙனம் அன்பன்:
C. பொன்னுசாமய்யர் என்கிற,
அனந்த நாராயண சாஸ்திரி
ரிடையர்டு ஹெட்கிளர்க்
ரெயில்வே ஆபீஸ், திருச்சிறுப்பள்ளி.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பைஞ்ஞீலி.

திருநாவுக்கரசு சுவாமிகளருளிய,

## திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்த ராகத்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 1

உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
யடைய வல்லவர்க் கில்லை யவலமே. 2

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படை
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3

ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிட மேத்துபைஞ் ஞீலியுள்
என்று மேவி யிருந்த வடிகளே. 4

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த வடிகளே. 5

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்தநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
அண்டர் வாண னடியடைந் துய்ந்தனே. 6

வரிப்பை யாடா வாட்டி மதகரி
யுரிப்பை மூடிய வுத்தம னுறை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. 7

நாடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த வடிகளே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரினன்
வாரு லாமுலை மங்கையோர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. 9

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே,
யரக்கன் பாட வருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிக ளருளியது.

பண்—கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காரு லாவிய நஞ்சை யுண்டிருள்
கண்டர் வெண்டலை யோடுகொண்
டூரெ லாந்திரிந் தென்செய் வீர்பலி
யோரி டத்திலே கொள்ளுநீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர
விப்ப ணியும்பைஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலு
மார ணிய விடங்கரே. 1

சிலைத்து நோக்கும்வெள் ளேறு செந்தழல்
வாய பாம்பது மூசெனும
பலிகொடு [illegible] போது நங்கையிற்
[illegible] பிரானிரே;

மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமு
மன்னு காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியி
லார ணீய விடங்கரே. 2

தூயவர் கண்ணும் வாயு மேனியுந்
துன்ன வாடை சுடலையிற்
பேயொ டாடலைத் தவிரு நீரொரு
பித்த ரோவெம் பிரானிரே
பாயு நீர்க்கிடங் கார்க மலமும்
பைந்தண் மாதவி புன்னையும்
ஆய பைம்பொழில் சூழ்பைஞ் ஞீலியி
லார ணீய விடங்கரே. 3

செந்த மிழ்த்திறம் வல்லி ரோசெங்க
ணரவு முன்கையி லாடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி
மாற்ற மாட்டோ மிடுகிலோம்
பைந்தண் மாமல ருந்து சோலைகள்
கந்த நாறுபைஞ் ஞீலியீர்;
அந்தி வானமு மேனி யோசொல்லு
மார ணீய விடங்கரே. 4

நீறு நுந்திரு மேனி நித்தில
நீணெ டுங்கண்ணி னாளொடுங்
கூற ராய்வந்து நின்றி ரால்கொணர்ந்
திடுகி லோம்பலி நடமினோ
பாறு வெண்டலை கையி லேந்திப்பைஞ்
ஞீலி யேனென்றி ரடிகணீர்
ஆறு தாங்கிய சடைய ரோசொல்லு
மார ணீய விடங்கரே. 5

குரவ நாறிய குழலி னார்வளை
கொள்வ தேதொழி லாகிநீர்
இரவு மிம்மனை யறிதி ரேயிங்கே
நடந்து போகவும் வல்லிரே;
பரவி நாடொறும் பாடு வார்வினைப்
பற்ற றுக்கும்பைஞ் ஞீலியீர்
அரவ மாட்டவும் வல்லி ரோசொல்லு
மார ணீய விடங்கரே. 6

ஏடு லாமலர்க் கொன்றை சூடுதி
ரென்பெ லாம[illegible]செய்வீர்

காடு நும்பதி யோடு கையது
காதல் செய்பவர் பெறுவதென்
பாடல் வண்டிசை யாலுஞ் சோலைப்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லி ரோசொல்லு
மார ணீய விடங்கரே. 7

மத்த மாமலர்க் கொன்றை வன்னியுங்
கங்கை யாளொடு திங்களும்
மொய்த்த வெண்டலை கொக்கி றகொடு
வெள்ளெ ருக்கமுஞ் சடையதாம்
பத்தர் சித்தர்கள் பாடி யாடும்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
அத்தி யீருரி போர்த்தி ரோசொல்லு
மார ணீய விடங்கரே. 8

தக்கை தண்ணுமை தாளம் வீணை
தகுணிச் சங்கிணை சல்லரி
கொக்க ரைகுட முழவி னோடிசை
கூடிப் பாடிநின் றாடுவீர்
பக்க மேகுயில் பாடுஞ் சோலைப்பைஞ்
ஞீலி யேனென்று நிற்றிரால்
அக்கு மாலையும் பூண்டி ரோசொல்லு
மார ணீய விடங்கரே. 9

கையோர் பாம்பரை யார்த்தோர் பாம்புக
ழுத்தோர் பாம்பவை பின்புதாழ்
மெய்யெ லாம்பொடி கொண்டு பூசுதிர்
வேத மோதுதிர் கீதமும்
பைய வேவிடங் காக நின்றுபைஞ்
ஞீலி யேனென்றீ ரடிகணீர்
ஐய மேற்குமி தென்கொ லோசொல்லு
மார ணீய விடங்கரே. 10

அன்னஞ் சேர்வயல் சூழ்பைஞ் ஞீலியி
லார ணீய விடங்கரை
மின்னு நுண்ணிடை மங்கை மார்பலர்
வேண்டிக் காதல் மொழிந்த சொல்
மன்னு தொல்புகழ் நாவ லூரன்வன்
றொண்டன் வாய்மொழி பாடல்பத்
துன்னி யின்னிசை பாடு வாருமை
கேள்வன் சேவடி சேர்வரே.

திருச்சிற்றம்பலம்.

# திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிக ளருளியது.

## பண் — காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

ஆரிடம் பாடில ரடிகள் காடலால்
ஓரிடங் குறைவில ருடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே 1

மருவிலார் திரிபுர மெரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலா ரவர்களைத் தெருட்ட லாகுமே 2

அஞ்சுரும் பணிமல ரமுத மாந்திதேன்
பஞ்சுரம் பயிற்றுமைபைஞ் ஞீலி மேவலான்
வெஞ்சுரந் தனிலுமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே 3

கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேற்
பாடல்வண் டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடல ராணலர் பெண்ணு மல்லதோர்
ஆடலை யுகந்தவெம் மடிகள் வல்லரே. 4

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலா வருபுனற் சூழ றங்கினான்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. 5

விடையுடைக் கொடிவல னேந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளோர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுர னல்லனே. 6

தூயவன் தூயவெண் ணீறு மேனிமேற்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவ னெனைச்செயுந் தன்மை யென்கொலோ 7

தொத்தின தோள்முடி யுடைய வன்றலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்

மூத்தினை முறுவல்செய் தாளோர் பாகமாப்
பொதினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே. 8

நீரிடைப் போதுறை வானு மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே 9

பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையுஞ்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே. 10

கண்புனல் விளைவயற் காழிக் கறபகங்
கண்புண ரருமறை ஞான சம்பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பினை வுலகினி லோங்கி வாழ்வர்.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் ... நீலகண்டேச்சுரர்.

தேவியார் ... விசாலாக்ஷியம்மை.

நாடு ... ... சோழநாடு.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அட்டவணை


| அத்தியாயம் | விவரம் | பக்கம் |
| --- | --- | --- |
| | மூவர் பாடல் | 1-6 |
| | பாயிரம் | 1 |
| | புராண வரலாறு | 12 |
| 1. | அகஸ்தியர் கும்பகோணம் அடைந்தது | 17 |
| 2. | விமலாரண்ணிய மகிமை | 27 |
| 3. | சுவேதகிரி மகிமை | 41 |
| 4. | துர்க்கை பூஜையின் மகிமை | 64 |
| 5. | சகஸிரதியாக மகிமை | 74 |
| 6. | கபாலமோசன மகிமை | 83 |
| 7. | இரதன சபையின் மகிமை | 91 |
| 8. | தேவேந்திரன் பூஜை செய்த மகிமை | 99 |
| 9. | காமதேனு பூஜை செய்த மகிமை | 110 |
| 10. | ஆரணியவிடங்கர் மகிமை | 119 |
| 11. | அதிகாரவல்லவர் மகிமை | 134 |
| 12. | அக்னி பூஜை மகிமை | 151 |
| 13. | வாயு பூஜை மகிமை | 152 |
| 14. | தாற்பியர் பூஜையின் மகிமை | 161 |
| 15. | ஸ்ரீராமர் பூஜையின் மகிமை | 189 |
| 16. | நரசிங்க பூஜையின் மகிமை | 208 |
| 17. | கலியுக ராமபாண்டியன் பூஜையின் மகிமை | 220 |
| 18. | முசுகுந்த சோழன் பூஜையின் மகிமை | 236 |
| 19. | வியாக்ர சூரன் பூஜையின் மகிமை | 250 |
| 20. | அர்ச்சுனன் பூஜையின் மகிமை | 269 |
| 21. | சிவமித்ரன் யாக மகிமை | 285 |
| 22. | பதும கர்ப்பன் உபதேச மகிமை | 298 |
| 23. | சுதர்மன் பதவியடைந்த மகிமை | 300 |
| 24. | அங்கமித்திரன் சாபவிமோசனம் பெற்ற மகிமை | 312 |
| 25. | அப்பருக்குக் கட்டமுது அளித்த மகிமை | 342 |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருப்பைஞ்ஞீலி ஸ்தல புராணம்.

## பாயிரம்.

### விநாயகர் துதி

கமல பதிதிகிரி கரதல முரகரி
அமரர்கள் மகபதி அமல முனிவர்கள்
தமது நினைவின்வழி தருபதி னொருகரன்
எமது தரளகிரி யிபமுக னடிதுணை. (1)

(பொழிப்புரை.) தாமரைமலர்வாசியாகிய பிர்மதேவனும் சக்கராயுதத்தைக் கையிலே தரித்திருக்கின்ற மகா விஷ்ணுவும் தேவேந்திரன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் சிவரூபம் படைத்த நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் தங்கள் தங்கள் மனதிலே வேண்டும் வரப்பிரஸாதம் பெறும்பொருட்டுத் துதித்து வணங்கும்போது அவரவர்கள் இச்சைப்படி வரமருள்கின்ற பதினொரு கரத்தோடுகூடிய எமது முத்துமலையிலே எழுந்தருளியிருக்கிற ஆனை முகவனாகிய மகா கணபதியின் திருவடியைத் துணையாகக் கொள்வாம்

### ஸ்தல விநாயகர்

நிதிபெரு வளங்களும் நிகரில் கல்வியும்
கதிகருமெய்ஞ் ஞானமும் கதிக்கத் தந்திட
மதித்தபைஞ் ஞீலியின் வசந்த மண்டபத்
துதிக்கையா னிணையடி துதித்துப் போற்றுவாம். (2)

குபேர ஸம்பத்தையும் ஆதிசேஷனைப்போல் நிகரில்லாத கல்வியையும் ததீசி மகா ரிஷியைப்போல் சாயுஜ்ய பதத்துக்கேதுவான மெய்ஞ்ஞானத்தையும் மென்மேலும் அருளும்படி தென் கைலாசமென்று மதிக்கப்படுகின்ற திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்திலே வஸந்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற துதிக்கையையுடைய விக்கினேசுவரரின் இரண்டு பாதாரவிந்தங்களையும் ஸ்தோத்திரஞ்செய்து வணங்குவாம்,

## சிவ பெருமான்

பாதார விந்தபரா பரைதனில்மா யாதருவுற் பதத்தி யாகிப்
பூதாதி நாதரெழும் பணைகள்விரித் தகிலாண்ட புவனகோடி
மீதான கனிகளைததரு துயிர்வரிவண் டினங்களுண்டு விளங்க நோக்கி
யாதார மாகியபைஞ் ஞீலிநித்த னடிவணங்கி யருளைச சார்வாம். (3)

அகண்டாகாச வெளியாகிய பராபரையின் பாதநூபுரத்தினிடமாகப் பரமும், அந்தப் பரத்தினிடமாகச சிவமும், அந்தச் சிவத்தினிடமாகச் சக்தியும், அந்தச் சகதியினிடமாக நாதமும், அந்த நாதத்தினிடமாக விந்துவும் தோன்ற அந்த விந்துவினிடமாகத் திரோதான சக்தியாகிய மாயை எனகிற விருக்ஷமானது தோன்றி, அந்தவிருக்ஷத்தினிடமாகப் பஞ்சபூதங்களுடனே கூடின பஞ்ச கர்த்தாககளாகிய கிளைகளும் அந்தக கிளைகளினிடமாக அகில புவனமென்கிற தழைதழைத்து அந்தத்தழையினிடமாகப் பலவாயிரங் கோடி அண்டங்களென்கிற பூவாகிக காய்தது அநதக்காயினிடமாக மோகமென்கிற கனி பழுத்து அந்தக்கனியினிடமாக ஆதமகோடிகளான வண்டானது மொய்த்துக் கொண்டு சஞ்சிதமாகிய பாசங்களைப் புசிக்கும்படி உண்டாகிய உலகஙகளைப் பிரகாசிக்கக காப்பாறறும் பொருட்டாகத் திருககணகளினாலே நோககிப் பின்னுமிதற்கெல்லாம் ஆதாரமாகிய மூலமான திருப்பைஞ்ஞீலியிலே நித்தியனாய் எழுந்தருளியிருக்கின்ற நீலிவனநாதரின் பாதாரவிநதங்களை வணஙகிச சிவானுபூதியைப் பெறுவோம்.

## சபாபதி

துதியைமொழிந் திதமிகுபத் தியினையுணர்ந தருசசனைசெய் தொடர்பை வேதன், விதியைவெல்லுந திறநதருசந நிதியையக லாதிருக்கும விருப்பை மோட்சக், கதியையென்னு வினிலதிக நடமிடுபா ரதியையருள் கடாட்சங் கூர, மதியைவர நதியையணி நிதியைரத்ன சபாபதியை வணஙகி வாழ்வாம். (4)

ஸ்தோத்திரஙகளைச் செய்து மிகுநத இதமாகிய பக்தியை ஆராயந்தறிந்து அதன் பிரகாரம் பூர்வஜென்மத்திலே சிவபூஜை செய்து, அந்தப் பூஜாபலததினாலே, தொடார்ச்சியாகிய புண்ணிய ஜனனங்கள் எடுககவும பாபம்பணணின தொடர்ச்சியினாலே பொல்லாத ஜன்மததை எடுககவும பிரமமாவானவர் ஓயாமல் எழுதிவிடுகிற தலை எழுத்தை வெல்லுவதற்குத் திறததைததரும் வித்வத்சபை சந்நிதானததை அகலாமலிருககும் விருப்பததையுடையவளும முத்திநிலையைத் தருபவளுமாய்ச் சதாகாலமும அடியேனுடைய நாவிலேயிருந்து நடனமிடுகின்ற சரஸ்வதியின் கிருபா கடாக்ஷமுண்டாகுமபொருட்டு அர்த்த சந்திரனையும் கங்கையையும் சடையிலேயணிந்து கொண்டுள்ள கருணை நிதியாகிய ரத்னசபைக்குக் கர்த்தனை நாயகனை வணங்கி வாழ்வாம்.

## பரமசிவம்

எடுத்தானை விடுத்தானை யடர்த்தானை யுடுத்தானை யெறிமுன னீர்மேல், படுத்தானைத் தடுத்தானைப் படைத்தானைப் படைத்தானைப் பகழி சேர்த்தார், மடுத்தானை வடுத்தானைப் பொடித்தானை நீலிவன மணிமன்றுடல், தொடுத்தானை யடுத்தார்க்கு நடித்தானை முடித்தானைத் துதிசெய்வோமே. (5)

தாருகா வன ரிஷி பத்னிகளின் கற்புகுலையும்படி கங்காளவேஷ மெடுத்தவனை, அதையறிந்த ரிஷிகள் யாகத்தினின்று தன்மீது விடுத்த யானையை உரித்தவனைப் பின்னும் அந்த யானைத்தோ லுடுத்தவனை (அலையோடுங்கூடி பாதாளவாகினிபதியாயவருகிற தீர்த்தமும பல நதியுமகூடிய தீர்த்தமுமமேகங்களை வருஷிக்கிற தீர்த்தமும ஆக இந்த மூன்று தீர்த்தமுங்கூடி முந்நீராகிய சமுத்திர மென்று சொல்லப்படும நதிகளுக்கெல்லாம முதனமையாகிய கங்கையைப் பகீரத பிரயத்தினம பண்ணிக் கொண்டுவந்து பூமியிலே சமுத்திரமாக்குகையால அதற்கு முந்நீரென்று சொல்லப்படும்) முந்நீராகிய சமுத்திரத்திலே கண்வளாந் தருளும மகா விஷ்ணுவானவா நரசிங்கரூபத்திலே வெறி யெடுத்தபோது அதைத் தடுத்து ஆட்கொண்டவனை, உலகம படைக்கின்ற பிரமாவையுண டாக்கின விஷ்ணுவைப் பாணமாகக்கொண்டு திரிபுரங்களை யழித்தவனைத் தன்னு டைய யோகத்துக்கு விக்கினமாகப் பாணந்தொடுத்த மனமதனைச் சாமபராக்கின வனை, நீலிவனமான இரத்ன சபையிலே நடனம செய்தருள்பவனை, நடன தரிசனத்துக்கு வந்தடுத்த வசிஷ்டருக்காகத் திருமபவும நடனம செய தவனை, சிவமே தெய்வமென்று ஒன்றுபட தியானிப்போர்கள் தங்கள் மன திலே எண்ணும எண்ணங்களை எண்ணியபடி முடிக்கவல்ல பரமசிவனை ஸதோத்திரம செய்வாம

## சக்ரத்தியாகேசுவரர்

### வேறு

கொத்தித்தழிப்புட் பத்தாராதத்தி பச்சறுக்கட டுபபாகீரதி கொத்தரவக்கொத் துசசூழ்வான்மதி மத்தைக்குருக்கத் திபபூவேணி யர், புத்திகொடுக்கப பறறுதேயொரு புத்திரரைத்தர்க் கபபோராடிய பொக்கர்களைத்திக் கறறூர்கேடுற வைத்தழவெந்துக கடபேறற்ந்தவா, பத்தர்களைசசித் தத்தேநாடிய கர்த்தர்வசிட்டாக் கபபோதாடினர், பட் டினியுக்ரித் துச்சோராவகை யபபருணக்கட டுசசோறீபவர், முத்தி கொடுக்கத் தக்கார்சோபித ரத்னசபைககண்வி ருப்பாய்வானவா மொய்த்தவரர்சசிக் கப்பா ரோர்புகழ் முத்துமலைசசக ரதயாகேசுவரர்.

கொத்துடனேகூடிய கொன்றை மாலையும ஆத்திமாலையும் பசுமையான அறுகம்புற்கட்டும் கங்கையும் படத்தைவிரித்துத் தலையெடுததிருக்கினற சர்ப்பங்களும் மூன்றும பிறையும பொன்னூமத்தையும் குருக்கத்திப்பூவும் தரித்தருளிய ஜடாமகுடமுடையவா, புததியிருந்தும் இல்லாதவன்போலச் சிறு பிள்ளையான மார்க்கண்டனுடனே தாககஞ்செயது எதிரததுப்போராடிய அறிவிலிகளான யமனும அவன் கிங்காரும ஆதரவு இல்லாமபோல கெடுதியடைய வைத்து அவாகளழும்படி அவாகளுககுத துனபததையும மதலையாகிய மாாக்கண்டனுககு வயது பதினாறு என்றிருககததக்க பதவியையும் கொடுததவா, சிவபக்தர்களை மனதில தியானிததுககொண்டிருககின்ற காததனாகிய வசிஷடனுக்காக நடனம செய்தருளியவா, பட்டினி யதிகமாய்த தாகசோபததினாலே மூாசசையாய்ச் சோாந்து போகாமல அப்பாஸ்வாமிககுக கட்டமுதுகொடுத்தவா், மோக்ஷங்கொடுககத்தககவா, பிரகாசமான ரதனசபையிலே விருப்பத்துடன் தேவர்களெல்லாம்வந்து நெருஙகி ஆாசிகக விளங்குகிறவா, பூலோகத்தாா ஸ்தோத்திரஞ்செயது புகழாநின்ற முததுமலையில் வாசமாகிய சகாத்தியாகேசு வராாம.

## விசாலாக்ஷியம்மையார்

### வேறு

பரிபுரமு மருமறையும் விரவியொலி நிறைகமல பததத்தினாளை, யரிபுரமும் விதிபுரமு மடியவாகள கொடுததிடததரு தருளசெய் வாளை, யெரிபுரைமே னியாநடிககு மெழிலிரதன சபைதழைகக வினிது மேவுந, திரிபுரைநீ ணெடுஙகண்விசா லாடசிதனைப போறறி யிடர் தீர்நது வாழ்வாம். (7)

தண்டை சிலம்புகளும வேதகோஷ்டங்களும கலநது கலகலவென்று நிரம்பியிருககின்ற பாதத்தை யுடையவளை, தனககுத தொண்டுசெய்யும அடியாாகள் பின்னும் சில அடியாாகளுககு விஷ்ணுலோகததையுா பிரமமலோகத்தையும் கொடுக்கத்தகக தனமை பெறுமபடி அநுககிரகம செயபவளை, அகனி சொரூபமபோலும திருமேனிபடைத்த பரமசிவன் நடனம் செயகினற அழகிய இரதன சபை தழைத்தோஙகி வாழும்படி அங்கு வாசமாயிருககினற திரிபுரையாகிய காதளவு நீண்டு அகன்ற நேத்திரம் படைதத விசாலாக்ஷி தேவியை நமஸ்கரித்து இடரெல்லாம் தீாநது வாழ்வோம்.

## இதுவுமது.

சுருமபிருக்கு மலர்கருவளை தரிததாளைச சிவஞான சொரூபத் தாளை, யரும்பிருக்கு மலர்க்கணையைந தெடுத்தாணைத தடுத்தெனை வந தாட்கொண்டாளை, விரும்பிருக்கும பரவியபே ரொளியெளியேன்

விழிகளிகக வெளிநின் றூளைக், கருமபிருககும வாசகியை நீணெடுங கண் ணுயகியைக் கருத்துட் சேர்ப்பாம். (8)

வணடுகள் வசிககும மலராகிய குவளை மாலையை யணிநதவளை, சிவ ஞானஙகளெல்லாம ஒனறு கூடிவநததுபோலும சொரூபம படைததவளை, முலலையருமபு முதலாகிய புஷபபாணஙகளைக கையிலே எநதியவளுகிய மனமதனை அடியேனிடம வாராதபடி எனனைத தடுததாட்கொணடவளை, விருபபததோடும பெரிதான ரதன தீபப்பிரகாசம போனற ஜோதி ஸவரூபததை எளியேனுகிய அடியேன கணடு களிகூரததககதாக வெளியிலே பிரததியகஷரூபமாய எநநேரமும நிற்பவளை, கருபபஞசாறறிலும அதிக ருசிகரம பொருநதிய வசனஙகளைபபடைதத நீணட கண்களையுடைய அமமனை இருதய கமலததிலே நீஙகாமலிருககுமபடி தியானிபபாம

## விநாயகர்

வானபபோ தகமுயன்மா னுடனவளரம புலியுமறமேரூ மானுமபூமே, லானபபோ தனையுதவு திறலரியோ டுதிததுராந தரியும வேத, ஞானபபோ தனையுடைய வளாகருணை மலைநயநத நடனபாதத, தானபபோ தககததினிரு சரணைபபோ தகஞ்சிரமேற றரிதது வாழ்வாம. (9)

மேகவாணம போனற யானை யுரிபோரதது முயலகனைப பாததிலே தரிததும கையிலே மானையணிநது முடியிலே கஙகையையும ஆததி சநதிரனையும சூடி, நான முகனை யீனற விஷ்ணுவின சகோதரியான பாரவதியுடனும கூடி வேதமாகிற மெயஞஞானப பொருளைககொண்டு ஓஙகுஙகிருபை பொருநதிய முததுமலையில சநதோஷமாக நாததனம பணணு நின்ற திருவடிகளைககொணட மதமபொழியும குஞசாகக னருகிய நிரதத மகாகணபதியின இரணடு பாதார விநதஙகளையும மனதிலே தியானம் செயது எநநேரமும சிரசிலே தரிதது ஆனநததகைத யடைநது வாழ்வாம

## சுப்பிரமணியர் துதி.

பாகைநிகர்த திடுசுரகுரு சரிசொலமு தெனவமுத பததைத் நேராய், நாகநகர்ப பெருமபதஞசிற றிடைகொடிககுப படைகொடிகள் நாக ரீக, மாகனகக் குவடடிபஙக ளைககொடுததும புணாநதானை மயூரத தோகை, வாகனனைக குறவணிதை மோகனனைக் குகனையன் பின் வணஙகு வாமே. (10)

பாகுபோன்ற தெய்வகுஞ்சரியின் அமிர்த வசனத்தை யொத்து விளங்கும் பெரிதாகிய தெய்வலோகத்திலே அமராவதிபட்டணத்திலுள்ள போகளும வஞ்சிககொடிபோன்ற சிற்றிடை படைத்த அநததெய்வயானைக்கு விருதுககொடி படைத்ததுபோலும் நாகரிகமான மகமேருகிரிபோன்ற கொங்கையானைககுக களிற்றானைக கோடுபோன்ற இரண்டு புஜமும கொடுததுப்புணர்ந்தவனைத தோகை படைத்த மயில் வாகனனை, குறககுலததில வளாநத வள்ளியம்மனிடத்திலே அதிமோகஞகிய புருஷனைப் பூமிகருள்ளே வாஸமாகிய தெய்வங்களுககெல்லாம உயாந்த தெய்வமாகிய சுப்பிரமண்ய சுவாமியை அன்பினாலே வணங்குவாம்.

## வீரபத்திரர்

சற்றுண்டா இலுமபோது மமுதமதுண் டாமபையரைச
சாாநது ருமம, லெய்ததுண்ட பசாசுகளபோ லழிமகததி விறைசசி
யுண்ட விமையோ ரெலலாம், மொததுண்டார் மாண்டார்பட டுருண்
டாரென் றேயுரைகக மோதுங கோர, வுததண்ட ரணவீர பததிரன்
றன் இணையடியை யுகநது வாழ்வாம். (11)

தேவாமிருததைதக கொஞசமாஞலும போதுமெனறு பக்ஷணமபண்ணித தெயவ ரமபைகளுடனேகூடித் தெய்வலோகத்திலே இராமல பூமியிலே அநதரமாய நிற்கிற பிசாசுபோல அழியததகக தககனுடைய யாகத்திலே அவிாப்பாக முணணவந்த தேவதைகளெல்லாம் அடிபட்டு மாணடாா என்று சொலலுமபடி தெணடாயுதத்திஞலே அடித்து சஙகரிதத உததணட ரணவீர பததிரரின் உபய பாதங்களையும மகிழ்வுடன பணிநது வாழவோம

## காலபைரவர்.

லீலையொடு திரிசூல மலரயன்சென் னியுங்கரத்தி லேநதி ஞனை,
வேலையனைத் திஞககுமக்னிச சுவாலையனை யெனதுதுன்ப விடாதீர்த
தானை, பாலையனை யநிலாவை நிகாததவெண்ணீற ருனையணி பணி
கபால, மாலையனை ப்ரளயகறப காலவயி ரவனையன்பின் வணஙகு
வோமே. (12)

நிர்வாணதாரியாய்க கையிலே திரிசூலந்தரிதது அதின் நுனியிலே தாமரைமலா வாசனுன பிரம்மதேவன சிரசைககோதது ஏந்திக்கொண்டிருககினறவனை, சமுத்திரம சூழ்நத பூமிககெல்லாம் காவலாகி பூதவேதாளங்களை நிககிரகம பண்ணும்படி அகனிககொழுந்து போலும் ரூபம படைத்தவனை, துன்பமாகிய விகனங்களைத் தீர்த்தருள்பவனைப், பால் போன்ற பூாணசந்திரன் போலும நிறம படைத்த விபூதி தாளிதனைக, கையிலே கபாலம் தாங்கியவனை, மகாபிரளய

கற்பகாலங்களிலே தோன்றி வரப்பட்ட காலாக்கினிருத்திர மூர்த்திக்குச்சமானமாகிய பைரவமூர்த்தியை அன்பினுலே நமஸ்கரிப்பாம்.

## திருஞான சம்பந்த சுவாமிகள்.

சதுரினடத் தியசுருதி யாகமநல் வழிநடத்துஞ் சைவநீதி, பிதிர நடத் தாதநெறி நடத்திநின்ற மறுசமயப் பிணக்குத் தீர, வதிர நடத் திபமானசெய் ரசிதசபை மதுரைவைகை யாற்றி லேசொன், மதுரநடைத் திறனெழுத்தே டெதிரநடத் திடுமகவை வணங்கி வாழ்வாம். (13)

சைவசமய நீதிகள் சிதறும்படி நடவாத நெறியையுலகத்தில் நடத்திவரப்பட்ட பிறசமயமாகிய சமணருடைய தெய்வங்களும் அந்த சமயம் பொருகாலங்களிலேயும் இல்லாமலறுதியாய்ப் போகும்படி, பதினுன்கு லோகமும் திரும்பும்படி, பரமசிவன் நடனம் பண்ணும் வெள்ளியம்பலமான மதுரைக்கருகே விளங்கிய வைகையாற்றிலே சைவசமயமே நிச்சயமென்று சொல்லி எழுதிப் போட்ட ஏடு எதிரேறி நடக்கும்படிசெய்த சம்பந்த மூர்த்தியை வணங்கி வாழ்வாம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

மந்தரநட் டுததிதனைக் கடைந்திமைய வருக்கமுது தவமதித்த, சந்திரன்றேய்ந் தரவுமறச் சுதன்மேனி கறுக்கறுத்த தளர்வுறும், விந்துமலை யாவமர்பைஞ் ஞீலியுறை தயாசமுத்திர மெதிரேவந்து, தந்திடுதெள் ளமுதுகொண்ட செந்தமிழ்வா கீசர்பதந் தலைமேற் கொள்வாம். (13)

திருப்பாற்கடலிலே மந்திரகிரியை மத்தாக நாட்டித் தேவர்களெல்லாரும் தங்களுக்கு அமிர்தம் கடையும்போது அரிதாகிய சந்திரன் தேய்ந்து கயிறாகிய சேஷனுக்கு வேகம்போதாமல் ஆலகால விஷத்தைக் கக்கும்போது அந்தவிஷத்தின் திவலையானது மகா விஷ்ணுவின்பேரிலே பட்டமாத்திரத்திலே திருமேனி கருத்து வாடிமயங்கிச் சோர்ந்ததுபோலச் சரீரங்களெல்லாம் தாபகோபத்தினுலே கருகருத்துத் தளர்ச்சியான மூர்ச்சையாகாதபடி கதலிவனம் சூழ்ந்த முத்து மலையிலிருக்கிற தயாசமுத்திரமாகிய நீலிவனநாதர் எதிராகவந்து தெள்ளமிர்தம்போன்ற கட்டமுது தந்தருளிச்செய்ய அந்த அமுதுகொண்டு அருளிய தமிழினுலே மிகுந்த வாக்கியரான திருநாவுக்கரையர் இரண்டு பாதாரவிந்தங்களையும் தலைமேல் தரிப்போம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

*வருத்து ரைத்து நிறுத்துருக்கிச் சமைத்தபொன்சங் கிலி யணைந்த மார்பி னானைப், பருத்துரைக்காக் கனதனமும் பவளமுமுத் தமுங்கிடைதத பரவை யானை, மிருத்துரைத்த வேதாந்தக் கருத் தைவிரித் துரைத்துமுனி வேந்தர் கேட்கத், தொகுத்துரைதத் துவத்துறைக்குத் தமிழ்த்துரைசுந் தரத்துரையைத் துதித்து வாழ்வாம்.* (15)

*இந்தப் பெண்ணுமென்று மனதிலே வருத்துப் பரமசிவனுடனே சொல்லி நிறைசெய்து உளங்களிந்து பிரவிடை நாயகியான பொன்போன்ற சங் கிலி நாச்சியாரை யணைந்தவனே, மனதினாலும் வாயினாலும் சொல்வதற் கரிதாய் கனத்துப்புடை பிறழ்ந்து இடங்கொண்டு விம்மி ஈர்க்கிடையும் போகாமலிறுமாந்து, அண்ணாந்து இருககப்பட்ா நின்ற ஸ்தனபாரங்களும் செம்பவளம் போன்ற இதழும் முத்துப்போன்ற தந்தமும் படைத்துத் திருவாரூரில் வாசமாகிய பரவை கிடைக்கும்படி சேர்ந்தவனே, மிருத்துச் சொல் லப்பட்ா நின்ற வேதாநதத்தின் சாரமெல்லாம் நன்றாய் விரித்துப் பூலோகத் திலே முனிராஜனுகிப் பரமசிவன் கேட்குமபடி இவ்வளவென்று தொகுத் தறிந்து தேவாரமாகத தமிழிற் செயயப்பட்ா நின்ற தமிழுக்குத துரையாகிய சுந்தரமூாத்தியைத் தொழுது வாழ்வாம*

## மாணிக்க வாசக சுவாமிகள்

*திருநதுவட நிழலைவிடடுக் குருநதநிழ லிடததமரச் சேவின் மீதே, வருஞ்சொரூப மொருமாவின் மீதுவர மூஙகைவெற்றி வாது பாடப், பெருமபுலவர் மூஙகைகளா யிருநதிளநீர் தாங்குமுடி பெரும் பாா தாஙகத், தருமபதிகச செழுநதொடைமுத் தமிழ்வாத வூரர் பதந் தலைமேற கொளவாம.* (16)

*வடவால நிழலிலிருநது சனகாதிகளுககு உபதேசம் பண்ணின வஸ்துவி னுடைய ரூபத்தைத் திருப்பெருநதுறையிலே ஒரு குருந்த மரத்தி னிழலிலே வீற்றிருகக ரிஷப வாகனத்தி லெழுநதருளி யிருககின்ற கைலாசவாசரான சிவரூபததை ஒரு குதிரையின்பேரிலே வரததககதாகவும மீனத்துவச ராஜாவி னுடைய குமாரத்தி ஊமையாயிருகக அநதப்பெண்ணைப் பேசுவித்தும் புத்தாகளல்லாம ஊமையாயிருக்கத் தககதாகவும சமுத்திரம் சூழ்ந்த பூமி யிலே வேதத்தைத தானே பதிகமாகச செழிப்பாயத் திருவாசக மென்னுமபடி தமிழினாலே பாடின வாதவூரில் அவதரித்த அநத மாணிககவாசக சுவாமியின் பாதார விந்தங்களைத் தலைமேலே தரிப்பாம்.*

## திருநந்திதேவர்

பெருநந்தார்ப் பரிக்குமுக சாலைவிசா ரணைகருரிய பிரானு ரான
குருநந்தி நாயகனை முழவுதொனித் திறைநடனக் கூத்துக் கேற்பத
தருநந்தா மணிசசபையின் நெருக்குவிலக் கிசசரையி சரைமேற் ருங்கி
வருநந்தா பரமான திருநந்தி தேசுவரரை வணங்கு வோமே (17)

பெரிதாகிய நந்தினங்களாரப்பரிக்கின்ற தடாகம் சூழ்ந்த பரமசிவன் வாஸ மான கோவில் வாசமுக சாலைகள்தோறும பிரதான விசாரணைக் கர்த்தராகியும் சமஸ்தமான பேர்களுக்கும் குரு ராஜனுகையினுலே தொனிக்கின்ற மத்தள சப்தமானது சுவாமி நடனம பண்ணுகிறதற்கு நேராக முழுக்க மணிச்சபையிலே நெருக்குகிறவர்களை விலக்குகிறவராயும் சிவனநாதரைத் தாங்குகிறவராயுமுள்ள நந்திதேவரை வணங்கு வோம்

## சிவனடியார்கள்

மகனுமிங்கிவா தாதை பெனப்பார்க்கிற் குறைவென்று மறுவென் றூனே, மிகனுமந் துடைத்தமுசு குந்தனைவந் தனைபுரிதாற் பியனே யாதி,சுகநாம முனிக்கருள்செய வசிட்டசிவாசாரியனைத துதித்தெல் லோரும், புகனுமம பூண்டகலி புகராம பாண்டியனைப் போற்று வோமே (18)

நாம் பிள்ளையென்று தகப்பனைப் பார்த்தால் சிவதத்துரோகம வருமென்று தகப்பன் காலையே வெட்டி மோக்ஷமடைந்த சணடேசுவர மூர்த்தியையும சத்துருவாகிய பேரை ஜெயஙகொணட ராஜனுகிய முசுகுந்த சோழனையும சிவத்தியான மறவாமலிருக்கிற வசிஷ்ட சிவாசாரியரையும் ஸ்தோத்திரம் பண் ணுவதுடன் எல்லோரும புகழ்ந்து சொல்லும் கலியுகராம பாண்டிய ராஜனையும் ஸ்தோத்திரம பண்ணுவாம்

### வேறு

பொருப்பின் மேலையா ரருட்சொன் மாலையார்
புனற்பெண் மோகனூர் மலைப்பெண் ணுகனூர்
மருப்புன் ஞகமே யரைப்புன் ஞகமே
மதித்தண் மேனியார் தரிக்கும வேணியார்
உருப்பி னீடுவார் முடிகரும் யோகர்பா
லுருத்தொன் ஞர்களை ரெரிக்கும லீலையார்
திருப்பண் ணேதுவார் கருத்துண் மேவுவார்
திருப்பைஞ்ஞீலியே திருப்பைஞ்ஞீலியே (19)

முத்துமலையின் பேரிலே எழுந்தருளியிருப்பவா ; அருள் மொழியாகிய மூவர் பாடல்களையும் மாலையாகப் புனைந்தவா , கங்கையினிடம் மோகங் கொண்டவா ; அழகுபொருந்திய பார்வதியை அர்த்த சரீரத்திலே வைத்திருப்பவர் ; கோடு பொருந்திய யானைத்தோலை வஸ்திரமாகத் தரித்தவா ; பூர்ண சந்திரனைச் சடையிலே தரித்தவா ; ஆத்திமாலையைச் சடையிலே தரித்தவர்; பஞ்சாக்ஷரத்தை யளவிலலாமல ஜபித்த அஷ்டாங்க யோகருடைய மனதிலே நினைத்தபடி முடிப்பவா ; தம்மை எண்ணாமலிருந்த திரிபுராதிகளை எரிப்பவா; பண்ணுடனே தேவாரங்களை ஓதி ஸதோத்திரம் பண்ணப்பட்ட பேருடைய சிந்தையிலே சதாகாலமும வாஸமாயிருப்பவா , லக்ஷுமிக்குச் சமானமாகிய பசுமை நிறமான நீலியென்னும் தாக்ஷாயபரமேசுவரி தபசு பண்ணுகின்ற திருப்பைஞ்ஞீலியென்னும் ஸ்தலத்திலே எழுந்தருளியிருக்கிற பரமசிவன்

எனப்புண் ணீர்கள்போ லிணைப்பெண் ணேவவே
வயிற்றின் மேவியோர் கருத்தன் னைமலே
நினைத்தெண் ணதெலா மனப்புண் ணகவே
நினைத்தெண் ணைமலே யுடற கன்றுமலே
யினசசொன் மூடர்பா லெனைசசன் மானமா
யினித்த மானியா ரெனப்பண் ணைமலே
சினத்தன் ஞானமேல் வரப்பண் ணைகவுர்
திருப்பைஞ் ஞீலியே திருப்பைஞ் ஞீலியே. (20)

ஸ்திரீ ஜாதியினுடைய இரணங்கள் போலும் அல்குலிலே தேகமானது பன்னீரத் துளிபோலும் பாயந்து சரீரத் துன்பம வரத்தக்கதாக வயிற்றுக்குள்ளே மகவாய ஜனித்து மனதிலே எண்ணுதெல்லாம புண்ணுக நினைத்தெண்ணி யுதாரகினியினாலே உடலானது கன்றுமலும இனமறியாத மூடரிடத்திலே சமானமாயிருந்து என்னை மானபரனென்று புகழ்ந்து கொள்ளாமலும் கோபமாகிய அஞ்ஞானம என்னை வந்தணடாமலும வரப்பிரசாதம தரும் ஸ்தலம் திருப்பைஞ்ஞீலியே யல்லாது பூலோகத்திலே மற்றொரு ஸ்தலமுமில்லை

வேறு

மிருகத்துத் தொலைத்த முத்துமலை
வினைதீர்த் தருளு முத்திமலை
தருக்கும விசால மாடினவர்
தம்முன் வருமன் றுடினவா

இருக்கு முனிதெக் கணகயிலே
யெனததந ததுதெக கணகயிலே
திருப்பெண் பெதுமபைஞ ஞீலிதுணே
சிறககுந திருப்பைஞ ஞீலிதுணே (21)

சிவமித்திர னெனபவனுடைய புத்திரன் அங்கமித்திரனைப் பிடித்த மிருத்துவைத் தொலைத்த முத்துமலே; அடியாாகளுடைய துனப வினையை மாற்றி முகதியைக் கொடுபபது; நிகரினறி விளங்கும விசால புஷ்கரணி தீரத்தத்திலே ஸநாநம பண்ணின பேர்களுககு முன்னுக வருபவா நடனசபையில ஆடியவராகிய சிவபெருமான ரிஷீசுவரா முதலாகிய சிவகணஙகள ஒருகாலமும் பிரியாமல நெருஙகி இருககும ஸதலமென்று சொலலப்பட்டது தெக்ஷிண கைலாசம. லக்ஷிமிபோலும் ரூபீகரித்துப் பெதுமபைப் பருவப்பெணணுன தாக்கைக்குத துணேயாகிச சிறநதஸ்தலமாகிய திருப்பைஞ்ஞீலியே துணே

அமுதுண டிருக்கும் வானரமபை
யாரே ஞீலி வனத்த ரம்பை
சமனைத் திருமப வாவென்றார்
சமரிட டெ திரககு முனாவென்றா
நமலக காத்தா லார்மனமே
கனிநதப பருககுத் தருமனமே
விமலா ரணிய விடங கருததே
மேவா ரணிய விடங கருததே (22)

தேவலோகததிலே அமிர்தததைத தானே புஜிததிருககினற தேவரமபைகளெலலாம தஙகள சரீரம் விட்டுப பூலோக தெக்ஷிண கைலாசமாகிய திருப்பஞ்ஞீல வனத்திலே கதலிவனமாக நெருஙகியிருபபவா நீலிவனநாதா பாதாள லோகததிலே அதோ கதியாகப போன எமனை மீண்டும் அழைத்து அதிகாரம கொடுததவா, யுததமுனையிலே புஷ்பபாணம தொடுதத மன்மதனை வென்றவா, மனஙகனிவாகிக கமலமபோன்ற கையினுலே அப்பருககு அனனங் கொடுததவா, தேவதாரண்ணியமான கதலிவனததிலே நாததனு யெழுநதருளியிருககினறவா, மேலே மாலையாக ஸாபபரபரணஙகளை யணிநதவா.

வேறு.

தோறறிவரு சகாததமா யிரகததுநூற றெருமுப்பத
தொன்ற தாகிய
யேறறியிடும விரோதிசமவத சரமுதறசித திரைமாதத்
தேழாந தேதி

சாற்றுகுரு சத்தமியி லிறைவர்திருப் பைஞ்ஞீலித்
தலபு ராணங்
கீர்த்திமது ராபுரிமெய்ப் பாதபுரா ணிகனரங்
கேற்றி னானே (23)

சாலிவாகன சகாப்தம ஆயிரத்தறுநூற்று முப்பத்தொன்றும வருஷத்துக்கு மேல் செல்லாநின்ற விரோதி யென்னப்பட்ட வருஷம் சித்திரைமாதம் இருபத்தொன்பதாந்தேதி வியாழக்கிழமையும சப்தமியுங் கூடின சுபதினத்தில் இறைவஞகிய பரமேசுவரன் வாஸமாகிய திருப்பைஞ்ஞீலி ஸ்தல புராணத்தைக் கீர்த்தி பொருந்திய மதுரையென்னும பட்டணத்தில் வாஸமாகிய மெய்ப்பாத புராணிகன் தமிழ்ப்படுத்தி அரங்கேற்றினன்.

பாயிரம முற்றிற்று.

---

## புராண வரலாறு

சீரணிவே ணியன்மதிகண் ணியனைபகி லபுரா ண
நிகம ஞான
காரணியை நினைந்துவெண்ணீ றணிந்துபிறப் பறுக்குமணிக
கண்டி பூண்டு
பூரணிபா தியனுதவுந் தருணியமு னையின்மருங் கோரா
புறத்தெந் நாளும
தாரணிகொண் டாடுநைமி சா ரணியந் தனின்முனிவா
தவஞ்செய் தார்கள் (1)

ஜடையிலே கங்காபவானியையும், அர்த்த சந்திரனையும, ஆத்திமாலையையும தரித்திருக்கின்ற பரமேசுவரனையும, அகிலாண்டங்களும அஷ்டதசா புராணங்களும வேதமும சொல்லா நின்ற ஞானப்பிரகாச காரணி யாகிய பார்வதியையும் தியானம்பண்ணி, விபூதி தரித்துப் பிறப்பை நீக்கும ருத்திராக்ஷங்களையும நிரமபத் தரித்து எங்கும நிறைந்திருக்கின்ற ஈசுவரியைப் பாகத்திற் கொண்ட அக்கினி சொரூபராகிய பரமேசுவரரது அருளாலே அதிரூபமபொருந்திய பெண்ணுகிய யமுனை நதியென்னும நதி ஒரு பாரிசமாக, எந்நாளும லோகா லோகங்களை கொண்டாடும நைமசாரணிய மெனனும ஆசிரமத்திலே அநேக முனீசுவரர்கள் தபசு பண்ணினார்கள்.

மாதவராக வியற்றுதவ மேதினியில் வியாதமுனி
வரனென் றேத்தும்
வேதமுனி தருவரப்ர சாதமுனி கோதமுனி
விமல ஞான
போதமுனி யுறுதிபெற்றுத் தன்மயம்போய்ச் சின்மயமாய்ப்
புகும்வாய் மீளா
மூதுணர்வி னகலசுகா தீதமேரா யசூத
முனிவன சாரந்தான் (2)

பூமியின் கண் இப்படி தபசுப்பண்ணப்பட்ட முனீசுவரரொனில் வியாசமுனிவா என்று சொல்லப்படும் வேதமுனி, வரங்களை யருளாநின்ற வரப் பிரஸாதமுனி, கௌதம முனி, பரிசுத்தமான சிவஞானியான போதமுனி என்பவ ராம. இந்த முனீசுவரர்கள் நிஷ்டையிலே உறுதிபெற்றுத் தாமுடைய உடலை மறந்து ஞானாகாரமாய்த் தங்கும் இடத்திற்கு மீளாதபடி முதிர்ந்த அறிவி னாலே அதீதமாகிய சுகத்தை யனுபவிக்கின்ற சூதமகா முனிவர் வந்தார்

தோற்றியமா முனியையெதிர் கொண்டாழ் தனத்தினில்வைத்
துவப்பி னோடு
பாதத்தியங்க ளாதிபூ சனைபுரிந்தா ராசகனா
பரம ஞான
பாத்திரவா னன்றோநின் பதங்காண யாகத்தவப்
பலமோ வென்றார்
தோத்திரங்கள் சொன்னாமுன் னிருந்தாரப்பின் னிருந்தவத்தோர்
சொலவ தானார் (3)

இப்படி யெழுந்தருளிய சூதமகா ரிஷியை எதிர்கொண்டழைத்து வந்து ஆறுகால பீடாசனத்திலே வைத்து சந்தோஷத்துடனும் பாத்தியாசனமாகிய சோடசோபசாரத்துடனும் பூஜை பண்ணினவராய நீர் குற்றமற்ற பரமசிவ ஞானத்துக்குப் பாத்திரரா யிருக்கின்றவ ரல்லவோ, ஆகையினாலே உம்முடைய பாதாரவிந்தங் காண்பதற்கு என்ன தவம் மகிமை செய்தோமோவென்று ஸ்தோத்திரங்களைச் செய்து எதிராக நின்றனா. பின்பு பெருமை பொருந்திய தபசுடைய அந்த ரிஷீசுவரா சொல்லத் தொடங்கினாகள்

பனகமுடி தரித்தமலைப் பரமசரித் திரத்தினும்
பலவாயச் சொன்ன
புனிதசிவ தலத்தினமறை புகழ்திருப்பனையூர் ஸ்ரீயெனும்
புண்ணிய பூமி

தனது சரித் திரமவிளங்கக் கேட்கநினைத் தனமவிருப்புற்
றன்பு கூர்ந்து
மனமகிழவுற் றிடநீவி வனமகிமை யெமக்கறிய
வகுத்தி டென்றார் (4)

சடையிலே சர்ப்பாபரணம் தரித்த கைலங்கிரியான பரமசிவன் வாழும் ஸ்தலங்களினுடைய சிவ சரித்திரம் முன்னமே அடியோங்களுக்கு அதிசயமாய்த் திருவுளம் பற்றினீரன்றோ? இன்னும் புனிதமான சிவ ஸ்தலமாகிய வேதங்கள் புகழாநின்ற திருப்பைஞ்ஞீலி யென்னும் புண்ணிய பூமியான அதனுடைய மகிமையை அடியோங்கள் நன்றாய்க் கேட்கும்படி நினைத்திருக்கிறோம். எங்கள் மேரில் விருப்பத்துடன் கூடிய அன்புவைத்து எங்கள் மனதிற்குச் சந்தோஷத்தை முண்டாகும்படி நீவிவனத்தினுடைய மகிமையை நன்றாய் விரித்து நாங்க ளறியும்படி தெரிவிக்கத் திருவுளம் பற்றியருள வேண்டுமென்றார்கள்.

நீர்கேட்கும் படிவினவி னீரன்றோ ரொருமொழி திருப்பைஞ்
ஞீலி யென்னும்
பேர்கேட்ட முனிகுரவ னேத்தியே தாந்தவுண்மைப்
பிரணவ நாதச்
சீர்கேட்ட தென்னச்செவி பெற்றநிலை யன்முகிழ்த் திருந்தா ன
றியானித் தானமே
லோர்கேட்க வாசகமென் றுடல்புளகித் தநேசவிசெய்
துருகிச் சொல்வான் (5)

இப்படி யாவருங் கேட்பதாகச் சிரவணகுமாரர் வினவிச் சொன்ன வசன மதியில் திருப்பைஞ்ஞீலியின் பெயர் கேட்ட சூதமகாரிஷி தமக்கு ஆசாரி யரானவர் உபதேசம் பண்ணின வேதாந்தத்தின் உண்மையான பிரணவோசை யின் பெருமையைக் கேட்டதுபோலும் கேட்டு இரண்டு செவிகளையும் மூடிக் கொண்டு நேத்திரங்களை மூடிய சமாதியிலேயடைந்து தியானித்து நீக்கிய பாவனையாய் அரசுவென்று மெய்வேர்த்து மிகவும் மனோல்லாசமான படிபடி இந்த வச னம் பிறர் கேட்கலாகாதெனக் கூடல் புளகிதமாக அருகிருந்தவர்கள் செய்து உள்ளங் கனிந்து திருவுளம்பற்றுவார்.

மூளவினையின் றொடாச்சிப்பகன் றருளடையும் பருவம்வந்து
முற்றுங் காலை
மாளவினையின் மிகுத்துயர்ந்த கல்லோக டரிசனமா
மதுவே போல

கேளவிமுனி வராசீங்கள் வினவு திருப் பைஞ்ஞீலி
மேன்மை கேட்கூ
கொளிபெறக் கதித்தமுத்தி வாழ்வுபெற வுமக்கெனக்குங்
கிடைத்த தென்றான (6)

ஜன்மாந்திரங்களிலே பண்ணின பாவத்தொடர்பு விலகி ஜனனமில்லாத முத்தியடையும பருவகாலம் வந்து சேரும காலையில வினையறப்பண்ணும முயற்சியில் மிகுந்தயாத்த ஸாயுஜ்ஜிய பதகாத்தரான பெரியோர்கள தரிசனம அகப்படுவதுபோல் யாகாதி காமங்களைப் பண்ணும முனீச்வரராகிய நீங்கள திருப்பஞ்ஞீலியின மகத்துவத்தைக் கேட்ட மாத்திரத்திலேயும பேரான முத்தியாகிய வாழ்வைப் பெறும்பேறு உங்களுக்கும எனக்கும் கிடைத்தது என்றார் சூதமகாமுனிவர்

ஆனபல கானமருந் தகழ்ந்தலைவோர்க் கெதிர்ந்துளகற்
பகமே போலும
கானமத்த கரிமருப்புப் பணிதியாகைப் படக்கிடைத்த
தாரம் போலும்
மானமுறு நிலக்கிடை கண்டெரிப்பவர்க்கு நோக்க சிந்தா
மணியே போலும
மனமகல பலகதைக்கு ஞ்சீவன மகிமைகண்ட
றியல்பு தானே (7)

பல கானகத்திலே ஔஷதியை நாடிப பூமியைத்தோண்டி சரீரம வருத்தப்பட்டு அலைகிற போகளுக்கு எதிராக கற்பக விருக்ஷம கிடைத்தாற்போலும் எத்தேச காலமும யானைத் தந்தம கடைந்து ஜீவனம பண்ணுகிற போகளுக்கு அத் தந்தத்திலிருந்து ஆணிமுத்து அகப்பட்டது போலும் மானமில்லாமல் பூமியிலே யிருக்கின்ற மண்களையும குப்பையையுங் கூட்டிக்கொண்டு தூற்றிச் சோதித்து நீலக்கடைக்காசுமரவை சன்னமும கண்டெடுத்த ஜீவனம பண்ணுகிறபோகளுக்கு விலைமதிக்கப்படாத சித்தாமணி யகப்பட்டதுபோலும் குற்றமற்ற பலவிதமாகிய சிவஸ்தல மகிமையைக் கேட்டிருக்கிற உங்களுக்குத் தாளகிரியாகிய திருப்பைஞ்ஞீலி யென்னும ஸ்தல மகிமையைக் கண்டறிந்து கேட்டதால் மோக்ஷம சித்திக்கும.

பொருந்துபுரா ணங்கள்பதி னெட்டதினுட் படிக்குசிவ
புராணம பத்தி
விருந்துளது காந்தமெண்ணெண் சங்கிதையா யதனில்முப்பத்
திருமூன் றுகத்த

திருந்தியமா சங்கரசங் கிதையில்வரு மந்த்ரரக
    சியகாண் டத்தில்
வருங்கதைநா லறிரண்டா யிரவசன ஞீலிவன
    மகிமை தானே (8)

மும்மூர்த்தி முதலான தெய்வங்களுக்கெல்லாம் பொருந்திய பதினெண் புராணங்களுக்குள்ளே வகுத்துச் சொல்லப்படும் சிவபுராணம் பத்தில் அடங்கிய ஸ்காந்த புராணத்தில் அறுபத்துநாலாம் சங்கிதையான சங்கரசங்கிதையில் முப்பத்தாறுகத் தேர்ந்த காண்டங்களுண்டு. அவற்றுள் மந்திர ரகசிய காண்டத்தில் இருபத்தாறுயிரம் வாசகமாக சொல்லப்படாநின்றதே திருப்பைஞ்ஞீலி மகிமையாம்.

செந்தமிழ்மா முனிவனுமை தரளகிரி துர்க்கை சக்ரத
    தியாகர் வேதன்
எந்தைநட மகபதிகோ விடங்கமம னெரிபொலிதாற
    பியனே ராமன்
முத்துநர கரிவழுதி முசுகுந்தன் வியாக்கிரமா
    முகனே பார்த்தன்
வந்திடுமித் திரரிருவர் பதுமகெர்ப்ப னினியசுதா
    மனுநா லாறே (9)

அகஸ்தியர் கும்பகோணமடைந்த அத்தியாயம் விமலாரணிய அத்தியாயம், சுவேதகிரியத்தியாயம், துர்க்கைபூஜை யத்தியாயம், சக்கிரத்தியாகர் அத்தியாயம், கபாலமோசன அத்தியாயம், இரத்தினசபை யத்தியாயம், தேவேந்திரன் பூஜை யத்தியாயம், காமதேனு பூஜை யத்தியாயம், ஆரண்ணிய விடங்க அத்தியாயம், அதிகாரவல்லவர் அத்தியாயம், அகனிபூஜை யத்தியாயம், வாயுபூஜை யத்தியாயம், தாற்பியாபூஜை யத்தியாயம், இராமர்பூஜை யத்தியாயம், நரசிங்க பூஜை யத்தியாயம், கலியுகராம பாண்டியன் பூஜை யத்தியாயம், முசுகுந்த சோழன்பூஜை யத்தியாயம், வியாக்கிரமுக சூரன்பூஜை அத்தியாயம், அர்ச்சுனன் பூஜை யத்தியாயம், சிவமித்திரன் பூஜை யத்தியாயம், பதுமகெர்ப்பன் பூஜை அத்தியாயம், இனிமைவாய்ந்த சுதர்மசரிதை யத்தியாயம், அங்கமித்திரன் பூஜை யத்தியாயம் ஆக அத்தியாயம் இருபத்திநான்காம்.

காணருமா மறைப்பொருளாய்ப் புராணரத்தின மாகுமிந்தக்
    கதைகள் யாவுந
தானுவுறைந் தினிமைபெற விளங்குகும்ப கோணமெனுந
    தலத்தில் வாழ்வோன்

பூணூலவு மார்பினன்சந் திரபீடற் ககத்தியனன்
புடனே சொல்ல
வேணுறுதன் மையினியம்பக் கேண்மினெனச் சூதமுனி
விளம்பி னானே (10)

காணுதற்கரிதாகிய நாலுவேதப் பொருள்களின் இரகசியம் அடங்கிய புராண ரத்தினமானதோ இந்த சிவபுராணம். இதிற்சொல்லுகிற கதைகளெல்லாம் நவரத்தினப் பிரகாசம். இப்படியாகப் புராண ஆதியந்தமெல்லாம் பிரஸித்தமாகிப் பரமேசுவரன் வசித்தலால் மகிழ்வு பொருந்தி விளங்கியிருக்கின்ற கும்பகோணமென்னும் பட்டணமாகிய ஸ்தலத்திலே வாஸமாகி வாகுவலய முதலாகிய ஆபரணங்களும் ஸ்தன பாரகோடுகளும் பூண்ட மார்பொடுங் கூடிய சந்திரபீட சோழராஜனுக்கு அகஸ்திய மகரிஷியானவர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பைஞ்ஞீலியின் மகத்துவங்களை மனங்களித்துச் சொல்லுகிறேன்-கேளுங்களென்று நைமி சாரண்ணிய வாசியரான ரிஷிகளைப்பார்த்துச் சூதமகாரிஷி திருவுளம் பற்றினா

புராண வரலாறு முற்றிற்று

---

## முதலாவது அத்தியாயம்

## அகஸ்தியர் கும்பகோணமடைந்தது

ஈழ மென்ப தெழுபது மேன்மலை
யாள மீரென்ப தும்வந்த டிதொழ
வாழுஞ் சோழ மகிதல மேழுபத்
தேழுஞ் சூழ்ந்தகவ் வெல்லை விசாலமே (1)

கிழக்கே ஈழமென்று சொல்லப்பட்ட நாடு எழுபது. மேற்கே மலையாளமென்று சொல்லப்பட்ட நாடு பதினெட்டு. ஆகிய இவைகளிலுள்ள நால்வகை ஜாதியாரும் வந்து தனது பாதங்களை வணங்க வீற்றிருக்கும் சோழமண்டலத்திலே (நூற்றுத் தொண்ணூற்றொன்பது ஸ்தலத்துக்குள்ளாக மகிமை பொருந்திய ஸ்தலமாகிய) எழுபத்தேழு ஸ்தலங்களின் எல்லைக்குள்ளாக ஆழ்ந்திருக்கின்ற விசாலம் பொருந்தியது கும்பகோண ஸ்தலமென்னும் பட்டணம்.

அடுத்த மாதல முத்தகன் பொன்னிநான்
மடுத்த பார்மகள மார்பின்முத் தாரமுஞ்
சுடர்க்கொத் தாரமுந் தொல்குடந் தாபுரி
நடுப்ப தித்தகன் னாயகம போலுமால் (2)

காவேரியை யடுத்தாற்போல் இரண்டு பக்கத்திலுமிருக்கிற பூமியிலே யுள்ள ஸ்தலங்களெல்லாம் முத்துக்களாகவும் அந்த முத்திலே கோத்திருக்கின்ற நூலே காவேரியாகவும் அவ்வாறு கோத்துள்ள மாலையைப் பூமிதேவி தன் மார்பிலே தரித்தது போலும் விளங்கியது சோழமண்டலம். இதற்கு நடுவிலே கும்பகோணமானது பக்கத்திலே சூழ்ந்த எழுபத்தேழு ஸ்தலங்களையும் தீபப் பிரகாசம்போன்ற சிவந்த மாலையாகக் கொண்டிருக்கின்றது அது எப்படியிருக் கிறதென்றால் பூமிதேவி தனது மார்பிலேயணிந்த முத்துமாலைகளுக்குச் சுற்றிலும் முத்துக்களைப் பதித்து நடுவிலே ஜீவரத்னம் பதித்தாற்போலும் இருக்கிறது.

காரு லாவு கரிமருப் புந்திர
வார முங்குளி ராரமுந் தூயகார்ப்
பூர முங்கொடு போநதகிக காவிரி
சேர னுடு திறைகொண்ட தொக்குமே (3)

கருத்த, மேகம்போன்ற யானையின் தந்தங்களும் மலை மூங்கில், சந்தனம் வாழை, கருப்பு இவைகளுடனும் முத்துக்கள் பலவற்றோடும் கூடி, சீதளம் பொருந்திய பூமிக்கு மாலை போல மேற்கே சேரராஜன் சீமையிலிருந்து பிரவாகமாக வருகின்ற காவேரியானது எப்படி யிருக்கிறதென்றால் சேரராஜன் சோழராஜனுக்குப் பயந்து திறை கொடுத் தனுப்பியது போலுமிருககிறது

செநநெ லோங்குறு சேர்ந்தெழு கன்னலே
கன்னல் யாவுங் கதித்தெழு வாழையே
யன்ன வாழை யடர்குலைத் தாழையே
பன்னு தாழைவிண் பந்தர்க்குத் தம்பமே (4)

பின்னுமந்த நாட்டு வளப்பமெல்லாம் எப்படி இருந்ததெனறால் சாலி யான நெல் கரும்பளவாக ஓங்கி வளர, அக் கரும்பானது உயர்ந்து கதலி யள வாக வளர, அககதலியானது செழிப்புற்று அடர்நது சோலையுடன் கூடின தென்னமரமளவாக வளர அந்தத் தென்னமரமானது ஓங்கி ஆகாச பரியந்தம் வளர்ந்து மீறின படியினாலே ஆகாசமான பந்தலுககு வாழை கரும்பு சாலி சேர்த்துக்கட்டின ஸ்தம்பம் போலு மிருந்தது

மகிழும் பூகம் வகுளஞ்செம் பீரமே
தகுந ரந்தைசெந் தாழை கடாரமே
மிகுதி சேர்கனி மென்னகைத் தாழ்குழன்
மகளி ரேழ்பரு வத்தனங் காட்டுமே (5)

பின்னும், மகிழமரம், கமுகு மரம், தகுதியான எலுமிச்சை, நாரத்தை, செந்தாழை, கடார மரங்கள் முதலிய தருக்களில், நெருங்கிப் பூத்துக் காய்த்

துப் பழுத்திருக்கிற கனிகள் எப்படி இருக்கின்றன வென்றால மேன்மை பொருந்திய நகையோடுக் கூடி யிருக்கின்ற பேதை பெதும்பை மங்கை, மடந்தை அரிவை, தெரிவை பேரிளம் பெண்களின் எழு பருவமும் படைத்த ஸ்திரீகளின் ஸ்தனபாரம் போலிருந்தன.

நன்னி லந்தைக்குத தத்தைகொண் டேகிய
செநநெற் காய்கதிா சேணின் றுதிர்ந்திட
வந்நெற் கூர்முனை வாய்தைத்துப் பொங்கிய
கன்னற் சாறு கதலிக்குப் பாயுமே (6)

கிளிகளானவை தமது கூண்டிலிருக்கிற சிறு குஞ்சுகளுக்கு இரை வேண் டிச செந்நெற் கதிர்களை கவ்விக்கொண்டு ஆகாச மார்க்கத்திலே பறந்து போகும்பொழுது கதிரிலே யிருந்த நெற்கள் தவறி விழும் அந்த நெல்லின் கூரிய முனையானது கரும்பின் கணுவிலே பாய்ந்து அதின் வழியாயப் பிரவாக மாக வரப்பட்ட கருப்பஞ் சாறானது வழிந்து பரவி நதியாகிக கதலிச சோலைக் குப் பாய்ந்து நிரம்பித தேங்கி வழிந்தோடும்.

கொன்றை யார்கும்ப கோணத்தை வெற்புக
ளென்றி டாதநி தூரத்தி னிற்பன
வென்று மத்தலத் தெய்தினர் பாவமபி
னின்று குன்றி னிலைத்திடன் மானுமே (7)

கொன்றமாலை தரித்த பரமேசுவரன் எழுந் தருளியுள்ள, கும்பகோணத் தை யணுகிடாமல் மலைகளானவை தூரத்தில் தானே நிலையா யிருந்தன. அது எப்படி இருந்ததென்றால் எனறைக்கும அந்தக் கும்பகோண ஸ்தலத்துக்குச சென்றவாது பாவங்கள் அத்தலத்தோ நுழையாமல் பின்னாலே குன்றுகளாக நின்ற ஒரு காலமும அவாகளையும பின்பற்றாதபடி அப்பாலே விலகி நிலைத்த பிராகாரம்போல் விளங்கின.

தீது தீர்த்துச சிவமயஞ் சார்ந்தபேர்க்
கீதல் வேண்டிவந தெய்திய கங்கைதன்
காதை கேட்டனற் காவிரி யானபூங்
கோதை யாள்கும்ப கோணஞ் சென்றாளரோ (8)

தீதாகிய தீவினைகளைத தவிர்த்து, சிவ சொரூபமாய் விளங்கிய போக்கு உத்தம வரங்களைக கொடுக்க வேண்டி, கங்காபவானி யானவள் காசியிலே யிருந்து கும்பகோணத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறாளென்ற கதையைக் கேட்ட பூமேனி படைத்த பெண்ணாகிய காவேரியானவள் தானுமப் பேறுபெற எண்ணிக கும்பகோணத்திலே வந்தாள்.

பரிசித் தோர்பவப் பறறறுங் கங்கைநீர்
உரிசித் தோருக் குயர்பத மொன்றுமே
வரிசைப் பார்புகழ் மாமகக் கங்கையைத
தெரிசித் தோர்க்குச செனனம இல்லையே (9)

அத்தகைய கும்பகோணத்திலே வாசமாயிருக்கிற கஙகையைத் தொட்டால் பாபமெல்லாம் அற்றுப்போகும. ஆபோசனம் பண்ணினல் உத்தம ஜன்மத்தை எடுதது பின்பு பிறவா நெறியான மோக்ஷத்தை யடையலாம். வரிசை படைதத பூமி யாதியந்தமும் புகழப்பட்ட மாமகத்திலே கங்கையைத தரிசித்த பேர்கள் ஜன்மாந்திர வினைகளும் தீர்நது ஒரு காலமும் அழியாத பதவியை யடைவார்கள்.

கானல வேலிக் கழனி நெட டாறுக
டானந் தானந தனிற்பல செல்வன
ஆன மாமகத் தாடவென் றெய்திய
நானி லத்துள நன்னதி போலுமால (10)

விஸ்தாரமான வேலிகளையுடைய வயலிலேபாயந்து மிகுநதுவருகிற நெடிய நதியும், சோலைகளிலே கதலிக கனிகள்விண்டு கருப்பஞ் சாற்றுடன் பெருகி வருகிற நதியும், உலகங்களிலே வருஷிக்கிற மழையானது பிரவாகமாகிப் பெருகி வருகிற நதியும் நாலா பககங்களிலுமிருந்து வருகிற நதியும் சேர்ந்து விளங்குவது எப்படியிருக்கிறதென்றால் கும்பகோணததிலே மாமகத்தில் வருகிற கங்கையில் ஸ்நாநம் பண்ணவேண்டுமென்று வந்த புண்ணிய தீர்த்தங்கள் வருவதுபோலுமிருக்கிறது

அமல மாமகத் தாடவு நாடவு
நமைவைத் தானிலை நான்முக னென்றுசெய
கமல மேலவன் கண்டுயில் கொண்டநா
ளமையம் பார்த்துவந் தாடின சேதுவே (11)

நிர்மலமான மாமகக் கங்கையிலே ஸ்நாநம் பண்ணவும் கண்ணினலே பார்க்கவும் நம்மைக் கும்பகோணததிலே பிரமதேவன் வைக்கவில்லையே யென்று இராமேசுவரததிலிருக்கும சேது தீர்த்தமானது மனதிலே சதாகாலமும் கிலேசிதது, செந்தாமரையிலேயுள்ள பிரமதேவன் கண்வளருகிற சமயம் பார்த்துக் குடந்தையிலே வந்து வாசஞ்செய்யும மாமகத தீர்த்தத்திலே ஸ்நாநம் பண்ணுகின்றது.

கனத்த வாழ்வினர் காதலித் தேத்தம
தினததை மேற்செய்வ ரீசன்கங் காநதி

தனைத்த ரிக்கத் தருளுகில கஙகைமா
தெனக்குக் காட்டிற் றெனவுமை யுன்னுமே. (12)

மேலானவாழ்வு படைத்த பேர்கள் ஆசையுடனே தங்களினத்தை மேன்மை செய்வதுபோல் பரமேசுவரன் தன்னைச் சடையிலேயே தரித்திருக்கிற மகிழ்ச்சியினாலே கங்கையானவள் என்னுடைய இனத்தார் வாழ்வுபெற்றுப் பெயர் பெற்றிருக்கிறது போல வாழ்வுபெற்ற உன்னுடைய இனத்தவர் ஒருவராகிலு முண்டானால் எனக்குத் தெரியும்படி காண்பியென்று பரமேசுவரியைக் கேட்கும்போது பரமேசுவரியானவள் நமக்குச சரியாயிருக்கபபட்டவள் இப்படிச் சொல்வாளோ நம்முடைய இனத்திலேயும வாழ்வுபெற்ற பேர்கள் இல்லையோவென்று எந்நேரமும் ஆலோசனை பண்ணுவாள்.

வடிவை நின்மல மாகக்கைக் கூப்பியோ
ரடிவைத தேமகத தாண்டருள கங்கைபோயப
படிகு வோர்க்குப் பரனுருத் தநதுமேன்
முடியின் மேவு முறிதிரைக் கங்கையே (13)

சரீர சுத்தியுடன் கைகளைக் கூப்பிககொண்டு கும்பகோணததிலே மாமகக கங்கையிலேயே ஸ்நானம் பண்ண வேணடுமென்று மனதிலே நினைத்து அந்த யாத்திரைக்கு ஓர் அடியெடுத்து வைப்பின் அந்த ஆத்மாவினுடைய பாபம நீங்கிச் சரீர சுத்த பௌததிரமாய்விடும. மனதொருமிதது மாமகககஙகையிலேயே போய் ஸநானம பண்ணின போகளுககுச சிவரூபம கொடுதது அவாகள சிரசின் பேரிலே எததேசகாலமும் வாஸமாயிருப்பாள் கங்கை.

விநதை யான வினதை குமாரனு
ரநத விண்ணி னமுத கடததினைத
தந்த நித்தலந் தானென்று வானவர்
வநது வாழுவர் மானிடா போலவே (14)

விந்தைபொருந்திய வினதைமகனாகிய கருடன், ராகு, கேது, நிமித்தியமாய்த் தெய்வலோகததிலேயிருந்த அமிருத கலசததைப பூலோகததிலே இந்த ஸ்தலத்திலே கொண்டுவநது வைத்தாரென்று மனதிலெண்ணி அமிர்தபானமபண்ணவேண்டிக கும்பகோணததிலே மனுஷரைப்போல தேவாகள் சஞ்சரிப்பாாகள்

வேறு.

மாலயனுஞ் செருக்குடன்முன் சிவன்வடிவைத தேடிநின்ற
வாறு போலக
கோலமா மதிலகழுங் ககனநெடும் புவனநிலே
குறித்தல் வேண்டி

மேலுயர்ந்துங் கீழடைந்துஞ் செலுநெறியி லொருசகுன
விருத்த மாக
நீலவிரா குவையனந்தன் றனையெதிர்கண் டமாந்துநிலே
நின்ற மாதோ. (15)

விஷ்ணு பிரமாவாகிய இரண்டு பேரும் முன் நாளையிலே வாது செய்து சிவனுடைய அடி முடியுந் தேடிக் கண்டறியாத தன்மை போலக் கோட்டையின் அஸ்திவாரம் மேல் மதில் இவை எல்லாவற்றிற்கும் அடியிலேயிருக்கும் பாதாள லோகத்தையும் மேலேயிருக்கும் மகா லோகத்தையும் காணும்படி பூமியைத் துளைத்துக்கொண்டு போம்பொழுது பாதாளத்திலே குறுக்கே ஆதிசேஷனைக் கண்டபடியினாலே, பொல்லாத சகுனத்தைக் கண்டோம் இனிமேல் போகப் படாதென்றெண்ணி அகழியானது பாதாளத்திலேயே நின்றுவிட்டது மேலே மதிலானது மகாலோகங் காணும்படி எழும்பிப் புறப்பட்டுப் போகும்பொழுது இடைநடுவே சூரிய சந்திர மண்டலத்திலே ராகு, கேது என்னும் இரண்டு பாம்பைக் கண்டபடியினாலே 'பொல்லாத சகுனத்தைக் கண்டோம், இனிமேல் போகப்படாதென்றெண்ணிச் சந்திர மண்டலத்துக்குள்ளாக நின்றது. இப்படி மகிமை பொருந்திய மாட மாளிகை உப்பரிகைகளோடுங் கூடியது கோட்டை.

இந்திரபூ மியின்மிகுத்த வளங்கணிறைந் துறுகுறைவே
றேது மின்றித்
தந்திரமா மதில்புடைசூ ழிணிபகும்ப கோணமதி
லேயும் வேந்தன்
மந்திரிபா ரகர்சூழ மருவலர்கள் திறைகளொடு
வணங்க வாழ்வோன்
சுந்தரத்திண் புயனிரவி குலோத்தமன்சந் திரபீடச்
சோழன் றனே (16)

தேவலோகத்திலே யிருக்கிற அமராவதி பட்டணத்திலும் அதிக வளமை பொருந்தி ஒரு குறைவுமில்லாமல் உயர்ந்த மதில் சூழ்ந்த நகரமாகிய கும்பகோணமென்னும் ஸ்தலத்திலே எந்த நாளும் ராஜா, மந்திரி முதலாகிய பெரியோர்களும் பூலோகத்தாரும் நிறைந்திருக்கும்படி வாழ்பவன் ; பர்வதம் போலுமழகு பொருந்திய புஜத்தைப் படைத்தவன், சத்துருக்களெல்லாம் திறை கொண்டு வந்து வணங்கப்பட்ட பாதமுடையவன் ; இவன் சூரிய குலத்தில் உத்தமனாகத் தோன்றிய சந்திரபீட சோழனென்று பேர்படைத்த ராஜன்.

கருணைததீ வகமெனமா னிலத்திலுயிர் தழைத்தோங்கக்
காக்கு நாளிற்

பருவக்கா முகர்தமது மயல்போனல் குரவுற்றோர்
பசியே போலத
திருவுற்ற சிவதலத்தின் பெருமைகளுந் தலங்கள்கண்டு
தெரிசித் தேத்தி
யருள்பெற்றோர் பெருமையுங்கேட் டறிவதுவே
கடைப்பிடித்தா னரசர் கோமான் (17)

கிருபாவொளிபோல் விளங்கி மனு விதியான சாஸ்திரப்படி பூலோகத்தி லிருக்கிற சர்வ ஜனங்களும் தழைத்தோங்கப் பரிபாலனம் செய்து ராஜரீகம் பண்ணுகின்ற நாளில், மன்மத ரூபனுகிய வாலிப புருஷன் பருவ காலத்திலே ஸ்திரிகளின்மேல் மையல் பூண்பது போலும், தரித்திரர் பசி மிகுதியினால் அன்னம தேடுவது போலும், சிறப்புப் பொருந்திய சிவ ஸ்தலத்தினுடைய மகத்துவங்களேயும், அந்த ஸதலத்திலே போய தெரிசித்து மோக்ஷமடைந்தவரின் மகத்துவங்களேயும் எங்கேமும் சிரவணிததறிவதையே உறுதியாக மனதி லெண்ணி விசாரித்துக்கொண்டிருநதான ராஜாதிராஜனுன சந்திரபீட சோழ ராஜன்.

சேதனமுற் றவர்வைதத நிதியிதெனத தாம்பிரததிற
சிலையிற் செய்த
சாதனங்கைப பிடித்துமருத் தஞ்சனமபார்த் திருநதிடுபூ
தனஙகொள் வார்போ
லோதனந்தா தபோதனநதா போதனேததி றததிலறிந
தொருபாற் றேன்று
மாதனமு முயரிடப கேதனசிங் காதனமா
மணியுங கண்டான் (18)

தங்கள தஙகள் மரபிலே முன்னோகள் தாஙகள் புதைத்து வைததிருந்த திரவியததுககு இவ்வளவென்று தொகை படுத்தின பழமொழிபோல் தாம்பிர சாசனம் சிலாசாசனம் செய்துவைதத சாசனததைப் புத்திரானோர் கையிலே வைத்துக்கொண்டு ஸ்தாபித்த நிலே தெரியாமல் பாதாளஞ்சனம போடுகிற பேரைக் கொண்டு பூமியிலேயிருக்கிற திரவியத்தைக கண்டெடுப்பதுபோல வேந்தன் சிவஞானம பெற்ற பெரியோாகளேயும அறிவுடைய மகாதமாககளே யும் கூட்டி வைத்துககொண்டு அவரவர்கள் செய்யும் போதனேத் திறததை யறிந்து பூலோகம் ஒரு பாாசமாகத் தாமுமாறு ஒங்கியுள்ள இடத்துடனே உயர்ந் திருக்கப்பட்ட ரிஷபக்கொடி பெற்ற சிம்மாசனம விளங்கிய மாணிக்க ஸ்தல மொன்றை சாஸ்திர விதிப்படி தோன்றக் கண்டான்.

துளங்குகதிர் சூழுலகில் விழங்குநவ மணியணிந்தோர்
துலங்கு சோதிக
களங்கமிலா துயிர்படைத்த சீவமணி தனைவிரும்புங்
கருத்தே போல
வளங்குலவு தலங்கள்பல தெரிசித்தான் பெரிதுற்ற
மகிமை தோன்ற
விளங்குலிங்க சுயம்புவினுற் பத்தியைவிற் பத்தியுற
வினவு நாளில் (19)

பிரகாசமாகிய சூரியன் சூழ்ந்துவரப்பட்ட பூலோகத்திலுண்டான நவ ரத்தினங்களையணிந்த ரத்னபரீக்ஷகரால் துலக்கமான ஜோதியுடன் கூடிச களங்க மற்ற ஆணியான ஜீவரத்தினத்தை அறிந்து அதின்பேரில் இச்சையாகித் தேடு கின்ற மனதுடையவர்போல் வளம் பொருந்திய ஸ்தலங்கள அநேகம் தெரி சித்து பெரிதாகிய மகிமையோடுங்கூடி விளங்காநின்ற சுயம்புலிங்கத்தி னுடைய உற்பத்தியை விற்பனமான பக்திபொருந்தும்படி கேட்கிற காலங் களிலே.

இறப்பினொடு பிறப்பிலைக ளணுகாநின் மலனையனு
தினமும் போற்றி
மறப்பகற்றி நிறைகுணசந் திரபீட னவையினெதிர்
வந்தா னன்றே
சிறப்பகற்று மத்துவைத்து சுருட னுககுங் கிரிக்குமுயர்
தேவ பேதப்
பிறப்பகற்று திறமபடைக்க மகத்தியமா தவனெனச்சொல்
பெயரி னுனே (20)

பிறப்பிறப்பற்ற நிர்மலராகிய பரமேசுவரன் பாதத்தை யனுதினமும் தியா னம் பண்ணி, தன்னை யறியக்கூடாத மறதியை யொழித்து (ஞானாகாரமாய்), நிறைந்த குணத்தையுடைய சம்பன்னனாகிய சந்திரபீட சோழ ராஜன் தன் கொலுச் சபையின்கண் வந்தான். அப்போது தனககு வநத சிறப்பையகற்றும் படி மமதையடைந்த கருடராஜனுக்கும் பொதியமலைககும் தெய்வ பேதப் பிறவியை யொழிக்கவல்ல திறமை பூண்ட மகாதபசுடைய அகஸ்தியரென்னும பெயர் படைத்த ரிஷீசுவரர் (அச்சபைக்கு வரக கண்டான்.)

கடலெலா மொருதிவலை யாக்கியமா முனிவன்வரக்
  கண்ட போதே
யடலுலா வியமடங்க லாதனம்விட் டெழுந்துமுடி
  யடிமேற் சூட்டி
யிடரெலாந் தவிர்ந்தேனென் றுயர்தவிசின் மீதில்வைத்தா
  னினிய வாசப்
படலைமார் பகன்மலர்மஞ் சனங்கொடிறைஞ் சினன்முனிபொற்
  பாதந் தானே (21)

சமுத்திரமுழுதும் உள்ளங்கையிலே ஒரு துளியாககொண்டு ஆபோசனம் பண்ணிய அகஸ்திய ரிஷியானவர் வருவதைக் கண்டவுடனே சந்திரபீட சோழராஜன் நவரத்தின ஸிம்மாஸனம் விட்டெழுந்திருந்து அவருடைய பாதத்திலே சிரசு பொருந்தும்படி தெண்டனிட்டு அஞ்ஞானமாகிய இடரெல்லாம் அடியேனுக்கு இன்றைக்குத் தீர்ந்ததென்று ஸ்தோத்திரம் பண்ணி உயர்ந்த ஸிம்மாஸனத்திலே எழுந்தருளவைத்து வாசனை பொருந்திய ஆத்திமாலைதரித்த புஜத்தையுடைய அச்சோழராஜன் திருமஞ்சனத்தினாலேயும புஷ்பத்தினாலேயும் பாதப்பிரக்ஷாளனம பண்ணி அர்சிதது வணங்கி ஸதோததிரம் செய்வான்.

எனைக்காண வமரர்வரா மையினிழிந்த தென்பூமி
  யெல்லை யான
துனைக்காண வேயுயர்ந்த தையாகா னுதவுபொன்னி
  யுதகங் கண்டோர்
வினைகாணார் கமலனரு ளமலமுனி வரனேயுன்
  விமல பாதந
தனைக்காணக் கிடைததென்றன் சனனமன்றே பயனடைந்த
  சனனந் தானே (22)

என்னைக் காணத்தேவர்கள் வராமையால் இழிவாகிய தென்பூமி. அது இப்போது உம்மைக்கண்ட மாத்திரத்திலே உயாந்தது ஐயனே! எனது காவிரி நதியைக் காணப்பெற்றவா பரமேசுவரன் சடையிலேயிருக்கின்ற கஙகையைக் கண்ட மாத்திரத்தில் எப்படி பாபராசிகள் ஓடிப்போகின்றனவோ அப்படி பாப வினைகள் கழிந்தவராவா. பிரம்மதேவனுக்குப் புததிரராகிய முனீசுவரரே உம்முடைய பாதம் காணக்கிடைத்ததும் என்னுடைய ஜனனம் சாபல்லியமடைந்த ஜனனமாற்றென்றான்.

என்றுபல முகமனெடுத் தியம்பியன்பு திகழ்மனத்தோ
  டிருகை கூப்பி

நின்றுபணி விடைகள்சில முடித்திடுமன் னவன்பரிவி
னிலைமை நோக்கி
நன்றுநன்றென் றாசிபல புகன்றிருநீ யென்றுசெங்கை
நளினங் காட்டக்
குன்றுறழ்திண் புயனிருந்து தென்றன்மலை முனிக்கிதனைக்
கூற லுற்றான் (23)

இப்படியநேகம் ஸ்தோத்திரங்களைப் பண்ணியபின்பு களங்கமில்லாத மனத்தனுகி இரண்டு கையினுலும் நமஸ்கரித்து நின்றுகொண்டு பணிவிடைகள் செய்த ராஜனுடைய பரிவை முனிவா தமது கண்ணினுலே பார்த்து நன்றாக என்று பற்பல ஆசிர்வாதம்பண்ணி, தாமரைக கமலம் போன்ற கையினுலே அவனை முன்னுக இருக்கச் சொன்னபோது சுகாசனமாகவிருந்து மந்தரகிரி போன்ற புஜத்தையுடைய ராஜன் பொதிய மாமலையில் வாசமான அகஸ்திய ரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத தொடங்கினன்.

மயம்புகுமிவ் வுயிரினைவெங் கயம்புகுகண் ணுடியைப்போன்
மயக்கு மாயை
வயம்புகுத லகன்றொருசின் மயம்புகுதக் கொடுத்தருள்செய்
வரத்தி னுனே
பயம்புகுசெங் கதிரெனவெங் கனுநிறைபைஞ் ஞீலிவளம்
பதியின் மேவு
சயம்புமகி மையையடியேற் கியம்புகென வியம்பினன்முத்
தமிழ்வல் லோனே (24)

சிவமயம் பெறுநின்ற இந்த ஆத்மாவைக கண்ணுடியொளியிலே பர்வதம போன்ற யானையின் நிழலகப்பட்டுக் குறகினதுபோல் மாயப்பிரபஞ்சததிலே பாசங்கள் வசமாய்ப் புகுதலொழிந்து சின்மயமாகி ஆனந்தத்தை யடையக்கிருபை புரியும் வரப்பிரஸாதனே, உலகத்திலே சூரியப் பிரகாசம்போல் எங்கும் நிறைந்து பிரகாசிக்கின்ற வளமைபொருந்திய திருப்பைஞ்ஞீலியில் வாசமான சுயம்புலிங்கத்தின் வரலாற்றை அடியேனுக்குச் சொல்லவேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய அந்தப்படி முத்தமிழுக்கு வல்லவராகிய அகஸ்தியர் திருவுளம்பற்றுவார்.

நிதிபோற்றந் தருள்கருணை நிதிக்குடந்தைக் குரிசில்கதி
நீயென் றேத்தி
யெதிர்வரநின் றிறைஞ்சுசந்த்ர பீடமகி பதிதொழுவீற்
றிருந்தா னன்றே

பதிபசுபா சமும்கிலா கஷிகமத் தொடுசொங்கோ
பாங்க மாக
நதிவேணிக் குபதேச தேசிகரை விஞவிமுற்று
நவிலக் கேட்டோன் (25)

காணாத நிதிக்ஷேபங்கள் போல் அடியவர்க்கு வேண்டுமவற்றைக் கொடுத்தருள் செய்கின்ற கிருபாநிதியான பரமசிவன் வாஸமான கும்பகோணமெனனும் பட்டணத்துக்கு அதிபதியாகிய ராஜனே, தபோதனருக்குக் கதி நீதானென்று புகழ்ந்து முனிவா அவன் எதிரேவர, அவரை முகையவிழ்ந்த புஷ்பத்திஞலே அர்ச்சனைசெய்து சந்திரபீட சோழராஜன் தொழுது அவரனுமதிபெற்று ஸிம்மாஸனத்திலே வீற்றிருந்தான். பதியான சிவத்தினுடைய லக்ஷணமும் பசுவாகிய ஆகம லக்ஷணமும் பாசமாகிய மும்மலத்தினுடைய லக்ஷணமும் வேதாகம புராணங்களும இயமநியம பிராணுயாம பிரத்தியாகார ஆசன தாரண சமாதி என்கிற எட்டுவகை யோகங்களும் சாங்கோபமாங்கமாக கங்காதரரான பரமசிவனுக்கு அனுக்கிரகம் பண்ணி உபதேசித்த பரமகுருவாகிய சுப்ரமண்யரிடத்திலே அடிமையாகி உபதேசம்பெற்று சமஸ்தமும் சொல்ல அறிந்துணர்ந்தருளிய அகஸ்தியரிஷி

---

## இரண்டாவது அத்தியாயம்
## விமலாரணியமகிமை

நிரந்தரமாய் நிராமயமாய் நிர்க்குணமாய் நிரஞ்சனமாய்
நிமல மாகிச
சுரந்துசகங் களுமாயை தானுமுதித் தொடுங்குமதி
சூடச மாகிக்
கரந்துயிரக ளணைத்தினுநின் றுறைந்திருக்கு நிறைந்தகலாக்
காட்சி யாகிப்
பரந்தபெரு வெளியுநிகழ் பேரொளியு மெனப்பரனும்
பரையுந் தானே (1)

எவ்வறைக்கும் அந்தரமாகிய ஆகாசமாய் ஒன்றிலும் ஒட்டாததாய் முக்குணங்களும் கடந்ததாய் இன்னரூபமென்று அறியப்படாததாய் மலமகன்று நிர்மலமாய், பின்னும் சமஸ்தலோகமும் பரவியிருக்கின்ற மாயையாய், பஞ்ச கர்த்தர்களாய்ப் பிறந்திறந்து ஒடுங்கப்பட்டதாய் அதி சூட்சுமமாகி ஒழிவாகி யணுவுக்கணுவாயணுவிலும் ஒருகாலும் விட்டகலாததாய், கண்ணுக்கு ஆச்சரியமான காட்சியாய், எங்கும்பரந்த பெரிய வெளியும் அந்த வெளியில் அநேக மாணிக்கதீபப் பிரகாசம் போலுமிருக்கும் ஒளியும்போல சிவமும் சக்தியும் விளங்கா நிற்கும்.

காரணமா யகண்டபரா பரவெளியிற் கலந்தரிதற்
    கரிதாய் நின்ற
பேரொளியின் மாமாயை வருமெரிதீ பகததின்மை
    பிறந்த மாயை
நேர்தருசாந தியாதீத சாந்திவிததை பிரதிட்டை
    நிவர்த்தி யைநதிற்
சார்வரிய பரையாதி யிச்சாஞா னக்கிரியா
    சத்தி தோன்றும் (2)

இப்படி சாவகாரணமாய்ப் பராபரம் விளங்கியிருக்கின்ற அகண்ட வெளியுடனேசோநது யாவருமறிவதற் கரிதாயிருக்கிற ரூபததிலேபெரிதாகிய மாணிகக தீபம்போலும் விளங்கியிருககிற ஜோதியினிடத்திலே உற்பத்தியாகி மாமாயை வருவது எதுபோலவெனில் ஜ்வாலை எழும்பி விளங்குகிற, தீபத்து நுனியிலே கருப்புமையானது பிடிப்பது போலுமெனக அப்படி ஜெனித்துவந்த மாமாயையினிடமாக வரப்பட்டது சாந்தியாதீதகலை. இநத சாந்தீயாதீதையினிடத்திலே சாந்திகலை தோன்ற இநத சாநதிகலையினிடமாக வித்யாகலைதோன்ற அந்த வித்யாகலையினிடமாக பிரதிஷ்டாகலைதோன்ற இநதப் பிரதிஷ்டாகலை யினிடமாக நிவாத்திகலை தோன்றி இந்தப் பஞ்சகலைகது சமாதியான சாநதியதீதகலை முதல் நிவாத்திகலை ஈருகப் பராசகதி ஆதிசகதி இசசாசகதி ஞானசகதி கிரியா சக்தி என்னும பஞ்சகலைகளும் வந்தபிரகாரம் ஜனித்தித தோன்றும

அநதமகா மாயைதனில் வநதகலாச சததிசிவ
    மூாத்திய மூாத்திச
சிந்தைசெய்கர்த துருகன்ம மெனுமபெயர்கொண் டைந்துசதா
    சிவமுண் டாகு
மிந்தவகை கன்மசா தாக்கியததி னுதிப்பருருத்
    திரர்மால வேதன்
வநதிடுவா கிரியைதனின் மனோன்மணியீ சுவரியுமைபொன்
    வாணி தானே (3)

அப்படி முன்னாலே சொன்ன மகா மாயையினிடமாகப் பஞ்சசக்தி சிவனுகத்தோன்றி அந்தச் சிருஷ்டியினாலே கர்த்துருகன்ம மென்னும் பெயர் பூண்டு ஐந்து சதாசிவமுண்டாகும். இப்படித் தோன்றின பஞ்ச சாதாக்கியத்தினிடமாக கர்ம சதாக்கியம் தோன்றி இந்தகாம சதாக்கியத்தினிடமாக மகேசுவரன் தோன்றி இந்த மகேசவரனிடமாக ருத்திரன் தோன்றி இந்த ருத்திரனிடமாக விஷ்ணு தோன்றி இந்த விஷ்ணுவினிடமாக பிரம்மா தோன்றிப் பஞ்ச கர்த்தாக்

ளாய் வருவார்கள். பின்னும் முன்சொன்ன கிரியாசக்தியினிடமாக மனோன்மணி தோன்றி மனோன்மணியினிடமாக மகேசுவரிதோன்றி இந்த மகேசுவரியினிடமாக ருத்திரி தோன்றி ருத்திரியினிடமாக லக்ஷ்மி தோன்றி இந்த லக்ஷ்மியிடமாக ஸரஸ்வதிதோன்றி வருவள்.

செய்யதொரு மனோன்மணியைந் துருவாகி யைந்துசதா
சிவத்துஞ் சேர்ந்தாள
மைபுலவு நீலவிழி மகேசைமகே சுரர்க்கினிய
மனைவி யானாள்
மையன்மலர் மகண்மாலுக் கானாள் மடந்தையயன்
றன்னைச சேர்ந்தா
ளெய்தரிய சிவயோகத் தையனுருத் திரக் கடவு
ளிருந்தா னன்றே (4)

இப்படியான மனோன்மணியானவள் ஐந்து ரூபமாகி முன்சொன்ன பஞ்ச சதாக்கியமான ஐந்து சதாசிவனிடத்திலும சேர்ந்தாள். கர்ம சதாக்கியமான பஞ்சகர்த்தாக்களில் நீலோத்பலம்போன்ற விழியினையுடைய மகேச்வரி மகேச்வரனுக்கு பாரியானாள். செந்தாமரை மலரிலே வாஸமான லக்ஷ்மியானவள் விஷ்ணுவினிடத்திலே சேர்ந்தாள். ஸரஸ்வதி பிரமதேவனிடத்திலே சேர்ந்தாள். ருத்திரமூர்த்தியானவர் அரிதாகிய சிவயோக நிஷ்டையிலே எழுந்தருளியிருந்தார்.

செயலொருசற் றிலாதுகயி லையிலரனார் யோகமுடித்
திருந்த காலை
நியமமுட னுமையவண்மற றதுவேயுன் னிடிருப்பைஞ
ஞீலி மேவி
யியல்புளபுஷ்கரணியொன்றுண் டாக்கினளவாக் கொடுமனத்துக்
கெய்தொ ணாத
வுயர்பொருளெய் திடுமவகைமெய்த் தவம்புரிந்தாண் மிருத்தசதுர்
யுகங்க டானே (5)

ருத்திர மூர்த்தியானவர் தம்முடைய தொழிலைச சற்றுகிலும் நடத்தாமல் கைலாசத்திலே யோகநிஷ்டை கொண்டிருக்கிற காலையிலே மகாநியமத்துடனே ஈசுவரியானவள் தானுமந்த சிவயோகத்திலிருக்கக் கருதி திருப்பைஞ்ஞீலி என்னும் ஸ்தலத்திலேவந்து இயல்பாக ஒரு தீர்த்தமுண்டாக்கி மனதினுலும் வாக்கினாலும் காணப்படாத உயர்ந்த பொருளாகிய வஸ்துவான பரமசிவனா தோன்றும்படி அநேக சதுர்யுகம் மெய்யான தபசு பண்ணிக் கொண்டிருந்தாள்.

எத்தலமும் பரவுபரி சுத்தவித்தை யெனிலெவர்க்கு
மெய்தொ ணுதென்
றத்தர்தமக் ககோர குண ருத்திரனென வொருபெயருண்
டாகத் தானே
சித்தமகி ழகிலாண்ட பலகோடி சந்ததிகள்
செழிக்கத் தானே
நித்தியனென் றிறைவரிருந் திடுமெவகைக்கோ தவம்புரிந்தா
ணிமலை தானே (6)

வித்யாதத்வம் மகேசுவரதத்வம் இரண்டும் ஒன்றாகிய சுத்த வித்தை யென்ற தத்துவத்திலே சாத்விக குணத்தோடும் கூடி எவர்களுக்கும் கிடையாத தபசை ஈசுவரி மனதிலெண்ணிச் செய்தது யாது காரணமென்றால் யாவருக்கு மரிதான சுத்தனுகிய ருத்திர மூர்த்திக்கு அகோர ருத்திரா என்கிற பெயர்மாறி அமிர்தருண ருத்திரனென வொரு பெயருண்டாகவோ மனதிலே சந்தோஷமாகி அகிலாண்டத்திலுள்ள பலகோடி ஜீவ சந்ததிகளெல்லாம் தழைக்கத் தானே அல்லவென்று பரமேச்வரன் அநித்தியனென்று பெயராகாமல் என்றைக்கும் நித்தியனென்று பெயருண்டாகும் பொருட்டோ தெரியாது.

திரமகலா வகைமுடித்த விரதத்தோ பலத்திலதி
சயமதாக
வரமருள்சிந் தாமணிவந் துதிப்பதுபோ லரியலிங்க
வடிவந் தோன்றக்
கரமலரஞ் சலித்தாள்கா தலித்தாள்யா னுசலித்திருந்த
கவலை தீர்க்கும்
பரமசம்பு வந்தாரென் றுவந்தாள்செய் தவந்தானும்
பலித்த தென்றாள் (7)

ஒரு தொழிலும் நடத்தாமல் கைலாசத்திலே யோக நிஷ்டையிலே எழுந் தருளி யிருக்கு யோகம் சாதிக்கிற சிவன்தானே திருப்பைஞ்ஞீலி என்னும் ஸ்தலத்திலே அதிசயமாகச் சிந்தாமணிப் பிரகாசம்போல் வரப்பிரசாதராகி ஒரு சிவலிங்கமாக எழுந்தருளியதைக் கண்டு ஈசுவரியானவள், தாமரைபோன்ற கையினுல் அஞ்சலி செய்து மிகுந்த ஆசையோடுகூடி அடியேன் சலித்திருந்த கவலைதீரும்படி பரமசிவன் வந்தாரென்று மகா சந்தோஷமாகி நாம் செய்த தபோபலம் பலித்ததென்று மனத்திலே யெண்ணினுள்.

ஜீ ஹுணங்கி யுடலிளையா தடிமைபணி விடைபுரிதல்
வேண்டி யன்றே

தாணுவெழுந் தருளினரென் றடிபணிந்தாள் பணிவிடைக்குத்
தாழ்வி லாது
வேணுறுமஞ் சனமலர்கண் முதலான வுபசார
விதியா னேயங்
காணுநெறிப் படவருச்சித் தரியதவ முடித்திருந்தாள்
கவுரி தானே (8)

வீணிலே சரீரமூலர்ந்து இளைத்துப் போகாமல் அடியாள் பணிவிடை செய்வதுவேண்டிப் பிரியமாக, தாணுவாகிய பரமசிவன் எழுந்தருளினுரென்று பாதத்திலே தெண்டம்பண்ணிச் சிவ பணிவிடைக்குத் தாழ்வில்லாதபடி வேண்டிய திருமஞ்சனம் புஷ்பம் முதலாகிய சோடசோபசாரத்தினுலே ஆகம விதிப் பிரகாரம் பக்தியுடனே பூஜித்து அரிதாகிய தபசுகளைப் பண்ணிக்கொண்டிருந்தாள் ருத்திரியான ஈச்வரி.

ஈதுநிகழ் தபோதலத்தின் நீதுயர்பா தவநீழ
லிலாமை நோக்கிக்
காதலுப சாரமுடித்த தருகிருப்போ ரலாதசில
கடவுளோர்கண்
மாதரம்பை யினங்களை நீ ராதரம்பைம போதரம்பை
வனமா யென்றப்
போதுநிறைந திருமென்று ளிருந்தனரப் படிவமவர்
பொருந்திக் கானே (9)

இப்படி ஈசுவரி தபசு செய்யாநின்ற திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்திலே உயாநத விருக்ஷங்களுமில்லாமல ஒரு குடை நிழலுக்கும் இடமில்லாமலிருப்பதைக கண்டு பார்வதியானவள் தன் பககத்திலேயிருநது ஆசையுடனே பரிசாரகம் பண்ணின தேவரமபைகளிலே சில ரம்பைகளை நோக்கி நீங்களிந்த இடத்தில் ஆதாரயாகிய நிழலாகி, பசுமைபொருந்திய புஷ்பங்களுடனே கூடிய (ரமபையான கதலிவனமாய) எந்த நாளும நிறைந்திருக்கக கடவீர்களென்று அநுக்கிரகம் பண்ணினுன். அந்தப்படி தேவரமபைகளெல்லாம் மனும்பொருநதிக கதலிவனமாய் இருந்தாகள்

கொம்பனைசெய் தவநிலைமேல் வடகீழ்தென் றிசைக்கணரை
குரோச தூரம்
பம்பியெழு கதலிவன மலர்கனிகள் சொரிதேறல் .
பாந்து தேங்கி

வெம்பியெழுந் ததிர்த்துவிரைந் தம்புதிபோல் வருதல்கண்டு
வியந்து நோக்கி
யம்பிகையிங் கிதற்கினிய பெயர்விமலா ரணியநதி
யாக வென்றாள் (10)

பார்வதியிருந்து தபசு பண்ணுகிற திருப்பைஞ்ஞீலிக்கு வடகிழக்காகத் தெற்கே அநேகயோசனை தூரமட்டும் வாழைக்கனியிலும் புஷ்பங்களிலும் வழிந்தொழுகின்ற ரசங்கள் பரவித்தேங்கி எழுந்து சப்தம் பொருந்திய அலையுடனே கூட அமிர்தம்போலும் நதியாய் வருவதை ஈசுவரியானவள் கண்டு இப்படிவருகிற நதியினுடைய பெயர் விமலாரணிய நதியென விளங்குக என்று அநுக்கிரகம் பண்ணினாள்.

திருந்தியகா விரியலது மருந்தினுக்கொரு சலங்கிடையா
திருந்த பூமி
பொருந்தரம்பை வனமும்விம லாரணிய நதியும்வந்தற்
புதமாய் மேலாய்
வருந்தாமல் முனிவர்சித்தர் சாரணர்வா னவரினைய
மகிழ்ச்சி கூர்ந்தார்
அருந்தவிருந் திடநிழனீர் கிடைத்ததான் மற்றெதுகிடைப்ப
தரிது தானே (11)

வனமாகிய திருப்பைஞ்ஞீலிக்குக் காவேரி தீர்த்தமே தவிர வேறொரு துளி தீர்த்தம் ஔஷதத்துக்கும் அகப்படாமலிருந்த பூமிக்குக் கதலிவனமாகிய நிழலும் விமலாரணிய நதியினுடைய தீர்த்தமும் ஆச்சரியமாக மென்மேலு முண்டானபடியினாலே முனிவர், சித்தர், சாரணர் முதலாகிய தேவர்களெல்லாரும் சரீர வருத்தமில்லாமல் என்னேரமும் மனது சந்தோஷமாக வாசமாயிருந்தார்கள். அவர்களிருப்பதும் அதிசயமோ? வசிப்பதற்கு நிழலும் பானம் பண்ணுகிறதற்குத் தீர்த்தமும் கிடைத்ததானால் மற்ற பண்ட பதார்த்தம் கிடைப்பது அருமையல்லவே. ஆகையால் முன்சொன்ன தேவர்கள் முதலாகிய யாவரும் எக்காலும் இங்கே வாசமாயிருப்பதிற் சந்தேகமில்லை.

மாகதலத் துதித்தொருபூ லோகமனுக் களுக்குவிலை
மகளி ராகிப்
போகாம லுதவியதே னதியையுத வியகதலிப்
பொதும்பர் வாய்த்துத்
தாகமகற் றியபலன்க ளனுதினந்தந் தழியாத
சரீர ராஞர்
தேகமெடுத் தாலுமரன் பணிவிடைக்குக் கிடைத்ததன்றோ
தேகந் தானே. (12)

தெய்வலோகத்திலே ரம்பையாக ஜனித்திருந்தும் அவாகள பூலோகத்திலே யிருக்கிற ஜனங்களுக்கெல்லாம விலைமகளாவதுபோல் எத்தேசகாலமும தேனி னும ருசி பொருந்திய நதியைக்கொடுதது தாகசோகநீரக கனிவர்க்கங்களைக் கொடுத்துக்கொண்டு தேவரம்பைகளெலலாம கதலியென்னும் ரூபத்தை எடுத்து திருப்பைஞ்ஞீலி என்ற ஸ்தலத்திலே சிரஞ்சீவியான சரீரத்தை எடுத்தார்கள் ஆகையினலே முன் தெய்வலோகத்திலே பிறந்த கன்னிகையர் பூலோகததிலே வநது வாழைமரமாயப் பிறநதாரகளென்று அற்பமாய எண்ணவேண்டுவதிலலை. அந்த வாழை தேவாகளிலும அதிகமாய உயாநது சிவபணிவிடை செய்யக கிடைத்த தேகமாம

சைவநிலை கதித்தேறதத தொலைததேற வினைகளபஞசாக
கரசசொல லேறப்
பவ்வநிகர் தடாநிகழ்பைஞ ஞீலிதழைத் தேறவெற்றிப
பதாகை யேற
மவ்வன்முகி ணகையுமைநகை மணமாலை யிறைவர்புய
வரைமீ தேற
வெவ்வுலகு மீடேறத் தனதுதபோ விரதநிறை
வேறச் செய்தாள். (13)

சைவ சமயங்கள் மென்மேலும் வளாந்து ஆட்சியாக, வினைகளெல்லாம் தொலைய, பஞசாக்ஷர மந்திரம் உருவேறச் சமுத்திரமபோன்ற தடாகம் சூழ்நத திருப்பைஞ்ஞீலி தழைத்தோங்க, தபசுக்குத் தன்னைப்போலும கிடையா தென்று விருதுக்கொடிபோன்ற ரிஷபக்கொடி விளஙக, ஆம்பல் முகிழ் போன்ற நகையுடைய பார்வதி தன கை மாலை ஈசுவரனுடைய புஜத்திலே ஏற, எந்தலோகமும் ஈடேற, தனக்கு விரதமாகிய தபசு குறைவிலலா மல் நிறைவேறச் செய்தாள்.

வழிபாடுற் றிடுமயன்மால் முனிவரர்வின் ணோர்பரவ
மாக மீதி
லொழியாம லந்தரதுந் துபியதிரக் கந்தருவ
ருவந்து பாடப்
பொழிபாரி சாதமலர் மழைதூவ நெடிதுதவம்
புரிந்த கௌரி
விழிகாணும் படிவிடைமே லாறுவெண்ணீ றணிகடவுள்
வெளிவந் தானே. (14)

இப்படி தபசு நிறைவேறச் செய்யும்போது வழிபாடு செய்யும் பிர்மா விஷ்ணு முப்பத்துமுக்கோடி தேவர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும ஸ்தோத்திரம் பண்ண ஆகாசத்திலே அந்தா துந்துபி சப்திக்க கந்தர்வா கின்னரர் வீணை கீதம்பாட பாரிஜாதமலர் மழைபோலவும் பொழியப் பெரிதாகிய தபசு பண்ணின பார்வதி காணும்படி ரிஷபவாகனத்திலே கங்காதாரான பரமசிவன் எழுந்தருளிப் பிரஸன்னமானூர்.

அஞ்சலெனு மபயமலர்க் கரங்கொடுத்துக் காட்சிகொடுத்
தருளு நாதன்
கஞ்சமல ரடிபணிந்த வஞ்சிதனை யிறைவனருட்
கண்ணா னோக்கிக்
கிஞ்சுகவாய் மயிலேயுன் றவத்தைமகிழ்ந் தனங்கயிலைக்
கிரியின் மீதே
யெஞ்சலிலா துனதுமணம் புணர்வோமென் றனன்மறைந்தா
னெவர்க்கு மேலோன். (15)

பயப்படாதே என்று அபயஸ்தம் கொடுத்து, திருககாட்சிக் கொடுத்தருளிய பரமசிவனுடைய பாதாரவிந்தத்திலே தெண்டமபண்ணிய வஞ்சிக கொடி போன்ற பார்வதியைக் கிருபையோடுக்கூடிக கண்ணாலே பார்த்துக் கிளி போன்ற பவளமாயும் மயில் சாயைபோன்ற தேகமும படைத்த பெண்ணே உன்னுடைய தபசினுலே மகிழ்ச்சியடைந்தோம். உன மனதின்படி கைலாசகிரியிலே வருந்தாதபடி உன்னைக கல்யாணம் பண்ணிககொளகிறோமென்று திருவுளம்பற்றி ஆகாசமாாககமாக எழுந்தருளினூர் தேவாகளுககெலலாம மேலோனாகிய பரமசிவன்.

அம்மனைசெய் தவத்தினைவிட் டகன்றனணின் மலர்வதுவை
யலங்கல் சூட்டித்

தம்மனைவி யெனப்படைத்தா ருண்மையுட னுமைதவஞ்செய்
　　தகைமை யாலே
வெம்மியருசேர் தலத்திணையு நன்மையரு ளியவிமலா
　　ரணிய மென்பார்
செம்மைமரு வுவிசால தடமெனப்பே ராகுமந்தத்
　　தீர்த்தந் தானே. (16)

அமமனுகிய பாாவதி தபசைவிட்டு நீஙகினவுடனே நிாமலாகிய பரம சிவன கைலாசததிலே மணமாலே சூட்டித தமமுடைய மனைவியாகக கொணடாா. இந்த ஸதலததிலே மெயயான தபசு ஈசுவரியாகிய விமலே யென்கிற பெயாபூணடவள செயதபடியினுலே இதறகுததிருப்பைஞ்ஞீலியென றும விசால புஷகாணி என்றும திருநாமஙகளுணடாயின.

பூவலேயம புகழ்விமலா ரணியமெனப பெயர்படைதத
　　பூமி மீதே
காவலுறு விசாலதடந தனதுதென்பா ரிசததுதித்த
　　கடவு ளாரை
யாவாகளும பரமசமபு வெனபபணிநது பூசனேசெய்
　　திறைஞசா நிறபர்
மூவகைக்கு முமையேகா ரணமாமத தலததினிகா
　　மொழிய லாமோ. (17)

சமுததிரம சூழ்நத பூலோகமெலலாம புகழுமபடி பெயாபடைதத விமலா ரணியமெனனும பெயருடைய புண்ணியபூமிககுச சாக்ஷியான விசால புஷ்காணியெனனும பெயாபெறற தீாததததிறகுத தெனபாரிசததிலே சுயமாக எழுந தருளிய சிவனே, ஈசுவரிககுப பெயா சாம்பவி என்று சொல்லுகையால பரம சமபுவெனறும் புகழ்ந்து பூஜிதது வணஙகினுாகள இநத தீாதத மூாததி தலம ஆக மூன்றுககும சக்தியினுடைய பெயா முதனமையான காரண மாய் விளஙகினபடியினுலே இநதஸதலததுககுச சமானமானது இனனமொரு ஸதலமுணடென று சொலவதறகில்லே.

சிலேநோ்வா னுதலாள்சொற் படிகதவி வனஙகளெல்லாந
　　திருப்பைஞ் ஞீலி
நிலேயாகி யழியாத பதவிபெற்று வளர்ந்திருக்கு
　　நெடிய வாழை

யிலைநீழ லுறைந்தனர்கெட் டிலைவீசு தென்றலுகந்
திருத்த லாலே
மலைமாது பாகர்திருப் பெயர்கதலி வசந்தரென
மறைகள் கூறும். (18)

விலலைபோன்ற நெற்றியையுடைய பார்வதிதேவியாரின உததரவினபடி தேவ ரமபைகளெலலாம் கதலிவனமாகத் திருப்பைஞ்ஞிலியிலே எனறைககு மழியாத பதவியடைநது வளாந்திருககினறனா நெடிதாகிய அநத வாழையிலை நிழலிலே தெனறல் வீசுமபடி வாஸமாயிருந்தபடியினலே கிரிராஜகுமாரி பாக னுகிய பரமசபுவினுடைய பெயா கதலிவஸநதரென்று வேதங்கள சொலலு கின்றன

வீறுதிகழ் விசாலைவிதித் திடுமதனல் விசாலதட
மெனபபே ராகிப்
பெறுதரு விமலையின்முன் விளஙகுபர மானநதப்
பெருக்கைச சேநதே
னுறமிர்த சாகரத்தை யுதகமய மாகவநதங
குரித்தெப் போது
மாறுத மனேகரத்தை மதி ீமேற்கொள வாரன்றோ
மதிமேற கொள்வார். (19)

பெருமை பொருநதிய விசாலையாகிய பாாவதி யுண்டாககியபடியினலே விசால புஷ்கரணி என்னும பெயராகி முகதியாகிய மேலான பதவியை யருளுா. அதின் மகிமை யெப்படியெனறல் பராசகதியினிடமாய விளங்கிய ஆனந்த சமுத்திரமானது பெருகி ஊற்றெடுத்து அமிர்தமயமான தெழும்பி வந்த தீாததமயமானதை எநநேரமும பாராமல மனதில ரமமியமாக நினைவிலே வைத்தது தியானம பணணினாகளேயானல அவாகள் சநதிரனைச் சடையிலே தரித்த பரமசிவனுககுச் சமானமாவாாகள

அயனததால் வருதினததா லாயிரநேததி ரததார் கீர்த்
தனைசெய் வேத
வயனத்தா மமைககமலா தனத்தாரவ் வயனைத்தா
னருளுஞ் சேட
சயனத்தார் புகழ்விமலா ரணியத்தார் விசாலதடந்
தனையன் பாக
நயனத்தா லொருதரங்கண் டவரன்றே லலாடமுற்ற
நயனத்தாரே. (20)

அயனமாகிய ஆடிமாதப்பிறப்பு, ஐப்பசிமாதப்பிறப்பு, சங்கராந்தி முதலியன, வ்யதீபாதம முதலியன, பாவகாலம இரத தினஙகளிலே ஆயிரஙகண் படைதத தேவேநதிரன, வேதகோததனை செயதுகொண்டு கமலாசனததிலிருக கினற பிரமமதேவன, அநத பிரமமதேவனை உந்திககமலததிலீன்ற அனநத சயனனுகிய விஷணு முதலியவாகளும எத்தேசகாலமும் புகழும விமலா ரணியமான திருபபைஞ்ஞீலியில விளங்கிய விசால புஷ்கரணியை அன்போடு ஒருதரம் கண்டவாகள நெற்றிககண்படைதத பரமேச்வரனுககுச் சமான மாவார்கள்.

நிலையினு மொருமலொரு நிலையிலர் பலவுயிரை
 நித்த மாய்த்த
கொலையினு ரிகழ்வுறுபுன் றலையினு ரழிவுசெய்தூர்க்
 குணைத்து நீசப்
புலையினுர் களுமவிமல விசாலதடத தொருதிவலை
 புரோடசித தாளா
தலையினு ரவரன்றோ தலைமேல்வைத திடுகுமெண
 டலையி னுரே (21)

பூலோகத்திலே இனனஜாதியென்று நிலையிலலாத இழிவாகிய ஜாதியா ரானும் நாலவகை வாணத்துககுட்பட்ட ஜாதியாரானும பலவுயிரை நிததம் கொனறு கொலை செய்தபோானும இகழ்சசிதரும சமயபேதிகரானும் அழி வுககேதுவாகிய தூாககுணததைப்படைதத சணடாளராகிய புலையரானும, அலைமொருநதிய விசால புஷ்கரணியிலே ஒருதிவலை புரோக்ஷணையடைநத சிர சைப் படைததவாகளானுல், பிரமமதேவன சிரமாலையணிநத பரமசிவனுவாாகள.

வாணியார் சிநதுதுஙக பத்திரைநர் மதைகோதா
 வரியார் கிருஷ்ணை
வேணியார் சையகிரி மணிமணிகர் ணிகையமுனை
 விமலர் வேணிக்
காணியார் பரவுதிருப பைஞஞீலி விசாலபுட்
 கரணி மேவு
பாணியார் திவலைகொண்டா ரன்றேமான் மழுதரித்த
 பாணி யாரே (22)

வாணிநதி, சிந்துநதி, துங்கபததிராநதி, நர்மதை, கோதாவரி, கிருஷ்ண வேணி, மணிகாணிகை, யமுனைநதி, சிவனுடைய சடையிலேயிருககிற கஙகாநதி,

காவேரி, முதலியவை நித்தியமவந்து ஸ்தோத்திரம் பண்ணுகின்ற திருப்பைஞ் ஞீலி விசாலபுஷ்கரணி என்னும் தீர்த்தத்திலே வந்து கையிலே ஒருதுளி தீர்த்தம உட்கொள்ள வேண்டுமென்று எடுத்தபோகள் மானமழுவைத் தரித்த சிவனுக்குச் சமானமாவார்கள்.

தெரிசிக்கப் பரிசிக்கப் புரோட்சிக்க வொரு திவலைத்
 தெண்ணீ ரளி
யுருசிக்கக் கொளத்தகுமல லாதுமுழு கிடப்ரபாகா
 துமப ரேனோர்
பரிசிக்க வெருவிநின்றரு சவிபுரிவார் விமலைபரா
 பரனுக கென்றே
துரிசற்ற திருமேனிக கபிடேகம புரிகவெனச்
 சொல்லும வேதம (23)

இன்னுமந்த விசால புஷ்கரணி என்னும் தீர்த்தத்தைக் கண்ணினுலே தெரிசிக்க கையினுலே தொட்டுச் சிரசிலே புரோக்ஷிக்க ஒருதுளி ஆசமனம் பண்ணத் தகுமே யலலாமல அதில ஸநாநம பணணலாகாது. தேவாகள் முதலாகிய பேரும் தொடுகிறதற்குப் பயந்து தூரநின்று கைகுவித்து நமஸகாரம் பணணுவாாகள். ஆனாந்த சகதி சொரூப பராபரனுகியே குறறமறற சிவன திருமேனிக கபிஷேகம பண்ணலாமென றும வேதஙகள சொலலுகினறன.

சாஙகதலத தறுபதினமே லொருநாலு சதுரயுகங
 தனைக்கண் டுள்ள
பூங்கதலி வடிவதனைக் கண்டோர்வீழ்ந திறைஞ்சிவலம
 புரிந்து ளோர்கள்
ஆங்கதற்கு வேதிகையுண் டாக்கியர்ச்சிப் பவாகள செனமாந
 தரத்திற் செய்த
தீஙகமரா நினைத்தவுல கடைநதிருப்பர் தரிப்பருயர்
 சிவசா ரூபம் (24)

சாஙகமாகிய திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸதலத்திலே அறுபத்துநான்கு சதுர யுகங் கண்டிருககின்ற தேவாமபை ரூபமான வியலருடனும் கூடின வாழையைக்கண்டு நமஸ்காரம் பண்ணிப் பிரதக்ஷிணம் பண்ணின பேர்களும் ஜன்மாந்திரங்களிலே செய்த பாபங்களெலலாம தொலைந்து நினைத்த உலகங்களையடைந்து பின்னும் மேலாகிய சிவ சாரூப பதமுமடைவார்கள்.

பெருவாளை புடைதாவ மதுவைவிம லாரணியப்
    பேரா றுகத்
தருவாழை யிடத்திலனுட் டானமொடஞ் செழுத்தினையுச்
    சரித்து ளோர்க
டிருவாளை யகிலகலை தருவாளை மணநதவர்வச்
    சிரப்பேர் பூண்ட
செருவாளைத் தரித்தவர்போற் றிசைத்திடவீற் றிருப்பருயர்
    சிவசா ரூபம் (25)

பெரிதாகிய வாளைமீன்கள் எழும்பித் துள்ளிப்பாய்கின்ற அதிர்ச்சியினாலே கதலிக்கனிவிண்டு அதினுடைய ரசமானது பெருகி விமலாரணிய நதியாகும படி வளர்ந்துள்ள வாழையினிடமிருந்து அனுஷ்டானம் செய்து பஞ்சாக்ஷரம ஜெபித்த போகள் லெக்ஷ்மியகனுன விஷ்ணுவும ஸரஸ்வதிநாயகனுன பிரம் மாவும் சௌரியம் பொருந்திய வஜ்ராயுதரான தேவேநதிரனும தெணடம் பணணி ஸ்தோத்திரம பண்ணத்தக்கதாக சாரூபததிலே என்றும் அகலாம லிருப்பாாகள

கானரம்பு துளைத்தநவ்வி யெனவுருக்கூ சிகளைநகக்
    கண்ணி லேற்றி
யூனரம்பு தோலெலும்பு சிதறிடசசந துகளதுணுககிட்
    டுதிரஞ் சோரச
சீனரமடைபுத தருநிரயத துறைபவர்கோத் திரத்திலொரு
    சிறுவ ரேனுந
தேனரம்பை வனநதரிக்கி லவரெளிதி னடைநதிருபபர்
    சிவ சாரூபம் (26)

ஜெனமாநதிரஙகளிலே மகா பாதகஙகள்செய்து பூலோகததிலே ஜனித்துப் பாபங்களை அனுபவித்துநதீராமல் எமலோகத்திலே கால் நரமபைத துளைதது உருககூசிகளை நககககண்ணிலேற்றி நரம்பு, எலுமபு, தோலகள் சிதறவும உடன் வடியவும சந்துகள துண்டு துண்டாகவும ரததங்கள பீர் என்று பாயவும் கதறிமெபடி யடிதது சீழானது நரமபுகளையுமறுததுப் பொசிகின்ற கிருமி முதலான ஜீவன் வசிக்கும் நரகத்திலே போட்டு அழிதது அளவிலலாத எமதண்டனையடைகிற கோத்திரத்திலே ஜனித்த பிள்ளையானுலும மது ஒழுகும் கதலிவனம் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியில் வந்து க்ஷணப் போது வாஸமாய் இருக்தாராயின் முன் சொன்ன எமதண்டனையும் நரகவாதனை யுக்தீர்ந்து எளிதிலே சிவசாருபப் பதவியடைவார்கள்.

பற்றியவெவ் வினையகற்றி முத்திதரு ரத்னசபா
பதிக்கு நேய
முற்றவர்க்கோ தனமகொடுப்பார்க் கித்தகைய பலனெனத்தேர்ந
துரைப்பார் யாரே
மற்றும்விம லாரணியத் தழியாத பதவிபெற்ற
வானமு நீழற்
சிற்றெறும்புக் குணவுதவப் பெற்றவர்நித் தமுமகலார்
சிவ சாரூபம் (27)

தொடர்ந்த பழவினையெல்லாமகற்றி முக்தி மோக்ஷங்களைக் கொடுக்கும ரத்ன சபாபதியின்பேரிலே பக்திமார்க்கம தவறுமலிருக்கின்ற உத்தமரா கிய பெரியோர்களுக்கு அன்னதானம் கொடுத்த போகளினுடைய பலனை இவ்வளவென்று தொகுத்து ஒருவராலும் சொல்லமுடியாது பின்னும அந்த விம லாரணியமான திருப்பைஞ்ஞீலியிலே ஒரு சிறெறும்பு பசியாரும்படி அன்னங் கொடுத்தார்களானுல அவர்கள் நித்தியமான சிவ சாரூபதை யடைந்து வாழ்வார்கள்

துணிவுகொண்ட திறமைமிக முழுதகட புரிவளவன்
றுணைக்கை கூப்பிப்
பணியநயப் பொடுவிமலா ரணியசரித் திரமிதெனப்
பகர்ந்தா னன்றே
திணிவரை முத் திலகுசைய கிரிகபில முனிவேண்டத
திருக்கா வேரி
யணிகனக மயவடிவை நதிபாதி பெண்பாதி
யாக்கி னனே (28)

தைரியத்தையே பிரகாசமாய்த் திறமையாகப் படைதத மனதுடைய கும்ப கோணத்துககதிபதியாகிய சந்திரபீட சோழராஜன் நமஸ்காரம்பண்ணிக கேட்க சந்தோஷத்துடனுங்கூடி விமலாரணிய சரித்தம் இதுவென்று திருவுளம் பற்றினுர. மூஙகிலகளிலே முததை விளைகின்ற சையகிரியிலே வாஸ மான கபில முனியானவா, காவேரியமமானைக கமண்டலததிலே அமாத்திக கொண்டு சென்ற அகஸ்தியரை வேண்டிககொள்ள அவா காவேரியைக கமண் டலத்தைவிட்டுப் பூமியிலே பெருகச செய்து திருக காவேரி தீர்த்தத்துக்கு, காவேரியான நதியும அம்மனுகிய பெண்ணுமாகக காவேரியம்மானுகும்படி செய்தவர் அகஸ்தியா

## மூன்றுவது சுவேதகிரி மகிமை

வேறு.

மதைத்துமுகி றுவியபைஞ் ஞீலிவிம லாரணிய
வண்மைதனை யுண்மை பெறவே
வித்தகம தாகநுகர் புத்தமுத மாமென
விளைவிய குடந்தை வளவன்
சித்தரொடு சாரணர்கண் மாதவர் தமக்குரிய
சித்திதரு தென்கயி லையா
மத்தரள மாமலை யருந்தகைமை சொல்கென
வகத்திய னுரைத்த ருளுவான் (1)

கருமைபொருந்திய மைபோன்ற மேகங்கள் தவழாநின்ற கோபுரம், மதில் சோலைகளெல்லாம் உயர்ந்து சூழ்ந்திருக்கின்ற திருப்பைஞ்ஞீலியாகிய விமலா ரணியசரித்திரத்தை மெய்யாகப் புதிய அமுர்தமாமென இரண்டு காதினலும் கேட்ட கும்பகோணவாஸியாகிய சநதீரபீட சோழ மகாராஜனிருந்து பின்னும் சொலவான். சித்தா, சாரணா, முனீச்வராகள் முதலான பேர்களுக்கும் மோக்ஷமருளும் தென்கைலாசமானது முத்துமலையாக வந்த மகத்துவம் அடி யேனுக்குத தெரியும்படி திருவுளமபற்ற வேண்டுமென்று விணணப்பஞ் செய்ய அகஸதியமுனிவா திருவுளம் பற்றுவாா.

ஈனமகன் ஞானசிவ பூசனைசெ யாமன்மக
மேபுரிகு வார்கள் பெறவே
போனகமு மின்பமுறு காமினிக ளுநதரு
புரந்தர னெனுங் கடவுளுமு
கானுலவு தேனுவித மைந்துவகை யைவகைய
கற்பக தருக்க ளுடனே
வானிதிய மொன்பது நிறைந்தகரு வூலமது
மானு மகவா னுலகமே (2)

ஈனமாய பிறவியை ஒழிக்கும் ஞானத்தைக் கொடுக்கின்ற சிவபூஜை களைச் செய்யாமல் பிறப்புகளை யெடுத்துப் போகபாக்கிய சௌக்கியங்கள் பெறும் படி பூலோகத்திலே யாகாதிகளைச் செய்கின்ற பேர்கள் பெறுகின்ற தேவாமிரு தம்,தேவரம்பை இன்பம்,தேவேந்திரன்,கருமை,செம்மை,பொன்மை,வெண்மை,

பசுமை, நிறமாகிய வனங்களில் சஞ்சரிக்கின்ற ஐந்து விதமான காமதேனு, முன்சொன்ன பஞ்சவர்ணம் படைத்த கற்பகத்தருக்கள் ஐந்து, ஒன்பது வகையான ரத்தினத்தோடேகூடின நவநிதியம் முதலியவை எங்கேயும் நிறைந்த பொக்கிஷம்போன்றது தேவேந்திரலோகம்.

கருதரிய வளமைதிகழ் கனகவுல கதனிலுறை
 கடவுளர்க ளிறைவ னொருநாள
மருவுசுர தருவிலுறை களபமொடு விரவியெழில்
 வடிவமிசை கமகமென வே
முருகுவிரி தெரியல்புய வலயமணி கடையமணி
 முடிவயிர தரள சரநூல்
விருதுபுனை கருதலர்பொன் முடிவருடு கமலபதம்
 விரவுகழல் முரல வொலியே (3)

மனதிலெண்ணி நினைப்பதற்கரிதான வளமை பொருந்திய பொன்னுலகத்திலே வாஸமான தேவர்களுக்கு ராஜாவானவன், கற்பகவிருக்ஷத்தினிடமாக விளங்கின்ற சாந்து, ஜவ்வாது, புனுகு, கஸ்தூரி, கோரோசனை, கலவைச் சந்தனங்களாகிய கல்பங்களைச் சரீரத்திலே வாசனைக்காக அணிந்து தேன் நிரம்பிய பாரிஜாத மலாமாலை யணிந்த புஜத்திலே வாகுவலயமணிந்து கையிலே கடகந்தரித்து, வஜ்ரமணி யிழைத்த வஜ்ரகிரீடம் சிரசிலே சூடி மார்பிலே வெண்மையான ஆணி முத்துமாலையுடனே பூணூலுமணிந்து விருதுபொருந்திய சத்ருவாகிய ராஜாக்களின் கிரீடங்கள் படியும்படியான பாதத்திலே வீரகசுழல் சப்திக்கும்படி தரித்தான்.

மயில்கண்ட மாடவுயர் தவளநிற மாகமுகின்
 மழையொடெதி ரேகுல வவே
பயில்வனச மாயிரம தலரவுரு மீதுபடர்
 பசுமை யொளி தோய்பம ரகத
சயிலம் வெகு கோடிகதிர் மணிகணிறை தீவிலுறை
 தகைமைபெற வானவர் கள்கோன்
வயிரவுடை வாளொளிகள் பளபளென வேயுறைவன்
 வளர்தவிசி லோர்ச முகமே (4)

மயில் தோகையை விரித்துக்கொண்டு ஆட, சூற்கொண்ட வெண்மை நிற மேகங்களுடனே கூடிச் சூரியபகவானை மறைத்து மழை வர்ஷிக்கிற போது, அதற்கெதிராக மலர்ந்த * செந்தாமரைபோல் ஆயிரங்கண்ணும்

சரீரத்திலே விளங்க, பசுமை நிறம் பொருந்திய மரகத பர்வதம் போலவும் தீவிலே விளையும் வெகுகோடி மாணிக்கப் பிரகாசம்போலவும் தேவர்களுக் கெல்லாம் ராஜாவாகிய தேவேந்திரன் வஜ்ராயுதமானது ஒளிவிட்டுப் பிரகாசிக்க விமயாசனத்தின் பேரில் எழுந்தருளி யிருந்தான்.

மறைகூறி யர்ச்சனை செய் துறவோ ரிடத்துவரு
மறியேறு கொற்ற கனலி
யுறுகூடு முற்றிவிழு திறநாடி விட்டபக
டுயர்வாக னத்து மறலி
மறவோர் குறைக்குமுர கரிபோ லிருக்குநிரு
தனையே நடத்து நிருதி
குறையாது மைக்கடல்கள சுறவே நடத்துசல
குலமே லுதித்த பரிதி (5)

இந்தப் பிரகாரம் தேவேந்திரனிருந்து வரும் கொலுவில வேதமந்திரங்களைச் சொல்லி யாசசனை பண்ணி யாகஞ்செய்து வணங்குகின்ற பெரியோர்களிடத் திலே எழுந்தருளும் ஆட்டுக்கிடா வாகனனாகிய அக்னி பகவானும் ஒரு கூடுவிட்டு உயிரைப்பிடித்துப் பின்னுமொரு கூட்டிலிடப்பட்ட எருமைக்கடா வாகனனாகிய யமனும் இராக்ஷத வாகனத்தின்மேலே வருகின்ற நிருதியும் கருப்பு நிறம்பொருந்திய சமுத்திர ஜலத்தைப் பானம் பண்ணும் மேகவாக னன வருண ராஜனும்

கதியா யனைத்துலகு ளுயிரா யசைத்துலவு
கலைமா னடத்து மினுதன்
றுதிகூறி யக்கபதி சதிரான புட்பகம
துடையோன மிகுத்த தனதன்
விதுவேணி வைத்தபதி னொருகோடி கடகதிபன்
விடைவாக னத்த புனிதன்
முதலோ ரடுத்தனாகண் மகவா னவைக்கணெழு
முனிவோரு மிக்க வருமே (6)

உலகங்களிலுள்ள சாவப்ராணிகளிலுமிருந்து ஆட்டிவைத்துக் கொண் டிருக்கிற வாயுபகவான் கலைமான் வாகனத்திலே வரவும் இயக்கருக்கதிபதியும் புஷ்பகவாகனருமான குபேரனும் ஜடாமகுடந்தரித்த பதினொருகோடி ருத்திரா ளும் அதிபதியாகி ரிஷபவாகனத்தில எழுந்தருளி வர ஈசானியனும் சப்தரிஷி கள் முதலான தேவதைகளெல்லாம் கூடிய தேவேந்திரன் சபைக்கு வந் தான்.

வந்தவர் தமக்குமுன மெந்தவகை யப்படி
வளம்பெற நடத்தி மகிழ்வா
யிந்திரன் மணித்தவிசு தந்திட மகிழ்ச்சியொ
டிருந்தன ருருத்தி பெறவே
யநதவமை யததிலுல கஙகளை முடித்தலையு
ளமபுய மலர்க்கு நிகராச்
சநததமும வைத்தரு ளனநதன்மலை யைச்சிறை
தடிநதவ னிடத் தணுகினன் (7)

வநததேவாகள், ரிஷிகள், அஷ்டதிகபாலகாகள், முதலியபேருக்கு அவரவர்களுக்கு நடததவேணடிய உபசாரஙகளைச் சந்தோஷததுடனே செயது விமமாசனம கொடுகக அவாவாகள சுகாசனமாகவிருந்தாாகள். அந்தச சமயததில் பதினாலு லோகஙகளையும செந்தாமரைப் புஷபமபோலும சிரசிலே தாஙகும் பாதாளலோககாததனை ஆதிசேஷனைவன, முனநாளிலே வஜராயுததததினாலே, பறநதுதிரிகின்ற மலைகளையெல்லாம சிறகறிந்த தேவேந்திரனிடததிலே வநதான்.

நாகாதி பார்க்குமுத லானோன் வரததனது
நானு முகதத ருடனே
நாகாதி பததினெதி ரேபோ யுறததழுவி
னை யிரத்தொரு கனைல
வாகான கட்செவியர் கோமானை யுறறுமகிழ்
வானுடி யித்தின மலோ
வாகான் மிகுத்ததின மீராயி ரததிருகண்
வாழ்வே யெனப் புகலவே (8)

அஷடமா நாகங்களுககு ராஜனாகிய நாகராஜன வருவதைககண்டு தெயவலோகத்துககதிபதியான தேவேந்திரராஜன சமஸதமான தேவாகளுடனும கூடி எதிாகொண்டு வரவேற்று ஆலிஙகனமாக அணைத்தது தன்னுடைய ஆயிரம கண்களாலும அழகுபொருந்திய கட்செவிகளைப் படைத்த நாகராஜனிடம் சந்தோஷமடைந்து நீ தெயவலோகததுககு எழுந்தருளி வந்தினமாகிய இந்த தினமே சுபதினமாயிற்று. இரண்டாயிரம் கணகள்படைத்த என் வாழ்வாகிய நாகராஜனே யென்று கொண்டாடினன்.

சமுகத்தில் வேறுமொரு தவிசிட்டு நாகரிறை
தனைவைத்து நேய முடனே
யெமுகத்தெ லாவுலகு முதாரத்தி னனைமடி
யிடைவைதது மீதம ரவே

சுமுகத்தி னீழல்கொடு துயில்விதத வாவுனது
துதிசெப்பு மாற ரிதென
விமுகத்த னகியதி சினமுற்று வாயுமிக
விகடசசொ லாக மொழிவான் (9)

அப்படி நாகராஜனை எதிர்கொண்டழைத்து வந்து தனக்குச் சமானமாகக் கொலுவிலே வேறு ஸிம்மாஸனம் கொடுத்து இருக்கும்படி சொல்ல, அந்தப்படி ஆதிசேஷனிருந்தபோது, தேவேந்திரன் அதிக சந்தோஷமாகச் சொல்வான். ஈரேழுபதினாலு லோகத்தையும் உண்ட பண்டி தாங்கின மகாவிஷ்ணுவை உம்முடைய மடியில் சயனம் பண்ணவைத்தும் பின்னும் மகா வசீகரம் பொருந்திய முகத்தின் படத்து நிழலிலே கணவளர வைத்தவரே உம்முடைய பிரதாபம் யாவராலும் சொல்லுந்தரமானதென்று புகழ, வடவாமுகாக்கினி சீறி எழும் பின்துபோல் அதிகக் கோபங்கொண்டு விகடவார்த்தையாகச் சொல்லுவான் வாயுபகவான்.

வாராதி சுற்றுலகு தானேகொ டுதத்திடுவன்
மாலா யுதிப்ப னதிலே
நாராய ணக்கடவுண் மாயாவி கறபமெவர்
நாவா லெடுத்துரை செய்வார
சீராக நித்திரையி லோர்பாய லுக்குநிகா
சேடேச னைப்புக ழுவிர்
ஓராலி லைததளிரின் மீதே படுத்ததிலை
யோதேவ கிபபு தலவனே (10)

சமுத்திரம் சூழ்ந்த பூமியெல்லாமுண்டாகும்படி செய்து அந்த ரக்ஷிக்க விஷ்ணு ரூபமாய விளையாடுகின்ற நாராயண மூர்த்தியினுடைய மாயாவி கறப விநோதங்களை நாவினாலே அளவிட்டுச்சொல்லமுடியாது யாவராகிலும் நித்திரை பண்ணும்போது கீழே விரித்துப்போடுகிற கோரைப்பாயக்குச் சமான மான ஆதிசேஷனைப்புகழ்ந்து இந்த தேவ சபையிலே சொல்லவேண்டுவ தென்ன? விஷ்ணுவுக்குப் பாயாகவிருந்ததினாலே அவன் பெரியவனாய்விடு வனு? முக்காளிலே ஆலமரத்தின் கொழுந்து ஒன்றிலே தேவகீ புத்திரனை கிருஷ்ணன் நித்திரை பண்ணவில்லையோ? அப்படிப்போலும் இந்த ஆதிசேஷ னென்று சொன்னான் வாயுபகவான்

கேதத்து டன்கொடிய வாயுச்சொ னிநதையுரை
கேள்விக்கு நஞ்ச மெனவே
வாதித்த துன்பமது தீரப்பு ரந்தவரை
வாதிட் டெதிர்நத செயல்போன்

மீதிட்டி டும்புவன பாரத்தொ டுன்றனையென்
  மேல்வைத் துகந்த வெனை நீ
மோதிச சினந்ததறி வினத்தி லென்றனன்
  மோகப் புயங்க வரசே (11)

இப்படி வாயுபகவான் கோபத்துடனே கொடிதான நிந்தை வசனஞ் சொல்ல அந்த வசனம் காதின் வழியாக நஞ்சுபோல் மனதிலே புகுந்து வாதனை செய்ய, நிந்தனை சொன்னபேரைக் கண்டவுடனே எதிராக வேண்டுமென்றெண்ணிச சீறிவருகிறவர்களைப்போல் ஆதிசேஷனானவன் கோபங் கொண்டு சொல்லுவான். அடா வாயுவே, இருநூற்றிருபத்து நான்கு புவனமெல்லாம் சிரசிலே தாங்கியிருக்கின்ற என்னை சர்வ நிந்தையான வசனம் சொன்ன சாமர்த்தியம் இனிமேலறியலாமென்று சொன்னான்.

வேறு.

வனைக்கோபு ரத்தோ ருடற்கூனு பொய்ப்பாவை
  யைப்போ லவே
யனைத்தா யெனைத்தா பரிப்பா னினைத்தாய்
  சண்டா ளனீ
யுனைத்தா பரிப்பா ரிருப்பார் நினைக்கா
  யுனைத் தானுநீ
பனைப்போ லினைப்பா யணுப்போ லிருப்பாய்
  பகட்டா மைபோல் (12)

அந்தப்படி ஆதிசேஷன் சொன்னதற்கு வாயுபகவான் சொல்லுவான் இருநூற்று இருபத்துநான்கு புவனமெல்லாம் சுமந்திருக்கிறோமென்று இறுமாப்புக் கொண்டு பெருமைபேசிக் கொண்டாயே, கோபுரத்தைத் தாங்கிக்கொண்டிருப்பது வேறு யிருக்க அதன்மேலே ஒருவன் பண்ணிவைத்த பொம்மையானது உடல்கூனி விழிகள் பிதுங்கித் தோளைக்கொடுத்து நான்தான் இந்த கோபுரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறேனென்று விருதாவிலே சொல்வது போல இந்த புவனத்தைத் தாங்கியிருக்கிற கர்த்தன் வேறாயிருக்க, நான்தான் தாங்கிக்கொண்டிருக்கிறேனென்று நினைக்கிறாய் நீ சண்டாளனானபடியினாலே உன்னைத் தாங்கிக்கொண்டிருக்கிற பேரை நீ யறியவில்லையே அப்படிப்பட்டவன் அணுவளவாயிருக்கின்றவன் பனைபோலிருக்கிறோமென்று நினைத்துப் பகட்டினாலே சுத்தப்பிரட்டனா யிருப்பானென்று சொன்னான்.

சிறக்கச் சிரத்துக்கு ளேதோணி லேகாதி
  லேமார் பிலே

திறக்கத் தரித்தார் மகாதேவர் பாராது
நீபேசி னுய்
மறத்திற் சிறப்பட்ட போராளி மேலேறு
மாறு கவே
புறப்பட் டெதிர்ததுக் குரைத்திட்ட வாய்ஞாளி
போலா குமே (13)

இப்படிச சொன்ன வாயுபகவானைப்பார்த்து நாகராஜன் சொல்லுவான். பரமசிவனுனவர் சிரசிலே சடைரூபமாகவும் புஜத்திலே வாகுவலயமாகவும் காதிலே குண்டலமாகவும் மார்பிலே மாலையாகவும கையிலே கங்கணமாகவும் அனுதினமும் சிறப்பாக தரிததிருக்கின்றதைப் பாாககாமல் அகந்தையான வாாத்தை சொன்னது எப்படி யிருககிறதென்றால் பராககிரமத்திலே அதிகத் திறமை பொருந்திக் காசசிககிற பெரிதாகிய யாளிககுச் சமானமென்று எதிராகக் குலைததுக கொண்டு புறப்பட்ட சுவானததுககுச் சமானமாயிருககிற தென்றான்

பொருப்பைத் தரித்தார் சிலைபோல முன்னுளோர்
புரஞ் சாடினார்
நெருப்பைத் தரித்தார் திருக்கோல மாய்வநத
வொருகே மூலவன்
மருப்பைத் தரிததா ருரதததெபா லாவேடன்
வன்கா லிலோர்
செருப்பைத தரிததார் தரிககாத தோசிவன்
றுனு மேதான் (14)

அப்படி சவானததுககுச சமான மென்று நாகராஜன் சொல்ல அதற்கு வாயுபகவான் சொலவான் சிரசிலேயும கையிலேயும மார்பிலேயும தரித்திருக் கிறபடியினுலே வெகு பெரியவனென்று நினைத்தாய் அநதப் பரமசிவன் உன்னைத் தவிரப் பின்னெனறும் தரித்ததிலலையோ? மகமேரு கிரியைக் கையிலே வில்லாகத்தரித்து திரிபுர தகனம் பண்ணினுர்; நெருப்பாகிய மழுவை தரித்தார்; மார்பிலே பன்றிககொம்பை யணிநதார், பொல்லாத வேடனுகிய கண்ணப்பன் காலிலே யிருந்த செருப்பை யணிந்தார இன்னும் ஆமையோடு, கொக்கிறகு, எலும்பு முதலிய அநேக மணிக்திருககிறுா. பரமசிவன் தரிக்காதது ஒன்றுண்டோ? நீயும் அதற்கு சமானமான பெரியவனென்று சொல்லுவதெப்படி என்றான் வாயுபகவான்.

பவனன் றடுக்கென்ற வசனஞ் சொலப்பொங்கு
பணிரா சனு

மவனுஞ் சினக்கின்ற வசனஞ் சொலக்கண்க
    ளனலா யினார்
இவனின் றசைக்கின்ற புவனந் தரிக்கின்ற
    விவனு தலா
லெவன்வந் தமைக்கின்ற சிவசம்பு வுக்கன்றி
    யிவர் போர்களே (15)

இப்படி வாயுபகவான் துடுக்கான வார்த்தை சொல்லவே நாகராஜனும் கோபமடைந்தான். வாயுபகவானும் கோபமடைந்தான். இரண்டு பேருடைய கண்களும் சிவந்து அக்னியைப்போலாயின இப்படி இவர்கள் கோபமடைந்ததைக்கண்ட தேவேந்திரனைவன் தேவர்களைப் பார்த்து இந்த வாயுபகவான் உலகங்களிலே சர்வப் பிராணிகளிலுமிருந்து அசைப்பவன் இந்த நாகராஜன் இந்த லோகங்களை யெல்லாம் சிரசிலே தாங்குகிறவன் ஆனபடியினாலே இவர்கள் கோபத்தைத் தணிப்பதற்குப் பரமசிவன் வர வேண்டுமே யல்லாமற் மற்றொருவராலு முடியா தென்றான்.

வேறு

என்றான் மகாதிபதி நின்றா ரதேகரும
    மென்றார்கண் மாதவ ரலா
மன்றா மெனுவகை புகன்றா ரலார்கொடி
    தகந்தாபி மான மெனவே
நன்றான வாயுவலி கொண்டான் மகாவிட
    நலிந்தால் விரோத மறவே
குன்றாத மாமலை மருந்தா லலானமன்
    வெகுண்டாலு மாறரியதே (16)

அப்படி தேவேந்திரன் சொல்ல, தேவர்கள் அதே காரியமென்றார்கள். ரிஷிகள் ஆமென்றும் அல்லவென்றும் சொன்னார்கள். அப்பால் தேவேந்திரன் யோசனை பண்ணுவான். அகந்தைகொண்டு வாயுபகவான் சண்டமாருதத்தினாலும் நாகராஜன் ஆலஹால விஷத்தினாலும் மனோவியாதியான கோபங் கொண்டால் அந்த வியாதி கைலாசத்திலே எழுந்தருளி யிருக்கின்ற பரமசிவனுகிய மருந்தினாலே தீருமேயல்லாமல் யமதர்மனைப் போன்றவன் புறப்பட்டு வந்தாலும் தீர்வதரிது.

ஒருவரை கொடுத்தம யிலுடையவ ரிடத்திலிவ
    ருறுபகை தவிர்ப்ப தெனவே

யிருவரை யனுப்பிலமர் விளையுமென வச்சிரனு
　　மெரியம னரக்கன் வருணன்
றருதனன் முக்கணனு முனிவரர் வசுக்கள்பல
　　தபனர்கள் குருக்க ளுடனே
கருமணி மிடற்றர்பதி ரதிமதி முடித்தபொருள்
　　கயிலையை யடுத்த னர்களே. (17)

பர்வத ராஜன் குமரியான, மயில் சாயையுடைய பார்வதி தேவியை இடத்திலே வைத்த பரமசிவனுடைய சமுகத்திலிவர்கள் பகையைத் தீர்க்க வேண்டும். அதமத இவாகள் இரண்டு பேரையும் போகச் சொல்லியனுப்பினோமானால் நடு வழியிலேஇவாகள் ஒருவருக்கொருவா சசசரவிட்டுக்கொள்வார்களென்று தேவேந்திரன மனதிலெண்ணித தானும் யமன் நிருதி வருணன் குபேரன் ஈசானியன் ரிஷீச்வரா அஷ்டவசுக்கள் பனிரண்டு ஆதித்தியா சப்த குருக்கள் முதலிய தேவாகளுடனே புறப்பட்டுக கண்டத்திலே விஷத்தைத தரிதது சிரசிலே கங்கையை யணிந்த பரமசிவன் வஸிக்கும் கைலாச கிரியைக குறுகினாகள

புவிமீதி லிப்பெரிய மலைமேன் மலர்க்கடவுள
　　புயல்போ னிறதத னிருவோா
விபரீதம வைத்துமறை கவர்சோ முககொடியன்
　　மிகைதீரு தற்கடை குவா
ரவரோடு மைக்கவவ ரிவர்தாமும் வெறபிறைவ
　　ரடிபேணி யர்ச்சனை செயா
பவநாச னைக்கவுரி யுமைநேச னைப்பரனை
　　பரமேச னைப்பர வினர். (18)

பூமியிலுண்டான மலைகளுக்கெலலாம பெரிதாகிய கைலாசகிரியிலே தாமரை மலர் வாசனான பிரம்மாவும் கார்மேகவாணனான விஷ்ணுவும் விபரீதகாலம் வந்து அடிமுடி தேடிக் காணாமல் சலித்து வந்த தங்கள் குற்றம் தீரும்படி சுவாமியிடத்திலே காத்துக்கொண்டிருக்கிற சமயத்திலே,தேவேந்திரன் போய்ச் சொன்னான். விஷ்ணுவானவர் தேவேந்திரன் முதலியவாகளை அழைத்துக்கொண்டு போய்க கைலாசநாதருடைய பாதத்திலே அாச்சனை செய்து, பாபங்களையெல்லாம் நாசஞ் செய்பவனே, பார்வதி நாயகனே, பிரணவ சொரூபமான பரமேசவரனே என்று ஸ்தோத்திரம பண்ணினா.

பணிலந் தரித்தவரி மொழிவன் பணிக்கடவுள்
　　பவனன் பகைத்து வருபோர்

தணியும் படிக்கிவர்கள் வரவென்ன நித்தனதி
சயமென்றுரைத்தம கிழ்வாய்க்
கணிதம் படைத்தியிவர் சிறிதூங்க கதிப்புமுல
கறியும் படிக்கு றுதியா
யெணிநின் றருக்கயனு மரியுங் கெடக்கனலி
யெனவங் குதித்த செயல்போல். (19)

வெற்றிபொருந்திய சங்குதரித்த மஹாவிஷ்ணுவானவர் விண்ணப்பஞ்செய்வார். சுவாமி, நாகராஜனும், வாயுபகவானும், பகைகொண்டு ஒருவருக்கொருவர் நான் பெரியவன் நீ பெரியவனென்று கர்வமடைந்தபடியினாலே அந்த கர்வம தணியும்படி செய்யவேண்டுமென்று தேவேந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் வந்திருக்கிறார்கள் என்று சொல்ல, நித்தியனாகிய பரமசிவன் நல்லதென்று சந்தோஷமடைந்து இவர்கள் உயர்வும் தாழ்வும் உலகத்தார் அறியும்படி உறுதியாய் எண்ணி முன்னாளையிலே பிரம்மாவும், விஷ்ணுவும் கர்வத்தையடைந்தபோது அகனிக் கம்பமாக எழுந்தருளின பிரகாரம்போலும் பார்த்துத் திருவுளம் பற்றுவர்

பொருவது நினைத்தகிற லரவுபவ னக்குரிசில்
புனிதசிக ரக்கயிலையே
லொருவன்விசை சுற்றிவிட விறுகுத னெகிழ்சசிபட
லொருவன்விடு வித்து விடவே
யிருவகை யுரைத்ததனி லொருவகை செலுத்தினவ
ரெவரவர் சமர்த்த ரெனவே
நிருமல னுரைத்தபணி விடைதலை மிசைசு கொடியர்
நெடுவரை படிகக னுகினர். (20)

நாகராஜனும், வாயுபகவானும் ஒருவர்க்கொருவா நான்தான பெரியவனென்று நினைத்து வந்த விவரத்தை யறியலாம். அதெப்படியெனில், சிகரத்தோடுங்கூடிய கைலாசகிரியைத் தன்னுடைய பலத்தினாலே ஒருவன் இறுக்கிச் சுற்றிக்கொண்டு மூடிக்கொள்ளுகிறது அதை மற்றவன் பலத்தினாலே தளாததி விடுவித்துவிடுகிறது இந்தப்படி நாம சொன்ன இரண்டு காரியத்திலே ஒரு காரியம் செயதுவைததவன் பெரியவன்; சமர்த்தன்-என்று நிர்மலனாகிய பரமசிவன் கட்டளையிட்டார். அவர்கள் அப்படிப்பட்ட சிவாக்கினையைச் சிரசின் பேரில் கொண்டு உயர்ந்த சிகரம் பொருந்திய கைலாசகிரியின் அடிவாரத்திற்குச் சென்றார்கள்.

நெடியவுர கத்துடல்வின் முகடளவி யுக்கிரவிழி
நெறிதழல் கொழித்த கவர்நாக்.

கொடியகன லுற்றுவரு புகையென நெருக்குபல
குலமதிக ளொக்கு மெயிறே
துடினமொ டுயிர்ப்பொகு மொகுமொகென விட்டவொளி
சொரிமுகி லிடிக்கு மொலியே
முடியவட வக்கினியில் வருகதிர்க ளொத்தவன்
முடியணி சகஸ்ர மணியே. (21)

அந்தப்படிவந்த ஆதிசேஷனானவன் தன்னுடைய கொடிதாகிய சரீரத்தை ஆகாசமளவாக நிமிர்த்து ஆயிரம் கண்களிலும் அக்கினிப் பொறிகள் சிந்த வெறித்தபார்வை பார்த்துக் கவர்பொருந்திய இரண்டாயிரம் நாக்கையும் அக்கினிக்கொழுந்துபோல நீட்டி, ஆயிரம் வாயிலும் தீப்புகையெழும்பப் புறப்பட அஷ்டகுலபர்வதங்களும் நெரிந்து போகும்படி நெறுநெறுவென்று கோரத்தந்தங்களை யதுக்கி மேகத்தின் இடிபோல இரைச்சலான சப்தத்துடனே சுவாசம்விட்டுச் சிரசிலே அணிந்திருக்கின்ற நாகரத்தினங்களெல்லாம் உதிர்ந்த காலத்திற் கோபங்கொள்வதுபோல அக்கினிப்பிரளயம்போல மனதிலே ஆக்கிரகமுண்டாக்கிக்கொண்டு சீறி எழும்பிச் சௌரியம் காட்டினன்.

படிபொடி படக்கடி தினுடலினை வளைத்துவளர்
பனிவரை தனைக்கு றுகிவா
லடியுருவ வைத்துமுடி துணியுருவ வைத்துமர
மதிலெறி கயிற்றின் விசைபோற்
கொடிநெடு மரத்தின்மிசை வளைகிளை யிருப்பினிறு
குழமுறை யிறுக்கி யிடுபூண்
வடிவென முறுக்கிநெறு நெறுநெறென வெற்புவடி
வடையவும் விசைத்து நிமிர்வான். (22)

அதிசீக்கிரத்திலே உலகமெல்லாம் பொடிபடத் தக்கதாக சௌரியங்காட்டி, எழும்பி வாலை வளைத்துக் கைலாசபர்வதத்தை யடுத்து அதன் அடிக்கப்பாலும் முருவும்படி தன்னுடைய வாலை யூன்றி, சடலத்தினாலே அதன் விஸ்தாரங்களை வளைத்துச் சுற்றி அதன் சிகரத்தைத் தன்னுடைய சிரசாகிய ஆயிரம் படங்களினாலும் மறைத்துக் கொண்டான் ஆதிசேஷன். அது எப்படியிருந்ததென்றால், முப்புரிக்கயிற்றை விசையுடனே மரத்திலே வீசியெறிந்தால் விறுவிறென்று பிடிப்பதுபோலவும் கைலாச மலையாகிய விருக்ஷத்தி னிடைவெளி தெரியாமல் முறுக்கப்படாத கொடிபோலவும் அந்தக்கொடி கலங்காமல் கீழே இரும்பினாலே பண்ணின பூண்களை இறுக்கிக்கட்டின பாவனைபோலவுமிருந்தது.

மணிகனி னெறித்தவிழி மலரெயிறு முட்கவர்கண்
    மடல்விரி துணர்க்கள் கவர்நாத்
தணிவுதவிர் மெய்க்குணிறை மறைபொருடனப்பனக
    தலமிசை யுதித்த கொடிமே
னணுகியிடர் பற்றரிய தருவிது வெனப்பெரிது
    நலமுற நிலைத்த நகரோ
கணபண நிரைத்தமணி முடியுர கனிததனுறை
    கயிலையை வளைத்த வடிவே. (23)

பின்னும் அந்த ஆதிசேஷன் சித்தன் வசிக்கின்ற கைலாசகிரியைச் சுற்றி வளைத்தது எப்படியிருந்ததென்றால், தன்னுடைய நெருப்பான கண்விழியே மலராகவும், கோரதந்தங்களே முட்களாகவும் கவர்பொருந்திய நாவே இலையாகவும் நாவின் நுனியே துளிராகவும் சடலத்தில் நிறைந்திருக்கின்ற மறைபொருள்களே காயாகவும், சடலம் கொடியாகவுங்கொண்டு, பாதாளலோகத்திலே முளைத்தெழும்பிய கைலாசமான விருக்ஷத்தைப் படர்ந்து சுற்றிக்கொண்டு அதனை இன்னும் உயரமாய் வளரவொட்டாதபடி செய்தது தணித்ததுபோலிருந்தது.

ஈதவ னியற்கைகள் சதாகதி யியற்கையினி
    யேழுலகு முட்கு லையவே
மாதிரம தெட்டுமெழு பாதலமு மெட்டரிய
    வாரிதியு மிகக கதிர்சூழ்
சோதிவட வெற்புநிலை பேறவிறு திகருளவரு
    சூறைமுத லெட்டு விசையான்
மோதினன விடுத்ததில தாகுமவிடு வித்துமவிடு
    மோதின மிருக்கு மிடமே. (24)

ஆதிசேஷனுடைய விருத்தாந்தமிப்படி யிருக்க, வாயுபகவானுடைய விருத்தாந்தம் எப்படியாயிற்றென்றால் பூலோகமுதல் சத்யலோகமீறாக எழுலோகமும் இந்திர திசைமுதல் ஈசான்னியதிசை யீறாக எட்டுத்திசையும், பாதாளலோகமும் சப்தசமுத்திரங்களும் சந்திரசூரியர் பிரதக்ஷணமாய் வருகின்ற மகமேரு முதலாகிய அஷ்டகுலபர்வதமும், ஐராவத முதலிய அஷ்டகஜங்களும், ஒரு லோகமிருக்கிற இடத்திலே ஒருலோகம் பெயர்ந்து வரவும் ஒரு திசையிருக்கிற இடத்திலே நிலைவிட்டு மற்றொரு திசை வரவும், ஒரு சமுத்திரமிருக்கிற இடத்திலே ஒரு சமுத்திரம் வரவும் மேருபர்வதமிருக்கிற இடத்திலே மற்றொரு பர்வதம் வரவும் ஐராவத கஜமிருக்கிற இடத்திலே மற்றொரு கஜம் வரவும்,

யுகாந்தகாலத்திலே வாயுப்பிரளயமானது சண்டமாருதம் சூறைக்சுழல் முதலாகிய விசையோடுகூடித் தர்ப்பதுபோல் சீறியறைந்து மோதினன் வாயுபகவான்.

திரிபுர னகைக்கனலி லெரிபுர நிலைத்துவெளி
திரிபுர மெனப்பு கலுவார்
அரிபுரமு முளரிபுரம் வலாரிபுர மிவையெலா
மலமுறவு மாமயன் முதல
புரிபுரமு தற்சிகர நகரிபுரம் வைகரி
புரநதிடு திரைப்புண ரியாம்
பரிபுரமும் விண்ணிடை யுடற்றின சுழற்றின
புரிபுர மெனக்க தறியே (25)

பின்னும் வாயுபகவான அக்னிமயமாய் மோதிய விசையினாலே முன்னாளில் பரமசிவன திரிபுரங்களை நகைத்தெரித்தபோது அந்த அக்னியிலே அகப்பட்டு எரிந்துபோன புரங்களைப்போல பதினாலுலோகத்தில உண்டான நகரங்களெல்லாம ஒன்றோடொன்று தடுமாறி வெளியிலே சஞ்சரித்துத திரிகின்ற புரங்களென்று யாவரும சொல்லும நிலையை அடைந்தன. விஷ்ணுபுரமான வைகுண்டமானது தடுமாறியலையலுற்றது. பிரமபுரமான சத்தியலோகமானது வாய்விட்டுக கதறி அபயமிட்டது. தேவேந்திரன வாசஞ்செய்யும் தெய்வலோகமானது, முன இலங்கை ஹனுமாராலே எரியுண்டபோது பிரமா அதை நூதனமாய சிருஷ்டித்து உண்டாக்கும பரியந்தம அது கண்ணுக்குக காணு திருந்ததுபோல நிலைகுலைந்தது. அஷ்டகுலபாவதங்களும விஷ்ணு பள்ளிகொண்டிருக்கின்ற அலைபொருந்திய சமுத்திர முதலியவைகளும் சிறுவெண்டயங்களைச சுழற்றி யெறிந்தால எப்படி விசையாயப பறக்குமோ அந்தப்பிரகாரம் சிதறிப்பறந்தன.

விஞ்சியெழு நெஞ்சுசுடு சஞ்சலநெ டுஞ்சலனன்
வெஞ்சினமெொ டுஞ்சு ழலவே
அஞ்சுவித மஞ்சுட னிரண்டுவித மஞ்சுமன
மஞ்சின வினஞ்சி தறியே
பிஞ்சியெருக் கஙகனியில் விண்டுவரு டஞ்சியென
பிஞ்சன குலைஞ்ச சிலவே
கொஞ்சுமெழி லஞ்சுகமென் குஞ்சினிள மென்சிறகின்
கொண்டுசுழல் கின்ற சிலவே. (26)

மென்மேலும் ஓயாமல ஆதிசேஷனுடனே சபதம் பண்ணின கோபாக்கினி யனதிலே மிகவும சூடானபடியினாலே யதிர்ந்து வாயுபகவான் மகா ரோஷத்

டனே அசுறந்த விசையினாலே பஞ்சவாணத்துடனே கூடின அஞ்சு பூதங்களிலே வாயு ஆகாசமென்னப்பட்ட பூதங்கள் தவிர மற்ற பிருதிவி, அப்பு தேயு என்னும் மூன்று பூதங்களும் பயந்து சிதறின அது எப்படி யிருந்ததென்றால், லைகந்து, கனிந்து, வெடித்த எருக்கங்காய்களுக்குள்ளே யிருக்கிற பஞ்சுகள் ஆகாசத்திலே பறப்பதுபோல சில பூதங்கள் சிதறிப்போயின பின்னும் சிறிது பூதங்கள் கொஞ்சிப் பேசுகின்ற கிளிகளுடைய சிறகுகளின் இறகானது பறந்து உதிர்ந்ததுபோலும் பொடியாயின

வேறு.

உட்சிக்கவ் வரைதனை வளைத்தபிணி விடுவிக்க வொலிமோ தவே
கட்சிக கிரித்திரள் பறந்தன திரிந்தவுயர் ககனத் திலே
பட்சத்தி னிரைமேய விட்டுத் தமைத்தா பரிக்கின றதாய்ப
புட்சிக்க வெருவிப் பறக்கின்ற சிறுகுஞ்சு போலா குமே. (27)

ஆதிசேஷனுடைய கட்டிலே அகப்பட்டுக் கைலாசமலை யசையாமலிருந்ததும் அந்தக்கட்டை விடுவிக்க மனதிலெண்ணிவந்த வாயுபகவானாலே மற்ற சிறு மலைகளெல்லாம் ஆகாசத்திலே பறந்து திரிந்ததும் எப்படி யிருந்ததென்றால் தன்னுடைய குஞ்சுகளை மேயும்படி விட்டகன்ற காடைக்குருவியானது வேடர் முதலாகிய மனுஷர் வைத்திருக்கின்ற கூட்டுக்குள் அகப்பட்டுக்கொள்ளும்போது அதைக்கண்டு பயந்த குஞ்சுகளெல்லாம் ஆகாசமார்க்கத்தில் பறப்பதுபோலுமிருந்தது

வேறு.

கந்தமா தனமேரு விமையங்க யிலைநேமி
கனசிகரி யிவையைந் தலா
லெந்தநெடு மலையும் பறந்தநிலை பெற்றினி
திருந்தமலை யொன்று மிலதே
சந்ததந லோருறு குறைக்குவெரு விசசிந்தை
தளராம லகலா மலே
நிந்தையிலர் தஞ்சமென நிற்பார்கள் பற்றுது
நிலைநின் றிடப்பற றுமோ. (28)

கந்தமாதனகிரி, மேருகிரி, கைலாசகிரி, ஹிமோத்கிரி, சகரவாளகிரி இந்த ஐந்து கிரிகளும், வாயுபகவான் மோதின வாதைக்குள்ளாகி நிலையாகத்தானே பெயராமலிருந்தன. மற்றபடி எங்கணும் செடிதாய் வளர்ந்திருந்த மலைகளெல்லாம் நிலையில்லாமல் ஆகாசமார்க்கமாய்ப் போயின. அது எப்படி யிருந்ததென்

றால் அறிவாளராயிருக்கின்ற மகாத்மாக்களான பெரியோர்களுக்கு ஆபத்துவந்த தென்றால் குணசாலியான பக்திமான்கள் இவர்களுக்கு இப்படி ஆபத்துவருமோ வென்று மனதிலே கிலேசமடைந்து துன்பந்தீரும் வரைக்கும் காத்துக்கொண் டிருப்பதுபோலவும் துர்க்குணம் படைத்த மூடரான பேர்கள் பெரியோர்களுக்கு ஆபத்து வந்ததென்ற கேட்டமாத்திரத்திலே அவ்விடத்திலே தெரியாமல் சீக் கிரமாய் ஓடிப்போவது போலவுமிருந்தது.

வேறு.

விண்ணைத் துளக்கியெழு சண்டமா ருதவிகட வேகத்தி னு
ளுண்ணாக்கி வறளகடலி னுருள்பட்டு வச்சிரா யுதற் காகவே
தண்ணீர்ப் பதுங்கினது பழுதென்று விந்தந் தனைப்போ லவே
மண்ணிற்பு காதகுறை யெண்ணித் தளரும்பினது மைநா கமே. (29)

ஆகாசத்தைத் துளக்கிக்கொண்டு அகங்காரமாய் எழுந்த வாயுபகவானுடைய வேகத்தினாலே உள்ளடைந்து சுவறிப்போயிற்று கடல், முன் தேவேந்திரன் வஜ்ராயுதத்தினாலே மலைகளைச் சிறகறிந்தபோது பயந்து அந்தக் கடலில் ஒளிந்த மைநாக பர்வதமானது விந்தகிரியைப்போல பூமியில் புதைபட்டுப் போகாமல் தண்ணீருக்குள்ளே வந்து ஒளித்துக்கொண்டிருந்தது குற்றமென்று எண்ணி விசனத்தை யடைந்தது.

வேறு.

மறங்கெழுமி விண்ணைக் கிழித்துச் சுழித்துத் தறி
வழியதிக வெளிமோ தவே
பிறங்கல்பல தகர்த் தகர்ந்து நூறு கியசின்ன
பின்னப் பொடிப் பொடிகளா
யிறைந்ததிசை யெழுமலையு மொழுமலையும் விழுமலையு
மெழுமலையும் விழுமலை யுமாய்ப்ப
றந்தமலை மோதிட் டுதிர்ந்தமலை கடலுற்று
படியிலுள பொடிமலைகளே. (30)

பின்னும் மேகமண்டலத்தைக் கிழித்துக்கொண்டு சுழலாகச் சுழன்று அதாமதத்தோடுங்கூடின சூறாவளிக் காற்றாக அதிர்ந்து எந்தத் திசைகளிலும் வாயுபகவான் மோதியபடியினாலே புறம்பாயிருக்கிற சராசரங்களெல்லாம் அம்மியிலே வைத்தரைத்து நுணிக்கின பொடிபோலும் சின்னபின்னமாய் அஷ்ட திசைகளிலும் சிதறிப்போயின. அதிலே எழும்பி முளைத்த மலைகளெல்லாம் கீழே விழுந்த மலையாயின. சில மலை ஆகாசத்திலே பறந்தெழும்பிய மலையாகவும் போயின. சில மலை உருண்டுகிடந்தன பெரிதாகிய மலைகள் எழும்பிப் பறக்கிற

போது ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. சிறு மலைகளெல்லா முடைந்தன. பூமியிலுள்ள பொடிகளெல்லாம் மலையாயின.

பொருசகட வொலிசுழல் சுழற்றுக்கு ளலம்வந்து
பொன்வெள்ளி யிற்செய் ததோ
ரிருசகட மகுடமொடு மகலகலி டநதவியல்
பெனவிரு நிலத்த னுகின
வொருசகட மீசன்ற னக்குத் தனக்கான
வொருதபன னுபயோக சமெய்க்
குருசகட மாகிய புதன்றநதை யோடுமுறை
குலாசித சுவண மலையே. (31)

இப்படி உலகங்களிலே வாயுபகவான் சகடுபோலச் சுழற்றி ஆககிரமத தோடுங்கூடி அரைந்த மோதும்போது அந்தச் சுழல்காற்றுககுள்ளாக அகப் பட்டுச் சுழன்றுகொண்டு கிடநதது. என்னவென்றால வெளளியினாலே வண் ணின வண்டி ஒன்று, பொன்னாலே செய்த வண்டியொனறுமாக இரண்டு வண்டிகள் பூமியிலேயிருநததுபோல மகமேருகிரியும் சிவன் வசிக்கும வெள்ளி யஙகிரியும்மிருநதன எதினாலென்றால் ஒருசகடமாகிய வெள்ளியங்கிரி ஈசுவரனுக் கானதென றும ஒரு சகடமான மகமேருகிரி சந்திர சூரியன் உலாவித திரிவதற கான தென்றுமிருநதது அது எப்படி யிருநததென்றால பொன்னிறமாகிய வியாழ பகவானுககும் வெள்ளி நிறமாகிய சுககிர பகவானுககும பகையானது தவிர்ந்து சிநேகித்தத்துடனே ஓரிடததிலே சேர்நது இருநததுபோலிருந்தது

வேறு.

தெறுகோப வாயுச் சினத்துதற நாலிரு திசைக்கு நிலையா
யுறுபூத ரம்பறவை போலப் பறந்திடி லுடுத்திர ளொரு
சிறுபூளை யாவததி சயமோ நிலத்தினுழை செநது வொவே
மறுகாது துயருற்ற பூநாக மாயினம காநா கமே. (32)

உக்கிரமான வாயுபகவான் அதிக கோபத்தோடு மோதியடிக்க அஷ்ட திசையிலும் நிலையாயிருககிற மலைகள் பறவைகளாகப் பறந்தனவென்றால் நக்ஷத திரங்களெலலாம பூளைபோலு முதிர்ந்துபோவது அதிசயமோ? நிலத்திலே நுழைந்துகொண்டிருககிற நாகங்களைப்போல் மனமுருகித் துயரத்தையடையா மலும் வாடாதமலாபோலவும் செழிப்பான மேனியோடும கைலாசததைச சுற்றிக் கொண்டிருந்தான் மகாநாகமான ஆதிசேஷன்.

திலகநுதல் வடிவமுள திசையுற்ற தும்பிபல
சிதைவுற்ற தும்பி யெனவே
சொலவரிய வளமிகு சுரும்புற்ற தருவுந
துரும்பாம் வெறும் பான்மையே
குலவுசுர தருவினரு குறைவான வர்கள்பயங்
கொண்டோடி மயல் கொளளவே
பலபல விதகதுலகி லுயிர்பட்ட தனல்பட்ட
பயிர்பட்ட பாடு தானே. (33)

சிந்தூர திலகம்பொருந்திய நெற்றியுடைய அஷ்டகஜங்கள் ஓலமிட்டுக் தொணடு வண்டுகளபோல பறந்தன. சொலவதற்கரிதாகிய வண்டு மொய்த திருககின்ற கற்பகச் சோலைகளிலுள்ள கற்பக விருக்ஷங்களும் வாடியுலாநது துருமபாய மெலிந்தன கற்பக நிழலிலே வாஸஞ்செய்யும தேவர்களெல்லாம் அதிக பயத்துடன் கூடியலைந்தார்கள் சந்தோஷத்துட னிருப்பவரில்லை. இப்படி உலகததிலுள்ள பலவகை ஜீவஜந்துககளெலலாம அககினியிலகப்பட்ட பயிரபோல் வாடிச் சோாபின

கண்டதுண் டமதாக நிக்கிரகக் குவகோர
காலாக்கினி கற்பாத திலே
பண்டுவெந திடுசரா சரநிலைய லாஞ்சாம்ப
ராகப் பறப்ப தேபோ
லண்டஙகள் பாண்டங்க ளைப்போ லுருண்டபிர
சண்டவா யுவுசசீ றினன்
மண்டலப புதுமையிது மட்டிது கணககிடெதன
வசனிக்க வல்ல ரெவரே. (34)

முன் கறபாநத காலததில் அகோர ருத்திர காலாககினி பிரளயததிலே நிலையாயிருககும நவ கண்டஙகளிலுள்ள சராசரங்களெல்லாம எரிந்து பஸ்ப மாவதுபோலவும நவ பாண்டஙகள் ஒன்றோடொனறு தட்டுண்டு உடைவது போலவும் அண்டங்களெல்லாம் ஒனறோடொன்று மோதுணடன. சண்டபிர சணட மாருதமாகிய வாயு பகவான் கோபத்துடனே புறப்பட்டு மோதியடித்தால் லோகததிலே நடக்கிற புதுமைகளை இவ்வளவென்று கணககிட்டுச சொலலுகிற வல்லமை எவருக்கிருககும ?

காயுங் கொடுஞ்சினத் தெரிசிகைத் தறுகட்
கடற்பருகு வடவா முகத்
தீயுஞ் சலித்தது சலிக்காது கயிலையுஞ
சேடனு மரன் சபையுமே
வாயுவைக் கட்டிய புயங்கத்தை யணுகாத
வானோரை யறியா மலே

யாயுங் குணத்தவர் நடுச்சொல்வ ரெனவந்த
வனிலன்விர கறியா மலே (35)

கொடிதாகிய கோபத்துடனே எழும்பிக் கொழுந்துவிட்டு அக்னிப்பிரளயத்திலே சமுத்திரம் வறளும்படி பானம் பண்ணுகிற வடவா முகாக்கினியும் பிரசண்டமாய அறைந்த வாயு வேகத்தினாலே சலித்தது கைலாச பர்வதமும், ஆதிசேஷனும், பரமசிவன் சந்நிதானமும் சலியாமலிருந்தன. வாயு பக்ஷணம் பண்ணும் ஆதிசேஷனண்டையில் வராமல் அருகிலிருக்கும் தேவதைகள் நமக்கும் ஆதிசேஷனுக்கும் மத்தியஸ்தமாய் நியாயம் சொல்வாரகளென்று மனதிலே ஆலோசனை பண்ணினான் வாயு பகவான்.

வேறு.

அறைந்தா னெழுந்தா னெகிழ்ந்தா னலனென் றயர்ந்தா னுரங்
குறைந்தா னினிச்செய்வ தேதென்று சுரரோடு குணம யாவுமாய்
நிறைந்தானு முமையாளு டன்காண வணுவுக்கு நேரா கியே
மறைந்தா னராவிட் டிடாதென்று பவனேசன் வரைமீதிலே (36)

வாயு பகவானானவன், தன்னுடைய தவமெல்லாங்கூட்டி ஒன்றாய மோதியலுத்துப்பலமெல்லாம் அயர்ந்து குறைந்து இனிமேல் என்ன செய்வோமென்று தேவர்களுடனே சகல குணங்களும் நிறைந்த சிவபெருமானும் பார்வதி தேவியுடன் காணும்படி அணுவென்கிற ரூபமாய் இனி நம்மை ஆதிசேஷன் கண்டால் விடுகிறவனல்லவென்று அந்தக் கைலாசத்தில் தானே ஒளிந்துகொண்டான்

கொலையுற்ற புலிபோலசை செவியுற்று விபரீத குறைநூ றுடியே
கலியுற்று முழைமேவு முறைமேவிற் கபிலைபோன கதைபோ லவே
இலமுற்றெரு ழியவீறு படபத்தி கயிலாச கிரிமூ டவே
வலிபொத்தி னதுநாக மெலியெய்தத் துயிர்போக வழி தேடியே.(37)

கொலைசெய்யப்பட்ட புலியினுடைய சப்தங்கேட்டு பயந்த பசுவானது யாளி வாஸமாயிருக்கிற குகையிலே ஒளிந்துகொள்ளப் போனகதைபோலவும் உயிர் நீக்கக் கருதி எலி நாகத்தின் வாயிலேபோனதுபோலவும் அந்த வாயு பகவானானவன் ஆதிசேஷன் மூடிக்கொண்டிருக்கிற கைலாசகிரியிலே போய் ஒளித்துக்கொண்டான்.

துன்புற்ற வளிவந் தொளிக்கின்ற தைக்கண்டு சுடிகைக் குளா
மின்பத்தி தருநீள் படத்தான் மறைத்தான் விடாதே புயங்
கன்பற்றி டச்சீவ னென்று ரிலைத்தேவர் கண்டுண் டிடத்
தன்பட்ச ணத்தைக் கிடைத்தார் களுக்குத் தடுப்பார் களோ (38)

பின்னும் துன்பமடைந்த வாயு பகவானானவன் கைலாசகிரியிலே வந்து ஒளிந்தும் பணாமகுடம் பொருந்திய ஆதிசேஷன் பிரகாசத்துடனே பதி பதியாயிருக்கின்ற ஆயிரம் படங்களினாலேயும் கெட்டியாய மூடிக்கொண்டான. அதைத் தேவர்கள் கண்டும் ஒன்றும் பேசாமல் ஆதிசேஷனைப் பார்த்து இந்த வாயுபகவானை விழுங்கலாகாதென்று சொல்லாமலிருந்தது எப்படியிருந்ததென்றால ஒருவருக்குப்பசிக்கிற பசிப்பு கிடைத்ததானால் சாப்பிடுகிற சமயத்திலே யாராவது புசிக்காதேயென்று தடுப்பார்களா? தடுக்கமாட்டார்கள் அப்படிப் போலும் ஆதிசேஷனுக்கு வாயு பகவான் போஜனமென்றறிந்து தேவர்கள் பேசாமலிருந்தார்கள்

வேறு.

படத்தொடுங்க வாயுவுண்ட விடத்தொடுங்கி யவ்விரண்டும் பூ
பாரத் துள்ளோர்
சடத்தொடுமந் தரத்தொடுஞ் சரிக்குமுயி ரிலாமலுழு
தளர்ச்சி நோக்கி
வடத்தொடுங்கி னுறைந்தருபூ விடத்தொடுங்கி னுறைந்தருளின்
மயமா யெல்லா
மிடத்தடங்கி யடங்காத வொருமுதலே யெனத்துதிக்க
விறைவன் சொல்வான (39)

தன்னுடைய படத்துக்குள்ளே ஒடுக்குப்படி வாயுவை யுண்ட ஆதிசேஷனிடத்திலே யிருக்கிற ஆலகாலவிஷத்தை யுண்டதுபோல பூலோகத்திலே சர்வப்பிராணிகளும் சடலத்தோடிருந்தும் பஞ்சசஞ்சாரமில்லாமல் தளர்ச்சியுற்றிருப்பதை சர்ப்ப சயனனாகிய மகாவிஷ்ணுவும், தாமரைமலர் வாசனான பிரமதேவனும் சின்மயரூபனாய எல்லோரிடத்திலும் அணுவுக்கணுவாய ஏக உருவாய எங்கும் நிறைந்திருக்கின்ற ரூபமே என்று சிவபெருமானை ஸ்தோத்திரம் பண்ணி, ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் வந்த சபதத்தினாலே சர்வலோகப் பிராணிகளெல்லாம் வாயுவில்லாமல் எழுதிவைத்த சித்திரம்போலிருந்து விட்டன வென்று விண்ணப்பஞ் செய்தனர். அதுகேட்ட பரமசிவன் ஆதிசேஷனைப் பார்த்துத் திருவுளம்பற்றுவார்.

ஏற்றமுன தாகும்வளி தனைவழிவிட் டிடுபுயங்கற்
கிறையே யென்னச்
சாற்றியசின் மலனுரைகேட் டனந்தனுமெல் லெனப்படத்தைச்
சாய்த்த வாறே

சீற்றமொடு கயிலையைவிட் டுயர்ந்தகொடு முடிகளிலெண்
 சிகரி பேர்த்துக்
காற்றிறைவ னடந்தனனக் கணத்தினிலே விழுந்தனதக்
 கணத்திற் றானே (40)

நாகராஜனே வெற்றிபெற்றவன் நீயே யாகும் காற்றை விட்டு விடென்று பரமேச்வரன் சொல்ல அவர் அருளிச்செய்தபடி ஆதிசேஷன் மேல் படத்தை நீக்கின பாவனையாகச் சாய்த்தான். அதிலே யிருந்த வாயுபகவான் கோபத்துடனே எழுந்து உயர்ந்த கைலாச சிகரத்திலே எட்டுக் கொடுமுடிகளைப் பெயர்த்துச் சென்றனன். க்ஷணப்பொழுதிலே தக்ஷணத்தில் அவை விழுந்தன.

தக்கதிருக் காளத்தி சிரகிரியே திருக்கோண
 சலங்கண் மூன்றும்
வைக்குமிர சதகிரி தீர்த்தகிரி சுவேதகிரி
 மருவு மீங்கோய்
புக்கதிரு வாட்போக்கிப் பொதியமெனுஞ் சிகரியைந்தும
 புருட ராக
மிக்கமுத்து பச்சைபத்ம ராகமிந்த்ர நீலமென
 விளங்குந் தானே (41)

அப்படி தக்ஷிணதிசையிலே வாயுபகவான் கொண்டு வந்த எட்டுக்கொடு முடிகளும் பெயரென்ன வென்றால், திருக்காளத்திமலை, திரிசிராமலை கந்தமாதனபாவதம்,ரஜிதகிரி, தீர்த்தகிரி,சுவேதகிரி, திருஈங்கோயமலை, ரத்னகிரி மலை என்பனவாம். ரஜிதகிரி முதல ஐந்து கிரியும் முத்து, பச்சை, புஷ்பராகம், இந்திரநீலமென்னும் பஞ்சரத்தினமாகப் பிரகாசமாய விளங்கும் மென்க

தாளகிரி யெனவருதக் கணகயிலை நீலிவனத
 தானு வான
பரமசம்பு மூர்த்திதனக் கமைந்ததொரு சோதிவட்டப்
 படிவ மாகி
விரவுசெழுங் கதிர்மணிக்குப் படிகமணி மதில் சூழ்ந்த
 வியல்பு போலாம்
பிரணவமே சுவேதகிரி வடிவம்லிங்க மூர்த்திபரப்
 பிரம மாமால் (42)

இப்படி தாரகிரி எனவந்த தென்கைலாசமானது திருப்பைஞ்ஞீலிநாதனு கிய பரமசம்புவுக்குஆதாரயாகிய சோதிவட்டம் போலவும் அதிலேயிருந்த ஜோதிப்

பிரகாசம்போன்ற பரமசிவனானவர் இராத்திரி காலத்திலே பிரகாசிக்கும் மாணிக்க மணிபோலவும் விளங்கியிருக்கும். இப்படி மாணிக்கமணியினால் விளங்கும் ஜோதிக்கு வெண்மையான படிகமணியினால் மதில் சூழ்ந்திருப்பதுபோல பிரணவ சொரூபமான சுவேதகிரியாம். அதற்குள்ளே எழுந்தருளியிருக்கிற சிவலிங்கமானது பரப்பிரம்ம ச்வரூபமென்றவாறு

ஓங்கன்மற்ற தினியபஞ்சாக் கரமுமுகா ரமுமிரண்டா
யுயிரு மாகி
யோங்காரப் பிரணவமே சுவேதகிரி யாகுமற்றிவ்
வுலகின் மீதே
யோங்குசிவ கலைகளுமவ் வரைமீதி லொடுங்கியு மீண்
டுதித்துண் டாகும்
ஓங்கார கிரியெனவே புராணமொடு மாகமங்க
ளுரைக்குந் தானே (43)

பஞ்சாக்ஷரத்துக்கும், உகாரத்துக்கும் இரண்டுக்கும் உயிராகத் தோன்றி வந்த பிரணவ ஸ்வரூபமே சுவேதகிரி யென்னும் திருப்பைஞ்ஞீலி யாகையால், இந்த உலகில் வாஸமான சிவகலைகளெல்லாம் ஓங்காரசக்தியுடனே இந்த மலையிலே வந்தொடுங்கியும் மீண்டும் உலகங்களிலே பிரவேசிக்கும் ஆகையினால் உயர்ந்த மகிமை பொருந்திய பிரணவமலை யென்று ஆகமபுராணங்களெல்லாம் முறையிடும்.

புள்வதனத் திறைவரைத்தா பரித்தெமைப்போ லிருந்தயன்மால்
புரிந்த பூசை
கொள்வதற்கு மினியவரங் கொடுப்பதற்குண் டாயிருந்துங்
கொடுத்த நாமென்
றுள்ளிளங்கி மகத்துவங்கொண் டெமக்கு நிகர் சொலாமலெழுத்
தொன்று தாழ்ந்து
வெள்வரையென் றிருந்தமுதத்து மாலவரையை வெள்ளிவரை
வியக்குந் தானே (44)

சரப பக்ஷி முகம்படைத்த நாயகனாகிய பரமசிவனை நம்மைப்போல வாஸமாக வைத்திருந்தும் பிர்ம்மா விஷ்ணு முதலாகிய தேவர்கள் வந்து பூஜைசெய்ய அவர்கள் வேண்டும் வரப்பிரசாதம் கொடுக்கத்தக்கதா யுண்டாயிருந்தும், நம்மிடத்திலிருந்து வாயுபகவான் கொண்டுபோன தக்ஷிண கைலாசமான சுவேதகிரி யென்று மனதிலே நினைத்து, நமக்குச் சமான மென்று சொல்லாமல் வெள் வரையென்று ஒரு எழுத்துக்குறைத்து வணக்கமாகப் பெயரெடுத்த திருப்பைஞ்

ஞீலியாகிய முத்துமலையை வடகைலாசமான வெள்ளிமலையானது கொண்டா டிப் பார்த்துச் சந்தோஷமடைந்தது

வறப்பினுநல் வளந்தருவ தெனும்படிமா ருதன்கவர்ந்து
வாங்கி னாலும்
பொறுத்தசிக ரியைக்கயிலை கொடுத்தடுத்த திருந்திடுமெதன்
புலத்தோர் வாழச்
சிறப்பொடுதாங் கியபுவனிக் குதவாதும பருக்குதவு
செம்பொன மேரு
பிறர்க்குதவ வளர்முடத்தெங் கினுக்குநிகர் படைத்ததெனப்
பேச லாமே (45)

மாரிமறுத்த காலங்களிலும் நன்மையாகிய பலன்களைக்கொடுத்துத் தன்னை யடுத்தவர்களைக் காப்பாற்றுகின்றதென்று சொல்லும்படி வாயுபகவான் கொண்டு வந்த தக்ஷிண கைலாசமாகிய சுவேதகிரி விளங்கியிருக்க, கைலாசத்துக்குத் தக்ஷி ணத்திலே பூமியெல்லாம் தாங்குகிறேனென்று பெயர் படைத்த மகமேருகிரி தேவதைகளுக்கு மாத்திரம் பிரயாசப்பட்டுத் தபசிருந்தால் உதவுகிறதேயல்லா மல் பூலோகத்தாருக்கு எளிதிலே உதவாமலிருக்கிறது இது எதுபோல வெனில், பிறருக்குதவ வளரும் முடத்தெங்கினுக்குச் சமானமானதாயிருந் தென்க.

புடவிபுகழ் நீலிவனந் தனில்வருடந் தொறுமகர பூச நாளிற்
கடவுளவந் தனைபுரியந் தகனறெரிசித் திடவிளங்குங் கயிலை யாகி
யடகயிலு முனிவருறை தாளகிரி தருங்காட்சி யாங்கண் டேத்தி
வடகயிலை மலைகாணு வொருகவலை தீர்ந்ததுநம மனது தானே (46)

உலகம் புகழும் நீலி வனத்திலே வருஷந்தோறும் தை மாதம் வருகிற பூச நக்ஷத்திரத்திலே நீலிவன நாதராகிய பரமசிவனைச் சகல தேவர்களோடும் எம தர்மன் தரிசிக்கும்படி விளங்கிய தக்ஷிண கைலாசமானது, விசுவபிராமணின் சாபத்தினாலே வட கைலாச தரிசனமில்லாமல் பொதியமலையில் வந்திருக் கிற என் கவலை தீரும்படி, ரிஷீசுவரர்கள் முதலாகிய தேவர்களோடுங் கூடியிருந்த வட கைலாசவாஸன் எழுந்தருளியிருப்பதைக் கண்ட காட்சிபோலாகும். ஆத லால் வட கைலாச தரிசனங் கண்டு சேவிக்கவில்லையென்கிற கவலை தீர்ந்த தென்று அகஸ்தியர் திருவுளம் பற்றினார்

ஐந்தியோ சனைகிழக்கு மேற்கொருயோ சனைவடதெற் காகவாய்த்த
ந்தரமே வியத்தரள கிரியையுருத் திரகலைக டொண்ணூற் றாறு

மிந்தவகை முகுந்தர்முன்னூற் றறுவர்கள்பத் திரைபதினா யிரத்தின்
ரந்தவயி ரவர்கள்விநா யகர்குகர்மூ வாயிரவ ரமர்ந்துகாப்பார்[மேலோ

கிழக்கு மேற்கில் ஐந்து யோசனையும் தெற்கு வடக்கில் ஒரு யோசனையும் விசாலம் பொருந்தி அழகு படைத்த முத்து மலையாகிய திருப்பைஞ்ஞீலியை உருத்திரகலை தொண்ணூற்றாறு, முந்நூற்றறுவர் முகுந்தர், பதினாயிரத்தின் மேலோர் பத்திரகாளிகள், வைரவர், விக்னேசுவரர், சுப்பிரமணியர், இவர்கள் மூவாயிரம் பேர் ஆக இவர்களனைவரும் காத்திருப்பார்கள்

சாத்தர் பன்னீ ராயிரவர் துர்க்கைகணா லாயிரஞ்சூழ்ந்
தத்தமுறை சூழ்ந்து
காத்திடுவர் தீர்த்தமட்டு மாத்திரங்க ளிலையிலா
கமபு ராண
பாத்திரரா னவர்மனம்போல் விரிவுகொண்ட தாளபருப்
பதத்தின் வீறு
கீர்த்திதனைப் புகழ்ந்துநிறை வேற்றுமவகை யாருக்குந்
தெரியு மோதே (48)

பின்னும் ஐயனார் பன்னிரண்டாயிரம் பேர் துர்க்கை நாலாயிரம் பேர் அனுதினம் விடாமலிருந்து காத்துக்கொண்டிருப்பார்கள் தீர்த்தங்கள் இவ்வளவென்று கணக்கிடப்போகா ஆகம புராண சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் மனம்போல விரிவுகொண்ட முத்துமலையாகிய திருப்பைஞ்ஞீலியினுடைய மகிமையைக் குறைவில்லாமல் புகழ்ந்து சொல்ல எவராலும் ஆகாதென்பார்கள்.

சயிலவர் சமுத்திருக்கா விரிமுழுக்கு நீலிவனத் தாணு மேவி
மயிலியனீ ணெடுங்கணுமை தரிசனமுங் கிடைத்திருக்கு மனிதரானோர்
கயிலையில்வீற் றிருந்துசிவா னந்தசமுத் திரம்படிந்து கவுரி மேவு
கயிலைநா யகர்வடிவம் படைத்திருந்த சிவகணங்கட் கதிகர்தானே (49)

பின்னும் தக்ஷிண கைலாசமாகிய முத்துமலை வாஸமும் காவேரி ஸ்நானமும், நீலிவன நாதருடன் மயில்போன்ற சாயலுடைய நீ நெடுங் கண்ணம்மனுடைய தரிசனமும் கிடைக்கத்தக்க பாக்கியம் பெற்ற மனிதர்கள், வட கைலாசமான, வெள்ளியங்கிரியிலே அகலாமலிருந்து ஆனந்த சமுத்திரத்திலே ஸ்நானம் பண்ணிப் பார்வதியுடன் விளங்கும் கைலாச நாதரின் வடிவு பெற்றிருக்கின்ற சிவகணங்களுக்கு மேலானோர்கள் என்றவாறு.

எனத்தாள மலையின்வர மெடுத்துரைத்தான் மிடுக்குயர்ந்த
விலங்கை வேந்தன்

கனத்தமுடி யொருபதுதோ ளிருபதற்று வாழ்வகன்று
    கனன்று பொங்குஞ்
சினத்த நெஞ்சுந் தகர்ந்திடரா கவன்பெயரிட் டொருகணையுஞ்
    சிலையு மீய்ந்து
வனத்திருந்த முனிமகிழ்ச்சி படைத்தனன்சந் திரபீட
    வளவன் றானே (50)

உயர்ந்த கொடிய பலம் படைத்த இலங்காதிபதியான இராவணனுடைய சிகரம்போலும் பெரிதான பத்துத்தலைகளும பர்வதம்போன்ற இருபது புஜங்களும், ஐசுவர்யமும், சினங்கொண்ட நெஞ்சும், தகர்ந்திடும்படி ராகவன பெயரிட்டு ஒரு தனுசும், பாணமும், வனவாஸமாக வந்த ஸ்ரீ ராமபிரானுக்குக் கொடுத்தனுப்பிய அகஸ்திய முனிவர் தக்ஷிண கைலாசமாகிய சுவேதகிரி வந்த வரலாற்றினை இவ்வாறு திருவாய் மலர்ந்தருளக் கேட்டு மிகவும சந்தோஷமடைந்தான சந்திர பீட சோழராஜன்.

## நான்காவது துர்க்க பூஜையின் மகிமை.

சேரமலை மடந்தைதிகழ் கணவனுறை கயிலாயச்
    சிகரி மேனின்
றூரமலை யடைந்தமைகேட் டன்பினொடு கும்பமுனி
    யதனை நேரிப்
பாரமலை வளவனின்ன மொருகதைசொல் லெனவுரைத்தான்
    படர்கா வேரித்
தீரமலை கொழித்தமுத்து நத்துநிறை நீலிவனத்
    தியல்பு தானே (1)

பர்வத ராஜகுமாரிக்கு நாயகனான பரமேச்வரன் வசிக்கும் வட கைலாசத்திலிருந்து வந்த தக்ஷிண கைலாசகிரியான சுவேதகிரி மகத்துவம் கேட்டுப் பரம சந்தோஷ மடைந்த சதுரகிரிபடைத்த சந்திரபீட சோழன், பிரவாகமாய் வருகின்ற காவேரி தீரத்தில் அலையுடனே கொழித்த முத்துக்களும் சங்கினங்களுடனே சந்துக்களும தவழா நின்ற சுவேதகிரியானது, திருப்பைஞ்ஞீலியென்றும் நீலிகாவன மென்றும் பெயர்பெற்ற மகத்துவங்களை அடியேனுக்குத் திருவுளம் பற்ற வேண்டு மென்று அகஸ்தியரைக் கேட்டான்.

பொற்கனக கிரிகுழைய வளைத்தசிவ னிடத்தமலை
    புனித ரூபத்
துற்கையெனும் வடிவமெடுத் தமரரயன் மான்முனிவர்
    துதிக்க வாழ்ந்த

துற்கனைக்கொன் றனளனைய வதைதீரத் திருத்த
  துற்கை வேடம்
சற்குறிப்பி னறிந்ததனைத் தீர்க்கும்வகை நோக்கி யுமை
  தலைவன் சொல்வான் (2)

பிரகாசம பொருந்திய மகமேருகிரியை வில்லாக வளைத்த சிவனிடத்திலே புனித ரூபத்துடனே விளங்கும பார்வதியானவள் கோரமான துற்கை ரூபங் கொண்டு தேவர்கள், விஷ்ணு, பிரம்மா, முனீசுவரர் எல்லாரும் வணங்கும்படி வாழ்ந்த துற்கனாகிய மகிஷாசுரனை ஸம்ஹாரம பண்ணிய பாபமானது, தொடர்ந்ததனால் உக்கிர பராக்கிரமமாகிய பொல்லாத துற்கை என்னும், வேஷம் வந்ததை யறிந்து அதைத் தீர்க்கும்படி பார்வதி பாகனான பரமசிவன் சொல்வார்.

கோலியதீ வினைக்குரிய துற்கனை நீ யமர்பொருது கொன்ற தாலே
வாலியதின் வடிவமொரு படிவமா யினததனை மதிக்கிலாதாள்
போலிருந்த மடமைதவிர்ந் துயர்தரள கிரியிரத்னப் பொதுவின் மேவி
நீலிதவம் புரிகென்றான் விடைகொண்டா ளடைந்தனள்பைஞ்
  ஞீலி தானே.

எடுத்துச் சொல்லப்பட்ட பாபங்களுக்கெல்லாம் காரணபூதனாகிய மகிஷாசுரனை யுத்தத்தில் ஸம்ஹாரம் பண்ணினபடியினாலே உன்னுடைய வாலை ரூபமானதுபோய் துற்கை ரூபம் வந்தது அதையறியாதவளைப்போலிருக்கிறாய் அந்த புத்தியைவிட்டு உயர்வாகிய தரளகிரியின்மீதாக விளங்கும் ரத்ன சபைக்குப் போய், நீலியே, நீ தபசு பண்ணென்று கூறினார் வடகைலாசவாஸரானவர். அந்தப்படிக்கு விடைபெற்று அழகான பசுமை நிறம மேனி யடைந்த நீலியான வள் வந்தாள்

பொருதுற்கா சூரனைக்கொன் றடைந்தவகை தீர்க்குமவகை
  புனிதர் கூற
வருதுற்கா தேவிதிகட் கிரணமெனிலங் கியதரள
  மலையின் மீதே
விருதுக்கா மனையெரித்த தடங்குளத்தின் முளரிசற்றே
  விரித்த பானு
வொருதுற்கா திபனிமைய மலைமேல்மின் னுடன்சொலிப்ப
  துவந்து கண்டாள். (4)

மகிஷா சுரனுடனே யுத்தம் பண்ணி அவனைக்கொன்ற பாபத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி பரமேசுவரன் சொல்ல, துற்கையானவள் கேட்டுச் சங்

திரகிரணம் படித்த முத்து மலையிலே, வெற்றிகூறவந்த மன்மதனெரியும்படி விசாலம் பொருந்திய அக்கினி நேத்திரத்தைச் சற்றே விழித்த பரமசிவன், கோடி சூரியப் பிரகாசத்துடன் இமோத் பர்வதகுமாரி சமேதராய் விளங்கக் கண்டாள்

கண்டாள்கண் டடிதொழுது துதித்தாள்வே தாகமந்தேர்
 கருத்தோர் சூழத்
தண்டாது நிறைகமல மலர்கள்விரி விசாலபுண்ய
 தடத்தின் மூழ்கி
வண்டார்பூங் கதலிவனந் திகழும்விம லாரணிய
 மருங்கில் வாசஞ்
கொண்டா ளுக்கிரரூபத் துற்கை நெடுந் தவத்தினைமேற்
 கொண்டா ளன்றே (5)

துற்கைஇப்படி பார்வதி பரமேச்வரரின் பாதங்கண்டு தொழுது துதித்தாள். பின்னும் வேதாகமந்தேர்ந்திருக்கின்ற பெரியோர்கள்சூழ்த தாமரைமலர் மலர்ந்து விஸ்தாரமான விசாலபுஷ்கரணியென்னும்புண்ணிய தீர்த்தத்திலே மூழ்கி வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கும் கதலி வனத்தில விளங்கும் விமலாரணியத்தினிடத்திலே வாசஞ்செய்யும் உக்கிர ரூபத்தைப்படைத்த துற்கையானவள் நெடிதாகிய தபசை மேற்கொண்டாள்.

திரைகடல்சூழ் புவிபுகழ்வெள் வரையின்மகா தேவருக்குத்
 தென்மேற் காக
விரைகெழுத மிதயவைரி தனக்கினிய வாசிரம
 மொன்றுண் டாக்கிப
புரைதவிர்மஞ் சனமலர்கொண் டரனையுமை தனைத்தின மும்
 பூசித் தேத்திக்
கரைவுறுமன் பினள்வாயு வாகாரத் துடனிருந்தா ள
 கன்னி தானே (6)

அலைபொருந்திய சமுத்திரம சூழ்ந்த பூமியெலலாம் புகழ்ந்துபேசும் வெள்வரையில, மகாதேவருக்குத் தென்மேற்காக, சொலவதறகரிதாகிய மகிஷாசுரனுக்கு வைரியாகிய துறகையம்மன் தான் தபசு பண்ணுகிறதறகு ஆச்சிரமம ஒனறுண்டாக்கிப் புனிதமாகிய திருமஞ்சனமும புஷபமுமெடுத்துவநது பாாவதி பரமேசவரனை அனுதினமும் பூஜை பண்ணிககொண்டு கனிநத அனபினலே வாயுவைத்தானே ஆகாரமாய்ப் புசித்து சமாதி என்னும் தபசிலே யிருந்தாள்.

நெடுநாளிப் படியெவர்க்கு முடிப்பரிய மாதவத்தி
 னிருந்தா ளிப்பாற்

கடுமேவு கண்டர் திருவிருப்பின்வடக் கெழுந்துதடங்
        கரையைப் பேர்த்துப்
படுகடல்போல் வருவிமலா ரணியவனப் பேராற்றைப்
        பார்த்தாள் கன்னி
வடுவன்றோ கடவுளுடை திருவடியின் மோதிலென
        மறித்தா ளன்றே (7)

பின்னும்அப்படி நெடுங்காலம் யாவராலும் முடித்தற்கரிய தபசிலே இருந்தாள். அப்போது கரைக்கண்டனாகிய பரமசிவனை வசிக்கும் சுவேதகிரிக்கு வடபாரிசமாக உயர்ந்த கரையைப் பெயர்த்துக்கொண்டு யுகாந்த சமுத்திரம் போல வருகிற விமலாரணியப் பெருக்கான நதியைத் துர்க்கையானவள் கண்டு நாம் பூஜை செய்யப்பட்ட சுவாமி திருமேனியிலே பிரவேசித்தால் குற்றம் வருமென்று தடுத்தாள்

தரங்கமெறி நதியடுத்து வராதுவடக் கேமறித்தா
        டுணைத்து பார்த்த
துரங்கொடுமண் ணிடந்தனள்பா தலத்தினிற்செல் லென
        லுரைத்த வாறே                [வுரைத்தா
துரந்துவிம லாரணிய நதிநடந்த தமைப்பத்த
        தான்றுந் தான
நிரம்பியநீர் மங்களபுட் கரணியெனப் புகழ்ந்தனர் நீ
        ணிலத்து ளோரே (8)

பின்னும் அப்படி அலையுடனே வருகிற விமலாரணிய நதியை மிஞ்சி வராதபடி வடபாகத்திலே யமாத்திய தன்னுடைய பாதத்தினாலே பூமியைத் துளைத்துப் பாதாளத்திலே போகும்படி உத்தரவிட்டாள் அவள் சொன்னபடி விமலாரணிய நதியானது துர்க்கை பாதத்தினாலூன்றிய ஸ்தானத்திலே நிரம்பிய தீர்த்தமானதை மங்கள புஷ்கரணி யென்று உலகத்தார் புகழ்ந்து சொல்வார்கள்

சிந்தைமகிழ் மலைப்புதல்வி யாகிமுன்பு வரவழைத்த
        தீர்த்தந் தன்னை
யந்தரியா யுதித்தமல கமலபதத் துரகதலத்
        தமைத்தா ளன்றே
முந்துகங்கை யமுனையிரு நதிகள்வட புலத்தினின்ற
        முறைமை போல
வந்தணைசேர் பாதாள வாகினிதக் கணத்தினிற்க
        மதித்துத் தானே (9)

முன்னாளிலே தீர்த்தங்களில்லாதபோது கிரிராஜகுமாரியாகிய ருத்திரி, வரவழைக்க விமலாரணிய நதி யென்று பெயர்பூண்டு பிரிவாகமாய்க் கங்கை போல வந்த தீர்த்தத்தைத் துர்க்கை தன் பாதார விந்தத்தினாலே பாதாளலோக மட்டிலே அமைத்து மங்கள புஷ்கரணி யென்னும் தடாகமாக நிறுத்தினள். வடகாசியில் கங்கை யமுனையுடன் வந்து இரண்டுமொன்றாகக் கூடியதுபோல, இங்கே திருப்பைஞ்ஞீலியாகிய தென் காசியிலே விமலாரணிய நதியான கங்கையானது, மங்கள புஷ்கரணி யென்கிற யமுனாநதியுடன் வந்து நிலையாக நின்றது.

விமலார ணியநதியினதி பாதலஞ்சேர்ந் ததுமுனிவர்
விண்ணோ ரெல்லா
மமலமாந் தலத்தினுக்கு நதியிலையென் றந்தரிதா
ளனுக்கிக் கேட்பச்
சுமலவாண் முகவனிதை பின்னுமொரு நதிகொடுத்தல
கருதத் தேடி
யுமையவளொரு படியவள் பொற் கோயிலுக்கு வடதிசையை
யுற்று நின்றே (10)

இந்தப்படி விமலாரணிய நதியை துர்க்கையானவள் பாதாள வாகினியாகச் செய்யவே தேவர்களும் முனிவர்களும் ஸ்தலத்துக்கு நதி யில்லையே என்று துர்க்கையிடத்திலே வந்து கேட்டனர். தாமரைமலர்போன்ற முகத்தையுடைய துர்க்கை பின்னுமொரு நதி வரவழைக்க வேண்டுமென்று மனதிலெண்ணி உமையவள் கோவிலுக்கு வடதிசையில் நின்று நோக்கினள்.

நாணேறிந்து சிலையிலொரு கணைதொடுத்து விடுத்தாள் போய்
நடந்த வாளி
வாணகர்க்கு வடதிசைகால் யோசனையி னின்றதொரு
வரையைப் போழ்ந்து
சாணுறுநன் னதிகொணர்ந்த துறுதவஞ்செய் தருணீலி
கவர்ந்த வாறறு
ஞாணிலத்தோர் நீலிவனப் போறென் றுரைக்குமொழி
நிகழ்ந் தானே (11)

அப்படி வடபாகத்திலே நின்று நாணேற்றி ஓர் அம்பு தொடுத்துவிட்டாள். அந்த அம்பானது அதிசீக்கிரமாகப்போய் சுவேதகிரிக்கு வடதிசையிலே கால் யோசனை தூரத்திலிருந்த ஒரு பர்வதத்தைப் பிளந்து யாவரும் காணத்தக்கதாக கங்காப்பிரவாகம்போல ஒரு நதியைக் கொண்டுவந்தது. அந்த நதிக்குப் பெயர் என்னவென்றால், தபசுசெய்யும் துர்க்கையாகிய நீலி வரவழைத்தபடியி

ளுலே பூலோகத்தாரெல்லாம நீலிவன நதியென்று அதைப் புகழ்ந்து கொண டாடலாயினா.

அததலத்தின் மேறகாக வநதிடுசுந தரிவிடுத்த
வம்பி ஞலே
கிதநிரப வநதநதி யா சுவினு லாலமுறு
தெளிவுண் டாகி
நிததமுநின் மலமபொருநதி யிருநதுமநீ ரருநதியிடி
ணிகரில விண்ணோர்
புததமுத மெனருசிகரும புசிததவாமே விடர்பிணிகள
பொருநது ருவே. (12)

அப்படிப்பட்ட நீலிவன நதியானது இநத ஸதலத்துககு மேற்காகவிருககும அதுதாரணைவிடுதத அமபிகையாலே வநத தீரதத மானதுமாலஸகளஙகமில்லாத நிாமல தீரதத மாயிருககும அநதத தீரதததைபபானமபணணினால தேவாமிருத போல ருசியாயிருககும அநதத தீரதததைக குடிததவாகளிடததிலே வியாதிகள அணுகா

அநநதியின முழ்கினாக டெரிசித்தோா பரிசித்தோா
ரவாகட் கெலலா
நலனுகிக ளெலாமபடிநத புண்ணியஙகைப பலபாநன
னலமவந தெரிந்து
முன்னதமா கியதரள மல்லவிநதன னதிமுழுகி
யுமையாள பாகா
சநநிதியின் றரிசனமும படைநதவரே யிமையவர்தந
தலைவ ராவார் (13)

பின்னும அந்த நதியிலே முழ்கினபோகள் அதைக கணணிலே கணடபோ கள், அதைக கையினுலே தொட்ட போகள இவாகளுககு ஙனமை தரததகக நதிகளெல்லாவற்றிலும போய தீாததமாடின புண்ணியம் கைப்பலனுக சித தித்து சிவஞானமும கிடைககும அலலாமலும உயாவான மலையிலே வாசமா யிருந்து நீலிவன நதியிலே ஸநானம பண்ணிப் பாாவதி பாகனுகனுகிய நீலிகனே சுவரரை தரிசனம் பண்ணுயபாககியம கிடைதத போகள் தேவாகளுககெல்லாம் முதன்மையாக தேவேநதிர ராஜனுவாாகள்

நதிகொடுததா ளினியதிருப் பைஞஞீலி யெனவொருவா
ணகர மான

பதிகொடுத்துண் டாக்கினளவிண் ணவர்கடவுட் கொருசுவர்க்க
பதவி யான
திதிகொடுத்த புரியமரா பதிபோலத் தீர்த்தமுமங்கேத்
திரமுங் காட்டிக்
கதிகொடுத்தா ளெதிர்த்தமகி டாசுரனை யுயிர்வதைத்த
கன்னி தானே (14)

தன்னை வந்து கேட்ட தேவர்களுக்கு மகிஷாசுரனை வதைத்த கன்னிகையான துர்க்கை தன் பெயராலே விளங்கும்படி நீலிவன நதியென்ற ஒரு நதியும் திருப்பைஞ்ஞீலி என்னும் ஒரு பட்டணமுமுண்டாக்கிக்கொடுத்தது எப்படியிருந்ததென்றால், சொர்க்க லோகத்திலே வசிக்கும் தேவர்களுக்கு பூஜிக்கும்படி தேவாமிருதமும் அமராவதி பட்டணமும் கிடைத்ததுபோல இருந்தது

இருக்குமா லயமதில்கோ புரஞ்சிவனே டுமையவட்கு
மினிதுண் டாக்கி
வருக்கமா முனிவருக்காச் சிரமபன்ன சாலைகளு
மறைவல் லாளர்
தருக்குமா ளிகைகளுமவேன மன்னரரண் மனைகணமுக
சாலை மேடை
தெருக்கணீ நிதிவைசியர் சூத்திரர்மா மனைபிறர்வீற்
றிருப்புந் தனே (15)

அந்தத் திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்திலே பரமசிவனும் பார்வதியும் எழுந்தருளி இருக்கும்படி கர்ப்பக்கிரஹமுதலாகிய கோவிலும் அதைச் சுற்றி மதிலும் கோபுரமுமுண்டாக்கிக் கூட்டமாய் நிறைந்திருக்கின்ற ரிஷீசுவரர்களுக்குப் பன்னசாலையும் அன்னசத்திர சாலையும் மறையோருக்கு மாளிகையும் கையிலே வேலாயுதம் தரித்திருக்கின்ற ராஜாக்களுக்கு கோட்டையுடனே கூடின அரண்மனையும் ஆசாரமுகச் சாலை உப்பரிகை மேடைகளும் குபேரனைப்போலும் தனம் படைத்த வைசியர் வீதிகளும் சூத்திரரிருக்கும்படி மனைகளும் மற்ற ஜாதிகளுமிருக்கத்தக்க வீடுகளுமுண்டாக்கினள் துர்க்காதேவி.

வாய்த்திடுபட் டினந்திருப்பைஞ் ஞீலிவளம் பதிக்கரசாய்
மதுரை மூதூர்
வீற்றிருந்த தடாதகையெண் டிசைவணங்கும் படியிருந்த
வியல்பு போலத்

தோத்திரஞ்செய் திமையவர்கண் முனிவர்மண்ட லாதிபர்மற்
றுள்ளோ ரெல்லாம
காத்திருந்து போற்றிடமா தவத்திறெடும புவிபுரந்தாள்
கன்னி தானே (16)

மதுரையிலே பார்வதியான மும்முலைத்தடாதகை கன்னியாயிருந்து அஷ்ட திக் பாலகர் வணங்கும்படி ராஜரீகம் செலுத்தியதுபோல இந்த துர்கா தேவியும் தேவா முனிவா ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்கள் முதலாகிய யாவரும் எங்கேயும் காத்திருந்து வணங்கும்படியாக மகா தபசோடுங் கூடி வளம் பொருந்திய திருப்பைஞ்ஞீலி என்னும் பட்டிணத்தில் ராஜ்யா பரிபாலனம் செய்தாள்

முயற்சியுறு தவமெவர்க்கு முடிப்பரிய தவமாக
மூன்று போழ்து
மியற்றியபூ சனைவிரிவோ மிதங்களுவ மானமில்லை
யெவரும போற்றப்
பயிற்சியா சாட்சியரி யயற்குமவ சிமு படாதுநிலைப்
படுத்தி நின்று
ஞயிர்க்குயிரா யிருப்பவளெப் படிநினைத்தாள் முடியாதிவ்
வுலகந் தானே (17)

உறுதியாயிருந்து முடிப்பதற்கரிதான சமாதியாகிய யோக நிலையிலே முப்போதும தவமுமலி நுந்த தவமகிமையுஞ் சுயம்புவாகிய நீலிவனநாதரைப் பூஜை செய்ததும, இப்படியென்று ஒன்றை எடுத்துக்காட்டி உவமானம் சொல்ல இயலாது, இதுவல்லாமல யாவரும் போற்றத்தக்க ராஜரீகம செலுத்துகிற நாளையிலே பிரமமாவினாலும விஷ்ணுவினாலும வசப்படுத்தப்படாத காரியங்களெல்லாம நிலைநிறுத்தித் திட்டப்படுத்தினாள். இவைகளெல்லாம ஆக்ஞா சக்கரஞ் செலுத்திச் செய்கிறதும அதிசயமோ? எதினாலென்றால் சாவ பிராணிகளுடைய உயிருக்குயிராயிருக்கப்பட்ட பராதேவியானவள எப்படி நினைத்தாளோ அந்தப்படியாமன்றோ இந்த உலகங்களெல்லாம

பூசைதவ மாசாட்சி யுடனிருந்த சுந்தரியற்
புதத்தை நோக்கித்
தேசுதிகழ் பலகோடி மதியிரவி யொளியொருமித்
தெழுந்த தேபோல்
வாசவன்மா லயன்முனிவர் விண்ணோரெண் ணிலர்துதிக்க
மகிழ் விநோடு
மீசருமா துமையுடனே பேசரிய காட்சிதந்தா
ரிடப மீதே (18)

இந்தப்படி அனுதினம் பூஜை செய்து தபசும் ராஜரீகமும் விடாமல் செலுத்திவந்த சுந்தரியாகிய துர்க்கையினிடம் சந்தோஷமடைந்து, அநேக காந்தி யுடனும் பலகோடி சந்திரசூரியப் பிரகாசத்துடனே ஒன்றாய் ஒருமித்து ஒருகாலத்திலே உதயமானதுபோல தேவேந்திரன், பிரம்மா, விஷ்ணு முப்பத்து முக்கோடி தேவர், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னர கிம்புருஷர் முத லாகிய பேர்களும் அளவில்லாமல நெருங்கி ஸ்தோத்திரம் பண்ணத்தக்கதாக பரமேச்வரனும் பார்வதியும் சொலலுதற்கரிதாகிய காட்சி யருளும்படிக் ரிஷப வாகனத்தில எழுந்தருளி வந்தாரகள்

வடிவுகாட் டியசிவனை யமலையைக்கண் களுறமனமு
மகிழ்ச்சி கூரும்
படிகண்டா ளுனதுசரி சனமிலா திருந்தேனோ
பரனே நின்சே
வடியிணைக்கின் னமுமடியேன் செய்பிழையுள் ளதும்பொறுத்
டருள வேண்டும் [தாண்
முடியாத மறைகளுங்கண் டறிவரிய தானமுழு
முதலே யென்றாள். (19)

இந்தப்பிரகாரம ஜோதி ரூபங்காட்டி எழுந்தருளி வந்த பரமேச்வரனையும் பார்வதிதேவியையும் கண்டு களித்து சாமி உமமுடைய தரிசனமில்லாமலிருந் தேன். எனக்குப்பரனாகிய பரனே உம்முடையபாதாரவிந்தத்துக்கு அடியாள்செய்த பணி விடைகளிலே குற்றமிருந்தால் பொறுத்தாள வேண்டும் அளவிலலாத வேதங்களும் கண்டறிவதற்கரிதான முதல்வனே" என்று ஸ்தோத்திரம பண்ணினாள் துர்க்கா பரமேச்வரி.

சுந்தரிநீ முடித்திடுபூ சனையுநெடுந் தவமுமா
சுரிமை தானு
மிந்தவளம் பதிக்கமைந்த தீர்த்தமுமா லயங்களுமபட்
டினத்தின் வாய்ப்பு
மந்தவிண்ணோ ரரியவற்கு முடிப்பதரி தாகுநம
தருட் சொல்லா
முனறனக்கு முமையவட்கு மல்லான்மற் றெவர்தமக்கு
முளவோ வென்றான். (20)

பரமசிவன் சுந்தரியாகிய துர்க்கா தேவியை நோக்கிப் பெண்ணே நீ செய்த பூஜையும் நெடிதான தபசும், ராஜரீகமும், வளமை பொ ருந்திய இந்தப் பட்டணத்துக்குண்டாக்கிய தீர்த்தமும் ஆலயமும் பட்டண சிங்

காரங்களும் பிரம்மா, விஷ்ணு, தேவர்களாலும் செய்து முடித்தற்கரியவையாம். ஆகையால் நம்முடைய கிருபையின் சிறப்பெல்லாம் உனக்கும் இந்தப் பார்வதிக்கும் தெரியுமேயல்லாமல மற்றபேர் எவர்களுக்கும தெரிந்துகொள்ளுகிற சக்தியுண்டோவென்று திருவுளம பற்றினர்.

உமைதவஞ்செய் திருந்தவிழை லவள்பூசை புரிந்ததனு
லுவமை யில்லா
விமலவார ணியமென்றுங் காரணஞ்சேர் பரமசம்பு
வென்றும் பேராய்
நிமலமுற்ற தலமுமிந்த லிலிங்கமுமுன் பூசனையா
னிகமம் போற்ற
வமரர்பணி நீலிவனம் நீலிவன நாயகரென்
றாகத் தானே (21)

முன்னாளிலே ருத்திரியான விமலை வந்து இந்த ஸ்தலத்திலே தவம் பண்ணினபடியினாலே அவள் பெயராக, எங்கும் உவமையில்லாத இந்த ஸ்தலத்துக்கு விமலாரணியமென்றும நமதுருவமான சிவலிங்கத்துக்குப் பரம சம்புவென்றும் பெயருண்டாயது நீயுமிந்த ஸ்தலத்திலேயிருந்து தவம் பண்ணி ஆகம விதியுடனே நம்மை பூஜை செய்தபடியினாலே இந்த ஸ்தலத்துக்கு நீலிவனமென்றும இதில வாசமான சிவலிங்கத்துக்கு நீலிவனநாதரென்றும தேவாகளெல்லாம் பணிந்து புகழ்ந்து சொல்லும்படி கட்டளையிட்டோமென்று சிவன் திருவுளம பற்றினா

வாவியுமை யவள் பெயரால் விசாலபுட்க ரணியென்ற
வளமை போல
நீலியெனிற் கொணர்ந்த நதி நீலிவன நதியெனநீ
ணிலத்தோர் கூறத்
தேவருல கமுமகில புவனமுமுன் வசத்தினினின்
றேவல் கேட்ப
மூவருக்கு முதன்மைபெறு கெனப்புகன்றான் யாவருக்கு
முதல்வன் றானே. (22)

விசாலையான உமையவள் பேராலே வளம்பொருந்திய விசால புஷ்கரணி விளங்குவதுபோல் பாணத்தினாலே அதி சீக்கிரமாகக் கொண்டு வந்த நதியானது நீலிவன நதியென்று நீலியாகிய உன் பேரால் லோகத்தார் புகழ்ந்து சொல்லவும், ஸ்வர்க்க, மத்திய, பாதாளம் இந்த மூன்று லோகங்களும் உன் வசமாயடங்கிப் பணிவிடை செய்யவும் திருமூர்த்திகளுக்கு முதன்மையானவளாயும் இருக்கக்

கடவாயென்று கட்டளையிட்டார் யாவருக்கும் முதன்மையான வஸ்துவாகத் தோன்றி ஜோதி மயமாய் எழுந்தருளிய பரமசிவன்.

இந்திரவி லெதிர்த்தகரு முகிலனிகர்தா னவரையெல்லா
மடிய வாட்டி
யிந்திரசித் தனைமாய்த்து மிராவணன்மா யாவிகற்பத்
தின்னல் கூர
மந்திரவி யிதையமெனு மந்திரத்தை ரகுபதிக்கு
மொழிந்த சீரோன்
சந்திரசிங் காதனனுக் கந்தரிபைஞ் ஞீலிவரு
சரிதை சொன்னான். (23)

இராத்திரி காலத்திலே கார்மேகத்துக்குச் சமானமாயிருக்கின்ற மேனி படைத்த ராக்ஷஸர்களையெல்லாம் வதஞ் செய்து இந்திரஜித்தையுங்கொன்று மாயை பொருந்திய விகற்பனான இராவண சமஹாரம்பண்ணி சந்தோஷமடை யத் தக்கதாக ஆதித்திய ஹிருதயமென்னும் மகாமந்திரத்தை ரகுபதிக்குபதேசம் பண்ணிய சிறப்புப் பொருந்திய அகஸ்திய மகாமுனிவர் சந்திர சிங்காதனனு கிய சோழராஜனுக்கு அந்தரியான பசும்பொன் மேனி படைத்த பைஞ்ஞீலி யாகிய துர்க்கா பரமேச்வரி வந்து பூஜைசெய்ததும் அந்த மகிமையினாலே திருப் பைஞ்ஞீலியான ஸ்தலத்தினுடைய மகத்துவ மிப்படியென்று திருவுளம்பற்றி னார்.

---

## ஐந்தாவது சக்கரத்தியாக மகிமை

நீறுகண்டி மாமணியைந் தெழுத்தினிய சைவநெறி
நிலைநின் றோங்க
வீறுதரு நீலிவன நாதர்சரித் திரம்விளம்ப
வியந்துகேட்டுப்
பேறுதரு கதைகளின்ன முரைத்தருணீ யென்றுசந்த்ர
பீடன் கேட்பக்
கூறுவன்கே ளெனவதிக பரிவின்முனி வாறியசற்
குணத்தன் சொல்வான். (1)

விபூதி ருத்திராக்ஷமணிந்து பஞ்சாக்ஷரத்தை உச்சரிக்கின்ற சைவ சமயத் தாரெல்லாம் நெறி தவறாமல் ஒரு நிலையிலே நின்று வாழத்தக்கதாக மேன்மையை யருளுகின்ற நீலிவனநாதர் சரித்திரம் விளம்பக் கேட்டுச் சந்தோஷமடைந்த

சந்திரபீடன் பெருமைகளைத் தரக்கூடிய சிவகதையை இன்னும் சொல்லவேண்டு மென்று கேட்டான். அந்தப்படி சொல்லுகிறோம் அன்புடனே கேளென்று அதிகப்பரிவுடன் கோபந்தணிந்த சற்குணராகிய அகஸ்தியர் சொல்வார்.

நீராடு மதாசலமுன் னபயமென வருகடவு
ணிருதர் மீது
போராடி யாயுதங்க ளொருநாலுங் கையமர
புணரி மேய்ந்த
காரார்கண் டனைநோக்கித் தவம்புரிந்தர்ச் சனைமுடித்துக்
கடுக்கை பூண்ட
வேரார்சென் னியன்கரத்தி லோராழி தனைவாங்க
விதையங் கூர்ந்தான். (2)

முன் னாளிலே ஒரு தடாகத்தில் தண்ணீராடிய யானையை ஒரு முதலை பிடித் துக்கொண்டது. அது ஆதிமூலமென்றோலமிட்டது அப்போது முன்னே வந்து தோன்றிக் காத்தருளிய தெய்வமான விஷ்ணுவானவர் தனக்குச் சத்துருவாகிய ராக்ஷ ஸர்மீது சங்கு,தண்டு,வில்லு,அம்பு இந்த நான்கு ஆயுதங்களையும் பிரயோகித்துப் பார்த்து ஜயிக்க முடியாமல், பரமசிவனை நோக்கித் தபசுபண்ணி அர்ச்சனைசெய்து கொன்றை மாலை சூடிய ஜடாமுடி படைத்தவராகிய பரமசிவன் கையிலே யிருந்த சக்கராயுதத்தை அடையக்கருதினார்

ஈசனார் திருவிருப்புந் தவப்பலிப்புங் கேட்டவர
மின்றென் றமை
னேசமாய்த் தருவதற்கு நீயிவண மென்றுகந்து
நினைவி னொடித்த
நீதசுலா வியமணிக்கோ புரத்தொடுசூழ் புரிசைதிகழ்
திருப்பைஞ் ஞீலி
மாசிலா மணியையொரு நீணெடுங்கண் மலைமணியை
வணங்கி னானல் (3)

ஈச்வரன் விருப்பத்துடன் பிரத்யக்ஷமாய் எழுந்தருளியிருப்பதும் செய்த தவங்கள் பலிதமாவதற்கும் மனத்திலெண்ணிய வரப்பிரஸாதங்களை இன்றைக்கு நாளைக்கென்று பராமுகமாயிராமல் உடனே வந்து கொடுப்பதும் திருப்பைஞ்ஞீலி யிலேயல்லாமல் மற்றொரு ஸ்தலத்திலுமில்லையென்பது உணர்ந்து காந்தி பொருந் திய கோபுரத்தோடுகூடிய பிராகாரம் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலி வாசனாகிய பரமசிவனையும் மலையரசன் கண்மணியாகிய நீள் நெடுங்கண்ணம்மனையும் வந்து கண்டு தரிசனம் பண்ணினார் விஷ்ணு.

திருத்தருபூ சனைதவத்துக் கினியதல மெனதிருதி
திசையி லேபூந்
தருத்திகழ்கா விரிமருங்கோர் பாதாள லிங்கமொன்று
தாபித் தேத்தி
திருததனையா ரணியவிடங் கேசனையா ரணமபுகழ்பைஞ
ஞீலி மேவு
மொருததனைநித் தமுஞ்சகத்ர கமலமலர் கொடுபூசித
துறைவ தானுன். (4)

தபசு பண்ணுகிறதற்கும் பூஜை பண்ணுகிறதற்கும் யோக்கியமாகிய திருப பைஞ்ஞீலி என்னும ஸ்தலததுக்கு நிருதிமூலையிலே அழகிய சோலைகள விளங் கும் காவேரியின் கரையிலே பாதாளலிங்கமென்னும பெயர விளஙகுமபடி ஒரு சிவலிங்கம பிரதிஷ்டைசெயது, அநத லிஙகததைப பூஜைசெய்தார பின்னும ரத்ன சபை நடராஜரான ஆரணியவிடங்கேசவரனை, வேதஙகள புகழும திருப பைஞ்ஞீலியில எழுநதருளியிருக்கின்ற முதலவனை, நிததமும ஆயிரநதாமரைப புஷ்பஙகளைக்கொண்டு வநது அர்ச்சிதது வருவாராயினார மகா விஷ்ணு

பூமாரி பொழிநதினிய பாதாள லிங்கமடி
போற்றி மீண்டா
ராமானுக் கெவ்வமிலா தவவையை முபா ணடநதுமைகட
டமுத மீய்நதா
டாமாதி நாண்முடிதத பூசனைகட ப முதமிட்ட
தஙகை நேய
மாமாலின் னமுஙகுறிதது வருவாராய யாறுமொரனி
வாய்த்த கூடல். (5)

தேவர்கள் புஷ்பமாரி பொழிவதுபோல பாதாளேச்வரர பாததநிலே அநேக புஷ்பஙகளினலே அர்ச்சித்துத திருபபைஞ்ஞீலியில பூஜைபண்ணி வருகிற மகா விஷ்ணுவுக்கு தாகசோகநீருமபடி, முன்னளிலே ஸ்ரீரஙக நாயகருககு அவ்வையார கட்டமுது கொடுதத பிரகாரம ஈசவரியானவள எதிராகப்போய் பசியாறுமபடி கட்டமுது கொடுததாள். ஆகையினலே கட்டமுதங கொடுதத தங்கையான பார்வதி இன்னமும கட்டமுது கொடுப்பாளென்று நினைத்து மகாவிஷ்ணு இநத நாளிலேயும எழுநதருளி வருவார ஐயாறு காவேரியில வந்து சேரும இடமான வாததலை கூடலூரிலென்க.

அரிதவஞ்செய் திருத்தலினன் மாமால்வீற் றிருப்பென்னு
மவ்வூர் தன்னைக

கரியமா ணிக்கமென்றுரு சொல்வாரிவ் வாறுநெஞ்சிற்
கனிவு பூண்டு
புரிகுவார் பூசனைகொண்ட ருணளி லொருநாளற்
புதனுசேர் பூசைக்
குரியபூ வதனிலெழு தரியநாய கர்மறைத்தா
ரொருபொற் பூவே (6)

கறுப்பு நிறம் பொருந்திய நீலமணி வண்ண ரூபனாகிய திருமாலென்னும் பெயர் படைத்த விஷ்ணு தபசுசெய்தபடியினாலே அந்த ஊருக்குப் பெயர் திருமால் வீற்றிருந்த பதியென்றும் கரியமாணிக்கமென்றுஞ் சொல்லுவார்கள். மகாவிஷ்ணு அனுதினமும் மனதிலே அன்புபூண்டு பக்தியுடனே பூஜைசெய்து வருகிற நாட்களிலே ஒருநாள் அவர் அர்ச்சிக்கும்போது ஆயிரம் தாமரைமலரிலே ஒருபூவை மகாவிஷ்ணு காணாதபடி பரமசிவன் மறைத்தார்.

முன்னொருபூ வினுக்காக வுறையூரும் பார்த்தக்கனு
முடியப் பார்த்தார்
ரென்றொருபூ மறைத்தனரோ வெனப்புகன்றுன் குறைவரா
தெடுத்துச் சாத்தப்
பின்றொருபூ வையுங்காணு தொருபூவைத் தரித்தவன்கண்
பெயர்த்து வாங்கித்
தன்றொருபூங் கமலமலர்க் கண்ணொருபூ வெனத்தரித்தான்
சபண டீர்த்த. (7)

முன்னாளிலே ஒரு செவ்வந்திப் புஷ்பத்துக்காக உறையூர் நாடுபார்த்தக்கச் சோழனும் மடிய மண்மாரி பொழியும்படி பார்த்திருந்த சிவனுனவர் இந்த நாளிலே நான் அர்ச்சனைக்குக்கொண்டுவந்த தாமரைமலர்மேல் ஒரு புஷ்பம் மறையும்படி செய்தாரோவென்று சொல்லிக் குறைவான ஒரு புஷ்பத்துக்காகத் தாம் எடுக்கும் தாமரைத்தடாகத்திலே தேடிப்பார்த்து எங்கும் கிடைக்காதபடியினாலே லக்ஷ்மியை மார்பிலே தரித்தவரான விஷ்ணு தம்முடைய கண்ணைப் பெயர்த்துக் கையிலே எடுத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது தாமரைப் புஷ்பங்களுடனே கண்மலராகிய புஷ்பமென்றும் சேர்த்து ஆயிரம் மலரும் குறையாமல் அர்ச்சனை செய்தார்.

பாதமீ தொருகமல மெனநயனந் தரித்தவர்மேற்
பரிவு கூர்ந்தா
ராதரவாய்த் திருமார்பி லணைத்தார்புண் டரீகாட்ச
ரன்றே வென்பார்

சோதிகால் வதுசிறிது நோக்கரிய பாக்கியமாரு
சுடர்ப் பேராழி
நாதனர் கையிலெடுத்தார் சீதரனர் கையிற்கொடுத்தார்
நயந்து தானே. (8)

இப்படி தம்முடைய பாதாரவிந்தத்திலே தாமரைமலராக பாவித்துத் தம் கண்மலரை எடுத்துச் சாற்றின மகா விஷ்ணுவின்பேரிலே சந்தோஷமடைந்து கண்ணினாலும் பார்ப்பதற்கரிதான அக்னிமயமான சக்ராயுதத்தை யாவருக்கும் நாதனாகிய பரமசிவன் தமமுடைய கையினாலே எடுத்து லக்ஷ்மிகாந்தனை விஷ்ணுவின் கையில் கொடுத்தார்.

புயல்சிவசக் கரம்பெற்றுர் நயனமுன்போ லிருந்ததையற்
புதமாய் நோக்கிப்
பயனடைந்தே னுனைப்பூசை புரிந்தவர்க்குங் குறைவுளதோ
பரனே யென்று
ரியல்பொடுபெண் கொடுத்தவர்கண் கொடுத்தவரொன் ருரணிய
விடங்க நாதர்
மயலகல்சக் கரமுந்தி விரந்தந்தார் நயனமுந்தி
விரந்தந் தாரே. (9)

மேகவர்ணன மகாவிஷ்ணு சிவனிடமிருந்து சகராயுதத்தைப பெற்றவுடனே எப்போதும்போல தம்முடைய நேத்திரமானது விளங்கியிருக்கக் கண்டு சுவாமி தேவரீரைப் பூஜைபண்ணின பலனை உடனே கைவரப் பெற்றேன் இப்படி பூஜைபண்ணின பேர்களுக்கெல்லாம் ஒரு குறைவுமுண்டாவதில்லை பரமசிவனே யென்று ஸ்தோத்திரம் பண்ணினா அவரைப்பார்த்து ஈசுவரனவா திருவுளம்பற்றுவார். விஷ்ணுவே, நீ லக்ஷணம பொருந்திய பார்வதியென்ற பெண்ணைக் கொடுத்ததுமல்லாமல மலரான கண்ணையுங்கொடுத்தாய் என்று கூறிக் குற்றம் நீங்கிய சகராயுதத்தை அதி சீக்கிரமாகக் கொடுத்தார் நேத்திரமும் நீலோத்பலம்போலிருக்க அநுகரகம் செய்தார்.

முரகரிபுண் டரீகாட்ச ரெனுநாமம புகன்றெவரு
மூழ்குந தீர்த்தம
வரநதியே முதலான நதியாக வெண்படுதொரு
வரமு மீந்தார்
புரகரனே யுமைப்பிரியா திருக்கவரு ளனத்தரளப்
பொருப்பின் மீதே

பரமசம்பு வெள்வரையில் மகாதேவ ரீசான
பாக மீய்நதார். (10)

முராகரி புண்டரீகாக்ஷா என்னும பெயர் சொல்லி ஸ்நாநம் பண்ணிஞல் அநத தீரத்தம் கங்கை முதலிய நதிகளைப்போல் வரதியாக கடவதென று ஒரு வர மும் கொடுததார் பின்னும மகாவிஷ்ணு சுவாமி, உமமைப் பிரியாமலிருக்க வேண்டுமென்று கேட்டார். சிவபெருமான் முதலுமலையின்பேரில ஈசான்ய பாகததில வெள்வரை யென று பெயரை யுண்டாக்கி அதிலே மகாவிஷ்ணு என் றைக்குமிருக்கும்படி அநுக்ரகஞ் செய்தார்.

நம்பர்கொடுத் தனர்திகிரி யெனக்கேட்ட வளவன் மலர்
நளின னீன்ற
கும்பமுனி வரவிமல திகிரிவர லெதுசொலெனக்
கூறு கின்றான்
உம்பரைப்பண் டேவல்கொண்டா ஞெருநிருதன் வருணன்வளர்த்
துடைய தோன்றல்
சம்பு முனி நுதல்வேர்வை கடலில்விழ வுதிததசலந
தரனென் பேரனே. (11)

சிவபெருமான் மகாவிஷ்ணுக்குச் சக்கராயுதம் கொடுத்தாரென்று சொன் னதுகேட்டுச் சக்திரபீட சோழராஜனைவன் கமலாசனை பிரம்மாவுக்குப் புத்திரராகிய அகஸ்திய மகாரிஷியைப் பாரத்துச சிவனிடத்திலே சக்கரா யுதம வந்த வரலாறும் கூறவேண்டுமென்று கேட்டான். முனிவா முனனு ளிலே தேவாகளெல்லோரும தனக்குப் பணிவிடைசெய்ய ஆண்மை செலுத் திய ஓர் இராக்ஷதனிருநதான். அவன யாரென்றல சமபு முனியினுடைய நெற்றியின் வியர்வை சமுத்திரத்திலே வீழ அந்த வியர்வையினிடமாகப் பிறந்து வருணனல் வளாக்கப்பட்டவன். அவன் பெயா ஜலந்தரன்.

கனகநான் முகன்வரத்தாற் றவமுடித்தான் முடிவில்வநது
காட்சி யான
புனிதனுர் கரத்திலுந்தான் முடிவுரு வரங்களை பெற்றுன்
புவன மெல்லா
தனதுகொடுங் கோனிழற்கீ ழமர்வித்தா னிமையவர்தங்
தலைக ணீங்கி
வனவருண மண்டலமே குடியாய்நின் றேவல்செய
வைததா னன்றே. (12)

பொற் பிரகாசம் பொருந்திய மேனி படைத்த நான்முகனுடைய வரப்பிரஸாதத்தினலே ஜலந்தரன் தபசுகளைச் செய்தான். அந்தத் தவம் நிறைவேறிய பின் முடிவிலே காட்சிதந்த சிவபெருமானிடம் அளவிலலாத வரங்களைப் பெற்று புவனங்களெல்லாம ஒரு குடையின் கீழே அநீதியாக ஆண்டான். ஆனபடியினலே இவனுக்குப் பயந்து தேவாகளெல்லாம அவரவர் உலகம்விட்டு அழகு பொருநதிய வருணமண்டலஞ் சென்று அஙகே அவனுக்குக் குடியாயிருந்து பணிவிடைசெயது வந்தனா

வருணபுரந தனிலிருநதும் நிருதனைக்கண் டேவல்செய்தும்
 வருநதும வானோா
நிருமலனமே வியகயிலை யடைநதனர்க டமைததடுத்தந்
 நிருதன் மீட்டும
வருணபுரத் தினுககவரைக் கொடுவநதா னடியர்மன
 வருததந தீர்க்கத
திருவுளததி னினைததாரே முதுமறையோ னெனவவன்முன்
 செலவ தானுன. (13)

அப்படி வருண மண்டலத்திலிருந்து சதாகாலமும் ஜலநதரனுககு ஏவல பணி விடைசெபது சரீரம் வருததமடைந்த தேவாகள நிர்மலரான பரமசிவன் வாஸமான கைலாசகிரிசென்று, அவரைச் சரணமடைந்தனா, அவாகளை ஜலந்தரனுனவன் தடுதது திரும்ப வருண மண்டலததிறகுக கொணடுவந்தான் பரமசிவன தேவாகளின வருததம தீாப்பதறகுத் திருவுளததிலே நினைதது ஒரு விருதத பிராமமண வேடமெடுதது கொண்டு, ஜலந்தரன் காணும படி முனனே நடநதார்

கோனுன்றி யிடதுகட்கந் தனிலொருபுத் தகம்பிடித்த
 குடைய னுகிச்
சாலவுநான் மறையுணர்நத தவத்தினனு மிகுத்த சலந்
 தரன்முன் னேகச்
சீலமறை யவனேயுன் வரவேதென் றுரெனனகக
 தியிலே வேதன்
மேவினிமை யாகவொரு மந்திரசக் கரங்கொடுத்தான்
 விசய வேலோய். (14)

பிராமண ரூபஙகொண்ட பரமசிவன் வலது கையிலே தண்டமும் இடது பக்கத்திலே புஸ்தகத்துடன் குடையும பிடித்தவராய் நிரமப நான்கு வேதமுமறிந்துணாந்த ரிஷிகளைப்போல் ஜலந்தரன் முன்னேபோனர். சிலம் பொருந்

தீய பிராம்மணனே, நீ என்னிடத்தில் வந்த காரணமென்னவென்று ஜலந்தரன் கேட்டான். அதற்கு விருத்தரான பிராம்மணர் எனக்கு முன்னுளிலே பிரம்மதேவர் மேன்மையாக ஒரு மந்திர சக்கரம்கொடுத்தார் என்று சொன்னான்.

அன்னதிகி ரியினுமம் யாகபரி பாலனாநீ
ரசலம் பூமி
யென்னுமிவற் றினிலேகைத் தவநீங்கி வீழ்ந்தான்மீட்
டெடுக்கொண் ணுது
சொன்னமுறை தவறிடினுஞ் சலந்தரன்மீட் டெடுப்பனெனச்
சொன்னான் வேத
வின்னதலத் திடைவீழ்ந்த துணையடுத்தேன் றருகவெடுத்
தினிநீ யென்றான். (15)

அந்தச் சகராயுததுக்கு யாகபரிபாலனமென்று பெயராகும். அந்தச் சக்ரா யுதத்தை ஜலத்திலே, மலையிலே, பூமியிலே இந்த மூன்று இடங்களிலேயும் தவறி விழுந்தால் எடுக்கமுடியாது ஆனுல பூலோகத்திலே விளங்கும ஜலந்தரன் எடுததுக்கொடுப்பானென்று பிரமமதேவர் சொல்லியிருக்கிறார். ஆகையினாலே பூமியிலே என கைதவறிச சகரமானது வீழ்ந்தபடியினாலே உன்னை வந்தடுத் தேன. அதை நீ திருமபஎடுததுக கொடுக்கவேணடுமென்றார் விருத்த பிராம மணர்.

ஆழிவிழுந திடுதலத்தைத் தெரிக்கிடெனச் சலந்தரனை
யழைத்துத தாஞ்சென்
றூழியிலே நேமிவிழுந் திடமிதுவென் றொருவிரல்கொண்
டானர் காட்டச்
சூழுறுமிந் திரதனுபோ லெழுநததைச் சயித்தெடுத்தான்
றொலைவி லாது
வாழியசீ வனைககவர வருங்கால நேமிகையின்
வசப்ப டாதே (16)

சக்கரம விழுந்த இடத்தை நமக்குக காட்டுமென்று ஜலந்தரன் கேட்டான். பிராமணர் ஜலந்தரனை அழைத்துககொண்டுபோய பூமியிலே சக்கரம்விழுந்த இடமிதுதா னென்று பாதப்பெருவிரலினாலே சககரமபோலே கீறிக காட்டினார் அவ்விடததிலே இந்திரனுடைய விற்போல பூமியிலிருந்து எழும்பியதைக கண்டு அதிசயபபட்டு அவன எடுத்தான். தொலைவில்லாத காலம் அழிவிலலாத ஜலந்தரனுடைய உயிரை வாங்க வருகிற காலநேமி, அவன் கைவசப்படாம லிருந்தது.

நெடுநேமி நீங்கியது கண்டுகொண்ட வபிமான
நிருத நேமி
யடுவதறி யாமனடிக் குதிக்கநின்ற துயிர்பிடித்த
தகலப் போமோ
முடுகியெடுத் தனன்றனைச்சூழ்ந் தெழுந்ததுமேற் சிரத்தின்வரு
முன்னே மேனி
நடுவிரண்டு பிளப்பாக வகிர்ந்ததகன் றதுபிடித்தா
ஞரி பாகன். (17)

நெடிதாகிய சக்கரமானது தன கைக்கு வசப்படாமல் நீங்குவது கண்ட ஜலந் தரன், மூண்ட அபிமானமான உயிரையும் சரீரத்தையும வாங்க வந்த சக்கரமென் பதை யறியாமல் பூமி நடுங்கும்படி குதித்து நிமிர்ந்து நான் பிடித்த சக்கரம நழு விப்போமோ வென்று பராக்கிரமம் பேசி விசையாய் எடுத்தான். சக்கரமானது பூமியிலிருந்து கையிலெழும்பிச் சிரஸளவாக வருவதற்கு முன்பே அது ஜலந் தரனை இருபிளவாகக் கிழித்தெறிந்து அப்பால் அகன்றது அகன்ற அச்சக்க ரத்தை உமையொரு பாகனனவா பிடித்துக கையிலே தாங்கிக்கொண்டார்.

திக்கரவந் தரித்தவர்தந் திருக்கரத்தி விருந்ததுகட்
செழும்பூ வாக
முக்கணனார் திருவடிமேன் மிக்கபத்தி பரிவினொடு
முராரி சாத்தச்
சக்கரத்தை யககணமே திருமாலுக் களித்தனர் மற
றவாத தேது
மிக்கரிய தெனினுமெளி தெனத்தருவா ரன்பருக்கு
விமலர் தாமே. (18)

அஷ்டமா நாகங்களையும் பூஷணமாகத் தரித்தபரமசிவன் தமது கையிலே தாங்கிய சக்கரத்தை, தாமரை புஷ்பமாக பாவனை பணணிக கண்மலரையெடுத்து திரு நேத்திரரான பரமசிவன் பாதத்திலே மிகுந்த பகதியுடனே சந்தோஷமாய்ச சாத்திய விஷ்ணுவுக்குக கொடுத்தார் அஃதிலலாமல் வேறே சக்கரமேது கேட் பதற்கரிதாகிய பொருளாயிருந்தாலும அன்பாக்கு எளிதிலே கொடுப்பார் பரம சிவன்.

அன்றுமுத லாகரத்ன சபையினட ராசர்தமை
யகிலத் தோர்கள்
வென்றிபெறு நிமலசக்கரத் தியாகரெனப் புகல்வார்கள்
வேநதர் வேந்தே

யென்றுமிது சரித்திரத்தைத் துதிப்பவர்குன் றாததிரு
வெய்தி வாழ்வார்
துன்றியசத் துருபீடை யவர்பெயருஞ் சரித்தவற்குத்
தொலையுந் தானே. (19)

இப்படி சக்கரத்தை விஷ்ணுவுக்குத் தியாகமாகக் கொடுத்தபடியினாலே, அன்று முதற்கொண்டு பதினைசபை நடராஜப்பெருமானைப் பூலோகத்தாரெல்லாம் வெற்றி பெற்ற நியல சக்கரத்தியாகரென்று புகழ்ந்து சொல்லலாயினார். ராஜாதிராஜனான சந்திரபீட சோழராஜனே பின்னும் இந்தச் சரித்திரத்தைப் படித்தபோர்கள் நிறைந்த லக்ஷ்மீகரம் பொருந்தி வாழ்வார்கள். நெருக்கமாகிய சத்துருபீடையுடையவர்கள் சக்கரத்தியாகரென்று சொன்னாரானால் அவர்களிடத்தில் அந்தப்பீடை அண்டாதபடி தொலைந்தோடிவிடும் என்றார்

மட்டார்பங் கயநூற்றுப் பத்திலொன்றி லாமலக்க
மலராய்ச் சாத்தக்
கிட்டாது கிடைத்தசக்ரத் தியாகவியல் குடந்தைமன்னற்
கிசைத்தா னன்றே
நெட்டாழி யிலங்கையைவென் றயோத்திவருபராக்ரமன்
னீதி வாய்த்த
பட்டாபி ராமனுக்குத் தரகாண்ட வரலாறு
பகர்ந்த மேலோன. (20)

வாசனைபொருந்திய ஆயிரம் புஷ்பம் அர்ச்சிக்கையில் ஒருநாள் ஒரு புஷ்பமில்லாமல் குறைந்தபடியினாலே தம்முடைய கண்மலரொன்று வாங்கி ஆயிரம் புஷ்பத்துக்குச் சரியாய் அர்ச்சித்த மகாவிஷ்ணுவுக்கு கிடையாதது கிடைத்ததுபோல் சக்கரம் கிடைத்த சரித்திரமிதுவென்று கும்பகோணத்து ராஜனுக்குத் திருவுளம்பற்றினார். நெடிதாகிய சமுத்திரம் சூழ்ந்த லங்காபுரியை வென்று வெற்றியுடனே அயோத்திக்கு வருகிற வீரபராக்கிரமம் பொருந்திய பட்டாபி ராமருக்கு உத்தரகாண்டத்தினுடைய வரலாறு இன்னபடியென்று திருவுளம்பற்றிய அகஸ்திய மகாரிஷி.

---

## ஆறாவது கபாலமோசன மகிமை

கருணை மால்சிவ கிரிபெற் றுயர்ந்திடுங் கதைகேட்
டருள்கொ டுப்பதும் பத்தியென் றற்புத மடைந்தேன்
பொருவ ருஞ்சிவ லீலைக ளின்னமும் புகல்வாய்
பெருமை மாதவ வெனச் சொன்ன சந்திர பீடன். (1)

கிருபைபொருந்திய விஷ்ணுவானவர் சிவனிடத்திலே யிருந்த சக்கராயுதத்தைப் பெற்ற வரலாறு கேட்டு அன்பு ஒன்றே இறைவன் திருவருளை யடையச் செய்கிறதென்று ஆச்சரியமடைந்தவனும் சொல்வதற்கரிதாகிய சிவ லீலைகளை இன்னமும் திருவுளம்பற்றவேண்டுமென்று அகஸ்திய மகரிஷியைப் பார்த்துச் சொன்னான் சந்திரபீட சோழராஜன்.

முனிவன் கூறுவா னரசனே தக்கனு மூமவோன்
றிருவ யிற்றிடை யுதித்ததாட் சாயணித தெரிவை
மருமு ணஞ்சிவன் முடித்தநா ளரியயன் மகவான்
பெருகு திக்குளோர் வசுக்கண்மா தவர்முதற் பெரியோர். (2)

அதுகேட்டு அகஸ்திய மகரிஷி சொல்வார். சந்திரபீட சோழராஜனே கேளாய அதிக வரப்பிரஸாதனான தக்ஷனுக்கு மகளாய்ப் பிறந்து தாக்ஷாயணி என்று பெயர் படைத்த பார்வதியை வாசனை பொருந்திய மாலை சூட்டி விவாகஞ்செய்துகொண்டு பரமேச்வரன் கைலாசத்திலே வந்திருக்கும் நாளையிலே அவரைக் காணும்படியாக பிரமா, விஷ்ணு, தேவேந்திரன், அஷ்ட திக்குபாலகர்கள், அஷ்ட வசுக்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுடனே தேவர்களெல்லாம் வந்தார்கள்.

தத்தஞ் சார்பினி லிருந்தன ருமைசிவன் சபைக்கு
நித்தஞ் சேவைகண் டடிதொழ நடந்தன ணிரைமேசர்
முத்த வாணகைத் திருமகள் கலைமகள் முதலாயச
சித்தி சேரயி ராணியு மருங்கிலவந் திடவே. (3)

இப்படி வந்த தேவர்களெல்லாம் அவரவர்கள் ஸ்தானத்திலே வந்திருக்கும் போது உமையானவள் சிவபெருமானுடைய சபைக்கு நித்திய சேவை கண்டு பண்ணுகிறதற்கு எழுந்தருளினாள். பத்திபத்தியாயுள்ள முத்துக்களைப்போன்ற பற்களையுடைய மகாலக்ஷிமி, ஸரஸ்வதி, இந்திராணி இவர்கள் பக்கத்திலே பிரகாமல் வந்தனர்.

திக்கு வேந்தர்த மாதர்கண் முனிவர்பத் தினிகள்
தக்க ஊழியம் பலபல புரிந்தனர் சாரத்
தொக்க ரம்பையர் கிதநாட் டியஞ்செயத தொனியான்
மிக்க வாத்தியத் துடன்முத்துச் சிவிகையின் மீதே. (4)

பின்னும் அஷ்ட திக்கு ராஜ ஸதிகளும், ரிஷிபத்னிகளும், அவரவர்கள் பலவிதமான ஊழியம் செய்துகொண்டு வரவும், தேவரம்பைகளெல்லாம் கீதம் நாட்டியம் பண்ணவும் சப்த மிருந்த பஞ்ச வாத்தியங்களும் முழங்கும்படி முத்துச் சிவிகையின்பேரில் எழுந்தருளி வந்தாள் ஈச்வரி.

கண்ட போதடி வணங்கினர் முனிவருங் ககனத
தெண்டி சாமுகக் கடவுளர் வசுக்களோ டியக்கர்
வண்டலம் புண்ட ரீகன்வீற் றிருந்தனன் வணஙகா
தண்ட நாயகி சிறியளென் றெண்ணின னகத்தில். (5)

இபபடி சிவனிடததுவந்த பார்வதி முததுச் சிவிகையினபேரில எழுந தருளி வருவதைக் கணடவுடனே நாறபததெணணாயிரம் ரிஷிகளும அஷ்ட திக பாலகாகள முதலாகிய போகளும அதி சீககிரமாய் ஓடிவநது எழுநதிருநது தீர்கக தெணடம பண்ணினாகள. வணடுகள் மொயததிருககப்பட்ட தாமரை மலரில் வாசமான பிரமதேவன வணஙகாமல அணடநாயகியைச சிறியவ ளென்று மனதிலெண்ணி யிருநதான்.

எழுந்தி ராதிருந் தனனிவ னிறைவனோ வென்னச
செழுமபொன் வேதிய னென்றன ரிவனது செய்கை
கொழுஙக னறபடை மழுவினாக் குரைப்பது குறிததாள்
புழுங்கு வெஞசினத துடனுமை யரணவை புகுநதாள (6)

உமாதேவியாா "இவன எழுநது வணஙகாமல இருநதபடியினாலே இவா தானோ ஈச்வரா என்று மனதிலே சநதேகங்கொணடு பின பிரமனேயெனப துணாநது காலாகனியின கொழுநதாயமாகிய மழுவைததரிதத பரமசிவனுககு இதைச சொலலோமென்று மகா கோபததுடனே ஈசவரனுடைய சபைககு வநதாள. பினனாலே வநத லகஷ்மி முதலானவாகள பிரமாவானவா வணஙகாமலிருநத விரததாநதஙகளை விணணபபஞ செயதாாகள்.

தனது நா யகன் றிருவடி பணிநதுபொற் றவிசி
லினிது பாகம்வீற் றிருநதன ளிலவெறித் திலகு
கனக மேருவி னிடததிலே புளகித களப
வனச வாண்முகை சுமநதுறை மரகத மலைபோல். (7)

இப்படி பரிஜனப்பெண்கள் சொன்ன வசனத்தை மனதிலே தேவி வைதது கொண்டு தனக்குப்பிராண நாயகனாகிய பரமசிவன பாதமபணிநது பிரகாசமாகிய சிஙகாதனத்திலே அவா பககததில பிரகாசம் பொருநதிய மகமேருவினிடததில புளகாஙகித களபமணிநத தாமரை முகிழ்போனற ஸ்தனமென் னப்படா நின்ற சிகரத்துடனே கூடின மரகத மலைபோல எழுந்தருளி யிருந்தாள்

ஆய போதுமை யிறைவன்வீற் றிருந்தபே ரவைக்கண்
மாய னன்மறை வேதியன் மகபதி வானோர்

தூய மாதவர் கணங்கள்வந் திறைஞ்சினர் துதித்தார்
நேய மோடுகை குவித்திரு புறத்தினு நின்றார். (8)

அந்தவேளையில் பார்வதி பரமேச்வரர் எழுந்தருளியிருக்கிற சபைக்கு பிரமமா, விஷ்ணு, தேவேந்திரன், தேவர்கள், ரிஷிகள், சிவகணங்கள் முதலிய யாவரும் வந்து வணங்கி ஸ்தோத்திரம்செய்து மகாபக்தியுடனே இரண்டு பக்கத்திலும அஞ்சலி செய்தவண்ணம் நின்றனர்.

நின்ற காலையி லிறைவனை நோக்கினு ளிமலை
யுன்ற னக்குநே ராகியே முகங்களைந் துடைய
வென்றி யாலெனை வணங்கிடா திருக்குமிவ் விதியைக்
கொன்றை வேணிநீ யெனமனந் தன்பொடுங் குறித்தேன். (9)

இப்படி சகலமான தேவதைகளும் வந்து தரிசனம் பண்ணிக்கொண்டிருக்கையில் பரமேசுவரனைப்பார்த்து ஈசுவரியானவள் சொல்லுவாள். அடியாள் தட்டு சேவைக்கு வரும்போது தெய்வ சபையிலே எல்லோரும் வணங்கினார்கள் உமக்குச்சமானமாய ஐந்து சிரங்களை படைத்த வெற்றியினாலே வணங்காமலிருந்த பிரமதேவனை கொன்றைமாலை தரித்த சடாதாரான என்பிராண நாயகராகிய நீர்தானென்று என் மனதிலே எண்ணினேனென்று விண்ணப்பஞ் செய்தாள்.

அடிய னென்மனோ விரதத்துக் கிடரென வடுத்த
கொடுமை யீதென வேதனை நோக்கினன் கோர
வடிவ மாய்ஒருப பெழுவிழித் தெழுந்தனன் மலரோ
னெடிய சென்னியோன் றளுறக் கிள்ளினு னிமலன். (10)

பின்னும் சொல்வாள் அடியாளுடைய மனோவிரதபங்கமாக வந்த கொடுமை இதுவென்று சொல்லி, மனக்கிலேசமடைந்தாள் அகோர காலாக்கினி ருத்திர ரூபங்கொண்டு விழிகளிலே அக்னிகொழுந்தெழும்பிப் பொறிகள் சிந்தும்படி எழுந்திருந்து அவனுடைய சிரசிலே ஒரு சிரசைத்திருகிக் கிள்ளினார் சிவபெருமான.

சீறி நான்முகன் றலைசிவன் பறித்திடத் திகைத்து
வேறு வேறுபட் டோடினர் தேவர்கள் வெருண்டு
தூறில் வேங்கையோர் பசுவினைப் பிடித்தபோ தொருங்கே
தாறு மாறுபட் டோடிய பசுக்களொத் தனரே. (11)

இந்தப் பிரகாரம் சீறி எழும்பிய சிவனானவர், பிரமதேவனுடைய ஐந்து சிரசிலே ஒருசிரசைத் திருகிப்பிடுங்கியதகண்டு வெருண்டு பயந்து திகைகெட்டு எங்கித் தேவர்களெல்லாம் ஒருவர் போன திசையிலே ஒருவர்போகாமல திசகு

திக்காய் ஓடிப்போனார்கள் அது எப்படியிருந்ததென்றால் குகையிலேயிருக்கிற வேங்கைப்புலியானது கர்ச்சித்து ஆக்கிரோஷத்துடனே புறப்பட்டுத் திரளாய் ஒன்றுகூடியிருக்கிற பசுமாட்டுக் கூட்டத்திற்புகுந்து ஒரு பசுவைப் பிடித்தால மற்ற பசுக்களெல்லாம் தடுமாறித் திசைதப்பி ஓடிப்போவதுபோலிருந்தது.

துடிக்கக் கிள்ளிய தலைசிவன் கரத்தினிற் றுடித்துக்
கடித்துக் கொண்டது மிகுத்தவெகு சினத்தொடு கபாலம்
பிடித்த கையுடன் சுழற்றிய சூலமும் பெரிதே
யிடித்த மாமுகி லெனநகைத் தேகினு னிறைவன். (12)

அப்படிக் கிள்ளப்பட்ட பிரம்மதேவனின் தலையானது திருக்கரத்திற்றானே பற்றிக்கொண்டது. அதுகண்ட சிவபெருமான் மிகுந்த கோபத்துடனே சூலா யுதத்தைச் சுழற்றியவாறே இடி இடிக்கின்ற மேகங்கள்போல கர்ச்சித்து நகைத்தவண்ணம் அந்த சபையைவிட்டு எழுந்துசென்றார்.

விரிஞ்ச னுந்துடி துடித்தன னுருண்டனன் வீழ்ந்தான்
பரிந்த தந்தையும் பதைபதைத் தரற்றினன் பதறி
யிரிந்த வானவ ரனைவரும் கூடினு ரிறைவ
னரிந்து நான்முக மிருந்ததோ வெனச்சொல்வா ரானார். (13)

இப்படி சிவனுடைய கையினாலே சிரசையிழந்த பிரம்மதேவன் சரீரம் துடி துடித்து விழுந்து புரண்டு கிடந்தான். அவனுடைய பக்ஷமான பிதாவான விஷ்ணுவும் நெஞ்சுதளர்ந்து பதைத்துக் கிலேசமடைந்து அழுதார். சிதறி ஓடிப்போன தேவர்களெல்லாம் ஒன்றுகூடி வந்துபார்த்து, உக்கிரரூபமாய் எழுந்த பின் பரமசிவனானவர் பிரம்மதேவனுடைய சிரசையெல்லாம் கிள்ளிப்போட வில்லை. ஒருசிரசைமாத்திரம் கிள்ளியுள்ளார் மற்ற நான்கு சிரசும் தப்பி யிருக் கிறதென்று சொல்லத்தொடங்கினார்கள்.

உமையு நாதன தியற்கையை யினுவி ளுறைந்தா
டமது தானங்க ளடைந்தன ரிமையவர் தலையின
சுமையி ழந்தநான் முகன்படைப் பிழந்தன னாய
நிமல னண்ணினு னெண்ணிலா விண்ணுளார் நிலையே. (14)

ஈச்வரியானவள் தன்பிராண நாதரான பரமசிவன் இயற்கை லக்ஷணங் களைக் காதினாலே கேட்டறிந்து எழுந்தருளின ஸ்தானத்திலே தானே இருந்தாள். தேவர்களும், ரிஷிகளும் அவரவர் ஆச்சிரம பர்ணசாலைகளுக்குப் போய்ச் சேர்ந்தனர். சிரசை இழந்த பிரம்மதேவன், சிருஷ்டி மாறிப்போனான். சிவபெரு மானானவர் கபாலத்தோடும் எண்ணில்லாத தேவர்கள் வாஸமான பதிகளெல் லாம் சஞ்சரித்தார்.

முகுந்தன் மேவுவை குந்தநோர் புகுந்தனன் முனிவான்
மிகுந்த பிஞ்ஞகன் வரவினை முராரியும் விஞவிப்
பகிர்ந்து பிக்கைநல் கெனச்சொலக் கேட்டனள பதுமை
தகுந்த காதென வெருவிலாள் பலியளித் தனளே. (15)

மகாவிஷ்ணுவின் வாசஸ்தானமான வைகுண்டத்திற்குக் கோர ரூபத்துடனே கபாலம் ஏந்தியவண்ணம் போனர் அப்படி மிகுந்த கோபத்துடனே வந்த காரணத்தை விஷ்ணுவானவர் கேட்டறிந்து இருக்கிறதிலே பகிர்ந்து பிசைையிடும்படி லக்ஷ்மிக்குச் சொல்ல அதுகேட்டு லக்ஷ்மியானவள் பிச்சை இவருக்குப் போடுகிறதற்கு ஆமல்லவென்று எண்ணி பயப்படாமல் அப்படியே பிச்சையிட்டாள்.

நக்க ஞர்சிறி தகன்றவெஞ் சினத்தராய் நளின
மைக்கண் மாதினை வியந்துகொண் டாடியுன் மகிணன்
மிக்க தோர்நர கரியுடல் செருக்குநாண் மீளத்
தக்க வாறுசெய் குவமென வரங்கொடுத் தனனே. (16)

அப்படிப் பிச்சையிடும்போது சிறுநகை செய்து சிவனுனவர் கோபமற்ற சுத்தமனத்துடன் தன்மை பொருந்திய விழியோடுகூடியவளாகிய தாமரை மலர்போலும் மைதீட்டிய கண்களையுடைய மகாலக்ஷ்மியை சந்தோஷத்துடனே புகழ்ந்து கொண்டாடிப்பெண்ணே உனக்கு நாயகனுன விஷ்ணுவானவர் நரசிங்க ரூபமெடுத்து இரண்ணியனுடைய ரததபானம செய்த வெறியினுலே கோப மடைந்து மயங்கும்போது யாம் அதறகேற்ற ரூபமெடுதது நிவாததிப்போ மென்று வரஙகொடுததனா

பதுமைக் கிப்படி வரங்கொடுத் தருளிய பரிசே
யதுல வைகுநத மெனுமுர கரிபதி யகன்று
கதுமெ னப்பல புவனகோ டிகள்சென்று கடநதான்
விதுவு லாவிய கனகமால் வரையென விமலன். (17)

இப்படி பிக்ஷையிட்ட லக்ஷ்மிககு ஆசீர்வாத வரப்பிரஸாதம கொடுதது ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு நீஙகிச் சீக்கிரமாகப் புறப்பட்டுப் பற்பல புவனகோடிக ளெல்லாம் சென்றூ சகலததுககும ஆதாரமாகிய மகமேருகிரியானது நிலே பெயர்ந்து சஞ்சரிததறகொப்ப.

தன்பி ராணநா யகன்வரா துமைமனந தளர்வாய்
தென்பைஞ ஞீலிமா நகரிலே தவமுடித் திருந்தா
டுன்ப நான்முகன் ருனுமத் தலத்தில்வந தொருபா
லன்பி ஞேடுமீ சானபா ரிசத்தினி லடைந்து. (18)

தன் பிராணநாயகரானவர் எங்கும் சஞ்சரித்துக்கொண்டு தன்னிடத்திற்கு வாராமலிருப்பதினாலே பார்வதியானவள் மனந்தளர்ந்து தக்ஷிண கைலாசமான திருப்பைஞ்ஞீலியிலே வந்து தபசு பண்ணிக்கொண்டிருந்தாள். சிருஷ்டியும் சிரசுமிழந்து துன்பமடைந்த பிரம்மதேவரும், அந்த ஸ்தலத்தையடைந்து அதற்கு ஈசானிய திசையிற்போய் தவம்புரியலானார்.

பிரமதீர்த்த மொன் றமைத்தனன் றக்கணப் பிரயாகை
பிரமன் மாலயற் கமைத்தனன் றிருவிருப் பியல்பாய்
பிரம மங்கலப் புரிதனின் மேவியன் பினனுய்ப்
பிரமன் மாதவ முடித்துவீற் றிருந்தனன் பெரிதே (19)

வடகாசியிலே விளங்குகின்ற பிரயாகையைப்போல தென்காசியான திருப்பைஞ்ஞீலியிலே தம்முடைய பெயராலே விளங்கும்படி பிரமதீர்த்த முண்டாக்கிப் பின்னும் லக்ஷணங்களுடனே கூடிய பிரம்ம மங்கலபுரி யென்னும் ஒருபட்டண முண்டாக்கி அதிலே பிரமதேவர் வசித்து மகாதபசு பண்ணிக்கொண்டிருந்தார்.

வான நாடுகள் பூதலம் பாதலம் மலைகள்
கான நாடரு நதியெலா நாடின கடவுள்
ஞான மாமயில் பெருந்தவம் புரிந்தனன் னலஞ்சேர்
தான மானபைஞ் ஞீலியம் பதியினைச் சார்ந்தான். (20)

தேவலோகம் பூலோகம் பாதாளலோகம் மலைகள், வனங்கள், எங்கும் பிரம்ம கபாலத்துடனே சஞ்சரிக்கும் பரமசிவனானவர் மயில்போன்ற சாயையுடையவளும் சிவஞானமுடையவளுமாகிய பார்வதியிருந்து தபசு பண்ணுகின்ற நன்மையான வளம் பொருந்திய திருப்பைஞ்ஞீலி என்ற ஸ்தலத்திற்குச் சென்றார்.

இங்கி தந்தரு மிவ்வகநா யகற்குமுன் னியல்சே
ரங்கி தீர்த்தமென் றினியபொற் றாமரை யருகே
சங்கவார் குழைப் பராபர மூர்த்திவந் தளவே
யங்கை மீதிலே தங்கிய கபாலம்வீழ்ந் ததுவே (21)

இங்கிதவரப் பிரஸாதங்களைத் தருகின்ற நீலிவனநாதர் ஸந்நிதிக்கு முன்னாக விளங்குகின்ற அக்கினி தீர்த்தமான திருப்பொற்றாமரை நதியின் அருகே சங்குகளை யணிகின்ற பராபர மூர்த்தியானவர் வந்த அளவில், அவர் கையிலே கெட்டியாகப்பிடித்துக் கடித்துக்கொண்டிருந்த பிரம கபாலமானது பூமியில் விழுந்தது.

அங்கை மேவிய கபாலம்வீழ்ந் தளவிலே யமலன்
சுகந்த வார்குழற் கவுரியை நினைத்தனன் சுருதி
பகர்ந்த வோர்பொரு ளடியில்வந் திறைஞ்சினள் பரமன்
சகங்க ளியாவையுந் தந்தவ ளுடன்கலந் தமர்ந்தான் (22)

அப்படி பிரமகபாலம் பூமியில் வீழ்ந்தவுடனே பரமேச்வரருக்கு கோர ரூபம் நீர்ந்தது பாரிஜாத புஷ்பம் முதலாகிய மலர்களை யணிந்த அளகபாரம் படைத்த ஈச்வரியை அவர் மனதிலே நினைத்தார். நினைத்தவுடனே தபசை விட்டு ஈச்வரியானவள் வேதமுடிவிலே சொல்லியிருக்கின்ற பொருளாகிய பரம சிவன் பாதம் பணிந்தாள். அப்பால் பரமசிவனும் உலகங்களெல்லாம் பெற்ற மாதாவாகிய பார்வதியுடனே எழுந்தருளியிருந்தார்.

ஐந்தி லொன்றிழந் திருந்தவன் றவத்திடை யணுகி
ஐந்தி லொன்றிவ னென்பது திருவுளத் தமைத்தா
னைந்தி லொன்றினன் முடிதந்திடு பூசைகொண்டவனுக்
கைந்தி லொன்றுதந் தனுப்பினன் னுமைக்குநா யகனே (23)

ஐந்து சிரசிலே ஒரு சிரசிழந்த நான்முகனாகிய பிரம்ம தேவர் தபசு பண்ணின இடத்திற்கேகி அங்கே அவருக்குப் பிரத்தியக்ஷமாய் எழுந்தருளி பஞ்சகர்த்தாக்களிலே இவனொரு கர்த்தாவென்று மனதிலெண்ணித் தயவு வைத் தார் பிரம தேவர் பஞ்சசுத்திகளிலே மந்திர சுத்தி யெனகிற சுத்தியினாலே பரமசிவனுக்குப் பாதபூஜை பண்ணினார். சிவபெருமான் அதை ஒப்புக்கொண்டு பிரமாவுக்கு பஞ்சகிருத்தியங்களிலே சிருஷ்டி என்கின்ற தொழிலைச் செய்யும் படி கட்டளையிட்டனுப்பினார்

வேறு

பங்கயன்பூ சனையிதெனச் சந்திரசிங் காதனற்குப்
பகர்ந்தா னன்றே
தங்கியதன் னிடத்தடைந்த முனிவருக்குத் துயிலையகத்
தவறு சூழ்ந்த
செங்கனகச் சிகரகிர வுஞ்சவெற்பைக் கதாயுதத்தின்
சிகரத் தாலே
யங்குமிங்கு மூடுருவத் துளைத்தொருபல் கணிகத்தவ
மாக்கி னனே. (24)

பிரம்மதேவன் பூஜை பண்ணிய மகத்துவமான கதை இதென்று சந்திர சிங்காதனச் சோழராஜனுக்குத் திருவுளம்பற்றினார் தம்மிடத்திலே சேர்ந்து வசிக்கும் ரிஷீச்வரர்களின் தபசுக்கு விக்கினமாய் நித்திரை மயக்கம் உண்டாக கிய சிவந்த பொன்னிறம் படைத்த மகாமேருவைப் போலும் சிகரமுடையதாகிய கிரவுஞ்சகிரியைத் தம்முடைய தண்டாயுதத்தினாலே மோதிப் பலகணிக் கதவு போல் துளைபடச் செய்த அகஸ்திய மகரிஷி

## ஏழாவது இரத்தின சபையின் மகிமை

வேறு

கூறிய கதைகேட் டபயனு மதிக
குணத்தின னகத்திய முனியை
நீறணிந் துதத்தி நுகர்தவாக் கினியை
நிறைமகிழ் வொடுதுதித் திறைஞ்சி
யாறுசேர் சடில நீலிகா வனத்தி
லமலனார் விமலமாக் கதைகள்
வேறுள தியம்பு கென்முனி வரனும்
வேந்தனே கேளெனப் புகலுவான். (1)

கபாலமோசன கதையைக் கேட்ட சந்திர பீடசோழனானவன் அதிக சந்தோஷமடைந்து, விபூதி ருத்திராக்ஷங்களை அணிந்திருப்பவரும் சமுத்திர ஜலத்தை உள்ளங்கையில் எடுத்து ஆசமனம் செய்தவரும் ஸரஸ்வதியை வாக்கிலே தரித்துக்கொண்டிருப்பவருமான அகஸ்திய மகரிஷியை ஸ்தோத்திரம் பண்ணி நீலிவனவாஸரான கங்காதரராகிய பரமசிவன சரித்திரங்களைத் திருவுளம் பற்றவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, அந்தப்படியே சொல்லுகிறோம் நன்றாய்க்கேட்பாயாக சோழராஜனே என்று அகஸ்தியர் சொல்லுவார்.

தருக்கிளர் தில்லை வனத்தினில் வியாக்ர
சரணனும் பதஞ்சலி முனியுங்
கருத்துவந் திறைவன் றிருத்தக்கு நடனங்
காணவூண் மறந்துவா யுவையுண்
டருத்திசோ தேவ வருடமா யிரஞ்சென
றருந்தவம் புரிந்தன ரழியா
திருத்திடு மருத்துப் பொசிப்புணக் கிடைத்தா
லிறத்தல்விட் டிருப்பதற் புதமோ. (2)

தில்லை விருக்ஷம் சூழ்ந்து செழித்தோங்கியிருக்கிற தில்லைவனமாகிய சிதம்பரத்திலே வியாக்கிரபாதரிஷியும், பதஞ்சலி முனியும் பரமேசுவரனுடைய நடன தரிசனம் காணவேண்டுமென்று மனத்தில் இச்சித்து உணவுகளை நீக்கி வாயுவாகாரம் பண்ணிக்கொண்டு ஆச்சரியமாக தேவ வருஷத்திலே ஆயிரம் வருஷம் மகா தபசுகளைப் பண்ணினார்கள். சரீரம் அழியாமலிருக்கிற புசிப்பாகிய கற்பங்கள் கிடைத்தால் தபசிலே யிருப்பது ஆச்சரியமோ.

அனகரிவ் விவர்செய் தவத்தின் மேன் மையைககண்
டம்பிகை பாகனுண் மகிழ்ந்து
கனகசின் மயநின் மலசபை விலாசக்
காட்சியின் மாட்சிமை பெறவே
தினகர சகத்திர கோடியே ரொளிபோற்
றிருவடி யடிபெயர்த் தாட
மனதுநெக குருகிப் பெருகிய விழிநீர்
மாறிலா ரீறிலா முனிவோர். (3)

ஆதிசேஷனுகிய பதஞ்சலியும், புலிக்கால் படைத்த வியாக்கிர பாதனும் செய்த தவமகிமையைக்கண்டு பார்வதி நாதா சந்தோஷமடைந்து நிர்மல சொரூபமாய் விசாலம் பொருந்திய கனக சபையிலே அளவில்லாத காட்சி பெற சகஸ்ரகோடி சூரிய ப்ரகாசம் போல் சரீரம் ப்ரகாசிக்கும்படி சிறப்புப் பொருந்திய பாதங்களை எடுத்துத் தூக்கி நடனம் பண்ணினா. அந்த நடன தரிசனங்கண்டு மனங்கசிந்துருகி ஆனந்தக்கண்ணீர் பொழிய நின்று தரிசனம் பண்ணினார்கள் அளவில்லாத பெருமையுடைய பதஞ்சலி வியாக்கிரபாதா முதலாகிய ரிஷிகளும் தேவர்களும்

பதஞ்சலி வியாக்ர பாத னிப்படியெம
பராபர னியற்றுநாட டியத்தைத்
திதம்பெறத் தரிசித் தனரெனக் கேட்டுத்
திருந்திய வசிட்ட மா முனிவ
னீதம்பெறு நடனங் காண்ப தெப்படியென
றெண்ணிநண் ணியநிரா தார
விதம்பெரு விரலை யூன்றிவைத் திருகை
மேலெடுத் தருந்தவம் புரிந்தான. (4)

பதஞ்சலிவியாகரபாதா, பராபர வஸ்துவானவா தில்லை வனத்திலே நடனம்பண்ணினதைத் தரிசனம் பண்ணினாகளென்று கேட்டுத் திருத்தமாகிய தபசினையுடைய வசிஷ்டரானவா அந்த நடன தரிசனம் இனிக் காண்பது எப்படி என்று மனத்திலெண்ணிச் சிதம்பரத்துக்கு வந்து நிராதாரமாக இரண்டு கால் பெருவிரலையும் கீழேயூன்றி இரண்டு கைகளையும் சிரசின்மேல் எடுத்துக் குவித்துக்கொண்டு நின்று அரிதாகிய தபசு பண்ணினார்.

பின்னுமவ் வசிட்டன் றவத்திடைத் தோன்றிப்
பிறைமுடிக் கடவுளு முனியே
நின்னது நினைவுக் கிசையவே திருப்பைஞ்
ஞீலிரத் தும்பலந் தனிலே

யின்னமோர் நடனம் புரிகுவோந் தரிசித்
திடும்படி தருகுவோ முனது
நன்னெறி விரத முடியுமென் றுரைத்து
நாதனும் போதில்வான் மறைந்தான். (5)

அப்பால் தபசு பண்ணின வசிஷ்டரிடத்திலே அர்த்தசந்திர சடாதரரான சிவபெருமான் எழுந்தருளி, உன்னுடைய மனத்தின்படியே யுன்பொருட்டாக ரத்ன சபையாகிய திருப்பைஞ்ஞீலியில் இன்னுமொருதரம் நடனம் செய்வோம் அப்போது நடனதரிசனம் தருகிறோம் உன் விரதமும் நிறைவேற்றித் தருகிறோம் என்று திருவுளம்பற்றி யருளி நாதனாகிய பரமசிவன் ஆகாசத்திலே எழுந்தருளி மறைந்தார்

ஆதியா ருரைத்த நீதியால் வசிட்ட
னற்புத மடைந்துபொற் பிரபைசேர்
சோதிமா மகுட கூடகோ புரங்க
டோரண துவசசிங் கார
வீதியுந் திகழ்பைஞ் ஞீலியா நகரின்
மேவினன் மூவர்கா ணரிய
சோதியா ரிடத்தோர் பாதிசேர் பசிய
தோகையை யோகையாற் றொழுதான். (6)

சகல தேவர்களுக்கும் ஆதிமூர்த்தியான பரமசிவன் கட்டளையிட்டபடி வசிஷ்டர் அற்புதமடைந்து பொற்பிரகாசம் பொருந்திய நவரத்தின கிரீடம் போன்ற மாடகூட கோபுரங்களும் தோரணங்களுடன்கூடிய சிங்காரமான வீதிகளும் விளங்காநின்ற திருப்பைஞ்ஞீலி யென்னும் பட்டணத்திலே வந்து மும்மூர்த்திகளும் காணப்படற்கரிதாகிய ஈசுவரனையும் அவரிடத்திலே அர்த்த சரீரத்திலே பசுந்தோகைபோலும் எழுந்தருளிய ஈசுவரியையும் சந்தோஷத்துடனே நமஸ்கரித்தார்

விமலனீ ணெடுங்க ணன்னைசந் நிதிமுன் விசாலபுட் கர
ணியென் றுளதோ
ரமலமாந் தடத்திற் படிந்துதில் லையிற்செ
யரியமா தவத்தினும் பெரிதே
சமந்திரா தார மென்னமுன் னுரைத்த
தவத்தினை முடித்திருந் தனனால்
மமதைதீர் முனிவன் வசிட்டனுய்ச் சிறந்தான்
விசிட்டமாய்ப் பொலிந்தத தடமே. (7)

பின்னும் விமலையாகிய நீள் நெடுங்கண்ணம்மையாரின் சந்நிதிக்கு முன்பாக விசாலபுஷ்கரணியென்னும் சுத்த பவித்திரமபொருந்திய தீர்த்ததடாகத்திலே தீர்த்தமாடி மூன்றுலே திவலை உணத்தில் அரிதாகிய தபசு செய்ததிலும் பெரிதாகிய நிராதாரமெனனும தபசைச்செய்து முடித்தபடியினலே களங்கமில்லாத தபவசிஷ்டராய் விளங்கினர் வசிஷ்டரிஷி. விசால புஷ்கரணியானது தீர்த்தங்களுக்கெல்லாம் மேன்மையாகிய தீர்த்தமாக விளங்கியது.

வேறு

முடிப்பரிய தவத்தைமுடித் திடலானு மேனைதந்தாய்
முதனு லீன்று
கொடுத்திடுநீ ணெடுங்கணென்னு மொருதாயி னருள்சிறந்து
கொடுத்த லானும்
தடித்திரளைக் கடிந்துநிரை நிரைதழைத்த கிரணரத்ன
சபையின் மீதே
நடித்திடுபல் கோடிமுகி லிடித்ததெனப் பானுநிர்த்த
நடிப்ப தானன். (8)

யாவராலும் செய்து முடிப்பதற்கரிதாகிய தபசுகளைச் செய்தபடியினலும் முன்னளிலே மலையரசன் மனைவியான மேனகை ஈன்ற புத்திரியான நீணெடுங்கண்ணம்மை சிறந்த கிருபை யருளினபடியினலும் மிகுந்த இருளை யகற்றி நிரைநிரையாக விளங்கிய மாணிக்கப் பிரபைபோன்ற ரதன சபையிலே தவழும் பலகோடி மேகங்கள் இடி இடித்த சப்தம்போலும் பரசிவன் வசிஷ்டருக்காக நர்த்தனம் பண்ணத்தொடங்கினர்

எடுத்தபதம் மிதித்தபதம் வீசியகை பேசியகை
யிடக்கை தீக்கை
கொடுத்தபயம் முடித்தபய நிலைமதிகழ் சலைமதியங
கோங்கு தேங்கு
கடுக்கையித முடுக்கையதன் பணிவன் பனிமதிக்கண்
கதிர்க்கண் மீதே
யடுத்தொருக ணிடத்திருகண் காணநின்ற நீணெடுங்கண்
ணமர்ந்து தோன்ற. (9)

தூக்கினபாதமொன்று மிதித்த பாதமொன்று வீசும் கை யொன்று சப்திக்கும் டமரகம் தரித்தகையொன்று மழுவைத் தரித்தகையொன்று அபயஸ்த கை யொன்று வரதஹஸ்தகையொன்று இந்தப்படி சதுர்புஜங்களும் அர்த்தசந்திரனும் கோங்குமலரும் கங்கையும் கொன்றைமாலையும் தரித்த ஜடா

மகுடமும் ஆனைத்தோலுடையும் சர்ப்பாபரணமும் சந்திரசூரியாக்கினியாகிய திருநேத்திரமும் தோன்றும்படி நீள் நெடுங்கண்ணம்மை இரண்டு கண்களும் காண நிர்த்தரூபமானார்.

திடுதிடென விடக்கைடக்கை முளரியள பரிளனவிடைக்
    கிடைக வீரிட்
டிடவுடையின் மணியணிகிண் கிணிகள்கல கலகலென
    விசையின் மேல்கொண்
டடைவுதொடுத் தபிநயத்தோ டதிசயத்தி னடித்திடத்தத்
    தளித்த வோதை
படுகடற்பம் பரமெனத்தின் புவனிசுழன் றிடச்சுழலும்
    பவுரி தானே. (10)

இடது கையில பிடித்த டமரகம் திடுதிடென்று அதிரவும் இடைக்கிடை சலங்கைகளும் மணிகளும் கோர்த்துக் கட்டியிருக்கிற கிண்கிணி பளபளவென ஒளிவீசி கணகண கலீரென்று அதிர்ந்து சப்திக்கவும் பாதத்தை விசையாய் மேலதூக்கி அபிநயத்தோடு அதிசயமாய் நர்த்தனம் பண்ணினார் அந்த சப்தத்தினாலே அண்டங்களெல்லாம் ஒன்றோடொன்று தத்தளிக்க சமுத்திரம் சூழ்ந்த பூமியெல்லாம் பம்பரம்போல் சுழன்றன.

அந்தரதுந் துபியதிர நந்திதரு சுந்தரமத் தளங்க ளார்ப்பத்
தந்திரமிகு வாணர்குட முழவிரட்டச துர்முகன்கைத் தாளந் தாக்க
விந்திரன்வந் தனைசெயவித் தியாதரர்கின் னரர்வீணை யிசைகள் பாட
மந்தரமுனி வரர்துதிக்கச் சிந்தினர்விண் ணோர்கண்மலர் மழைக
    [டானே.

இப்படி நடனம் பண்ணுகிறபோது ஆகாசதுந்துபி அதிர்ந்தது நந்திகேச்வரன் கையிலிருக்கிற மத்தளத்தொனி எழும்பியது. பஞ்சவாத்தியங்களும் முழங்கின. பிரமாவின் கைத்தாளம் தொனித்தது தேவேந்திரன் வந்தனம் பண்ணினான் கின்னரர், கிம்புருஷர் வீணைகின்னரி மீட்டினார். மந்திரகர்த்தரான ரிஷிகள் ஸ்தோத்திரம் பண்ணினார்கள். முப்பத்துமூகோடி தேவர்களும புஷ்பமாரி பொழிந்தனர்.

எண்டிசைமண் டலங்களுநின் றதிரரத்ன சபாபதிசெ
    யினிய நாட்டியங்
கண்டதொரு வசிட்டமுனி பண்டிருந்த பிரபஞ்சதுன்பக்
    கவலை யெல்லாம்

விண்டனனெனக் குடைந்துருகிப் பாடினனா டினன்மகிழ்ச்சி
யிருந்தா னென்மே
லொண்டொடிபங் கனுமிருந்த மமர்ந்துமற்றோர் வசனமவற்
குரைப்ப தானான். (12)

அஷ்டதிசைகளும் மண்டலங்களும் அதிர நதன சபாபதி செய்த நடனதரிசனத்தைக்கண்ட வசிஷ்டரிஷியானவர், முன்னிருந்த பிரபஞ்ச மாயை என்னும் துன்பமான பனிக்கவலையைவிட்டுச் சரீர புளகாங்கித மடைந்து, மனம் கசிந்து வேதங்களினாலே ஸ்தோத்திரம் பண்ணி மிகுந்த மகிழ்ச்சியினாலே ஆனந்தக் கூத்தாடினார் அப்படி ஆனந்தமடைந்த வசிஷ்டரைப்பார்த்துப் பார்வதி பாகரானவர், ரத்னசபையிலே நடனம் பண்ணுவது விட்டு ஒரு வசனம் திருவுளம் பற்றவார்

அயனருளாலுக் கிரமோனப்பர் வதிதீர்த்த மிதனைவியந் தாடி னோர்க்கும்
பயனுறவுட் கொண்டவர்க்குங் கண்டவர்க்குங் கண்டுபணிந் தணிந்த [பேர்க்குந்
துயரமில்லை நலிவுதரு பிணிகளகன் றிடுந்துரித தோஷந் தீரும்
நயமிகுசெல் வமுமகவுமெய்க் காமிலைசை யமுந்தருமென் றருளி னானே. ()

பிரமாவின் குமாரரான வசிஷ்டனே பார்வதி யுண்டாக்கின தீர்த்தமான விசால புஷ்கரணியைக்கண்டு சந்தோஷமாய்க் கொண்டாடின பேருக்கும் ஒரு திவலை ஆசமனம்பண்ணின பேருக்கும் கண்டபேருக்கும் கண்டு பணிந்திட்ட பேருக்கும் ஒரு துயரமுமுண்டாகாது பிணியுமவர்களைவிட்டு நலிவாகிய பிணிகளும் நீங்கும். பஞ்ச மகாபாதகங்களும் தீரும் பின்னும் மகவும் நன்மையாகி செல்வமும் சற்புத்திரர்களும் ராஜரீகமும் விஜயமும் மேன்மேலும் உண்டாகும்

நிச்சயமித் தடங்கலங்கி னுளைசேறாய் கலங்குமிதின்
நிறைவு தாழ்ந்தால்
நச்சுறுபல் பண்டமுங்குன் றிடுமழைவா ராதுபைங்கூழ்
நலிந்து சோரும்
பச்சுறுசை வலமபடர்ந்தால் வெவ்வலிமன் னவர்க்குமன்னர்
படைப்போ ராகும்
மச்சமுதித் திசையிலச்ச முண்டுமன்ன வர்க்குமுண்டு
மரணந் தானே. (14)

வசிஷ்டரே நிச்சயமாய்ச்சொல்லுகிறோம் இந்ததீர்த்தம் களங்கமில்லாதது. இது தெளிவு மாறிக் கலங்குமே யானால் உலகமெல்லாம் நிலைகலங்கும் நிறைந்திருக்கிறது வற்றிக் குறைந்தால் உலகங்களில் விற்கிற பண்ட பதார்த்தங்

களும் குறைந்து மழை யில்லாமல் பயிர்களெல்லாம் வாடிச் சோரும். பசுமை யான பாசம் படர்ந்தால் பராக்கிரம சாலியாகிய ராஜாக்கள் ஒருவருக்கொருவர் யுத்தம் புரிவர். இந்தத் தீர்த்தத்தில் மச்சம் எந்தத் திசையில் உதித்ததோ அந்தத் திசைக்கு பயமுண்டாகும். ராஜாக்களுக்கும் மரண முண்டாகும்.

மாட்சிமைசே ரினியலிங்க வடிவமுதித் திடக்கதலி
 வனமுண் டாகி
யாட்சிபெறு நமதுவிசா லாக்ஷியுதித் திடத்தீர்த்த
 மதுவுண் டான
சூழ்ச்சியிதின் மகிமையரி யயற்குந்தெரி தற்கரிதென்
 றுரைத்தான் மோக்ஷ
காட்சிதனில் வசிட்டனுள்ளம் நிறைந்தானக் கணமறைந்தான்
 கவுரி பாகன். (15)

அளவில்லாத மகிழ்ச்சியுடனே ஈசுவரி காணும்படி சிவலிங்க ரூபம் உதித்தது. அதற்குச் சார்பாக கதலிவனமுண்டாயிற்று "ஆட்சியாக எழுந்தருளின விசாலாக்ஷியம்மன் உண்டாக்கின விசாலபுஷ்கரணியாகிய தீர்த்தத்தினுடைய மகிமை பிரம்மா விஷ்ணு முதலிய பேர்களுக்கும் தெரியாது. அரிதாயிருக்கும்" என்று பரமசிவன் திருவுளம் பற்றினது கேட்ட வசிஷ்டரிஷியானவர் காட்சி யென்னும் மோக்ஷத்திலே மனது பூரித்திருந்தார். அப்படியிருக்க அந்த க்ஷணமே ஆகாசத்திலே மறைந்தார் பார்வதி பாகனுன ரதன சபாபதி

சிவனடனந் தரிசனைசெய் மாலயனிந் த்ராதியர்கள்
 தேவ ராதி
தவமுனிவர் பலருமன மகிழ்விறைடு நிமலரத்தின
 சபையும் போற்றி
எவருமுய்ய நடம்புரியித் தலமேலைச் சிதம்பரமென்
 றிறைஞ்சி யன்னோர்
புவனதலத் தடையவசிட் டனைப்பணிந்தும் விடைகொண்டும்
 புகழ்ந்தும் போனர். (16)

இரத்தின சபையினிடமாகப் பரமசிவனுடைய நடனம் தரிசிக்க வந்த பிர்மா விஷ்ணு தேவேந்திரன், தேவர்கள், முனிவர்கள் முதலான பேர்களும் மன மகிழ்ச்சியுடன் ரத்தின சபையைத் தொழுது யாவரும் பிழைக்கும் பொருட்டாக இந்த ஸ்தானத்திலே நடனம் பண்ணினபடியினலே இந்த ஸ்தலம் மேலைச் சிதம்பரமென்று புகழ்ந்து வசிஷ்டரை வணங்கி அவரவரிடத்துக்குப் போனர்கள்.

பெருந்தானந் தனிற்சென்று ரனையவர்தன் பணிவிடைக்குப்
பெறுவ தேதுந்
தருந்தான மானபல சீடரொடு மிருவினையாந்
தறுக ணைக்கு
மருந்தான தடமூழ்கி சிவனையர்ச்சித் தகலாத
வாச மாகி
யிருந்தானவ் வசிட்டன்வெற்றி தருந்தானைக் கிறைவனென்
றியம்பி னனே. (17)

சகல தேவர்களும் அவரவர்கள் ஆச்சிரமத்துக்கு எழுந்தருளினார்கள் நன்மையான பணிவிடைகள் செய்வதற்கு யோக்கியமான பல பல சிஷர்களோடுங்கூடி நல்வினை தீவினையென்னும் வியாதிக்கு ஔஷதமாகிய விசால புஷ்கரணி தீர்த்தத்திலே ஸ்நாநம் பண்ணிப் பரமசிவனைப் பூஜித்து எத்தேச காலமும் வசிஷ்ட ரிஷி வாசமாயிருந்தார் வெற்றி பொருந்திய சேனு சமுத்திரம் படைத்த சந்திரபீட சோழராஜனேயென்று அகஸ்தியர் திருவுளம் பற்றினார்

நாட்டியஞ்செ யிக்கதையைத் கேட்டமுட னெழுதினவர்
நவின்ற பேர்கள்
கேட்டவர்கட் காயுவுஞ்செல வமுநகிடைக்கு மவர்களுக்குக்
கிடையா திலலை
வேட்டதெல்லாம் பெறுவரிட்ட தேவர்விரும் புவர்வினைசய
மென்மே லோங்கும்
வாட்டியதுன் பங்களில்லை மறுமையினு மிலைநிரைய
வாதை தானே. (18)

அகஸ்திய மகாரிஷி சொல்வார். சிவ பெருமானின் நடன மகிமையைக கூறும் இந்தக் கதையின் பேரிலே இன்பம வைத்து எழுதினபேரும் பொருளுடனே படித்தபேரும் காதினாலே கேட்டபேரும, தீர்க்காயுளும், குபேரச செல்வமும. அடைவார்கள். அவர்களுக்குக் கிட்டாத வஸ்து ஒன்றுமில்லை. குணசாலியான பெண்சாதியையும், சற்புத்திரனையும் அடைவார்கள. இவர்களுக்கு இஷ்டமான தேவதைகளும் சந்தோஷமாயிருப்பார்கள. விஷய வசீகரமென்மேலும் வளர்ந்துவரும, வருத்தம் துன்பமும அணுகாது. இப்படி சுகமாக பூலோகத்திலேயிருந்து மறுமையிலே நரக வேதனைப்படாமல் சிவபெருமானுடைய பாதாரவிந்த நிழலிலே வாசமாயிருப்பார்கள்.

நீடரம்பை வனந்தழைக்கத் தழைக்கும்ரத்ன சபைவருபைஞ்
ஞீலி நாத
னாடல்கண்ட வசிட்டமுனி சரித்திரஞ்சந் திரபீடற்
கருளிச் செய்தான்
றோடவிழ்பூந் தெரியன்மக பதியுமதி குலபதியுந்
துதித்துக் கேட்பக்
கூடலிலவந் தறுபத்து நாலுதிரு விளையாடல்
கூறி னானே.

நீண்டு வளர்ந்த கதலி வனம் தழைக்கும்படி, பிரகாசிக்கும் ரத்தின சபையில் வாஸனான திருப்பைஞ்ஞீலி நாதர் நடனத் தரிசனங் கண்ட வசிஷ்டர் சரித்திரத்தைச் சந்திரபீட சோழராஜனுக்குத் திருவுளம்பற்றினார். பாரிஜாத புஷ்ப மாலையணிந்த தேவேந்திரனும், சந்திரகுல திலகனான பாண்டியராஜனும் ஸ்தோத்திரம்பண்ணிக் கேட்கத்தக்கதாக மதுரையில் எழுந்தருளி அறுபத்திநாலு திருவிளையாடல்கள் செய்த கதையைத் திருவுளம்பற்றினார் அகஸ்தியர்.

---

## எட்டாவது தேவேந்திரன் பூஜைசெய்த மகிமை

தழைக்கும் ரத்ன சபைமகிமை கேட்டு ஒரு நரபதியாச்
சரிய மெய்தி
கழைச்சிலைமன் மதனையெரித் தருணீலி வனநாதர்
காதை கேட்டு
விளைத்தபெரு வாஞ்சைமிக்குத் தரியதொரு கதைவிரித்து
விளம்புகென்னக்
குழைத்தகமுறுநூ லகத்தியனு மிகுத்தசிவ சரிதையொன்று
கூறுகின்றான். (1)

அதிகப் பிரகாசம்பொருந்திய ரத்ன சபையிலே சிவபெருமான் நடனம் பண்ணின மகத்துவத்தைக் கேட்ட ஏகசக்ராதிபதியாகிய சந்திரபீட சோழராஜன் சந்தோஷமடைந்து வாஞ்சைமிகுந்து கருப்பு வில்லையுடைய மன்மதனை எரித்த நீலிவனநாதருடைய சரித்திரத்திலே அரியதொரு கதை நன்றாய விஸ்தாரமாகத் திருவுளம்பற்றவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அந்தப்படி முன்னூலாகிய வேத சாஸ்திரங்களெல்லாம் ஆராய்ந்தறிந்த அகஸ்தியரானவர் சிவசரிதைகளுள்ளாக அதிக மகத்துவமிகுந்த ஆச்சரியமானதொரு கதை கூறலாயினார்.

மாகவா னுலகுபுரந் திமையவர்கட் கதிபனென
வளம்பெற் றோங்கும்
பாகசா தனனிருதப் பகைவரையிந் திரதனுவிற்
பகழி யாலே
நோகமாய்த் தனனிருந்தான் றெரிந்தளவு வடிவுகண்டு
நோக் கொணாத
தேகராக் கதரனந்த ரிமையவரை யலைத்திடுக்கண்
செய்தா ரன்றே. (2)

தெய்வ லோகத்தில் முப்பத்து முககோடி தேவர்களுக்கும் அதிபதியாய் விளங்கும் தேவேந்திரன் தனக்குப் பகைவரான ராக்ஷஸர்களையெல்லாம இந்திர வில்லிலே பாணந் தொடுத்து ஸம்ஹாரம் பண்ணினான். இவன் கையினாலே மடிந்தவர் போக பின்னும் மலை, தீவு, வனங்களிலே யிருந்த ராக்ஷஸர்கள் அநேகம பேர்கள் ஒன்று கூடி வந்து தெய்வ லோகத்திலே தேவர்கள் எல்லாரையும துன்பப்படுத்தினார்கள்.

அவ்வரக்க ருடனெதிர்த்த திரதனுவில் விடுகணைக
ளசனி போலக்
கவ்வியவெங் கனலொழிந்து வருதல்கண்டு நிருதரிந்த
காண்டீ பத்தை
வெவ்வமுறப் பறித்தனர்கண் முறித்தனர்வெங் கணையை விழுங்
கினர்கள் போர்செய
தெவ்வருக்கஞ் சினன்மகவான் புறங்கொடுத்தோ டினனிழந்தான்
றேயந் தானே. (3)

அப்படி வந்த ராக்ஷஸர்களுடனே எதிர்த்த தேவேந்திரன் தன்னுடைய வில்லிலே தொடுத்துவிட்ட பாணங்கள் இடியுடனே அக்னியானது பிரவேசித்து வருவதுபோல வந்தன. அவைகளைக் கண்ட ராக்ஷஸர்கள் கோபங் கொண்டு தேவேந்திரன் கையிலிருந்த சண்டபமாகிய வில்லை வன்மையாய்ப் பிடுங்கி முறித்து விட்டார்கள். வந்த பாணங்களையும் விழுங்கினார்கள்; பின்னும் போர் செய்யத்தலைப்பட்டார்கள். ஆனபடியினாலே தனக்கு சத்ருவாகிய ராக்ஷஸர்களின் சண்டைக்குப் பயந்து தேவேந்திரன் புறங்காட்டித் தெய்வ லோகத்தைவிட்டு ஓடிப்போனான்.

நாடிழந்த மகபதிமற் றெழுமுனிவ ரிடத்தில் வந்தா
னவிந்த வாழ்வால்

வாடியதும் புகன்றனனங் கவைகேட்டன் பினாகி
    வானந் தோற்றுக்
கோடிமனந் தளர்ந்தபுரந் தரற்குவச்சி ராயுதவாள்
    கொடுக்கு மாறு
தேடிமுரா ரியைநினைத்தார் வந்தனனந் தரத்தவர்கள
    செலவம் போல்வான். (4)

தெய்வலோக மிழந்து ஓடிப்போன தேவேந்திரன் சப்த ரிஷிகளிடத்திலே வந்துதான ராக்ஷதாகளுடைய கையிலே வாதைப்பட்ட தாழ்வும் மனக்கிலேசமும் சொன்னான். அந்த வாாத்தை கேட்டு அவாகளிரக்கமுற்று தெய்வலோகமு மிழநது மனங்கோணித தளாச்சியுற்ற தேவேந்திரனுக்கு வஜ்ராயுதம் கொடுக்கும்படி எண்ணி விஷ்ணுவை மனதிலே நினைததாாகள. அநதாாகளுக்குச் செலவம் போனநவா ஆகாசரூபமாய அவ்விடததிலே வந்தார்.

அயிராணி பதிக்குறுதி யாகியவச சிராபடையுண்
    டாகருஞ சூழ்ச்சி
வெயிலவீசுஞ சுடர்ததிகிரிப படையோனே நீ புகல
    வேண்டு மென்னப
புயனீல நிறததவனுந ததீசியெனப பெயாபடைதத
    புனித யோகி
வயிரமுது கொணாநதமைபபி ரொனறுரைதது விணணகததே
    மறைநதா னன்றே. (5)

இநதிராணிககு நாயகனான தேவேநதிரன உறுதியாகிய வஜராயுத மடையத தகக சூழ்ச்சியை, சூரியபபிரகாசம பொருநதிய சஙகு சககராந தரித்த பிரபுவே நீா சொலலவேணடு மெனறு சபதரிஷிகள கேட்க, நீலமேக வாண ரானவா திருவுளமபற்றுவாா. ததீசி யெனனும பெயா படைதத யோகீசுவா ருடைய முதுகிலிருநது வயிரமபோன்ற எலுமபைக கொணாநது வஜ்ராயுதமாகச செய்வதே உபாயமெனறு திருவுளமபறறி ஆகாசத்திலே மறைநதாா.

மோனமுனி வரன்முதுகி லென்புகவர் வதுமுனிவர்
    மொழிநதார் காம
தேனுவினு லாகுமெனத தேனுவையிக் கருமமுடித
    திடுவா யென்று
வானவர்கோன் மொழிநதவுரை தேனுவுங்கேட் டயர்நததயன்
    மால்புத் தேளி

ஞானவரு நின்மலன்மேன் மன்மதனைச் செலச்சொலவே
ளயர்ந்த தேபோல் (6)

மௌன சமாதியடைந்திருக்கின்ற தக்ஷிணாமூர்த்தியினுடைய முதுகெலும்பைக் கொண்டு வரும்படி சப்தரிஷிகளும் ஆலோசித்துச்சொலலவே தேவேந்திரன் தேனுவைப்பார்த்து "நீ இக் காரியத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும்" என்று சொன்னான். முன்னாலே பிரம்ம விஷ்ணு முதலான தேவாகளெல்லாரும் கூடி நிர்மலராகிய பரமசிவனுடைய யோகத்தைக் கலைக்கும்படி மன்மதனுக்குச் சொன்னபோது மன்மதன் எப்படி சரீரம் வருந்தித் துயரமடைந்தானோ அதுபோல் காமதேனுவும் இந்திரன் கூறக்கேட்டதும சரீரம் தளர்ந்து மனம மயங்கியது.

கருமமா னவைதெரிந்து செய்யுமவகை தவிரும்வகை
கணிகருளு செய்திக
குரிமையோர் நீஙகளுஙகள பணிவிடைகள தலைமேற கொண்
டுவநத யாமோ
தருமதே வதைகருணைக குரியதே வதையரியித
தகையோ ரெய்த
வருமிதே கருமமென்றுற் றடுப்பவரா ரடுக்குமென
வகுததி டாதே. (7)

பின்னும காமதேனுவானது சொல்லும—இநதக் காரியம செயயததககது. இநதக காரியம் செய்யததகாதது என்று அளவுபடுத்திச சொலலுகிறதறகுத தகுதியானவர் நீஙகளேயாவீா. உஙகள ஏவலைத் தலையிலே கொணடு செய்துவரும் தருமதேவதை நான. கிருபையுடன் நமமை இரக்ஷிப்பவா மகாவிஷ்ணு. இப்படி யிருக்க நீங்கள் தானே இது செய்கிற காரியமென்று சொன்னீர்களானால எவரும் ஆம் என்று சொலலி ஒப்புக்கொள்ள வேணடுமே யல்லாமல், ஆகாதென்று தடுத்துசசொலலுகிற பேர்களுமுணடோ வென்று சொன்னது.

இத்திறங்கூ றியகாம தேனுவைத்தே வருமுனிவ
ரேனை யோரும
புத்தியுறு கிளர்புகன்று விடுத்தனர்வக் தடுததுளதப்
புனித ஞான
வித்துறைபொற் பொருப்பதனி னிருவிகற்ப சமாதி யிட்டை
மௌனவு ருது
வைத்திடுகற் றம்பமென விருப்பான்மெய் தனைமோர்ந்து
வருடு நாவால் (8)

இந்தப்பிரகாரம் சொன்ன காமதேனுவைத் தேவர், முனிவர், முதலியோர் பார்த்து நீ நந்தி மகரிஷியினிடம்போய் வஜ்ராயுதத்துக்கானது கொண்டுவரா விட்டால், தெய்வலோகம் நிலையாதென்று உறுதியாகிய புத்திகளைப்போதித்தது ததீசியினுடைய முது கெலும்பு கொண்டு வரும்படி சொல்லியனுப்பினார்கள். அப்படியே ததீசியினிடத்திலே வந்தடுத்து நினறுகொண்டு ஞானவிதை போல மகாமேருவிலே யுதித்துத்தோன்றி நிர்விகற்ப மென்னும சமாதி நிட்டையில் மனாந்தளராமல் பூமியிலே நிறுத்தியிருக்கிற கல் ஸ்தம்பம்போல் அசையாமலிருக் கிற அந்தச் சிவயோகியினுடைய சரீரத்தை மூக்கினாலே முகர்ந்து நாவினாலே தடவியது

நாவினால் வருடுதல்சற் றறிந்தான்மா தவன்பசுக்க
ளுமீ துற்றாற்
பாவமோ சனமெனக்கொண் டிருந்தனன்பற் றிடமுதுகென்
பதனைத் தேவர்
கோவுமிகப் பசித்ததந்த இனுகலமென் றனன்றாருமபாக்
குறிப்பா ரன்றித
தாவில்சிவ ஞானியர்தந் தனுவையொரு பொருளாகத்
தானெண் ணாரே. (9)

இப்படி காமதேனுவானது நாவினாலே சரீரத்தை வருடுவதை அறிந்த முனிவர் பசுவான தாமதேவதை நம்மிடத்திலே வந்து நக்குகிறது. இதனால் பாபங்களெல்லாம விமோசனமாமெனறு எணணியிருந்தார். அப்படி யிருக்கும் வேளையில அது முதுகெலும்பைப் பலவினாலேபறறி இழுத்தது அதைகண்ட முனிவர் தேவப் பசுவானது மிகுந்த பசியினால் அருந்துவது மகா நன்மை யென் றெணணிமௌனமாயிருந்தார் சிவஞானயோகியான பெரியோர்கள் தங்களுடைய தேகத்தை ஒரு திரணமாக பாவனை பண்ணுவார்களே யலலாமல நிசசயமாகிய ஒரு பொருளாகப் பாவியார்கள்.

அடுத்துமுது கென்பதனைக் கடித்திழுத்த போதினுஞ்சற்
றயர்வில் லாமல
வடித்திடுசித் திரத்தினைப்போலி ருந்தனென் பிணைக்கவர்ந்த
வானோர் தேனு
வெடுத்துநடந் ததுகண்டான் மீளென்றான் வரவெதுசொல்
லென்றான் சொல்லி
முடித்ததுபூ சுரர்சுரர்விண் மீதரியு மரியுநவில்
முறைமை தானே. (10)

அப்படி காமதேனு முதுகெலும்பைக் கடித்து இழுக்கிறபோது, முனிவர் சற்றுமசையாமல் எழுதிவைத்த சித்திரம்போலிருந்தார். அது எதனாலேயென்றால் நம்முடைய சரீரத்தைப் புசிககட்டு மென்கிற சந்தோஷத்தினாலேயேயாம். அப்படி புசியாமல் காமதேனுவானது வாயிலே கவ்விக்கொண்டு நடப்பதை யறிந்து, புசித்தால் பலனென்றிருந்தோமோ கவ்விக்கொண்டு போகக் காரண மென்ன வென்று யோசனை பண்ணிக் காமதேனுவை இங்கே வா என்றழைத்து, நீ வந்தவாலாறு சொல்லென்று கேட்க, அது ஒன்றும் ஒளியாமல் சப்தரிஷிகளும், தேவதைகளும், தேவேந்திரனும், மகாவிஷ்ணுவும், வஜ்ஜிராயுதத் தின் நிமித்தம் தன்னுடனே சொன்னதும் அதற்குத தான் பதில் சொன்னதும் விவரமாகச் சொன்னது.

கேள்வியுற்ற ததீசியுரைத் தருள்வானன் னவர்மொழி நீ
கேட்டுச் செய்த
மூள்வினையா லடையுமுனைப் பிரமகத்தி கவர்கதிடுநம்
முதுகென் பாற்செய்
வாள்வயிரப் படையொளிகுன் றிடுமகவான் வலி குறைந்து
மயக்கங் கூர்வான்
வேள்விமுனி வரரிழப்பார் நீட்டியகை மாலிழப்பான்
வியாத னகி. (11)

இப்படி காமதேனு சொல்லக்கேட்ட ததீசி ரிஷி, நீ அவர்கள் பேசசைக் கேட்டு விதியினாலே இக்காரியம் செய்தாய் அந்தப் பாபத்தினாலே உனக்கு பிரம ஹத்தி தோஷமுண்டாகும். நமமுடைய முதுகெலும்பினாலே உண்டாக்கப்படும் வஜ்ராயுதமானது பிரகாசமில்லாமல போகும். தேவேந்திரன் பல மில்லாமல் போய் மயங்கிப்போவான். சப்தரிஷிகள் பண்ணுகிற யாகம் நிஷ்பலமாகப் போகும். விஷ்ணுவானவர் வியாசனாகப் பிறந்து நீட்டின கை இழந்து போவா ரென்று மகாகோபத்துடனே சபித்தார்.

வன்புசொன்ன ததீசிமுனி சாபமுங்கோ பமுந்தனது
வாயி லேற்ற
வென்புமனத் துன்பமுங்கொண் டேகியது தேனுவிண்ணோ
ரெதிரே வந்தார்
அன்பினிறைஞ் சினர்புகழ்ந்தவ் வென்பைமய னல்வயிர
மாக்கித் தேக்கு
மின்பொலிசெஞ் சுடர்வாளுக் கிந்திரனர்ச் சனையுநிறை
வேற்றி னனே. (12)

இப்படி ததீசி மகரிஷி கோபத்துடனே சபித்த சாபத்துடன் தன்னுடைய வாயிலே அவருடைய முதுகெலும்பைக் கவ்விக்கொண்டு வந்தது தேனு. அந்த எலும்பைத தேவர்கள் வாங்கித் தேவ தச்சனைக்கொண்டு வஜ்ராயுதமாகச் செய்து தேவேந்திரன் கையிலே கொடுக்க அவன் மின்போலும் பிரகாசிக்க வேண்டுமென்று தியானித்து அந்த வஜ்ராயுதத்துக்குப் பூஜை நைவேத்தியம் நிறைவேற்றினன்.

மாற்றரிய ததீசியுந்தன் வடிவுகுறைந்ததுகுறையா
வடிவமாகித்
தோற்றுமவனை நினைத்தானப் படிவளர்ந்த தகிலமெல்லாந்
துருபமதாகச்
சாற்றிடுவார் சிறுதுரும்பு தனிலகில வகிலாண்டந்
தானுண் டாகத
தேற்றிடுவார்க் கொருதனுவிற் குறைதவிர்ப்ப ததிசயமோ
தெரிக்குங் காலே (13)

மகாமேருகிரியிலே தபசு பண்ணுகிற ததீசி முனி காமதேனுவினுலே குறைக்கப்பட்ட தன்னுடைய ரூபம குறையாமலிருக்கும்படி நியமனம் பண்ணினர் அந்தப்படியே அவருடைய தேகம வளாநதது. அது எப்படியெனில லோகங்களை எல்லாம துரும்பாகச் சபித்துத் திருப்பவும அந்தத் துரும்பிலே அகிலாண்டங்களெல்லாம் தோன்றும்படி யுண்டாக்க வலலவரான போகளுக்குத் தங்களுடைய சரீரததிலே குறைந்ததை மறுபடி உண்டாக்கிக்கொளவது பாக்குமிடத்தில் ஓா அதிசயமோ

அன்னவனுரு சபித்ததொரு சாபமவ ரவர்தமைவந
தடுத்தவ் வாறு
சொன்னபடி யேமுடிந்த துன்னதயா மேருகிரி
துளங்கி னும்
பன்னருமா மறைவசனந் தவறினுமா தவதேோர்களா
பகர்ந்த வார்த்தை
பின்னமுறப் பலித்திடுங்கற் பாந்தவுகாந் தஙகளுக்கும்
பிசகு ருதே. (14)

அப்படி மகத்துவம் பொருந்திய ததீசி முனிவர் சபித்த பிரகாரம் காமதேனுவுக்கும், வஜ்ராயுதத்துக்கும், சப்தரிஷிகளுக்கும், விஷ்ணுவுக்கும தப்பாமல சாபம் வந்து சூழ்ந்தது. மகமேருகிரி நிலைவிட்டுப் பெயர்ந்தாலும வேத வசனம் தவறினலும் மகா பெரியோர்கள் சொன்ன வார்த்தை தவருமல பலிதமாகும்.

கற்பாந்த காலங்களிலேயும் சராசரங்களெல்லாம் நிலைகுலையும்படி வரப்பட்ட யுகாந்த ஜலப்பிரளயங்களிலும் இது தப்புவதில்லை என்றார்

துராந்தகொடுஞ் சாபத்தான் மயங்கினன்வச் சிரஞ்சோதி
சொலித்திடாமற்
புரந்தரனு மனதுமிகத் தளர்ந்தனன்பைஞ் ஞீலிரத்னப்
பொதுவின் மீதே
நரந்தநறுங் குழல்காணும் படிக்கினிய நடம்புரிமெய்ஞ்
ஞானச் சோதி
வரந்தருமா றறிந்தநிலத் துயர்கயிலை நிகர்தரள
மலையைச் சார்ந்தான். (15)

விடாமல் ததீசி முனிவருடைய சாபந்தொடர்ந்தபடியினாலே வஜ்ராயுதம் பிரகாசமில்லாதிருந்ததைத் தேவேந்திரன் அறிந்து மனதிலே அதிகத் தளர்ச்சியுற்றுத் திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்திலே ரத்ன சபையிலே தேன் துளிதருங்கொண்டிருக்கின்ற புஷ்பங்களையணிந்த அளக பாரத்தினையுடைய நெடுங்கண்ணம்மை காணும்படி நடனஞ் செய்கின்ற ரதன சபாபதி வரப்பிரஸாதம் கொடுப்பதறிந்து பூலோகத்திலே தென் கைலாசமான சுவேதகிரியிலே வந்து சேர்ந்தான.

பெருவானத் தமர்கற்ப தருமலருந் தலைப்பதியைப்
பிரிந்திடாத
வொருவானத் தமுதமுநங்கொண்டதிகார வல்லபனை
யுமைநகரு நேயந்
தருவானை யாரணிய விடங்கலிங்க நாயகனைச்
சரணென் பார்முன்
வருவானைப் போற்றிவட திருவானைக் காவானை
வணங்கினானே (16)

பெரிதாகிய தெய்வலோகத்திலிருக்கின்ற பாரிசாதமலரும் பூரணசந்திரனிடத்திலிருந்து வருகின்ற கிரணத்தின் குளிர்ச்சி போன்ற தேவா அமிருதமுங் கொண்டுவந்து அதிகார வல்லபனைப் பாரவதிக்குப் பிராண நேசம் தருகின்ற ஆரணியவிடங்கலிங்கநாயகனை, சரணாகதி யென்று வந்தடைந்த பேர்கள் முன்னே எழுந்தருளி வரப் பட்டவனை பூஜை பண்ணிப் பின்னுமிந்தஸ்லத்துக்கு வடபாரிசமாயிருக்கின்ற வட திருவானைக்காவென்றநாமதேயம் பூண்ட ஸ்தலத்திலே வாஸமானவனையும் பூஜித்து வணங்கினான் தேவேந்திரன்.

தனது திசை யிருந்துவட திருவானைக் காவிலுகந்
தவனைப் பூசித்
தினியதிருப் பைஞ்ஞீலி நாதரடிப் பூசையுஞ்செய்
திருக்கு நாளிற்
றினகரர்போ லொளியுமிக்க பூரணசுந் தரமுமுற்ற
செம்பொன் மேரு
வெனவுயர்ந்த திருவடிவு முமையிடமு மாகிநின்று
ரெவர்க்கு மேலார். (17)

இந்திரன் தனது திசையாகிய கிழக்குத் திக்கிலே யிருந்து தபசு பண்ணிக்கொண்டு வடதிருவானைக்காவிலே வாஸமான சிவனையும் திருப்பைஞ்ஞீலியிலே வாஸமான சிவனையும் பூஜை பண்ணுகிற வேளையிலே அனந்த கோடி சூரியப் பிரகாசம் போலும் அனந்த பரிபூரணமான கிருபை பொருந்திய சௌந்தரியத் தோடுங்கூடி மகமேருகிரி எழும்பினதுபோல உயர்ந்த விசுவரூபத்துடனே இடது பாகத்தில் பார்வதி தேவியார் விளங்க எழுந்தருளிவந்து நின்றார் சகல தேவர்களுக்கும் மேலான தேவாதி தேவருமான பரமசிவன

வாக்கினால் வழுத்தரிய சிவனாரைக் கண்டெழுந்து
மலர்க்கண்ணா
னோக்கினா னானந்தக் கண்ணீர்துளைத் தொண்டைபெருந்
தோக்க மார்த்
தேக்கினான் மனத்தடுத்த தொண்டர்கள
தடிக்கடிமை செய்கு வாரோ
லாக்கினா னெனவுருகிப் பரவினா னவரைக் கண்டலா
தடக்கி னானே. (18)

வாயினாலே ஸ்தோத்திரம் செய்கிறதற்கு அரிய பரமசிவனை ஆயிரங் கண்ணிலும் தெரிந்து ஆனந்தக் கண்ணீர் பெருகநின்று என்னைத் தடுத்தாட்கொண்டு தம்முடைய பாதாரவிந்தத்துக்கு அடிமை செய்கிறவர்களைப்போல என்னையும் ஆட்கொண்டாரென்று கனிவாய் ஸ்தோத்திரம் பண்ணினான் முன்னாளிலே பறந்துதிரிந்த பர்வதங்களை நிலையா யிருக்கும்படி சிறகரிந்த தேவேந்திரன்

கோளிழைத்த மொழிபுகல்வ தறியாமல் முராரியொடு
குலிச நாம
வாளினுக்கே துபாயமென்று கேட்டவன்சொற் படிபசுவான்
மவுனி மீது

தாழ்வுவைத்த பிரமகத்தி நலிந்ததனால் மெலிந்தனென்வந்
தயன்மால் மிக்கோர்
சூழுமுத்து மலைக் கிறைவா வெனையீட்சி யெனஞானச
சோதி சொல்வார். (19)

பின்னும் சொல்வன தேவேந்திரன். கோள் சொல்வாரென்பதறியாமல் விஷ்ணுவிடத்திலே வஜ்ராயுத முண்டாகுவதற்கு உபாயமென்னவென்று கேட்க அவர் சொற்படி காமதேனுவினாலே மௌனம் பொருந்திய ததீசி மக ரிஷி சரீரத்துக்குத் தாழ்வு வரும்படி அடியேன் செய்வித்த தனாசசியினாலே, பிரமஹத்தி பிடித்துக்கொண்டு அதினாலிளைத்து வந்தேன் பிரமா விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லாம் சூழ்ந்திருக்கின்ற முத்துமலைக்குக் கர்த்தரான பரமசிவனே என்னை இரக்ஷிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்கிறபோது ஞானோதயமான மாணிக்கவண்ணம் படைத்த ஈசுவரன் திருவுளம் பற்றுவார்

மகபதியே ததீசியுனைச் சபித்ததகன் றிடுமுனது
வைர வாளுந்
தகதகெனச் சொலித்திடுநின் தெவ்வரைச்செயித்துன பதிபுகுந்து
தழைத்து வாழ்கென்
றகமகிழ்வி னெடுவிடைதந் திறைவர்மறைந் தனர்புடைசூழ்ந்
தமரர் போற்ற
தகைமைபெறு வளைதிக முரசுசெலுத் தினன்ககனத்
தலைவன் றானே. (20)

தேவேந்திரனே, ததீசி ரிஷி கோபத்தினாலே உன்னைச் சபித்த சாபம் நீங்கும். உன்னுடைய வஜ்ராயுதமும் நல்ல பிரகாசமடையும். சத்துருவான ராக்ஷஸனையும் வென்று நீ உன்னுடைய பட்டணத்திலே எப்போதும்போல செழிப்பாய் வாழ்வாய் என்று சந்தோஷத்துடனே வரந்தந்து ஆகாசத்திலே பரமசிவன் மறைவாய் எழுந்தருளினார் பின் பக்கத்திலே முப்பத்து முக்கோடி தேவர்களும் வணங்கும்படி அதிக வளமை திகழ ராஜரீகம் செலுத்தினன் தேவலோகத்துக்கெல்லாம் அதிபதியான தேவேந்திரன்.

உழுதரிபண் பயில்மலர்க்கற பகநிழற்கீ ழரியரிசசித்
துவந்து போற்றும்
பொழுதரிய வடிவுவிசும் பளவுநிறை காடசிதந்த
புதுமை யாலே
தொழுதரிமுன் னவர்களப்பரி பூரணகுந் தரமெனவுந்
துதிகள் செய்வா

ரெழுதரிய பெருமானென் றெமைச்சனனந் தெழுதாமை
யிறைஞ்சிச் சொல்வார். (21)

வண்டுகள் கீதம்பாடிச் சஞ்சரிக்கின்ற மலர் பொருந்திய கற்பகத்தரு நிழலிலே சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கின்ற தேவேந்திரன் சந்தோஷத்துடனே ஆசரித்துப் பூஜிக்கும்போது அரிதாகிய ரூபத்துடனே விசுவரூபங்கொண்டு ஆகாசமளாவ நின்று காட்சி கொடுத்த மகிமையைக்கண்ட தேவர்களெல்லாம் தொழுது பரிபூரண சுந்தரமோ எம்மை ஜனன சாகரத்திலே கறப்பித்து எழுதிவிடாமல் காத்த எழுதரிய பெருமானே என்று ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

வாசவன்வந் தனையாலு மனுதினங்கற் பகத்தருவின் மலரினாலே
பூசனைசெய் தனினாலு மமுதநிவே தனஞ்செலுத்திப் போற்ற லாலும்
மீசர்தமைத் தேவேந்தரப் பெருமாள்கற் பகப்பெருமா னிவரேயென்று
மாசுதவிர்த் தருளமுதே வல்லவரென் றாகமமு மறையுங் கூறும். (22)

தேவேந்திரன் வந்து பூஜை பண்ணி அனுதினமும் புஷ்பத்திருமேல் ஆசரித்தபடியினாலும் தேவாமிர்தம் நைவேத்தியம் பண்ணியதாலும் நீலிவன நாயகருக்குத் தேவேந்திரப் பெருமாளென்றும் கற்பகப் பெருமானென்றும் குற்றமில்லாத அமிர்தவல்லவரென்றும் பெயராகும்படி ஆகம வேதங்கள் சொல்லும்.

நாடிமகப் பதிக்கருளிசெய் யாடியுத்தி ராடமேனு
நலஞ்சேர் நாளில்
நீடுபுரந் தரன்தடத்தின் மூழ்கியெழுந் தருளிய
நிமலற் கன்பாயத்
தேடுமர்ச் சனைசெய்தன னொருவருக்கீங் கிடில்வேணித்
திரைய மூன்றுங்
கூடுபிர யாகையிலோர் கோடிமறை யவர்க்குநித்தங்
கொடுத்த தாமே. (23)

இப்படி தேவேந்திரனுக்கு வரப்பிரஸாதம் கொடுத்த நாளாகிய ஆடி மாதம் உத்திராட நக்ஷத்திரம் பொருந்திய பௌர்ணமியான தினத்திலே ஒருவராகிலும் விசாலம் பொருந்திய தேவேந்திர தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி எழுதரிய பெருமானான சிவனுக்கு அன்புடனே பூஜை நைவேத்தியங்கள் செய்து அவ்விடத்திலே ஒரு சிவபக்தனுக்கு அன்னங் கொடுத்தானால் அது கங்கை, யமுனை, சரஸ்வதி, இந்த மூன்று தீர்த்தமும் ஒன்றாய்க்கூடிப் பிரயாகையிலே வந்து சேருகிற முகத்துவாரத்திலே தேவவல்லவரான கோடி பிராமணர்களுக்கு அன்னதானம் அனுதினமும் கொடுத்த பலனுக்குச் சமானமாகும்.

அடர்ந்தேறு சடாடவியை நடந்தேறு திருவடியை
யறிகு வான்மண்
ணிடந்தானும் பறந்துயர்விண் கடந்தானுங் காண்பரிய
விதழிப் பூவின்
றடந்தாமப் புயற்குமக பதிபூசை காவிரிமுன்
றனபின் றுகத்
தொடர்ந்தான்கூ றினன்மகிழ்ச்சி யடைந்தான்சந் திரபீடச்
சோழன் றானே. (24)

நெருங்கியடர்ந்திருக்கின்ற சடா மகுடம் பொருந்திய பரமேச்வரன் முடியையும் ரிஷப வாகனத்திலே எழுந்தருளிய திருவடியையும் ஆதிகாலில் காண்பதற்கு வராக ரூபங்கொண்டு பூமியைத் தோண்டித் தேடின மகா விஷ்ணுவும் அன்ன ரூபங்கொண்டு ஆகாசத்திலே பறந்து தேடிய பிரமாவும் காணப்படாதவராகிய சிவனை நீலிவன நாயகனைத் தேவேந்திரன் பூஜைபண்ணிப்பெற்ற மகிமை இதுவென்று ஆதரித்த சந்திரபீட சோழராஜன் கேட்கும்படி முன்னாளிலே கமண்டலத்திலே கொண்டுவந்த காவேரியானது உலகங்களை ரக்ஷிக்கும் பொருட்டாகப் பெருகும்படி செய்த அகஸ்திய ரிஷி திருவுளம் பற்றினார். அதுகேட்ட சந்திரபீட சோழ ராஜன் மகிழ்ச்சி யடைந்தான்.

## ஒன்பதாவது காமதேனு பூஜைசெய்த மகிமை

நிரம்பமதுச் சொரிந்தலர்ந்து தழைத்தினிய கொழுங்கனிக
ளொகிழுஞ் செந்தாற்
றாமமையைப்போன் மருகண்டுசுத னிருக்கவைத்த நீலிவனத்
தகில நாதர்
வரங்கொடுத்த மான்மியமின் னமும்புகல வேண்டுமென
வமையன் கேட்பச்
சுரந்தமகிழ் வொடுவந்தன மலர்ந்தியன்முத் தமிழ்முனிவன
சொல்லு கின்றான். (1)

நிரம்பவும் மதுச்சொரிந்து அலர்ந்து தழைத்துக்காய்த்துப் பழுத்த கனிகளுடனே கதலிவனமானது என்றைக்கும் சிரஞ்சீவியாயிருப்பதுபோல மிருகண்டு மாமுனி குமாரனாகிய மார்க்கண்டனுமிருக்க வரப்பிரஸாதம் அளித்த நீலிகாவன நாதருடைய சரித்திரங்களை இன்னமும் அடியேனுக்குத் திருவுளம் பற்றவேண்டுமென்று சந்திரபீட சோழராஜன் கேட்க மனங்கனிவாகிச் சந்தோஷத்துடனே அகஸ்தியர் திருவுளம் பற்றுவார்.

அருந்தவஞ்செய் ததீசிமுனி சபித்திடமுன் பிரமகத்தி
யடைந்த தேனு
பொருந்தியநற் குணங்களொழிந் தருந்துபுற்க ளருந்தாமற்
புலாலைப் போது
மருந்துதல்வேட் டுறுபுலிபோ லுயிர்செகுத்துத் தசையுதிர
மருந்தி நாளும்
பெருந்தளர்வு தரும்பசிக்குக் கொன்றுதின்ற தளவிறந்த
பிராணி தானே. (2)

அரிய தவஞ்செய்யும் ததீசிமுனிவர் சபித்த சாபத்தினாலே பிரம ஹத்தி தோஷமடைந்த காமதேனுவானது நலகுணங்களொழிந்து புல முதலான திரணங்களைப் பக்ஷியாமல் மனிதர்களையடித்துப் புசிக்கின்ற புலிபோல் உயிர் வதை செய்து சதை ரத்தங்களை எந்நாளும் புசித்துக்கொண்டு அதிலும் பசி தணியாமல தளாசியுற்று மிகுந்த பசியினாலே அளவில்லாத பிராணிகளை வதைசெய்து புசித்துக்கொண்டிருந்தது

காருலகி லளவிறந்த வதைகளைச்செய் ததுதேவ
சுரபி மீண்டு
நரகுலைத்த தினிலடைந்த கொருமயிடன் றாந்துயிக்கா
னவனை போலப்
பாரையுடை சூழலகும் படாதபாட்ட ந்திடாத
பதிமுன் னோர்க
ளூரணிழந்தா ரெனின்மனிதர் தமாரோ டுநிலைமையினி
யுரைக்குங் காலே (3)

இந்தப்படி தேவலோகத்திலே அளவிலலாத பிராணிகளை வதஞ்செய்து காமதேனுவானது முன்னாளிலே எருமைக்கடா முகம் படைத்த மகிஷாசுரன் ஜனித்ததுபோல வந்து சமுத்திரம் சூழ்ந்த பூலோகத்திலே உயிர்களை வதை செய்தபடியினாலே சாவப்பிராணிகளும் வாயினாலே சொலலப்படாத துன்ப மடைந்தன தேவேந்திரன் முதலான தேவர்களெல்லாம் பலஹீனலாமல் தளர்ச்சி யடையும்படி செய்த காமதேனுவானது பூலோகத்திலே வந்தால மனுஷரான வர்கள படுகிற அவதி இவ்வளவென்று எடுத்துச்சொலவதற் கிடமுண்டோ.

தேனுவென்று மகிழ்ந்துமக வானும்வணங் கியசுரபி
திறல்சேர் சித்ர
பானுவந்த தெனவுலக மலைந்துசிவ கலைகளுந்தம்
பதிக ணீங்கி

மாலுகந்த காத்தார்பைஞ் ஞீலிவந்த காள்கருணை
வலூரே நாளுந்
தானுவந்த கடவுளுடை கலையிருந்து விளங்குநெற்குன்
றதனி னோர்பால். (4)

காமதேனுவை தர்மதேவதையென்று தேவேந்திரன் முதல் தேவர்களும் வணங்கும்படி தேவலோகத்திலிருந்த பசுவானது பூலோகத்திலே யுகாந்தகாலத்தில் அக்னிப்பிரளயம்போல் சீறி வந்தபடியினாலே பிராணிகள் நிலைகுலைந்து சிவகலைகளெல்லாம் தங்கள் ஸ்தானங்களைவிட்டு மான்பிடித்த கையாராகிய பரமசிவன் வாஸமான திருப்பைஞ்ஞீலியிலே வந்தெழுந்தருளிய நாளையிலே அதற்குக திருக்கோவலூரென்று பெயருண்டாயிற்று காமதேனுவாகிய கோவுக்கு பயப்படாத ஊராகையால அந்தப்படி மகத்துவம் பொருந்தியது நீலிவனமாகிய திருப்பைஞ்ஞீலி எனனும் ஸ்தலத்தில் வாஸமாகிய சிவகணங்களிலே சிறிது சிவகலைகள் எதத்தேசகாலமும எழுந்தருளும்படி நெற்குன்றமாகிய ஸ்தலமொரு பாகத்திலிருந்து விளங்கும

மிண்டுசெய்த பண்டொருகன் மாவம்போ னெடியகண்டா
மிருகம் போலக்
கண்டகண்ட சீவனையுண் டிருந்த நயர் பசுசாகிக்
கரைசேற் காக
மண்டலம்போற் றியகோவை நாதர்கலை விளங் குலிங்க
வடிவ மீதே
சண்டமுகி னிகர்சுரபி விடுத்த துகோ மயக்கோமுகோ
சலத்தைத் தானே. (5)

முன்னாளிலே விஷ்ணுவானவர் இரணியகன் நிமித்தமாக ரூபமெடுத்த சிங்கம்போலவும் காண்டாமிருகம்போலவும கண்ணிலேகண்ட சீவனை வதை செய்து புசித்துக்கொண்டிருந்த காமதேனுவானது ஐயாற்றங்கரையின் தென் பாகமிருக்கும் பூமண்டலம் போற்றிய திருப்பைஞ்ஞீலியென்னும் கோவலூர் நாதருடைய கலை விளங்கும்நெற்குன்றமென்ற ஸ்தலத்திலே எழுந்தருளியிருக்கிற லிங்கரூபத்தின்மேலே விடாமல் பொழிகின்ற மேகவருஷம்போல் தன்னுடைய கோமய கோசலத்தினாலே அபிஷேகம் பண்ணியது.

மாசகன்ற சிவகலையின் மீதிலெங்கு நிறைந்ததுகோ
மயத்தி னோடு
கோசலஞ்சஞ் சலந்தருவெஞ் சினந்தவிர்ந்து சுரபியுந்தண்
குணத்த தாகி

போசனையுந் தறுதனை நிலைதெரிந்த திடாகற்றி
 புரிமை யாட்கொண்
டீசாரு ளியதிறமை யறியுமா றரிதுலகி
 லெவர்க்குந் தானே. (6)

களங்கமில்லாத சிவகலை விளங்கிய நெற்குன்றமாகிய ஸ்தலத்திலே வாஸமான லிங்கரூபத் திருமேனியிலே காமதேனுவானது கோமய கோசலங்களை அபிஷேகம் செய்தபடியினாலே கோபமும் சஞ்சலமும் நீங்கித் தன்னுடைய சுயகுணமடைந்தது தான காமதேனுவென்கிற நிலைமையறிந்தது. சர்வப் பிராணிகளுடைய துன்பங்களையும் நீக்கி ஆளுகின்ற சிவகிருபை உலகத்தில் யாவரும் அறிவதற்கருமையானதன்றோ?

மனதுநொந்து தநிசிதரு சாபமுஞ்சந் தாபமுற்று
 வாட்டங் கூர்ந்த
தனதுறுதி வினையின்வரு பாபமுந்தீர்ந் திடுநாள்வந்
 தடுத்த தாலே
யனுதினமுங் கழித்திடுகோ மயத்தொடுகோ சலங்கடவுட்
 கருக மாகித்
தனுவுமந்தக் கரணமிகு புனிதமுற்று முடித்ததுமெய்த்
 தவத்தைத் தேனு. (7)

கோபத்துடனே தநிசிகொடுத்த சாபத்தினாலே வந்து மூண்ட பாவமும் ஜன்மங்கள் தோறும வந்தடுத்து மதிமயககமுண்டுபண்ணிச் சுக துன்பங்களை யடைவித்து உயிரை வதைசெய்விக்கிற பாபமும நிவர்த்தியாகிற காலம வந்தடுத்தபடியினாலே அனுதினமும் கோமய கோசலத்தினாலே சிவலிங்கரூபம் சுத்த பவித்திரமாகுமபடி செய்து தன்னுடைய தேகததையும அந்தக்கரணத்தையும் சுத்தியாக்கிக்கொண்டு மெய்யான தபசிலே மனது வைத்துத் தபசு செய்யத் தொடங்கியது காமதேனு

ஐயாறு தனின்மூழ்கிச் செய்யதொரு பத்திரம்பூ
 வறுகி னோடு
கையார வெடுத்ததென வாய் நிறையக் கவர்ந்துசற்றுங்
 கயங் குறாது
பையாட ராவணிநெற் குன்றமர்ந்தார் திருமுடிமேற்
 பரிவு கூரப்
பெய்யாறு நிகர்தருகோ மயத்தொடுகோ சலநறும்பால்
 பெய்து தானே. (8)

பின்னும் ஐயாற்றிலே நித்தியம் ஸ்நானஞ்செய்து அநாருபுஷ்பத்திர புஷ்பங்களைக் கையினாலே எடுக்கிற பாவனைபோல் வாய்நிறையக் கசக்காமல் எடுத்து படத்துடனே கூடின சர்ப்பாபரணம் தரித்த நெற்குன்ற வாஸியான பரமசிவன் பாதத்திலே அர்ச்சித்துத் திருமேனியிலே ஆறுபோல் நிறையும்படி கோமய கோசலத்தினாலும் பாலினாலும் அபிஷேகம் செய்தது.

நாவடிம்பு கொடுவிளக்கும் வால்கொடுமீ தழுக்ககல
நயந்து வீசுங்
கோவடிக ளாதுரிஞ்சும் வருடுநறும் பால்பொழிந்து
குளிர்நீ ராட்டும்
பூவடிவ மெலாஞ்சொரியும் பசுவடிபட் டுடல்குழைந்தார்
புனிதர் பூவைச்
சேவடியான் மறைத்தவர்பண் டருச்சுனன்கைத் தனுவடிக்குச்
செறுச்செய் தாரே. (9)

பின்னுமந்த அபிஷேகங்களெல்லாம் சுத்தியாகும்படி நாவினாலே தடவிக் கொடுத்து வாலினாலே சிவலிங்கத்தின்பேரிலிருக்கிற அழுக்குகளெல்லாம் அக லும்படி துடைத்து வீசிக் காலடியினாலே யுரிஞசித் திருமபவும நாவினாலே வருடிப் பாலினாலே அபிஷேகம்பண்ணி மறுபடி குளிர்ந்த கோசலத்தினாலே அபிஷேகம் பண்ணிப் புஷ்பங்களெல்லாம சொரிந்து அாசிக்கும. முன்னாளில் இந்தப்பூமியை விடபத்தின் (திருமால்) அடியால் மறைத்தவரும அாசுனனுடைய கைவில்லினாலடிபட்டுச சண்டையிட்டவருமாகிய பரமசிவன் அப்பொழுது இந் தப் பசுவின் காலடிபட்டு உடல குழைந்து மகிழ்ந்தார

காலாலும் பொழிந்திடுகோ மயத்தாலுந் திருவடிவிற
கழுக்குத தீர்க்கும்
வாலாலும் விடுத்திடுகோ சலத்தாலும பொழியமுத
வருட மான
பாலாலுஞ் சொரிந்தநறு மலரா லும பூசைசெய்து
பணிந்து போற்றி
மேலாவித் துதிர்த்தபலா சிலைபுசிக்கும் வேறுணவை
வெறுத்துத் தானே. (10)

பின்னும் காலாலும கோமயத்தினாலும் திருமேனியழுக்கு நீக்கியும் வாலி னாலே வீசியும் தேவாமிருத வருஷம்போல் பொழிகிற பாலினால் அபிஷேகம பண்ணிப் பத்திர புஷ்பங்களினாலே அர்ச்சனை செய்து ஸ்தோத்திரம் பண்ணி

அதற்குமேல் சமய்ந்து உதிர்ந்த புல்லிலைச் சருகைப் புசித்துக்கொண்டு வேறு ஆகாரங்களை வெறுத்திருக்கும்.

பரவிநெடு நாண்முடித்த பூசனையா லதிசுதபோ
    பலத்தால் விண்ணோர்
சுரபிதனை யாட்கொளவென் றதிகார வல்லபர்மா
    துமையி னோடும்
விரவியபே ரொளிதிகழ வெழுந்தருளி னாடிமேல்
    வீழ்ந்து தேனு
வரகரவென் றிறைஞ்சியது சுரர்சிமிதத மோதுயர
    மடைந்தா யென்றார். (11)

இந்தப பிரகாரம் ஸ்தோத்திரம்பண்ணி அநேக கால பூஜைசெய்து அதிக தபசு பண்ணின பலத்தினலே காமதேனுவைத் தடுத்தாட் கொள்ளவேண்டுமென்று அதிகார வல்லவரான சிவபெருமான ஈசுவரியுடன் எங்கும்பரந்து பிரகாசிக்கின்ற ஜோதி சொரூபமாய எழுந்தருளினர். அது கண்டு காமதேனு பரமசிவன் பாதத்திலே நமஸ்கரித்து அரகராவென்று ஸ்தோத்திரமபண்ண, தேவர்கள் நிமித்தம நீ இவவளவு துயரம அடைந்தாயோவென்றா பரமசிவன்.

பாவனைபூ சனைகருமகிழ்ந் தனநதேனு வேயுயிர்கள் பலவுங் கொன்ற
தீவினைமாத திரநீநத துயாநததததீ சியர்சாபந் தீரு மாறு
தாவில்வளம பெறுகோமங களபுரியி லிருநதுநிததந தாழ்வு றாது
பூவுலகம புகழ்திருப்பைஞ் ஞீலியிலவந தெனைப்பூசை புரிவாயென்றார்.

நீ இப்படி பூஜைபணணினதுபறறிச சநதோஷமடைநதோம. காமதேனுவே நீ இநத செறகுணமான திருததிய மலை ஸ்தலத்திலே பூஜை பணணினதினலே சகல பிராணிகளையும் கொன்று தின்ற பாபமாத்திரம் தீர்ந்தது. உயர்ந்த ததீசி முனி சாபந்தீருமபடி அநேக வளமை பொருந்திய கோமஙகலமென்னும் பட்டணத்திலே இருநதுகொண்டு அனுதினமும தவறாதபடி பூலோகம புகழ விளங்கும் திருப்பைஞ்ஞீலியிலே வந்து நம்மைப் பூஜைசெய்வாயென்று திருவுளம் பற்றினர் பரமசிவன்.

மறைந்தார்பின் மலர்திருநெற் குன்றமகன் றதுசுரபி
    வருவாய் நீயென்
றறைந்தார்சொற் படிகோமங் களபுரியை யணுகியையா
    றதனின் மூழ்கி
யிறைஞ்சாரு செரித்தருள்கோ மங்கலிங்கர் தமைப்பூசித்
    திறைஞ்சு வாருண்

ணிறைந்தானை யுயர்கதலி வசந்தனைவந் தனைசெயுநீ
ணெடுங்கண் வாழ்வை. (13)

இப்படித் திருவாய் மலர்ந்தருளிய பரமசிவன் மறைந்தார். காமதேனுவானது நெற்குன்றமாகிய திருநதியமலையைவிட்டுக் கோமங்கலத்துக்குவந்து நம்மை பூஜைசெய்யென்று சிவபெருமான் கட்டளையிட்டபடியிருந்துகொண்டு ஐயாறாகிய பஞ்ச நதியிலே ஸ்நாநம் பண்ணித் தம்மை வந்தனம் பண்ணாத திரிபுராதிகளை எரித்தவர் வாஸமான கோமங்கலத்திருக்கிற சிவலிங்கத்தையும் பூஜைசெய்து தம்மை வந்தனம் பண்ணுகிறவர்கள் மனதிலே சதாகாலமும் நிறைந்திருப்பவரையும் உயர்ந்த கதலி வஸந்தரையும் அடியார்களுடைய வாழ்வாகிய நீள நெடுங் கண்ணம்மனையும் பூஜை பண்ணிக்கொண்டு வந்தது.

கதலிவசந் தனைநீலி வனத்தானைப் போற்றிசெயுங் காதலாலே
முதலிருந்து பூசனைசெய் கோவுகந்தா ரடிபரவு முனிவர் போற்றப்
பதமருளிய கோமங் கலபுரியீ சனைப்பணியும் பரிந்திவ் வாறு
சதனிதகா லமுந்தேவ சுரபிவணங் கியதுமுனி சாபந் தீர (14)

பின்னும் தேனு கதலிவஸந்தனை நீலிவனநாதரைப் போற்றிசெய்யும், முன்னிருந்து பூஜை பண்ணிய நெற்குன்றத்தில வாஸமான சிவபிரானுடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரிக்கும்; முனிவர்கள் பூஜைபண்ணி மோக்ஷம்பெற்ற கோமங்கலபுரியில் வாஸமான சிவனைப் பூஜைசெய்து பணியும் இந்தப்பிரகாரம் மூன்று ஸ்தானங்களிலேயும் சதாகாலமும் காமதேனுவானது ததீசி முனிவர் சாபந்தீரும்படி வணங்கிப் பூஜை பண்ணியது.

உத்தரா யணமகர பூசநட்சத் திரத்தியம னுவந்து காண
முத்துமா மலைகயிலைக் காட்சிதரு தரிசனமு முவந்து நாடிச்
சித்தர்மா தவரிமையோர் பரவிவழி படுசிவராத் திரிநன் னாளி
லத்தனையா ரணியவிடங் கனையருச்சித் ததுதேனு வாசை கூர. (15)

உத்தராயணமான மகரமாத பூச நக்ஷத்திரத்திலே யமராஜன் காணும்படி எழுந்தருளிய முத்து மலையாகிய தென கைலாசக் காக்ஷியைக் கண்டு தரிசித்து முப்பத்து முக்கோடி தேவர் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், சித்தர், சாரணர் முதலாகிய பேரும் பிரியமாக வந்து தரிசனம்பண்ணி வழிபாடு செய்கின்ற தினமாகிய சிவராத்திரியிலே ஐயனாகிய ஆரணிய விடங்கனை விதிப்பிரகாரம் அர்ச்சித்துப் பூஜை பண்ணியது மிகுந்த ஆசையோடும் காமதேனு.

விறுத்தெழுசெஞ் சடாதரனை வானவனை நீலவண மேனி யானைச்
சதுர்த்தசியில் வணங்கியருச் சனைபுரிதே னுவப்பினிய தயவி னோடு

மதுத்தெரிய விதழியணி சதுர்ப்புயத்தி னர்கதலி வசந்தனானம்
பொதுத்தெரியு நடனரத்தின சபாபதிவந் தருளினரப்போது தானே.

விசையோடெங்கூடி எழும்பும் அக்னிக் கொழுந்துபோன்ற ஜடையுடைய வனே, தேவாதிதேவனே, நீலிவனவாஸனே, மகா சதுர்த்தசியில் பூஜை பண்ணி வணங்கின காமதேனுவினிடம் தயைகூர்ந்து தேன் சொரியும் கொன்றை மாலை யணிந்த சதுர்புஜம படைத்த கதலிவஸந்தராகிய ஞானவான்கள் காணும் படி தோன்றும் ரதன சபாபதியானவர் முன்னுக வந்து தோன்றினர்

பொய்த்தபசுந் தேகசுகம வெறுத்தொறுத்து மெய்த்தபசு
புரிந்து போத
வெய்த்தபசு வேயறியாப பசுவாகித் ததீசிமுனிக்
கிழைத்தாய் தீமை
மொய்த்தபசு பலங்களறி யதுரைத்தார் விண்ணோர்சொன்
முறைதப் பாதுள்
வைத்தபசு மையையறியா முனிசபித்த தகன்றதுனை
மருவா தென்றார். (17)

அப்போது சுவாமியானவர் திருவுளம் பற்றுவார் பொய்யாகிய துரும்பு போன்ற சரீரத்தமாம்சங்களெல்லாம வற்றியுலாந்துபோகும்படி சுகத்தைவெறுத் துப் பிறப்பை வெறுத்து மெய்யான தவத்தைச் செய்து மிகவும் சரீரம் இளைத் துப்போன காமதேனுவாகிய பசுவே, அறியாத ஆத்மா ஆனபடியினலே நீ ததீசி ரிஷிக்குத்தீமை செய்தாய் அவருடைய தபோபலன்கள் தெரியாமல் தேவா கள் சொன்னார்கள். அதைத் தட்டாமல் நீ உன மனத்துக்குள் அன்பு வைத்ததை யறியாமல் ததீசி முனி சபித்த சாபம உன்னைவிட்டு விலகியது என்றா

வாவென்று ரதிகவரங் கொடுத்தாருன் பதிக்கினிய
மகிழ்வி னேடும
போவென்றார் சுகித்திடுபோ வென்றார்நீ யெமக்கினிய
பூசை செய்தாய்
கோவென்று ரெமக்குமுத்தி தாவென்றார் வாவென்றார்
குறித்தோ ராய்ச்சி
வாவென்றார் தங்களுக்கப் படியேநாங் கொடுத்தோம் வா
வாவென் றாரே. (18)

பின்னும் தமக்கு அன்புடனே இனிதாகிய பூஜைசெய்த பசுவாகிய காம தேனுவைப் பார்த்துச் சமீபத்திலே வரச் சொல்லி அதிகவரப்பிரஸாதங்களைக் கொடுத்து நீ எப்போதுமிருக்கிற ஆச்ரமத்துக்குச் சந்தோஷத்துடனே போய்

சுகபோகத்தை யனுபவித்துக் கொண்டிருப்பாயாகவென்று திருவுளம்பற்றி யனுப்பினர் முகநித் தரவேண்டுமென்று அழைத்த பேருக்கும சிவ சிவா வென்று சொன்ன பேருக்கும் அவர்கள மனதின்படியே கொடுக்கிறோம் வாவென்று திருவுளம்பற்றும் பரமசிவன்.

அண்ணலனுப் பினன்விடைகொண் டேகியது தேனுமுன்ன
மன்பி னாலே
விண்ணவர்கோப் பூசைசெய்த கோவுகந்த நாதர்வடி
விடபம போல
நண்ணுமவர்க் கீசான திசையிலநதப பசுபொழிபால
நலஙகள் வாய்தத
புண்ணியதீர்த் தந்தேனு புடகரணி யெனவுலகோா
புகல்வ ரன்றே. (19)

இப்படி பரமசிவனுடைய அனுமதி பெறறுகவொணடு காமதேனுவானது தெய்வலோகததிலேபபோதுமபோலவீற றிருநததுமுனனொருகால அன்பினாலே தேவேந்திரன் பூஜைபணணிப் போ பெற்ற நீலிவனநாதா திருவடியைத தாஙகி வருகிற ரிஷப ரூபமபோல அடையாளமாய்த திருப்பைஞ்ஞீலி யெனனும ஸ்தலத்துக்கு ஈசான பாரிசமாகப பொழிநத பால அமிர்த மயமான புண்ணிய தீர்த்தமாய்த் தேனுபுஷ்கரணி யென்னும் பெயரால பூலோகத்தாரகளெலலாம் சொல்ல விளங்கும்.

போர்க்குலிசன் பணிகடவுள் புகல்கோமங களபுரிவண்
புகழ்ப்பைஞ் ஞீலி
மேற்கிருக்கு மதறகுவட மேறகுநெற்குன் றிருக்குமென்றான்
வேலை மேய்நத
சூற்கமழ்கொண் டலைப்பொருவு கொடைதருசந
திரபீடச் சோழன கேடப
மாற்கமலந தருதிருக்குற றாலமென்று கடவுள்வடி
வாக்கி னானே. (20)

பிரகாசமபொருந்திய வஜ்ராயுதம் தரித்த தேவேந்திரன் பூஜை பண்ணின கோமங்கலம் திருப்பைஞ்ஞீலிக்கு மேற்கிலிருக்கும கோமங்கலபுரிக்கு வடமேற்காக நெற்குன்றமாகிய திருததியமலை இருககும் என்றார். கடலில் மேய்ந்து சூற்கொண்ட மேகம் பொழிவதுபோல் அளவிலலாத சொர்ணமாரி பொழிகினற கற்பகத்தருவுக்குச் சமானமாகிய சந்திரபீட சோழராஜன் கேட்குமபடி திருவுளம பற்றினர் பக்திமார்க்கமான பேர்களுக்குச் சிவரூபம் தருகின்ற திருக்குற்றால மென்னும் சிவரூபம்படைத்த ஸ்தலமுண்டாகினை அகஸ்தியா

## பத்தாவது ஆரணிய விடங்கர் மகிமை

நாமவச்சி ராயுதத்தால் யோகமுனிக் கிடரியற்றி
நலிந்த தேவ
காமதே னுவையிரட்சித் தருளியபைஞ் ஞீலிவரு
கடுக்கை வாசத்
தாமர்சக்ரத் தியாகலிங்கர் சரித்திரமின் னமுஞ்சொலெனச்
சரணந் தாழ்ந்த
கோமகற்கன் பொடுபொதிய மலைமருவு கலசமுனி
கூறு கின்றான் (1)

ஆயுதங்களுக்கு முதன்மையாகிய வஜ்ராயுதத்தின் நிமித்தம் ததீசி முனிக்குச் செய்த குற்றத்தினாலே தளர்ச்சியடைந்த காமதேனுவுக்குச் சாப விமோசனம் பண்ணி ரக்ஷித்தருளிய திருப்பைஞ்ஞீலி வாஸராகிய கொன்றையாலே தரித்த சகாத்தியாகர் சரித்திரத்தை இன்னும் சொல்லவேண்டுமென்று நமஸ்காரம் பண்ணிக் கேட்ட சந்திரபீட சோழ ராஜனுக்கு, கும்பத்திலே ஜனித்துப் பொதியமலையில் வாஸஞ் செய்யும் அகஸ்தியர் திருவுளம் பற்றுவார்.

பெருமாற்கண் டரும்போதம் பெற்றவருந் தத்துதவப்
பிரபலன் வேதந்
தருமாற்கந் தவறாத நியமநிட்டை விரதவனுட்
டானம் பூண்டோன்
திருமாற்கண் டரியபத்தி மார்க்கசிவ பூசனையாற்
சேணும் பூமா
தருமார்க்க குருமார்க்க மருகண்டுமுனி பெருமார்க்கண்
டனைப்பெற் றானே (2)

பரமேசுவரனைத் தன்னுடைய ஞான திருஷ்டியினாலே தரிசனம் பண்ணிச் சிவஞானம் பெற்று அரிதாகிய ஞான ரூபம் படைத்த பிரபலமுள்ளவரும் வேதங்கள் சொல்லும் மார்க்கங்கள் தவறாமல் சீலமான ஆசாரம் விரதம் முதலியவைகளை அனுஷ்டித்துக் கொண்டு வருபவரும் மகா விஷ்ணுவைவிட அரிதாகிய பக்தி மார்க்கத்துடன் சிவ பூஜை செய்து தேவலோகம் பூலோகங்களிலுள்ள பேர்களுக்கெல்லாம் ஞானோபதேசவழி தரும் குருவானவருமாகிய மிருகண்டுமாமுனிவர் மார்க்கண்டனென்னும் பெயர்கொண்ட ஒரு புத்திரனைப் பெற்றார்

மென்சுவைய மழலைமுற்றக் கலைகளைமுற் றுணர்ந்துநிறை
விபூதி தாங்கி
பின்சுவய நிலாநுதல்வெண் ணீறுருத்தி ராக்கமும்வெற்
பிறைவர் பாதம்
நெஞ்சுவையர்ச் சனைபுரிந்தீ ரஞ்சுவய தகன்றதுபின்
னிகழ்ந்த மேலோன்
றஞ்சுவய தவற்கடைந்த தன்னைதந்தைக் கஞ்சுவய
தாகத் தானே (3)

இப்படி சிவனுடைய வரப்பிரஸாதத்தினாலே பிறந்த மார்க்கண்டன் மழலைச்சொல் நீங்கி ஐந்து வயதடைந்து கலவி பயிலத் தொடங்கி வேதாகம சாஸ்திர புராண காவியங்களெல்லாம் கிரமப வுணர்ந்து சிவானுபூதிபெற்று மூன்றாம் பிறைபோன்று நெற்றியில் திரிபுண்டரமாக விபூதியணிந்து ருத்திராக்ஷங்களைச் சரீரங்களிலே பூண்டு கொண்டு வெள்ளியங்கிரிக்கு நாயகனான பரமசிவன் பாதத்தை நெஞ்சிலே வைத்துத் தியானம செய்து கொண்டு வந்தான். பின் பத்து வயது சென்று அதற்குமேல் ஐந்தாம் வயது கடக்கும்போது அவனுடைய தாய் தந்தையர் மனதிலே அச்சமும் அதிகக் கிலேசமும் அடைந்தனர்.

எதினால்வே தனையென்று னெம்முயிரே நின்னுயிர்தா
னிருப்ப தாண்டு
பதினாறென் றனரிறைவ ரதனான்மெத் தவுமயர்ந்தோம்
பயநதோ மென்றார்
மதிநாறுஞ் சடையாரே துணையெனப்போற் றினனிருந்தான்
வநதான் போன
பதினாறென் றையர்சற்றும பொய்புரையா ரென்றியமன்
பார்த்தி லானே (4)

இந்தப் பிரகாரம தாய் தந்தையா கிலேசமடைந திருப்பதை மார்க்கண்டன் பார்த்து உங்களுக்கு இத்தனை மனோவேதனை வரக் காரண மென்ன வென்று கேட்டான. அவர்கள் எங்களுக்கு உயிராகிய கண்மணியே! உன்னுடைய உயிர் இருக்கிறது பதினாறு வருஷமென்று சிவபெருமான் கட்டளையிட்டார். உனக்கு இப்போது பதினாறாவது வயதாகையால் மெததவும பயந்து மனத் துயரமடைந்தோ மென்றார்கள். அதுகேட்ட மார்க்கண்டன் அர்த்தசந்திரனையும் வாசனை பொருந்திய கொன்றைமாலையும் தரித்த பரம சிவன் பாதமே அடைக்கலமென்று பூஜை பண்ணிக்கொண்டிருந்தான். அப்படிப் பதினாறு வயதும் சென்றது. யாவருக்கும் ஐயராகிய சிவபெருமான் சிறிதும் பொய் சொல்வதில்லை யென்பதை எண்ணிப் பாராமல் பே-

கதைத்தான்கைப் பிடித்தவனோ டெதிர்த்தான்மார்க் கண்டமுனி
காலனை
மதைத்தானந் துடிதுடிக்கும் படிவிடுத்தான் விடுத்திடுசொன்
மாரி யாலே
பதைத்தான்கண் டிறுதுணையே யெனத்தழுவச் சினத்தெறிகைப்
பாசமவ் வீச
வுதைத்தானொரு சிவலிங்கமெனைச் சிதைத்தானக் கடவூர்வந்
துதித்தான் றனே (5)

அப்படி யமதர்மன எண்ணிப் பாராமல் கைகளிலே தண்டாயுதம், சூலம் பாசக்கயிறுகளை எடுத்துக்கொண்டு வந்து உக்கிரபராக்கிரமமாக மார்க்கண்டே யரை எதிர்த்தான மார்க்கண்டேயரும் யமதர்மன் மனம் பதைத்துத் துடிக்கும்படி அளவில்லாத வார்த்தைகள் மேக வருஷம்போல் பொழிந்தார். அதினாலே கோபங்கொண்ட யமதர்மன் ஆங்காரத்துடனே பாசக்கயிறு வீசி எறிந்து மார்க் கண்டரைப் பிடித்தான் அப்போது மார்க்கண்டேயர் பயந்து சிவபெருமானுடைய பாதமே துணையென்று சிவலிங்கத்தைக் கட்டி யணைத்துக்கொண்டார், அதைக் கண்டு யமதர்மன் பரமசிவனையு மார்க்கண்டேயரையும் ஒன்றாயப்பாசக்கயிற்றில் அகப்படும்படி வீசிப் பிடித்தான். அப்பொழுது திருக்கடவூரிலே வாஸமாய் எழுந் தருளின அமிர்தகடேசுவரர் பாதாளத்திலே விழும்படி யமதர்மனுடைய நெஞ் சிலே உதைத்துத்தள்ளினார்.

கவற்சியிலா திறைவரொடு கலந்திருப்பச் சீதளமாய்க்
கணவனை
நிலைபு புறகொங்கைமின்மடவார் பிரிந்தால்வெந் நெருப்பாகு
நிலவே போல
வெவர்க்குமறி வரியசிவ னுதைக்குநம னிறந்தான்மற்
றினிய பாதந்
தவத்தினருக் கின்பமுமங்கை தவத்தினர்க்குத் துன்பமுந்தந்
தருளுந் தானே (6)

யாவருமறிவதற்கரிதான சிவபெருமானுடைய பாத உதையினாலே யமதர்மன் இறந்துபோனான் அந்தப் பாதமானது மார்க்கண்டேயருக்கு அதிக சந்தோஷம் கொடுத்தது சந்திரகாந்தியானது நாயகனில்லாதவேளையில் இறுமாந்த ஸ்தன பாரங்களுடனே கூடிப் புணர்ச்சியின்பேரில இன்பமாயிருக்கிற மாதர்களுக்கு அக்கினியமாகவும் நாயகனுடனே கூடிக் கலந்திருக்கிற மாதர்களுக்கு அதி சீத ளமாகவும் குளிர்ந்திருக்கும் அதுபோல சிவபெருமானுடைய பாதமானது

தபசு பண்ணுகின்றபோகளுக்கு இன்பமும் தபசைக் கைவிட்ட போகளுக்குத் துன்பமும் கொடுக்கும்

அட்பட்டான் மிருகண்டு முனிபுதல்வ னுன்முனிந்த
வகில நாதன்
றுட்பட்டா னேதாகபட்டி றந்தானந் தகன்சிவன
தடியார் காலிற்
றாட்பட்டே விளங்குரத்ன கிரீடசந்திர பீடனெனுஞ்
சோழ னேவில்
வேட்பட்டா பிடேகசொரூபகனேயென் றகத்திய முனி
விளம்பி னானே (7)

சிவனுக்கு அடிமைப்பட்டவரான மிருகண்டு முனிவரின் புத்திரனாகிய மார்க்கண்டனுக்காக முனிவடைந்த அகிலாண்டங்களுக்கு நாயகனாகிய பரம சிவன் பாதம் பட்டுப் பாதலத்திலே விழுந்து இறந்தான்யமன சிவனடியாருடைய பாத தூளி அணிந்திருக்கின்ற நவரத்தினப் பிரகாசம் பொருந்திய கிரீடம் தரித்த சந்திரபீட சோழராஜனே கருப்புச் சிலை தரித்திருக்கும் மன்மத ராஜஸ சொரூபனே என்று அகஸ்திய ரிஷி திருவுளம் பற்றினார்.

நிறந்தருசெஞ் சடாடவியார் முனிவினுல் யமபதவி
நிலைநி லாமற்
பிறந்தாரொன் றனந்தமெனக் கதித்ததன்றி யுடல்விட்டுப்
பெயர்ந்து சீவ
னிறந்தார்க ளிலைமனித ரளவோமற் றுளவுயிர்க
ளெண்ப வெல்லா
மறந்தாழ்ந்து பாவமுயர்ந் தறிவகன்று திணைமயங்கிற்
றவனி தானே (8)

பின்னும் அகஸ்தியர் திருவுளம் பற்றுவார் அக்கினி நிறம் படைத்த சடாதாரரான பரமசிவன கோபத்தினுலே யமன பட்டணமழிந்து நிலையிலாமற போனபடியினுலே பூலோகத்திலே பிறந்த மனிதாகளெல்லாம ஒன்று கோடி அநந்தமாய் மிகுந்ததலலாமல இறந்துபோனவாகள ஒருவருமிலலை அளவில லாமல இப்படி மனிதாகள் மிகுந்தாகள் மறறப பிராணிகளும இவவளவென று சொல்வதற் கரிதாய எங்கும பரவி நெருங்கியபடியினுலே தாமதகளெலலாம தாழ்ந்து பாபஙகள் மேன்மேலு முயாந்து அறிவுகெட்டு உலகங்களெலலாம நிலை தடுமாறி மனமயங்கினவென்ருர்.

இலங்கியகண் டாமிருகத் தொடிபுநா மிருகஞ்சரபம
யாளி சீயம்
வலனுடையபல் லூகமுயா போதகஞ்செந் திரமேதகம
வராகம் புகம்
நிலவியகுன் றெருமை செந்நாய் கடமைகவ ரிகள்முதல
நெருக்கத் தாலே
மலைகளிடங் கொளாதுகுலை குலைந்துநிலை தகர்ந்துவிழ
மலகிற றனறே (9)

இப்படி எங்கும் பிராணிகள் மிகுந்தபடியினாலே மலைகளிலே வாஸமாகிய கண்டாமிருகங்கள், புருஷ மிருகங்கள், சரப பக்ஷிகள், யாளிகள், சிங்கங்கள், கரடிகள், மதங்கொண்ட யானைகள், வேங்கைகள், காட்டுப பன்றிகள், வானரங்கள், மலை எருமைகள், செந்நாய்கள், கவரி மான்கள், கலைமான்கள் இவைகளெல்லாம் மேன்மேலும் அதிகமானபடியினாலே மலைவனங்களிலே யிருப்பதற்கு இடமில்லாமல் பூமியிலே எங்கும் பரவிச் சூழந்துவந்தன.

விடைபசுவொட டகப்புரவி மயிடநவ்வி கருமான்வெவ
வியவடு காலி
கடலுடுசெம மறியழுங்கு நாணமொடு நாவியன
நமலி பூனை
மிடைமுயல்கோ மாயுவுடும பெலிபெருச்சா ளிகண்முதல
மிகுத்த லாலே
புடவிகளெங கணுமபறந்த தடவிகளும பொடிப்பொடியாய்ப்
போயிற றனறே (10)

பின்னும் கானகத்திலே வாஸமாயிருக்கிற, எருது, மாடுகள். பசுமாடுகள், ஒட்டைகள், குதிரைகள், எருமை மாடுகள், கலைமான்கள், கருமான்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள், கஸ்தூரிப் பிள்ளைகள், நாயிப்பிள்ளைகள், புனுகுபூனைகள், நாய்கள், காட்டுப்பூனைகள், மயில்கள், உடும்புகள், பெருச்சாளிகளெல்லாம் பூமியிலே எங்கும் பரந்து மிகுந்தபடியினாலே கானகங்களெல்லாம் பொடிப் பொடியாகப் போயின.

உறறதிமிங கிலகிலமே திமிங்கிலமே திமிதிமிலென்
றுரைக்கு மீனே
முறறுதிமி லெனுமயானை வடிவுடைய மீன்மகர
முதலமீன் வன்மீன

நத்தினங்கள் கர்க்கடகந் தவளைகம டாதிகளு
நலிவுற் றேங்கிச்
சுற்றுளதீ விலுமபறந்து சத்தசா கரங்களுநீர்
சுவற்றிற் றன்றே. (11)

யானைகளை விழுங்கத்தக்க திமிங்கல மீன்களும், அந்தத் திமிங்கில மீனை விழுங்கத்தக்க திமிங்கிலகில மீன்களும், யானைரூபத்துடனே கூடியிருக்கின்ற திமிலமீன்களும் மகர மீன்களும் மற்றுமுள்ள மீன இனங்களும், நண்டுகள், நத்தைகள், ஆமைகள் இவைகளுட மேனமேலும் மிகுந்து சுற்றிலுமிருக்கின்ற தீவுகளெல்லாம் பரவின. அதனால் சப்த சமுத்திரங்களிலுமிருக்கின்ற ஜலமெல்லாம் சுவறியது.

வஞ்சவிடத் துடனுதித்த காலகேயர்கள்வடவா
மடங்கற் கோலக்
குஞ்சியிராக் கதரசுரர் சாரணர்கின் னரியக்கர்
குறளவே தாளர்
விஞ்சையர்மா னிடர்பேதத் தொன்பதுநூ றாயிரவா
மேற்கொண் டோங்கி
யெஞ்சுபூ தமும்பெருத்த தஞ்சுபூ தமுஞ்சிறுத்த
திடங்க டானே. (12)

முன்னுரைத்த சமுத்திரத்தில் ஆலஹாலவிஷத்துடனே ஜனித்த காலகேயர்கள் வடவாக்கினிக் கொழுந்துபோன்ற நிறமுடைய குஞ்சியுடைத்த ராக்ஷதர்கள், அசுரர்கள், சாரணர், கின்னரர் இயக்கர்கள், வேதாளங்கள், பூதகணங்கள், விஞ்சையர்கள் இப்படிப்பட்ட ஒன்பது விபரீதமான போகளும், ஒன்பது லக்ஷங்களுக்கு மேலாகப்பெருகினர். பூமி எங்கும் பூதங்கள் சஞ்சரித்துப்பெருகின. ஆகையால் பஞ்சபூதரூபமான மண், நீர் நெருப்பு, வாயு வெளிகளெல்லாம் கொள்ளுகிறதற்கு இடமில்லாமல் சிறுத்துப்போயின.

அந்தணாமன் னவர்வசியர் தபதிமய னிரணியகா
ரகரே சிறப
ருந்துகஞ்சக் காரர்சிலா மயருவணர் குயிலுவர்கா
ருகர்கு லாலர்
நந்திசவுண் டிதர்நடனர் நாவிதர்கா ழியருழவர்
நறவோர் நீசர்
தந்தமிகு தியிலமைந்தார் பாடியெல்லா மூழ்மக்கட்
சாடி தானே. (13)

பிரம்ம ஞானத்தைப்பெற்ற பெரியோர்கள், சௌரிய சாலிகளாகிய ராஜ கூட்டங்கள், தனம்படைத்த வைசியர்கள், கொல்லர், தச்சர், தட்டார், கன்னார், கல்தச்சர், உபபிலியர், தோற்கருவி முதலாகிய பஞ்சவாத்தியத் தொழிலாளர் ஆடை நெசவு தொழிலினரான கைக்கோளர், குசவர், செக்கார், கள் விற்கிறவர், கூத்தாடிகள், டொம்பர், நாவிதர், வண்ணார், பள்ளர், மதுபானம் பண்ணப் பட்ட பறையர் இந்த ஜாதியாரெல்லாருமிருந்து ஊர்கள் பட்டணமெங்கும் நிறைந்து விருத்தராயிருந்தனர்

கதித்துமட்டுப் படாதுபல கோடியில்லா வுயிர்களெல்லாங்
 காட்டிற் சேர
திதிப்படுபட் டினங்களாம்பல நகரிலவா ழுயிர்களெல்லாஞ்
 சிகரி சேர
மதித்தறிதற் கரிதாகி வனத்தில்வா ழுயிர்பலசீ
 வனத்துடன் சேர
அதிர்த்தெழுந்த தரத்துலவு சீவனுங்க தரந்தினைச்சென்
 றனாவிற் றன்றே. (14)

யெனமேலுமளவில்லாத உயர்ந்த கொடுமுடியுடனே கூடின மலைகளிலே யிருக்கிற மிருக ஜீவன்களெல்லாம் காட்டிலேவந்து சேர்ந்தன பூமியிலே நிலை யான பட்டணங்கள் நாடுகளிலிருக்கிற ஜனங்களெல்லாம் மலையிலேபோய்ச் சேர்ந்தனர் கணித்துச் சொல்வதற்கரிதாகிய கானகத்தில் வாஸமாகிய ஜீவனக ளெல்லாம் சிறப்பாகிய சோலை தடாகங்களில் போய்ச் சேர்ந்தன இப்படி ஒன் றுக்கொன்றிருக்க இடங்கொடாமல் கோவென்ற சப்தத்துடனே எங்குமிட வெளியில்லாமல் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற சர்வப்பிராணிகளினுடைய உயி ரானது தொண்டையளவில் வந்து துடித்துக் கொண்டிருந்தது

புரந்தரனோ கழுமெழுந்த கமைந்துள்ள வலைமுழு
 புயங்க வேந்த
னிரந்தரமோ கழுமுடுக்க னிறைந்துறைமண் டலங்களுமுன்
 னீருண் டாற்பச்
சுரந்தெழுமே கமுமுருமு மின்னுமன்னு திசைகளுமற்
 றுளதிக ளெல்லாம்
பரந்ததுயி ருறியதா னியங்கடத்து ளடங்கரத்து
 பரந்ததே போல. (15)

தேவேந்திரலோகமும், மற்ற எழுபேர்கள் காவலாயிருக்கிற திக்குகளும், நாகராஜனுடைய பாதாள லோகமும் உடுக்கள் நிறைந்துள்ள மண்டலங்களும், கடலில் நீருண்டமேகத்தின் இடியும் மின்னலும் நிறைந்த திசையும் மற்றுமுள்ளதிக்கும் சர்வப்பிராணிகளும் செழித்து பரந்து உயிர்போகாமல் அடங்காமல் வாழ்ந்திருந்தன இது எப்படியிருந்ததென்றால் அளவில்லாத தானியங்களைச் சிறு குப்பங்களிலே வாரி எடுத்தால் அடங்காமல் வழிந்து நாற்புறமும் சிந்துவது போலே இருந்தது

தாரணிமேல் மனுக்களொடு சினத்தெழுந்த விலங்கினொரு
சரித்த லாலே
தோரணவீ திகள்சிறந்த புரங்களெங்கு மாண்குறைந்து
தொலைவி லிருந்
சீரணித்து வேள்வியர சாட்சிகளு மாட்சிமையுஞ்
சிதைந்த தப்பா
வாரணிய மாய்நிறைந்த தகிலமெலா நிலைதடுமா
றுயிற் றன்றே. (16)

பூலோகத்திலே சஞ்சரிக்கிற மனிதர்களுடனே கோப பராக்கிரமம் பொருந்திய மலைகளிலிருக்கிற விலங்கினங்கூடிச் சஞ்சரித்தபடியினாலே பகாதோரணம் பொருந்திய வீதிகளோடும் கோட்டைகளோடும் கூடிய பட்டணங்களிலுள்ள சிறப்புகளெல்லாம் குறைந்து ராஜபராக்கிரமம் இழந்துபோனபடியினாலே பின்னுமிருக்கிற பூலோகமுழுதும் ஆரணியமாய நிலைகுலைந்து தத்தளித்தது.

துன்றுகின்ற பசிக்கிலைகாய் கனிகிழங்கு மலர்செழுந்தேன்
சோற்றைப் பாலை
மென்றுதின்று குடித்தருந்தி யிருந்ததன்றி யொன்றிலொன்று
மெலியக் காய்ந்து
கொன்றுதின்ற திலைகொடிய பாதகத்தி லொன்றதன்று
குறையா நான்கு
நின்றதுமுன் னவனிமுந்த வுரிமையைத்தம மியாநிறுத்த
நிலைத்த தேபோல. (17)

பின்னும் சர்வப்பிராணிகளும் அதிகப் பசியினாலேயும் தாகத்தினாலேயும் வனங்களிலிருக்கிற இலை காய் கனி கிழங்குகளைப் பல்லினாலே மென்று தின்று புஷ்பங்களில் சொரியப்பட்ட தேன்களையும் விருக்ஷத்தினுடைய பால்களையும் குடித்து வனமூலங்களிலிருக்கிற சோற்றைப் புசித்துக்கொண்டிருந்தனவே யல்லாமல் ஒரு பிராணி மற்றொரு பிராணியை வதைசெய்து கொன்று தின்ன

இல்லை. அது எதுபோலவெனில கொடிதாகிய பஞ்ச மகாபாதகத்திலே ஒன்றாகிய கொலைசெய்வது நீங்க மற்ற நாலுபாதகங்களும பூமியிலிருந்தன தாயன் இழந்துவிட்டுப்போன காரியத்தைத் தம்பிமார்களிருந்து நிலைநிறுத்திக் கொடுப்பதுபோல இருந்தது.

வேதியர்கள் வேதமந்த்ர தந்த்ரகற்ப செபதபத்தின்
வேட்கை நீத்தார்
நிதிமன்ன ரநியாய துராசையின ராய்வலியு
நிலையு நீத்தார்
கோதில்வை சியர்தேவ பக்திதய வின்றிலுத்த
குணத்த ரானார்
ஓதியசூத்திரரிகழ்ந்தா ருழவுமுதல் களவுதொழி
லுகந்தா ரன்றே. (18)

பிராமமணரான பேர்கள் வேதமோதுவதையும் காயத்திரீஜபத்தையும யாகாதி கருமங்களையும் கிராசையாய விட்டுவிட்டார்கள் நீதி பொருந்திய ராஜாக்கள அந்தவழியில நின்று திரவியத்தினபேரிலே துராசைப்பட்டுத் தங்கள பராக்கிரமும நிலையும இழந்தார்கள வைசியர் தேவதா விசுவாசமும அமிர்தகுணமும நீங்கி உலுத்த குணமடைந்தார்கள் யாவருக்கும உதவியாயிருக்கும சூத்திரர் பயிரிடுகிற தொழிலை ஒழித்து திருடுகிற தொழிலை விரும்பினார்கள.

வானியங்கு மழைபொழியா தொழிந்துமாட மாதர்கற்பு
வரம்பு மீறித்
தானமின்றித் தவங்களின்றிக் கொடுத்தலின்றித் தயவுடனு
தரவு நீங்கி
நானிலத்தி லியற்றுகட வுளர்சிறப்பு நாரணர்சந்
நிதியும் பாழ்போய்
ஆணியங்கு கொடிநிலைத்த சிவதலமுஞ் சூனியங்க
ளாயிற் றன்றே. (19)

இப்படி பூலோகத்திலே அதர்மம மிகுந்தபடியினாலே மேகங்கள் மழை பொழியா தொழிந்தன மாதரின கற்புநிலை யழிந்தது தான தவங்களுங குறைந்தன தயவுடனே உபசாரம சொல்லி ஆதரிக்கிற பேர்களுமில்லா தொழிந்தனர் பூமியில எங்கும விஷ்ணு வாலய சிவாலயங்களில பூசை நடவா மல யாவும பாழடைந்தன

போதக்காய்த் திடுதனது காய்களாற் றருக்களுங் கொம்
பொடிந்து சோரும்
கோதையான் முடித்தமைத்த சிகழிகையி னலுமலர்க்
கோதை யாலு
மாதரா ரிலகுகன தனத்தாலு மெலிந்தொசிந்து
மருங்குல் வாடு
நீதிபோற் றழைத்ததுயி ரிளைத்ததுமே தினியியற்கை
நீதி தானே. (20)

நிரம்பவும் நெருங்கிச் சாய்ந்திருக்கின்ற விருக்ஷங்களின் கிளைகள் துவண்டு சாய்ந்து வளைவதுபோலவும் நீண்ட கூந்தலிலே அநேகம் புஷ்பங்களுடனேகூடி வண்டுகளாரப் பரிக்கும் புஷ்பமாலைகள் முடித்த அளகபாரத்தினலும் பொற்பிர காசம்போன்ற மகமேருகிரிபோல இறுமாந்த ஸ்தனபாரத்தினலும் மெலிந்து வளைந்து துவண்ட இடையையுடைய மாதர்கள் போலவும் உலகத்து மக்களெல் லாம் தத்தளித்தன.

அந்நாளி னீசிவனாந் தென்வடக்கிலோ சனையளவைபொன்
றடுத்த மேல்கீழ்
பன்னறு மனுக்களொடு பசுக்கள்கதித் திடப்பசிநோய்
பகைஞ ராதி
யின்னுத லொழிந்துகலி துயந்துசிவ கணங்களுரிமைக்
கிறுதி யோர்ந்து
தந்நாளின் முடிக்கிடநின் றனதழைத்துச் சிறந்ததுசந்
ததமுந் தானே. (21)

அப்படி உலகம் தத்தளித்து வாதைப்படுகின்ற நாளிலே திருப்பைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்துக்குத் தெற்கு வடக்கில் ஒரு யோசனை தூரமட்டும் கிழக்கு மேற்கில் அரையோசனை தூரமட்டும் பல நாட்களும் மக்களுடன் பசுக்களும் விர்த்தியாயின. எல்லாரும் பசிநோயகன்று பகைவர்களின் வாதையும் வறுமையுமின்றி, சிவகணங்களுடைய ஆக்ஞையினலே ஜனன மரணங்கள் எப்போதும்போலே நடைபெறப் பயமில்லாமலிருந்தனர்

காசியிம கேதார மல்லிகார்ச் சுனகிரிகோ கரணங் காஞ்சி
மாசிலரு ணசலங்கா ளத்திவிருத் தாசலமா மாதை கோவல்
வீசுபுக ழாரூரம் பலம்வேத வனநாகை வீழி காழி
தேசுதிகழ் பூவணங்கா ரோணமயி லாடுதுறை திருநள் ளாறே. (22)

இரதப் பிரகாரம் சுவேதகிரி விளங்காநிற்க, காசி, கேதாரம், மல்லிகாச் சுனகிரி, கோகர்ணம் காஞ்சி, குற்றமில்லாத திருவருணாசலம், திருக்காளத்தி, விருத்தாசலம், லக்ஷ்மி விலாசம் பொருந்திய திருக்கோவலூர், பிரகாசமான புகழ்படைத்த திருவாரூர் திருமறைக்காடு, திருநாகை திருவீழிமிழலை, சீகாழி, பிரகாசம் பொருந்திய திருப்புவனம், நாகப்பட்டணம், மாயூரம், திருநள்ளாறு.

ஆவடுதண் டுறைகுடந்தை புறம்பியம்வாஞ் சியநாகேச்
சரமை யாறு
பாவவிநா சனந்திருப்பூந் துருத்திகண்டி யூர்மருது
பழனம் வான்மி
காவைதிரு மழபாடி சிரகிரிதென் முற்கீசங்
கானூர் பாச்சின்
மேவுபராய்த் துறைகடம்பந் துறைதிருவாட் போக்கிதிரு
வீங்கோய் தானே. (23)

திருவாவடுதுறை, கும்பகோணம், திருப்புறம்பியம், திருவாஞ்சியம், திருநாகேச்வரம், திருவையாறு, பாபவிநாசம், திருப்பூந்துருத்தி, கண்டியூர், திருவிடைமருதூர், திருப்பழனம், திருவான்மியூர், திருக்காவை, திருமழபாடி, திரிசிரபுரம், உறையூர், திருச்சானூர், திருவாசி, திருப்பராய்த்துறை, திருக்கடம்பந்துறை, ரதனகிரிசுவாமலை, திருவீங்கோய்மலை

கருவைகொடு முடிமுருகன் பூண்டியவி நாசியஞ்சைக்
களமே பேரூர்
திருவால வாய்கொடுங்குன் றேடகம்இ ராமீச்சந்
திருக்குற் றாலம்
மருவுபரங் குன்றுதிருப் பெருந்துறையுத் தரகோச
மங்கைத் தானந்
திருவாப்ப னூர்திருக்கோ ணாசலநற் கேதீச்சரமே
திருநெல் வேலி (24)

பின்னும் கருவூர், கொடுமுடி, திருமுருகன்பூண்டி, அவிநாசி, திருவஞ்சைக்களம், பேரூர், மதுரை, திருக்கொடுங்குன்றம், திருவேடகம், ராமேசுவரம், திருக்குற்றாலம், திருப்பரங்குன்றம், திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவாப்பனூர், திருக்கோணாசலம், திருக்கேதீச்சரம், திருநெல்வேலி

ஞாலத்தா னமதடுத்த தலத்தி னுகந் திருந்துநிசி
நடுவிற் போந்து
மூலத்தா னமதடைந்து விளங்குசிவ கலைகளெல்லா
முன்பு கூறு

மேலைத்தா னமதனைத்துஞ் சிறப்பகன்று நீங்கியது
    மிடற்றிற் பூத்த
நீலத்தா னீலிவனத் தானத்தா ரித்தமர்ந்து
    நிலைத்த தன்றே. (25)

இப்படிப்பட்ட பிரதானமான ஸ்தலங்களை முதற்கொண்டு மற்றுமுண்டாகிய ஸ்தலங்களிலே எழுந்தருளியிருக்கின்ற மூலஸ்தானத்தில் வாஸமாய் விளங்கிய சிவகலைகளெல்லாம், ஸ்தலங்களினுடைய சிறப்பு நீங்கியபடியினால் தங்கள் பதி விட்டகன்று, நிசி வேளையாகிய அர்த்த ராத்திரியில், புஷ்பித்திருக்கின்ற நீலோத்பலம் போன்ற கண்டத்தையுடைய பரமசிவன் விளங்கியிருக்கிற நீலிகாவனமான ஸ்தலத்தில் ஆதாரமான தாயிடத்திலே பிள்ளைகள் வருவது போல வந்து சேர்ந்து நிலைத்தன

திருவுருப்பெற் றிலகுபதி னொருகோடி யெனச்சொலுருத்
    திரர்தஞ் சூழ
வருள்பெருகு கயிலாய வாசரிருந் திடுகாட்சி
    யதுவே போலக்
கருதரிய மகிமையொடு வளர்தவள கிரிமருவு
    கவுரி பாக
ரிருநிலமீ துலவுசிவ கலைபொருங்கி னிறைந்திட வீற்
    றிருந்தா ரன்றே. (26)

சிவரூபம் பெற்றிருக்கப்பட்ட பதினொரு கோடி ருத்திரர்களென்று சொல்லப்படா நின்ற தேவதைகள் பக்கத்திலே சூழ்ந்திருக்கும்படி நிரம்பிய கிருபா சமுத்திரத்தோடுங்கூடின கைலாசபர்வதத்திலே ருத்திர நாயகன் எழுந்தருளியிருக்கின்ற காட்சிபோலும், மனதிலே அளவிடற்கரிதாகிய சிறப்புடனே கூடின சுவேதகிரியிலே வாஸமாய் எழுந்தருளியிருக்கின்ற பார்வதி பாகனான நீலிவன நாதர் பெருமை பொருந்திய பூலோகத்திலேயிருக்கிற சிவகலைகளெல்லாம் பக்கத்திலே சூழ்ந்திருக்கத் தக்கதாக எழுந்தருளியிருந்தார்

சகமனைத்து மிவ்வாறு நிலைமயங்கிக் கலைகளுந்தந்
    தான நீங்கி
நிகமரத்ன சபைநீலி வனத்தினில்வந் தடங்கியது
    நிகழ்வு நோக்கிப்
புகலிடமென் றயனுலகிற் புகுந்துமலர்ச் சரண்பணிந்து
    புகழ்ந்து போற்றி
மகபதிமுன் னோர்கண் மலர்க் கமலகர முகிழ்த்துநின்று
    வகுப்ப தானார். (27)

லோக மாத்தியந்தமும் இந்தப் பிரகாரம் நிலைதடுமாறிச் சிவதலங்களெல்லாம் தங்கள் ஸ்தானங்களை விட்டுப் பிரகாசமான ரத்ன சபையாகிய நீலி வனத்திலே வந்து ஒடுங்கி யடங்கினதைத் தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் பார்த்து நமக்குச் செல்லவேண்டிய விடமெங்கே யென்று சத்தியலோகத்துக்குப் போய்ப் பிரமாவினிடத்திலே சரணபுகுந்து ஸ்தோத்திரம் பண்ணித் தாமரைபோன்ற இரண்டு கைகளையுங் குவித்துக்கொண்டு பிரமாவுடனே சொல்லத் தொடங்கினார்.

மார்க்கண்ட னிமித்தியமாய்ச் சிவன்முனிய நமனிறந்த
வந்நாண் முன்று
மேற்கொண்ட வுயிர்செய்யுந் தீவினைத்திவ் வுலகத்தனம்
மெல்லா நீங்கி
கார்க்கண்ட பிரானுறைந்த தலங்களசிறப் பணையுஞ்சிவ
கலைக ளெல்லாரு
சீர்கொண்ட புகழ்நீலி காவனத்தி னிலைகொண்ட
தெந்தா யென்றார். (28)

மார்க்கண்டன் நிமித்தமாகச் சிவபெருமான் கோபத்தினாலே யமன் இறந்துபோனான். அதுமுதற்கொண்டு உலகங்களிலே யிருந்திருக்கிற ஜனங்கள் செய்கிற பாபம் எப்படியிருந்தும்மேல் பிரபஞ்ச தோஷங்களெல்லாம் நீங்கின கறைக்கண்டரா ஈச னாகிய சிவஸ்தலங்களினுடைய பூஜை சிறப்புகளெல்லாம் நீங்கிப் போயின ஆகையினாலே ஸ்தலந்தோறுமிருக்கிற சிவ கலைகளெல்லாம் புகழும் சிறப்பும் பொருந்திய நீலிகாவனத்திலே வாஸமாய் எழுந்தருளி நிலைகொண்டன எங்களுக்குத் தாயகமான பிதாவே என்று இந்திரன் முதலாகிய தேவர்கள் விண்ணப்பஞ் செய்தார்கள்

அந்தவுரை கேட்டவய னிந்திர னோடரிபுரத்தை
யணுகி வாசச்
சந்தமலர்த் திருமாது பதந்தொழுதிவ் வரன்முறையே
சாற்றக் கேட்ட
பைந்துளபப் புயனும்பல் ரயனுமவலா ரியனுமவிண்ணோர்
பலரும் பாரமே
லெந்தைதா ளாசலத்தர் வைகியபைந் நீலியிடத்
தெய்தினார்கள் (29)

அந்த வசனங்கேட்ட பிரமதேவன், தேவேந்திரன் முதலாகிய தேவர்களுடனே கூடி வைகுண்டத்துக்குப்போய் மணம் பொருந்திய தாமரை மலரில

அனுதினமும் எழுந்தருளி யிருக்கின்ற லக்ஷ்மி நாயகனை மகா விஷ்ணுவை நமஸ்காரம்பண்ணித் தனக்குத் தேவேந்திரன் சொன்னபடி பூலோகத்தினுடைய வரலாறுகளை யெல்லாம் சொல்ல அதுகேட்ட பசுந்துளப மாலையணிந்த மகா விஷ்ணுவும், பிரம்மாவும், தேவேந்திரனும், தேவர்களுடன் புறப்பட்டுப் பூலோகத்திலே யாவருக்கும் பிதாவைப்போன்ற முத்து மலைநாதர் எழுந்தருளி யிருக்கின்ற திருப்பைஞ்ஞீலிக்கு வந்தார்கள்.

கடிகாட்டும பொழிஞீலி வனத்தரனை யுருத்திரருக்
கதமென் றோங்கும
படிகாட்டுந் துதிகூட்ட வுயர்தருக்க ளெழுதனிலே
பாரெ லாமோ
ரடிகாட்டு மழவிடைமேற் றரிசனத்தைக் காட்டினாதம
மருங்கி லேபூங
கொடிகாட்டி னரிடபக் கொடிநாட்டி னர்மரத்தின
குலத்தின் மீதே (30)

வாசனைப் புஷ்பங்கள் நிறைந்துள்ள பூங்காவனச் சோலைசூழ்ந்த ஞீலிவனத்தில வாஸமான சிவபெருமானை ருத்திர சூக்தத் தியானம பேணமேலு முயருமபடி காணத் தக்கதாய் விஷ்ணு முதலாகிய தேவர்கள் ஸ்தோத்திரம்பண்ண, உயர்ந்த விசேஷங்கள் பொருந்திய பூமியெல்லாம ஓரடியாலளந்த மகாவிஷ்ணு ரூபமான ரிஷபத்தின் பேரில் சிவபெருமான் எழுந்தருளித் தரிசனங் கொடுத்தார் இடது பக்கத்தில் பசுங் கொடிபோன்ற பார்வதி தேவியாரின் தரிசனமும் காட்டினார் ஸ்தலத்திலே யிருக்கின்ற விருக்ஷங்கள் தோறும் ரிஷபக்கொடி தோன்றுமாறு திருவருள் புரிந்தார்

கோடுயர்ந்த மரத்தினது முடிகளெல்லா முயரிடபக்
கொடிக டோன்ற
நாடுகின்ற கடவுளர்கண் களிகூர மகிழ்வொடுபிஞ்
ஞகனைக் கண்டார்
வாடுகின்ற பசும்பயிர்த ளாடுகின்ற துயர்தணிக்கு
மழைகண் டாற்போல்
வீடுகின்ற பழவினைக்கு விடைகொடுத்தார் துதியெடுத்தார்
விளம்பு கின்றார் (31)

விருக்ஷங்கள் தோறும் ஓங்கிய கொப்பு நுனிகளிலே உயர்ந்த ரிஷபக் கொடியாட, அதுகண்ட விஷ்ணு முதலிய தேவர்கள் எல்லாம கண்காட்சியான சந்தோஷத்துடனே பரமசிவனைக் கண்ட மாத்திரத்திலே நிலை நில்லாமல

தலைதுவண்டு சோம்பி யிருக்கிறபோது அதனுடைய வருத்தம் தீரும்படி சூல்கொண்டமேகம் வர அதைக்கண்ட பசும்பயிர்போல மகிழ்ந்து தங்களை இதுவரை வருத்திய ஜென்மாந்திர வினைகளைத்தும் நீங்கியவர்களாய் ஆனந்தத்துடன் பரமேசுவரனை ஸ்துதிபண்ணத் தொடங்கினார்கள்.

தாரணிசேர் தருக்களின்மீ தெலாமிடபக் கொடிகாட்டுந்
　　தன்மை யாலே
யாரணிய விடங்கரென்னுந் தமதுகருத் தறிந்துவடி
　　வனந்தங் காட்டக்
காரணசா வஞ்ஞரென்று மதிக்கவுந் தரமான
　　காட்சி யாலே
பூரணசுந் தரக்கடவு ளிவரெனவுந் துதித்தார்ப்ப
　　போதுதானே (32)

பூமி யாதியந்தமுமா விளங்குகின்ற விருக்ஷத்தின் முடியெல்லாம் ரிஷபக் கொடி காணபித்தபடியினாலே ஆரணிய விடங்கரென்னும் தங்களுடைய மனோ விரத மறிந்து ஆனந்த ரூபத்துடனே கூடி தரிசனம் கொடுத்த படியினாலே காரணமான சாவஞ்ஞரென்றும் பூரண சந்திர பிரகாசம்போன்ற அழகு பொருந்திய ஈசுவரி இடது பாகத்தி லிருக்கும்படி எழுந்தருளின படியினாலே பூரண சுந்தரக்கடவுளென்றும் சொல்லப்பட்ட பெருமான் இவரே என்று ஸ்தோத்திரம் பண்ணிப் பின்னுஞ் சொல்லுவார்கள்

குறையாம லேசகத்தி லுயிர்களுக்கு சுகத்தைமிகக்
　　கொடுத்த தாலே
நிறைபரம சம்புவென்று மனைத்துளமூர்த் திகளகலேயு
　　நிலைமை யாய்வந்
துறையுநித்திய வாதார கலாமூர்த்தி யாதலினு
　　லுவந்தென் னாளு
மறைபரவு சுவேதகிரி மகாதேவ ரெனத்துதித்தும்
　　வணங்கி னார்கள் (33)

பூலோகத்திலே பிராணிகளுக்குக் குறைவு வாராமல் மிகுந்த சுகத்தைக் கொடுத்தபடியினாலே நிறை பரம சம்புவென்றும், ஸ்தலங்களிலே யிருக்கின்ற மூர்த்திகளாகிய சிவகலைகளுக்கெல்லாம் மாதாவாய் வந்து நிலையாயிருந்தபடியினாலே நித்தியமான ஆதாரகலா மூர்த்தியென்றும் நாமதேயமுடையவராதலின் எந்நாளும் சந்தோஷத்துடனே வேதங்கள் ஸ்தோத்திரம் பண்ணுகின்ற சுவேத கிரி வாசரான மகா தேவரே என்று துதித்து வணங்கினார்கள்.

வாட்டினு னமனையிவ்வா றெனப்புகன்று னினித்திரும்பா
வழிய தாக
வீட்டினு னெடியவிந்த வரையையன்று தாழ்முழுது
வெற்பினை மேற்கை
நாட்டினன் பரவுகொடு முடிவாண ரிவரெனவு
ஞான நாட்டன்
சூட்டினன் பிடிக்குளடங் கியநாத னெனப்பெயருஞ்
சூட்டி னானே (34)

இனிமேல் திரும்பாதவழியாகப் பாதாளத்திலே தாழ்ந்து அமிழ்ந்து போகும்படி நெடிதாகிய விந்தகிரியையின் காலமடக்கி, சுவேதகிரியிலே எழுந்தருளியிருக்கிற வரதனை ஞானக் கண்ணினாலே யறிந்து தரிசனம் பண்ணியவரும் தேவதைகள் பிடிக்குள் அடங்கும் அங்குஷ்ட விரல் பிரமாண உயரம் வளர்ந்து இருக்கின்றவருமாகிய அகஸ்திய முனிவர் இந்தப் பிரகாரம் யமனை வாயடைப்படி யுதைத்துப் பாதாளத்திலே இறந்து போகும்படி தள்ளினார் பரமசிவனென்று திருவுளம்பற்றினார் என்றவாறு

---

## பதினோராவது அதிகாரவல்லவர் அத்தியாயம்

படந்திகழ்பன் னகஞ்செறிகங் கணம்புனைந்தி மலனருய
பசிய சாயன்
மடந்தைதிக ழாரணிய விடங்கர்சரித் திரங்கேட்ட
மகிமை யாலே
தொடர்ந்தவிரு வினையின்வழி வருசனன சலனமெல்லாந்
தொலைத்தே னிப்பா
னடந்ததுரைத் தருளென்று குடந்தைவள வனுக்குமுனி
நவிலு கின்றான். (1)

படத்துடனே கூடின நாக சர்ப்பத்தைக் கையிலே கங்கணமாயணிந்து சுத்தப் பசுந் திருமேனி படைத்த பார்வதி தேவியார் ஒரு பக்கத்திலே பிரகாசிக்கும்படி எழுந்தருளியிருக்கின்ற ஆரணிய விடங்கர் சரிதைகேட்ட மாத்திரத்திலே அடியேனைத் தொடர்ந்து வருகின்ற பாப புண்ணியங்களின் வழியால் வரும் மரண துன்பமான சஞ்சலங்களெல்லாம் தொலைத்துவிட்டேன். இனிமேல் நடந்த விருத்தாந்தங்களைத் திருவுளம்பற்ற வேண்டுமென்று வணங்கிக்கேட்ட கும்பகோணத்தில் வாஸமான சந்திரபீட சோழராஜனுக்கு அகஸ்தியர் சொல்லுவார்.

குறித்துரைத்துத் துதிகேட்டருட் சலிகாட்டித் திருக்காட்சி
கொடுத்த நாதர்
மறித்தும்வர வில்லையென்பார் நேசிப்பார் பூசிப்பார்
வாழ்த்தி யேத்தி
நெறிப்படுவா றறிப்படுபால் வாஞ்சையுற்ற பூனையைப்போ
னேடி யோடி
வெறித்துழல்வார் பிறர்க்குதவிக் குடன்பட்டார் கடன்பட்டார்
மெலிவைப் போலவார். (2)

ஆரணிய விடங்கரென்றும், பூரண சந்திரரென்றும், பரம சம்புவென்றும், ஆதார கலா மூர்த்தியென்றும், சொல்லி ஸ்தோத்திரம் பண்ணியதுகேட்டு அபயஸ்தம் கொடுத்த பரமசிவனைவர், திரும்ப எழுந்தருளி வரவில்லை என்று கூறுவார்கள், பூஜை செய்வார்கள், ஸ்தோத்திரம் பண்ணுவார்கள், நமஸ்கரிப்பார்கள், உறக்கியாய்த் தேடுவார்கள் அது எதைப்போலவென்றால் உறியிலே பால் வைத்திருப்பதைக்கண்ட பூனையானது பாலின் பேரில் இச்சைகொண்டு நாலுபக்கமும் ஓடி வழி தேடிக் காணாமல் நின்று மயங்கியிருப்பதுபோலவும், பிறருக்குச் சகாயம் செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி உடன்பட்டு முயற்சியாய்த் திரிகின்ற மனுஷியர்போலவும், அநேகம் கடன்களை வாங்கிப் பின்னும் மேன்மேலுண்டான தாபம் வரப் பயந்த குடிகள் மெலிவடைந்ததுபோலவும் விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லாம் மனத் தளர்ச்சியடைந்திருந்தார்கள்.

அத்தகை யினியலிங்க நாயகற்குத் தென்கீழ்பா
ரிசத்தி லேநூற்
பத்தெண்ணா யிரமலைமேன் முனிவர்களு மதித்திகிழ்
பாலின் மேலா
முத்திசேர் தேவர்கடைத் திருமலைமேற் றேவர்களு
மூவர் தாமு
மெத்தவமு மொடுங்காம னெடுங்காலம் புரிந்தார்வீற்
றிருந்தா ரன்றே (3)

அத்தகைய இனிய லிங்கநாயகருக்குத் தென்கீழ் பாரிசமாயுள்ள நூற்பத்தெண்ணாயிரம் மலைகளின்மீது முனிவர்களும் சகல தேவர்களும் வந்திருக்கிறபடியினாலே அவர்களுக்குக் காவலாக சில தேவர்களிருந்து காக்கின்ற, கீழ் பாரிசமாயிருக்கிற மலையிலும் மகாவிஷ்ணு முதலாய தேவர்களும் முனிவர்களுமிருந்து அநேகம் தபசுகளை அனுதினமும் செய்தார்கள்

தேவரா னவருமிக்க முனிவரு மாலயனிந்
திராதி யான
மூவரா னவர்கள் வந்து மமலன்மன மீதில் வைத்த
முனிவு தீரார்
யாவர்தா மொருவருக்கோ ருதவிசெய்ய நினைத்தால்வந்
தெய்துங் கால
மாவதன்றி யிடைநடுவே முடியுமோ முடிப்பதுமற்
றரிது தானே (4)

முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் பிரம்மா விஷ்ணு தேவேந்திரன் முதலான மும்மூர்த்திகளும் அநேககாலம் வாசமாயிருந்து தபசுபண்ணியும் பரமசிவனனவர் யமன் பேரில் வைத்த கோபம் தீர்ந்தாரில்லை அது எதைப்போலவெனில், லோகத்திலே ஒருவருக்குதவிசெய்ய வேண்டுமென்று மனத்திலெண்ணி அநேகம் பேர்கள் கூடிப் பிரயத்தனம் பண்ணினலும் அவனுக்கு ஜயகாலம் வந்து அடுத்தபோது அது நிறைவேறுமல்லாது இடைநடுவிலே முடியுமோ முடிவது அரிதன்றோ?

கண்ணினு லெரிந்தமதன் பொடியாக வடிவைவரக்
கண்டோ மில்லை
விண்ணினோர் பரவுதக்கன் மறித்தலைபெற் றான்மறித்து
மீட்டோ மில்லை
எண்ணினன் முடியுமென்ப தபமிகு தபோபலம் வந
தெய்து மாறு
பண்ணினு னடுவனைவிட் டிடுவனென வவர்தவமே
பயில்வ தானார் (5)

முன்னளிலே சிவபெருமான் கோபத்தினல் மன்மதனை நெற்றிக் கண்ணலே எரித்துச சாம்பலாக்கிய ரூபத்தை மறுபடி ரூபமாகும்படி செய்ததும் நாமல்ல தேவர்களும் வணங்க மகிமைபெற்றிருந்த தக்கன் ஆட்டுத்தலை யடைந்ததை மாற்றி அவனுடைய சுயதலை வரும்படிசெய்து அவனை மீட்டுக்கொண்டது நாமல்ல இப்பவும் யமனை எழுப்பச் சொன்னல், அந்தப்படி சித்திக்குமென்பது சபல சித்தமாகையால் நாமெல்லோரும் தபசு பண்ணினல சிவபெருமான் யமனை எழுப்பிவிடுவாரென்று தீர்மானித்து விஷ்ணு முதலாகிய தேவாகளெல்லாம் தபசு செய்யத தொடங்கினார்கள்

காமியா தனகாமித் திரணியசுந் தோபசுந்தன்
கயனை கால
நேமியார் காலமுமிக் காலனில்லாக் கொடுங்கால
நிகரோ வென்று

மாமியார் வரமுமரு மகளவரமுந கொடாதிருநதாா
வலிய பாரம
பூமியாள் பொறுத்திரு மாலமர்பைஞ் ஞீலியிலப
போது சாரநதாள் (6)

இரணியன், சுநதோபசுநதன, கயன், காலநேமி இவாகளுடைய காலங களிலே வநத அவதி இப்போது வந்திருக்கிறதென்று ஒரு காலததையும நிசசிட் டுச சொல்லப்போகாதென்ற எண்ணி யவாகளுக்குக் குறைவில்லாத பூமியும அறிவான கலவியும கொடுததவரல்ல, இநதக காலத்தில யமனில்லாத வலி தான காலம வநததைப பாராமல விஷ்ணுவானவா சுமமாவிருக்கிறாரென்று மனக்கிலேசமுற்றுப் பூமாதேவியானவள விஷ்ணுவிருநது தபசு பண்ணுகின்ற திருபைஞ்ஞீலிககு வநதாள

தன்னைப்புரநது மருப்பிலவைததுந தன்னைத திருவுநதியினில்வைததுந
தாண்மேல வைததுந
தன்னைப்புணாநது முதுகிலவைத்து நுதலில்வைத்து முண்டுமிழ்ந
தன்னை யேற்றுத் [ துந
தன்னைத்தான மெனககொடுததுந தன்னையிடநதுமம விளையாடுந
தலைவ னானோர்
தன்னைக்கண்டா ளினையடிக் தூய மாமுடிசூட டினாளோ பூநதா
டரணி தானே. (7)

இராமாவதாரததிலே தன்னை அரசனாயிருந்து காததும வராகவதாரததிலே தன்னைக கொம்பிலே வைததும ஆலிலையில பள்ளிகொணட காலததிலே தன்னை வயிற்றிலே வைததும விசுவரூபமெடுதத காலததில தன்னைப பாதத திலே வைததும வைகுண்ட வாஸனாயிருககும்போது தன்னைப் புணாந தும ஆமைரூபமாய இருககும்போது தன்னை முதுகிலே தாங்கியும். வராக ரூபமாயிருக்கும்போது தன்னை நெற்றியிலே திருமணணாகத தரித துர், ஆதி நாராயண ரூபததிலே தன்னை உண்டு மிழ்நதும, வாமன ரூபத திலே தன்னைத தானம வாங்கியும், பாசுராம ரூபததிலே தன்னைத தான மாகக கொடுததும், பலராம ரூபததிலே தன்னைக கலப்பைகொணடுழுதும, இநதப்படி சதாகாலமும தன்னுடனே கூடிவிளையாடுகின்ற தலைவனான மகா விஷ்ணுவை பூமாதேவியானவள் கண்டு அவருடைய பாததிலே தன்னுடைய கிரீடம் பொருந்தும்படி வணங்கி எழுநதிருநதாள

முல்லைநகைப் பவளவிதழ்க் குவளைவிழிப் புவிமயிலை
முகுந்த னோக்கி
மெல்லியலே மிருகண்டுசுதன் காரணத்தா லுனதுநல
மெலிவுற் றாயோ
நல்லவருக் கிடர்களைச்செய் தல்லலுறைப் பவருழைத்தான்
ஞால மீதில்
வெல்லவர்க்கும் வருமெனச்சற் றறிகிலனோ வுறுதிகெட்ட
வியமன் றானே (8)

முல்லையரும்பைப்போன்ற நகையும், பவளம்போன்ற அதரமும் குவளை மலர்போன்ற விழியும், மயில் சாயை போன்ற மேனியும் படைத்த பூமாதே வியை விஷ்ணுவானவர் பார்த்து, பெண்ணே மிருகண்டு மாமுனி புத்திரனாகிய மார்க்கண்டனிமித்தம் உன்னுடைய சரீரமெல்லாம் தளர்ச்சியடைந்தாயோ நல்ல பெரியோர்களுக்கு விக்கினங்களைச் செய்தால் செய்தபேர்கள் அவதிப்படுகிறது மல்லாமல் உலகங்களிலிருக்கிற பேர்களுக்கெல்லாம் அவதிபீடிக்குமென்று நிஜ மாய் எண்ணமற் போனானோ புத்தியில்லாத யமன்

தோன்றலைக்கொண் டுலகமெலாம படைத்தவனை முக நோக்கிச்
சொல்வாள் பூமி
யென்றுலக பாரமிகுத் திடாதுசமப் படநிறுத்த
யமனி லாம
ஞன்றனக்கோர் முடிப்பார மனந்தனுக்கா யிரமுடியு
நலிந்து சாய்ந்தான்
றுன்றளம்பு வார்பிறருக் கூன்றுகோ லாகுமென்னுந்
தன்மைத் தாமே (9)

தன்னுடைய பிள்ளையாகிய பிரம்மாவைக கொண்டு உலகமுண்டா கும்படி செய்த விஷ்ணுவினுடைய முகத்தைப் பார்த்து பூமாதேவி சொல்லு வாள். பூமியிலே பாரமுயராமல் சமனாக நிலை நிறுத்துகிறதற்கு யமனில்லாத படியினாலே என்னுடைய தலையிலே பாரமிகுந்தது. என்னைத் தாங்கிக்கொண் டிருக்கின்ற ஆதிசேஷன் ஆயிரம் தலையும மெலிந்து தத்தளித தான் தத்தளிக்கும் ஒருவன் பிறருககு ஊன்றுகோலான பிரகாரம்போலிருக்கிறது எனககு ஆதிசேஷன் உதவியாயிருப்பது.

மன்னுகதிர்ப் பிரபை பிலெழுந் துறைதுகளிற் சிறுதுகளா
மலையின் பார
கன்னியபச் சறுகுநுனிப் பனித்திவலை தனிற்சிறிது
கடலின் பார

மன்னியமச சரத்தாலே வருசாமித் துரோகமெனக்
கதிக பார
முன்னரிய விசுவாச பாதகமிங் கினிச்சுமக்க
முடியா தென்றாள் (10)

சூரியபிரபையினாலே எழும்துகளில் சிறுதுகள் மலையினுடைய பாரம். பசுமையான அறுகின் நுனியில் சேரும் பனித்துளியிலும் சிறியது கடலின் பாரம். மன மாறசரியத்தினாலே பரமசிவனுக்குத் துரோகம்பண்ணியது எனக்கு அதிகமான பாரம். இது எண்ணுதற்கரிய விசுவாச பாதகம். இனி இதைச் சுமத்தற்காகாது என்றாள் பூமிதேவி.

சிறைபட்ட பொன்குவிசிங் காதனமென் றலங்காரத்
திருநா ளென்றுந்
துறைபட்ட வெலாந்தணந்து சிறப்பகல்சூ னியமடைந்த
துயரங் கூறி
முறைபட்டாண் முறைகேட்டு நாமிருந்தும் பூமிசெம்பொன்
முகங்கள் வாடிச்
சிறைபட்டா ளென்றுநெஞ்சந் துறைபட்டான் கவலைபட்டான்
றிருமா ருனே. (11)

சொர்ணமயமாய் நிர்மிக்கப்பட்ட சிம்மாசனத்தோடும் மேல் அலங்கார சிகரங்களோடுங்கூடின திருநாளென்று நடந்துவருவனவெல்லாம் தவிர்ந்து சிறப்புகளும் அகன்று சூனியமடைந்த விசனத்தையும் சொல்லிப் பூமாதேவியானவள் முறையிட்டாள் அதனைக் காதிலே கேட்டு நாம் எஜமானனென்றிருந்து பூமாதேவியானவள் பொற்பிரகாசம்போன்ற முகம்வாடிச் சிறையிலகப்பட்ட பெண்போல ஆனாளேயென்று மனதிலே துயரமிகுந்து கவலையடைந்தார் விஷ்ணு.

புவிமாது நீதவத்தைப் புரிந்திடென்று பரந்தாமப்
புத்தேள் கூறித்
தவமாகி யிருந்தளவி லளவிறந்த பூதகணந்
தன்னைச் சூழச்
சிவலோகத் திடைமேவு பலகோடி சிவகணங்கள்
சேவித் தேத்த
நவகோடி சித்தரொடும் வந்தனனந் தரத்திழிந்து
ஞான நாதன் (12)

இப்படிக் கலைப்பட்ட விஷ்ணுவானவர் பூமாதேவியைப் பார்த்து நீ தபசு பண்ணுவாயென்று சொல்லித் தாமும் தபசு பண்ணிக்கொண்டிருக்கும்போது அளவில்லாத பூதகணங்கள் தம்மைச் சூழ, சிவலோகத்தில் வசிக்கும் பல கோடி சிவ கணங்கள் சேவிக்க ஒன்பதுகோடி சித்தர்களுடனே ஆகாசவெளியிலிருந்து எழுந்தருளினார் ஞான நாதன்.

அலைகடலக ளதிர்ந்துபோங்கிற றெனப்பூத கணத்துடனவந்
தருளு நாதன்
றலைவர்மூ வருமார்க்கண் டனுமபுவியும பதம்பணிந்தார்
தவிர்ந்தோ ரெல்லா
நிலைநிலைக்கார் கலையிழப்பார் குடைவிடுப்பார் சடைமுடிப்பார்
நிறைந்தோர் கோடி
மலைநடக்க நுழைந்தபுலவா யிரலைகலை யெனநுழைந்து
வழிக டேர்வார் (13)

அலையுடனே கூடின சப்த சமுத்திரங்களும் பொங்குகிறதென்று சொல்லும்படி பூதகணங்களுடன் வந்தநாதனைத் தேவர்களுக்குத் தலைவராகிய பிரமாவிஷ்ணு தேவேந்திரனும், மார்க்கண்டனும், பூமாதேவியும் தரிசனம் பண்ணிப் பணிந்தார்கள் மற்றத் தேவர்களெல்லாம் நிலையில் நிற்பதொழிந்து உடுத்த உடை இழந்து கையில் பிடித்த குடைகளை விட்டுவிட்டுச் சடையை முடித்து, கோடி மலைகள் நடக்க அவைகளின் முழைஞ்சிலே நுழைய வழிதேடும் பசுக்களையும் மான்களையும்போல நுழைந்து வழிதேடலாயினார்

அனைவருமவந் தடிதொழுதஞ் சலித்திடக்கண் டினிமைத்தினம
பலத்தை நோக்கிப்
புனையுமதி மவுலிநடந் திடத்தடுத்திட டிருசரணப
போதில வீழ்ந்தார்
ரினையர்தடுத் தடிதொழுதா ரென்றுநகை கோட்டிநின்று
ரீன்றார் தமமைத
தனையரடி தழுவிமுக நோக்கிநடந் திடமனது
தானெ மூர்தே (14)

இந்தப்பிரகாரம் அனைவரும் வந்து சுவாமியின் அடிவணங்க ரத்னமயமான அம்பலத்தைப் பார்த்து ஆர்த்த சந்திர ஜடாதாரராகிய பரமசிவன் எழுந்தருளும்போது, நடுவில் தடுத்துக்கொண்டு இரண்டு டாதார விந்தங்களிலும் சாஷ்டாங்கமாக அடிக்கடி வணங்குவதைக் கண்டு குறுநகை செய்து நின்றார். அப்படி நிற்பது எப்படி இருந்ததென்றால், பெற்ற தகப்பன் வெளியிலே புறப்படும்போது

பிள்ளை காலைக் கட்டிக்கொண்டு முகத்தைப்பார்த்தால் அப்பால் நடப்பதற்குக் கால்கள் எழாவன்றோ அது போலாயிற்று.

மழவிடை விட்டிழிந்தனர்நின் றெழுந்திருமுங் களுக்கினிய
வரந்தந் தோமென்
றழலுலவு கரகமலர் மொழிதலைமேற் கொண்டெழுந்தா
ரானே யுன்றன்
பழவடியார் யாங்கள்செய்த பிழைபொறுத்தல் கடனன்றோ
பழுதி லாத
முழுமுதலே யுமையலது கதிவேறுண் டோவெமை நீ
முனியி லென்றார் (15)

இடபவாகனத்தை விட்டுக் கீழ் இறங்கி, நமஸ்காரம் பண்ணிக்கொண்டிருக்கிற தேவர்களைப்பார்த்து "நீங்களெல்லோரும் எழுந்திருங்கள் உங்களுக்கு இனிதாகிய வரத்தைக்கொடுத்தோம்" என்று சிவபெருமானழலைத் தரிக்கின்ற கரத்தினாலே சொன்ன அடையாள வசனத்தைத் தலைமேற்கொண்டு தேவர்கள் எழுந்திருந்து "சுவாமி தேவரீருக்கு வழிவழியாய் அடிமையாயிருக்கும் பழவடியாராகிய நாங்கள் செய்த பிழைகளெல்லாம் பொறுப்பது கடமையல்லவோ? குறையில்லாமலிருக்கிற முழுமுதலே தேவரீரையல்லாமல் எங்களுக்கு வேறே கதியுண்டோ? எங்களிடம் நீர் கோபங்கொண்டால்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

இமநிலா வொடுதபனர் சூழ்புவியி றண்டனை செய
யிறைமை பூண்ட
யமனிலா துலகமெலா மலைவுபட்ட தவரவர்க
ளியற்கை தானுந்
சமனிலா தகிலசிவ கலைகளுநீங் கியதென்றா
தாளினுற் றோ
தமனிலாய் வரசசிலையை மிதித்தானும் பதிக்கமலத்
தனனுந் தானே (16)

குளிர்ச்சி பொருந்திய சந்திரனும் சூரியனும் சூழும் பூலோகத்தில் தண்டனை செய்யும் ராஜரீகம் படைத்த யமனில்லாதபடியினாலே உலகமெல்லாம் நிலை தடுமாறி வர்ணாச்சிரமத்தின் நடவடிக்கைகளும் சயப்படாமல் லோகாலோகங்களிலிருக்கிற சிவ கலைகளும் விலகின என்று பாதத்தினாலே கௌதாரின மலைவியாய வரும்படி சிலையை மிதித்த விஷ்ணுவும், தாமரை மலர் ஆஸனனான பிரம்மதேவனும் விண்ணப்பஞ் செய்தார்கள்.

சங்கரனு மகிழ்ந்துநமன் றனையழைப்பித் தருளமனத்
தன்பு கூர்ந்து
லிங்கநாய காதமக்குத் தக்கணத்தே மேற்குமுகத்
தியல்ப தான
சிங்கவா சனத்திருந்தார் விதானித்தார் திபானித்தார்
தேனைத் தூவு
பைங்கமல முதலியன மலர்தூவி னரயன்மால்
பரவு கின்றார் (17)

பரமேச்வரனும் பிரமா விஷ்ணு சொல்வதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து யமனை எழுப்புவதற்கு மனதிலே கிருபை வைத்து லிங்க ரூபத்துக்குத் தென் பாரிசமாகப் பாதாளமாகிய பிலத்துவாரத்தில் மேற்கு முகமாயச் சிங்காதனத்தில் எழுந்தருளினார். விஷ்ணு முதலாகிய தேவர்களெல்லாரும் அவரை அலங்காரம் பண்ணித் தியானம் செய்து தேனைத் துளிக்கும் பசுமையான தாமரை மலர் முதலாகிய புஷ்பங்களினாலே அர்ச்சனை பண்ணினார்கள்

என்றயன்மா லிறைஞ்சமகிழ்ந் திறைவனமற லிவைவரவென்
றிதையங் கூர்ந்தா
னின்றெரிசெந் தழல்போல நிமிர்ந்தசடை யிருபுருவ
நெறிப்புங் காதி
லொன்றரவக் குழையுமெரி விழியுமலர் நாசியுநெட்
டுயிர்ப்பு நீலக்
குன்றனைய மெய்யுமிரு கையுறைதண் டமுங்கயிறுங்
கொடுமுன் னின்றான். (18)

இப்படி பிரமமா விஷ்ணுவானவர் வணங்கச் சிவபெருமான் சந்தோஷமடைந்து யமனை வரும்படி இருதயத்திலே எண்ணினார். உடனே சிவந்த அக்கினிக் கொழுந்து நிலையாய் நின்று எரிவதுபோல நிமிர்ந்த சடையும் நெறித்த புருவங்களும் நாககுண்டலங்களணிந்த செவிகளும் அக்கினிப் பொறிபறக்கின்ற விழிகளும் சண்பகமலர்போன்ற நாசியும், மலைபோன்ற சரீரமும் தண்டமும் பாசக்கயிறுங் கொண்ட கைகளுமுடைய யமன் எழும்பிவந்து பெருமூச்சுடன் சிவபெருமானுக்கு முன்னே நின்றான்.

நரகரிக்குச் சாபவுக்கிரத் தனுப்படைத்தக் கிரமந்துடைத்த
நாத னோக்கி
வரவழைத்த பிலத்தின்வழி வந்தான்மெய் தலத்திலுற
வணக்கஞ் செய்தான்

காலினெனெஞ் சினின்மோத போதவுநொந் ததுவோவுன்
கமல பாதம்
அரகரவென் றிருகைதனி லேந்திவிழி யிணையிலமைத்
தபயஞ் சார்ந்தான். (19)

முன்னாளிலே விஷ்ணு நரசிங்க ரூபம் எடுத்து மமதை யடைந்தபோது உக்கிரமாகிய சரபபக்ஷி அவதாரமெடுத்து அந்த நரசிங்கத்தினுடைய கர்வமடக்கிய பரமசிவன் வரவழைக்கப் பிலத்துவாரத்தின வழியேவந்த யமனானவன் தன்னுடைய சரீரமெல்லாம் பூமியிலேபடியும்படி தீர்க்க தெண்டம் பண்ணி அடியேனுடைய நெஞ்சிலே மோதின தேவரீரின் பாதம் மிகவும் நொந்ததோவென்றுகூறித் தாமரை மலர் போன்ற இரண்டு பாதங்களையும் அரஹராவென்று ஸ்தோத்திரம்பண்ணி இரண்டு கைகளினாலேயும் ஏந்தித் தன்னுடைய இரண்டு விழிகளிலேயும் பொருந்தும்படி சூடி என்னைக் காக்கவேண்டுமென்று சரணாகதியடைந்தான்

மீண்டுமடி வணங்கியெழுந் தகலநின்று வாய்புதைத்து
விழிநீர் சோர
மூண்டவவ மானமுட்கொண் டிருநிலத்தை நோக்கிநின்றான்
முகங்கள் வாட
வாண்டகையந் தகன்முகத்தை நோக்கினு னைக்கியவிண்
ணவருங் கேட்பப்
பூண்டபரி வுடனேயசு றுத்தியனுக் கிரகிக்குமவனைப்
புகல்வ தானான் (20)

யமன் பின்னும் தீர்க்க நமஸ்காரம்பண்ணி எழுந்திருந்து அப்பாலே நின்று வாய்புதைத்து இரண்டு கண்களிலும் நீர் சொரியும்படி நெஞ்சிலே அவமானங் கொண்டு பூமியைப் பார்த்தவண்ணம் முகம்வாடி நின்றான். அப்படி நின்ற யமன் முகத்தைப் பரமசிவன் பார்த்துத் தம்முடைய முகத்தை இமைமூடாமல் பார்த்துக்கொண்டிருக்கிற தேவர்களெல்லாரும் கேட்கும்படி மனத்திற் பரிவுடன் அவனைப் பயப்படுத்தி அனுக்கிரக வார்த்தை சொல்லத்தொடங்கினார்.

ரவிசுதனை மனுவொடுதித் தவனைஞ்சொர்க் காதிபத்திய
ராச்சிய வானை
மவனியிலெம் போலொருசங் காரகர்த்த னெமெவர்க்கு
மதிக வானும்

விவா முனி நிலையென்றற நிலையென்பா னங்கயிற்றை
வீசு வானு
மிவனறிவு முமைமையமுன்றற் தவனறிவு நிகராகி
யிருக்குற தானே. (21)

சிவபெருமான் தேவர்களைப்பார்த்துத் திருவுளம்பற்றுவார் இந்த யமன் சூரியனுடைய புத்திரனும்; மனுவொடு கூடப்பிறந்தவனும் சொர்க்காதி புவனங்களுக்கு ஏகாதிபத்தியராஜனும்; பூலோகத்திலே நம்மைப்போல், இவனொரு சம்ஹாரகர்த்தனும்;எவர்க்கும் மேலானவனும். இப்படி மகிமைபொருந்திய இவன் புத்தி எப்படியிருந்ததென்றால், அதிசயபத்துடனே மார்க்கண்ட முனி நம்மைவந்து நிலையாகப் பிடித்துக்கொண்டபோது அவனைச் சிறுபிள்ளை என்றும் நம்மைச் சிலையென்றும் எண்ணிப் பாசத்தை வீசினன் இவனுடைய அறிவு முன்னளிலே பார்வதியைப்பெற்ற தக்கனறிவுக்குச் சமானமாயிருக்கிறதென்றார்

உன்னைமன்னிக் கவுந்தரும மெனவும்வைக்க வுநதகுமோ
வுமைமுன் னளிற்
பின்னமுறு தெமைத்தழுவக் கண்டகன்ற தெழுநதகம்பைப்
பிரவாக மன்றே
வன்னையறி யாமகப்போ லென்னையறி யாதுமறாந
தசட னைய்
தன்னையறி யாதுவரு மோகோப மெனும்பாப
தாபந தானே (22)

இன்னும யமனைப்பார்த்துச சொல்வார் நீ செய்த காரியத்துக்கு உன்னை மன்னித்துத திருபவும் தருமனென்று பெயர்கொடுத்து வைப்பதற்கும் அடுக்குமோ ? முன்னளிலே ஈசுவரி கமபையாற்றிலே நமமைப் பூஜைசெய்யும்போது அவள் பக்தியை அறியக் கமபைநதியைப் பிரவாகமாய் வரப்பண்ணினோம். அதுகணடு பயந்தேதவி நம்மை வந்தணைத்துக்கொள்ள அந்தத் தீர்த்த பிரவாகமானது கண்டு இருபுறமும் விலகிப்போயிற்று. உனக்கு இதுபோன்றது ஒன்றும் தோன்றாமல போயிற்றல்லவோ? தாயை அறியாத பிள்ளையைப்போல்என்னை யறியாமல் மறந்துபோன படியினலே அசடனென்ற பெயரெடுத்தாய. கோபம் தன்னை யறியாமல் வருமோ? அபபடி வருகிற கோபமெல்லாம பாபமாகிற தாபந் தானே.

கிரணரவி மதியிருவர் தலைதடுமா றினுஞ்சகமேல்
கீழ்ப்பட் டாலும்
பிரணவமு நமதபய கரமெடுதத திறமுநிலை
பிசகா தென்றே
திரணமென வெரித்துலக வரணமுடித் தணிந்தவிபூ
தியுமென னுளது
சரணமெனப புரத்தவெம்மா பரணமென்றான் வாகீசர்
சரண மென்றான் (23)

கிரணங்களையுடைய சந்திர சூரியாகளும தடுமாறித தெற்கு வடக்காகுலும பூலோகம பாதாளமாகவும பாதாளம பூலோகமாகவும பிரணவமாகிய எழுத்தும் அடியார்களைக் காக்கிறோமென்று எடுத்திருக்கிற அபயஸ்தமும என்றைக்கும் பிசகா அதெப்படி யென்றால யுகாந்தகாலங்களிலே அக்கினிப் பிரளயமாகி ருத்திர மூர்த்தியாயிருந்தபோது நமக்குக் காவலாக அணிந்த விபூதியும் எந்தநாளும நம்மைச சரணாகதியாக வடைந்த பேரையும விடாமல காத்து ரக்ஷிப்பது நமக்கு ஒரு பூஷணமாகையால இது உறுதியான காரியமென்று திருவுளம பற்றின பரம சிவன பாதத்திலே பின்னும சரணாகதமாயத தண்டம பண்ணி எழுந்திருந்தான, யமதாமன

மலரயனு திரிபுரிந்த தவத்தாலு முலகமிகு
வருத்தத் தாலு
நிலமகளிரான முறையாலு நாமுனது நீதிநிலைத்த
நேயத் தாலு
தலைமைபெற வுனைவரவு நினைத்தோம நந்நேமச
சரங்க ணீங்கி
நலமிகுந்தே கிருவெனப்பார்த திடலவேண்டு முனக்கினியென
ஞளந தானே (24)

பின்னும பரமசிவன் யமதனமனைபபாாததுத திருவுளமபற்றுவார் தாமரை மலா வாசனுன பிரமதேவன் முதலாகிய தேவாகள் செயத தபசினுலேயும உலகஙகளில மிகுநத வருததததினுலும பூமிதேவியானவள் பாரம் பொறுககாமல முறையிட்டபடியினுலேயும நான் உன்னை எழுப்ப வேண்டுமென்று தயவுவைதத படியினுலும யமபதவி யடையும்படி உன் மேல கிருபைவைத்தோம் யமனே இது நனமை இது தீமை என்று ஆராயநது பாாதது எந்தநாளு நடந்துகொளள வேண்டுமென்று திருவுளம்பற்றினா

வேறு

எனப்பு னற்கமழ் வேணிவா னவனெடுத் தியம்ப
மனப்ப யங்கரங் கதித்திட வினவிய மறலி
யுனக்கு நேயர்தங் குறிப்பினைக் காணுநல் லுறுதி
யெனக்கு நீநவி லெனப்பரி வொடுசொல்வா னிறைவன் (25)

இப்படி கங்கா ஜடாதரரான பரமேசுவரன் எடுத்துச் சொல்ல மனதிலே பயமானது மிகுந்திடும்படி கேட்ட யமனானவன் ஸ்வாமி உமக்கு நேசமாயிருப்பவரின் அடையாளத்தைக் காணும் படியான உறுதி எனக்கு நீர் நவில வேண்டுகிறேன் என்றுகேட்க, சிவபெருமான் தயைகூர்ந்து சொல்லுகிறார்.

தமக்குச் செல்வநீ றென்னவுத் தூளனந் தரிப்போ
ரெமக்குப் பூடண மிதுவெனக் கண்டிபூண் டிடுவோர்
மமத்துவ ராயினும் பத்தரென் றுரைப்பினு மவரே
நமக்கு நல்லவ ருனக்கு வல்லவர் கள்கா ணமனே (26)

தமக்குச்செல்வம் இதுதானென்றெண்ணி விபூதியைச சாவாங்கமும் தரிப்பவர்; நமக்கு இதுதவிர வேறு ஆபரணமில்லை என்று ருத்திராக்ஷங்களை யணிபவர்கள், மகா மகத்துவம் பொருந்திய பேராலும் நான் சிவபக்தரென்று சொன்னபோதுகள், நமக்கிவர்கள் நல்லவராயிருப்பார்கள், உனக்கு வல்லவராயிருப்பார்கள் இதை யறிந்து கொள்வாயென்று திருவுளம் பற்றினார்

மறதி யின்றியஞ் செழுத்தையே நினைந்திடு மனத்தோர்
குறைவி லாதுசெய் தியற்றுநம பணிவிடைக் குரியோர
ரறவர் மாதவ ரந்தணர்க் கினியவை யளிப்போர்
ருறவெ மக்குனக் கிறைவரென் றியமநீ யுணர்வாய் (27)

எங்நேரமும் மறவாமல் பஞ்சாக்ஷரத்தை மனது வைத்து உச்சரிப்பவர்கள். நம்முடைய பணிவிடைகளைக் குறைவுறாமல் அனுதினமும் முயற்சியோடு செய்பவர்கள்; சிவஞானிகளுக்கும் மாதவர்களுக்கும் பெரியோர்களுக்கும் பிராம்மணருக்கும் அவர்களிச்சைப்படி கொடுப்பவர்கள். இவர்களெல்லாம் நமக்கு உறவின் முறையார்; உனக்கு அரசர். இது நீ யறிவா யமனே என்றார்.

பாவ நீக்கிய பகீரதி யாதிய படிந்துங்
கோவில் சேவித்துந் தாழ்விலா விரதமேற் கொண்டு
மூவ ராதமுன் மேவியே பூவல முடிப்போர்
யாவ ராயினுந் தேவரென் றறிகுவா யமனே (28)

பஞ்ச மகாபாவங்களையும் தீர்க்கும் கங்கை முதலாகிய தீர்த்தங்களிலே ஸ்நானம்பண்ணினவர்களும் திருக்கோவில் விளங்கிய சிவஸ்தலங்களிலேபோய்த் தரிசனம் பண்ணினவர்களும் விரதங்களில் தாழ்வு வாராமல் அனுஷ்டித்தவர்களும் விருத்தாப்பியகாலமாகு முன்பே புறப்பட்டுப் பூமி பிரதக்ஷணம் பண்ணிய பெரியவர்களும் இவர்களெல்லோரும் தேவர்கள் என்று அறிவாய் யமனே என்றார்.

நெற்றி யிற்றிரி புண்டர மணிந்திடு நீறரோர்
சித்தி சேர்நம தாலயந் தரிசினை செய்வோர்
நத்தி யேசிவ நாமமுச் சரிப்பவர் நமக்குப்
பத்த ருன்னது கர்த்தர்கா ணருணசம் பவனே (29)

நெற்றியிலே விபூதியைத் திரிபுண்டரமாகத் தரிக்கிறவர்களும் சித்தியடைக்கிற நம்முடைய ஆலயங்களைத் தரிசனம் பண்ணின பேர்களும் இச்சையுடனே சிவ நாமங்களை உச்சரிக்கிற பேர்களும் நமக்குப் பக்தராயிருப்பவர்கள். உனக்குக் கர்த்தர்கள் சூரிய புத்திரனான யமனே என்றார்.

சந்த்ர சேகர பராபர விநாயக சனக
நந்தி வாகன சதாசிவ பார்வதி நாதா
அந்த காசுர கரசுர வெனிலிமக கவரே
பந்து வந்தனுக் கந்தக ரிரவிசம் பவனே (30)

சந்திரசேகரா, பராபரா, விநாயகனைப் பயந்தவனே, நந்திவாகனா, சதாசிவா, பார்வதி நாதா, அந்தகாசுரா, ஆஹாவென்று இந்த நாமங்களை உச்சரிக்கிற பேர்களெல்லாரும் நமக்குப் பந்து ஜனங்களா யிருப்பவர்கள் என்றறிவாய் உனக்கு அந்தகனாய் இருப்பார்கள் சூரிய புத்திரனே என்றார்.

சிதைவி லாநெறி நிலைத்தவர் நெறிபிழைத் திடுவோர்
அதிக பத்திய ரல்லவ ரிகழுநிந் தகரும்
முதவு மோர்பழுப் பிலையெமக் கணிந்தவ ருனது
பதவி மாற்றுவர் நிறுத்துவர் சுவர்க்கதா பரனே (31)

ஒருகாலமும் அழிவில்லாத நெறியில் நிலைத்தவர், நெறி பிறழ்ந்தவர், அதிக பக்தி யாகசத்துடனே யிருப்பவர், பக்தி யாகசம் தப்பி யிருப்பவர், யாவரையும் நிந்தையாக இகழ்பவர் இவர்கள் பத்திரங்களை நமக்கு அளித்தார்களானால், அவர்கள் உன்னுடைய பதவியை மாற்றுவார்கள்; நிலைநிறுத்துவார்கள், ஸ்வர்க்கத்துக்கு அதிகாரியே என்றார்.

மரணப் போதுவெண் பொடிகண்டி மீதுற வணிவோா
மரணப் போதிலைந் தெழுத்தையுச் சரிப்பவர் மதிப்போர்
மரணப் போதிலெந் திருவிருப் பிணிற்கணம வசித்தோர்
சரணப் போதுகண் டிறைஞ்சென்தப் போது மந்தகனே (32)

மரணந்த காலத்திலே விபூதிருத்திராக்ஷங்கள சரீரங்களில அணிபவா, அந்தியகாலமானபோது பஞ்சாக்ஷரத்தை மனதிலே யுச்சரித்து நினைப்பவா, பிராணனை விடுகிறபோது சிவ பாதாரவிந்தம சேரவேண்டுமென்று நினைப்பவா ஆகிய இவாகளைககண்டால எந்த நாளும் அவாகளுடைய பாததிலே நீ நமஸ்காரம பண்ணககடவாய் யமனே என்றார்.

சீல மேவுமெய்ஞ ஞானயோ கியருயர் திருப்பைஞ
ஞீலி யென்றவ ரிருப்பவர் திருபபணி நியமஞ
சால வேமுடித் திடுபவ ரவர்கணந தமது
பால ருன்னது காலர்மார்த் தாண்டசம பவனே (33)

சீலம் பொருந்திய மெய்ஞ்ஞானியான சிவயோகிகள, உயாநது விளங்கிய திருபைஞ்ஞீலி யென்ற ஸ்தலததிலே வாசமாயிருபபவாகள, அதிலே திருபபணி விடையே தொழிலாய் எநநாளும நிறைவேறறிக்கொணடிருபபவாகள. ஆகிய இவாகள நம்முடைய பிள்ளைகள்; உனககு காலதூதா அறிவாய யமனே என்றா.

இனிய தெக்கண கயிலையாந திருபபைஞ் ஞீலியிலவாழ்
மனித ராதிபல வுயிர்களி றிறந்துயிர பாய்நதாற
புனித மன்னவை தண்டனை செலுததிடப போகா
தினி யுனக்கிது கருத்தினு ளிருததுவா யமனே (34)

இனிதாகிய தக்ஷிணகைலாசமான திருப்பைஞ்ஞீலியிலே வாழும மனிதா முதலாகிய ஸ்தாவர ஜஙகமங்கள மரணமடைநதால சுதத பவிததிரமான மோக்ஷமடைவா. அவாகளிடததிலே யமராஜனே உனனுடைய தணடனை செலுததப போகாது. இனிமேல் இதை மனததிலே உறுதியாய எணணுவாய என்றா

விரிந்த பூதலத் தலததும்வா னுலகமெவ் விடத்தும
தெரிந்து செய்வகை யறிநது செய்துன தாகியவபாய்ப
புரிந்து வாழ்நம ராசனே யெனநயப் புடனே
பரிந்து கூறினு றறணி வேணியெம பரமன் (35)

விரிந்த பூலோக தேவலோகஙகளிலும, மற்றமெந்த லோகங்களிலும நனறாய் ஆராய்ந்து இது செய்யலாமென்று அறிந்து செய்து கொண்டு உனனுடைய

ராஜரீகம் செலுத்தி வாழ்வாய் யமராஜனே என்று மகா சந்தோஷத்துடனே திருவுளம் பற்றினார் கங்கா ஜடாதரரான பரமசிவன்.

மகர பூசித்த தினத்தினீ வருபில வழிக்குட்
டகவு நின்பெயர்த் தீர்த்தமுண் டாகவித் தடத்துண்
மிகவு மாடினோ ரூழ்கினோர்க் கிடரிலை மிருத்து
விகல் செய்யாதெம தனுக்கிரகங் கிடைத்திடு மெளிதே (36)

பின்னும் திருவுளம் பற்றுவார் தை மாத பூச நக்ஷத்திரத்தில் நீ வந்த பிலத்துவாரத்து வழிக்குள்ளாக உன் பெயரால் யம தீர்த்தமென்று ஒன்று உண்டாகும். அந்தத் தடாகத்திலே மிகுந்த தயவுடனே ஸ்நானம் பண்ணின பேர்களுக்கெல்லாம் துன்பமிராது மிருத்து பயமிராது நம்முடைய கிருபாகடாக்ஷமும் எளிதிலே கிடைக்கும்.

பூணு மன்பொடு காண்கென நமனுக்கன் புடனே
தாணு மேவுதக் கணக்கயி லையினெறி ரனமும்
வேணவாவொடு பூதருங் கணங்களும் வியந்து
காண வேவட கயிலையுங் காட்டினா ரடிகே (37)

அன்புடனே கூடின னதில் காணபாய யமராஜனே என்று தவாக லிங்க ரூபமாய் எழுந்தருளியிருக்கிற தக்ஷிண கைலாச தரிசனமும் அளவில்லாத சாக்ஷியுட காணும்படி செய்து பின்னும் திருநந்தி முதலிய ருத்திரர்களும் பூத கணங்களும் சூழ்ந்து தாம் எழுந்தருளிய வட கைலாச தரிசனமும் அதி சீக்கிரமாகக் காண்பித்துத் தரிசனம் கொடுத்தார்.

கதித்த நீணெடுங் கண்ணிமுன் றெனவட கயிலை
மதித்த காட்சிகண் டடிதொழ மகிழ்ந்தருள் வழங்கி
துதிக்கு மந்தகன் றிதிபடு பதிவியாரு சுவர்க்கக்
கதிக்குச் செல்கென வனுப்பினன் கயிலையங் கடவுள் (38)

முன் நீள் நெடுங்கண்ணுடைய தக்ஷிண கைலாசம் வடகைலாச மென்று மதிக்கின்ற தன்காட்சி கண்டு ஞான ரூபனாகிய சிவன் பாதத்திலே நமஸ்காரம் பண்ணி அவருடைய அருள்பெற்றுத் திறமை பொருந்திய யமபுரி என்று சொல்லுகின்ற பட்டணங்களிலுள்ள சுவர்க்காதிகளெல்லாம் அரசாட்சி செலுத்தக்கடவாய் என்று அனுப்பினார் கைலாசவாசன்.

அன்றைக் குசசொன்ன வாண்டுக ளொருபதி னாறு
சென்ற தென்றுமார்க் கண்டன்மே னமன்வரச் சினந்து

கன்றக் காரண மேதெென வானவர்க் கமலன்
னென்றைக் குமபதி றுறுதந தனம்வய தென்றூர் (39)

அன்றைசகுச சுவாமியாா திருவுளம பற்றின பிரகாரம் பதினாறு வயது சென்ற தென்று மாாககண்டனைப் பிடிக்க யமன வந்தால அவன பேரில கோபித்தக கொள்ளக காரணமென்ன வென்று தேவர்கள் கேட்க அதற்குச சிவபெருமான், அப்படியலல எனறைககும் பதினாறு வயதென்று கட்டளை யிட்டோமென்று திருவுளம பற்றினர்

நயன பங்கயக் கடவுளைப புவனியின் னவனை
யயனை மார்ககண்ட முனிவர ஞதிமா தவரை
யுயர்புத் தேளிரை யனுப்பினன் பரப்புமே ரொளிபோ
லயனுற் றெய்திய கலைகடந நிலைகள்சார்ந தனவே (40)

செந்தாமரைக கண்ணனை மகா விஷ்ணுவை தேவேநதிரனை, தேவர்களை, பிரமாவை, மாாககண்ட ரிஷி முதலாகிய ரிஷிகளை, மற்றுமுள்ள தேவர்களை அவரவாகள பதிககு அனுப்பினா. பரவிய பெரிதாகிய பிரகாசமபோல அனனிய சிவஸதலஙகளிலிருநது வந்து தஙகிய கலைகளெல்லாம் அநதநத ஸதானததுககு எழுநதருளின.

தீரந தாஙகலா தெழுகட னிகருயிர்த திரளகள
கோரந தாஙகிய நரகததுஞ சுவர்ககததுங குதிகொண்
டாரந் தாஙகிய மணிமுலைப் பூமிதாங கரிய
பாரந தாழ்நதுல கியற்கையோங கியதுமுற் படியே (41)

சப்த சமுத்திரம் சூழ்நதிருககினற பூமியெல்லாம் தாஙகபபடாமல அநத சமுததிரததுககு நிகராயிருநத சாவப்பிராணிகளையும கோர தநததததையுடைய யமதாமன தன் ஆககினைப்படிககு பூலோகத்திலே சில பிராணிகளும் நரகததிலே சில பிராணிகளும் சொாககததிலே சில பிராணிகளும சஞ்சரிககும்படி செய்தபடியினால முத்துமாலை தரித்த ஸ்தனனியம படைத்த பூமாதேவி தாஙகுகிறதற்கரிதாகிய பாரம குறைந்து உலகஙகளெலலாம நீதிகளுமுயாநது எப்போதும்போல விளஙகின.

வேறு.

புதிதாக மறலிதனக் கதிகாரங் கொடுத்தலினுற்
புகழ்ந்து போற்றி
எதிர்காண வடகயிலை தென்கயிலை கணஙகளுக்கு
மியம னூர்க்குஞ்

சதிராகக் காட்டுதலா லதிகார வல்லவருந்
தரகை லாயு
ரதிபதிதெக் கணகயிலை நாதனென்பர் நீலிவனந்
தரனைத் தானே (42)

நூதனமாக யமதர்மனுக்கு அதிகாரம் கொடுத்ததாலும், எல்லோரும் புகழ்ந்து போற்றி எதிரே காண வடகயிலை தென்கயிலைத் தரிசனம் பூதகணங்களுக்கும் யமனுக்கும் கொடுத்ததினாலும் அதிகாரவல்லவரென்றும உத்திரகைலாய அதிபதியென்றும் தெக்ஷிண கைலாச நாதரென்றும் உலகத்தார் சொல்லுவார்கள் நீலி வனவாஸராகிய பரமசிவனை.

இவ்வாறு நமன் பதவி கொடுத்ததிற மெனவளவற்
கிசையச் சொன்ன
னெவ்வாத கின்னரகிம் புருடரை வைத திசையின்மலை
யுருகப் பாடி
வவ்வியவைத் தாளமெரிந் திறுகியபின் மீட்டிரென
மமதை தாழ்த்தி
யவ்வாறிவ் விருவோரு நிகரெனப் பிஞ ஞகனிடத்தி
லனுப்பு வோனே (43)

இந்தப் பிரகாரம் யமனுக்கு அதிகாரம் கொடுத்த சரித்திரமென்று சந்திரபீட சோழராஜனுக்குத் திருவுளம்பற்றினார்—கின்னரர் கிம்புருஷர் ஒருவருக்கொருவர் ஒவ்வாமலிருக்கும்போது பண்ணுடனே யவர்களுக்கு மலைப்பாக மனதுருகும்படி தாமுடைய கையினாலே தாளந்தீர்த்து இந்தப்பிரகாரம் உங்கள் வீணையினுடைய தந்தியை இறக்கிக்கொண்டு இதற்கு இசையாமல் கீதம் பண்ணுங்களென்று சொல்லிக் காட்டி இருவரும் சமமானவரென்று சிவபெருமானிடத்தில் அனுப்பினவர்த்த அகஸ்தியர்.

பன்னிரண்டாவது - அக்கினி பூஜை மகிமை.

இது வடமொழியிலுள்ளது. இதைத் தமிழில்
மொழி பெயர்த்ததாய்த் தெரியவில்லை.

# பதின்மூன்றாவது வாயு பூஜை மகிமை

தன்னதிடர் தீரும்வகை நன்னெறிசே ரனலிசெயர்ச்
சனையி னாலே
யந்நிலைவந் தெழுதரிய பெருமாளன் பொடுவரந்த
தருளு மேன்மை
சொன்னதொரு கதைகேட்டு மனமகிழ்ச்ச திரபீட
சோழ ராச
னின்னமொரு கதைசொலெனப் பின்னுமகத் தியமுனிவ
னிசைக்க லுற்றான் (1)

தன்னைப்பிடித்த சாபம தீரும்படி நன்மை நெறி பூண்ட அக்னிபகவான் அர்ச்சனை பண்ணினபடியினாலே அந்தச் சொரூபத்துடனே வரவெழுந்தருளிய எழுதரிய பெருமாளாகிய நீலிவனநாதர் அதிக வரப்ரஸாதம் கொடுத்த மகிமை சொல்லக்கேட்டு மனமகிழ்ச்சி யடைந்த சந்திரபீட சோழராஜன் இன்னமொரு கதை சொல்ல வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய அகஸ்திய ரிஷியானவர் பின்னும் திருவுளம் பற்றுவார்

நச்சுரக வேந்தனுக்குத் தோற்றநாண் முதலாகி
னலங்க டாழ்ந்து
மெச்சுறுமெவ் வலியிழந்து திறங்களும்போய் வாடைதென்றல்
வேனில் கோடை
முரசகத்து நடத்துதொழில் விடுத்தனன்வா யுவுமனத்தின்
மூண்டு தீரா
வச்சமுற்ற போதிலெங்கு நிச்சயித்த தொழிலெவர்க்கு
மாகு றாதே (2)

ஆலகால விஷத்துடனே கூடிய நாகராஜனுக்குத் தோற்றுப்போன நாள் முதல் வாயுபகவான் தன்னுடைய லக்ஷணம் குறைந்து யாவரும் ஆச்சரியப்படா நின்ற அதிகபராக்கிரமும் திறமையும் குறைந்துபோய் வாடை தென்றல வேனில் கோடைகாலங்களில் தேவலோகம் பூலோகம பாதாளலோகங்களிலே நடத்துகிற தன் தொழிலைவிட்டு மனத்திலே கோபமூண்டு தீராதபயத்தை யடைந்து வெளியே பிரவேசியாமலிருந்தபடியினாலே, அந்த மூன்று லோகத்தாரும் செய்கின்ற தொழில்கள் நடவாமற் போயின

உலகமீ தினினடத்து பருவநிலை தடுமாறி
　　யுயர்வின் மாரி
மலைவுகொண்டு பொழிபருவ மொழிபருவ நிலைகலங்கி
　　வாரி நீர்க
ளலையடங்கி யனன்மறைநத திவைகண்டா னவைகொண்டா
　　னதனைத் தீர்க்கச்
சலனரா சனுந்தனது பதிபெயர்ந்தா னீலிவனந்
　　தன்னைச் சார்ந்தான் (3)

இப்படி மூன்று லோகத்தார்களும் நடத்தி வருகிற தொழில் நிலை தமோறிப் போனபடியினுலே உயர்ந்த மேகங்கள் வருஷிப்பதற்கு மலைப்படைந்து வருஷா காலஙகளில், பொழிகிற பருவ நிலைதப்பிச் சமுத்திரங்களெல்லாம அலையடங்கி வடவா முகாக்கினியுந் தணிந்தது. இப்படியான தோஷஙகள் வந்தடைந்ததை வாயுபகவானறிந்து அவை தீருமபடி தன்னுடைய லோகத்தை விட்டுப் புறப்பட்டு நீலவனம் வந்தடுத்தான்.

நததுமால் விழிக்கமலந் தனக்கொருசக் கரங்கொடுத்த
　　நாதர் மேவு
முத்துமால் வரையமர்பைஞ் ஞீலிரததினம பலக்கடவுண்
　　முளரித தாளர்ச
சித்துமா லகநதையினு லடைந்ததுயர் தீர்ததிடத்தென்
　　றிசையி லேபோன்
மெத்துமா லயமுமொரு சிவலிங்க தாபிதமும
　　விதிததான் வாயு (4)

அன்புடனே மகாவிஷ்ணுவானவா தமமுடைய கணணைச் செந்தாமரை புஷ்பமாகப்பாவிதது ஆசசனை பண்ணினதற்குச சககராயுதம கொடுதத காதனு கிய சிவபெருமான் வாஸமான தக்ஷிணகைலாசமாகிய சுவேதகிரியைச் சோந்த திருப்பைஞ்ஞீலி ரதனமபல வாணனுடைய பாதாரவிந்தங்களிலே பூஜை செய்தார்; அகந்தையினுலடைந்த துயாம தீருமபடி வாயு மூலையிலே சொர் ணப் பிரகாசமாகிய சிவலாயம ஒன்று உண்டாககி அதிலே ஒரு சிவலிஙகப் பிரதிஷ்டையும செய்தார் வாயுபகவான்.

சீர்த்திதிகழ் சிவாலயமுஞ் சிவாலயத்துக் கமைந்தருளே
　　செழிக்க வாய்த்த
மூர்த்தியுஙகண் டகமகிழ்நத வொலிக்கடவுட கினியதிரு
　　முழுகுக கேற்ற

தீர்த்தமுஞ்சாத் திடநறும்பூந் துணருமங்கி லாமலெங்குந
தேடிக் காணான்
றோத்திரஞ்செய் தாரணிய விடங்கனுறை திசைநோக்கிச்
சொல்லு கின்றான் (5)

சிறப்புப் பொருந்திய சிவாலயமும், அதற்குரிய கிருபை செழிப்பாய் வாய்த்திருக்கும்படி எழுந்தருளிய சிவலிங்கத்தையுங் கண்டு சந்தோஷமடைந்த வாயுபகவான் சிவனுக்கு அபிஷேகம் பண்ணுகிறதற்கு ஏதுவான தீர்த்தமும் அர்ச்சிக்கிறதற்கு வில்வபத்திர புஷ்பங்களும அந்த வட்டத்திலெங்கும தேடிப்பார்த்தும கிடையாதபடியினாலே ஸ்தோத்திரம் செய்து ஆரணிய விடங்கர் வாஸமான திசையை நோக்கிச்சொல்வான்.

முடித்திடுநித் தியபூசைக் கினமலர்மஞ சனங்களின்றி
முழங்குந் தீக்குள்
துடித்தவர வெனத்துயர்பட் டுழன்றேனுண் மகிழ்ந்தினியான்
றொடுத்த வாறே
கொடுத்திடென முருக்கவிழ்ந்த மடற்கமழ்பூங் குவளையொன்று
குலவுந தானீர்
மடுத்திகழ்தண் டுறைச்சுனையுங கொடுத்தனர்பைஞ் ஞீலமட
மகிழ்நத சோதி. (6)

சுவாமி அடியேன் தபசுமுடிக்கும்படி நித்திய பூஜைக்குப் புஷ்பங்களும் தீர்த்தமுமில்லாமல அகோரமாகிய அக்னிக்குள் அகப்பட்டுத துடிக்கின்ற சாப்பங்களைபோல் துயரப்பட்டுஅலைகின்ற எனக்குச சந்தோஷமுண்டாகும்படி தீர்த்தமுண்டாக்கியருள வேணடுமெனறு ஸ்தோத்திரம்பணண அப்போது முகை விண்ட இதழுடனே கூடின செங்குவளை என்னும் புஷ்பம் தோன்றும்படி சுத்தபவித்திரமான தீர்த்தங்களுடனே மடுவாகிய குளிர்ந்த சுனை வரும்படி செய்தார திருப்பைஞ்ஞிலியிலே நடனம பண்ணக கிருபைவைத்த ஜகஜ்ஜோதியான சிவபெருமான்.

மருத்தேசோர விலாதுதயங தனினமூழ்கி விபூதியக்க
மணியுஞ் சேர்த்திக்
கருத்தேசோர தனைகள்பஞ்ச சுத்திசெயத் தியானுவா
கனத்தான் ஞானத
திருத்தேசோ மலையாரை யொருகுவளை மலர்கொடருச
சித்து நேயம்

பெருந்தேசோ டசவிதிகள் செலுத்தியனு தினமனது
  பிரிவுறாமல். (7)

மெய்ம்மறந்து தளர்ச்சியடையாமல் தினந்தோறும் உதயகாலத்திலே தீர்த்தமாடி விபூதி ருத்திராக்ஷங்களையணிந்து ஆத்ம சுத்தி முதலாகிய பஞ்ச சுத்திகளைச் செய்துகொண்டு ரூபதியானத்துடனே ஆவாகனம்பண்ணி, ஞானலக்ஷ்மி சேர்ந்த திருத்தேஜோமலையிலே எழுந்தருளியிருக்கிற சிவபெருமானை ஒருகுவளை மலரினாலே அர்ச்சனைசெய்து பக்திமிகுந்து நைவேத்திய முதலான சோடசோபசாரங்களையும் செய்து மனதிற் பிரியமாறாமல் ஸ்தோத்திரம் பண்ணினான் வாயுபகவான்.

சக்கிரத்தியா கேசர்பத நித்தநித்தம் பூசனைசெய்
  தனில ராசன்
மிக்கபெருந் தவமுடித்து வருநாளி னதிமுடித்த
  விமல ரீன்ற
செக்கர்நிறக் கடவுள்பொற்றா மரைக்கரையி லினிதுவீற்
  றிருக்கும் வேழ [தொடர்ச்சி
முக்கண்விநா யகனையன்பின் வணங்கிலனவ் வினைத
  முதிர்ந்து தானே (8)

இந்தப்பிரகாரம் சக்கரத்தியாகர் பாதாரவிந்தங்களை நித்தமும் பக்தியோடு பூஜைசெய்து வாயுபகவான் மிகுந்த பெரிதாகிய தபசுகளையும் நிறைவேற்றி வருகிற நாளையில் கங்காஜடாதாரரான பரமசிவனுடைய புத்திரராகிய செவ்வான நிறம் படைத்தவரும் பொற்றாமரைத்தடாகக் கரையிலே ஏகாந்தமாய் எழுந்தருளியிருக்கின்றவருமாகிய யானை முகமும் திரிநேத்திரமும் படைத்த விநாயகனை அன்பினாலே வணங்காமலிருந்தான், ஜன்மாந்திரங்களிலே செய்த வினைத் தொடர்ச்சியதிகமானபடியினாலே என்றா

அகண்டலப்பே ரதிபதிமுன் முகங்களாயத்து நூறானசே
  டனைப்பா ராது
பகர்ந்துபெற்ற திருக்கவுமா முகனறனக்கன் பகன்றுதவம்
  பயின்றான் வாயு
மகனுசெலுத்தித் தவங்கதித்த தபோதனர்க்கும் போதவிருண்
  மனத்தின் மேற்கொண்
டகங்காரப் பேய்பிடிக்கி லிகபரத்துங் கெடுக்கெரிக்கு
  ளாழ்த்துந் தானே (9)

சாவலோகத்துக்கு அதிபதியான வாயுபகவான் முன்னாளிலே ஆயிரம்பண முடியுடைய ஆதிசேஷனை முகம்பாராமல் அகங்காரத்தினால் சொன்ன வார்த்தை

யினலே பாபசம்பந்தமடைந்ததுமல்லாமல் யானைமுகனை விக்கினேசுவரன் பேரிலே பக்தியையாமல் தபசு பண்ணினன். அளவில்லாத யாகங்கள் செய்து மிகுந்த தபசுகளைச்செய்த தவஞானியானலும மாயையான இருளவந்து மன திலேமூட அகங்காரமென்னும் பிசாசு பிடித்து ஆட்டினால், அது இகபரவாழ் வைக் கெடுத்து, எரிநரகத்திலே ஆழ்த்துமன்றோ ?

வீழ்ந்தநமை வணங்காம லிவன்முடிக்குந் தவங்களுஞ்செய்
 விரதம யாவுஞ்
சூழ்ந்திறைவன் றனக்குமனத தன்புறச்செய் திடும்பூசைத
 தொடர்ச்சி யெல்லாந
தாழ்ந்திருக்கப் பாய்ந்தநதிச் சடிலர்முதது மலக்கிறைவர்
 தாமுன் றோன்றி
வாழ்ந்திரென வருள்புரியா ரெனவிகட விநாயகனு
 மனததுட கொண்டான். (10)

நமமை வணங்காமல இந்த வாயுபகவான நிறைவேற்றுகிற தபசுகளும செய்யும விரதமுதலியவைகளும பரமசிவனுக்கு அனபுடனே செய்கிற தொடாச சியான பூஜையின் பயனும் தளர்ந்துபோகும்படி செய்து, கங்காதராகிய முதது மலக்கிறைவா இவன முன்னே எழுநதருளிச சுகமாயிருப்பாயெனறு வரப் பிரஸாதம கொடாரெனறு விகடவிநாயகரானவா மனதுக்குள்ளே எண்ணினா.

எனமனத்தி லெண்ணினைத் திடுநாண்மா ருதநீவந்த
 னியற்று பூசை
யனவரத செபசுபவந தனைவிரதந தவங்களெல்லா
 மவங்க ளாகிப்
புனிதருமவந திலரதுகண் டனசினனெனு சயர்நதுகணப்
 போது பார்த்தான்
கனமதமா முகன்புரிவிக் கினமெனக்கண் டருச்சனைசெய்
 கருத்த னுனன் (11)

இப்படி மனதிலெண்ணிக்கொண்டு விக்கினேசுவரனிருக்க வாயுபகவா னனவன் வந்தனையுடனே செய்கிற பூஜையும சதாகாலமும் ஜபிக்கிற ஜபமும தவங்களும தியானங்கள் விரதங்கள் முதலியவெல்லாம் பலிதமில்லாமல போன படியினலே பரமசிவனும பிரத்தியக்ஷமாகாமலிருப்பது கண்டுபயந்து மனதிலே க்ஷணப்போது யோசித்துப் பார்த்தான. அப்போது மும்மதமபொழியும் யானை முகத்தையுடைய கணபதி செய்கிற விக்கினமென்றறிந்து அவரைப்பூஜை செய்ய மனத்திலெண்ணினன்.

அறியாம லுனையிகழ்ந்த குறியாலின் னழுபிழிவுக்
காளா காமற்
சிறியேனைப் பரிந்திரட்சித் திடநினைத்த செயலெனக்குத்
தெரிந் திடாமல்
வெறிசோபித் தினர்க்குமருந் திடுதிறமபோ லிடர்மூட்டி
மிகவு மேதான்
பொறியாயெந் தனைத்தடுத்தாட் கொண்டருளற் புதத்தைப்
புகல்வே னென்றான். [யெனா
(12)

அடியேன் அறியாமல உமமை இகழ்ச்சியாய் நினைத்த குறியினாலே இனன மும அவமானத்துக்காளாகாமல ஒன்றுமறியாத என்பேரில தயவுவைத்துரக்ஷிக்க நினைத்த செயகையானது, பைத்தியங்கொண்டவனுக்குத தலையிலே கீறி மருந்திட்டுப பைத்தியம தெளிவிப்பதுபோலிருக்கிறது. என்னைத் தடுத்தாட்கொணட அறபுதத்தை நான் என்ன சொல்வேன் எனறான

ஓதியசுக கிரவாரத தாதிவிக்கி னேசுவர னுக
குபய பாத
மீதுபல போதுசொரிந் தேதமிலமந் திரவேத
விதிதப பாமன
மோதகந்தேங காய்பொரியெள ளுண்டைகரும் பவலிளநீர்
முதல தன
போதவுநை வேதனங்கள செலுத்திநின் றஞ் சலிதத்திறஞ்சிப
புகழ்ந்து சொல்வான. (13)

சுக்கிரவாரந்தோறும ஆதிவிக்னேசுவரனுடைய இரணடு பாதங்களிலும பலவிதமான புஷபங்களினாலே குறறமிலலாத வேதமந்திர விதி தப்பாமல அரச சித்து மோதகம், தேங்காய, பொரி, எள்ளுருண்டை, கருமபு, அவல, இளநீர முதலியன நிரமப நைவேத்தியம செயது பக்தியுடனே நின்று அஞ்சலியாக நமஸ்காரம்பண்ணிப் புகழ்ந்து ஸ்தோத்திரம் பணணுவான

சயசயசங் கரன்புதல்வ கயமுகவிக் கினேசலம்போ
தரவி லோல
சயசயபார் வதிதனய விகடதந்த பாணிகலா
சந்திர சூட
சயசயவா மனரூப மூடிகவா கனமகுட
சடில நாத

சயசயத ரளகிரிவா சசயசய வல்லபைநே
சசரண மென்றான. (14)

ஜயஜய சிவசங்கரபாலா ஜயஜய கஜமுகரூபா ஜயஜய விக்கினேசுவரா ஜயஜய லம்போதரா, ஜயஜய பிரதாபலோலா, ஜயஜய பார்வதிபுத்திரா, ஜயஜய கோரமருப்புடனும் கூடிய துதிக்கையா, ஜயஜய கலையுடனே கூடின பூரண சந்திராபரணா, ஜயஜய வாமனரூபா, ஜயஜய மூஷிகவாகனா, ஜயஜய ஜடாமுடிகுட நாதா, ஜயஜயா தாளகிரிவாசா, ஜயஜயா வல்லபைசக்தியமான நேச ஜயஜய சரணமென்றான வாயுபகவான

துதிகேட்டு மகிழ்ந்தகண பதிவாயு வெதிர்தோன்றிச
சொலவான் வேத
விதிமார்க்க முடிததிடுநின் பூசைமகிழ்ந் தனநினைதது
விருபபங கூர்ந்தன்
மதிவேட்ட படிநீலி வனததிறைவர் கொடுபபரிதோ
வருவா பாரென
றெதிர்காட்ட ரதனசபா பதிகாட்சி கொடுதது நின்று
ரிமையோா சூழ (15)

இப்படி ஸ்தோததிரம பணணுவதைக் கேட்டு மனதிலே சந்தோஷ மடைந்த கணபதி, வாயுபகவான, முன்னே எழுந்தருளித திருவுளமபற்றுவார் நைவேததியம விதியாகசம தபபாமற்செயத நின்பூஜையினாலே சந்தோஷ மடைந்தோம். நீ மனதிலே இச்சிததுச சந்தோஷமாயக் கேட்டபடி வரப்பிரஸாதம நீலிவனநாதா கொடுபபதற்கு இதோ வருகின்றார் பாரென்று எதிராகககாண பிகக அந்தப்பிரகாரம ரதன சபாபதி காட்சிகொடுததருளினார் தேவாக ளெல்லாம சூழ.

வானவர்தற சூழவெழுந தருளிவரு நீலியங்கா
வனததி னானே
பானுசகத திரகோடி நிறததானே திறறரூலப
படையி னானே
யானமர்கே தனததானே யெனப்பரவி யிணைநளின
வடியிற் றாழ்நது
மேனிபுள கித்தவொடு மஞசலிசெ யொலியையரன்
வியந்து நோக்கி (16)

இந்தப் பிரகாரம தேவதைகள் சூழ எழுந்தருளிவந்த நீலிவன வாஸனை வாயுபகவானானவன பக்தியுடனே ஸ்தோததிரம பணணுவான. ஆயிரங்கோடி

சூரியப பிரகாசமேனியனே, திறமையான சூலாயுதபாணியனே, ரிஷபகொடியோனே என்று துதித்து இரண்டு பாதாரவிந்தத்திலேயும நமஸ்காரம பண்ணிப் புளகாங்கிதமாய் எழுந்திருந்து அஞ்சலிசெய்து நின்றவனை ஈசுவரன சந்தோஷத்துடனே பார்த்தார்.

சங்கரிநீ ணெடுங்கண்மட மாதுடனின் றனிலாவுன்
றளர்ச்சி தீரத்
துங்கமுடிப் புயங்களிற்பத ததிகவல னுனகளித்தோஞ்
சுக்கிர வாரத
தங்கிதஞசேர் கணபதிபூ சனைபுரிவோர்க் கிங்கிதவாழ்
வருளிச செய்வோ
மெங்குமிவர் நாமமகா பலவிநா யகரெனநின்
றிசைக்கத் தானே. (17)

சங்கரியாகிய நீள்நெடுங்கணணமமனுடன ரிஷபவாகனத்தில் எழுந்தருளின பிரகாரம் வாயுபகவானைப்பார்த்து திருவுளம் பற்றுவார். பஞ்சகுடம படைத்த ஆதிசேஷனிலும பதினமடங்கு உனக்குப்பலனுண்டாகக் கட்டளையிட்டோம அதுவல்லாமல் சுக்கிரவாரந்தோறும அங்கீகாரத்துடனே இந்த கணபதி பூஜைசெய்த போகளுக்கு இங்கிதவாழ் வருளிசசெயவோம, இந்த பிவரை மகாபல விநாயகரென்று பிரசித்தமாயக கொணடாடும்படி செயவோம என்றார்.

நீயுமுந்த னுலகிலடைந் தினிபரிசெங்கோ னடத்தியிரு
விசும்பில் வானிற
றாயதொரு பாதலத்தி லுனதிறைமை செலுத்துதியென்
றுரைத்து நாதன்
போயினனே ரமபன்மறைந தனனதிக வரங்களினுற்
பொருவி லாத
வாயுவும்பைஞ் ஞீலிவளம பதியகன்று திருத்தேசோ
மலையைச சார்ந்தான். (18)

வாயுபகவானே நீயும் உன்னுடைய லோகத்துக்குப்போய அரசாக்ஷி செய. பெருமை பொருந்திய பூலோகம தெய்வலோகம் பாதாளலோகங்களிலே திறனம செலுத்து என்று சொல்லிப் பரமசிவன ஆகாச மார்க்கமாய் எழுந்தருளினார். மகாபல விநாயகரும் அந்தரமார்க்கமாய் எழுந்தருளினர். பின்பு அதிகவரங்களினாலே தனக்கு நிகரில்லாத வாயுபகவான் வளமைபொருந்திய திருப்பைஞ்ஞீலி என்னும் ஸ்தலத்தை நீங்கிச் சிவகலைநிறைந்த திருதேசோ மலைபோய்ச சேர்ந்தார்.

மெலியாது வலியடைந்த வொலிதிருத்தே சோமலைவாழ்
வினரை நேசப்
பொலிவினொடு பரவிவழிக் கொண்டான்வீண் டலர்குவளைப்
பூவான் மிக்க
பலிதமடைந் தனன்வாயு வினியமலர் தனைத்தரித்த
பான்மை யாலே
யொலிகடல்சூழ் புவிசிவனை யேகபுட்பப் பிரியரென
வுரைக்குந் தானே. (19)

சரீரம் மெலிவாகாமல் மகா பராக்கிரமத்தைப் படைத்த திருத்தேசோமலை வாஸனை ஈசுவரனைப் பக்தியுடனே நமஸ்கரித்து விடைபெற்றுத் தன்னுடைய லோகமபோய்ச் சேரும்படி வழிக்கொண்டான் அவன் முகையவிழ்த்தலரான ஒருகுவளைப் பூவினாலே மிகுந்த பலத்தையடையும் பொருட்டாக தாரசித்த மகிமையினாலே அலையுடனே கூடின சமுத்திரம் சூழ்ந்த திருத்தேசோமலை வாஸமான சிவனை ஏகபுஷ்பப் பிரியரென்று சொல்வாரகள்.

புவிக்குணம னிலாதிருந்த நாளதில சிவகலைகள்
புனித ஞான
தவத்தினர்க ணிறைதிருப்பைஞ் ஞீலிவளம் பதியில்வந்து
சார்ந்த நாளி
லுவப்புறுதே சுகணிறைந்த வொளிர்தேசு விடங்கலிங்க
முதிக்குங கிழ்பா
ணிவப்புடைய திருததேசோ மாமலையென் றொருசோதி
நிகழு மேற்கே. (20)

முன்காலத்தில் பூலோகத்திலே எமனில்லாத நாளில் ஸ்தலங்கள்தோறு மிருக்கின்ற சிவகலைகளெல்லாம் சுத்தபௌத்திரயான தவஞானியரும நிறைந்து வாஸமாயிருககு திருப்பைஞ்ஞீலி என்னும் வளமைபொருநதிய ஸதலத்தில் சார்ந்திருந்த நாளில், சுதேஜஸ்த்துடனே பிரகாசிக்கின்ற ஆரணிய விடங்கர் எழுந்தருளினார் கிழக்கே அதிக பிரகாசத்துடனே திருத்தேசோமலையென்று ஒரு சோதி மேற்கே தோன்றியது.

காபாலி நீலிவனத தொலிபுரிபூ சனையிதெனக்
கனிந்து கேட்ட
பூபால னமுதகட புரசோம பீடனுக்கன
புடனே சொன்னான்

மாபாவ மகற்றுமல்லி காச்சுனத்தி லிருந்துமனை
    மகிழ்வி னோடு
லோபாமுத் திரைக்குவட காசிவளம் பதிமகிமை
    யுரைசெய் தோனே (21

பிர்ம்ம கபாலந்தரித்த பரமசிவன் வாஸமான நீலிவனத்திலே வந்து வாயுபகவான் பூஜைபண்ணின சரித்திரம் இதுவென்று கூற மனங்களிவாகிக் கேட்ட பூலோகபரிபாலனான கும்பகோண சந்திரபீட சோழராஜனுக்கு நயவுடனே திருவுளம் பற்றினர், பஞ்சமகாபாதகமும் தீர்க்கும் மல்லிகார்ச்சுன பர்வதத்திலிருந்து அன்புடனே தம்முடைய மனைவியான லோபாமுத்திரைக்கு வடகாசி மகத்துவத்தைப் போதித்த அகஸ்திய ரிஷி.

---

## பதினொன்காவது தாற்பியர் பூஜையின் மகிமை

புவனகோ சரத்துயிரை யெலாநடத்து முறைநடத்திப்
    புரந்து காத்த
பவனரா சனுக்குவரங் கொடுத்தருள்பைஞ் ஞீலிவனம்
    பதியின் மேவு
சிவனதா கியசரிதை யின்னுமெனக் கிசைத்தருளிச்
    செய்வா யென்ற
கவனவாம பரிவளவற் குவகையோ டினிதுரைத்தான
    கலைவல் லோனே (1)

புவனங்களிலே தோனறியுள்ள சாவ பிராணிகளையும் முறைமை தப்பாமல் நடத்திக் காக்கின்ற வாயுபகவானுக்கு வரப்பிரஸாதக்கொடுத்த வண்மை பொருந்திய திருப்பைஞ்ஞீலி வாசமான பரமசிவன் கதையை இன்னும் அடியேனுக்குத் திருவுளம்பற்ற வேண்டுமென்று சிவசரிதைகேட்க மனங்கொண்ட சோழராஜனுக்குச் சந்தோஷத்துடனே இந்தக் கதையைச்சொல்லுவார் அறுபத்துநாலு கலைக்கியானத்திலும் வல்லவரான அகஸ்தியர்.

செழித்தகயி லையைச்சேடன் வளைத்ததனை நெகிழ்த்தாமற்
    சிகரி மேனின்
றொளித்தவனைப் பீடங்கொடுபொத் தியகொடுமை யிசர்திரு
    வுளத்திற் றுங்கிப்

பழிப்பகன்ற திறமையின்மிக் குயர்புயங்கற் கதிபதியைப்
பரிவி னோக்கிக்
கொழித்ததிரை யெறிகருணை சமுத்திரமா மிறைவனொன்று
கூறு கின்றான். (2)

சிறப்புப்பொருந்திய கைலாசத்தை ஆதிசேஷன் கெட்டியாக மூடிக்கொண்டதை விலக்கிக்கொள்ளமாட்டாமல் அந்தப் பர்வதத்திலேயே ஒளிந்துகொண்ட வாயுபகவானைப் படங்கொண்டுமறைந்த கொடுமையைப் பரமேச்வரன் மனதிலே கொண்டு பழிப்பில்லாத திறமையிலே மிகுந்துயர்ந்த நாகராஜனைத் தயவினலே பார்த்து அலைகொழிக்கின்ற கிருபா சமுத்திரம்போன்ற இறைவன் ஒருவசனம் திருவுளம் பற்றுவார்.

காற்றோடப் பயந்தனனெங் கயிலாய மால்வரையே
கதிய தாக
வெற்றோர்திக் கடையாம லெமைச்சரண்புக் கவன்மீதில்
வெகுட்சி யாகிக்
கூற்றோபற் றினனெனப்பற் றிடத்தகுமோ தமையெதிர்த்த
கொலைஞ ரேனுந்
தோற்றோடி னார்களைப்பின் றொடர்ந்துசம ராடுவதுந்
துரோக மன்றோ (3)

ஆதிசேஷனே உனக்கு வாயுபகவான் பயந்து போகவிடமில்லாமல் நம்முடைய கைலாச பர்வதந்தானே கதியென்றெண்ணிச சரணாகதமாக வந்தவனாகிய அவன்பேரில் நீ கோபமாய் யமன் பிடித்தனனென்றெண்ணும்படிப் பிடித்துக்கொண்டு விடாமலிருந்தது தாமமோ? தன்னைக்கொல்ல வந்தவர்கள் பகையாளிகளானாலும் அவர்கள் தோற்றுப்போய்ப் புறங்காட்டி ஓடினவர்களானல் பின்னே அவர்களைத்தொடர்ந்து யுத்தம் செய்வது துரோகமல்லவாவென்று பின்னும் சொல்வார்.

உயர்ந்தவரைப் பகைக்கின்மலை கெல்லியகோ லாகுவர்தன்
னொடுமே ராகி
யியைந்தவற்குத் தாங்கள்செய்த தவர்தமக்குச் செய்திடநோக்
கிருப்பர் போதா
தயர்ந்தவருக் கிடர்விளைத்தா லாழ்கியத தழுந்துவரென்
றறநூல் வல்லோர்
வியந்துரைத்த நீதியைநீ திறம்பிலைவ ரறிவார்சொல்
வேனோ யென்றார் (4)

தனக்கு உயர்ந்தபேரைப் பகைத்தார்களேயானால் மலையைக்கெல்லியகோல போலாவார். தனக்குச்சமானமான பேருக்குப் பகை நினைத்தார்களேயானால் அவர்களும் பதில் பகை நினைப்பார்கள். தனக்குத் தாழ்வாய் அசக்தராயிருக்கின்ற போகளைப் பகைத்துச் விக்கினம் செய்தால் நிலையில்லாத நரகத்திலே எந்த நாளும் கரையேறாமல் வருந்துவா. இப்படி தர்ம சாஸ்திரத்திலே வல்லமையுடையோர் சொல்லுகிற நீதிமுறைமையை நீயே தவறி நடந்தால் இனிமேல் எவர்கள் அறிவார்கள் நாகராஜனே என்றா.

நூற்பெருமை வாய்ந்திருக்கு மனுவிவாடுவின ஞானமிவை
        நுவன்ற தாலே
தோற்பவரைத தொடர்ந்திழைதத தீங்கிற லுனையடைந்த
        துரோாகந் தீர
நாற்பெருந்தீ விலுடபுகழ்மா தவத்திலுயர்ந் திடுமுனிவ
        ஞகத் தோன்றி
தாற்பியனென் றொருநாம மேய்டிடன முத்தநெடுந்
        தவங்க டாரின                                                                                    (5)

பெருமை வாய்ந்த மனுவிககியான சாஸதிரங்களை அறிந்திருந்தும் குறைவில்லாத ஞானங்கள் அடைந்திருந்தும் பின்னும் ஒருவருக்குப் போதிக்க வந்திருந்தும் தோற்றுப்போனவனைத் தொடர்ந்து இளைக்கப்பண்ணின பாவம் தீரும்படி நாலுபக்கத்துப் பெருந்தீவுகளும் புகழும்படியான தபசில உயர்ந்த முனிவனுகப்பிறந்து தாற்பிய மகரிஷியென்னும் நாமத்துடன் நெடுங்காலம தபசு செய்த

சய்யமலை தருதிருக்கா விரிக்குவட திசையடுத்த
        தரள மான
வெய்யமலை வளந்த நுதெக் கணகயிலை தனைத்திருமால்
        விரிஞ்சன் வாரோ
மையனுறு குணத்தன்வழி செய்யுமவினை தவிர்நீலி
        வனத்தை மேவி
வையமுய்ய வினிதினிருந் தருளபரம சமபுவைநீ
        வழிபட் டேததி                                                                                    (6)

சையகிரியிலே இருந்துவரும திருக்காவேரிக்கு வடபாாசமாயடுத்த முதலமலையாகிய தக்ஷிண கைலாசத்தை விஷ்ணுபிர்மா முதலான தேவாகளும மனதிலே சற்குணத்துடனே அன்புபூணடு வழிபட்டுத் தங்கள் தங்கள பாபம நிவாத்தியடையப்பெற்ற நீலிவனத்தை அடைந்து பூலோகமெகலாம் பிழைககும பொருட்டாக எழுந்தருளியிருககிற பரமசிவனை நீவழிப்படு வாக்கடவாய்.

திருந்துதவம் பயின்றுனது தீவினைக்கு மருந்தாகுந்
திருப்பைஞ் ஞீலிப்
பெருந்தலத்துக் குரியதொரு மகிமையுங்கா விரிநதியின்
பெருமை தானும்
பொருந்துதரு மமுநமது சரித்திரமுந் தெரியும்வகை
புனித யோகத்
திருந்தவர்க்கும் புவனிபுரந் திருந்தவர்க்குந தெரித்துவியா
தனுக்கு நேராய். (7)

அதிலே தபசுசெய்துகொண்டிருந்த உனனுடைய பாபத்துககு ஔஷத மாகிய திருப்பைஞ்ஞீலி என்னும ஸதலததுககுளள மகததுவஙகளையும் காவேரி யினுடைய பெருமையையும் நீதியாகிற தர்மத்தையும நமமுடைய சரிததிரதெரி யுமபொருட்டாக யோகீச்வரா தவகஷியானியாகள் பூலோகதது ராஜா முதலாகிய பேர்களுககும் தெரியுமபடி போதித்துககொணடு வியாசருக்குச சமானமாய் விளஙககக்கடவாய்—என்றார்

நெடுநாள்வீற் றிருக்கவப்பா லெமதுதரி சனஙகொடுத்து
நீயெண் ணுளும்
விடுதேகி யெனுதொருநித் தியதேகி யாயெமது
விருப்பாய் வானத்
துடுமேவு வடகயிலை தென்கயிலை பிரியாம
லூரக பூமி
வடுவோர்சற் றிலாதுபுரந் திருக்கவுநல் வரமுனக்கு
வழங்கு வோமே (8)

இப்படி நெடுநாள் அநத ஸதலததிலே வீற்றிரு- அப்பால நம்முடைய தரி சனம் கொடுத்து நீ எந்நாளும் தேகமவிடாமல நிததிய தேகமபடைதது நமகுப் பிரியனாய் ஆகாச நக்ஷத்திரமாலை பூண்ட வட கைலாசமபோல தென் கைலாச மான திருப்பைஞ்ஞீலியைவிட்டுப் பிரிய மல நாகலோகத்திலே எப்போதும் போல் ராஜ்யபரிபாலனம பண்ணுமபடி நன்மையான வரமுனககு அனுக் கிரகம் பண்ணுவோம

எனப்புகன்று விடைகொடுத்தா ரிறைவரவர் திருவுளம்வைத்
திசைத்த வாறே
கனத்தமுடி யனந்தனே ருருப்படைத்தான் முனிவனெனக்
கடல்சூழ் பூமி

யனைத்துமிவர் தாற்பியரென் றுரைத்தபெயர் கொண்டுதவ
மாற்றி நாளுந
தனக்குநிக ரிலானையனு தினம்பிரியா மனத்துடனர்ச்
சனைகள் செய்வான் (9)

இத்தப்பிரகாரம திருவுளமபற்றி விடைகொடுத்த பரமசிவனுனவா சொன்ன பிரகாரம ஆயிரமபணு முடிபடைதத ஆதிசேஷன ரிஷிரூபததை எடுததக கடல்சூழ்ந்த பூமியாத்தியந்தமும இவா தாறபியரிஷி என்று சொல்லிபபுகழ நாள்தோறும் தபசுசெய்பபண்ணித் தமககு நிகரிலலாத தேவாதிதேவனுகிய சிவபெருமானை அநுதினமும் பிரியாத மனதுடனே அாச்சனை செய்யத் தொடங்கினர்.

மரணமொடு சனனதுன்பந தவிர்த்திடுதெக் கணகயிலை
மலைபோங காரப
பிரணவததின் விளங்குபரப் பிரமசமபு தரிசனமே
பெரிது நாடி
யரணமைநது தவமுனிவா திரணெருங்கு நீலிவனத
தடைநதா னமபொற
சரணமெடுத தாடுமுமை சகிதனைககண் டாணுணர்நது
தனைககண் டானே (10)

ஜனனமரணஙகளாகிய துனபஙகளை அணுகாதபடி நிவாததிபண்ணுகின்ற தெக்ஷிண கைலாச பாவததததிலே ஓஙகாரமாகிய பிரணவம் விளங்குவதுபோல் பரபிரம சமபுவினுடைய தரிசனததினபேரில பெரிதாகிய இச்சைபூண்டு சுற்றிலுமிருந்து தபசு செயகின்ற ரிஷீசவா கூட்டஙகள நிறைந்த நீலிவனததிலே வந்து அழகுபொருநதிய பொறபிரகாசம போன்ற பாதத்தினுல நடனம் செய்கின்ற பாாவதி நாயானுன தலைவனையறிந்து தன்னையுமறிந்தாா.

பலதீாததங் களுநதிருக்கா விரிநதியு மூழ்கியுமை
பவானி ஞான
நலமவாய்த்த சோதியைநீ ணெடுஙகண்மனே கரியையெநத
நாளுந் தேவர்
குலம்வாழ்த்திப் பணிபரம சம்புவைப்பைஞ் ஞீலியிலங்
குரித்த வாச
மலர்வாய்த்த சேவடிப்பூங கற்பகத்தை யுற்பகத்தின்
வழிபட் டேததி (11)

பின்னும் பலவிதமாயிருக்கின்ற தீர்த்தங்களிலும் திருக்காவேரியிலும் தீர்த்தமாடி உமையாகிய பவானி ஆனந்தமான ஞானரூபம்படைத்த ஜோதி மயமான நீள்நெடுங்கண் மனோகரியையும் எந்நாளும தேவர்கள் குலமெல்லாம் துதித்து வணங்க விளங்கும் பரமசிவனையும் திருப்பைஞ்ஞீலியில் முளைத்தெழுந்த பாதாரவிந்தத்தையுடைய கற்பகப் பிள்ளையாரையும அற்புதமாக வழிபாடு செய்து துதித்து வணங்கினர் தாற்பியரிஷி.

இப்படிப்பூ சனையினொடு மாதவஞ்செய் தாற்பியர் வீற்
    றிருக்கு நாளி
லப்பெரிய ததீசிசபித் திடலான்மற றெழுமுனிவர்
    யாக மெல்லாஞ்
செப்பமொடு பலியாம விருந்தவினு னெடுஞ சாபந
    தீர வேண்டி
யொப்புவமை யிலாதமுதது மலையடைந்தார் முனிவரெழு
    வோருந் தானே (12)

இந்தப் பிரகாரம் தவறாமல பூஜையும் தபசும் திறமையாயச செய்து கொண்டு தாற்பியரிஷி திருப்பைஞஞலியிலிருந்து வருகையில முனனாலே ததீசி மகரிஷி சாபததினாலே யாகம பலியாதொழிநதமையினால சப்தரிஷிகளும பெரிதாகிய அந்தச்சாபததைத தீாததுககொளவதன பொருட்டு ஒப்பு உவமையில்லாத முததுமலை வந்தடைநதாாகள

எழுமா தவத்தோருட வநதார் ளெனக் கேட்டங
    கியல்பு சார்ந்து
சூழுமா தவரொடெதிர் சேன்றுனித தினமன்றோ
    சுதின மென்றான்
வாழுமா சிரமதலத் துளவளஙகள கொடுபரவி
    வழிபட டேத்துந
தாழுமா றிலாதவுப சாரமெலா முடிததனனெஞ்
    சமர்ந்து தானே (13)

சப்தரிஷிகள் வந்தாாகள் எனபது கேட்டுத்தனககியல்பாகச சார்ந்து சூழ்நது கொண்டிருக்கின்ற ரிஷிக கூட்டஙகளுடனே எதிாகொண்டு தாறபியரிஷிவரும போது பின்னும் இந்ததினமல்லவோ சுபதினமென்று சநதோஷமடைந்து தாம் வாஸமாகிய ஆச்சிரமங்களிலிருந்த காதமூலபலாதிகளைக கொண்டு வணங்கிப் பெருமையுடன் தாழ்விலலாத உபசாரஙகள செய்து முடித்தான்.

நீங்களேது காரணமாய் வந்தீரென் னிடத்தில்வைத்த
நேயத் தாலே
பாங்குடனுங் களுக்கடியே னியற்றுபணி யிடையுளதோ
பகர்வீ ரென்று
ஓங்குமக பதிக்குவச்ரா யுதங்கொடுத்த நிமித்தியமா
யுயர். ததீசி
தாங்காமற் சபித்தகுறை தவிர்க்கும்வகை யாங்கள்வந்த
தகைமை யென்றார் (14)

பின்னும் சப்தரிஷிகளைத் தாற்பிய மகாரிஷி பார்த்துச்சொல்வார். நீங்க ளென்ன காரணத்தினாலே அடியேனிடத்தில் வந்தீர்கள்? என்பேரில் வைத்த பக்ஷத்தினாலேயா? அடியேன் உங்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடையுண் டானால் திருவுளம்பற்றியருள வேண்டுமென்று கேட்க தேவேந்திரனுக்கு வஜ் ராயுத முண்டாக்கியதன் காரணமாய்ப் பெரிதாகிய ததீசி மகரிஷி சபித்த சாபத் தைத் தீர்த்துக்கொள்ள நாங்கள் வந்தோமென்று சப்தரிஷிகள் சொன்னார்கள்.

அம்மொழிகள் சொலக்கேட்ட தாற்பியனுந் ததீசியுல
கதனில் வாழு
மாமுனிவர் தமக்குநிகர் சொன்முனிவ னல்லவேத
மிதையத் துளளே
வெம்மையெழுந் தொளிர்மூலாக் கினிக்கொழுந்து விடமேலே
வெளி நிலாவு
செம்மதியி னமுதையவி ழுதவுதவ ஞானசிவ
சித்த யோகி (15)

அந்த வசனம் சப்தரிஷிகள் சொல்லக்கேட்ட தாற்பிய மகரிஷி சொல்வார். ததீசி மகரிஷியானவர் உலகங்களிலேயுள்ள ரிஷீசுவரர்களுக்குச் சமானமென்று சொல்லப்படாது. வேதங்களெல்லாம் பாடமான ஹிருதய கமலத்திலே, உக்கிர மாய் எழும்பிப் பிரகாசிக்கின்ற மூலாக்கினிக் கொழுந்தாவச் சுழி முனையிலே விளங்குகின்ற மேல்விழியானது வஸ்துவினிடத்திலே செல்ல, அந்த அக்கினி யிலே விந்துரூபமான சந்திரகிரணம்போன்ற அமுதமாகிற தெய்ய சதாகாலமும அவிர்பாகமாய் விழ யாகம் செய்கின்ற ஞானம்படைத்த சிவயோகீசுவரரென்று சொல்லிப் பின்னும் சொல்வார்.

மருமலர்மஞ் சனங்கொடநுச் சனைபுரிந்து நிருமலனை
வழிபட் டேத்துங்
கருமமக முடிப்பவர்க ளொருகோடி கோடிதனக்
கதிக ராவா
ரிருவழிசென் றிடுபவன னொருவழிசென் றிடச்செலுத்தி
யிருக்கும் யோக
ரொருமையனக் தங்கோடி யவர்க்கதிகன் சிவஞானி
யொருவன் றானே (16)

வாசனை பொருந்திய மலரும் திருமஞ்சனமும் கொண்டுவந்து அபிஷேகார்ச்சனைசெய்து நிர்மலமான சிவபெருமானை வணங்கி நித்தியாக்னி யாகம் பண்ணுகிறவர்கள் ஒருகோடி பேர்களுக்கு அதிகமானவர்கள் யாரென்றால் இடைபிங்கலை வழியாய் நடக்கின்ற வாயுவையொடுக்கிச் சுழிமுனைவழியே செலுத்தி யோகம் பண்ணுகின்ற பேர்கள் அப்படிப்பட்ட யோகிகள் கோடானுகோடி பேரில் அதிகமானவர் யாரென்றால் சதாகாலமும் நடன தரிசனங்கண்டு சிவமயம்பெற்று விளங்கும் சிவஞானி ஒருவனேயாவன்

ஆதலா லவர்மொழிக்குச் சிவனுமெதிர் மொழிபுகலா
னனந்த ஞானி
ஏதனுர் மொழிந்ததையன் றெனவும் புகல்வான்மெய்ஞ்
ஞான யோகி
தீதுறுமு மலமையைவிட் டகன்றுபரா பரத்திருப்பன்
சிவன்மா மாயை
வாதனைக்கு ளாகியிருந் தகிலாண்ட நடத்துவிப்பன்
மகிழ்ந்து தானே (17)

அப்படி மகத்துவம் பொருந்திய அவர் சொன்ன வார்த்தைக்குச் சிவபெருமான் கூட எதிர் உத்தரம் சொல்வதில்லை அந்தச்சிவஞானி சிவன்சொன்ன வசனத்தை அல்லவென்றும் ஆமென்றும் சொல்லுவார். அதேதென்றால் மெய்ஞ்ஞானம்பெற்ற யோகி தீதாகிய மும்மலத்தையும் கடந்து பராபர சொரூபம் படைத்திருப்பவன் சிவனவர் மாயைக்குள் ளகப்பட்டுப் பிரபஞ்சம் நடத்தும்பொருட்டாகப் பஞ்சகிருத்தியங்களை சந்தோஷமாக நடத்தி வைப்பவர்.

ஊனமகல் சிவஞான யோகமுற்ற ததீசிமுனி
யுரைத்த சாபந்
தானமொடு தவங்கள்சிவ பூசனையிற் றீர்வரிது
தவத்தீ ரென்று

ஞானவைமற நெறிகொண்டு தீரவமெதனக் கேட்டிட்டமற
றவர்கட் கன்பாய்
வானவர்மா தவர்துதிசெய் தார்ப்பியமா முனிவனொரு
வசனஞ் சொலவான் (18)

என்னவாயினும் மாசில்லாத சிவஞானயோகசித்திபெற்ற ததீசி மகாரிஷி சபித்த சாபமானது மகாதானங்கள், தபசுகள், சிவபூஜைகளிலும் தீராது சப்தரிஷிகளே என்று தார்ப்பிய மகரிஷி சொல்லும்போது அவர்கள் சொல் வார்கள். பின்னைதனாலே இந்தச் சாபம் தீருமென்று கேட்க அதற்கு அன புடனே தேவதைகளும், ரிஷிகளும் ஸ்தோத்திரம் செய்கின்ற தார்ப்பிய மகரிஷி ஒருவசனம் சொல்லுவார்

சிவனுடைய தரிசனமா தவத்தினால் கிடைக்குமுயர்
சிவமெய்ஞ் ஞானத்
தவமுனிவர் தரிசனமு மெளிதினில்லா தாதுமுன்செய்
தவத்தா லெய்து
முவமனிலாத ததீசிதனை நோக்கியருந் தவம்புரிந்தா
லுங்கட் கன்பாய்
மவுனிவரு வானெனன்றன் றவம்புரிந்தா ரவனையவர்
மனத்தி ருடி (19)

பரமசிவனுடைய தரிசனமானது இந்த ஜன்மத்திலே தபசுபண்ணினால் பிரத்தியக்ஷமாய்க் கிடைக்கும் உயர்ந்த சிவஞானம்பெற்ற சிவஞானியார் தரி சனமானது எளிதிலேவராது ஜனமாந்திர தபோபலத்தினாலே கிடைக்குமாகை யால எந்த ரிஷிகளும் உவமானம் சொல்லப்படாத ததீசி மகரிஷியை நோக்கி நீங்கள் அரிதாகிய தபசுகளைச் செய்தால தக்ஷணம் அன்புவைத்து அவர் பிரத்தி யக்ஷமாவார் என்றார் தார்ப்பிய மகரிஷி அந்தரிஷிகளும ததீசி மகரிஷியை நோக்கி மனதிலே தியானம் பண்ணித் தபசு பண்ணினார்கள்

கனிவினு னினைத்திடுதா ர்ப்பியன்கருத்தும் மருத்தமுற்ற
கருத்த ரான
முனிவர்நாட் டமுந்தவமு மறிந்தான்மெய்ஞ் ஞானதவ
முனித ததீசி
புனிதசாக் கிரத்திலதீ தாரசிரமஞ் சார்ந்ததில
புவன மெல்லா
மினிதுகண்டார் காணரிதோ முனிவர்தமை நாடு மன
தியற்கை தானே (20)

இப்படி தமமுடைய மகத்துவத்தை மனதிலே கனிவாய் எண்ணிய தையும் மகா வருத்தத்துடனே தம்மை மனதிலே தியானித்து ஞானநாட்ட மடைந்த சப்தரிஷிகள் பண்ணிய தபசையும் அறிந்தா மெய்ஞானம்பெறற தவ ஞானியாகிய ததீசி மகரிஷி, புனிதமாகிய ஜாக்கிரம் முதலாகிய துரியாதீதத நிலேயடைந்த ஞானக்கண்ணினுலே புவனங்களெல்லாம் காண்பவர் தாற்பியர் நினைத்த நினைவும சப்தரிஷிகள் பண்ணுவதும், அறிவது அரிதாமோ?

கண்டவுடன் மனதுசிறி திரங்கிநினைத் தனனினைத்த
கணத்தின் முன்னே
தண்டரள மலைவருதாற் பியமுனிவன் றனதிடததே
ததீசி வந்தா
னண்டருல கினின்மேரு கிரியைவலம் வருகிரண
வருணன் றனே
மண்டலத்தின் மீதுதவ வடிவொடுதே சோமயமாய்
வருவ தேபோல் (21)

இப்படி கண்டவுடனே மனதிரங்கிச சிறிது நினைககவும் நினைப்பதற்கு முன்னமே முத்துமலையில வாஸமான தாதபிரியமகரிஷியினிடததிலே ததீசி மகரிஷி வந்தார். அதெப்படியிருந்ததெனறால தெயவலோக மளாவி யிருக்கின்ற மகமேருகிரியைப் பிரதக்ஷணமாய் வருகின்ற சூரியபகவான் கிரணங களோடும் பூலோகத்திலே தவரூபமான சரீரமெடுசதத தேஜஸுடனே வந்த பிரகாரமபோல் இருந்தது

எழுநதார்தாற் பியமுனிவ ரெழுவர்களுந் தவததினைவிட்
டெழுந்தார் சாபத்
தழுந்தாமற் பிழைத்தோமென் றடிபணிநதா ருபசரித்தா
ரளிசூழ் கொன்றைச்
செழுந்தாமப் புயன்கோயி லடைநதார்க ளனைவோருஞ்
சிவமெய்ஞ் ஞானக்
கொழுந்தான சோதிரத்னசபாபதிநாட் டியம்நடித்தார்
கொடுத்தார் காட்சி (22)

ததீசி மகரிஷி வரக்கண்டதும் தாற்பியரிஷி எழுந்திருந்தார். சப்தரிஷி களும தபசுவிட்டு எழுந்திருந்து "சுவாமி உமமுடைய சாபததிலே அகப்பட்டு வாதைப்படாமல் பிழைத்தோம" எனறாகள். பிறகு எல்லோரும் சந்தோஷத துடனே கொன்றைமாலை சூடிய சிவபெருமானுடைய திருககோவிலுககுச சென்றார்கள். அப்போது சிவமெய்ஞ்ஞானக்கொழுந்தாய் ஜகஜ்ஜோதியாய்

விளங்கும ரதனசபாபதியானவா நாததனாட்டியம செயது தரிசனங்கொடுத தார.

தனையுணர்ந்தா ருளததின்வெளிப் படுநிமலா போற்றிநதிச்
சடிலா போற்றி
யெனையுகநது தடுத்தாட்கொண் டருள்வாய்நின போற்றியுமைக
கிறைவா போறறி
கனைகதிர்கள சொரிஞான தினகரனே போற்றியஞ்சக்
கரனே போற்றி
புனைசடில மதிதவழ்தக் கணகயிலை மலையானே
போற்றி போற்றி (23)

தனனையறிந்த போகளுடைய மனதிலே வெளிபபடும நிமலனே போறறி, கஙகாஜடாதரனே போற்றி, எஙகள பேரில பரிவாயத தடுத்தாட்க கொண்டு கிருபையளுளுபவனே போறறி, பாாவதி நாயகனே போறறி, கிரணஙகள் வீசுகினற ஞானபபிரகாசம பொருநதிய சூரியபகவானேபோறறி, பஞசாக்ஷரசொரூபனேபோறறி குளிாநத சநதிரனதவழாநின்ற தக்ஷிணகைலாச பாவதவாசனே போறறி போறறி எனறாகள்

துதிததாரிப் படிமுனிவ ரெழுவருநதாற பியமுனியுந
துரியா தீதப்
பதிததானங கடநதுபரா பரததமர்நத தீசியுமபொற்
பதும பாத
மிதிததாடு நடனமமர்ந திறைவர்குறை யாதவருள
விழியா னுடிக
கதிததாழ்வி லாமலெழு வருமபிழைக்கத தீசியுளங
கனியச சொல்வாா (24)

இபபடி ஸதோததிரம பணணினாகள சப்தரிஷிகளும தாறபியஷிரியும. துரியாதீத ஸதானம கடநத பராபரத்திலே தமமுடைய தேகததை ஒடுககி நிஷடை யடைந்திருககினற ததீசிமகரிஷியும் தெரிசனமபணணினா. இசசமயததில பொற்பிரகாசம போன்ற, பாதாரவிந்ததை முயலகன பேரில மிதிததுக்கொண்டு நடனம் பண்ணிய பரமசிவன நடனததை நிறுத்திக குறையாத கிருபை பொழியும கணணினாலே தாறபிரிய ரிஷியும் சப்தரிஷிகளும் தாழ்வுவராவிதம ததீசிமனம சநதோஷடையத திருவுளம பற்றவாா

எமையுணர்தாற் பியமுனியே ததீசிவரு தகைமையினு
னிநதப் பூமி
யமலமடைந் ததுபரம யோகியுறை தலஙகாசிக
கதிக மன்றோ

விமலமுனி தனைபூசித் தெழுவமையுஞ சபித்ததுன்ப
விடர்க ணீக்கித
தமதுபத வியிலிவரை யனுப்புகென விடைகொடுததான்
ருணுத தானே (25)

எமனை உணாநத தாறபிய மகரிஷியே, ததீசி வந்ததாலே இநத பூமி பரிசுதத மடைந்தது பரயோகியா வசிக்கும இடம காசி க்ஷேத்திரத்திற்கு மேலானதாகும. சிவரூபம படைதத இநத சபதரிஷிகளையும ததீசி முனிவரைப் பூஜை செய்யும்படி செய்து சாபவிமோசனம செய்வித்து அவாகளை அவரவா பதவியில அனுப்பிவை யென்று திருவுளமபறறினா பரமசிவன்.

மேருமலைச சிலையார்சொற படிஞான ததீசிமுனி
விமல மேவு
சீருபய மாதமலா விளக்கிமலா தூவியருச
சித்து மென் மேற
பேருவகை யுடனினிய வறுசுவையோ டமுதுதவிப
பின்பு நேயங
கூறுமுப சாரவிதி கொடுததனனருற பியனுயாநத
குணததி ஞனே (26)

மகமேருவை விலலாக வளைதத பரமேசுவரன கட்டளையிட்டபடி ஞானமபொருநதிய ததீசி முனிவனுடைய சுததபவிததரமான இரணடு பாதார விநதங்களையும விளக்கிப புஷபங்களினுலல அாசிதது மெனமேலும சநதோஷததுடனே அறுசுவைப பதாாததஙகளோடுங்கூடிய அமுதுபடைதது உபகாரஙகளெல்லாம விதிப பிரகாரம செயதாா உயாநத குணமபடைதத தாறபியமகரிஷி

ஆசமன பாததியநல லருக்கியஙக ளியநதருநது
மடைககாய் நலகிப
பூசனைசெய் பணிவிடையி லேதுகுறை யுள்ளதுநீ
பொறுபபா யென்று
பேசுதுதி பேசிவணங கினன்யோகி நீயடைநத
பெருமை யாலே
யீசனது நடனமுஙகண் டிமதுதவந தானுநிறை
வேறிற் றென்றான் (27)

பின்பு ஆசமனபாததியமும ஆாக்கியமுமகொடுததுப் புசிக்குமபடி தாம்பூலமகொடுதது அடியேன் செயத பூஜை பணிவிடைகளிலே என்ன

குறையிருந்தாலும் பொறுத்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து ஸ்தோத்திரம் பண்ணி நமஸ்கரித்து யோகீசுவரரான நீர் இவ்விடத்திலே எழுந்தருளின மகத்துவத்தினாலே பரமேசுவரனுடைய நடனதரிசனங் கண்டோம், எங்கள் தபோபலமானது குற்றமில்லாமல் இன்றைக்கல்லவோ நிறைவேறிய தென்று சப்தரிஷிகள் எல்லோரும் தக்ஷி மகரிஷியைப் பார்த்துச் சொன்னார்கள்

எழுமுனிவ ருடனிருந்து துதிகளெடுத் திறைஞ்சியதாற்
பியனை நோக்கி
வழுவிலருந் தவத்துயர்ந்த நற்சிறுமுனி வனுமெனையும்
மகிழ்ந்து நீயிப்
பொழுதுதனைத் தடிமையென நினைந்தனையெம்பரு ஞானவனு
போகம் வாய்க்கக்
கொழுந்தவக் கொடிபடரா வொருகொழுகொம் பெனவுதித்தாய்
கோதிலோனே (28)

சப்தரிஷிகளுடனே கூடி ஸ்தோத்திரஞ் செய்து நமஸ்கரித்த தார்ப்பிய மகரிஷியைப் பார்த்துக் குற்றமற்ற ஆசிதான் தக்ஷிண ... தக்ஷி மகரிஷி சந்தோஷமாய்ச் சொல்வார் நீ இப்போது அடிமை என்று நினைத்தனை நீயுஞ் ஞான அநுபோகம் வாய்த்துத் தவக்கொழுந்தானது படருகிறதற்கு ஆதாரமான கொழுகொம்புபோல ஜனித்த குற்றமற்ற மாதவசிரோமணியே

உனைக்கண்டே னுனைப்பணிந்தே னுந்துணை விடைதனக்கு
முரிய முன்னேன்
வினைக்கண்டே னினியென்று மிலைக்கெட்ட தார்ப்பியனில
வெழுவோர் தாமவந்
தெனைக்கண்டா ரகவுகண்ட தாயெனப்பார்த் தருள்வாய்கண்
டிட்டப் பட்டாவுன்
றனைக்கண்டார் திருக்கண்டு நினைக்கண் ணினைக்காணத்
தகுமோ வென்றார் (29)

உம்மைக்காணப் பெற்றேன், உம்மைப் பணியவும் பெற்றேன், உம்முடைய பணிவிடை செய்கிறதற்குச் சுதந்தரவாளுமானேன் ஆசையினாலே இனிமேல் என்ன விசனங்கள் ஒன்றும் வந்தணுகாமல் தார்ப்பியரிஷி பிரிய வசனம் சொல்லிப் பின்னும் சொல்லுவார் ஸ்ரீ சப்தரிஷிகள் உம்முடைய அநுக்கிரகம் பெற்ற அடியேனைக் கண்டபடியினாலே இவர்களைப் பிள்ளையைக் கண்ட தாயானவள் தயவு வைப்பது போலே பார்த்தருளவேண்டும். காணுதற்கரிய உம்மைக்

கண்டபேர்களுள திருமபவும் பாபத்துககு ஆளாவது தாமமோ? திருவைக கண்ட கணகள் தீவினை காணததகுமோ வெனறு விண்ணபஞ செய்தா.

கருமுகில்கைத் தலத்திலிருந திலகுசக்க ராயுதமுங்
கமலன் கைமேல்
வருபிரம கதையுமொரு சிறுதுரும்பிற் கொடுததிடுநின்
மகிமை யென்று
லருகணைநத சுரபியைக்கொண் டுனதருமைத திருமேனிக
தவலங கூர்ந்து
பொருபடையிந திரறகளிததா ரிவர்தமதஞ ஞானமெனன
புகல்வே னென்றான் (30)

பினனும தாறபிரிய ரிஷி சொலலுவரா காரமேகவாணனுன மகாவிஷ்ணு வின கையிலிருககினற சககராயுதமும பிரமம தேவனை கையிலிருககிற பிரமம தண்டும ஒருசிறு திரணங்கொணடு நிரமிதத மகததுவ முடையவாநீா அப்படிப் பட்ட உமமுடைய அருமைததிருமேனிககு காமதேனுவைக கொண்டு அவலம நினைதது வெற்றி படைதத தேவேநதிரனுககு வஜ்ராயுதமும் கொடுதத இவாகளுடைய அஞ்ஞான புததியை எனன வெனறு சொலலபபோகிறேன என்றா.

இதுபொருளன் றெனவிடுதத வென்பினவசசி ராயுதததி
லிருநது தாட்க
ளதுவுதிர மலைகளுடைந துயிரிறநத நிலைகலஙகிற
றகில மெல்லா
முதுகிலெனபு கவர்நதபொழு தொருசிறிதுன் றிருவுளததின்
முனிவுண் டானு
லெதுபடுமோ புரநதரனு முராரியும்பூ சுரருமவண் ணோ
ரெவருந தானே (31)

இது பொருளலலவெனறு மனதிலே எண்ணி நீா விடுதத எலுமபை வஜ ராயுதமாகக கடையும்போது அதில வீழ்நத தூள்களினலே மலைகளெலலாம உடைந்து உயிரகளெலலாம நிர்ஜீவியாய லோகஙகளெலலாம கலஙகினவெண ரூல சுவாமி உமமுடைய முதுகெலும்பைக கவ்விருககும்போது திருவுள ளத்திலே கொஞ்சம கோபம பிரவேசித்ததானல தேவேந்திரன் விஷ்ணு, பிர்ம்மா முதலானபோகளும் என்னபாடுபடுவாரகளோ தெரியாதென்று சொல்லு வாா தாற்பியரிஷி.

நித்தம்பார்த் தறிந்துடம்பை யனித்தியமாய் நினைந்துகுற்ற
நினைந்தி டாமற்
சித்தந்தாழ்ந் ததினாலே பிழைத்தார்க ளலாதிருந்தாற்
றேவ ரெங்கே
தத்தஞ்சார் புகளெங்கே சுடர்களெங்கே யகிலாண்டத்
தலங்க ளெங்கே
யுத்தமசிற் சொரூபகனே நீபொறுக்க தார்பொறுப்பா
ருலகி லென்றான் (32)

பராபரத்தினிடத்திலே நித்தியஞான ஆத்மாவாக ஞான சிருஷ்டியினாலே பார்த்திருந்து இந்தச் சடலத்தை அநித்தியமாய் எண்ணிக் குற்றம் மனதில் நினையாமல், கோபம் தணிந்தபடியினாலே பிரமம் தேவன் முதலாகிய தேவர்களெல்லாம் பிழைத்தார்கள் இல்லாவிட்டால் அவர்கள் தப்பிப்பிழைக்கிற தெங்கே? நிலைமை தானெங்கே? சந்திர சூரியர் தான எங்கே? லோகங்கள், தாமெங்கே உத்தமமாகிய சிற்பர ரூபனே நீர் பொறுத்தது போதும் யார் பொறுப்பவர்? என்றார்

ஞானத்தாற் பியனீது புகன்றதற்குத் ததீசிமுனி
நவில்வான் போத
வீனத்தான் மாயன்முது கென்பென்றான் மகபதிநன்
றென்றான் மூண்ட
மானத்தான் முனிவரெனைத் தனதாக நினைத்ததனை
மறுத்திடாதன்
ஞானத்தாற் றேனுவைத்தாம வரவிடுத்தார் சொலத்தகுமோ
நவையீ தென்றன் (33)

இப்படித் தவஞானியாகிய தாற்பிய மகரிஷி சொன்னதை யறிந்த ததீசி மகரிஷி சொல்லுவார். என புத்தியினாலே விஷ்ணுவானவர் வஜ்ராயுதத்திற்கு என்னுடைய முதுகெலும்பு வேணடுமென்றார். தேவேந்திரனும் நல்ல தென்றான். என்னைத் தங்களைப்போலெண்ணி மீள வைத்து இந்த சப்தரிஷிகளை தடுக்காமல் அஞ்ஞானத்தினாலே காமதேனுவை வரவழைத்து என்னிடத்திலே அனுப்பும்படி சொல்லத் தகுமோ இது குற்றமன்றோ வென்றார்.

ஆதலான் மகபதிக்குந் தேனுவுக்குங் குறைசிறிதா
யாழி யாற்குங்
காதன்மா தவரிவற்குங் கதித்ததுநீ வினையெனத்து
கடிந்த வாக்கார

கையை ஐயனார் வேல்கொண்ட மகாகாளர் வெட்டியதுபோலும் தக்கன் செய்த யாகத்திலே ஹவிர்ப்பாகம் ஏற்கவந்த அக்னி பகவான் கையைச் சிவன் ஏவலாலே வீரபத்திரர் அறுத்ததுபோலுமிருந்தது இப்பால்தான் சொன்னது பொய் யென்றும் மனதிலே இருக்கிறது மெய்யென்று மறியவொட்டாமல் மூடியிருக்கிற இருள்பரந்து மனதிலே சஞ்சலமடைந்த வியாசரின் முன்னே நந்தி மகரிஷி வந்து சொல்லத் தொடங்கினார்.

இன்னவிதி மார்க்கமென்பார்க் கருள்புரிசம் புவைமதிக்கா
திகழ்ந்த வார்த்தை
சொன்னவிதி காசமறை வியாதமுனி மலர்க்கைகண்ட
துண்ட மாகச்
சின்னவிதி தலைதுடிக்கப் பெரியவிதி தலைகதறிச
சிதறி வீழ்ந்த
தென்னவிதி மூண்டதுங்கள் தலைவிதியோ சிவனைநிந்தித்
திதுபட் டீரே (39)

இன்னபடியென்று விதிமார்க்கம் போதிக்கின்ற பெரியோர்களுக்குக் கிருபைசெய்யும் பரமசிவனை மதியாமல் இகழ்ந்த வார்த்தை சொன்னபடியினாலே வியாசரிஷியினுடைய மலர் போன்ற கையானது துண்டமாகக் கண்ட நந்தி மகரிஷி சொல்லுவார் சிவ நிந்தனைசெய்த சிறு விதியான தக்கன் தலை துடித்து விழுந்ததாகவும் சிவ நிந்தனையினாலே பெரிய விதியான பிரமதேவன் சிரசு இழந்துபோனதையும் கண்டிருந்தும் இப்படி இகழ்ச்சி சொல்ல உமக்கு என்ன விதி வந்துமூண்டது? உம்முடைய தலை எழுத்துப்படியோ சிவனை நிந்தித்து இந்தப் பாடு பட்டீர் என்றார்.

வாஞ்சைசவைக்கா தரனையிகழ்ந் தமையுமுன்ன முதுகிலென்பு
வடுப்பக் கூற
யான்சபித்த சாபமுந்தீர்ந் திடநீலி வனத்திலுறை
யிறையை நோக்கித்
தேன்செறித்த மலர்கொடிறைஞ் செனப்புகன்றம் முனியகலத்
தெணணீர்க் கங்கை
மான்சிறக்குங் கரைநீல கண்டரெனப் பரவ வந்து
மலர்க்கை யீந்தான் . (40)

கொஞ்சமும் இரக்கம் வைக்காமல் சிவனை இகழ்ந்த பாபமும் முன்னாலே என்னுடைய முதுகெலும்பைக் கொண்டு வரச்சொன்னபோது நான் சபித்த பாபமும் தீரும் பொருட்டாக நீலிவனவாஸியான பரமசிவனை நோக்கித்

தேன் துளித்துக்கொண்டிருக்கிற புஷ்பங்களினாலே வணங்கிப் பூஜை செய்வாயென்று சொல்லித் ததீசி எழுந்தருளினார். குளிர்ந்த ஜலரூபம் படைத்த கங்கைக் கரையருகாக நீலகண்டரென்று பெயராகும்படி ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜிக்க அப்போது பரமசிவன் பிரத்தியக்ஷமாகி துண்டிக்கப்பட்ட கை மீண்டும் வளரும்படி வரங்கொடுத்தார்.

வரலோபத் துறுதவுண்மைத் ததீசிதனை யவன்சாப
மகன்றா ளோரைப்
பரலோடொன் றடர்வனங்கள் கடந்தனுப்பி மீண்டுதவம்
பயினு நாளிற்
சுரலோகின் னரமோவென றுரைபுகன்மா னிடத்தருள்
குறித்தெப போதுஞ்
சுரலோக நிகர்த்தபைஞ்ஞீ லியையடைந்தான் றன்மவன்மச
சோழன் றனே (41)

வரப்பிரசாதம் கொடுக்கிறதற்குச் சற்றாகிலும் லோபம் வந்தணுகாத உண்மையான உதாரகுணம் பொருந்திய ததீசிமகரிஷியையும் அவர் சாப விமோசனமடைந்த சபதரிஷிகளையும் பிரியாத நேசத்துடனே தன்னுடைய ஆச்சிரமம வனங்கள் கடந்து போகிறவரைக்கும் போய வழி அனுப்பி வைத்துத் திரும்பவும் தாற பியமகரிஷியானவர் தபசுபண்ணிக்கொண்டிருக்கிற நாளிலே கின்னரர் தொனியிலும் இனிமையுடைய பேசுகின்ற பார்வதி பாகனாகிய சிவபெருமானுடைய கடாக்ஷத்தை எததேசகாலமும மனதிலே எண்ணிக்கொண்டிருக்கிற தாமவரம சோழராஜன் தேவலோகத்துக்குச் சமானமாகிய திருபைஞ்ஞீலி என்னும் ஸ்தலத்துக்கு வந்தான்.

சனகனைப்போ லனைத்தையுங்கண் டறிந்தகன்ற கருத்துடைய
தரணி வேந்த
னனகனைநித் தியனைநிச குணத்தினனைத தாற்பியனை
யடிகள் போற்றி
யினிதுடன்முச சகங்களுக்கு மிகபரங்கள் கொடுத்துரட்சித்
திடவே வுன்றன்
பனகவடி வொழித்தெடுத்தா யனகவடி வெனமுகமன்
பலவுஞ் சொன்னன் (42)

சனகாதிகளைப் போல் வேதாந்த சாரங்களும சாஸதிரமாததியங்களும் கற்றுக் கேட்டு விரிந்த மனம படைத்த பூலோகத்து ராஜாவானவன், ஆதி

சேஷடிஞனுடைய சித்தியினை நிஜகுணம் படைத்த தாற்பியமகாரிஷியைக் கண்டு அவர் பாதத்திலே தண்டம் பண்ணிச் சொல்வான். இன்புடனே திரிலோகத் தாருக்கும் இகபர சௌக்கியங்களைக் கொடுத்து ரக்ஷிக்கும் பொருட்டாகவே உன்னுடைய ஆதி ரூபம் தவிர்ந்து ஒரு ரிஷி ரூபத்தை எடுத்தா யென்று பல விதமாக உபசாரங்கள் சொல்லி ஸ்தோத்திரம் செய்தான

வேதமுனி யாசிபுகன திருக்கைகொடுத் திடவிருந்து
வேந்தன் சொல்வான்
கோதறாமும் மலதிமிரத் தறிவெனுங்கட் புலனிழந்து
கொடிய மாயை
வாதனையா ளனவில்பல பிறப்பிறப்பென் றலைகடற்குள
மலைந்தேன் ஞான
போதமெனும் புணையின்முத்தித் தீரமினிச் சேரவருள
புரிவா யென்றான் (43)

இப்படி துதித்ததைக் கேட்ட வேத வித்பாகரான தாற்பிய மகரிஷி அநேக ஆசீர்வாதம் செய்து தமக்கு எதிராக இருக்கச் சொல்லி இடம் கொடுக்க, இருந்த தாமவர்ம சோழராஜன் சொல்லுவான மும்மல திமிரத்தினால் அறிவாகிய கட்புலனை இழந்து கொடிதாகிய மாயையினாலே வாதைப்பட்டு பல ஜனனமரண மென்னும் கடலிலே வீழ்ந்து மலைவுற றேன். இனி ஞான போத மென்கிற தெப்பத்தின் துணை கொண்டு முத்தியாகிய ஆனந்த சமுத்திரத்திலே சேரத் தக்கதாய அனுக்கிரகம் பண்ணு வாய்,

என்றளவி லுயர்பரம கதிக்குரிய னிவனெனத்தன்
னிதயங் கூர்ந்து
வென்றிதிரு பனுக்குமன தொன்றுபட வேதாந்த
விரிவை வாசக்
கொன்றைபுனை சோதிசன காதியருக் கருள்புரிந்த
கொள்கை யேபோ
லன்றிதிகழ் சிவசிவ மாயையிவை யிவையெனவே
நவிலக் கண்டான் (44)

இப்படிச் சொன்னமாத்திரத்திலே பரமமோக்ஷத்துக்கு சுதந்தரவாளி இவ னென்று ஹிருதயத்திலே எண்ணி வெற்றி பொருந்திய ராஜனுக்கு

வேதாந்தத்தினுடைய விஸ்தாரத்தை வாசனைபொருந்திய கொன்றைமாலை தரித்த பரமசிவன் சனகாதியர்க்கு உபதேசித்த பிரகாரம் நன்மையாகிய ஞானம் பிரகாசிக்கும்படி பதி இதுவென்றும் பசுவானது இது என்றும் பாசமிது வென்றும் தனித்தனியாய் உணர்த்தி விரித்துச்சொல்ல நன்றாய்க் கண்டறிந்து கொண்டான்

மாவிரிய மதுபபொழிதண் கதலிவசந் தனைப்பரவி
மன்னற் கெல்லா
நீவிரினிப் பயணமெனச் செலுத்தியருந் சேனையொடு
நின்றோர்க் கன்பாய்ப்
பூவிரிவா வியினெமுகிபூத்த காவிமணந் திகழுநிசுளா
புரிக்குட் போந்து
காவிரியின் மகிமைதுலா மாதத்திலுமை யவணமகிழ்ந்த
கதையுங் கூறி (45)

தேன் சொரியுங் குளிர்ந்த கதலி வனத்தை நமஸ்கரித்துப் பூலோகத்து ராஜாக்களுக்கெல்லாம் உயர்ந்தராஜனே உன்னுடைய பட்டணத்துக்குப் பிரயாணமாய்ப் போவாயென்று அனுப்ப அதைக் கேட்டுத் தன்னுடைய சேனையோடுங் கூடிப் பிரியாவிடையாக நிற்பதைக் கண்டு தாமரைத் தடாகங்களிலே மிகுந்த செங்காவிமலர் வாசனை பிரகாசமாகப் பொருந்திய உறையூருக்குப்போய் காவேரிமகத்துவமும் துலாமாதத்திலே உமையவள் மகிழ்ந்த திருக்கல்யாண மான கதையுந் திருவுளம்பற்றினார், தாற்பியமகாரிஷி

வணங்கிநிசு ளாபுரியின் மன்னனனுப் பிடநீலி
வனத்தைச் சார்ந்து
குணங்களெல்லாங் கடந்துறைநிர்க் குணத்தானை யமுதடியற்
குணத்தன் றானைக்
கணங்களபுடை சிறந்திடுமுக் கணனைவிட வரவணிகங்
கணத்தி னானைப்
பணிந்தவர்கைப் பலத்தை ரத்தினம் பலத்தானைத் தொழுதுதபோ
பலத்தி னாலே (46)

இந்தக்கதை கேட்டபின் தர்மவர்ம சோழராஜன் வணங்கி உறையூரி லிருந்து அனுப்ப தாற்பியமகரிஷியானவர், நீலிவனத்திலேவந்து முக்குணங் களையுங் கடந்து நிர்க்குணம் படைத்தவனைத், தனக்கு அடியனாகிய அப்பர் பூர்த்தி புசிக்கும்படி கட்டமுது எதிர்கொண்டு கொடுத்தவனை, பக்கத்திலே சிவ

கணங்கள் சூழ எழுந்தருளியிருப்பவனை, மூன்றுகண் படைத்தவனை, விஷம் பொருந்திய சர்ப்பங்களையணிந்தவனை, தம்மைப்பணிந்தபேருக்கு வரப்பிரஸாதம் கைப்பலனாய் அருள்பவனை, ரதனசபைவாசனைத் தியானம் பண்ணித் தபோ பலத்தை நிறைவேறச்செய்தார் தாற்பியமகரிஷி.

வாயுவையா தாரமெனக் கொடுமூலாக் கினியெனப்பேர்
வயங்கா நின்ற
தேயுவைமே லெழமூட்டி யாதவன்மண் டலங்கடந்து
சேணின் மீதே
போயுவகை தருமதிமண் டலத்தமுதை யுடலெல்லாம்
பொழிய நோக்கி
யாயுவைமென் மேல்வளர்த்திட் டிருந்தனன்வின் ணவர்வருட
மயுதந் தானே (47)

வாயுவை இடைபிங்கலையினாலே ஒடுக்கிச் சுழிமுனையிலே செலுத்தி மூலாதாரத்திலிருக்கிற அசனியை மூட்டி வாங்காமல் மேலெழும்பின அக்னிக் கொழுந்து நாதமாகிய சூரியமண்டலத்திலே தாக்கி அது கடந்து ஆகாச வெளியோடுபோய ஆனந்தம் தருகின்ற விந்துவாகிய சந்திரமண்டலத்தி லிருக்கின்ற அமிர்தத்தினாலே தம்முடைய சரீரமாத்திரம் முழு சொரியும்படி ஞானக்கண்ணினாலே பார்த்துத் தம்முடைய ஆயுள்மென்மேலும் வளரும்படி செய்துகொண்டு தேவ வருஷத்திலே பதினாயிரம் வருஷம் சிவயோகம் செய்து தபசுபண்ணிக்கொண்டிருந்தார்.

தளராதிப் படிநெடுநா ளிருந்திடுதாற பியமுனிவன்
றவத்தை நோக்கிக்
கிளராத மனமகிழ்ச்சி கிளர்வசிட்டா தியருமிகு
கீத வோதை
வளராசி லாதவித்யா தரகருட காந்தருவர்
வழுத்தி யேத்தற்
குளராகி நிறைந்தார்வெற் புறைந்தாரங் கெதிர்வந்தா
ரும்பர் சூழ (48)

இப்படி தளர்ச்சியில்லாமல் தாற்பியமகரிஷி நெடுநாள் தபசு பண்ணுவதைப்பார்த்து மனதிலே யடங்காத மகிழ்ச்சி கொண்டபடி வசிஷ்டர் முதலாகிய ரிஷிகளும் குற்றமில்லாத கீதநாதம்பண்ணுகின்ற வித்தியாதரர் கருட

கந்தருவர்களும், நமஸ்காரம்பண்ணி ஸ்தோத்திரம் செய்யும்படி கைலாசவாஸரான பரமசிவன் தேவதைகளெல்லாம் நிறைந்து சூழ எதிர்தோன்றினர்.

அரித்தோலுந் தரியமுஞ்செவ வரித்தோலி னுடையும்விட
வரித்தோற் கசசுங்
கரித்தோலின் மேல்விரிப்பு மரித்தோரென் பணிதாருங்
கடுக்கைத் தாரு
நெரித்தோர்பங் கயமுகிழ்ப்போற கிள்ளியபங் கயன்றலையு
நிலாவெண் கீற்றுந்
தெரித்தோது மறைவாக்கும் பஙடைமானும் புடைமானுஞ்
சிறக்கத் தோன்ற (49)

புலித்தோலுடையு மசிங்கத்தோல உத்தரீயமும விஷம பொருந்திய சர்பபத்தின்தோலை இடுபபில கசசாக பணிந்தும ஆனைத்தோலை போர்வையாகத் தரித்தும இறந்தபேர்களினுடைய எலுமபுமாலையும கொன்றைமாலையும, தாமரை மூகிளைபபோல் நெரித்துக்கிள்ளின பிரமமாவின் சிரமும, மூன்றும்பிறையும் வாயிலேவேதகோஷமும பக்கத்திலே பார்வதியும கையிலே மானுமமழுவும் விளஙகததோன்றினா.

தோனறியசிற் பரன்மகிழ்வாற் றன்றனித்துப பரவசனாய்த
துரியா தீதத
தூன்றியொரு சிறிதுமுனை கியநகையையுற் றிடாதமுனி
யுறுதி நோக்கி
வான்றிகழ்பங் கயக்கரங்கொ டுடலமெலாங் குளிர்ந்திடத்தை
வரலும் வாரா
மூன்றுவிழிப் பெருமானெந் தனரெனக்கண் டெழுந்திருந்தான்
முனி தாழ்ந்தான் (50)

இபபடி சிற்பரனாகிய பரமசிவன் தோனறிய மகிமையினாலே தாற்பிய மகரிஷி ஆனந்த சமுத்திரத்திலே யேகபரவசமாய்த் துரியாதீதத்திலே தம்முடைய மனதைவைததுப பிரபஞ்சம சற்றுகிலும தோன்றாமல் தமமை மறந்திருந்தார இந்த ரிஷியினுடைய உறுதியைப பரமசிவன்பார்த்து பிரகாசம பொருந்திய தாமரைககமலம போனற கையினாலே சரீரமெல்லாம் குளிரும்படி தடவினா அபபோது நினைவுதோன்றியது. உடனே திரிநேத்திரமுடைத்த நாயகனாகிய பரமசிவன் வந்தாரென்றுகண்டு தபசைவிட்டு எழுந்திருந்து அவருடைய பாதாரவிந்தங்களிலே நமஸகாரம பண்ணினா.

திருகிரா னிலத்திலுயர் கிரிபறித்த கரங்களென்மெய்
தீண்டு மோவென்

றுருகின னுடல்புளகித தருவியா றெனநயனத்
தொழுகு கண்ணீர்

பெருகின னொருமையுறற சுகாதீதப் பெருந்தீவிற்
பெருகுந் தேனைப்

பருகின னருள்சிறந்த தாற்பியன்வாழ்த் தெடுத்தரனைப்
பரவி னானே (51)

பூலோகத்திலே கோணுதியாத மகமேருகிரியைப பறித்து வில்லாக வளைத்த அஸ்தத்தினலே எனனுடைய சரீரததைததொட என்னபுண்ணியம்பண்ணினேனே வென று உருகி உடல்புளகாஙகிதமடைநது இரண்டுகண்ணிலேயும் ஆறுபோல் நீரபெருக ஆனநதமடைநது சுகாதீதப பெருவெளியில் தோன்றிய ஞானனந்த தேனையுண்டவராகிய தாற்பியமகரிஷி ஈசுவரனை ஸ்தோத்திரம செய்தார்

நடத்தாற்பத் தருக்குவினை தீர்த்தரத்ன சபாபதியே
ஞாலந் தாங்குந்

திடத்தால்வா யுவைவாதிட் டவிழ்னுடிப் புகுகயிலைச
சிகர மெலலாம்

படத்தாற்பொத் தினபாவ முனைத்தொடர்ந்த தெனமுனநீ
பகர்ந்த வாறே

கடற்பாரி னிடத்துழலா தருளபுரிதெக் கணகயிலைக்
கடவு ளானே (52)

பின்னும தாற்பியமகரிஷி சொலலுவார நடன தரிசனததைக கண்ட பக்தருடைய பாபங்களெலலாம தீாததருளிய ரதன சபாபதியே அடியேன பூலோகமெல்லாம தாங்கும திடசித்ததினலே வாயுவை யெதிாதது அவனையும கயிலையையும படத்தினல் பொததினபாபம அடியேனைத தொடர்நத தென்று தேவரீா கட்டளையிட்டீா அநதபபடி இனனமும கடல் சூழ்நத பூலோகத்திலே ஜனித்துழலாமல் கிருபைசெயயவேண்டும தக்ஷிண கைலாசபதியே.

இனையவா சகம்புகன்ற தாற்பியமா முனிவரனை
யினிதி னேக்கி

யனையவா யுவையவன்போ யொளித்தகயி லையைப்படததா
லடர்ந்து மூடி

யுனையடைந்த பாவமகன் றதுரசித கயிலைவெற்பி
லொளிரு மூர்த்தி
தனையடைந்து வேண்டுவரம் பெறுதியென விடைகொடுத்தான்
றுணுத் தானே (53)

இந்தப்பிரகாரம் விண்ணப்பஞ்செய்த தாற்பியரிஷியைப் பரமேசுவரன் பார்த்துத் திருவுளம்பற்றுவார். பயந்து ஒளிந்த அந்த வாயுவையும் கைலாசத்தையும் படத்தினாலே கெட்டியாக மூடின பாவத்தொடர்ச்சி நீங்கிப் போயிற்று இனிமேல் வடகைலாசமான வெள்ளியங்கிரியில் பெருமையோடுங் கூடி எழுந்தருளிய பரமசிவத்திடத்திலேபோய் உனக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைப் பெறுவாயென்று விடைகொடுத்தா ரவஸ்துவாகிய ஜகஜ்ஜோதி

அண்ணல்விடை கொடுத்துமறைந் திடவசிட்டன் முதலோரை
யணுகி யோகி
புண்ணியருங் களைப்பிரிந்துப் குவளைவென நிரங்கிரதனைப்
பொதுவை வாச
வண்ணமலர்த் தடஞ்சூழ்பைஞ் ஞீலியைநீங் கியதுயர்சோ
மனத்த னாகிக்
கண்ணுதலைக் கயிலையின்மே லண்ணலைக்கண் டான்செவிமுன்
கண்டா னென்றான் (54)

அண்ணலாகிய பரமசிவன் அப்படி வரப்பிரசாதம் கொடுத்து மறைவாய் எழுந்தருளினார் பின்பு வசிஷ்டர் முதலாகிய ரிஷீசுவரரிடத்திலே போய்ப் புண்ணியவான்களான யோகீசுவரர்களே உங்களைப்பிரிந்து வாழுவேனென்று இரக்கமான உபசாரங்களைச் சொல்லி ரதனசபைப் பொருந்திய தாமரைத் தடாகம் சூழ்ந்த திருப்பைஞ்ஞீலியைவிட்டு வருகிறபோது வியாகூல மனமாகி நெறியிலே கண்படைத்த வடகைலாசபதியான பரமேசுவரனைக் கண்டான் யாவருக்கும் முதன்மையாகிய செவிபடைத்த ஆதிசேஷனென்னும் தாற்பியரிஷி.

கனிமுதிர்ந்தங் குருத்தவித்துப் புவனியில்வீழ்ந் ததுசிலநாள்
கழிந்தது மீட்டுந்
தனதுமரத் தடைந்ததெனக் கயிலைபொன்வெற் பிமையமுதற்
றலத்தின் மேவு

புனிதசிவ கணமுனிவர் குறையகலப் பரதகண்டம்
பொருந்தி வாழ
மனிதரிற்றோன் றவர்நெறிபபட் டிருந்துமுன்போலுயர்கதியில்
வருவா ரன்றே (55)

விருக்ஷத்திலே முதிர்ந்த கனியானது பூமியில் விழுந்து விண்டு அதின்விதையானது சிறிது நாள் போனதின் பிறகு திருமபவும அந்த விருக்ஷத்தினிடமே தோன்றுவதுபோல் கைலாசகிரி, மகமேரு ஹிமோத்பர்வத முதலாகிய ஸ்தலங்களில் வசிக்கும சிவகணங்கள், முனிவர்கள், தங்கள் தங்கள் வியாகூலம தீருமபடி பரதகண்டம பொருந்திய பூலோகத்திலே நர ஜன்மத்தை எடுத்துப பின அவாகள் நெறிதவறாதபடி இருந்தாகளானால் முன்போலு முயர்ந்த சிவரூபமடைந்து மோக்ஷமும பெறுவாாகள

தேனிருக்கு மலர்க்கடுக்கை நாத தாமத்தார் வாமத்தார்
தேவி யோடுந
தானிருக்கு மாதியுருத் திரக்கடவு ளிருகமல
சரணம் போற்றி
யூனிருக்கத் திருவிளையாட டியிமைய| மெனுமலின்ன
முனனை நீங்கி
யானிருக்க விடுததாலெப படியிருக்கக் கடவெனென்
றிறைஞ்சிச சொல்வான (56)

தேன்கள் துளித்துககொண்டிருககினற கொன்றை மலாமாலையானை, பாாவதியை இடதுபககததில வைததிருபபவனை, ஆதிதேவனாகிய ருததிரனை இரண்டு பாதாரவிநதங்களிலும வணஙகி ஊனிருகக உயிரை இபபடித் திருவிளையாடலாக ஆட்டி வைததது போதுமெனறு சுவாமி திருவுள்ளத்திலே பக்ஷம வைததிருககக கடவதெனறு நமஸகாரம பண்ணித் தாற்பிய மகரிஷியானவா விண்ணபபம செயது பினனும சொலலி ஸதுதிபண்ணுவார்

நிறைவாகில் விடவாவினை கறைவாய்க்குட் படுதுமென்று
நிலாவெணு கீற்றுப
பிறையாய்நின் றலவுசடா டவிக்கடவுள் போற்றிவிண்ணோர்
பிரானே போற்றி
மறைதேடற் கரியபரம் பொருள்போற்றி குறையாத
வாழ்வே போற்றி
யிறையோனே போற்றியென்ற முனிவனுக்கன் பொடுபுனித
னினிது சொல்வான் (57)

நிறைந்தகலைபடைத்த பூர்ணசந்திரரூபத்துடனிருந்தால் விஷம்பொருந்திய ராகுவான சாபபத்தின் படுவாயிலே படுமென்று மூன்றாம்பிறைரூபத்துடனே எபபோதும் சந்திரன் உலாவும சடாதரனே போற்றி; தேவர்களுக்கெல்லாம தம்பிரானேபோற்றி; நாலுவேதமும தேடிக் காண்பதற்கரிதாகிய பராபரனேபோற்றி; என்றைககும குறைவுபடாத வாழ்வேபோற்றி; தேவர்களுக்கெல்லாம தேவாதிதேவனேபோற்றி—என்று ஸதோத்திரம பண்ணிய தாற்பியமகாரிஷியை அன்புடனே பரமசிவன் பார்த்துத திருவுளமபற்றுவார்.

யோகத்தாற் பியனேகே ணெடுங்கால முனைவைவெறுத
 துடலஞ் சோக
தாகத்தான் மெலிவுறச செய் தவத்தோரெல் லினைதுயரிற்
 றளரா ரன்றே
வேகத்தாற் கடலகிளர்ந்த பிரமகறபத திலு மழியா
 தீசா மேவு
லோகத்தா தரிததுயாநித நியபதமெற றிருகதியென்று
 ரைனென்றாய் நின்றான் (58)

சிவயோகம்படைதத தாறபியனே, மெளனம், நெடுங்காலம உண்டிமறுத்து உடல்வெறுத்துச சோகதாகததினெ மெலிவுபட்டுத தபசுசெயதபேர்கள் வலிதாகிய வினைதொடாசசியில தளாசசியடைவதிலலை. ஜலப பிரளயங் கொண்ட பிரமகற்பாநத காலஙகளிலும அழியாதவஸதுவாகிய ஈசன மேவும லோகத்திலே நிலையான நிததியமாயிருக்கிற பதவியைபபெறுவாயென்று திருவுளம பற்றினா ஏகமாய எஙகும தோனறி விளஙகும பரமசிவன.

பாங்குடனெம் பரனாசொற படியேநித நியதேகம்
 படைத்த யோகி
பூங்கயிலை மலையும்ரதனப் பொதுநிறைதென் கயிலையுமெய
 போது மேவி
யோங்குபல புவனமுமப புவனவியற கையுமநோக்கி
 யுகாந்த நாளிற
றாங்கரிய பிரமகற்பத் தீசருறை சிவலோகங்
 தன்னைச சார்ந்தான் (59)

அபபடிப்பரிவாயப பரமசிவன் கட்டளையிட்டபடியே நிததியமானதேகம படைத்த யோகீசுவரரான ஆதிசேஷன வடகைலாசமான வெள்ளியங்

கிரியிலும் ரத்னசபை பொருந்திய தென்கைலாசமான திருப்பைஞ்ஞீலியிலும் எந்த நாளும் வாசமாயிருந்து பல புவனங்களையும் அந்த புவனங்களிலுள்ள நடத்தைகளையும் நோக்கித் தாங்கப்படாத பிரமகல்பாந்தகாலம் வரும்போது பகவான் வசிக்கும் சிவலோகத்திலே வாழ்ந்திருந்தார

ஆதித்தா னுவைத்திருப்பைஞ் ஞீலிசசோ தியனா தனம்
பலத்து ளானை
நீதித்தாற் பியராருசசித் கருந்தவஞ்செய் தருளடைந்த
நெறியீ தென்றே
வாதித்தார் வணங்குதிறற் பன்னிரண்டா சாரியாக்குண்
மகிழ்ந்து தொன்னூற்
போதித்தான் வளவர்குல திலகசந்த்ர பீடனுக்குப்
போதித் தானே (60)

யாதொரு தெயவஙகளுககு முதன்மையான பரமசிவனை, திருபபைஞ்ஞீலியில் ஜகஜ்ஜோதி ரூபமான ரதனசபா நாயகனை, தாம நீதி வழுவாத தாற்பரிய மகரிஷி பூஜை பண்ணித தபசு செயது பதவியடைநத சரிததிரம இவவளவென்று சநதிரபீடராஜனுக்குத் திருவுளமபற்றினார், பன்னிரண்டு சமயததுககும குருவானவர்கள் வஸ்துவானது இதுவென்று தெளிந்தறிய மாட்டாமல் ஒருவருககொருவா தாககம பண்ணிககொண்டு தமமிடத்திலே வந்தபோது சந்தோஷமாய முதன்மையாகிய நூலாகிய வேதஙகளிலே எடுத்துக்காட்டிய வஸது இதுதானென்று அவாகள் சமமதிக்குமபடி சிவஞானம போதிதத அகஸ்தியா.

## பதினைந்தாவது ஸ்ரீராமர் பூஜையின் மகிமை

கிரண சுவேத கிர்சர் நலஞ்சேர்
சரிதை விழைவிய சந்திர பீட
நரபதி யினனு நவின்றரு ளென்ன
மரபொ டகத்திய மாமுனி சொலவான் (1)

கிரணங்களை வீசுகின்ற முத்துமலைவாசனான ஈசுவரனுடைய நன்மை சேர்ந்த சரித்திரத்தைக் கேட்ட சந்திர பீட சோழநராதிபதியானவன் இன்னும் சிவ சரித்திரங்களைத் திருவுளம்பற்ற வேண்டுமென்று கேட்க அந்தப்பிரகாரம் வரலாறு தப்பாமல் அகஸ்திய மகாமுனி திருவுளம் பற்றுவார்.

தபரதர் பணிவிடை தலைமிசை கொண்டே
யியல்பொடு வனநட வியரகு ராமன்
மயிலியல் சிறைபுக வநுதுணை யோடும்
புயலுறை தருதிரைப் பொன்னி யடைந்தான (2)

பிதாவாகிய தசரதமகாராஜன சொல்லைச சிரசின்மேலே தரித்துக் கொண்டு இயற்கையுடனே வனவாஸமாக நடந்த சௌரியசாலியான ராமபத்திரானவர் மயில்சாயைபோன்ற சீதாதேவியை இராவணன் கொண்டுபோய்ச் சிறைவைத்ததின பிறகு தம்முடைய தம்பியாகிய லக்ஷ்மணரோடுங்கூடி ஆகாசபரியந்தம் அலையெழும்பிவீசுகின்ற காவிரிநதிக்குச சமீபமாக வந்துசேர்ந்தார்.

பூதல மாதுசெய் புண்ணிய மேபோன்
மேதகு காவிரி வியநதி மூழ்கி
யேதமில் கௌசலை யீன்றருள செலவன்
காதலி னித்திய கரும முடித்தான் (3)

பூமிதேவியானவள் செய்த புண்ணியம்போல மேன்மையாக வருகின்ற காவிரியில் சந்தோஷமாகத் தீர்த்தமாடிக் குற்றமில்லாத கௌசலை பெற்றசெல்வக்குமாரரான ஸ்ரீராமபத்திரன நேமத்தோடுங்கூடி நித்தியகாமானுஷ்டானம செய்துமுடித்தார

ஒளவலை சீதையை யோர்சிறை வைத்த
கள்வ னிலங்கை கலக்கி யடும்போர்
கொள்வது நாடிய கொண்டல் நிறத்தோன்
வெள்வரை சார விருந்தன னன்றே (4)

பிரகாசமாகிய வளையலணிந்த ஹஸ்தம்படைத்த சீதாதேவியைத் திருட்டுத்தனமாய் எடுத்துப்போய் சிறையிலேவைத்த கள்ளனாகிய இராவணன் பட்டணமான லங்காபுரி கலங்கும்படி யுத்தம் பண்ணுவதற்கு நினைத்திருக்கின்ற மேகவர்ணன் முத்துமலைக்கு ஒருபாரிசத்திலிருக்கிற திருவள்ளறைப பக்கத்தில வந்திருந்தார்.

வெம்பிய வானர வெள்ளமும் வாலி
தம்பியு மஞ்சனை தந்தருள் வோனுங்
கொம்பனை தாரைகு மாரனு நேரே
பம்பி யெழுந்த படைத்தலை வோரும் (5)

அதிர்ந்து எழுந்துவருட வானரவெள்ளமும வாலி சுகரீவாகளும அஞ்சனாதேவி புத்திரனான ஹனுமாரும தாரைகைபுத்திரனுமான அஙகதனும பின்னும அவாகளுக்குச் சமானமானபடைத்தலைவரு

சிங்க மடர்ந்த திரட்சிய தென்கா
மங்குல் பரந்து வருஞ்செயன் மானப
பொங்கி யெழுங்கடல் பொருதிரை யேபோ
லெங்கு மிரங்கி யிருந்தன ரன்றே (6)

அநேக சிஙகங்கள ஒன்று கூடிய மேதன எழும்பின சபதமேகஙகளானது பானம பண்ணுகிறதற்கு வருகிறதைக்கண்ட சமுத்திரம எழும பொஙகி அதின அலை விஸ்தாரமாய விரிவதுபோலும சந்தோஷமாய எஙகும சேனைகள் நிறைந்திருந்தாாகள்.

நந்துறு பொன்னனி நறும்புனன் மூழ்கி
யெந்தைபைஞ் ஞீலியி லீசா பதத்தை
வந்தனை செய்ய வழிக்கொடு செல்வா
னந்தவ சிட்டனை யன்பொடு கண்டான் (7)

சங்கினங்கள் நந்துகள தவழுகின்ற காவிரியிலே தீர்த்தமாடித் திருப்பைஞ்ஞீலியில் வாஸமான எநதையாகிய ஈசுவரனுடைய பாதாரவிந்தத்திலே வந்தனை வழிபாடு செய்யும்படியாய வருகிற வசிஷ்ட மகரிஷியை வெள்வரைப பக்கத்திலே இருந்த ரகுநாயகா கண்டார

எதிர்வரு குரவன திணையடி மீதே
யதிர்கழல் புனை யாசன் வணங்கி
மதிநுதல் சிறைசெல வருகுறை யெல்லாம
விதம்வித மாக விரித்துரை செய்தான் (8)

அப்படி எதிராக வருகின்ற வசிஷ்டர் பாதங்களிலே வீரகண்டாமணி தரித்த பாதனென ஸ்ரீராமபத்திர ராஜன் வணங்கி மூன்றாம்பிறை போன்ற நெற்றியினையுடைய சீதாதேவி சிறைபுகுந்ததினாலே தன் மனதிலடைந்த குறைகளெல்லாம் வகைவகையாய் நன்றாய் விவரித்துச்சொன்னார்.

சீதை யடைந்தனள் சிறைதனி லென்றே
நீதி வசிட்ட னுநெஞ்சு தளர்ந்தே
மாதவ னாசிர மத்தினில் வாவென
ஆதி யிராகவ னைக்கொண் டடைந்தான் (9)

இப்படி வகை விவரத்துடனே சீதை சிறைப்பட்டதென்று கேட்ட நீதிமார்க்கம் தவறாத வசிஷ்டரிஷி தளர்ந்தமனத்தராகித் தம்முடைய ஆச்சிரமத்திற்கு ஸ்ரீராமரை அழைத்துக்கொண்டு வந்தார்.

நம்பர னார்நட னந்தரி சிக்க
வண்புட னேதுர னாசல மீதே
வம்பலர் பைம்புனல் வாவி படிந்து
தன்பரி வோடு தவஞ்செய்த வாறும் (10)

வசிஷ்டரிஷியானவர் திருவுளம் பற்றுவார் முன்னாலே தாம் தபசு பண்ணவேண்டி அன்புடனே அருணாமலையிலே வந்து தாமரைமலர்பொருந்திய விசாலபுஷ்கரணியிலே தீர்த்தமாடி மகா பக்தியுடனே தபசு செய்த வரலாறும்.

அன்னை விசாலையு பாசனை யாலுந்
சந்நிதி முன்செய தபோபல னாலு
நன்னெறி சேர்சன னங்களி லெல்லா
முன்னுறு நன்மை முதிர்ச்சியி னாலும் (11)

தாயாகிய விசாலாக்ஷியம்மனை உபாசனை செய்தபடியினாலும் அவள் சந்நிதானத்திலிருந்து தபசு பண்ணினபடியினாலும், நன்மையாகிய நெறியுடனே கூடி முன்னாலே பல ஜன்மங்களதோறும் அடுத்திருந்த தவக்குறைவு முதிர்ந்தபடியினாலும்.

அரி யயன வாசவ னாதிய தான
வரமிகு மாதவர் வானவர் காண
பரிவொ டிரத்தின சபாபதி ஞான
திருநட னந்தரி சித்திடு மாறும் (12)

பிர்ம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலாகிய தேவர்களும் வரபிரஸா தங்களில் மிகுந்த ரிஷிகளும எல்லோரும் காணும்படி பரிவாய் ரதனசபாபதி யின் ஞானத்திரு நடனத்தைத் தாம தரிசித்த வரலாறும

மேதகு தேவ விசால நடததே
யேதமி லாத வியற்கைக ளெல்லாம்
போதனை யோடு புகன்றுமைஞ் ஞீலி
நாதன் வரங்க ணயந்திடு மாறும் (13)

மேன்மையான தேவதீர்த்தமான விசாலபுஷ்கரணியில் அதிசய மகத்து வங்களெல்லாம திருமைஞ்ஞீலிநாதர் தமககுப போதித்து அதிக வரபிரஸா தங்களைக் கட்டளை யிட்ட வரலாறும.

தனதொரு நாம விசால தடத்தே
யனுதின மூழ்கி யருச்சனை செய்தே
யினிதுட னேயுமை யீசர்ப ததத்தே
மனது கனிந்து வணங்கிய வாறும் (14)

தன் பெயரினாலே விஸ்தாரமாய ஒரு தீர்த்தமுண்டாக்கி அதிலேதாம அனு தினமும் தீர்த்தமாடிப புஷ்பங்களினாலே பார்வதி பரமேசுவரன பாதத்திலே மனங்கனிவாய் வணஙகிவநத வரலாறும

இனம்பரி ணும மெலாமடை வாக
முனிவன் வசிட்டன் மொழிந்தன னன்றாய்
வினவின நெஞ்சம் வியந்து மகிழ்ந்தாள்
அனுச னொடுந்தய ரதனுயர் மைந்தன் (15)

இபபடிபபட்ட பரி நாமஙகளெல்லாம அவனுடன் வசிஷ்டரிஷி சொன்னதை நன்றாய்க கேட்டு மனதிலே மகிழ்ச்சியடைந்தார்கள் தசரதகுமா ரான ராமபத்திரரும அவருக்கு இளையவனாகிய லக்ஷமணனும்

ஈது நிகழ்ந்ததி ராகவ னென்னுங்
கோதறு ராச குமாரனை நோக்கி
வேதபு ராண விசாரணை வலல
மாதவ ஞான வசிடட னுரைப்பான் (16)

இதுகேட்டு ஆச்சரிய மடைந்த இராகவ னென்னும பெயர்படைத்த குற்றமற்ற இராஜகுமாரனான ஸ்ரீராமரைப பார்தது வேத புராணங்களை நன்றாய் விசாரணைபண்ண வல்லவரான மகாதவ ஞானியாகிய வசிஷ்டர் சொல்வார்.

தானுனை யுன்னி விசாலை யெனும்பேர்
நீணுதன் மேவுபைஞ் ஞீலியின் மேன்மை
யாணவ மாயை யகன்றிடு மேலோர்
காணுவ ரல்லவர் காணரி தன்றே (17)

சிவனைத் தியானம் பண்ணி விசாலாக்ஷியம்மன் தபசு பண்ணின திருப்பைஞ்ஞீலி மகிமையை ஆணவமாயையற்றிருக்கின்ற பெரியோர்கள் அறிவார்களல்லாமல் மற்றப் பேர்கள் அறிவது அரிதாகும்.

விண்டுவி சால விலோசன மென்றோர்
புண்டரி கங்கொடு பூசனை செய்தே
திண்டிற லாழிகொ டென்கயி லாயநங்
கண்டவ ரேகதி கண்டவ ரன்றே (18)

பக்திமார்க்கத்துடனே மகாவிஷ்ணுவானவர் சந்தோஷமாகத் தம்முடைய கண்மலரைத் தாமரைமலராகப் பாவித்து அர்ச்சனை செய்யும் போது திறமை பொருந்திய சக்ராயுதம் கொடுத்த பரமசிவன் வாஸமான தக்ஷிணகைலாசத்தைக் கண்ட பேர்களே மோக்ஷ வீடு காணப்பெறுவார்கள் ராஜனே என்றார் வசிஷ்டர்.

நாவிரு தீர்த்த நலம்பெற மூழ்கி
நீலிவ னேசனை நேய முகந்தே
சீலமொ டர்ச்சனை செய்பவ ரன்றோ
ஞாலமும் வானவர் ஞாலமு மாள்வார் (19)

பின்னையும் அந்த ஸ்தலத்திலிருக்கின்ற எட்டுத் தீர்த்தங்களிலும் சங்கல்ப விதியுடனே நீலிவனேசுவரனை பக்தி விசுவாசமாக ஆசாரசீலத்துடனே கூடிய பத்திர புஷ்பங்களினாலே அர்ச்சனை செய்கின்ற பேர்களெல்லாம் பூமி, அந்தரம், ஸ்வர்க்கம் மூன்றையும் அரசுபுரிவார்.

நண்ணுபைஞ் ஞீலியி னம்பர பதத்தே
யண்ணலு மன்போ டருச்சனை செய்தா
லெண்ணுறு வேலையி லங்கையை வென்றே
திண்ண மருஞ்சிறை சீதையு மீட்டாய் (20)

இப்படி திருப்பைஞ்ஞீலியில் வாஸமான பரமசிவன் பாதாரவிந்தத்திலே ராஜாவே நீயும் அர்ச்சனைசெய்தால் உன்னுடைய எண்ணத்தின்படி லங்காபுரியை ஜயித்து நிச்சயமாய்ச் சிறையிலகப்பட்ட சீதாதேவியை மீட்டுக்கொண்டு வருவாய் என்றார்.

என்ன வசிட்ட னியம்பிய சொல்லான்
மன்ன னிராகவன் மாமகிழ் வெய்தி
தன்னுற தம்பி தரும்பொருள் கொண்டே
யன்றிலை பூசனை யன்பொடு செய்தான் (21)

இப்படி வசிஷ்டமகாரிஷி சொன்ன வசனத்தினாலே ராஜாதி ராஜரான ராமபத்திரர் மகா சந்தோஷமடைந்து தமதுடைய சகோதரரான லக்ஷ்மணர் பூஜா திரவியமெல்லாம தேடிக் கொண்டுவந்து கொடுக்க, அவைகளை வாங்கி விதி தப்பாமல் சிவபூஜை அன்பினாலே செய்தார்

காரண னேகன காசல சாபா
பூரண ஞான புராதன ரூபா
ஆரண கோடி புராண கலாபா
நீரணி வேணி யனேசர னென்றான் (22)

இப்படி பூஜைசெய்து ஸ்தோத்திரம பண்ணுவார். சகலகாரணங்களுக்கும் நாயகனானவனே, மகாமேருகிரியை வில்லாக வளைத்தவனே, பரிபூர்ண ஞானவானே, ஆதியநாதியாகிய சொரூபனே, வேதாகமபுராண சாஸ்திரங்களெல்லாம் ஒருரூபமாகத் திருமேனியாய விளங்குகிறவனே, கங்காஜடாதரனே, சரணமென்று பின்னும் சொல்லித் துதிப்பார்.

சாலவு நின்ன தருச்சனை செய்யா
மாலுற வேனை மகிழ்ந்தரு ளய்யா
சீலவெண் ணீறு திகழ்ந்தொளிர் மெய்யா
நீசிவ னேசுர னேசர னென்றான் (23)

மனது சந்தோஷமாகும்படி உன்னை அர்ச்சனை பண்ணுமல் மனமயக்கமடைந்த அடியேன்பேரில் அன்புவைத தருளவேண்டும் ஐயனே, சுத்தமாகிய வெண்மையான விபூதி பிரகாசிக்கின்ற சொரூபனே, நீசி வனவாஸமான ஈச்வரனே சரணமென்றார்.

சின்மய மந்திர சேகர லோலா
மன்மத மோசன மந்த்ர விசாலா
தொன்மைய பூரண சுந்தர லீலா
நின்மல னேசிவ னேசர னென்றான் (24)

அணுபோலும் அகண்டாகார வெளியாகிய சின்மய மந்திரமான அகார உகாரங்களுடனே கூடின மந்திரத்திலே சேகரமாயிருக்கின்ற லோலனே, மன்மத விகாரம அணுகாமலிருக்கின்ற பஞ்சாக்ஷர மந்தர விஸ்தாரனே, பூர்ண சந்திர சௌந்தரிய லீலாவிநோதனே, நின்மலனே, பரமசிவனே சரணமென்றார்.

சூல கராநதி சூழ்சடை யோனே
ஆல முகந்தரு ளண்டர் பிரானே
மேலவர் நெஞ்சில் விளைந்துறை தேனே
சீவிவ னேசுர னேசர ணென்றான் (25)

திரிசூலந்தரித்தவனே, கஙகாஜடாதரனே, ஆலகாலமுண்ட தேவாதி தேவநாயகனே, ஞானவான்கள் மனதிலே விளைந்திருக்கும தேனே, சீவிவன நாதனே சரணமென்றார்.

உட்புற மென்ன வுகந்த விநோதா
நட்புறு ஞான நடந்தரு பாதா
புட்பகன் வீணை புகன்றிடு காதா
நிட்கள னேசிவ னேசர ணென்றான் (26)

சாவப பிராணிகளிடத்திலும உளளும புறமபுமாயிருநது விளையாடுகின்ற விநோதனே, பகதி ஞானததிலே நடன தர்சனம கொடுக்கபபட்ட பாதனே, கநதர்வரின வீணைநாத தொனி சொல்லககேட்குமபடி இசைந்த செவியுள்ளவனே, நிஷ்கள ஸொரூபமுள்ளவனே சரணமெனறார.

அகில தலங்க ளனைத்தினு நின்றாய்
திகைமுக மோதிய திரிபுரம் வென்றாய்
மகிமையி னொளிரு மாயை யகன்றாய்
நிகர்புக லாதவ னேசர ணென்றான் (27)

பூலோக முதலான பதினாலு லோக மாததியந்தமும ஏக ரூபமாய நின்றவனே, திககு திசை முகங்களெல்லாம அடாதத திரிபுராதிகளை வென்ற வனே, மாயையகன்றிருக்கபபட்டவனே, நிகரில்லாதவனே சரணமென்றார.

மன்றலா தாதகி மாலைபு னைந்தாய்
குன்றுற மண்பொதி கூடை சுமந்தாய்
என்றுநி றைந்துல கெவ்விட முந்தாய்
நின்று நிலாதவ னேசர ணென்றான் (28)

வாசனை பொருநதிய ஆத்திமாலை தரித்தவனே, மலைபோலும மண் பொருந்திய கூடை தலையிலே சுமநதவனே என்றும உலகங்களெல்லாம நிறைந திருக்கபபட்டவனே, எநத இடங்களிலும தானாக நின்று விளங்கியும் பின்னும விளங்காமல் நின்றவனே சரணமென்றார

பீடுயர் கூடலில் வேத துரங்கா
மாதிம வானருள் வாணுதல் பங்கா
யாதிபைஞ் ஞீலி யமர்ந்த விடங்கா
நீதி நிலைத்தவ னேசர ணென்றான் (29)

உயர்ந்த மதுரையிலே வேதரூபமான குதிரையின்பேரிலே எழுந்தருளப்பட்டவனே, மகிமை படைத்த மலையரசன் பெற்ற பார்வதி பங்காளனே ஆதியான திருப்பைஞ்ஞீலிவாஸியான ஆரணிய விடங்கனே நீதி தவறாத நிலையானவனே சரணமென்றார்.

நாமம் விதித்துமா நான்மறை சொன்னாய்
காமுற லேயொரு கண்மல ரென்று
மாமுகி லைத்து வணங்கிட முன்னு
னேமி கொடுத்தவ னேசர ணென்றான் (30)

இனைத்தென்று விதிக்கும் நாலு வேதங்களையும் சொன்னவனே, பக்தியுடனே ஒரு கண்மலரெடுத்துக் காரமேகவண்ணனை அர்ச்சித்து முன்னாளிலே வணங்கியபோது அவருக்குச் சக்ராயுதம் கொடுத்தவனே சரணமென்றார்

மறைபுகழ் கதலியின் வனமகிழ் பவனே
யறிபவர் மனதினி லமரும்வி ணவனே
பிறையவ நிருமல வென்னையருள் சிவனே
நிறைகுறை யகலிய னேசர ணென்றான் (31)

வேதங்கள் புகழ்கின்ற கதலிவனத்திலே வாஸமாகிச் சந்தோஷமாய் இருப்பவனே, தன்னைத்தானறிந்த தவஞானிகள் மனதிலே எத்தேசகாலமுமிருக்கின்ற மகாதேவனே, தெய்வராஜனே, நிர்மலனே, என்பேரில் கிருபை வைத்த சிவனே நிறைகுறை இரண்டுமற்றவனே சரணமென்றார்

இத்துதி பேசி யிராகவ ராம
னத்தர் பதத்துணை யன்பின் வணங்கி
வித்தக மேவு விசாலையை நாடி
யுத்தம மான வுபாசனை செய்வான (32)

இப்படி ஸ்தோத்திரம் பண்ணி ராகவனாகிய ராமபத்திர ஸ்வாமியினுடைய பாதாரவிந்தங்களை வணங்கிக்கொண்டு மோக்ஷத்துக்கு வித்தாகிய விசாலாக்ஷியம்மனைக் கண்டு உத்தமமான பூஜைசெய்தார்.

ஐந்துபு லன்க ளடர்ந்திக லாதே
பைந்தளிர் மூல பலங்க ளுணாதே
முந்துறு சொற்கண் முயன்றுசொ லாதே
மந்திர நெஞ்சில் வகுத்தய ராதே (33)

ஐந்து புலன்களும் தன்னை வாதைப்படுத்தி இகழ்ந்துபோகாமல் ஒன்றுக்கும்படி செய்துகொண்டு பசுமையாகிய கொழுந்துகள், கிழங்குகள், கனிகள் புசிக்காமல் வாயினாலே வார்த்தைகள் சப்திக்கும்படி பேசாமல் யோக மந்திரத்தை நெஞ்சில் உச்சரித்து தியானம் மறவாமல்

நவையணு காவகை நாளொரு மூன்று
தவமுனி சொல்லிய தந்திர நாடி
குவலய நாயகி கோயிலின் முன்னே
யுவகையி னோடுமு பாசனை செய்தான் (34)

இப்படியான குற்றங்கள் அணுகாதபடி மூன்று நாள், முன்னே வசிஷ்ட மகாரிஷி சொல்லிய தந்திர பிரகாரம் பூலோக நாயகியாகிய விசாலாக்ஷியம்மன் ஸந்நிதி முன்பாக சந்தோஷத்துடனே உபாசனை செய்தார் ராமபத்திரர்

பூசனை யோடு புராரியி டஞ்சேர்
பாசிறை தன்னை யுபாசனை செய்த
மாசறு ரகுகுல மன்னவன் முன்னே
யீச னிடத்தி லிளங்கொடி வந்தாள் (35)

இப்படிப்பட்ட பூஜையுடன், புராரியாகிய சிவபெருமானுடைய இடது பக்கத்திலிருக்கும் தேவியையும் உபாசனை செய்த குற்றமில்லாத சூரியவம்ச ராஜன் முன்னே பரமேசுவரனிடத்திலிருந்த தேவி அதிசீக்கிரமாக எழுந்தருளி வந்தாள்

வரைமக ளனது முன் வருவது கண்டா
னிரவிமு னிருளென விடர்களை விண்டான்
விரைவொடு மிகுமகிழ் வெனுமமிர் துண்டா
னரவணை யதனின்மு னறிதுயில் கொண்டான் (36)

பர்வதராஜகுமாரி எழுந்தருளி வருவதைக் கண்டவுடனே சூரியன் முன்னே இருளானது ஓடிப்போவதுபோலும் தம்முடைய விக்கினங்களான பாபங்களெல்லாம் ஓடிப்போவதைப் பார்த்தார், அதி சீக்கிரமாக மிகுந்த சந்தோஷத்துடனே தேவாமிர்தத்தை உண்டார்; முன்னாலே அரவணையில் துயில்பவராகிய மகாவிஷ்ணு ரூபமான ராமபத்திரர்

எழுதனு வருவன வெழுவகை யென்றே
வெழுகிரி யெழுபுவி யெழுகட லென்றே

முழுதல கிலமு முறைமுறை தந்தாய்
தொழுதன னுனதிரு துணையடி யென்றான் (37)

பிரம்மதேவன் எழுதினபடி இன்பதுன்பத்துக் கேதுவாகி ஜனிக்கப்பட்டா நின்ற எழுவகைத் தோற்றமென்று சொல்லப்பட்ட பிராணிகள் வாழும்படிக்கு ஆதாரமாக உயர்ந்த மகமேருகிரியைச் சுற்றிலும் எழும்பின லோகங்களும், லோகங்களைச் சூழ்ந்த சப்த சமுத்திரங்களும் விஸ்தாரமாகிய அண்டங்களும் முறைமை தப்பாமல் அருளப்பட்டவளே உன்னுடைய இரண்டு பாதாரவிந்தங்களையும் தொழுதேன் அடியேன்.

வம்புறு சஞ்சல மாயை யுறாதே
சம்பவ மென்றொரு தாழ்வு வராதே

வெம்புல வேடர் வெகுண்டட ராதே
யம்பிகை யுன்பத நம்பின னென்றான் (38)

சஞ்சலமான மாயை வந்து சேராமல் அனுபவிக்கின்ற போக பாக்கியங்களிலே தாழ்வு வாராமல் ஐம்புலன்களாகிய வேடர் கோபங்கொண்டு எதிர்க்காதபடி பாலாம்பிகையே உன் பாதத்தை நம்பினேன் என்றான்.

கனலினின் மதியொடு கதிரவ னீயே
மனதுறை யுடலகுண வகைகளு நீயே

புனிதனொ டருமறை புகல்பவ னீயே
யுனதிரு சரணம தெனதர ணென்றான் (39)

அக்கினிபகவான், சந்திரன், சூரியன் யாவும் நீயே, மனோவாக்குக் காயம் முக்குண வகைகளாக இருப்பவர்களும் நீயே, சிவன், பிரமமா, விஷ்ணு என்று சொல்லப்பட்டவளும் நீயே. உன்னுடைய பாதாரவிந்தம் அடியேனுடைய சரீரத்துக்குக் காவலாயிருந்து ரக்ஷிக்க வேண்டுமென்றான்.

இன்னன கூறிய விராகவ கோமான்
றன்னைய மிக்கத யாவொடு நோக்கி

யுன்னிய சிந்தை யொருங்கு நெருங்கு
மின்ன லகன்றிட யாமளை சொல்வாள் (40)

இப்படியாக ஸ்தோத்திரம் செய்து வணங்கின ராமபத்திராராஜனை மிகுந்த தயவோடு பார்த்து மனதிலே அன்பு வைத்து நெருக்கமாகிய மின்னல்

பிரகாசம மழுங்கும்படி அதிக ஜோதிப பிரகாசம படைத்த யாமளாதேவியாகிய வன் திருவுளம்பற்றுவாள்,

எதமில காண்டிப விராகவ னேகேண்
மேதகு சீதையை வெஞ்சிறை செய்த
பாதக னுந்தலே பத்துமி ழுபபான்
மா துட னீயுன் வளம்பதி சேர்வாய் (41)

குற்றமில்லாத காண்டீவநாரித்த ராமபத்திரனே கேளாய். மேன்மையாகிய சீதையைச் சிறையிலிட்ட பாதகனுகிய இராவணன் பத்துத்தலையும் இழுபபான். சீதாதேவியுடனே எபபோதும்போல் நீ அயோத்தியாபுரி பட்டணத்துக்குப போய சேருவாயென்று பின்னும் சொல்வாா

நலமுறு கோசல நாடர்பி ரானே
பலபக லீசர் பதத்தை வணங்கி
நிலேபெறு நல்வர நீபெறு கென்று
மலேமகள் கூறி மறைந்தனள் மின்போல் (42)

நன்மை பொருநதிய விஸ்தாரமான கோசல நாட்டுக்கு அதிபதியான ராஜாதிராஜனே, பலநாளும மறவாமல் ஈசுவரா பாதத்திலே வணங்கி நிச்சயமாக நல்லவரப்பிரஸாதங்களை நீயே பெறுவாயாக வென்று பர்வதராஜ குமாரி திருவுளமபற்றி மின்னல் மின்னி மறைநததுபோலும மறைந்தாள்.

இமைய மடந்தை யிசைத்திடு மாறே
யமைவொடு சிவனே யருச்சனே செய்தான்
அமலை யோத்திபி னதிபதி முன்னே
விமலனு மழவிடை மீதினில் வந்தான் (43)

ஹிமோத் பர்வதகுமாரியான பாலாமபிகை கட்டளையிட்ட பிரகாரம் பதறுமல் பொறுமையுடனே சிவனை அர்ச்சனை செய்து பரிசுத்தனுனன். அந்த வேளையில் அயோத்திக் கதிபதியாகிய ராமாமுன்னே நிர்மலனுகிய பரம சிவன் ரிஷபவாகனத்தின்பேரில் எழுந்தருளினா.

எதிர்வரு மீசனே யினிதொடு கண்டான்
பதும நிகர்த்த பதங்களில் வீழ்ந்தான்
றுதிபல கொண்டு துதித்தெதிர் நின்றான்
அதிக மகிழ்ச்சி யொ டமல னுரைப்பான் (44)

இபபடி எதிராக எழுந்தருளிவந்த பரமேசுவரனை இன்பத்தோடு கண்டான் ராமபத்திரன்; தாமரை மலாபோன்ற பாதங்களிலே நீர்க்க தண்டம்

பண்ணிப் பலவிதமாக ஸ்தோத்திரங்களை எடுத்துத் துதித்து எதிராக நின்றான். அப்போது அதிக மகிழ்ச்சியோடு பரமசிவன் திருவுளம்பற்றுவார்.

சகமுழு தும்புகழ் தயரதன் மைந்தா
விகலிய பகையை யிலங்கையு ளோரை
முகிணகை சிறையை முடித்து வியப்போ
டகமகிழ் வெய்திய யோத்தியை யாள்வாய் (45)

பூலோகமெல்லாம் கொண்டாடப்பட்ட தசரதகுமாரனே, உனக்குப் பகையான இராவணனையும் பின்னுமந்த லங்காபுரியிலுள்ள ராக்ஷதர்களையும் வென்று முல்லை, அரும்பு, நகைபடைத்த சீதாதேவியையும் சிறைவிடுத்து, வியப்புடன் சந்தோஷமுமடைந்து அயோத்தியாபுரி பட்டணத்தை ஆண்டு கொண்டிருப்பாயென்று சொல்லிப் பின்னும் திருவுளம்பற்றுவார்

அஞ்சலை யென்றரு ளம்பிகை பாகன்
றஞ்ச வரம்பெறு தயரதன் மைந்தன்
செஞ்சடை வேதியர் சேவடி போற்றி
விஞ்சு வசிட்ட னிருக்கை யடைந்தான் (46)

இனிமேல் பயப்படத் தேவையில்லை யென்று திருவுளம்பற்றின பார்வதி பாகனை சிவனிடத்திலே நிச்சயமான வரப்பிரஸாதம் பெற்ற தசரத குமாரனவன் அகனிக் கொழுந்து போன்ற ஜடாமகுடம் படைத்த பரமசிவன் பாதத்திலே நமஸ்காரம் பண்ணி மேன்மையாகிய வசிஷ்டமகாரிஷி எழுந்தருளிய ஆசிரமத்திலே வந்தார் ராமபத்திரர்.

தரியலர் கோளரி தன்றுணை யோடும்
பரிவுறு தேசிகர் பாதம் வணங்கி
யெரிபுரை வேணிய மிறைவியு மன்பாய்ப்
புரியும் வரங்கள புகன்றன ரென்றான் (47)

பகைவர்களை சிங்கம்போல் எதிர்க்கின்ற சகோதரனை லக்ஷ்மணனோடும் அன்பு பொருந்திய குருவான வசிஷ்டர் பாதத்திலே தண்டம் பண்ணி மழுவை யணிந்த சங்கரனாகிய சிவனும் பார்வதி தேவியும் பரிவா யருளிய வரப்பிரஸாதங்களெல்லாம் ஒன்றுவிடாமல் விண்ணப்பஞ் செய்தார்.

மைப்படி கண்டனு மாதுமை தானு
மிப்படி யுன்னிடை யீய்ந்த வரங்கள்
சொற்படி வேறு துளக்க மிலாதே
யப்படியே செய மாயிட வென்றான் (48)

காலகண்டனும ஆதாரவாகிய உமையம்மனும இரண்டுபேரும் உன்னிடம கட்டளையிட்ட பிரகாரம வரபிரஸாதங்களெல்லாம வேறு சந்தேகம் வாராதபடி அப்படியே பலிக்கக்கடவனவென்று சொன்னார் வசிஷ்ட மகரிஷி.

விதுவணி வேணி விமலர்பைஞ் ஞீலிப
பொதுவினி லுமையரி பேதான்வ லாரி

யாதுலர்செய் பூசைக ளவரவர் தீர்த்த
மெதுவென ரகுபதி யினைமுனி மொழிவான் (49)

அர்த்தசந்திர ஜடாதரரான பரமசிவன் வாஸமான திருப்பைஞ்ஞீலியாகிய ரதன சபையிலே ஈசவரி, விஷ்ணு, பிரமமா, தேவேந்திரன் முதலாகிய தேவர்கள் ரிஷிகள் பூஜைசெய்த சிவலிங்கங்களும் அவரவர் உண்டாக்கின தீர்த்தங்களும வரபிரஸாதம பெற்ற மகத்துவமும் அடியேனுக்குத் தெரியும படி திருவுளமபற்ற வேண்டுமென்று ராமர் வசிஷ்டரைக் கேட்கும்போது அப்படியே அவர்கள் பிரதிஷ்டை செய்த லிங்கங்களும தீர்த்தங்களும் இவை யெனக் கூறலானார்.

மனுகுல தயரதன் மனமகிழ் மைந்தா
யினிய மலைக்கொடி யீசனை நோக்கிய

புரிதத வஞ்செய்த போது விதித்தா
டனது விசாலை தடாகமி தென்றான் (50)

மனுவம்சத்திலே ஜனித்தருளிய தசரத மகாராஜன புத்திரனான ராமனே கேளாய்! இனிதாகிய பாவதராஜ புத்திரியானவள் பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்யுமபோது தன்னுடைய பெயராலே விளங்கும்படி உண்டாக்கின விசாலபுஷ்கரணி இது என்றார்

வசைதவிர் கௌசலை மாதருண் மைந்தா
சசிதவ மெய்திய தோய மரன்கை

யிசையுறு விதிதலை வீழ்ந்த திதன்பே
ருசிதிகழ் கனகச ரோருக மென்றான் (51)

குற்றமற்ற கௌசலை வரபுத்திரனே கேள். அதிக சசிமொருதிய இந்திர தீர்த்தமானது சிவன் கையிலே விடாமல் பிடித்த பிரம கபாலம் விழுபபட்ட ஸ்தானத்திலே உண்டானது இதன் பெயர் பொற்றாமரை தீர்த்தமென்று திருவுளமபற்றினார்.

ஆதர வாய்விம லாரணி யப்பே
ரோத நதிக்கெதி ரோடின நீலி

பாதமி தித்தனள் பாதல மெய்தனு
சீதள மங்கள தீர்த்தமி தென்றான் (52)

தெய்வலோகம், பூலோகத்துக்கெல்லாம் உதவியான விமலாரண்ணிய நதியானது பெருகிச் சபதத்துடனே வேகமாய் வருகையில் எதிர்கண்ட துற்கை தன்னுடைய பாதத்தினாலே மிதித்துப் பாதாளத்திலே புகும்படி செய்தருளிய மகத்வம் பொருந்திய மங்கள தீர்த்த மிதுவென்று திருவுளம் பற்றினார்.

பரம னரிந்திடு படுதலை வேதன்
விரவு தவத்தின் விதித்தது மன்னு

வரமிகு தக்கணம் வருபிர யாகை
தரைபுகழ் பிரமத டாகமி தென்றான் (53)

பரமசிவனால் தலையறுபட்ட பிரமதேவா அருந்தபசு பண்ணினபோது உண்டாக்கியதிது. ராஜாவே கேளும், மிகுந்த வரங்களை யருளுகின்ற தக்ஷணத்திலே வந்த பிரயாகை என்று பூலோகம் புகழும்படியாக விளங்கும் பிரம்ம தீர்த்தமிது

உன்னரு மேன்மை யயோத்தியர் கோவே
நன்னிலை சேர்சிவ ஞான ததீசி

முன்னுறு சாப விமோசன நக்கு
மன்னவ னிந்திர வாவியி தென்றான் (54)

நினைப்பதற்கு ஆச்சரியமான மேலான வளம பொருந்திய அயோத்தியாதிபதியான ராஜனே கேளும்; நன்மையான உறுதிபெற்ற ததீசிமகரிஷி முன் சபித்த சாபம் நீரும்படி தேவேந்திரராஜனா லுண்டாக்கின இந்திர தீர்த்தமிது.

ஞான ம்ருகண்டுவி னன்மக வாலே
ஊனமி லீச னுதைக்க மடிந்தான்

ஈன முறாதி யமன்பத மெல்லாந்
தானருள் கால தடாகமி தென்றான் (55)

ஞானியாகிய மிருகண்டு மகாரிஷியின் சற்புத்திரனாகிய மார்க்கண்டன் நிமித்தமாய்க் குற்றமில்லாத பரமசிவன் உதைக்க மடிந்துபோன யமன் திரும்பவும் இபபடி ஈனப்படாமல் அதிகார பதவி பெறும்பொருட்டாக உண்டாக்கிய யம தீர்த்தம் இது என்றார்.

ஒருவிசை வாயு வொளிக்க வெகுண்டே
பொருபழி தீர்வது புந்திகொள் சேடன்
வருமொரு தாற்பிய மாமுனி தன்பேர்
தருகலி யாண தடாகமி தென்றான் (56)

வாயுபகவானானவர் கைலாசத்திலே ஒளித்தபோது கோபித்துப் போரா டின பழி தீருமபடி மனதில் எண்ணி ஆதிசேஷனானவன் தாற்பிய மகாமுனி யாக ரூபமெடுத்து இந்த ஸ்தலத்திலே வந்தபோது உண்டாக்கிய கல்யாண தீர்த்தம் இது என்றார்

பூசைபு ரிந்திடு புலிமுகன் மீதே
வீசிய வெம்படை விடடுயிர கொளற
மாசு தவிர்த்திட மாயன் விதித்த
காசினி சேர்மணி கர்ணிகை யெனறான (57)

சிவபூஜை செயதுவந்த வியாக்கிரசூரன பேரிலே பாணங்களை விட்டு அவனுடைய உயிரை வதைததுக கொன்ற தோஷம தீருமபடி மகாவிஷ்ணு வானவர் உண்டாககின தீர்த்தமிது. இதன பெயா மணிகாணிகை. இது, காசி மணிகர்ணிகைக்குச் சமானமானது என்றா

ஆவலோ டிந்திர னர்ச்சனை செய்தே
வாவுறு தண்பொழில வடதிரு வானைக்
காவி லுகந்தவா கண்ணழல் மேவனமே
லெவின விந்திர லிங்கமி தென்றான் (58)

ஆசையுடனே தேவேந்திரன அர்சசித்துப பூஜைசெயது வரப்பிரஸாதம் பெற்ற குளிர்ந்த சோலை பொருநதிய வட திருவானைக்காவலிலே எழுந தருளியவர், நெற்றிககண்ணினாலே மன்மதன்பேரில் அக்னிப்பிரயோகம பண்ணிய மூர்த்தியான தேவேநதிரலிஙகம இது என்றா

காண்டிப னேர்புய கலியுக ராம
பாண்டிய னக்கினி பண்ணவர் பூசை
மாண்டகு சீர்விட மங்கள நாத
ரீண்டிய வக்கினி லிஙகமி தென்றான் (59)

காண்டிபனுகிய அர்ஜுனனுக்குச் சமானமான புஜபலம் படைத்த கலியுக ராமபாண்டியன் அகனிபகவானைப பூஜைபண்ணி வரப்பிரஸாதம பெற்ற அளவில்லாத சிறபபுப பொருநதிய கறைகணடரான மங்கள நாத ரென்று பெயர்படைத்த அக்னிலிஙகம இது என்றா.

அறைகழ லர்ச்சுன னவனெதி ரேபோய்
மறைபுக ழீசர் வராகம தாகிப்

புறகிட வொருசுனை புககபின் வந்தா
ரிறையவ ரேமவி லிங்கமி தென்றான் (60)

வீரகண்டாமணி தரித்த பாதஞன அர்ஜுனராஜனுககு எதிராகப்போய் சிவரூபம மறைதது வராகரூபமெடுததுப புறங்காட்டி ஒரு சுனையிலே புகுநது பிறகு அதிலிருநது எழுநதருளிய ஹேமலிங்கம இது என்றார

வயமிகு சக்கரம் வாங்கிட வேண்டிப்
புயனிகர் மேனியர் பூசை புரிந்தார்

பயில்திரு மன்றுறை பாதல நாத
ரியல்தரு நிருதியி லிங்கமி தென்றான் (61)

பிரகாசம பொருந்திய சகராயுதம பெற, மேகமபோன்ற நிறம படைத்த விஷ்ணுவானவர பூஜைசெயது வரபபிரஸாதம பெற்ற பாதாள ஈசவரரென்று பெயரபடைத்த நிருதிலிஙகம இது என்றார

தலைமைகொள் ஞான ததீசிசொ லாலே
கொலைபுரி கோமுசு குந்தன்முன் னோர்க

லைமிகு பூசை நயந்துப ணிந்தா
ரிலகிய வருண லிங்கமி தென்றான் (62)

தலைமையாகிய ஞானம்படைதத ததீசியினுடைய சாபத்தினாலே கொலை செய்த காமதேனு, முசுகுந்தன் முதலாகியபேரும நன்மையாகப பூஜை செயது வணங்கி வரயபெற்ற பிரகாசமாகிய வருணலிங்கம இது என்றார

வாய்த்திடு தேசு மகாமலை மீதே
வீற்றுறை வாயு வியந்து பணிந்தோர

பூத்தட மீதொரு புட்ப மகிழ்ந்தா
மேரத்திய வாயுவி லிங்கமி தென்றான் (63)

சிவ கலைகள் வாசமான மகிமைபொருந்திய திருசம்தஜோ மலையின பேரிலே வீற்றிருந்து வாயுபகவான் சந்தோஷத்துடனே பணிநது தாமரைத தடாகம போன்ற தீர்த்தத்திலே நித்தியம் ஒரு குவளை மலரெடுதது அனபுடனே பூஜை பண்ணின வாயுலிங்கம இது என்றார.

வேந்தர்கள் போற்றும் வியாக்கிர சூரன்
போர்ந்தம ராடிய போது வருந்தே
வேந்திர நாதர் வியாக்கிர நாத
ரேய்ந்த குபேர விலிஙகமி தென்றான் (64)

ராஜாக்கள் வாதனை பண்ணுகின்ற வியாக்கிரசூரன் தேவ லோகத்திலே தேவேந்திரனுடன் போராடி ஜயித்துவந்த நாளில எழுந்தருளிவந்த தேவேந்திர நாதனென்னும் பெயர்பூண்ட குபேரலிஙகம இது என்றார்.

மைதவழ் வண்ணாரு மாமலா மேவதர்
எய்திடா வாழ்பிர யாகை தடத்தே
பொய்தவிர நான்முகர் பூசனை யின்பா
லெய்துமீ சானவி லிங்கமி தென்றார் (65)

காரமேகவண்ணனான மகாவிஷ்ணுவும தாமரைமலர்வாஸனான பிரம்மாவும, வாஸமான பிரயாகை என்னும் தடாகத்திலே பிரமதேவன் பொய் சொன்ன தோஷம் நீங்கும்படி பூஜை பண்ணும்போது எழுந்தருளிவந்த ஈசான லிஙகம இது என்றார்.

இமையவர் மாதவ ரியாவரு மெய்தி
யமலனை நோக்கி யருந்தவ மாற்ற
யமனை யழைத்துல கேகுதி யென்றே
அமைவதி கார மளித்தவ ரென்றான் (66)

தேவர்கள் முனிவர்கள் முதலாகிய பேர்கள் வந்து யமனை எழுப்பச் சொல்லிச சிவனை நோக்கி அரிதாகிய தபசு பண்ணும்போது யமனை யழைத்து அவனுலகத்திலிருக்கும்படி செய்வித்த அதிகார வல்லபலிஙகம இது என்றார்.

நிருமல னதிகபைஞ் ஞீலி யிடத்தே
வருவது தவிரென மடமை தவிர்த்தே
கருணை யினமனெதிர் காட்சி கொடுத்தே
யருளபுரி தென்கயி லாயமி தென்றார் (67)

நிமலனாகிய சிவசொரூபத்திலும் அதிகமான திருப்பைஞ்ஞீலியிலே வாஸமான சர்வ பிராணிகளிடத்திலும் யமராஜனே நீ வருவது நிச்சிநதையாய விட்டுவிடு என்று யமனுக்குப புத்தி போதித்துக் கிருபையுடனே காட்சி கொடுத்தருளிய தக்ஷிண கைலாசம இது என்றார்.

கதமென வேயொரு கண்ணை யிடந்தே
பதுமமெ னுவொரு பதமிசை வைத்தோன்
முதுகண நாதரு டன்றெரி சிக்கு
மதிபதி வடகயி லாயமி தென்றார் (68)

அதி சீக்கிரமாகத் தமமுடைய கண்ணை வாங்கித் தாமரை மலராகப் பாவித்து சிவன் பாதத்தில அர்ச்சித்த மகாவிஷ்ணுவுக்கு அளவில்லாத சிவ கணநாதருடனே கூடித் தரிசிக்கும்படி எழுந்தருளின அதிபதியான வட கைலாசமிது என்றார்.

தோமறு வீர துரந்தர துற்கா
நாமனை வென்றிடு கலைவ வினை தீர
நேமியர் போற்றுபைஞ் ஞீலியில் மேவும்
யாமளி மாதவ மிவ்விட மென்றார் (69)

உத்தம குணங்களில்லாத பராக்கிரமனுகிய மகிஷாசுரனை ஜயித்து வதஞ் செய்த தோஷம் தீரும்படி துற்காதேவியானவள், சக்கராயுதந்தரித்த மகா விஷ்ணுவும வந்தனை செய்யும் மகிமை பொருந்திய திருப்பைஞ்ஞீலியிலே வந்து தபசுபண்ணினவிடம இது என்றார்.

மாதவ ரிவ்விட மாதவ மென்றார்
மாதவ ரிவ்விட மாதவ மென்றார்
மாதவ ரிவ்விட மாதவ மென்றார்
மாதவ ரிவ்விட மாதவ மென்றார் (70)

இந்தக் கவிக்குப்பொருள் பெரியோர்கள் பால் கேட்டறிக!

க்ஷேத்திர மேலுள க்ஷேத்திர மெல்லாம்
தீர்த்தமு மேலுள தீர்த்தமு மெல்லாம்
மூர்த்தியு மேலுள மூர்த்தியு மெல்லாம்
பார்த்திப னன்பொடு பார்த்தன னன்றே (71)

பூலோகத்தி லுண்டாகிய க்ஷேத்திரங்களுக் கெல்லாம மேலாகிய க்ஷேத்திரங்களையும தீர்த்தங்களுக்கெல்லாம மேலாகிய தீர்த்தங்களையும், மூர்த்திகளுக்கெல்லாம மேலாகிய மூர்த்திகளையும இராஜாவாகிய ஸ்ரீராமர் பார்த்தார்.

ஆசகல் மானச பூசகர் மேலோ
ராசிகள் கூறின ராசக மீந்தார்
மாசக ராகவ மாசக மென்றே
தேசிக வீறுப தேசிகர் சொன்னார் (72)

குற்றமகன்ற மானஸ பூஜையிலே நேசமான பெரியோர்களாகிய தவயோக ஞானிகள் மிகவும் சந்தோஷமுண்டாகும்படி ஆசீர்வாதம் சொல்லி அருளினார்கள். குற்றமில்லாத ராமாவதாரம் எடுத்தராஜனே மகாதபசு பண்ணு கிறதற்குச் சுகமான இடமென்று குருவாகிய உபதேச கர்த்தாவான வசிஷ்டர் திருவுளம்பற்றினார்.

பன்னி யருந்ததி தன்னொடு பன்னாள்
மன்னி யியற்று மகத்தின் விபூதி
தன்னை யளித்தரு டந்து விடுப்பப்
பொன்னிக ரலையெறி பொன்னி கடந்தான் (73)

பின்னும் வசிஷ்டர் தமக்குப் பாரியாகிய அருந்ததியுடன் பலநாள் இயற்றிய யக்ஞத்திலுண்டான விபூதி தரிக்கும்படி அளித்தனுப்ப, சொர்ண மயம் போல் அலை வீசுகின்ற காவேரி கடந்துபோனார் ராமபத்திரர்.

## வேறு

அவமகற் றியபைஞ் ஞிலி அடைந்தகா குத்தன் செய்தி
யிவையென்று சந்த்ர பீட விராசனுக் கினிது சொன்னான்
புவனியோர் பரவு கோலா புரத்தின்மா மடந்தைக் கனபாய்த்த
தவனிலை யுணர்த்த வந்த தத்துவ ஞானி தானே (74)

பாபங்களை நீக்கும் திருபைஞ்ஞீலியிலே ஸ்ரீராமர் வந்து பூஜைபண்ணின சரித்திரமிதுவென்று சந்திரபீட சோழராஜனுக்குத் திருவுளம்பற்றினார், பூலோகமெல்லாம் புகழும் கோலாபுரத்தில் வாஸமான மகாலக்ஷ்மி போன்ற லோபாமுத்ரைக்குத் தவநிலை உணர்த்த வந்த ஞானியாகிய அகஸ்திய ரிஷி.

## பதினாறாவது நரசிங்க பூஜையின் மகிமை

மேவாரகண் டிறைஞ்சுராகு பதியியல்சொன் னான்முனைவாய்
விரிந்த வாசப்

பூவாவி விளங்குகொல்லா புரிமூகாம் பிகைதவத்தைப்
புகழ்ந்து போற்றி

நாவாறசொல் லருமகத்தை யுறறிவரி நரசிங்க
நாடும் பூசை

மூவாறு திவ்யசிங் காதனமு மூர்த்திகளு
மொழிந்த சீரோன் (1)

சத்துருக்களெல்லாம் வந்து வணங்கப்பட்ட ராமபத்திரன் வந்து பூஜை பண்ணின கதை இதுவென்று சொன்னதின் பிறகு, வாசம் பொருந்திய மலர்கள் மலரும் அநேக தடாகம் சூழ்ந்த கொல்லாபுரத்தில் வாஸமாகிய மூகாம்பிகையின் தவநிலையைப் புகழ்ந்து ஸதோத்திரம்பண்ணி, நாவினாலே எடுத்துச் சொல்வதற்கரிதான காவம் படைத்த நரசிங்க ரூபமான மகாவிஷ்ணு வந்து பூஜைபண்ணின சரித்திரத்தைத் திருவுளம்பற்றுவார், லோகாதி லோகமெல்லாம் புகழ்ந்து வணங்கப்பட்ட அபூர்வமாகிய பதினெட்டு சிங்காதனத்தின் வரலாறும மூர்த்திகளின் பிரதாபங்களும நன்றாய் விரித்துச்சொன்ன அகஸ்தியர்.

இசையானே ரிவாததிற லிரணியனைத் தகர்த்தசடத்
திமிர்ந்த சென்னீர்

நசையாற்றன் னகடாரத் தேக்கியிகழ்ந் தரனையண்டர்
நாட்டைச சீறச

சசிதரித்தா ரெண்காறகே சரனுசினத்தீ டழிக்கங்லி
தளர்ச்சி யாலே

திசைகளிறைஞ் சியதரள கிரியடைந்த திடைந்நர
சிங்கந் தானே (2)

தனக்கு நிகரில்லாத பலவானாகிய இரணியனைக்கொன்று அவனுடைய சடலமான சரீரத்திலுண்டான ரத்தப பசைகளெல்லாம நிறையப் புசித்து வெறியினாலே சிவனை இகழ்ந்து தேவலோகமெல்லாம் அழிக்கும்போது அர்த்த

சந்திரனைத் தரித்த பரமசிவனுடைய எட்டுக்கால் படைத்த சரபபக்ஷி அவதார மெடுத்து ஆக்ரமத்துடனே மகாவிஷ்ணுவான நரசிங்கத்தின் சரீரமெல்லாம் கிழித்தபோது, தளாசரியுற்று எட்டுத்திக்கும் புகழ்ந்து வணங்க திருப்பாதம் பரிவில் வந்தடைந்து இடருற்றது நரசிங்கம்.

நீதிநிலை திகழீலி யாரணியத் தகலாத
நிலையினை
பாதியிடந்தங் கடந்தவிரா தாரனையா ரணைத்தாரகலை
டறிகிலானைக்
காதியதி தகறிரட்சித் தாண்டவனை நகாமரிய
தாட்சியானைச்
சீந்தி தரித்தசரந் தியாகேசன் றனைத்தரிசித்
திளைஞ்சியேத்தி (3)

நீதிநெறியெல்லா நிலைத்த விளங்கு விமலாரணியம் விட்டகலாமல என்றும் வசிப்பவனை, ஆதிபும் அந்தமும் கடந்திருக்கின்ற நிராதாரனை, வேதங்களாலும் காணப்படாதவனை, வருந்தப்படுத்திய தீவினைகளெல்லாம் அகலும்படி செய்து ரக்ஷித்து ஆண்டவனை, காணத்தகாததான அநேகம் ஜோதிப் பிரகாசம் படைத்த காட்சியுள்ளவனை, குளிர்ந்த சந்திரகலையைத் தரித்தவனை, சக்ராயுதத்தை மகாவிஷ்ணுவுக்குத் தியாகமாகக் கொடுத்த ஈசுவரனைத் தரிசனம் பண்ணி வணங்கியவனை,

அடியார்கண்ணி னிடத்தினின்ற பூரணரத்னத் தீனநிலைத்த
தனித்தத்துவனைக்
கரியகண்ணி நெருப்பத்தியாதந் திரதகாலைக் கரத்தணிசக்
கரத்தினனை
நெடியகண்ணி னிறைவிலங் கரிசகன தனத்தாளை
நிகரிலானை
கொடியகண்ணி நாயகியைத் தாழ்ந்திரந்தே சலித்தடியே
னிடர்தீர்த் தேன் றன் (4)

அடியார்களிடத்திலே யிருக்கிற ஞானமாகிய ரத்னதீப பிரகாச மானவனை, வேண்டுதல் வரப்பிரஸாதங்களை யருள்பவனை, அஞ்ஞானமான மாயையை யொழிந்து பரமானந்த பிரகாசிக்கும்படி செய்கின்ற சக்திரமுள்ளவனை, கையிலே சக்ராயுதம் தரித்த நாரணிரூபமானவனை, கொடிதாகிய ஞானக்கண்

நிறைந்த கிருபையுடையவளை, பர்வதம் போன்ற ஸ்தனம் படைத்தவளை, நிகரில்லாதவளை, காதளவாக நீண்ட நேத்திரம் படைத்த தேவநாயகியை வணங்கி அஞ்சலி செய்து அடியேனுடைய இடரைத் தீர்க்கவேண்டுமென்றான்

எழுதிசையி னுதரையிற் றிசைதிசையீ சரையிறைஞ்சி
யினிய நேரே
கீழ்த்திசையிற் சிலகடிகை நெறியேசென் றெதிர்தாங்கக்
கிளர்ந்த நீரா
லாழிநிகர் தடத்தினைகண் டாலகண்டத் தண்ணலிலைக்கண்
டாசை நெஞ்சிற்
றூழாதிங் கிதத்தநா கேசரிய கிதந்தனிதார்ச்
சனைசெய் தானே (5)

அஷ்டதிக்கு பாலகா வியாபூண்ட எட்டுத்திக்கும் வாஸமாயிருக்கின்ற சிவலிங்கங்களை நமஸ்கரித்து கிழக்காகச் சிறிது தூரம் போய் அலை வீசுகின்ற சுத்த தீர்த்தம் பொருந்திய தடாகத்தைக் கண்டு அதனருகே ஒரு சிவலிங்க பிரதிஷ்டை செய்து ஆசையுடனே பக்தி தவறாமல் நாகேசுரமான அர்ச்சனை செய்து வணங்கியது

கலைத்தார்ச்சரு சலந்தீர்ந்த தியானத்துநல் லாதனத்தாற்
றடாகத் தீர்த்த
சலத்தாலா சாரத்தாற் சந்தனத்தா லலராற்செந்
தளிரார்த்தூரா
லலத்தாலா சகற்றியநல் லனந்தாற்றந் திரத்தாலெந்
நந்தார் செங்கைத்
தலத்தான்சங் கதந்தராளா சலத்தானை யிடத்திலன்னை
தனையர்ச் சித்தான் (6)

தியானத்தினாலும் ஆசனமூர்த்தி மூல மந்திர ஆவாகனத்தினாலும் பெருமை பொருந்திய தடாகத்தின் குளிர்ந்த ஜலத்தினாலும் ஆசாரத்தினாலும் கந்த புஷ்பங்களினாலும் கொழுந்து முதலாகிய பத்திரங்களினாலும் மாலையினாலும் மகா நன்மையினாலும் மாசில்லாத, நல்ல அன்னத்தினாலும் தந்திரங்களினாலும் கையிலே சங்கு தரித்த மகாவிஷ்ணு அனுதினமும் முத்துடலை வாஸஞ்செய்த சிவனையும் அவருடைய பராசக்தியாயிருக்கின்ற விசாலாக்ஷியம்மையையும் மறவாமல் அர்ச்சனைபண்ணி வந்தார்.

இத்திறத்தி னித்தியத்தை நினைத்தகிரி யையைநெகிழா
தேதந் தீர்ந்த
சித்தசிலாக் கியனாகி யனேகயாண் டாராதித்
திறைஞ்சி நின்ற
னித்தனினைத் திரங்கின னில்லைநயங் கந்தமென்று
னிலையரு ஞான
சத்தியினாற் றெரியாத நயனத்தா னாரிய
தரனைத் தானே (7)

இந்தத்திறமாக நித்யகிரியை தவறுதல் குற்றமென்ற சித்தமுடையவராய் அநேக வருஷம் ஆராதனை செய்து வணங்கிய நித்தியனான பரமசிவன் அவர் பூஜைக்கு மனதிரங்கவில்லை சந்தோஷத்துடனே பயப்படாதே என்று திருவுளம் பற்றவுமில்லை அழகு பொருந்திய ஞானசக்தி படைத்த கண்ணினாலே தரிசனம் பண்ணுகிறபோதுக்கு வெளிப்படுவாரல்லாமல் மறைவடைந்த கண்ணினாலே காண்பதற்கரியவரான சிவபெருமான

காரானை யதனையடாத துகிலுடை சாத்தியசங்
கரனைக் காணா
நேராத கண்கணீ ராறுகக் கனிந்திரங்கி
நிகரி லாத
சீராகத் தகிநிகழ்த் தாமரைக் கண் ணனைத்தேவர்
திகழ்ந்த நீதிக்
கோராத நிந்தகனேன் றனைக்காத்தி டென்றிசைத்தா
னெழிலி யனான் (8)

காரமேகம் போன்ற யானையை அடக்கத்தரித்த வஸ்திரமாய் அணிந்திருக்கின்ற சங்கரனைக் காண வேண்டுமென்று நினைத்துக் காணநேராத கண்களில் இரக்கமாகிய கண்ணீரானது ஆறுபோல் வடியும்படி மனங்கனிவாய்ச் சொல்லுவார். ஒரு தெய்வத்துக்கு நிகரில்லாதவனே, சீர்பொருந்திய ஆத்திமாலை கொன்றைமாலை தரித்தவனே, உன் மகிமை தெரியாமல் இகழ்ந்தேன் ஆதலால் நீதிக்கு ஏராத நிந்தைக்குரியவனை, என்னை விட்டுவிடாமல் காத்து இரக்ஷிக்க வேண்டுமென்றார் மேகவண்ணமுடைத்த மகாவிஷ்ணு.

அன்றலந் தனைச்சிறிய களங்கனிநே ராகியகங்
கையிற்கண் டானே
கன்றுந்த களத்தினிறங் கன்றிநிசி கோகில
கண்டத் தானே

நன்றான தாயர்தந்தை யெனச்சகல சராசரத்து
நலத்தை நல்கி

நின்றானே யெனைக்காத்தி டென்றான்சென் றேறடார்த்த
நிகரி லானே (9)

அன்றைக்குச் சீறி எழும்பிய ஆலகால விஷத்தைச் சிறிய கனியமுதத்துக்குச் சமானமாக்கி உள்ளங்கையிலே வரும்படி செய்தவனே! ஒரு காலமும் கன்றாத கழுத்திலே நிறங்குன்றி ஆத்தராத்திரி இருளுக்குச் சமானமான கறுப்பு பொருந்திய நீலகண்டனே, மாதாபிதாவைப் போல் சகலமான சராசரங்களுக்கும் நலத்தை நல்குபவனே, நீ என்னைக் காக்கவேண்டும் என்றான். —முன் ரிஷபவாகனமாக ரூபமெடுத்துச் சிவனை எத்தேசகாலமும் தாங்கிக்கொண்டிருந்த நிகரில்லாத மகாவிஷ்ணு

அக்கணிகந் தானேகங் காதரனே சந்திரசே
கரததி னானே

திக்கணிதா னையனேயென் னையனேயொண் ணிறந்தகணா
செயலி னானே

தக்கனையந் தகன்றனைச்சித தரன்றனைசசித் திரகாயந்
தன்னை யென்னை

நிக்கிரக னேயெனைக்காத திடென்றான் கலியனைய
நிறத்தி னானே (10)

அக்னிக கொழுந்துபோன்ற ஜடாதரனே, கஙகையைத் தரித்தவனே, அர்த்த சந்திர சேகரனே, திசைகள்தோறும் சிவகணங்களாகிய சேனை படைத்தவனே, என்னுடைய ஐயனே எண்ணமும் கடந்து அபபாலுமகன் றிருக்கின்ற தொழில் மகிமைபடைத்தவனே, உன்னை இழந்த தக்கனை, எமதர்மனை, மன்மதனை, நரசிங்கரூபமான என்னை நிஷ்டநிக்கிரகம் பண்ணப்பட்டவனே, அடியேனைக காதது இரக்ஷிகக வேணடுமென்றார் கடலை யனைய நிறம் படைத்த மகாவிஷ்ணு.

சலனதரித் திரநாச ககனதின கரதேச
சண்டி கேச

கலகசலந் தராச சங்கார சங்கரசிங்
கரசற் கார

சலசகர தலசரண நிரஞ்சனநிராதார
சாட்சாத் காரா
நிலையசக நீசரட்சி யென்றுநாட் சயஞ்சேர்ந்த
நிரையினானே (11)

சலனதரித்திர நாசனே, ஆகாச சூரியப பிரகாச தேஜஸுள்ளவனே, சண்டேசரூபனே, தேயஞ்லோகமெல்லாம் மலகம் செய்கின்ற ஜலந்திர ராஜனை சம்ஹாரம் செய்தவனே, சிவ சங்கரனே, அநேக சிங்காரனே, நம்மை அடியார்களுக்கு உபகார சத்காரம் செய்பவனே, துளிர்ந்த தயவான அப்யஸ்தம படைத்தவனே, பாதாளலோக சரணனே, நிஷ்கள ரூபனே, நிராதாரனே, சாக்ஷாத்காரவஸ்துவே, நிலையான வனே, ஜகத்சனை ரக்ஷி என்றார். அக்ஷயமான பசுவினங்களை ரக்ஷித்த கிருஷ்ணன்.

கரந்தையணி சடாதரனை யரனைநெற றியினிலைசேர்
கனற்கண்ணானை
நிரந்தரனை நிச்சயனை நிரதிசய னைநிறைந்த
நீற்றினானை
யரந்தையகற றியசாந்த நிதியைசற கதியைநீ
டலங்கற் சார்ந்த
சிரந்தரனை யென்னையஞ்ச லென்றனைக்காத திடுகவென்றான்
றிகிரியானை (12)

கரந்தை பத்திரமணிந்த ஜடாமகுடமுள்ள சிவனை, நெற்றியிலே அக்னிக கண்ணுடையவனை, எங்கும் நிறைந்தவனை, எல்லாவறறுக்கும் நிச்சயமாயிருக்கின்ற தேவனே, ஆச்சரியங் கடந்த அதிசய ரூபனே, விபூதி தரித்தவனே, மமதையகற்றுகின்ற கருணாநிதியே, சற்கதியே, அளவாகிய பிரம்ம சிரோமாலை அணிந்தவனே என்னை பயப்படாதேயென்று அபயஸ்தம் கொடுத்துக் காக்கவேண்டுமென்றார் சக்கராயுதந் தரித்த மகாவிஷ்ணு

தரித்தானை பிறந்தார்க ளத்தியையத் திரியகமுந்தான்
சடைத்தக் தாளா
னெரித்தானே கடைநாளி லகிலாண்ட நிலைகலங்க
நீறு தாக்கி
யெரித்தானே காத்தினிலத் திரத்தானே நடங்கொதிசென்
றெயிலகமுயச
சிரித்தானே யெளியேனை யஞ்சலெனக் காத்திடென்றான்
றிகிரி யானே (13)

இறந்துபோன பேர்களுடைய அஸ்தியைத் தரித்தவனே, முன்னாளிலே பூமியைத் துளைத்த அடியேனுடைய நரசிங்க ரூபத்தைச் சரபாவ தாரம் படைத்துப் பாதத்தினாலே நெறித்து நிக்கிரகம் பண்ணியவனே, அக்னிப் பிரளயமான கடையுகாந்த காலங்களிலே பூலோகத்திலுண்டாகிய அண்டங்களெல்லாம் நிலைதடுமாறுமபடி ருத்ராவதாரமெடுத்து எரித்தவனே, கையிலே அஸ்திரமாகச் சூலத்தை யணிந்தவனே, திரிபுராதிகளுக்கு எதிராக நடந்து நகைசெய்து எரிப்பவனே, எளியே னாகிய அடியேனைக் காத்து இரக்ஷிக்க வேண்டுமென்றுரா சங்கு சக்கராயுதம படைத்த மகாவிஷ்ணு.

சீர்த்திசா லரியரனர் சரித்திரத்தி னின்னணங்கீர்த
திகளோ நாடிச
சாற்றியநா டனதினிய காதலரை யெண்சரபா
தடிந்த நாணின்
றூற்றவிழுந் திடர்நலிய நலிந்ததனார்த சியைநியதிக்
காட்சி யான
கேத்திரத்தை நெறியேகேட் டடைந்தாளிந் திரைதரள
கிரியைத் தானே (14)

சிறப்புப் பொருந்திய மகாவிஷ்ணுவானவர் பரமசிவனுடைய சரித்திரங் களை இந்தப்பிரகாரம ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்கிற நாளில், தனது இனிய காதலரை எட்டுக்காலுடைய சரப அவதாரமெடுத்துப பரமசிவன் நிக்கிரகம் பண்ண அதனால் பராக்கிரமம இழநது மெலிவடைநத தளர்ச்சி தீரும்படி நியதிக்கு ஆட்சியாயிருக்கிற க்ஷேத்திர மகத்துவத்தை யறிந்து மகா லக்ஷ்மியானவள் முத்துமலையாகிய திருப்பைஞ்ஞீலிக்கு வந்தாள்.

தட்டழியக் கனகனெஞ்சங் கிழித்ததென்னச் செழித்ததிங்கட்
சடில நாதர்
எட்டடியாற் கிழித்தெறிந்த நகரேகை யலகதனு
லீர்ந்த ரேகை
யட்டதிசா திசையிலறைந் தந்தரதது லெறிந்திறகா
லடிக்கத் தைத்த
கெட்டடிகள் காததிரத்தி னிறைந்திடகேத் திரத்தாற்றன்
னிறையைக் கண்டாள் (15)

நட்டழிய இரணியனுடைய நெஞ்சைப் பிளந்ததுபோல் செழிப்பாகிய அர்த்தசந்திர ஜடாதரரான பரமசிவனுகிய சரபமானது தன் எட்டுக்காலிலுள்ள நகத்தினுலும் கிழித்த ரேகைகள் சில, அலகினுலே குத்திக் கிழித்த ரேகை சில, எட்டுத்திக்குகளிலு மறைந்து ஆகாசத்தில் எறிந்து அதிர்ந்துவிழும்படி சிறகினுலே அடிகளாத் தாக்கியிருக்கின்ற அடிகள் சில, சரீரத்திலே இடமில்லாமல் நிறைந்திருக்கின்ற தன் நாயகனைக் கண்ணினுலே கண்டாள் மகாலக்ஷுமி

எரிந்ததழற் கட்கனலா லரந்தையடை யாதகிலத்
 தின்ன லீங்கக்
கரிந்தநர கேசரியைக் கனகநகச் சிலையாரெண்
 காலிற் ருக்கி
நெரிந்தசிரத் தலகினைதைத் தகழ்ந்திடத்தேங்கினை கடந்த
 நீரை நேராய்ச்
சரிந்திழிசெந் நீர்நடந்த சரீரரா யிந்திரைகா
 தலரைக் கண்டாள் (16)

மேருவை வில்லாக வளைத்த பரமசிவமாகிய சரபம தன் எட்டுக்காலிலுள்ள நகத்தினுலு மழுந்தபடி நெறித்த தலையிலே அலகினுல் அழுந்தக் கொத்தி அகழ்ந்ததினுல், தேங்கியிருக்கிற நீர அணை பெயர்த்துக்கொண்டு தாரானமாய் விசையுடனே நீர் வருவதுபோல் ரத்தமானது தாரைதாரையாயப்பெருக இரத்தமயமாயிருக்கிற சரீரம படைத்த பிராணநாயகரை மகாலக்ஷுமி கண்டாள்

நாகத்தார் தராதலத்தார் நாகதலத் தார்க்கரிய
 நாக ரீக
தேகந்தார்க் கெண்ணிரண்டா யிரத்தாதைய லார்கணெஞ்சிற்
 றீர்ந்தி டாத
தாகத்தார்க் கித்தனை தீ தாகத்தா ரணிதனிலா
 தரித்து நின்றோன்
ஆகெட்டே னெனக்கதறி யரற்றினளா யிந்திரைகா
 தலரைக் கண்டாள் (17)

தெய்வலோகத்தார் பூலோகத்தார் நாகலோகத்தாருக்கு மரிதாய் அதிக நாகரிக தேகம படைத்து, ஆயர்பாடியில் பதினறுயிரம் கோபிகைகள் தங்கள் நெஞ்சில் நீங்காத மையல் கொள்ளக் கிருஷ்ணனுக விளங்கியவருக்கு இத்தனை தீதான சரீரமிருக்கக் கண்டும் நான் பூமியிலே கால்தரித்து

இன்னும் என்னுடைய சரீரம் வைத்திருக்கிறேனே! ஐயோ கெட்டே னென்று வாய்விட்டுக் கதறியலறியவண்ணம் தன் பிராண நாயகனைக் கண்டாள் மகாலக்ஷுமி

நிறைந்ததக்க னயன்சிரத்தைக் காத்திற லடர்த்ததன்றி
நிலையி னில்லா
தெறிந்ததந்தி யிராக்கதனுர்க் கிடைந்தநீர் சரணெனச்சென்
றிரத்த லாலே
செறிந்தகயத் தினைக்கடிந்த திறங்கண்டி ரரனுர்தஞ்
செயலெ லாங்கண்
டறிந்தறியா தேழைநெஞ்ச ரானீரென் றிந்திரைகா
தலரைக் கண்டாள் (18)

நிறைந்த தபசுடைய தக்கன் தலையரிந்தவரும் பிரமதேவன் தலையரிந்து கையிலே கபால மாய் வந்தினதுமல்லாமல், நிலைசபி ஆச்ஞாசக்கரம செலுத்திய கஜமுகனென்னும் ராக்ஷதனுலே அவதிபபட்டு சரணாகதியடைந்து இரக்கமாயக் கேட்டபடியினுலே அந்த கஜமுகாசுரனை சமஹாரிததவருமாகிய பரமசிவன செயல் இபபடிபபட்டதென்று கணடறிநதும அறியாதவர்போல் ஏழை நெஞ்சும படைத்தவரானீர என்று அறிவுவருமபடி லக்ஷுமியானவள தன நாயக னைக்கண்டாள்.

நிகழ்ந்ததலத் தாயிரத்தெட் டண்டநிரைக் கதிகனென
நிலைகள் சேரத்
தகர்ந்தழியத் தமித்தியனுர் தனைத்தனைய னலழித்தார்
தனையெண் ணுதே
யிகழ்ந்தார்க ளிறந்ததெல்லாங் கண்டீர்கண் டிலரானீ
ரிடற்கா ளானீர்
அகந்தையினு லேதிறங்க ளிழந்தீரென் றிந்திரைகா
தலரைக் கண்டாள் (19)

ஆயிரத்தெட்டு அண்டஙகளுக்கு அரசனென நிலையாக அரசாட்சி செய்த சூரன் முதலியோரை அவர்கள் காவம் அடஙகத தமமுடைய குழந்தை யாகிய குமாரனுலே அழியுமபடி செயவிததார அதவும எண்ணிபபாராமல் போனீர். சிவனை இகழ்ந்த பாபததினுலே திரிபுராதிகள் இறந்தபோனதை

அறிந்திருந்தும் அறியாதவர்போல் இத்தனை வாதைக்கு ஆளானீர். உம்முடைய கர்வத்தினாலே திறல் குறைந்தீரென்று சொல்லிக் காண்பித்துத் தன்னுடைய நாயகனை கண்டாள், மகாலக்ஷ்மி

தானிரங்கி யடித்தலத்தி லடைந்தாளைக் கண்டிரங்கிச்
சலச சீதத்
தேனலங்கற் றனத்தாளை யரிகரத்தா லணைத்திதயந்
தேற்றி யாற்றி
யானியன்ற தியற்றியர்ச்சித் திறைஞ்சினேனனகவெனைக்
கியந் திடாதே ...
நானிலனென் னியநீலி யாரணிய ரென்னணியதென்
னளிலை யென்றார் (20)

இப்படி மனமிரங்கிய பாதத்திலே விழுந்து கதறிக்கொண்டு கிடக்கின்ற வளைக் கண்டு இரங்கி, தேன்கள் தளிர்த்த மலர்மாலை பூண்ட ஸ்தனம்படைத்த மகாலெக்ஷ்மியை விஷ்ணுவானவர் இரண்டு கையினாலும் தூக்கி எடுத்து அணைத்துக்கொண்டு மனந்தேற்றித் துயரங்களை மாற்றி, பக்தியினால் இசைந்த மட்டும அர்ச்சித்துத் தொழுதேன் எனக்கு, பயப்படாதே யென்று அபயஸ்தம் கொடுக்கவில்லை. பூலோகமெல்லாம் தியானம பண்ணுகின்ற நீலிவனநாதர் திருவுளம் எப்படி யிருக்கிறதோ மகாலக்ஷ்மியே யென்று சொன்னா மகா விஷ்ணு

ஈதிசைக்கக் கேட்டனளிந் திரையாதி நாட்டனதில
விடதத் தெய்தி
யாதியிசைத்த தைநினைத்தா லயத்தினோர் தெக்கணதிக்
கந்தந் தன்னிற்
றீதிலா நிலையாகி யசையாத நிச்சலததே
சிந்தை நாட்டு
நீதிசேர் நியதியையங் கீகரித்தா ளதிகரித்தா
ணிட்டை தானே (21)

இப்படிச் சொல்லக்கேட்ட மகாலக்ஷ்மியானவள், ஆதிநாளிலே தன் னிடத்திலே வந்து கபாலத்திலே பிக்ஷை கேட்கும்போது ஆதியான சிவன் சொன்னதை மனதில் நினைத்துக்கொண்டு ஆலயத்திற்கு, நேர் தெற்கே கடைசியிலே குற்றமில்லாத சமாதிநிலையாக ஆகாரத்தை வெறுத்து ஞான

நாட்டத்திலே ஹிருதயத்தை வைத்து நீதிசேர் நியதியை அங்கீகரித்து நிஷ்டையாகத் தவஞ் செய்திருந்தாள்

தாக்கணங்கின் னனத்தினிற்செய் நியதியைநிட் டையினிடைசேர்
தடைக ளுடி
நீக்கிநீங் கரியநெறி நின்றனள்சங் கரியிடத்தர்
நிறையாய் நீண்ட
தீக்கணங்க ணிகர்த்தசடா தரததாரந் தரத்தினிலெண்
டிசையிற் கீர்த்தி
தேக்கியதண் டரளகிரி சிகரதரர் சலசைதன
தெதிரே நின்றார் (22)

லக்ஷ்மியானவள் இந்தப்பிரகாரம் நேமமாக நிஷ்டை தவறாமலிருந்து விடுவதற்கரிதாகிய பக்தி நெறிநின்றாள். பத்தி பத்தியாக நீண்டு அக்னிக் கொழுந்து போன்ற ஜடாமகுடம் தரித்தவரும் எட்டுத்திக்கும் பிரசித்தமாகக் கொண்டாடிப் பணிகின்ற முத்துமலை வாஸருமான பரமசிவன் ஆகாசத்தி லெழுந்தருளி லக்ஷ்மிக்கு எதிரே நின்றார்

சக்ரத்யா கேசரையிந் திரைகண்டா ளிணைநளின
சரணந் தாழ்ந்தாள
செக்கநிறத் தண்ணனினை யிகழ்ந்தநர கேசரியைச்
சினத்த லாலே
தக்கதிற ணிழந்தயர்ந்தா ரினித்தளரா தெனக்கிசைத்த
தளித்தி டென்று
ளக்கயிலை நாயகர்நன் றலரணங்கே தந்தனநீ
யஞ்ச லென்றார் (23)

சக்கரத தியாகேசுவரரான பரமசிவன் எழுந்தருளி வருவதை மகா லக்ஷ்மியானவள் கண்டு இரண்டு பாதாரவிந்தங்களிலேயும் தீர்க்க தெண்டம் பண்ணிச் சொல்வாள் செவ்வான வர்ணம்போன்ற மேனி படைத்த அண்ணலே, உம்மை இகழ்ந்த விஷ்ணுவாகிய நரசிங்கத்தின்பேரில் நீர் மிகக் கோபம் செய்தபடியினாலே திறமெல்லாம் குலைந்தன. இனி அப்படித் தளராமல் எனக்கு முன் சொன்னபிரகாரம் எப்போதும்போல் எழுந்தருளும் படி வரப்பிரஸாதம் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தாள். அது கேட்ட கைலாசநாதர் நல்லது மகாலக்ஷ்மியே அந்தப்படியே தந்தோம, நீ பயப்படாதே என்று திருவுளம் பற்றினார்.

அஞ்சேலென் றினியகஞ்ச நேரிழையாள் கேட்டனதந்
தளித்தல் கேட்டான்
நெஞ்சயர்ச்சி தீர்ந்தரனைச் சார்ந்தடியிற் றாழ்ந்தரிநின்
னிகரி லானே
நஞ்சணிகந் தரனேயா னந்தகலா தரனேயஞ்
ஞானந் தீராக்
கிஞ்சிதனேன் றன்னைரட்சி யெனவுவந்தக் கணந்தந்தார்
கிரீசன் றானே (24)

அஞ்சேல் என்று தாமரைமலர் வாஸியான லட்க்ஷ்மி கேட்டபடி கொடுத்தோமென்று திருவுளம்பற்றினதைக் காதினாலே கேட்டமாத்திரத்திலே மனதிலே மெலிவாகிய துயரங்களெல்லாந்தீர்ந்து விஷ்ணுவானவர் பரமசிவனிடத்திலே வந்து தெண்டம்பண்ணி எழுந்து ஒருவரும நிகரில்லாதவனே, விஷமணிந்த கண்டனே, ஆனந்த சந்திரகலாதரனே, அக்ஞானம தீராத ஜென்மாந்திர வினைபொருந்திய என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று விண்ணபபம் செய்த அந்த க்ஷணமே உன பதவியை யடையக் கடவாய் என்று கட்டளையிட்டார் கைலாசகிரி ஈசன

இந்திரையை யரிதனைசசெல் கெனநயந்தா ரந்நிலைசென்
றிடத்தைச் சார்ந்தார்
நந்தணிகைக் கண்ணனித்த ரர்ச்சனைத்த லத்தைகண்ணா
நகரி யென்றே
சந்ததஞ்சாற் றினர்களந்த கந்தசன கனைநரகே
சரியி னாலே
யெந்தைசக்ரத் தியாகனா யகரை யிசைத் தார்நரசிங்
கேச ரென்றே (25)

மகாலக்ஷ்மியையும் விஷ்ணுவையும தயவுடனே பரமசிவன் போகலாமென்று அனுப்ப அவாகள் அனுமதிபெற்றுச் சந்தோஷத்துடனே எபபோதும வாஸமா யிருக்கிற ஸ்தலம் போயிருந்தார்கள். செந்தாமரைக் கண்ணனாகிய மகாவிஷ்ணு சிவலிங்கப் பிரதிஷ்டைபண்ணி அர்ச்சனை செய்த ஸ்தலத்தைச் செழிப்பாகிய கண்ணனூரென்று அனுதினமும் சொல்லுவாாகள் அந்த விஷ்ணு நரசிங்கமாய்ப பூஜைபண்ணினபடியினாலே எந்தையாகிய சக்கரத்தியாக நாயகரான சிவனை நரசிங்கேசுவரரென்று பூலோகசதாகளெல்லாம சொல்லுவார்கள்.

ஏகசங்கந் தரித்த செங்கை நாரசிங்கந் தனக்காரு
 ரீய்ந்தார் சித்தி
யாகசிங்கர் தனத்தியாகத் தாதியிலே தந்தசக்கரத்
 தியாகத் தாலே
தாகசங்கை தணிந்தகிலங் காததனயந் தரத்தினிலே
 தக்கன் செய்த
யாகசங்கா ரனகர்கண்டி தத்தாலே கயிலையா
 னிணைத்தாள் சேர்ந்தான் (26)

பிரகாசம் பொருந்திய சங்கு சக்கரம தரித்த தாமரை மலர்போன்ற ஹஸ்தனை விஷ்ணுவாகிய நரசிங்கததுக்கு சித்திதந்தார. சநதிரபீட மேசாழ ராஜனே, விஷ்ணுவும் அநதபிரகாசம் முன்னளிலே லோகத்தை ரக்ஷிக்கு மாறு பரமசிவன் கட்டளையிட்டபடி வைகுண்டலத்திலே போய் தாகசோபந தீர்த்து ரக்ஷக காததாவாய் எழுநதருளினர்—என்று தக்கன்செயத வேள்வி யைக் கண்டனமபண்ணிய கைலாசவாஸருடைய பாதாரவிந்தங்களைத தியானம பண்ணி ஆனந்தமடைந்த அகஸ்திய ரிஷி திருவாய் மலர்நதருளினர.

---

## பதினேழாவது—கலியுக ராமபாண்டியன் பூஜையின் மகிமை

வேதனுன் முகங் களினும் பரவியபைஞ் ஞீலிமுத்து
 விலங்கன் மேவு
நாதனுர் நரசிங்க வல்லவனுர் சரித்திரங்க
 ணவிலக் கேட்டுப்
போதநா னறியரத்னம் பலத்தரனுர் மகிமையின்னம்
 புகனீ யென்ற
சீதநாண மலர்த்தடஞ்சூழ் குடந்தையன கனுக்குமுனி
 கூறு கின்றான் (1)

பிரமமாவும் தன்னுடைய நான்கு முகங்களாலும் துதித்து வணஙகு கின்ற திருபபைஞ்ஞீலி என்னும் முத்துமலை வாஸமான பரமசிவனுனவா நரசிங்கரூபமான விஷ்ணுவுக்குப பதவிகொடுத்து நரசிங்க வல்லபரென்று பெய ரடைந்த சரித்திரங்களைச் சொல்லக்கேட்டு மிகவும் சந்தோஷமடைந்த அடியே

னுக்கு, நன்றாய்த் தெரியும்படி ரத்னம்பலவாணர் மகத்துவங்களை இன்னும் திருவுளம்பற்ற வேண்டுமென்று ராஜன் கேட்கும்போது குளிர்ந்த வாசனை மலர்கள்பொருந்திய தாமரைத்தடாகம் சூழ்ந்த கும்பகோணத்துச் சந்திரபீட சோழராஜனுக்கு அகஸ்தியரிஷி திருவுளம பற்றுவார்.

## வேறு

பருவளைத் தரளத திரள்களைத் திரளப்
பழுததுதிர் நெலலியங் கனிபோல்
வருதிரைக் கரததா லெடுததெறிந் தலவும
வைகைசூழ் மதுரையம் பதியான
பொருபட லைசுற றிலைவிடுத் தொருபொறு
பொருபபினிற் பதிததபீ னவாகோன்
கருதலர் தமது கிறைநிறை சமுக
கலியுக ராமபாண டியனை (2)

பெரிதாகிய சங்குகளில விளையும் முததுக்களைத திரளாகத, திரண்டு பழுதது முதிாநத நெல்லிபபழமபோல இரண்டு பாரிசததிலும அலையாகிய காததால் வீசும வைகையாறுசூழ்ந்த மதுரைபபட்டணத்துககு அதிபதியான வனும கடல்வற்றுமபடி வேலாயுதம விட்டவனும்; மகமேருகிரியைச் செண்டி னாலே மோதி அடையாளமிட்டவனும், பகைவாசளெல்லாரும வநது வணஙகி திறையைத் திரையனககின்ற சமுகமடைநதவனுமாகிய கலியுக பாண்டியராஜனை.

நலஙகொள்கற பகபபோ தலஙகலர் புயனை
நாகநாட் டேகசக் கரனை
விலங்கலவெஞ் சிறகு தடிநதவச் சிரனை
மேகமூர் பாகசா தனனை
மிலஙகுகை வயிர வளைகொடு முடிபோக்
கெறிந்துவெங் கொடுஞ்சமர் தொடர்ந்து
கலங்கிட முகிலை விலங்கிடு வலிய
கலியுக ராமபாண் டியனை (3)

நலமுடைய தலைமுககினற கறபகமலாமாலையணிநத புஜவிசாலனை, ஏகசகராதி பதியான தேவலோகராஜனை, பாவதஙகளைச சிரசறுத்த வஜ்ராயுதம் படைதத வனை, மேகவாகனனான தேவேந்திரனை, கையிலே பிரகாசிக்கின்ற வஜ்ராவளை யான படைககலஙகொணடு கிரீடததிலே விளஙகும முடிபோக யுததமபண்ணி

மேகங்களையெல்லாம் சிறைச்சாலையி லடைத்த பராக்கிரமசாலியான, கலியுக ராமபாண்டியன்.

ஆலவா யிறைவர் மணம்புரி கயற்க
  ணமுதையின் றுதவிய வுரவோன்
சாலவா னுலகத் தமரர்கோன் மகுடந்
  தகர்ந்திட வெறிந்தகங் கணத்தோன்
சீலமுத் தமிழும் விபூதியுந் திருவஞ்
  செழுத்தாகல் லுருத்ரசா தனமு.
ஞாலமு மொருசெங் கோல்வழி மரபி
  னடக்கையு முடித்துவாழ்ந் திருந்தான் (4)

திருவாலவாயாகிய மதுரைச் சொக்கநாதசுவாமி மணம்புரிய அங்கயற் கண்ணம்மனைப புத்திரியாகப பெற்ற மகிமையுள்ளவன், தெய்வலோகத்திலே தேவேந்திரன் கிரீடம் தகாந்திடும்படி செய்த கங்கணந் தரித்தவன், இயல் இசை நாடகமென்னும் முத்தமிழும் விபூதி பஞ்சாக்ஷரமும் ருத்திராக்ஷமும் பூலோகமும் முறைமைதப்பாமல் நடத்திய செங்கோல் நீதியுள்ளவன் கலியுக ராமபாண்டியன்.

## வேறு

அன்புதிகழ் மனததினுட னனைத்துயிர்க்குந் தாயெனநின்
  றவனி காக்கு
நன்புகழா லுயர்வழுதி முன்புசெய்தீ வினைப்பயன்க
  ணவித லாலே
யென்புருவு குட்டமெழுந் துடம்புருவ மிலாமன்மறைத்
  தெல்லா மூழ்கத்
தன்பெடைவிட் டென்பிருக்கக் கரைந்தவல வணைநிகர்த்தான்
  றலைவன் றானே (5)

அன்புடனே பிரகாசிக்கின்ற தயவுபொருந்திய மனசுடன் பெற்ற தாய் போலுமிருந்து ராஜ்ஜிய பரிபாலனம பண்ணிப புகழினாலும கீர்த்தியினாலும உயர்ந்த விஸ்தாரம்படைத்த கலியுக ராமபாண்டியன் ஜன்மாந்திரங்களிலே செய்த தீவினைப்பயன் வந்தடுத்தபடியினால் எலும்பை உருக்கும் வெண்குஷ்ட ரோய்க்காரனாகி, உடம்பின் சுயவர்ணமறைந்து தன்னுடைய பெடைவிட்டுப் பிரிந்து வெளுத்த நண்டைப போலானான்.

தருமனைத்தந் தவன்பிரிந்தான் றனதுதிரு மனையென்பான்
　　றறுகட் சிய

வருமனைநா டாளாமற் காடாள விட்டதிந்த
　　வன்றோ வென்பா

னிருமலெனுங் கயத்திலிது கொடிதென்பா னெங்கள்குலத்
　　திறைவ ளூர்க்குக்

குருமனையாற் கருத்ததுமென் புரிவினையால் வெளுத்ததென்ன
　　குறையோ வென்பான் (6)

தர்மபுத்திரனை பெற்ற பாண்டவராஜன் இந்த நோயினாலே தன் பெண்சாதியைச் சேராமல் பிரிந்துபோனான். பின்னும் சிங்கவர்ம ராஜனானவன் இந்த நோயினாலே வனவாசம் புகுந்தான இருமலெனும் க்ஷயத்திலும் கொடியது இது எனபான். குலத்தில் வரப்பட்ட ராஜனுக்குக் குருவின் மனைவியாலே சரீரம் கருத்தது எனக்கு முன்செய்த தீவினையாலே தேகம் வெளுத்ததுவோ மற்றொரு குறையுஞ்செய்ததில்லையே இது என்ன குறையினாலேயோ தெரியவில்லையே யென்று விசனப்பட்டான்

ஆய்வந்த செல்வமிரு நிதிகள்பதி யாண்மையரா
　　சாட்சி கீர்த்தி

வாய்வந்த கல்விகொடை வாய்மைதவ நீதிநெறி
　　மான ஞானஞ்

சேய்வந்த பெண்டிர்நலம் பூசிமுடித் தண்டுடுக்குந்
　　திறங்க ளெல்லா

நோய்வந்தான் மலைப்பதன்றி நலப்படுமோ நிலைக்கொளுமோ
　　நோக்கந் தானே (7)

மென்மேலும் பெருகிவருகிற செல்வங்களும், பெருமை பொருந்திய இரு நிதிகளும், வாஸமாயிருப்பதற்குரிய ஸ்தானமும் ஆண்மையும் ராஜரீகமும் கீர்த்திகளும், வாக்கிலே பிரஸன்னமாய் வந்திருக்கிற வித்தைகளும், கொடையும சத்தியம், தபசு, நீதிமுறைமைகளும், மானமும், சிவஞானமும், பிள்ளை பெண்சாதியும ஆபரண பூஷணங்களும், நல்ல புசிப்பும இப்படிப்பட்ட திறங்களெல்லாம் ஒன்றாய் ஒருவனிடத்திலே அகலாதிருந்தாலும், அவனிடத்திலே ஒரு வியாதி சேர்ந்தாலபோது மலைபபதன்றி நன்மையாகுமோ மனதானது ஒரு நிலையில் நிலைத்திருக்குமோ ?

யோசித்தான் யோசனைக்குத் தக்கபெரி யோர்களையவ்
வுடநததா னே
யோடிப்போ மெனப் புசித்தான் றெரிசித்தான் சிவதலங்க
ளுடையா ளோடு
பூசித்தா னிறையவனை யாசித்தான் முனிவரரைப்
புண்ய பூமி
வாசித்தான் மனமுசித்தான் காசிக்கே பயணமென்றான்
மதுரை யானே (8)

யோசனைக்குததகக பெரியோர்களிடம ஆலோசனை செயதான் மருநதி னால் நோய் தீருமெல்லு மருந்தையும் புசித்தக கொண்டு சிவஸ்தலங்க ளெல் லாம் தரிசிததுப பார்வதி பரமேசுவரனையும பூஜைசெய்து தேவதாப பிரார்த் தனைகளும்செயது முனிவாகள முதலாகிய பெரியோர்களை யெலலாம தேடி அவர்களிருக்கிற ஸ்தானங்களிலே ... தரிசனம் பண்ணிப புண்ணிய பூமியாகிய சிவஸதலங்களிலே வாஸமாயிருந்தும ஒன்றிலேயும் தீராதபடி யினாலே மன . வெறுத்துக் காசி யாத்திரை போவதாய எணணினான், மதுரைப பட்டணத்துக்கதிபதியான கலியுக ராமபாணடிய ராஜன

சித்தரைக்காண் பதுகருதிப் பொதியமலை யிருந்தவன்கா
சியைநோ நோக்கி
யத்தரைவிட் டகன்றெருதாம் பிரசபையத தரைவடிவா
ரமிர்தம் வேட்ட
நித்தரைக்கண் டித்தரைக்குத் திருப்புவனே வருந்துனைப
நீங்கி யென்ற
பத்தரையாட் கொளநீலி வனத்தாருண ணினைததார்சொப்
பனத்த ரானர் (9)

சித்தர்களைக் காணவேண்டு மென்று மனதிலே யெண்ணி பொதியமா மலையிலே வாஸமாயிருந்தவன் காசியை நோக்கி அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் திருநெல்வேலி என்னும ஸ்தலத்திலே தாம்பிர சபையில் எழுந் தருளி யிருக்கிற நாதனாகிய ஆநந்த அமிர்த்தத்தைப் பிரார்த்தித்து தரிசனம் பண்ணி, என்னை வருத்தும துன்பம் தீர்ந்து பின்னுமிந்தப பூமிக்குத் திருப்பு வனேவென்று இரங்கின பக்தனாகிய ராஜனை அடிமைகொள்ள வேண்டி, நினைத்த பேர் மனதிலே வாஸமாயிருக்கிற நீலிவனநாதர் எழுந்தருளி அவ னிடத்திலே சொப்பனம் சாதிப்பார்

வழுதிகலி யுகராம பாண்டியனே கேளுனது
  வடிவின் மூண்ட
பழுதகல நினைத்தவட பரிசரியாத் திரைதவிருன்
  படிவ மெல்லாம்
வழுவகன்மா மணிபோலத் தருவோநாம் நித்தரமா
  மலையில் வாழ்வோ
மெழுதரிய பெருமாள்பைஞ் ஞீலிரதன சபையினட
  மிடுவோ மென்றார் (10)

ராஜனாகிய கலியுக ராமபாண்டியனே கேள், உன்னுடைய சரீரத்தில் உண்டாயிருக்கிற பழுதுகள் தீருமபடி நினைத்துக் காரியத்திரை போவதை நிறுத்து; உன்னுடைய சரீரமெல்லாம் களங்க மில்லாத மாணிக்கப் பிரகாசம் போலாகும்படி வரப்பிரஸாத மருளுவோம். நாம் என்றைக்கும் முத்துமலையிலே வாசம் செய்வோம். நமமுடைய பெயர் எழுதரிய பெருமான் என்பது. திருப் பைஞ்ஞீலி என்னும் ஸ்தலத்திலே ரதன சபையிடனிமாக நர்த்தனம் செய்வோ மென்றார்

எனவுரைத்தார் மறைந்தார்கண் டுயில்விழித்தான் வழுதிகடி
  தெழுந்தான் பார்த்தான்
கனவுரைத்தோர் கருதிகளோ மெனவுரைத்தா னெந்தனது
  கவலை நீத்தான்
வினையுரைக்குப் போந்தவனோ ரொருயேனென் பாபவினை
  விடுவோ மென்றான்
சனவுரையோ டினிதிருப் பைஞ்ஞீலிக் கேனநடந்தான்
  றானை சூழ (11)

இப்படி சொப்பனம் சொல்லி நீலி வனநாதர் மறைந்தார். அதுகண்டு விழித்த பாண்டியராஜன் அதிசீக்கிரமாக எழுந்திருந்து பார்த்தான். கனவிலே வந்து சொன்னது வேதம் நம் என்று புகழும் சிவபெருமான் என்று கருதித் தன்னுடைய மனக்கவலை நீங்கி இந்தச் சொப்பனம் கண்டும் அப்பாலேபோனால் கொடிதாகிய பாபமாகுமென்று நினைத்து, நம்மைப் பிடித்த வினைகள் நீங்குங்காலம் வந்ததென்று எண்ணி ஜனங்கள் பிரசித்தமாகச் சொல்லிக்கொண்டும் திருப்பைஞ்ஞீலிக்குப் போக வேண்டுமென்று நடந்தான் சேனைகள் சூழ.

சாலிவன வேலியர்பொன் னடிவணங்கி விடைகொண்டான்
  றடங்கள் கோடி

கோலிவனை நிறைபழனக் கழனிகடண் டலைகளுயர்
கூட மாட
மேலிவனம் பருக்கெனைப்போ லன்பனெனும் புரவலர்வாழ்
விருப்புஞ் சூழ்ந்த
நீலிவன வளம்பதியி னெல்லைகண்டான் சிவன்றனைமுன்
னெல்லை கண்டான் (12)

செல்வயல் தடாகம் சூழ்ந்த திருநெல்வேலி வாஸமான நெல்லியபபா பாதாரவிந்தத்தை வணங்கி அனுபவிததுக் கொண்டு கோடானுகோடி தடாகங்களும வயல்களும் செங்கழு நீர் ஓடைகளும் சோலைகளும சூழ்ந்த மேக மண்டல அளவாக மாட கூட உபபரிகை களும அன்ன சத்திர சாலைகளும் தன்னைப்போல் அன்புடன் கூடிய ராஜாக்களின் அரண்மனைகளும் நிறைந்த வளமை படைத்த நீலி வனத்தினுடைய எல்லையைக்கண்டான்; முன்னால் ராத்திரி காலத்திலே சிவனைச் சொபபனத்திலே கண்ட கலியுக ராமபாண்டிய ராஜன்.

வேதாவுந் திருமாலும் பரவுபைஞ்ஞீ லியம்பதியை
வியந்து நோக்கிப்
பாதாதி கேசநிலத் துறவீழ்ந்தங் கெழுந்திருகைப்
பதுமங் கூப்பி
யோதாத மறையாயன் பினரிதைய மாய்க்கைலை
யோங்க லாகு
மீதானந் தனைக்காணப் பெற்றேனென் றகமுருகி
வியந்து சொல்வான் (13)

பிர்ம்மாவும் விஷ்ணுவும் பரவும திருபைஞ்ஞீலி யென்னும் ஸ்தலத்தை வியந்து பார்த்து அவ்விடத்திலே பாதாதி கேசமெல்லாம் பூமியிலே படியும்படி வணங்கி எழுந்திருந்து தாமரை மலர் போன்ற இரண்டு கைகளையும அஞ்சலி செய்துகொண்டு சொல்வதற் கரிதாகிய வேதமாயும் அடியாருடைய ஹிருத மாயும் கைலாச மலையாயும விளங்கும இந்த ஸ்தலத்தைக் காணபபெற்றேன் என்று மனமுருகி வியந்து சொல்வான்.

தெய்வத்தாற் பெறுவதுஞ்சற் குருமுகத்தால் விளங்கியுண்மை
தெரிய வேண்டு
மெய்வற்று திடர்க்குரிய விடக்கெனும்பொய் யுடம்புவற்ற
விரதம் பூண்டு

நய்வற்றார் செபதவத்தா லுயர்வசிட்ட மாதவர்மெய்ஞ்
ஞான யோக
சய்வத்தாற் பெயர்தமதாச் சிரமமடைந் தவர்துணைப்பொற்
சரணந் தாழ்ந்தான் (14)

தெயவத்தினாலே பெறுவதையும் குருமுகத்தால் தெரிந்துகொள்ளவேண்டு மென்று கருதி, இடர்க்கிடமாகிய பொய்யுடயபுவற்ற விரதங்களை அனுஷ்டித் துக்கொண்டு மனது தளராமல் ஜபதபங்களினால் சிறந்த வசிஷ்டரின் ஆச்சிரமத் தையும் மெய்ஞ்ஞானயோகம் செய்கின்ற தபஞானியாகிய சைவாசாரியரான தாற்பிய மகரிஷி ஆச்சிரமத்தையும் அடைந்து அவர்களுடைய பாதத்திலே நமஸ்காரம் பண்ணினான், கலியுக ராமபாண்டியராஜன்.

பேசுமுகத துதிமொழிந்த மதுரையதி பதியையன்பாற்
பெரிது நோக்கி
யாசிபல புகன்றிருநீ யெனபபரிவோ டிருக்கைகொடுத
தரசர் கோவே
நீசிறிது வருத்தமுற வருபிணியு முயர்திருப்பைஞ
ஞீலி நாடி
வாசிகரி பதாதியொடு வந்தனையு மெந்தமக்கு
வகுத்தி டென்றார் (15)

இபபடி தெண்டமபண்ணி ஸ்தோத்திரம செய்த மதுரைக கதிபதியான ராஜனை ரிஷிகள் பாரத்து அநேக ஆசீர்வாதம செயது இருக்கச்சொல்லிப பரிவாய் இடங்கொடுத்து ராஜாதிராஜனே நீ சிறிது மனதில் வருத்தமுற உனக்கு வந்துள்ள பிணியையும் உயர்நத திருப் பைஞ்ஞீலியைத் தேடி ரதகஜ துரகபதாதியுடனே வநத காரணத்தையும் எங்களுககுத் தெரியும்படி சொல் லென்றார்கள்.

மாறனார் குலதிலக மிவனெனசசெங் கோனடத்தி
வாழ்ந்த வாறும்
வீறுதி வினைப்படிவெண் ணெய்மலிய மணந்தளர்ந்து
மெலிந்த வாறுந்
தேறிடுசித் தவுடதங்கொண் டருந்தியுண்டி குறைந்தூண்கள்
சிதைந்த வாறும்
வேறுவே றுளதீர்த்தந் தலங்கண்டு பொதியவெற்பின்
மேவு மாறும் (16)

பாண்டியகுல திலகனும் மதுரையிலே ராஜ்யபரிபாலனம் பண்ணின வரலாறும் முன் செய்த தீவினைப்பிரகாரம் வெண்மையான நோயானது சரீரத்திலே அதிகமாக மனந்தளர்ந்து மெலிவடைந்த வரலாறும் அது தீரும்பொருட்டாக, சித்தமூலிகை சாப்பிட்டும் உண்டி மறுத்துப் பலம் குறைந்த வரலாறும் எங்கிலுமுள்ள தீர்த்தங்கள்தோறும் ஸ்தலங்கள்தோறும் போய்த் தீர்த்தமாடித் தரிசனம் பண்ணின வரலாறும் பின்பு பொதியமாமலைக்குப் போன வரலாறும

கூறுகங்கைக் கரைக்கினிச்செல் குவமெனநெல் வேலிதனைக்
குறுகு மாறு
நீறணிகண் ணுதலிரத்தின சபாதிசொப் பனத்தில்வந்து
நிகழ்த்து மாறு
மீறிலா முதல்வன்மொழிப் படியடைந்த வாறுமிவை
யெல்லாஞ் சொல்லி
யாறுபோல் விழிநீர்மார் பகநிறைத்தான் மனக்குறைசற்
றுறி றனே (17)

இப்படிப் பொதியமாமலையில் போனதின்பிறகு மனம் வெறுத்துக் கங்கா யாத்திரை போகவேண்டுமென்று நினைத்துத் திருநெல்வேலிக்கு வந்த வரலாறும் அங்கே விபூதியணிந்த கண்ணுதற்கடவுளாகிய சபாபதி சொப்பனத்திலே வந்து சொன்ன வரலாறும், ஆதியந்தமுமில்லாத முதல்வன் சொல்படி தான்வந்த வரலாறும் நவின்று கண்ணீரானது ஆறுபோல் மார்பில்வடியும்படி பிரலாபித்து மனக்குறைகளை யெல்லாம் தெரிவித்தான்.

மனத்துயரஞ் சொலிவிழிநீர் கலுழ்ந்தகலி யுகராம
வழுதி மீதிற்
சினத்தபிணி தொலைவதுவுஞ் சிவன்மொழிந்த வுரைத்திறமுந்
தேர்ந்து நோக்கிக்
கனற்கதுவு பிரபைகண்ட பனிபோலித் தலத்தில்வந்த
கணத்தில் வேந்தே
யுனக்குறுமாஞ் சலந்தவிர்ந்த தஞ்சலஞ்ச லென்றுசொல்வா
ருறுதி தானே (18)

இப்படி மனக்குறை சொல்லிக் கண்ணீர் பெருக்கிய கலியுக ராமபாண்டியனுடைய கொடியபிணி தீரும்பொருட்டாகப் பரமசிவன் சொப்பனம் சாதித்த மகத்துவமும் நன்குயுணர்ந்து பார்த்து அக்கினிப் பிரகாசம்போன்ற சூரியனைக் கண்ட பனிபோலும் இந்த ஸ்தலத்திலே வந்தக்ஷணம் ராஜனே உனக்கு

மனதிலிருக்கிற சஞ்சலங்களெல்லாம் தீர்ந்தன. பயப்படாதே பயப்படாதே யென்று அபயஸ்தமான உறுதி வார்த்தை சொல்வார்கள்.

துட்டரா ருயிர்கவர்தின் டிறலரசே யிதுதினமுன்
றொடங்கி யிவ்வா
றட்டதீர்த் தமும்படிந்தெட் டமலலிங்கந் தொழுது பொன்னி
யதனின் மூழ்கி
மட்டிலா வியநீலி வனத்தரிணை யடிபரவின்
மன்னு வுன்மேற
குட் டநோய் தவிர்பமென வசிட்டருந்தாற் பெயருமிவை
கூறி னரே (19)

துஷ்டருடைய உயிரை வாங்கும்படி திறமைபடைத்த ராஜனே கேளாய். இன்று தொடங்கி நாங்கள் சொன்ன உறுதிப்படி எட்டுத் தீர்த்தத்திலேயும் ஸ்நானஞ்செய்து இந்திரலிங்க முதலாகிய அஷ்ட லிங்கமும் தொழுது காவிரிநதியில் ஸ்நானஞ்செய்து நீலிவனநாதர் பாதார விந்தங்களைத் தரிசனம் பண்ணினால் ராஜனே அவா உன்மேலில்வந்த வெண் குஷ்டநோயை நிவர்த்திபண்ணுவாரென்று வசிஷ்டரிஷியும் தாற்பியரிஷியும் திருவுளம்பற்றினார்கள்.

மாதவர்கள பணித்தமொழி தலைமேற்கொண் டெழுந்தடிகள்
வணங்கிப் போந்து
வேதமொரு நாலுபுக ழிருநாலு தீர்த்தமுஞ்சொல
விதியின் மூழ்கி
போதுதிசைக் கதிபாபணி யிருநான்கு கடவுளரை
யுவந்து போற்றித்
தீதகனிச சலவிரத முடித்திருந்தா னிருநாலு
தினமுந் தானே (20)

ரிஷிகள கட்டளையிட்டவசனம் சிரமேலணிந்து அவாகள் பாதங்களிலே தண்டம்பண்ணி எழுந்திருந்து நாலுவேதமும் புகழாநின்ற எட்டுத் தீர்த்தங்களி லேயும் சொன்ன விதிப்பிரகாரம் தீர்த்தமாடி அஷ்டமூர்த்திகளையும் பூஜை செய்து தீதகற்றும் விரதமுடித்திருந்தான எட்டுநாட்கள்,

செய்யதிருக் காவிரிப்பூம் புனலாடி விபூதியுருத்
திராட்ச பூஜை

மெய்யிலணிந் தனனுயர்பைஞ் ஞீலிவளம் பதியமர்சர்
வேசர் ஞானத்

தையனுட னுறைகோவிற் கோபுரவா யில்கடந்தான்
றவளம் பூத்த

தூய்யவெள்ளை விடைகண்டான் மெய்யில்வெள்ளை யிடைகாணு
தொழிந்த தன்றே (21)

திருக காவேரியில் தீாதத மாடி விபூதி களையும ருதராக்ஷ மாலைகளையும சரீரத்திலணிந்து வன்மை படைத்த திருப்பைஞ்ஞீலி வாசனுகிய சர்வேசுரன் கோபுர வாசலும் ஞான சொரூபம படைதத விசாலாக்ஷியம்மனுடைய கோபுர வாசலும் கடந்து கலியுக ராமபாண்டியன் போகும் பொழுது தாவள்யம் பூத்த சுபரமான வெண்மை பொருந்திய ரிஷபக கொடியைக் கண்டான். சரீரமுழுவதுமிருநத வெண்மை நிறம எள்ளளவாயினும அவன கண்ணுக்குத தெரியாமல் நீங்கியது.

மீனங்கே தனமாகப் படைத்தகலி யுகராம
வேந்தன் மீதி

லீனங்கே வலமொருசற் றிலாதகல வடிவமும்விண்
ணிரவி போலத

தானெங்கே யெனக்காணு வினையெங்கே போனதென்பான
சமுகத் தேவர்

வானங்கே யதிர்ந்ததுதுந் துபியொலிசிந் தினதுமலர்
மாரி தானே (22)

மீனக் கொடி படைத்த கலியுக ராமபாண்டியன் சரீரத்தின் பேரிலே வந்த ஈனமான பிணியானது நீங்கியது அவன் வடிவம சூரியப பிரகாசமபோல் பிரகாசித்தது. ஜன்மாந்திரங்களிலே செய்த பாபங்கள் எங்கே யோடிப போயிற்றென்று ஆச்சரியபபடைநதான் அநத வேளையிலே தேவசபையில் முழங்குகின்ற தேவ துந்துபி முதலாகிய பஞ்சவாத்தியங்களும் அதிர்ந்தன. அந்த சபதத்துடனே புஷ்பமாரியும் பொழிந்தது.

ஆட.லிது வெனத்தெரியா தாடினனு டினன் றுதித்தா
னனந்தங் கோடி

பாடலிது வெனுதுபல பாடினனே டினன் றுதித்துப்
பதைத்து வாடி

காடினனு டின்னுட்டங் கலுழ்ந்தான்வெவ் வினைத்துயரா
னலிந்தே னெங்குந்
தேடினமா மருந்தோவிப் பெருந்தானக் குருந்தாய்வீற்
றிருந்த தென்றான் (23)

ஆனந்தமடைந்து இன்னபடி என்று தெரியாமலாடினான். கண்ணாலே பார்த்து வாயினாலே துதித்துக் கோடானுகோடி பாடல்களினாலே இன்ன பாடலென்று தெரியாமல் அநேக ஸ்தோத்திரங்களைப் பாடினான், ஓடினான், துடித்துப் பதைத்து ஆனந்தக்கண்ணீர் பொழிந்தான். கடிதாகிய வினையினாலே துயரமடைந்து இளைத்து எங்குந்தேடின மருந்தானது இந்தப்பெரிய ஸ்தலத்திலே சிவலிங்ககுருந்தாகி முளைத்து எழுந்தருளி இருந்தது என்றான் கலியுகராமபாண்டியன்

குலவுந்தா ரிந்திரர்க ளுலகந்தா பரித்தொருசெங்
கோன டாத்து
நலம்வந்த தெனத்தனது கிளைகளுமந் திரிகளுந்தா
னைகளுஞ் சூழ
வலம்வந்தா னிறைவர்திருக் கோயிலுளெய் தினன்சனன
மரண பேதத்
தலமந்த குறைதவிர நீலிவனத் தலம்வந்தா
னடிகளை கண்டான் (24)

விடாத தரித்திரம பிடித்த பேர்கள் உலகத்திலே ஏக சக்ராதிபதியாய் ராஜ்யபரிபாலனம பண்ணும பாக்யம கிடைத்தால் எப்படி சந்தோஷப்படுவாரோ அப்படி சந்தோஷமடைந்து சுற்றத்தாரும், மந்திரிகளும் சேனாசமுத்திரமும் சூழத் திருவடைஞ்ஞீலியைப் பிரதிக்ஷணமாக வந்து பரமேசுவரன் கோவிலுக்குள் புகுந்தான் ஜனன மரணபேதத்தினாலே உழன்றகுறை தீருமபடி நீலிவனமென்னும ஸ்தலத்தில் வந்தெழுந்தருளிய பரமசிவன் பாதாரவிந்தங்களைக் கண்டான்

அண்டாதி பரும்பிறரு மதித்தாலுந் துதித்தாலு
மவர்கண் காணக்
கண்டாலுந் துயர்நீக்கி யருணீலி வனமருந்தைக்
கண்க ளார
வுண்டானீ ணெடுங்கண்மலைக் கண்டசருக் கரையுடனே
யுவட்டி டாதுட்
கொண்டான்பண் டிரசதத்தி லாடன்மா றியதுகண்ட
கூடன் மாறன் (25)

தேவேந்திரன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் மற்றுமுள்ள பேர்களும நினைத்தாலும ஸ்தோத்திரம் செய்தாலும கண்ணாரக்கண்டு தரிசித்தாலும் அவர்கள் துயரங்களைத் தவிர்த்தருளும நீலிவனமருந்தைக் கண்களார வுண்டான். உவட்டிடாத படிக்கு நீள் நெடுங்கண் படைத்த விசாலாக்ஷியம்மனாகிய கற்கண்டைச் சர்க்கரையுடனே கூட்டி உட்கொண்டான். முன்னாளிலே வெள்ளியம்பலத்தில் சொக்கநாதசுவாமி கால்மாறியிருப்பதைக் கண்ட கலியுக ராமபாண்டியன்

மடமயிலை யிமயமலை நீணெடுங்க ணுமையையமரர்

வழுத்து ஞானச்

சுடர்மணியை யகிலாண்ட மெலாமுதித்த தாணியைநெஞ்

சுருகிப் போற்றிப்

படவரவ வடிவொழித் திருந்திடுதாற பியனைரத்தினம்

பலத்து ளாடு

நடனதரி சனமுனியைத் தெரிசித்தான் றமிழ்ப்பாண்டி

நாடர் கோமான் (26)

மடமயிலை இமயபர்வத ராஜ குமாரியானவளை, நீள் நெடுங் கண் படைத்தவளை, தேவர்களெல்லாம வாழ்த்தித் துதிக்கின்ற ஞானப் பிரகாச சிரோமணியானவளை, அகிலாண்டங்களை யெல்லாம உண்டாககின தேவியை, மனங்களியும்படி துதித்துப பாதார விந்தங்களிலே வணங்கி விஷம பொருந்திய சர்ப ரூபத்தை யொழித்து ரிஷிரூபமாக வந்தருளிய தாற்பிய மகாரிஷியையும் ரத்ன சபையிலே நடன தரிசனமபெற்ற வசிஷ்ட ரிஷியையும தரிசனம் பண்ணினான், முதிர்ந்த தமிழ்விளங்கிய பாண்டிய நாட்டுக் கதிபதியான கலியுக ராம பாண்டியராஜன்.

கதுவுதுன்பப் பிணிதவிர்த்த நீலிவனத் தமுதை முக்கட்

கனியை ஞான

மதுரநறுந் தேனைவிட்டுப் பிரிந்துகணார் தரித்திருக்க

மனதெ ழாமற்

பதுமமலர்ப் பதநடன மிடுரசித சபையும்ரத்னம்

பலமு மான

பொதுவிரண்டும் பொதுவாகக் கண்டிருக்க நினைத்தானப்

போது தானே (27)

துன்பந்தருவதான பிணியைத் தீர்த்தருளிய நீலிவன அமிர்தத்தை, திருநேத்திரம்படைத்த கனியை, ஞானருந்தப் பொருந்திய ருசியான தேனாகிய விசா

லாக்ஷியமமான அனேகக்ஷணமாகிலும் விட்டுப் பிரிந்திருக்க மனமெழாமல் தாமரைக் கமலம்போன்ற பாதத்தினாலே மாறியாடின வெள்ளியம்பலமாகிய மதுரையும் ரதனமபலமாகிய திருப்பைஞ்ஞீலியும் இந்த இரண்டு அம்பலமும் சரியாகப் பாவித்து நினைத்தானபபோது.

ஆண்டகைபைஞ் ஞீலிவளம் பதியினுக்குத் தெக்கணத்தி
லடுதத கீழ்பாற
பாண்டியபுரி யெனவொருபட டினமுடித்தா னதிகதமிழ்ப்
பாண்டி நாடு
நீண்டசெக தலஙகளும்வந் தடிதொழுநட் புடன் பிரியா
நிலையாய் நேயம்
பூண்டகுலோத் துங்கனுறந் தையிலிருந்துப வரப்புவனி
புரந்தா னன்றே (28)

பரமசிவன் வாசமாகிய திருபபைஞ்ஞீலிக்குத தென் பாரிசமாகப பாண்டியபுரமென்று ஒரு பட்டணமுண்டாக்கி, தமிழ் பொருந்திய பாண்டிய வள நாடும மற்றும விஸ்தாரமாகிய செகதலமும் வந்து வணஙகுமபடி ராஜரீகம செலுத்தினை பிரியா நேயமபூண்ட கலியுக ராமபாணடியன் குலோததுங்கச் சோழ ராஜன் உறையூர் என்னும பட்டணததி லிருநது அனுதினமும வந்து கணடு கொண்டு போவான்

தடந்திகழுபாண் டியபுரிதனெதன் புறதமேதகா!விரிதனக்குத
தரத்தே வீற
கடம்பவன நாதனென வமைத்துலிங்க!நாயகவைக்
கயற்கண மாதி
னுடன்பரவு பூசனையை முடித்தானுத் தரமதுரை
யுடையா ரென்று
னிடந்தனையுத் தரமதுரை யென்பார்மங் களநாத
ரெனவுஞ் சொல்வார் (29)

தாமரைத தடாகம சூழ்நத பாண்டிபுரத்துககுத் தெற்கே காவேரிக்கடுத்த வடபாரிசததில் கடமபவன நாதரென்றும அவருடன் அங்கயற் கண்ணமமையென்றும சிவபெருமானையும் சக்தியையும் பிரதிஷ்டைசெய்து பூஜையை நிறைவேற்றினன். அபபடி கலியுக ராமபாண்டியன் உண்டாக்கின ஸதலத்தை வடமதுரை எனறும அதில் வாஸமான சிவனை வடமதுரை நாதரென்றும பூலோகததாரெலலாம சொலலுவாாகள; பின்னும மஙகள நாதரெனறும் எடுத்துச் சொல்லுவார்கள்.

வேதபுரா ணாகமங்கண் முகங்களெங்கும் புகழ்ந்துசொல் லும்
விதியை நாடி
மீதறுபத் தொருநாலு சதுரயுகங்,கண்டதென்ற
மேன்மை யாலே
மாதுதிக ழிடப்பாக ரடற்சூலக் கரத்தரருள்
வளர்பைஞ் ஞீலி
சோதிரட்டைக் கோபுரமொன் றெடுத்தான்றன் பெயர்சூட்டித்
தொடுத்தான் மாறன் (30)

வேதாகம புராண ஸங்கிதைகளெல்லாம புகழ்ந்து சொல்லும விதியை நாடி மஙகையோர பஙகஞகிய பரமனின் அருள் வளரும் திருபைஞ்ஞீலி அறு பத்து நான்கு சதுரயுகம கண்டிருக்குமென்று சொல்லுகின்ற மகத்துவத்தை யறிநது அநத ஸ்தலததிலே இரட்டைக கோபுரம தன் பெயர் விளங்குமபடி கட்டினன் கலியுகராமபாண்டியன்.

மாதிரத்தை யளாவுகலி யுகராமன் கோபுரமு
மதிலு மூவர்
சோதிமணி மண்டபமுந் திருமடபபள் ளியுங்கமலை
தூர்க்கை வேலோன்
நீதிவசிட் டேசுரர்தாற் பியநாதர்க் குறையுளுநன்
னியதி மேவு
மூதுலகம் புகழுமகிழ் வொடுதபன மண்டபமு
முடிப்பித் தானே (31)

மேகமண்டலத்தை அளவும உன்னதமான கோபுரமும் சுற்றுமதிலும திரு மூர்த்திகள் வாஸமாய எழுநதருளி யிருபபதற்கு நவரத்னப பிரகாசம பொருந் திய மண்டபங்களும திருமட பபள்ளிகளும் லட்சுமி தூர்க்கை சுப்பிரமணியர் இவர்களுக்கான கோவிலும் வசிஷ்டா தாற்பியர் முதலாகிய ரிஷீசுவரர் வஸிக் கத்தகக பன்னசாலைகளும லோகமெல்லாம புகழும்படி ஜபதப மண்டபமு முண்டாக்கினன் கலியுகராமபாண்டியன்.

ஆலயங்கள் புதுக்கிமணித் தேர்திருநாள்,விதிப்படியுண்
டாக்கிச் செய்தான்
சோலைபல வாவியுயர் மாடநெடு வீதிபல
துலங்கக் கண்டான்

சாலைகள் வைத் தனனதிக ராச்சியந்தந் தனனிறைவர்
தமக்குச் சாத்து
மாலைகள்பூ டணந்தரித்தான் மேலையிலும பதவிபெற்றான்
வைகை நாடன் (32)

இந்தபபிரகாரம மண்டபஙகளெல்லாம புதுக்கிப பிரதிஷ்டை செயததின் பிறகு பக்ஷங்களில் நடககிற திருநாளும மாதநதோறும நடககிற திருநாளும வருஷநதோறும் நடக்கிற திருநாளுய ஆகமஙகளில சொனன பிரகாரம தவறாமல் நடத்தி வைத்துப பின்னுமநேக சோலைகளும பலபல விதமான தடாகங்களும உன்னதமாக உபபரிகைகளுடனே கூடின பல வீதிகளும பிரகாசிககுமபடி செயவித்து அதிலே அநேக அன்ன சததிரசாலைகளு முண்டாககித தனககு அதிக ராஜயம் அரசாளததந்த சிவன் முதலாகிய தேவாகளுககுத திரு ஆபரணங்களும் அணிவித்தான் இபபடிப பணிவிடை செயத மகுததவததினாலே அநேக நாளிருந்து ராஜய பரிபாலனம செயது முடிவிலே மேலான பதவியை யடைந்தான் வைகை நாட்டிற்கு அதிபதியான கலியுக ராமபாண்டியன்

வரிப்படுகட் செவியாக நகுடனைபபாத நதோகதிக்குண்
மடுத்து மீளா
திருத்திடுமெய்த் தவததின்மகத துவததனகத்தியமுனிவ
னியல்ப தான
சரிததிரமென் றினியகலி யுகராம பாண்டியன்செய்
தகைமை கூறும
விரித்துரைகேட் டனன்குடந்தா புரித்துரைசந் திராபீட
வேந்தன் றானே (33)

முன்னாளிலே சாபபமாய அதோகதிசேருமபடி நகுடனுககுச சாபமதநத தபோமகிமை படைத்த அகஸதிய ரிஷியானவா இங்ஙிதமான கலியுக ராம பாண்டியன் செய்த பணிவிடை இதுவென்று இன்பததுடனே விரித்துத திருவுளம் பற்றினதைச் சந்தோஷததுடனே கேட்டான் குடந்தை என்னும பெயர் படைத்த கும்பகோணமெனனும பட்டணததுககு அதிபதியான சந்திர பீடசோழராஜன்

தாளாற்றெண் டிரைசுவறப பணித்தகலி யுகராமன்
சரிதை சொன்னான்
நாளாச்சு தறியாம னேரமாச் செனமுனிவன்
னவரை யேவ

லாளாச்சொ லடற்போகி விடப்போகி யாகவிண்விட்
டகலப் போக்கி
மீளாத வழியாக்கி நகுடனைப்பண் டதோகதியில்
வீழ்த்தி னானே (34)

வேலாயுதத்தினுடைய பாதத்தினாலே சமுத்திரம் சுவறும்படி செய்த கலியுக ராமபாண்டியன் சரிதை இதுவென்று திருவுளம பற்றினர். நகுஷராஜன் தான் இந்திர பட்டமான்கிற நான் சென்றுபின்னிட்டுப போனதை அறியாமல் இந்திராணி யிடத்திலே போவதற் கெண்ணி சோமாயிற்று அதிசீக்கிரமாகப போவீரகளென்று சபதரிஷிகளையும் ஏவ, அந்த ராஜனை விஷமபொருந்திய சர்ப்பமாய் மறுபடி மீளாமல் அதோகதிசேரும்படி சுடுஞ்சாபம் கொடுத்தருளிய அகஸ்திய ரிஷி

---

## பதினெட்டாவது—முசுகுந்தசோழன் பூஜையின் மகிமை

சீலமொடு சிவன்சமுகத தெய்திமெய்யி னிடர்கெடசசார்ந்
தெய்தொ ணாத
மேலையிரும் பதவிபெற்ற வழுதியியல் மொழியவுள்ளம்
வியந்து கேட்டுச
சூலதர னுறைகுடந்தை மேவியசந் திரபீடன்
சொல்வா யின்னும
நீலிவன மகிமை யென்ன ஞாலமெலலாம புகழ்முனிவ
னிகழ்த்து கின்றான் (1)

சீலமுடன் சிவனுடைய சமுகத்திலே வநது தன்னுடைய சரீர துன்பம தவிர்ந்து பெறுவதற்கரிதாகிய மேலான பதவி பெற்ற கலியுக ராமபாண்டியன் சரித்திரம் சொல்ல மனதிலே அதிக சந்தோஷமாகக் கேட்டுப பின்னும சூலபாணியாகிய பரமசிவன் வசிக்கும கும்பகோணத்துச் சந்திரபீட சோழ ராஜன் இன்னும் நீலிவனத்தினுடைய மகத்துவங்களை, சுவாமி திருவுளம்பற்றவேண்டு மென்று கேட்க லோகங்களெல்லாம புகழும அகஸதியா திருவுளம் பற்றுவார்.

அந்தரவா னுலகினிற்சென் றிந்திரன்பூ சனையைமகிழ்ந்
தமர்ந்த நீல
கந்தரனை வீதிவிடங் கனைக்கமலா லயத்தில் வரக்
கண்ட சீரோன்

சந்தமலை ரயன்றனைத்தி லொருதினம்வா ளுளபடைத்துத
    தரணி யாண்டோன்
கொந்தலர்பூந் தொடையணிசந் தனப்புயமந் தரத்துமுசு
    குந்தச சோழன் (2)

தெய்வ லோகத்துக்குப் போய்த் தேவேந்திரனிடத்திலே பூஜையை யேற்றுக்கொண்ட கதைக் கண்டனை வீதி விடங்கனாகிய தியாகராஜனை பூலோகத்திலே கமலாலயமான திருவாரூரிலே எழுந்தருளும்படி செய்வித்தவனும் வாசனை பொருந்திய தாமரை மலர் வாசியான பிரம்ம தேவனுடைய ஆயுள் நாளிலே ஒரு நாள் தனக்கு ஆயுளாயடைந்து பூலோக மெல்லாம் ஒரு குடையின் கீழே ஆண்டவனும் அலர்ந்த ஆத்திமலர் மாலை தரித்த மந்தரகிரி பர்வதம்போன்ற புஜம் படைத்தவனுமாகிய முசுகுந்த சோழராஜனை

தான்முசுவாய முனமிருந்த கயிலைமலை யதுகாணுந்
    தன்மை நாடி
வான்முகடுற நிடுமிமய வரைகடந்தான் மேருகிரி
    மருங்கிற சார்ந்தான்
நான்முனிவர் வணங்குசிவ கணங்களகணமடு தடுத்தனாக
    ஞூறு கோடி
கூன்முகிலொத் திடித்தகுர லுடையாதிக் கெழுவரைபோற்
    மேருனை நின்றோர (3)

தான் முன்னாளிலே முசுரூபம் படைத்து வாசமாயிருந்த வடகைலாசத்தைக் காண எண்ணி ஆகாசத்தளத்தை முட்டுருவிப் பரவியிருக்கின்ற இமோத பர்வதத்தைக் கடந்து மகாமேருகிரிக்குச் சமீபமாகப் போனான். அப்போது ஞானம் பொருந்திய முனீசுவரர் வணங்கும் சிவகணங்கள் கூலங்கொண்ட மேகங்கள் எழுந்து இடி இடித்தாற்போலும் அதிர்ந்த சப்தத்துடனே எங்கும் நெருங்கித் தென்றிசை விட்டு மற்ற ஏழு திசையிலும் தோன்றின பர்வதங்கள்போலும் சூழ்ந்து நின்று தடுத்தார்கள்.

ஆனுயாத்தார் தமதுதிரு வருளிப்பா டிலாமலவிடோ
    மகல்வா யென்ன
மானிடருக் கெளிதலவே கயிலைமலை காணவென்று
    மனத்துட் கொண்டான்
பானுவலம் வருமேரு வதனருகே தவமுடித்தான்
    பவள வேணி

வானவனன் புடன்வெளிவந் தந்தமுசு குந்தனுக்கோர்
வசனஞ் சொல்வான் (4)

ரிஷபக் கொடியுடைய பரமசிவன் உத்தரவில்லாமல் நாங்கள் உன்னை விடமுடியாது; இவடம் விட்டுப்போ என்று சிவகணங்கள் சொன்னவளவில் பூலோக மனிதருக்கு வட கைலாசம் காண்பது எளிதல்லவென்று முசுகுந்த சோழராஜன் எண்ணிச் சூரிய பகவான் வலம் வருகின்ற மகமேருகிரியிலே யிருந்து அரிய தபசு செய்தான் அப்போது பவளநிறம்போன்ற ஜடாதாரான பரமசிவன் எழுந்தருளி வந்து அந்த முசுகுந்த சோழனுக்கு ஒரு வசனம் கூறு வார்.

மிக்கபரி வுடனெமது திருவிருப்பெ லாமிறைஞ்சி
வேதம் போற்று
முக்கியஞ்சேர்ந் துயர்திருப்பைஞ் ஞீலிவணங் காதகுறை
முதிர்ச்சி யாலே
யிக்கணங்க ளுனைத்தடுத்தார் மலரயன்விண் ணோர்களுமற
றெவரும் போற்றத்
தக்கவருந் தென்கயிலை சேராதார் வடகயிலை
சாரா தாரே (5)

மிகுந்த பரிவுடனே நம்முடைய விருப்பங்களை யெல்லாம் துதிசெய்கின்ற வேதங்கள் போற்றும் உயர்ந்த திருப்பைஞ்ஞீலியை வணங்காத தவக்குறையி னாலே இந்தச் சிவகணங்கள் உன்னைத் தடுத்தார்கள் தாமரைமலர் வாஸனான பிரமதேவன் முதலாகிய தேவர்களும் போற்றுகிறதற்கு ஏதுவான தென்கைலாச மான திருப்பைஞ்ஞீலியைக் கண்டு தரிசியாத பேர்கள் வடகைலாசம் காண மாட்டார்களென்று கைலாச வாசரான பரமசிவன் முசுகுந்த சோழராஜனுக்குத் திருவுளம்பற்றினா

பார்த்திபனே சுவேதகிரி வளர்திருப்பைஞ் ஞீலிவளம்
பதியின் மேவி
வாய்த்தலிங்க பூசனைக ளியற்றியன்ன தானமிட்டு
மகர பூசம்
போற்றிநமன் வணங்கியதெக் கணகயிலைக் காட்சிகண்டு
புனித ளுகிச்
சாற்றரிய விமானமிசை யிவர்ந்துவட கயிலைவந்து
சார்வா யென்றா (6)

முசுகுந்த சோழராஜனே கேளாய்; முத்தமலையாய வளாகந் திருபபைஞ் ஞீலியிலே எழுந்தருளியிருக்கிற சிவலிங்கத்தைப் பூஜைசெய்து அன்னதானம் செய்து தைமாதம் பூச நக்ஷத்திரம் கூடிய தினத்திலே யமதன்மன் வந்து வணங்கிய தக்ஷிண கைலாச தரிசனங்கண்டு சுத்தஞ்ச சொல்லுதற்கரிதாகிய விமானத்தின் பேரில் வடகைலாசத்துக்கு வருவாயென்று திருவுளம் பற்றினர்

அண்ணலுரைப் படிஞீலி வனப்புடைசூழ் தாளகிரி
யருகு சார்ந்து
கண்ணுதலை நீடுமொடுநெகண் மதிநுதலை யடிவணங்கிக்
கனிவு கூர
வெண்ணுறசீர் வருணதிக்கின் முசுகுந்தச் சோழபுர
மென வுண்டாக்கி
விண்ணுறைகோப் பூசைசெய்த கோமங்கை நாதரடி
வியந்து போற்றி (7)

இந்தபடி கைலங்கிரி வாஸரான பரமசிவன் திருவுளம் பற்ற அந்தப் பிரகாரம் ஞீலிவனம் சூழ்ந்த முத்துமலை மருகே வந்து நெற்றிக்கண் படைத்த சிவனையும் மூன்றும் பிறைபோன்ற நெற்றியினையுடைய நீள் நெடுங் கண்ணை மலையும் கண்டு பூஜை செய்து வணங்கி மனதுகனிவாகி அந்த ஸ்தலத்துக்கு மேற்காக முசுகுந்த சோழபுரமென்று ஒரு பட்டணமுண்டாக்கி அதிலிருந்து தெய்வலோகத்துக் காமதேனு பூஜைசெய்த கோமங்கலத்தில் பசுபதீசுவரன் பாதத்திலே சந்தோஷத்துடனே பணிந்தமன்னன்.

பஞ்சநதிப் புனலாடி நீறணிந்து கண்டிகையா
பரணம் பூண்டு
மஞ்சனமார்மலர்கொடுகோ மங்கைலிங்க நாயகரை
வழிபட டேத்தி
வஞ்சவினை தவிர்த்தானை ஞீலிவனத் தரனையுமை
வாமத் தானை
யஞ்சனமார் மிடற்றானை நெஞ்சுருகிப் பூசைசெய்தா
னபயர் கோமான் (8)

பஞ்சநதியாகிய ஐயாற்றிலே தீர்த்தமாடி விபூதிருத்திராக்ஷங்களைத்தானே பூஷணமாக சரீரத்திலே யணிந்து திவ்யமான திருமஞ்சனப புஷ்பங்களைக் கையிலேயே எடுத்துக்கொண்டுவந்து கோமங்கை லிங்கமாகிய பசுபதீச்வரனைப பூஜைசெய்து பொல்லாத வஞ்சகமாகிய தீவினைகளெல்லாம நீக்கும் ஞீலிவன

வாசனை, பார்வதியை இடது பாகத்திலே உடையவனை, மைபோன்ற நிறம் படைத்த திருநீலகண்டனை மனமிளகி கனிவாகும்படி பூஜை செய்தான சோழராஜன்.

உணர்ந்தடுத்துந் தனைப்பரவி வணங்கிவழி படாதடியே
னுடைய பொல்லாக்
குணந்தடுக்கத் தடைப்பட்டே னதலினுன் வடிவினொடு
குணங்கள் வாய்த்த
கணந்தடுத்தா ரெனைத்தடுத்தாட் கொண்டவனே வண்டுலவு
கடுக்கைத் தாம
மணந்தடுத்த சடையாயென் னுடையாய்நீ யெனைத்தடுக்க
வழக்கொன் றுண்டோ (9)

தென் கைலாசமென்று அறிந்திருந்தும் பக்கத்திலே உறையூர் என்னும் பட்டணத்திலே யடுத்து வாஸமாயிருந்தும் உன்னிடத்திலே வந்து பூஜித்து வணங்கி வழிபாடு செய்யாமல் அடியேனுடைய பொல்லாத குணமானது தடுத்தபடியினாலே உன்னுடைய ரூபத்துடன் குணங்களும் படைத்த சிவ கணங்கள்வந்து என்னைத் தடுத்தார்கள் என்னைத் தடுத்தாட்கொண்டவனே வண்டுகளுலவும் கொன்றைமாலை வாசம் பொருந்திய ஜடாதரனே, எனக் குடையவனே இனிமேலும் என்னைத் தடுப்பதற்கு விவகாரமுண்டோவென்று சொல்லி ஸ்தோத்திரம் பண்ணினான்

இன்னதா கியதுதிகொண் டுமையையிம யலைப்பணிந்தா
னிறைவ னாமுனை
சொன்னதா னமதடைந்த நிருபன்முசு குந்தன்மிக்க
சொன்ன தான
மின்னதா னமெனுந் கொடுத்துவந்து பகிர்ந்தான்மற்
றெல்லா நல்லோர்க்
கன்னதா னமுமினிய சுவையாறி னுடன்பசிநோ
யாறத் தானே (10)

இப்படிப்பட்ட ஸ்தோத்திரங்களைச் செய்து பார்வதி பரமேச்வரனை வணங்கித் தான் வட கைலாசத்துக்குப் போகையில் கைலாசவாசரானவர் எதிரே வந்து திருவுளம் பற்றின ஸ்தானமாகிய தென் கைலாசமான திருப்பைஞ்ஞீலியிலே முசுகுந்த சோழராஜன் வியந்து சொல்லப்பட்ட தானங்களிலே இவ்வளவென்று நிச்சயித்துச் சொல்லுவதற்கரிதான மகா தானங்

களை வந்தபேருக்கெல்லாம் கையினாலே அனுதினமும் கொடுத்துச் சந்தோஷ மடைந்து பின்னும் கொடுப்பான். சகல சாஸ்திரங்களையுமறிந்த பெரியோர் களுக்கெல்லாம் அன்னங்களுடனே கூடின அறுசுவை பதார்த்தங்களும் பசி என்கிற வியாதி தீரும்படி செய்வித்தான்.

வானமெலாந் துதித்தபுகழ் முசுகுந்த நராதிபதி
மறைநூல் சொன்ன
தானமெலாஞ் செலுத்தியன்ன தானமிடுஞ் சத்திரத்தே
சமைத் துண்டான
போனமெலாஞ் செலவுசெய்து நிருபாதி யாகியபிற்
போதில் வந்தான்
ஞானமெல்லாம் வடிவுகொண்ட ஞானகலா நிதியெனச்சொ
லுமத் தோனே (11)

தெய்வலோக மெல்லாம விஸ்தாரமான கீர்த்திபடைத்த முசுகுந்த சோழ ராஜனவன் முன்னால் சொன்ன பிரகாரம் தவறாமல் தானங்களெல்லாம எற் கச்செய்து பின்பு அன்ன சத்திரத்திலே வந்து சமயல் பண்ணிய அன்னத்தை யெல்லாம் வந்த பெரியோர்களுக்கிட்டுச் செலவு செய்து அர்த்தராத்திரியாகும போது ஞானங்களெல்லாம் ஒன்று கூடி ஏக வடிவு கொண்டதென்று சொல் லுமபடியான ஞானகலாநிதி என்னும பெயர் படைத்த பெரியவர் ஒருவர் அந்த அன்ன சத்திரத்துக்கு வந்தார

மயில்வாமத் துறைதிருப்பைஞ் ஞீலிவளம் பதியான்சீர்
வளஞ்சொல் வாரும்
வெயில்வாழ்வச் சிரப்புயமன் னவன்றருபுண் ணியபாலன்கள்
வியந்து கூறிப்
பயில்வாரு முதுகறி யபூபமெலா முண்டுநிறை
பண்டி தாங்கித்
துயில்வாரு மானதந்த வேலையன்ன சாலைமலி
தோற்றந் தானே (12)

ஞானகலாநிதி வரும்போது அந்தத் திருப்பைஞ்ஞீலி அன்ன சத்திர சாலை எப்படி யிருந்ததென்றால், மயில் சாயலையொத்த பார்வதி தேவியிடமாக வந்த ஸ்தலமான திருப்பைஞ்ஞீலியினுடைய மகத்துவங்களையும அதில் எழுந் தருளின சிவபெருமானுடைய கீர்த்திகளையும சொல்லிப பிரசங்கம் பண்ணு வோர்கள் சிலபேர். வஜ்ரபர்வதம்போன்ற புஜத்தையுடைய முசுகுந்த சோழன்

அன்னதானம் கொடுக்கின்ற புண்ணிய பலத்தை முக்கியமாய்ச் சொல்லிக் கொண்டாடுகிறார்கள் சிலபேர். அன்னம் முதல் அறுசுவை பதார்த்த வகைக ளெல்லாம் வயிறு நிறைய உண்டு ஆயாசத்தினாலே இருக்கக்கூடாமல் தொந்தி யைத் தாங்கிக்கொண்டு நித்திரை பண்ணுகிறார்கள் சிலபேர்.

போந்தார்க ளதிதியர்க ளெனக்கேட்டி லடிவணங்கிப்
பொசித்த லன்பா
யீந்தார்க ளிடம்புகிப்போர் நாந்தாமென் றுருக்காட்டி
யிரப்பார்க் கன்பன்
தேந்தாமப் புயசயில மன்னனன்ன சாலையின்வீ ற
திருப்போ ரெல்லாந்
தாந்தாமிச் சையிற்றுயின்றார் தமது நிட்டை தனிலிருந்தார்
தவத்தோ ரெல்லாம் (13)

அதிதிகள் வந்து புகுந்தாரகளென்று கேட்ட மாத்திரத்திலே பாதம பணிந்து அன்ன முதலாகிய தானங்களைக் கொடுக்கிற போகளிடத்திலே புசிப பவர் நாமதானென்று ரூபமெடுத்து வருகின்ற ஏழைகளின்பேரில் நீங்காத தயவுவைத்தவனாகிய பர்வதம் போன்ற புஜம்படைத்த முசுகுந்தசோழ ராஜன முதல் மற்றும அவனுடைய அன்ன சத்திரசாலையில் வஸிக்கிற பேர்களும அவரவர்கள் இச்சைபபடியே நித்திரை பண்ணினார்கள் தவஞானியாகிய பெரியோர்கள் நிஷ்டையிலிருநதார்கள்.

தேகததா லடைந்ததுக்க சுகந்தமக்கின் றெனச்சிவன்பாற்
செலுத்துந் தூய
யோகத்தா லுயர்ஞான கலாநிதிமா தவன்பசிக்கன்
றுணவி லாத
தாகத்தான் மெலிவைரத்னம் பலத்தரறிந் தனர்சுமுக
சமுக நாக
ரீகத்தான் முசுகுந்தன் வயிற்றில்வெப்பு நோய்வலிவந்
தெழுந்த தன்றே (14)

தேகத்தை யடைநது அனுபவிக்கின்ற சுகதுக்கங்கள் தமகின்று என் றெண்ணி ஈசுவரப்பிரீதியென்று செலுத்துகின்ற தூய யோகத்தினாலே உயாந்த ஞானகலாநிதி என்னும் பெரியவர் பசிக்கு அன்றைக்கு ஆகாரமில்லா மல் தாகசோகத்தினாலே மெலிந்ததை இரத்னசபாபதியானவர் அறிந்தார் ஆகையினாலே சுமுகமும் நாகரிகமுமுடைய முசுகுந்த சோழராஜன் வயிற்றில் வெப்புநோய் வலி வந்தது.

பாதியிராத திரியுதர வேதனையாற் பொருதுமன்னன்
படும்பா டுற்ற
சேதியராத் திரிவணங்க னுழைந்துசென்ற வசிட்டருக்குஞ்
சிறப்பின் மிக்க
வேதியராச சிரமமெங்கும் புகன்றிடக்கேட் டெழுந்தனர்மெய்
மேல்வி பூதிச்
சோதியராய்த் தவகணங்க ளடைந்துமுசு குந்தனுறை
சூழல் சேர்ந்தார் (15)

அர்த்தராத்திரியிலே வயிற்றுவலி வேதனையினாலே ராஜன் அவதிப்படு வதை அறிந்த ஆதிசேஷராகிய சாற்பிய ரிஷியானவர், அந்த அர்த்தராத்திரி யில் தாமே வசிஷ்டர் முதலாகிய சிறப்பிலே மிகுந்த ரிஷிகள் வசிக்கும் ஆச்சிர மங்களெல்லாம சென்று சொல்ல, அவாகள் அதி சீக்கிரமாய எழுந்திருநது விபூதி துளிதப பிரகாச மேனியுடன் முசுகுநத சோழராஜன் வசிககுமிடத திக்கு வநதாாகள்.

இதரமா னிடர்க்குநிக ரலாதமுசு குந்தமன்ன
னிடைந்து சோர
வுதரவே தனைநலிந்த காரணத்தை யிதுவெனத்தேர்ந்
துரைப்பீ ரென்ன
வதிகமா தவஞான கலாநிதிவெம் பசிதனைமுத
தசல மேவு
மதிநுதல்பங் கினரறிந்த வதனாலிவந் துளதெனவே
வசிட்டன் சொன்னன் (16)

இந்தப பூலோகத்தில் மற்ற மானிடருககு நிகரில்லாத ரூபமெடுத்த முசுகுந்த சோழன், வயிற்று வலியால் நொநது தளர்ச்சியடைவதற்குக காரணம என்னவென்று நன்றாயப பாாதது சொல்லீரென்று கேட்குமபோது அதிக மாதவம்படைத்த ஞானகலாநிதி பசித்திருககிறதைத முத்தமலை வாசரான பிறைபோன்ற நெற்றியை யுடைய பாாவதிபங்காளன அறிந்ததினாலே, இநதத துன்பம் வந்ததென்று வசிஷ்டர் சொன்னா.

கவிகைமன்ன னிதுகேட்ட போதில்வசிட டாதிமுனி
கணமுந் தானுந்
தவமுனிவர் பரவியமெய்ஞ் ஞானகலா நிதியிருக்குந்
தலத்தே வந்தா

னுவகையொடு முனிவரைக்கண் டெதிர்கொண்டா னிதிகண்டா
ரொத்தான் வெற்றிப்
புவனிமன்ன னடிவணங்க மகிழ்ச்சியொடா சிகள்பலவும்
புகன்று னன்றே (17)

பூலோகமெல்லாம் ஒருகுடையிலே ஆளும் முசுகுந்த சோழராஜன், இந்தப்பிரகாரம் வசிஷ்டர் சொல்லக்கேட்டவுடனே வசிஷ்டர் முதலாகிய ரிஷிகளுடன் தவஞானிகளெல்லாம் வணங்குகின்ற மெய்ஞ்ஞானம பொருந்திய கலாநிதியிருக்கிற ஸ்தானத்திற்குச் சந்தோஷத்துடனே வந்து கண்டு வறிஞன் யதேச்சையாய்ப போகிற வழியிலே திரவியம் கண்டெடுத்தால் என்ன சந்தோஷமடைவனே அந்தபபடி சநதோஷ மடைந்து, ஸ்தோத்திரம் செய்து நமஸ்காரம் பண்ணினான். மகிழ்ச்சியடைந்து பலவிதமாகிய ஆசீர்வாதம் செய்தார், ஞானகலாநிதி.

நிசிக்குள்வரு முனதுசெய லறியாது சனமிருக்க
நீயும் போதப்
பசித்துவா டியதைரத்னம் பலத்தர்திரு வுளமறிந்த
பான்மை யாலே
முசிக்கவே தனையுதரத் தடைந்ததுவேந் தனுக்கரனார்
முனிவு தீரப்
புசித்துமீண் டெமைநிருபன் றனையிரட்சி யெனக்கமலன்
புதல்வன் சொன்னான் (18)

சுவாமி தேவரீர் அர்த்தராத்திரியில் எழுந்தருளிவந்தசெதி நாங்கள் அறியோம. சத்திரத்திலே அன்னமுமிருகக, நீ மிகுந்த பசியுடன் தளாவதை யறிந்த ரத்னம்பலவாணர் திருவுள்ளத்திலே கோபமடைந்தார். அதனாலே அரசன் வயிற்றில் வேதனை வந்தவடந்தது. தேவரீர் சிவ பெருமானுடைய கோபம் தீரும்படி போஜனம் செய்து இந்த ராஜனையும் எங்களையும் இரக்ஷிக்க வேண்டுமென்று வசிஷ்டர் சொன்னார்.

அவ்வுரைக்கு ஞானகலா நிதியிசைய முழுக்கிடுவித்
தாடை சாத்தி
செவ்வியசந் தனந்தரித்தா பரணமிட்டு மலர்மாலைச்
சேர்வை சூட்டி
வெவ்வமிலா வமுதுகறி யபூபநெய்பால் சருக்கரைதே
னிரதந் தேங்கி
வவ்வியபோ சனங்கொடுத்தர்க் கியமும்பாத் தியமாச
மனதி யீய்ந்து (19)

இந்த வார்த்தைக்கு நல்லதென்று மனமிசைந்த ஞானகலாநிதியை ஸ்நானம் செய்வித்து வஸ்திரங்களைத் தரிப்பித்து செவ்விய சந்தனங்களைப் பூசிப புஷ்பங்களையணிந்து நல்ல மலர்மாலை வரிசையாகச் சார்த்திக் குற்றமில்லாத அமுது கறி அறுசுவை பதார்த்தங்களுடனும் சர்க்கரை தேன், கல்கண்டு, கனிகள் முதலியவைகளுடன் போஜனம் செய்வித்து அர்க்கியம் பாத்தியம் ஆசமன முதலாகிய உபசாரங்களைச் செய்து

பாகொடுவெள் ளிலைதூப தீபமுத லியதுமனப்
பரிவாய் நலகிக்
கோகநகத் தயன்புகழ்சின் மயனேயென் பணிவிடையிற்
குறைகளேதுண்
டாகிலுநீ பொறுத்தருளென் றுபசரித்துத் துதித்துபல
ரடியிற் றாழ்ந்து
யோகதுரந் தரஞான கலாநிதிக்கற் புதமாக
வுவப்புச் செய்தான் (20)

தாம்பூலம் தூபதீபமுதலாகிய உபசாரங்களெல்லாம் பரிந்து கொடுத்துப் பின்பு தாமரை மலர் வாஸனான பிரமதேவர் புகழ்கின்ற சின்மய சொரூபனே அடியேன் பணிவிடைகளிலே ஏதேனும் குற்றமுண்டானாலும் பொறுத்தருள வேண்டுமென்று உபசாரங்கள் சொல்லி நமஸ்காரம் செய்து பயபக்தியுடனே சிவயோக துரந்தரரான ஞானகலாநிதியானவர் ஆச்சரியமான சந்தோஷமடையும்படி செய்வித்தான் முசுகுந்த சோழராஜன்

காதனிறை மனத்தினுட னதிகவழி பாடுசெய்து
கமலம் போன்ற
பாதமிறைஞ் சியவளவர் கோத்திரசிந் தாமணியைப்
பரிந்து நோக்கி
நாதர்திரு வுளக்குறைதீர்ந் திடாகன்றி வேறுமொரு
நவைவாராது
மேதகுபுண் ணியநடத்தி,நெடுங்கால் மிருத்தியென்றான்
விமல யோகி (21)

பரிபூர்ணமான ஆசையுடன் வழிபாடுசெய்து தாமரை மலர்போன்ற பாதத்தை வணங்கின சோழராஜ கோத்திர சிந்தாமணியாகிய முசுகுந்த சோழராஜனைப் பார்த்துப் பரமேசுவரன் திருவுள்ளத்திலே உன்பேரில் குறைவைத்தது தீர்ந்து போகும். வேறு ஒரு குற்றமுமணுகாது. மேன்மையான இந்த அன்னதான புண்ணியத்தை நடத்திக்கொண்டு அநேககாலம் இருப்பாயென்று சிவரூபமான ஞானகலாநிதி திருவுளம் பற்றினார்.

அம்முனிவ னருளடைந்து தம்முடைய பரமகுரு
வடிகள் போற்றி
வெம்மைதவிர் முனிவர்பதாம் புயம்பணிந்து வீற்றிருந்தான்
வேந்தர் கோமான்
இம்முறையி னிப்போது கழிந்தனர்வை கறையமையத
தினிமை கூர
மம்மரகன் றிடுதனது மரபினனை யணைவான்போல
வந்தான் வெயயோன் (22)

அப்படித் திருவுளம்பற்றின ஞானகலாநிதியினுடைய கிருபாகடாக்ஷங்களைப் பெற்று தமக்குப பரம ஆசாரியராகிய வசிஷ்டா பாதத்திலே பணிந்து பின்னும் கோபம் நீங்கிப பொறுமை படைத்திருக்கின்ற மற்ற ரிஷிகளுடைய பாதங்களிலே பணிந்து வீற்றிருந்தான் சோழராஜன். இந்தப்பிரகாரம் அர்த்த ராத்திரி சென்றது பிறகு விடியற்காலசமயத்திலே துன்பம் நீங்கப்பெற்ற தன் குலத்தோன்றலாகிய அரசனைக் கண்டு அணைந்துகொள்ள வருவதுபோல் சூரியன் உதயமானான்.

இயற்றுபூ சனைமுடித்த பொழுதோவந் தனைதொடுத்த
வெல்லை தானோ
வயர்ப்புமறப் பிலாமுனிபா லடைந்தபோ தோபயண
மான போதோ
துயர்ப்படா திருந்தமுசு குந்தநர பதிக்கதிக
துயரங் காட்டும்
வயிற்றினோ யகன்றபொழு திப்போதப் போதெனவே
வகுக்கும் போதே (23)

ஞானகலாநிதிக்குப பூஜை நிறைவேற்றும்போதோ உபசாரம் செய்யத் தொடுத்த சமயமோ அசதிமறதியில்லாமல் அந்த ரிஷியினிடத்திலே போன போதோ போகிறதற்குப பயணமானபோதோ விசனமற்றிருக்கின்ற முசுகுந்த சோழராஜனுக்கு அதிக துயரங்காட்டின வயிற்றுவலியானது நீங்கியதை ஆராய்ந்து பார்க்கும்பொழுது அந்தப்பொழுதோ இந்தப்பொழுதோ எந்தப பொழுதோ வென்று யாவரும் ஆச்சரியமாகச் சொல்லும்பொழுதோ

அண்டரள விடாதபுகழ்த் தண்டரள கிரிநாத
ரம்பொற் கோயின்
மண்டபகோ புரவாயிற் கொண்டதிருக் காப்புவகை
வகையே நீக்கி

யொண்டொடிபங் கினர்பூசைக் குரியசைவ வேதியரற்
புதத்த ராகிக்
கண்டதொரு புதுமைமகா மண்டலிகற குரைத்துமெனக்
கடிது சென்றே (24)

தேவர்களெல்லாம் அளவில்லாமற் புகழ்ந்து பேசிகொண்டாடுகின்ற முதுமலை நாதனுடைய பொற்பிரகாசம பொருந்திய கோவில் கோபுரம் மண்டபம வாசல்களெல்லாம திருக்காபபுக் கொண்டிருந்த வகையை ஒன்றொன்றுயத்திறந்து பார்வதி பாகனுடைய பூஜைக்குரிய சைவவேதியர் பார்க்கும்போது ஆச்சரியமான புதுமையைக் கண்டு மகா மண்டலேசுவரரான ராஜாவுக்குச சொல்லுவோமென்று அதிசீக்கிரமாகப போனார்கள்.

பார்த்தோமிப் புதுமையென ஞானகலா நிதியுநிறை
பரம யோகம்
வாய்த்தவசிட் டாதியருாம வளவர்குலா திபனுமணி
மன்றி லேகி
மூர்த்திகட்கா தாரகலா மூர்த்தியடி வணஙகிநின்றூர்
முதனு ளன்பாய்ப்
போற்றிமுனிக் கியறறுகந்த புட்பமணி கலனுகில்சம்
புவின்மேற் கண்டார் (25)

இபபடி ஆசசரியமாய ஒரு புதுமையைக் கண்ணினுலே கண்டோமென்று சைவ வேதியா சொல்ல, அதுகேட்ட ஞானகலாநிதியும நிறைநத பரமயோக பலிதரான வசிஷ்டா முதலாகிய ரிஷிகளும சோழராஜகுலாதிபதியான முசுகுநத சோழராஜனும் ரத்தின சபையிலேபோய மூாததிகளுக்கெல்லாம ஆதாரமானமூர்ததியான ரீவிவன நாதருடைய பாததகிலே வணஙகி நினறு முதல் நாள் அர்த்தராத்திரியிலே மகாதயவுடனே வணங்கி ஞானகலாநிதியாகிய முனிசுரருககு அணிந்த கந்தபுஷ்ப ஆபரணங்களெல்லாம சிவபெருமானுடைய திருமேனியில் விளஙகக் கண்டார்கள்.

ஈனமக னிவேதனமப் படிகுவிந்து தற்பரன்முன்
னிருபபக் கண்டார்
வானவர்மா லயன்முனிவர் யாவருமவ வமுதருந்தி
மகிழா நின்றூர்
பானுகம்ப வாணர்குட முழவொலித்தார் கின்னரர்பண்
பாடல் செய்தார்
ஞானகலா நிதிக்கும்ரத்ன சபாபதிக்கு மபேதமுற
நடந்த வாறே (26)

குற்றமில்லாத நிவேதனமும் இந்தப்பிரகாரம் சிவன்முன்னே குவிந்திருப்பதையும் கண்டு விஷ்ணு பிர்மா, ரிஷிகள் முதலிய யாவரும் அந்த நிவேதனம் புஜித்துச் சந்தோஷமானார்கள். இந்தச் சமயத்திலே பானுகம்ப வாணர் மத்தளவோசை செய்தனர். கின்னரர் பண்ணுடனே பாடினார்கள். ஞானகலாநிதிக்கும் ரத்னசபாபதியான சிவபெருமானுக்கும் பேதமில்லையென்பது இந்தப்பிரகாரம் விளங்கியது.

தாரணிபா தலமிசும்பெண் டிசைபுகழ மறைபுகழத
    தக்க தான

காரணமிங் கிதுகண்டார் சிர்திகழ்மா முனிவரும்பூங்
    கழற்கால் வேந்தும

பூரணிபங் குகந்தபரி பூரணசுந்த ரனையருள
    பொழிபைஞ் ஞீலி

யாரணிய விடங்கலிங்க நாயகனைத் துதித்தார்கொண்
    டாடி னார்கள் (27)

பாதாளலோகம், பூலோகம, தெய்வலோகம, எட்டுத்திசைகள் எங்கும புகழவும் வேதங்கள் புகழவும அதியாச்சரியமான காரணமிதுவென்று கண்ணினாலே கண்ட சிறப்புப்பொருந்திய முனிகளும பொற்பிரகாசம்போன்ற வீரகண்டாமணி தரித்த பாதனான ராஜனும், ஆனந்தபூரணியாகிய பார்வதி பாகமுகந்த பரிபூர்ண சுந்தரனை அருள்பொழியும் ஆரணியவிடங்கலிங்க நாயகனைத் துதித்துப புகழ்ந்து கொண்டாடினார்கள்.

நித்தரதி விருப்பகன்று மித்தைவியா பகமனைத்து
    நீக்கி நோக்கி

யத்துவிதங் கடந்தபர்மெய்ஞ் ஞானகலா நிதியைவசிட்
    டாதி யோரைத்

தத்தமிடத் தனுப்பிமணி மாளிகைசென் றணுகியன்ன
    தான வேள்வி

யெத்தினமு முடித்துலக முற்றுமடி தொழவிருந்தா
    னிலைகொள் வேலான் (28)

நித்தியரான பரமசிவனை விருப்பகன்று பிரபஞ்ச மாயைகளெல்லாம தவிர்ந்து பார்த்து அத்துவைதமான மந்திரபதவர்ணங்கள் தத்துவங்கள் பஞ்சகலைகளும்கடந்து ஒரு நிலைகண்ட. மெய்ஞ்ஞானகலாநிதியையும் வசிஷ்டர் முதலாகிய ரிஷிகளையும் அவரவர்கள் ஆச்சிரமத்துக்கு அனுப்பிவிட்டு நவரத்ன

பிரகாசம் பொருந்திய தன் அரண்மனைக்குப் போயிருந்து அன்னதான நியாகத்தை எந்நாளும் மறவாமல் செய்துமுடித்துக்கொண்டு உலகமுழுவதும் பணியும்படி யிருந்தான் வேலாயுதம படைத்த முசுகுந்த சோழராஜன்

புந்திமகிழ்ந் தியமனருச் சனைசெயவந் திடுமகர
பூச நாளி

லெந்தையார் மேவியதெக் கணகயிலை தரிசனங்கண்
டிமையோர் போறற

வந்தரமின் றிழிந்திடுபொன் விமானமிசை சிவகணங்க
ளருகு சூழச

சுந்தரவெள் ளியங்கிரிமே லிருந்தவொளர் சடிலனடித
துணைகள் சார்ந்தான் (29)

இந்தப் பிரகாரம முசுகுநத சோழராஜனனவன் சந்தோஷத்துடனே யமன் அாச்சனை செயத தினமான தைப்பூச நக்ஷத்திர நாளிலே சிவபெருமான் எழுந்தருளியதான கயிலைதரிசனங்கண்டு தேவர்கள்போற்றச் சொாணமயமான விமானத்திலே சிவகணங்களபக்கத்திலே சூழ வடகைலாசமாகிய வெள்ளியங் கிரியிலே வசிக்கும் அர்த்த சந்திர ஜடாதரன் பாதாரவிந்த தரிசனங்கண்டு தன் பதவியடைநதான்.

நிமலனுறை நீலிவனம் பணிந்தமுசு குந்தனது
நிலைமை யீது

நமராச னேடுபொரு சந்திரசிங் காதனமன்
னவனே யெனறான்

கமைசேர்தின் புளிபாரம் பொறுமலதிர்ந் துத்தரந்தெக்
கணநே ராக

வமராம லிருந்ததனைச சமமாக நிறுத்தநடந்
தருளி னேனே (30)

சிவபெருமான் வாஸமான நீலிவனத்திலே வநது வணங்கி வரபபிரசாதம பெற்ற முசுகுநத சோழராஜனுடைய நிலைமையான கதை இதுதான், யம ராஜனைப பொருது ஜயங்கொண்ட சநதிரபீட சோழனே என்று திருவுளம பற்றினா; வடபூமியானது பாரம் பொறுமல் தாழ்நதபோது தென்பூமி வட பூமிககுச் சமானமாகும்படி எழுந்தருளிய அகஸ்தியரிஷி.

---

# பத்தொன்பதாவது—வியாக்கிரசூரன் பூஜையின் மகிமை

ககனந்தேர் விடுபரிதி குலத்துதித்த முசுகுந்தன்
காதை நீதி
மிகவுந்தான் கேட்டுமன மகிழ்ந்திடுசந் திரபீட
வேந்த னென்போன்
சகமெங்கும் புகழ்திருப்பைஞ் ஞீலியரன் மகிமையின்னந்
தமியேற் கன்பாய்ப்
புகலென்று னிருவினையி னிகல்வென்றோன் மற்றுமொன்று
புகல்கின் றானே (1)

ஆகாயமார்க்கமாக ரதம் செலுத்துகின்ற சூரிய வம்சத்திலே தோன்றி வந்த முசுகுந்த சோழராஜன் சரித்திரப் பிரதாபத்தை இன்பமாகக் கேட்டு மன மகிழ்ச்சியடைந்த சந்திரபீட சோழராஜன் சகமெங்கும் புகழ்பெற்ற திருப் பைஞ்ஞீலி வாஸரான சிவபெருமானுடைய மகத்துவங்களை இன்னும் அடியேனுக்கு அன்பாய்த் திருவுளம்பற்ற வேண்டுமென்று கேட்க அப்போது நல்வினை தீவினையாகிய சத்ருக்களை வென்ற அகஸ்தியமுனி பின்னுமொரு கதை திருவுளம்பற்றுவார்.

பத்துமுகம் படைத்தவனோற் றைஞ்சுமுகத் தவனூற்றுப்
பத்து வாய்த்த
வித்தகமா முகன்கால வாகனத்து முகன்கனக
மேரு வேபோ
லொத்தவன்மற் றவர்திறங்கள் வரங்களும்பெற் றரக்கனவ
னொருவ னேனோ
னத்தரள மலைவடங்கே யரசிருப்பு வியாக்கிரபுரி
யாகுந் தானே (2)

பத்துமுகம் படைத்த ராவணேச்வரன் ஐந்நூறுமுகம் படைத்த சிங்கமகாசுரன் ஆயிரமுகம் படைத்த பாணாசுரன், யானைமுகம் படைத்த கஜமகாசுரன் எருமைமுகம் படைத்த மகிஷாசுரன் இவர்களுக்குச் சமானமாய் அசையாத மகமேருவைப்போல் பலத்தையுடையவன், பின்னுமவர்கள் வன்மையும் சௌரிய பராக்கிரமமும் வரப்பிரஸாதங்களும் பெற்ற ஒரு ராக்ஷதன் அந்த முத்துமலைக்கு

வடபாரிசமாக அரசிருப்பா யிருந்த பட்டணத்துக்கு வியாக்கிரபுரி என்று பெயர் விளங்கும்

அன்னவனுக் குதித்ததொரு முன்னவன்மற் றவனிருப்ப
தடுத்த மேன்முன்
சொன்னபெய ருடையபதி நிலையுடைத்த புலிமுகத்தோர்
தொலைவிலாத
நந்நிதியும் வரங்களுநன் னலங்களுநங் கைப்பலம்பெறவென்
றைளும் வாழ்வோர்
தன்னிகரி லிருவருக்கும் பெயர்வியாக்ர சூரனெனத்
தான் சொல்வாரே (3)

அந்த ராக்ஷதனுக்கு முன்னே பிறந்தவனொருவன், அவனரசிருப்பு முன் சொன்ன வியாக்கிரபுரியாகிய புலிவலத்துக்கு மேல் பாரிசமாயிருக்கிற பட்டணமான பெரிய வியாக்கிரபுரியாகிய வேங்கைமண்டலம் நிலைமையான புலிமுகமும் வேங்கைப்புலிமுகமும் படைத்த பேர்கள் இருவரும் என்றைக்கும் அழியாத திரவியங்களும் வரங்களும் பலன்களும் சேனைகளும் கைப்பலன்களும் பெற்று எந்நாளும் வாஸமாயிருப்பார்கள். அப்படி சமபலமுடைத்த இரண்டு பேர்களில் மூத்தவன் பெயர் பெரிய வியாக்கிரசூரன் இளையவன் பெயர் சின்ன வியாக்கிர சூரன்.

கரும்புயல்போன் மேனியும்வெள் வரிகளுங்கொண் டபரந்த
கருங்கண் டேங்கப்
பெரும்புலியா யுதித்தவாம் புலிநுதற்கு நிறற்புலிக்குப்
பிதாவை நாட்டந்
தரும்புலிக்காற் றப்புலியைக் கோட்டுப்புலியை யாண்டவனைத்
தனது கைமே
லரும்புலிங்கக் கனலானை நீலிவனத் திறைவனையர்ச்
சனை செய்தார்கள் (4)

இருண்ட மேகம்போன்ற சரீரமும் வெண்மையான வரிகளும் ரேகைகளும் பரந்த கரிய கண்களுமுடைய பெரிய புலியா யுதித்தவர்கள் மூன்றாம் பிறைபோன்ற நெற்றிக்கண்ணாலே நாதகடந்து விநதுவாகிய சந்திரகிரணங்களிலே நாட்டமவைத்துத் தபசுபண்ணின சிவபபிரியனுககுப பிள்ளையாகிய புலித்தோலுடைய வியாக்கிர பாதனையும் ஆதிசேஷனை பதஞ்சலியையும் அடிமைகொண்ட ஆண்டவனை, கையிலே பிரகாசித்தக கொண்டிருக்கின்ற

மழுவையணிந்தவனை, நீலிவனநாதனை, வியாக்கிரபாதர்கள் இருவரும அர்ச்சனை செய்தார்கள்

செய்தபூ சனைமுடிவி லிருந்துபஞ்சாக் கினிநடுவே
தியான நாட்டத்
தெய்துசெபங் களைசெபித்துச சருகருந்தி யுணவுகள்வே
றிலாம லீத்து
வெய்துதுயி லாததிக சாக்கிரத்தி னுடனிருப்பார
மெலிந்து போத
நய்தனுக்க ளானதவர் தவங்கள்ததித் ததுநாளு
நாளுந் தானே (5)

இப்படி வியாக்கிரபாதரிருவரும் பூஜைசெய்தமுடிவிலே பஞ்சாக்கினி மத்தியில் இருந்து இடைபிங்கலையொடுக்கிச் சுழிமுனையிலே நாட்டத்தை வைத்துப பிரசாதமந்திரங்களை மனதிலே யுச்சரித்துச் சருகு பக்ஷணம பண்ணிக கொண்டு வேறேயுண்டிகளை வெறுத்து அசதியில்லாத அதிக ஜாக்கிர ஸ்தான மாகிய லலாட ஸ்தானத்திலே மனதைவைத்துச் சிவயோகத்திலே இருந்தார கள். அப்போது சரீரம மெலிந்து தளர்ந்ததேயல்லாமல் அவர்கள் தபசானது நாள்தோறும் மென்மேலும் விருத்தியடைந்து வளர்ந்தது.

மிக்கதவத் தினிநெடுநா ளிருந்தனர்கண் டிறைபவனும்
வெளிப்பட் டன்னோர்
தக்கவரங் களுங்கேட்ட படியேதந் தனரயன்வா
சவன்மான் மற்ற
திக்குறைவோர் சகலரும்வந் தனைசெயசசந் ததமுமவளர்
திருவுண் டாக
மிக்கபுய வலியொடும்வாழ்க் திருமென்று ரருள்பொங்கும்
வேலை போல்வார் (6)

இப்படி யனேககாலம் தபசு செய்வதைக் கண்ட பரமசிவனானவர் பிர ஸன்னமாய எழுந்தருளிவந்து அவர்கள் கேட்ட வரங்களெல்லாம தந்து பிரமா விஷ்ணு தேவேந்திரன் அஷ்டதிக்பாலகா முதலாகிய தேவர்களும வழிபாடு பம் செய்யுமபடி செல்வமுண்டாய் புஜபல பராக்கிரமத்தோடுங்கூடி வாழ்ந் திருப்பீர்களென்று கட்டளையிட்டார் கருணைக்கடலாக விளங்கும சிவபெரு மான்.

சம்புவரு ளியவரத்தா லம்பொன்மணித் தேர்யானை
தறுகட் சேனை
வெம்புரவி யாதிசது ரங்கபிர ளயங்களுமென்
மேற்கொண் டோங்கி
யும்பருல கெனவளமை தழைத்தநெடு வீதியுங்கோ
புரமும் வாய்த்தது
செம்பொன்ம திலுடுத்தவியாக கிரபுரியி லிருந்தரசு
செலுத்தி வாழ்வார் (7)

இந்தப் பிரகாரம் சாம்பசிவன் தந்த வரப்பிரஸாதத்தினாலே நவரத்ன கசிதமாகிய ரதமும், கஜதுரகமும் உக்கிரபராக்கிரமம் பொருந்திய பதாதிகளும் மென்மேலு முண்டாயின தேவலோக வளமை தழைத்தது நெடிதாகிய வீதிகளும் உன்னதமாகிய கோபுரங்களும் தங்கமதிலும் அமைந்த வியாக்கிரபுரி என்னும் புலிவலத்திலே இருந்து அரசு செலுத்தி வந்தார்கள்.

சொலலரிய செலவமுட னரசுசெயு நாள்வியாக்ர
சூரன் சேனை
நலவுலகி னிடத்திலமர்ற நிருபருடை ராசியத்தி
னலிவுண் டாக்கி
யல்லல்படுத் தினரதுகேட் டவரக்கர் தமக்குறுதண்
டனைக ளாலே
கொலலுமெனக் கொன்றுமுடல குறைததும்விடுத் தனர்புரிசெங்
கோல்வல் லோரே (8)

இப்படி சொல்வதற்கரிதாகிய செல்வத்துடனே கூடி அரசு செலுத்துகிறநாளிலே வியாக்கிர சூரருடைய சேனைகள் பூலோகத்திலே இருக்கிற ராஜாக்களுடைய தேசங்களுக் கெல்லாம நலிவுண்டாக்கி இடர்செய்தார்கள். அதுகேட்டு ராஜாக்கள் வியாக்கிர சூரன் சேனைகளான ராக்ஷதர்களைப பிடித்துச் சிலபேரைத் தண்டித்தும சிலபேரை வதைத்தும விட்டார்கள்

குவலயமன் னவரடுதண் டனைப்படுவெவ் வரக்கரவந்து
கூறும் வார்த்தை
செவியினுழைந் தனகனன்று சினத்தபுலி முகத்தவுணன்
சீறி வேரோ

ரவுணர்களுக் கதிகரென வருசேனைத் தலைவரைப்பார்த்
தழைத்து நீர்சென்

றெவர்நமரைத் தடிந்தனர்மற றவர்கள்செல்வத துடன்கொடுவந்
திடுவீ ரென்றான் (9)

இப்படி பூலோக ராஜாக்களிடம தண்டனையடைந்த ராக்ஷதர்கள் சொன்ன வார்த்தையைக் காதிலே கேட்ட மாத்திரத்தில் கோபங்கொண்ட புலி முகமடைந்த வியாக்கிர சூரன யுத்தமுகத்திலே மனதுவைத்து வேறுசில ராக்ஷஸ சேனாபதிகளை அழைத்து நீங்கள் சிறிதுசேனைகளைச் சேகரப் பண்ணிக்கொண்டு போய் நம்முடைய சேனையைத் தண்டித்த ராஜாக்களை யெல்லாம் அவரவர்கள் செல்வத்துடனே நம்மிடத்துக்குக் கொண்டு வாருங்க ளென்று சொன்னான்

என்னநடந் தவனியின்முன் சொன்னபுர வலருடைய ராச
சியங்க ளெல்லாம்

பின்னமுறத் தடிந்துநிறை கவர்ந்துகனன் மடுத்தலைத்துப்
பிழைகண் மூட்டி

சொன்னமொடு மணிகள்பல பொன்கவர்ந்து வளங்களெலலாந்
தொலைத்து வாழ்க்கைக்

கன்னியரைப் புவிபுரந்த மன்னரைக்கொண் டடைந்தனர்கள்
காலன் போல்வார் (10)

வியாக்கிரசூரன் இப்படிச் சொன்னதும் காலதூதருக்குச் சமானமான இராக்ஷசர்கள், முன் தண்டித்த அரசர்களுடைய தேசமெல்லாம் சின்னா பின்னப் படுத்திக் கன்று காலிகளையும் கொள்ளை யிட்டு அக்னிக்கிரை யாக்கினார்கள்; பொக்கிஷங்களையும் கொள்ளை யிட்டு வளமை பொருந்திய சோலை தடாகங்களை யெல்லாம் அழித்து வாழ்க்கைக் கன்னியரையும் பூமியாண்ட ராஜாக்களையும் சிறையாகப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்

பிடித்திடுமன் னவர்தமைமுன் விடுத்தனரவெம் புலிமுகத்தோன்
பெரிது சீறி

யிடித்தமுகி லெனவதிர்த்திங் கிவ்விராநஞ் சேனைகளை
யிடுக்கண் செய்தார்

பொடிப்படக்குவச் சாதத்தினைக்கொன் றடிக் குமிட லரிக்கெதிர்த்த
பூனை போல்வார்

துடித்திடச்சந் துகள்தா னாக்குத் தூறாக்கிடக்கண் டிவரையுயிர்
தொலைப்பீ ரென்றான் (11)

இப்படிப் பிடித்து வந்த ராஜாக்களை யெல்லாம் புலிமுகம் படைத்த வியாக்கிர சூரன் முன்னே விட்டார்கள். அவன் அவர்களைக் கண்டு கோபங் கொண்டு மேகங்கள் இடிப்பதுபோல் அதிர்ந்து இவர்கள் தானே நம்முடைய சேனைகளை எதிர்த்துத் தண்டித்தவர்கள், மதம் பொழியப்பட்ட யானையைப் பிடித்துக் கொல்லத்தக்க சௌரியம் பொருந்திய சிங்கத்துடனே எதிர்த்த பூனைக்குச் சமானமான இவர்களை உயிர்துடிக்கவும் சந்துகள் எலும்புகள் துணுக்குத் துணுக்காய் ஒடியவும் அடித்து உயிர்போகும்படி செய்யுங்கள் என்றான்.

கொன்றனர்பொன் றிரிநிருப ரிருநிலத்திற் றனதுகொடுங்
கோன டாத்தி
யன்றமுத லெய்நெடிய கடல்சூழ்ந்த தலத்துமனுக்
கழிவே செய்தான்
வன்றிறல்வெம் புலிமுகனவ் வெய்யகொடுங் கோலின்வாழ்ந் தவரும்
வாழ்ந்தா ரமற்றோர்
குன்றினிடத் தினுமெவருங் கானறிய வனத்தினும்புக்
கொளித்தா ரன்றே (12)

இப்படி உயிர்போகும்படி அடியுண்டு சிறைப்பட்ட ராஜாக்களுடைய தேசங்களை யெல்லாம் தன்னுடைய கொடிய அரசாட்சிக்குட்படுத்தி அன்று முதல் நெடிதாகிய கடல்சூழ்ந்த பூலோகத்துக்கு நம அழிவுசெய்தான். சில அரசர்கள் புலிமுகம்படைத்த வியாக்கிர சூரனுடைய பொல்லாத ஆக்கினைக்குள் அடங்கி சொன்னபடிகேட்டு வாழ்ந்தார்கள். மற்றவர் மலையிலும் வனங்களிலும் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

வில்வாய்த்த புயநிருபர் தனக்குடைந்து வனத்தடைந்தார்
வெருண்டு வேந்தர்
கல்வாய்த்த மலைகள்புக்கு மலைவுபட்ட மனத்தினராய்க்
கதிநீ யென்று
சொல்வாயி னெடும்பசும்புற் கவ்வியடி பணிந்தவரைத்
தொலைத்தான் பாவி
வல்வாய்வெம் புலிகண்டா லுயிரோடும் விடுமோபுல்
வாயைத் தானே (13)

வில்லாகவளைந்த மேருவைபபோன்ற புஜபலம படைத்த வியாக்கிர சூரனுக்குப பயந்து வனமடைந்தும அவ்விடமிருபபதற்கஞ்சி மலைகளிலே ஒளிந்தும் மலைவுற்ற மனத்தினராய் நீயேகதி யென்று அடுத்துச்சொன்ன வசனத்துடனே கூடிய வாயிலே பச்சைப்புல்லைக் கவ்விக்கொண்டு பாதார விந்தம் பணிந்த ராஜாக்களையெல்லாம் கொன்றான், கொடும்பாவியான வியாக் கிரசூரன். வல்லமையான வாயபடைத்த புலியானது புல்வாயாகிய பசுவைக் கண்டால் விடுவதுண்டோ ?

பூதலங்க ளடங்கலுங்கை வசமாகச் செயித்திடுமெற்
புயத்தோன் வான
மீதலத்தி லுறைபாரி சாதமலர் முடிப்பதன்மேல்
விருப்ப மாகித்
தூதரைவிட் டனனவர்பூர் போதுகவர்ந் தனரமரர்
துரந்தார் மீண்ட
சேதிபுலி முகத்தவன்கேட் டிகல்படைத்தான் படையெடுத்தான்
றேவர் கோன்மேல் (14)

பூலோகம் ஆததியந்தமும தன் கைவசமாகச் செயதுகொண்ட மல்யுத்த புஜம்படைத்த வியாக்கிர சூரன தெயவலோகத்திலிருக்கிற பாரிஜாத புஷ்பம சூட்டிக்கொள்ளுகிறதற்கு இச்சைகொண்டு தன்னுடைய தூதர்களைத் தெய்வ லோகத்துக்கனுபபினான். அவர்கள் போய பாரிஜாத புஷ்பம எடுக்கும்போது தேவர்கள ராக்ஷதர்களென்று கண்டு அடித்துத் துரத்தினபடியினாலே தோற் றுத் திரும்பினார்கள். அதுகேட்டு வியாக்கிர சூரன் தேவேந்திரன் பேரில் பகைகொண்டு படை எடுத்தான்.

கரிகளா யிரத்துவெள்ளம் பரிபதினா யிரத்துவெள்ளங்
கலினம் பூட்டிப்
பரிகள்பூட் டியகனக முடித்தேரைம் பதுகோடி
பரந்து தேங்க
விரிகடல்போல் மிகுத்துவரு பதாதிகளா றாயிரத்து
வெள்ளஞ் சூழ
வெரிதெறுவெம் புலிமுகன்சென றழிதகான்விண் ணவருலகை
மெய்க்குத் தானே (15)

யானையிலே ஆயிரம வெள்ளம, குதிரைபபடை பதினாயிரம் வெள்ளம கடிவாளம் பூண்ட குதிரைகட்டின சொர்ணசிகரம் பொருந்திய ரதம் ஐம்பது

கோடி எங்கும் பரவித் தேங்கிய விரிவாகிய சமுத்திரம்போலுமிருந்து வருகிற பதாதிகளிலே லக்ஷம வெள்ளமும சூழ்ந்துவருமபடி அக்னிபொறி பரக்கின்றமுகம்படைத்த வியாக்கிர சூரர்கள் போயழித்தார்கள் தெய்வலோக மெல்லாம.

நாடழித்துத் தீதிழைத்த திறன்மிகுந்த புலிமுகத்தோ
னலிவி னுல்வந்
தூடெதிர்த்தான் மகபதிமுப் பதுமூன்று கோடியின்மே
லுயர்ந்த விண்ணோர்
கோடிபுடை சூழவயி ராவதமால் யானையின்மேற்
கொண்டான் வெம்போ
ராடினது புலிமுகன்வெம் படையொடுவிண் ணோர்படையேற்
றெதிர்ந்து தானே (16)

தெய்வலோகங்களையுமழித்தது பொல்லாங்கு விளைத்த பராக்கிரம மிகுந்த வியாக்கிர சூரன் செய்த துன்பத்தினாலே தேவேந்திரன் வந்து எதிர்த்தான், முப்பத்து முக்கோடி தேவர்கள் கோடானுகோடி பேர்கள் சூழும்படி ஐராவதமென்கிற வெள்ளை யானையின் மேற் கொண்டு யுத்தம் பண்ணத் தொடங்கினான். வியாக்கிர சூரன் சேனையுடனே தேவர்கள் சேனையும் கை கலந்து போர செய்தார்கள்,

தானவர்வெம் படைகளுடன் வானவர்வெம் படைகளும்வெஞ்
சமரி லேற்றுச்
சோனைமழை யெனவயில்சக் கரமெறிதோ மரங்கதைகோல்
சூல மாதி
யானபடை யெறிந்தனர்மூண் டெடுத்தவுகாந் தத்தினில்வந்
தடுத்துச் சாடும்
வானவெள்ள மெனவுடலந் தகர்ந்துவரு சோரிவெள்ள
மலிந்த தன்றே (17)

ராக்ஷஸ சேனையுடனே தேவர்கள் சேனை கலந்து யுத்தத்திலே சோனை மழை பொழிவதுபோல் வேல், சக்கரம், தோமரம், கதை, கோல் சூலம் முதலிய படைகள் எறிந்தனா இருதிறத்துச் சேனைகளிலும உடல் தகாந்து ரத்தப பிரளயமானது யுகாந்த காலங்களிலே பூமியெல்லாம வந்தடுத்து ஆகாசம் மூடுற ஜலப பிரளயம உண்டாவதுபோல் எங்கும பிரவேசித்தது.

வருகரிபட் டதுவயவெம் புரவிகள்பட் டதுதுவச
மணித்தேர் வீழ்ந்த
தெரிகதிர்வேற் றானைகண்மாய்ந் ததுநிகராய் நிகர்புகலா
விருவர் தாமே
யொருவன்மணித் தேறினுமற் றொருவன்வெற்றித் தார்புனைகை
யோங்கன் மீதா
மிருவர்சம ராடினர்மா லயனிருவர் சமர்புரிந்த
தென்னத் தானே (18)

யானைகள் அடிபட்டன உயர்ந்த குதிரைகளும் அடிபட்டன. கொடியுடன் கூடிய இரதங்களும் முறிந்து விழுந்தன. தெரிவதற்கரிதான பாதாதிகளுமாண்டன. இப்படி ரதகஜ துரகபதாதிகள் மாண்டதின் பிறகு ஒருவருக்கொருவர் ஒப்புவமை கூறுதற்கில்லாத இருவரில் ஒருவனாகிய வியாக்கிரசூரன் நவரத்தின கசிதமாகிய தேரின் பேரிலும் மற்றவன் மலைபோன்ற யானையின் மேலும் ஏறிக்கொண்டு யுத்தம் தொடங்கினர் முன்னால் பிரம்மா விஷ்ணுக்கள் வாதினாலே யுத்தம் பண்ணியபடி.

இந்திரவில் லவன்குனித்தான் றந்திரவில் லிவன்வளைத்தா
னிடுநா ணேற்றித்
தந்தகுணத் தொனிக்குயர்விண் முகடுவெடித் தெனவிவனுந்
தகுநா ணேற்றி
யுந்துகுணத் தொனிக்கவனி யதிர்ந்துகிழிந் திடவிடிக
ளுகுத்த தேபோல்
வந்ததவன் கணைவடவா முகங்களொத்த திவன்விடுத்த
வாளி தானே (19)

இந்திர தனுசை தேவேந்திரன் வளைத்தான். தந்திரமாகிய வில்லை வியாக்கிர சூரன் வளைத்தான். இந்திரன் தன் வில்லிலே நாணேற்றிக் குணத்தொனி பண்ணின சப்தமானது ஆகாசமும் வெடித்ததென வாயிற்று. அது கேட்டு வியாக்கிர சூரன் தன் வில்லை நாணேற்றிக் குணத்தொனி பண்ணின சப்தமானது பூலோகம் ஆதியந்தமும் அதிர்ந்து கிழிந்திட இடிகள் இடித்தன போலிருந்தது தேவேந்திரன்விட்ட பாணம் இடி பூமியில் உதிர்ந்ததுபோ லிருந்தது வியாக்கிர சூரன் விட்ட பாணம் வடவாமுகாக்கினிபோலிருந்தது.

விட்டபுலி முகன்கணையைத் தொட்டபுரந் தரன்கணையால்
விலக்கி வீழ்த்தான்

றொட்டபுரந் தரன்கணையை யட்டதுவெம் புலியின்முகசூ
சூரன் வாளி
நிட்டூரன்றேர்ப் பாகனெடு மூர்ச்சையுறச் சாய்த்ததுவிண்
ணிறைவன் வாளி
துட்டனடு கணையயிரா வதத்தைவிடு பாகனைக் கொண்
டொளித்த தன்றே (20)

வியாக்கிர சூரன் விட்ட கணையைத் தேவேந்திரன் தான் தொடுத்த கணையால் விலக்கியறுத்தான், இந்திரன் தொடுத்த கணையை வியாக்கிர சூரன் வாளியானது விலக்கியறுத்தது. தேவேந்திரன் தன் பாணங்களினாலே வியாக்கிர சூரனுடைய தேர்ப்பாகனை யடித்து மூர்ச்சையாகும்படி செய்தான். அது கண்டு வியாக்கிர சூரன் பாணந்தொடுத்து தேவேந்திரனுடைய யானைப் பாகனைக் கொன்றான்.

ஆளியொத்த நிருதனிடு கவசமறுத் தனன்கணைகொண்
டகண்ட லேசன்
வாளிதொட்ட சிலைகவசத் துடன்வயிர வுடைவாளும்
வாளி யாலே
தூளிபட்டு விழவிடுத்தா னிருதனடு புலிசினந்து
தொடர வோடு
ஞாளியொத்த தவனயானை யாளியையொத் ததுநிருத
நடத்து தேரே (21)

யாளிக்குச் சமானமாகிய வியாக்கிரசூரன் பூண்டகவசம் அறும்படி பாணத்தை விட்டறுத்தான் தேவேந்திரன். 'தேவேந்திரன் தொடுத்த வில்லும் பூண்டகவசமும் வஜ்ராயுதமும் தூளியாகும்படி பாணம் விட்டான் வியாக்கிர சூரன். தேவேந்திரன் ஏறிவந்த யானையானது, கோபம்பொருந்திய புலியானது தொடரும்போது கண்டு பயந்தொடுங்கும் நாய்க்குச்சமானமாயிருந்தது. வியாக்கிரசூரன் நடத்தின தேரானது கர்ஜிக்கும் யாளிபோல் இருந்தது.

மானோடைத் தொடர்ந்தபுலி யெனநிருதன் பின்னுமுன்னு
மகவா னோடத்
தானோடித் தளர்ந்துசிறு கன்றுகள்போ லமரரெல்லாந்
தலைகெட் டோட

மீனோடிச் சுழிப்புனல்புக் கொளிப்பதென விபத்தைவிட்டு
விண்ணு ளோர்கோ
மானோடித் தனக்கொருசம் பத்தெனத்தன் னுயிர்பிழைத்து
மறைந்தா னன்றே (22)

மான் ஓடுவதுகண்டு பின்தொடர்ந்த புலிபோல் வியாக்கிர சூரன் பின்னும் தேவேந்திரன் முன்னுமாக ஓடித்தனாந்தனா. தேவர்களெல்லாம பசுவை விட்டுப்பிரிந்த சின்னக்கன்றுபோல் திசைதப்பி ஓடிப்போனார்கள். மீனனது பயந்து சுழலாகிய ஆழ்ந்த ஜலத்திலே புகுந்து ஒளித்துக்கொள்வது போல வெள்ளையானையைவிட்டுத் தேவேந்திர ராஜனானவன் கைக்குள்ளே யிருக்கின்ற சமபத்துபோல் தன்னுயிர் பிழைத்ததே போதுமென்றெண்ணி மறைந்தான்

குறைகொண்டார்த திடவயிரா வதத்தைமட்டிட்டேறினன்மேற்
கொண்டான் விண்டு
கறைகொண்ட மலர்ப்பாரி சாதமுதற் றருக்களையெந்
நாளுங் கோடா
துறைகொண்ட லேழுசுர,தேனுவுஞ்சிந் தாமணியு
மொருங்கே கொண்டான்
சிறைகொண்டா னரம்பையரை யிருந்துளதிக் கெழுவரிடுந்
திறைகொண் டானே (23)

குறை கொண்டு சபதமிடுபடி ஐராவதத்தை வளைந்து படியுபடி செயது அதின்மேரில் ஏறிக்கொணடான்; தேன் பெருகிக்கொண்டிருக்கின்ற பாரிஜாத மலா புஷ்பிக்கின்ற விருக்ஷங்களையும எந்த நாளும் குறையாமல் வருஷிக்கின்ற சபதமேகங்களையும காமதேனுவாகிய பசுவையும சிந்தாமணியையும் ஒருமிக்க கைவசமாகக் கொண்டான்; மற்றும் தேவரம்பைகளைப பிடித்துச் சிறையிலிட்டான் ; எழுதிக்கிலு மிருக்கின்ற திக்பாலகர் எழுபேரிடமும் திறைகொண்ட வசுரன்.

ஆலவனுடன் மகபதியர்ச் சனைசெய்லிங்க மூர்த்திமுத
லமர பூமி
மேவுவளத் தொடுபுவிவந் தடைந்தனன்விண் படுதுயா
மெல்லாஞ் சொல்லத்
தேவர்முறை கேட்டனன்வாட் டடங்கண்மயி லாகிமுன்னங்
தேவ ரானே

ரேவருக்கு மமுதமளித் தரங்கமிசைத் துயில்கூர்ந்த
விறைவன் றானே (24)

ஆசையுடனே தேவேந்திரன் பூஜை பண்ணிய சிவலிங்க முதலான தேவ பூமியிலுள்ள வளமைகளெல்லாம் கைக்கொண்டு பூலோகத்திலே வியாக்கிர சூரன் வந்து சேர்ந்தான் இப்பால் தேவலோகமடைந்த துன்பங்களெல்லாம் தேவர்கள் முறையிட வான்போலும விஸ்தாரமான நேத்திரம படைத்த ஸதிரீ ரூபமாய் முன்னாளிலே வந்து தேவா முதலாகிய பேருககு அமிர்தம பகிர்ந்தளித்த திருவரங்க சயனனாகிய இறைவன் கேட்டான்

பாகசா தனன்முதலெண் டிசையோருஞ் செயசெயெனப்
பயில்பண் பாடல்

வாகுளகிம் புருடாகள்கின் னராபாட விமையவாபூ
மாரி தூவத்

தோகைமா மலர்த்திருவும் பணிலமுஞசக் கரமுமணி
துளவுஞ் சூழ்பொன்

னைகமுமின் முடியுமணி புயல்வயின தேயன்மிசை
கடந்தா னன்றே (25)

அபபடி முறையிடக் கேட்டவுடனே தேவேந்திரன் முதலாகிய அஷ்டதிக் பாலகருமா ஜய ஜய வென்று கூற வாகுபொருந்திய கிமபுருடா கின்னரர்கள் வீணை கின்னரியிசையுடன் பாட, முபபதது முககோடி தேவர்கள் புஷ்பமாரி பொழிய மயில் சாயல்போன்ற லக்ஷ்மியுடன் சங்கு சக்கர பாணியாய்த் துளசி மாலையும் பீதாமபரமும பிரகாசம பொருநதிய கிரீடமும தரித்து, கார்மேக வாணந்தோடுகூடி கருட வாகனத்தின்பேரில் எழுந்தருளினார்.

திருவரங்க மகன்றுவட காவிரியுங் கடந்துவட
திசைக்குள் வாய்த்த

தருவரங்கத் தமர்ந்துவியாக் கிரமுகன்வெற் றியும்வரமுந்
தாழ்வி லாது

பெருவரங்க ளுதவியபைஞ் ஞீலிரததின சபாபதிவெண்
பிறைசேர் வேணி

பொருவரங்கந் தாங்கமுங்கேட் டிருந்தார்தென் னிலங்கைபைப்
பார்த்துறைந்தார் தாமே (26)

இந்தப பிரகாரம ஸ்ரீரங்க ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு வட காவிரியாகிய கொள்ளிடங் கடந்து அதற்கு அடுத்த வடபாரிசத்திலே வளம்பொருந்திய தருவ ரங்கமென்னும் பெயர்படைத்த ஸ்தலத்தில் வந்தெழுந்தருளியிருந்து, வியாக்ர ரூரனுக்கு வெற்றியாகிய சவுரியங்களும் என்றைக்கும் தாழ்வு வராத படிகரும பெரிதாகிய வரபிரஸாதங்களும் திருபபைஞ்ஞீலியாகிய ரத்னசபை வாஸரான ஆரத்தசநதிர ஜடாதரராகிய பரமசிவன் கட்டளையிட்ட அந்தரங்க மான ரகசியத்தைக் கேட்டறிந்தார் தெற்கேயிருக்கிற லஙகாபுரியை நோக்கிக கொண்டு சயனயாகித் திருவரஙகத்திலே வாஸமான மகாவிஷ்ணு

சிவவேடம் பூண்டுநித்தஞ் சிவபூசை புரிந்துசிவத்
தியான நாடித
தவமேசெய் பவர்க்கிடர்க ணினைப்பதுதீ தலதுநினை த
ததுசெய் தானு
மவலமுற்று வாழ்விழுட னுயிரிழப்பர் கொடியநர
கடைவர் மீளார்
சிவனவரைச செய்தபிழை திருவுளததி னினைபபர் தம்மைச
செய்தா ரென்றே (27)

பின்னும விஷ்ணுவானவா ஆலோசனைசெய்வா. விபூதி ருத்திராக்ஷஙகளை யணிந்து அனுதினமும சிவபூஜை மறவாமல செயது சிவதியானம நாடித் தபம செய்கின்ற பேர்களுக்கு இடா நினைபபது பொல்லாத காரியமாகுமல்ல வென்று எண்ணுமல் தீங்கான காரியம செயயவேண்டுமென்று மனதிலே நினைத்தாலும செய்தாலும அவலமுற்று வாழ்வும ஐசுவரியமும உயிருமிழநது கொடிதாகிய நர கத்திலழுந்தி ஒருகாலமும கரையேறமாட்டாரகள் சிவனும தமமுடைய பக தர்களுக்கு அபசாரம செய்தால் அது தமக்குசசெய்த அபசாரமென்று திரு வுள்ளத்திலே எண்ணியிருபபாரென்று ஆலோசனை செயதாா.

திரிபுரத்தி னிமித்தியமா யொருபவுதத வடிவெடுதத
திறமே போலக்
கருதிறத்த புலிமுகத்த னியமமுற்ற தொழில்குறைத்தல
கருத்தி னுடி
வருமரக்கர் குலமனைத்தும் பரவியசுக் கிரகுருவின்
வடிவந் தாங்கி
நிருதனுற்ற புரத்தடைந்தா னொருவருக்குந் தெரிவரிய
நினைவி னுனே (28)

இப்படி சிந்தனை பண்ணின மகாவிஷ்ணுவானவர் முன்னாளிலே திரிபுர மழியும் பொருட்டாக ஒரு பவுத்த ரூபமெடுத்த பராக்கிரமம்போல் கருநிறம் படைத்த புலிமுகமுடைய வியாக்கிர சூரனுடைய வரப்பிரஸாதமும் அவனுடைய பூஜாபலமும் குறைந்து போகும்படி மனதிலெண்ணி, இராக்ஷத குலங்களெல்லாம் துதிசெய்து வணங்குகின்ற சுக்கிராசாரி ரூபமெடுத்துக்கொண்டு வியாக்கிரசூரன் வசிக்கும் வியாக்கிரபுரிக்கு வந்தார். யாவருக்கும் தெரிவதற் கரிதான நினைவுபடைத்த மகாவிஷ்ணு.

மாயத்தே சிகனெதிர்வந் தடிதொழுதா னுயர்தவிசில்
வைத்தான் றங்கள்
ஞாயத்தே சிகர்க்குரிய பரிணமம் வினவவவை
நவின்றா ரானர்
தேயத்தே யுலகிடத்தே புவனகோ டியின்வசத்தே
சீவ னெல்லாம்
வீயத்தோ நிறைந்ததிக வுபாயத்தால் விளையாடிற்
லீலையானே (29)

இப்படி மாயத்தேசிகன் வர அவரை எதிர்கொண்டு வரவேற்று தீர்க்கதெண்டம் பண்ணினான், உயர்ந்த சிம்மாசனத்திலே வீற்றிருக்க வைத்தான். தங்கள் மரபு ஞாயமெல்லாவற்றிற்கும் காத்தனாகிய குருவைக் கேட்கவேண்டிய சாஸ்திரங்களெல்லாம் கேட்டபோது, சந்தேகம் தெளியும்படி சொன்னார் ஐம்பத்தாறு தேசத்துடனே கூடின உலகங்களிலும் புவனங்களிலும் விளங்கும் சர்வப்பிராணிகளையும் காத்துப் பின்னும் அதிக உபாய தந்திரத்தினாலே விளையாடுகின்ற லீலா விநோதனான மகாவிஷ்ணு.

அஞ்சலிசெய் தருகிருந்து பரிணமாவுரைகேட்ட
வவுணர் கோவை
வஞ்சனைத்தே சிகன்வினயத் துடனோக்கி நிருதர்குல
மரபுக் கெல்லா
நெஞ்சில்விருப பொடுநரரூன் புசித்தல்கடன் மறிதவொன்றை
நினைப்ப தெல்லாங்
குஞ்சரத்தைப் புசிப்பதுவிட் டரிமிழிகத் தபம்புசித்த
குணம தாமே (30)

அஞ்சலிசெய்து பக்கத்திலிருந்துகொண்டு பரிணமவார்த்தை கேட்ட அவுணர்கோவை வஞ்சககுருவானவர் வினயமாகப் பார்த்து ராக்ஷத மரபுக்

கெல்லாம் மனதிலே இச்சை பூண்டு நாருடைய மாம்சபக்ஷணம் பண்ணுவது உத்தமமான தொழில். இதுவிட்டு வேறு மாம்சத்தைப் புசிக்க நினைப்பதெல்லாம் யானையைப் புசிக்கிற சிங்கமானது அதைவிட்டுக் கழுதையைப் புசிப்பதற்குச் சமானமாகும் என்று சொன்னார்

மனுக்கடைசை பிணிமீது புசித்துவரின் மிகுத்துவரும்
வரமும் வாழ்வு
முனக்கதிக மாகுமெனு முரைபுலியின் முகத்தவுண
னுண்மை கொண்டான்
அனுக்கைசெய்சுக் கிரவடிவ மொழித்துமுன்போ லிருந்தனர்மற்
றவுணர் வேத
முனிக்கணங்க டருமகவைக் கொடுத்திட றுங் கினன்றெரைிந்து
முடிந்த சீரோன் (31)

இனிமேல் நாமாம்சபக்ஷணம் பண்ணிவந்தால் மிகுந்த ஐச்வரியமும் வரப்பிரசாதமும் மென்மேலும் உனக்கு உண்டாகுமென்று சொன்ன வஞ்சகக் குருவான விஷ்ணுவின் வசனத்தை வியாக்கிர சூரன் உண்மையெனக்கொண்டான். அப்பால் இந்தப்படி உபதேசம் பண்ணின சுக்கிராசாரி ரூபத்தைவிட்டு எப்போதும்போல விஷ்ணுரூபமாகித் திருவரங்கத்திலே எழுந்தருளியிருந்தார். மறுபடி வியாக்கிர சூரன் வேதவல்லவரான ரிஷிகளுடைய புத்திரர்களையெல்லாம் கொடுக்கும்படி அவர்களைத் தொந்தரை செய்து பெற்று விழுங்கினான், தன்னுடைய சீர்சிறப்பெல்லாம ஒழிந்து முடிவுகாலம் கிட்டியபடியால்.

தமக்கினிய தனயரை நுங் கினனரக்க னெனச்சொலிமா
தவத்தோர் மாலே
யுமக்கபய மெனக்கேட்டா ரெழுந்தார்பைஞ் ஞீலியில்வா
ழுமையாள் பாகர்
நமக்கதிக ரவர்க்குரைப்போம் வாருமென முனிவரர்விண்
ணவர்க ளோடுஞ்
சுமக்கரிய புவிபாரந் தவிர்த்தாரை யடைந்தார்பைந்
துளவு பூண்டோர் (32)

தமக்கு அன்பான புத்திரர்களை விழுங்கினான் ராக்ஷசனாகிய வியாக்கிர சூரன் என்று ரிஷிகளெல்லாம் கூடி விஷ்ணுவே உமக்கு அபயமென்று சொல்ல அது கேட்டு அவர் எழுந்தருளித் திருப்பைஞ்ஞீலியில் வாஸமாகிய பார்வதிபாகர் நமக்கு அதிகமானவர் அவருக்கு விண்ணப்பம் செய்வோம வாருங்

களென்று ரிஷிகள் தேவர்களுடனும் கூடிச் சமபபதற் கரிதாகிய பூமிபாரம் தீர்த்த பரமசிவனிடத்திலே வந்தார் பசுந்துளபமாலை பூண்ட மகாவிஷ்ணு,

உக்கிரவெம் புலிமுகனைத் தக்கவழி செயித்திட வென்
றுபாய நாடிச்
சுக்கிரனுர் வடிவுகொண்ட மைத்துனனுர் வரவுகண்ட
சோதி நேய
மிக்கபரி வுடனெழுந்து திருமார்பி லணைத்தமரா
விருந்தா ரென்பால்
புக்கவர வேதெனமா தவர்குறைகேட் டடைந்ததன்மை
புகன்று ரன்றே (33)

உக்கிர ரூபம்படைத்த வியாக்கிர சூரர்களை வெல்லுவதற் குபாயம் பார்த்துச் சுக்கிராசாரி ரூபமெடுத்த மைததுனனுகிய மகாவிஷ்ணு வருவதைக் கண்டவுடனே ஜோதியான பரமசிவன் விசுவாஸமாய் மிகுந்த சந்தோஷத் துடனே எழுந்திருந்து மார்பிலே ஆலிங்கனம் செய்து கொண்டு இருந்த தின் பிறகு நம்மிடத்திலே வந்த காரணம் என்னவென்று கேட்க விஷ்ணு, ரிஷிகளும் தேவர்களும கூடி முறைசெய்து அபயஸ்தம் கேட்ட வரலாறு களெல்லாம் சொன்னுர.

ஓங்கியமா தவத்தோர்புத் திரரைவிழுங் கினனெனச்சொ
லுரைகள் கேட்டு
வேங்கைமுகத் தவுணனைக்கொல் வதுதாழ்க்கத் தகாதெனவே
விமலர் கூறப்
பூங்கையிலே மலையாரை விடைகொண்டார் குடையாகப்
பொருப்பொன் றேந்தி
தாங்கரிய மழைதடுகுதார் வியாக்ரபுரி மருங்கினில்வந்
தடுத்தா ரன்றே (34)

இப்படிச் சொன்னவுடனே உயர்ந்த தபசுபடைத்த ரிஷிபுத்திரர்களை விழுங்கியதாகச் சொல்லக் கேட்டதும் வேங்கைப்புலி முகம்படைத்த ராக்ஷத னைக் கொல்லுமிறதற்குத் தாழ்த்திருக்கப் போகாதென்று பரமசிவன் கூறினுர். கைலாசவாசராகிய சிவபெருமானிடம் விடைகொண்டு கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்து காடுவதற்கரிதாகிய கல்மாரியைத்தடுத்த விஷ்ணுவானவர் வியாக்கிரபுரியாகிய புலிவலத்துக்குப் பக்கத்திலே வந்தடுத்தார்.

போராடும் வகைபொருதா லிவனைமுடித் திடலரிது
புனிதர் தாமும்

நேராயோ தயவுவந்தாற் றடுப்பர்சிவன் றடைநாமு
நீங்கோ ணுதென்

றோராழி தரித்தவருன் னதரூப மெடுத்தரக்க
னுடன்வந் தோதுஞ்

சோராத தம்பியுமம் பினில்மாளச் சிலைகுனித்தார்
சொரிந்தா ரன்றே (35)

யுத்தந்தொடங்கி ராக்ஷதர்களோடே எதிர்த்து நின்றோமானால் ஜயிபப தரிதாகும். பரமசிவன் இவர்கள்பேரில் தயவுவைத்தாரே யானால் கொல்ல வேண்டா மென்று நம்மைத்தடுப்பார். சிவன்தடுத்தால் நாம் மீறலாகாது என்று கருதி சக்கரபாணியாகிய மகாவிஷ்ணுவானவர் விசுவ ரூபத்தையெடுத்துக் கொண்டு வேங்கை முகமபடைத்த சூரனுடனே அவன் தம்பியான புலிமுகா சூரனும் மாளும்படி வில்லைவளைத்துப் பாணதைதச் சொரிந்தார்

விசுவவடி வெடுத்தவரெய திடுபகழி மிகக்கொடிய
வியாக்கிர மான

வசுர னுக்கு முன்னவனை சேனையொடு புரங்களைமாய்த்
தழித்த தப்பாற்

பசியமுகில் வாளியுட லெலாந்துளைதத தனுச னுயிர்
படாம லோடிச்

சசிமுடித்த கடவுளுறைந் தமர்திருப்பை ஞீலிரத்ன
சபைமுன் வீழ்ந்தான் (36)

விசுவரூபங்கொண்டு மகாவிஷ்ணுவானவா எய்த பாணம புலிமுகம படைத்த வியாக்கிர சூரனுக்குத் தமையனை வேங்கமுகம் படைத்த சூரனையும சேனைகளையும பட்டணங்களையும் அழித்துக்கொன்றது. அபபால் பசுமை பொருந்திய மேகமபோன்றவருடைய வாளியானது வியாக்கிர சூரனுடைய சரீரத்திலே புகுந்து சரீரமுழுவதையும் பலகணிக்கண்ணைப்போல் துளைத்தது. உயிர் தபபிய தம்பியாகிய வியாக்கிரசூரனைவன் மூன்றாம்பிறை தரித்தருளிய பரமசிவன் வாஸமான திருபபைஞ்ஞீலியிலே ரத்னசபை முன்னுகபபோய விழுந்தான்.

தம்முனம் வீழ்ந் திடு நிருதற் கெதிரேவந் தனர்பரமர்
தம்மை நோக்கி

யெம்முனையெஞ் சேனையையெம் புரங்களைவெங் கணைமாரி
விடுத்து மாய்த்தான்
மைம்முகிலென் மேனியெலாந் துளைத்ததுவெம் பகழியுந்தன்
வனச பாதத்
தெம்முனைவா வெனதுயிர்விட் டிடக்கிடைத்த தினிக்குறைவே
றில்லை யென்றான் (37)

இபபடி தம்முன்னே விழுந்த ராக்ஷதனுகிய வியாக்கிர சூரனுக்கெதிராக நீலிவனேசுவரா எழுந்தருளிவந்தார். அவரைப பார்தது விண்ணபபஞ் செயவான். எங்களுடைய ஆண்மையையும சேனைகளையும எங்கள் பட்டணததையும பாணப பிரயோகம்பண்ணிக் கொன்றழிததான், காரமேக வண்ணனவன்; பின்னும அந்த பாணமானது அடியேனுடைய சரீரமெல்லாம் சல்லடைககண்போல் துளைத்து நிர்ஜீவியாக்கிவிட்டது; உமமுடைய பாதார விந்தங்களைக் கண்டு உயிாவிடுமபடி கிடைததது; இனி வேறு குறை இல்லை என்று விண்ணபபஞ் செயதான் வியாககிர சூரன.

மொழிந்தவியாக் கிரமுகனை நோக்கிநீ யரக்கனென்று
முறைமை யாலே
யிழிந்தகுணம் படைததுலகத் தியலபகனற சரீரம்விடுத
திடலே நன்றும்
அழிந்துதிக்கு முடலினைவிட் டழியாத சிவபதத்தி
லடைவா யென்னப்
பொழிந்தகரு ணையினமலன் மொழிந்தான்பின் னிருதனென்று
புகல்வ தானன் (38)

பூலோகத்திலே பொல்லாத ராக்ஷதனுயிருந்து இழிவான குணம் படைத்தாய; லோகததியலபகனற சரீரததை விடுகிறதே நல்லது. இறந்து பிறக்கும் உன்னுடைய சரீரத்தை விட்டு என்றைக்கு மழியாத சாயுஜ்ய பதவி யடைவா யென்று கிருபா சமுத்திரமபோன்ற பரமசிவன் திருவுளம்பற்றினர். அது கேட்டபின் வியாக்கிர சூரன் ஒரு வசனம விண்ணபபம் செய்வான்.

எந்நாளு முனைப்பிரியா திருந்துபணி விடைபுரிந்தே
னிதற்கு மேல்யா
னெந்நாளுந் தனைக்காண்பே னிறைவாவென் றனன்விமல
னெமது மூதிற்

பொன்னூர்கோ புரத்தின்மதின் மீதில்விமா னததிலுமீனப்
போலக் காண்கப்

பன்னாளும் பொறித்தோமென் றனருடல்விட் டவுணனுயர்
பதத்தைச் சார்ந்தான் (39)

சுவாமி அநுதினமும் உம்மைப் பிரியாமலிருந்து பணிவிடை செய்த அடியேன் இனிமேல் எந்தக்காலம் உம்மைக் காண்பேன் என் நாயகனே என்று விண்ணப்பஞ்செய்ய அதற்குபரமேசுவரன் திருவுளம்பற்றுவார், நம்முடைய கோபுரத்திலும மதிலிலும் உன்னுடைய வியாக்கிர ரூபமான சரீரத்தைப போலும யாவரும காணுமபடி எழுதிவைத்தோம், என்றார். வியாக்கிரரூரனும அதைக்கண்டு சரீரம்விட்டு உயர்ந்த பதவி பெற்றான்.

திருதனைப்பூ சனையானை யுபாயத்தால் வதைத்தவதை
சேரி லாத

வொருதனைவந் தடைந்துமணி கர்ணிகையின் மூழ்கியர
னுபய பாதங்

கருதிபபூ சனைமுடித்துத் தீர்ந்தனன்பாற கடற்றுயின்ற
காட்சி நேராய்ச்

சுருதிபுக ழரங்கமணிப் பெட்டகத்தி லரவணைமேற்
றுயில்கொள் வோனே (40)

சிவபூஜை பண்ணிவந்த ராக்ஷதனுகிய வியாக்கிர ரூரனை எதிர்த்துக் கொல்லாமல் உபாயமாய்க் கொன்ற தோஷமானது ஒரு வருக்கும் நிகரில்லாத விஷ்ணுவை வந்து பிடித்த படியினலே மணிகர்ணிகையாகிய தீர்த்தத்திலே மூழ்கித் திருபபைஞ்ஞீலி வாஸரான பரமசிவன் பாதங்களைத் தியானித்துப பூஜைசெயது பரிசுத்தனுனா பாற்கடலில் பள்ளிகொண்டருளிய காட்சிககு நேரාக வேதங்கள் துதிக்கப்பட்ட சீரங்கத்திலே அழகிய கோவிலில் ஸர்ப்பத்தின்மேல் கண்வளர்ந்தருளும் மாகாவிஷ்ணு.

தித்தாவு சினத்துவியாக் கிரவதனத் தவுணசரித்
திரமீ தென்றான்

மார்த்தாண்டன் றேர்தடுத்த விந்தமெமக் கொருகாலன்
வந்தா னென்றே

பார்த்தாவி பதைபதைத்துப் பிலம்புகுதப் பொதியபருப்
பதத்தை நீங்கி

மேற்றானுத் தரதிசைக்குச் செல்வோம்பின் பெழுந்திரென
விளம்பு மேலோன் (41)

வடவாமுகாக்னி போன்ற கோபம்படைத்த வியாக்கிரமுக ராக்ஷத னுடைய சரித்திரமிது வென்று திருவுளமபற்றினான்; சூரியன் ரததலைத்தடுத்த விந்தகிரியானது தன்னைக கொல்ல யமன் வந்தானென்று எண்ணி உயிரபதை பதைத்துப பாதாளலோகத்திலே புகுமபோது எனககு விமோசனகாலம எபபோதென்று கேட்க நாம பொதியமா மலையிலிருநது வடகைலாசததுககுப போகும்போது நீயும சாபவிமோசன மடைந்து மேலே எழும்பி வருவா யென்று கட்டளையிட்ட அகஸதிய மகாரிஷி

---

## இருபதாவது—அருச்சுனன் பூஜையின் மகிமை

தாளமால் வரையினர் சரிதை யான்மலாக்
கரமுகிழ்த் திறைஞ்சியக் கையிலை மேவிவாழ்
பரமர்சீ ரின்றுநீ பகர்ந்தி டென்றுசொ
னரபதிக் ககததிய னவிலவ தாயினான் (1)

முத்துமலையி லெழுந்தருளியுள்ள பரமசிவன சரித்திரத்தைக்கேட்டு மலர் போன்ற இரண்டு கைகளையும குவித்துத தீரகக தண்டமபண்ணி இன்னும தக்ஷிண கைலாசமான திருபபைஞ்ஞீலியில் எழுநதருளியிருக்கின்ற பரமசிவ னுடைய கதைகளைத திருவுளமபற்றவேண்டுமென்று கேட்கின்ற நரபதியாகிய சநதிரபீட சோழராஜனுக்குச சொல்லததொடஙகினார் அகஸ்தியர்.

கீர்த்திசேர் கவுரவர் கிளைக்குண் மேதகு
போர்த்திறல படைத்துள புருட கேசரி
பார்த்தன்முன் சுபத்திரைப் பரவை யாடிய
தீர்த்தன்மெய்த தீரததயாத திரைக்கு ளுடினான் (2)

கீர்த்திபடைதத கௌரவ கோததிரததிலே ஜனிதது மேன்மையான யுதத சௌரியம படைத்த புருஷ சிஙகமான அர்ச்சுனராஜன் முன்னாலே தன் பெண்சாதியாகிய சுபததிரா தேவியின் சநதோஷ சமுததிரத்திலே தோயந்து விளையாடியவன் மெயயான தீரதத யாத்திரைக்குப போகவேண்டுமென்று எண்ணினான்.

தாயரைப் பணிந்தனன் றருமர் செலவனை
வாயுவின் மதலையை வணங்கித் தம்பிய

ராயவ ரிருவர்வந் தடிவ ணங்கினாக்
காயுவுண் டாகவென் றாசி கூறியே (3)

தாயாராகிய குந்திமகா தேவியையும் மூத்தவராகிய தாமபுத்திரரையும் வாயு குமாரனாகிய பீமசேனனையும் வணங்கி அவர்கள் வாக்கினாலே ஆசீர்வாதம் பெற்றுத் தனக்குத் தம்பிகளாகிய நகுல சகாதேவர் இரண்டுபேர்களும் வந்து வணங்க அவர்களுக்கு தீர்க்காயுசாயிருக்கக் கடவீரென்று ஆசீர்வாதம் செய்தான்

எங்கணும் பரவுகாண் டீப நாமொடு
செங்கையி லெடுத்தொரு தேவ தத்தமாரு

சங்கமுங் கவசபந் தனமும் புங்கவப
புங்கமுந் தூணியும் புறத்து வீக்கினான் (4)

எங்கும் புகழ்ந்து சொல்லப்பட்ட நாணுடனே கூடிய காண்டீபத்தைக் கையிலே எடுத்து மற்றொரு கையிலே தேவதத்தமென்னும் சங்கத்தைத் தரித்துக் கவச முதலியன அணிந்து அர்ச்சுனராஜன் அம்புடனே கூடிய அம்பறாத்தூணியையும் முதுகில் கட்டினன

தவுமியற கியாத்திரா தான நல்கினன்
சவுமியத தொடுதினந் தன்னைக் காததருள

சவுரியைப் பணிந்தனன் றகுதி யோருடன்
கவுரவங் கடந்தனன கங்கை யெய்தினான் (5)

தௌமிய முனிவர்க்கு யாத்திரா தானம் கொடுத்துப் பெருமையுடனே அனுதினமும் தன்னைக் காக்கின்ற பரதேவியைப் பணிந்து தன்னோடுபோலும் தீர்த்தயாத்திரைக்குப் போகிற போகளுடன் கௌரவதேசம் கடந்து கங்கா தீர்த்தத்திற்கு வந்தான், அர்ச்சுனராஜன

கங்கைமா நதிமணி கர்ணி காநதி
தங்கிய கயைநதி சரயு நன்னதி

துங்கபத திரைசர சுவதி கணடகி
பொங்குகா ளிந்தியம் போதி சங்கமே (6)

அந்தப்படி கங்காநதி மணிகர்ணிகை, கையைநதி, நன்மையாகிய சரயூநதி, துங்கபத்திராநதி, சரஸ்வதி, கண்டகிநதி, பிரவாகமான காளிந்திநதி, கங்காநதி

நிருமதை சிந்துவே நீல வேணியே
முரிதிரைக் கம்பைபொன் முகரி கோமுகி

திருவளர் சோணபத் திரைவி சாலினி
விரவுபம் பாநதி வீம மானதி (7)

பின்னும் நருமதாநதி, இந்துநதி, நீலவேணிநதி, அலைபொருந்திய கம்பாநதி பொன்முகரிநதி, கோமுகைநதி, லக்ஷ்மிவாஸமாகிய சேரண பத்திராநதி, விசாலமபொருந்திய பம்பாநதி, வீமாநதி

சித்திசேர் பாலினி திகிரி தீர்த்தமே
முத்திதந் தருண்மணி முத்த மாநதி
பத்தகு கெடிலவெள் ளாறு நந்தியென்
றித்தம நதிகளி லுவந்து மூழ்கியே (8)

மற்றும் சித்தி கொடுக்கப்பட்ட பாலிநதி, சக்கர தீர்த்தம், முத்தி கொடுக்கின்ற திருமணி முத்தாநதி, கெடிலநதி, வெள்ளாறு, நந்திநதி ஆகிய இப்படிப்பட்ட உத்தமமான நதிகளிலெல்லாம் வந்து தீர்த்தமாடினான் அர்ச்சுன ராஜன்.

கண்ணுத லொருதிருக் காட்சித தாகிமற்
றெண்ணுத லொடுபிரண் டுருவ மாகியே
யெண்ணிலா வடிவுகொண் டிருந்த தன்மைபோ
னண்ணிய காவிரி நதியை நண்ணினான் (9)

நெற்றியிலே கண்படைத்த பரமசிவனானவர், எங்கும் நிறைந்த ஒரு காட்சியாயப் பின்னும் பார்வதியை அர்த்த பாகத்திலே வைத்து இரண்டு ரூபமாயப் பின்னும் எண்ணப்படாத ரூபங்களுடன் உலகத்திலே வியாபித்திருப்பதுபோல முதலில் ஒரு ரூபம் படைத்து அப்பால் கங்கை முதலாகிய நதிகளெல்லாம் ஒன்றுகூடி வரும் திருக்காவேரிக்கு வந்தான் அர்ச்சுனராஜன்.

சீர்பெறு மகரரா சியி லருக்கனா
சார்வுறு சோமவா ரத்த மாவசை
நேருறு பொன்னிநன் னீரின் மூழ்கியே
பாரனன் பிதிர்தருப் பணங்கள் பண்ணினான் (10)

சிறப்பான உத்தராயணம் பொருந்திய புண்ணிய காலமான தைமாதத்திலே வருகின்ற சோமவாரத்தொட்டிய அமாவாசை வந்தடுத்த புண்ணிய தினத்திலே காவேரியிலே ஸ்நானம் பண்ணிப் பிதிர் தேவதைகளுக்குத் திலதர்ப்பணம் பண்ணினான், அர்ச்சுனராஜன்.

மற்றுள நியமமும் வனிதை பாகற்கு
முற்றுறு பூசையு முடித்து நன்சுவைச்
சிற்றுண வருந்தினன் றீர வாசமாய்
அற்றைநாள் வீற்றிருந் தனன ருச்சுனன் (11)

பின்னும சந்திவந்தனை யனுஷ்டானம் செய்து முடித்துப பார்வதி பாகனுன பரமசிவனைப் பூஜை செய்து நன்மையாகிய ரசம் பொருந்திய சிற்றுண்டி பலகாரங்களைப புசித்து நிராவாசமாய் அன்றைக்கு இருந்தான் அர்ச்சுனராஜன்.

அன்றுபோய் மறுபக லரிய காவிரி
மன்றனீர் படிந்துசெய் வந்தனைக்கட
னன்றுற முடித்தன னவையில் பன்றிபோல்
வென்றிசேர் விசையன்முன் விமல னண்ணினுன் (12)

அன்று ராத்திரிகாலம சென்று விடிந்தபின் பிறகு மறுநாள் காலமே காவேரி தீர்த்தமாடித் தான் செய்யபபட்ட நித்திய கர்மங்களைப பகதி யுடனே செய்து முடித்தான். பின் பரமசிவன் வராக ரூபங்கொண்டு வெற்றி பொருந்திய விசயன் முன்னே தோன்றி நின்ருர்.

உருத்தெழு முகினிக ருடலும் வெண்பிறை
மருப்புநெட் டுயிர்ப்பெழ மலர்ந்த நாசியு
நெருப்பெரி விழியும்வெந் நிமிர்ந்த குஞ்சியுந்
தருக்கும்வச் சிரக்கவைத் தாளு மாகவே (13)

இடிஇடித்த மேகவர்ணம போன்ற சரீரமும் வெண்மையாகிய மூன்றும பிறைபோன்ற கொமபும் அதிக சபதம் பொருந்திய சுவாசமும அதினுடனே கூடிய விரிவாகிய நாசியும நெருபபுப் பொறி பறக்கின்ற கண்களும நெரித்து நிமிர்ந்த ரோமங்களும அசையாத வஜ்ரக் கவைபோன்ற பாதமுமாக.

திருவடி காணவுஞ் செகத்தைத் தாங்கவும்
பொருநர கனைப்படப் புடைத்து வேட்டைமேல்
வருசிவி காணவும் வருவ ராகமா
மொருவரா கத்தைநே ரொருவ ராகமே (14)

முன்னுளிலே விஷ்ணுவானவர் சிவன் பாதத்தைத் தேடுகிற நிமித்தம எடுத்த வராக ரூபமும லோக முழுவதையும சோமுகாசுரன் பாயாகச் சுருட்டிக் கொண்டு சமுத்திரத்தில் ஒளியும்போது லோகத்தை நிலைநிறுத்த எடுத்த வராக ரூபமும் வரப்பிரஸாதம பெற்ற நரகாசுரனை ஜயிக்க எடுத்த வராக ரூபமும் அதிகமான சேனையுடனே வேட்டைக்கு வந்த சிபிசக்கரவர்த்தி முன்னுகக் காணும்படி எடுத்த வராக ரூபமும் ஆகிய வராக ரூபமெல்லாம் ஒன்றாய்த் திரண்டு ஒரு வராக ரூபமாய் எடுத்ததற்குச் சமானமாயிருந்தது, எங்கும் ஏக ரூபமான பரமசிவன் எடுத்த வராகரூபமானது.

பைம்புனல் வேணியும் பார்த்தன் காண்டிபக்
கொம்படி பட்டதுங் குறித்தி லாதுநீ
எம்படி வேண்டியோ வன்பு வேண்டியோ
வம்பலர்க் கொன்றையார் வராக மானதே (15)

கங்காபவானியைத் தரித்த சடையிலே முன்னுள் தபசு பண்ணின அர்ச்சுனனுடைய காண்டீபத்தினாலே அடிபட்டதையும் பாராமல் இப்போது அம்பினாலே அடிபடவேண்டுமென்று எண்ணியோ, அல்லது இவனுடைய அன்பு வேண்டுமென்றோ அலர்ந்த கொன்றைமாலை தரித்த பரமசிவன் வராக ரூபமானது.

கருணைரத் தினம்பலக் கடவு ளாரெடுத்
தொருபதங் காட்டின ரும்பர்க் கந்தநா
ணிருபனர்ச் சுனற்கென நிமல மாமிரண்
டிருபதங் காட்டவென் றெடுத்த கோலமே (16)

கிருபா சமுத்திரம் பொருந்திய ரத்னசபா நாதர், நர்த்தனம் பண்ணும் போது எடுத்த பாதமொன்று மாத்திரம் தேவர்களுக்கெல்லாம் முன்னாலே காண்பித்தார். இப்போது அர்ச்சுன ராஜனுக்கு இரண்டு பாதமுங்காட்ட வேண்டுமென்றோ வராக ரூபமெடுத்தது

அறைகழற் கிரீடிமுன் னருட்பைஞ் ஞீலிவா
றிறைவனுங் கிரீடியா யினிதி னெய்தினன்
மறைவுகொண் டவரவர் வடிவைப் போலவந்
துறையுயிர்க் கருள்செய்வ தொருவன் றன்மையே (17)

வீரகண்டாமணிதரித்த பாதனுகிய கிரீடியின் முன்னே திருப்பைஞ் ஞீலி வாஸனுன சிவன கிரீடியாய் வராக ரூபமெடுத்து வந்தார் மறைவாகி அவரவர் ரூபம்போலிருந்து அந்த ரூபத்திலடங்கின உயிருக்குயிராயிருந்து அருள் செய்யும் செயலுடையவர் ஈசன்.

வேழமூண் டெதிர்த்ததா மெனச்சி னத்துமுன்
கேழல்வந் தெதிர்த்தது கிரீடி கண்டனன்
றாழ்விலான் றனதுகைத் தனுவெ டுத்தன
னேழ்பெரும் பவத்தனு மினியெ டுத்திலான் (18)

மதயானையானது கோபமூண்டு எதிர்த்துச் சினந்து வருவதுபோல் முன்னுக வந்த வராகத்தைக் கிரீடியாகிய அர்ச்சுனன் கண்டான். கண்டவுடனே

தாமதியாமல் தன் கையிலே இருக்கின்ற வில்லை எடுத்தான், எழு பிறவியைத் தருவதாகிய சரீரத்தை இனி எடாதவனாகிய அர்ச்சுனன்.

வேணிவெண் பிறையணி விமலன் மாயையாற்
றாணியுந் தரித்தனன் றலங்கு காண்டிப
காணியைப் பூட்டின னயர்ந்து தன்னிரு
பாணிவெஞ் சிலையொடு பகழி பற்றினன் (19)

சடையிலே மூன்றாம்பிறை தரித்த சிவன் எடுத்தருளிய வராக ரூபத்தைக்கண்டு அமபறாத்தூணியை புஜத்திலே கட்டிக்கொண்டு பிரகாசமான காண்டீபத்திலே நாண் பூட்டி சௌரியத்துடனே இரண்டு கையினாலும வில்லைபபிடித்து பாணங்கள் தொடுததான.

வெம்புறு வராகத்தின் மீதி லேவெகுண்
டம்புகள் செலுத்தின னம்பெ லாஞ்சிவ
சம்புவின் மேற்படா தகன்ற தன்மையாய்
நம்புவா ரெறிந்தகன் னனின மானதே (20)

கொடுமையான ரூபம படைத்துத் தோன்றி வந்த வராகததின் பேரிலே வெகுண்டு பாணபபிரயோகம பண்ணுமபோது அந்தப பாணங்களெல்லாம சிவன் பேரிலே படாமல் விலகிபபோயின. அது எதைப போல வெனில் சிவபெருமானை நம்பின சாக்கியநாயனார பகதியினால் எறிந்த கல்லானது தாமரை மலா ஆனது போல்.

விட்டவெங் கணையெலாம் விலங்கிற் றென்னமீண்
டட்டிடு சினத்தினோ டசனி கக்கிடத்
தொட்டனன் கணைபல தொடர்ந்த பன்றியி
னெட்டுயிர்ப் பவையெலா நீக்கி விட்டதே (21)

அர்ச்சுனன் தான் விட்ட பாணமெல்லாம் விலகிப போயினவென்று திரும்பவும் அதிக கோபத்துடனே ஆகாசததில் இடியுதிரும்படி அநேக பாணங்களைத்தொடுத்து விட அநதப பாணங்களெல்லாம் சமீபமாகத தொடர்ந்து வருகிற பன்றியினுடைய சுவாசத்தினாலே விலகிபபோயின.

உரன்பெறு வரங்களா லுயர்ந்த மந்திர
சரங்கள்வாங் கினன்றொடிற் றவறொ ழொதெனச்
சிறந்தநம் பரன்றன திருவு ளத்திலே
தரந்தமா மாயைகள் காட்ட வுற்றனன் (22)

பலமாகிய தவங்கள் செய்து வரப்பிரசாதங்களிலே உயர்ந்த மந்திரக் கணைகளைத் தொடுத்து விடும்போது, தவறலாகாதென்று பரமசிவன் மனதிலே எண்ணி அவன் கண்ணில் காணுமல் மறைந்து பின்னும் மாயை காட்டலானார்.

தோற்றிடுங் கிழக்கிலா சுகந்தொ டுக்குமுன்
மேற்றிசை தனிலவரு மென்று முன்னமே
காறறென வடதிசை காணுங் காணுமுன்
தோற்றுரு தெழுந்துதென் றிசையி னிற்குமே (23)

பின்னும் மாயா ரூபங்கொண்டு கீழ்திசையில காணும்படி தோன்ற அது கண்டு பாணம தொடுப்பதற்கு முன்னமே மேல்திசையிலே வரும மேல் திசை நோக்குகிறதற்கு முன்னமே வாயுவின் விசைபோல் வடதிசையில் காண்பிக்கும். அதற்கு முன்னமே கண்ணுக்குக் காணுமல அதிர எழுந்து தெனறிசையிலே நிற்கும.

நீலமா முகிலென நேரு நேர்படு
கோலவெண் முகிலுருக் கொண்டு பின்வரு
மேலவே செழுமுகி லென மருங்குறு
போலிய பசியவெம் புயலிற் றேன்றமே (24)

காரமேகம போல் முன்னுகக்காண்பிககும. பின்னும வெண் மேக ரூபங் கொண்டு பின்னுலே காண்பிககும பின் செவ்வான வாண மேகம போல் ரூப மெடுக்கும். பசுமை மேக வடிவெடுத்து இரண்டு பககமும தோனறிவரும.

இடியிடித் தெனக்கணைத் தெடுக்குந் தாள்களாற்
படியதிர்ந் திடத்திறற் பார்த்தன் சென்னிமே
லடிகளபட் டிடக்குதித் தகன்று போகுமிப
படிநடத்தி னதுதற் பரன்கொள கோலமே (25)

இடி இடிபபதுபோல் கர்ச்சித்துப பாதத்தைத் தூக்கிப பூமியெல்லா மதிருமபடி அர்ச்சுனன் சிரசின்மேலே பாதம படும்படி யேறிகுதித்து அப்பால் விலகிப போகும. இபபடி திருவிளையாடலாகப பரமசிவன் வராக ரூபங்கொண்டு நடத்தினர்.

சென்றவின் ணளவுயர்ந் திடுகண் டாவனத்
தன்றுதீ மடுத்தவென் ஞண்மை வன்மையைப்
பன்றியோ மலைப்பதிப் படியென் றர்ச்சுனன்
வென்றிவா ளெடுத்துறை விடுத்து வீசுவான் (26)

தேவலோகமளவாய் வளர்ந்த காண்டவனத்தை அக்னிக்கிரையாகச் செய்வித்த என்னுடைய சௌரியமெல்லாம ஒரு பன்றியோ இபபடி மலைக்கப பண்ணுவதென்று அர்ச்சுனன் வெற்றி பொருந்திய வாளை யுறையைய விட்டுக கையிலெடுத்து வீச மனதிலெண்ணினான்.

காண்டி பத்துடனடு கணைதொ டாமலே
பாண்டுவின் மதலைவெம் படைகைக் கொண்டதை
யாண்டகை நோக்கிரா கவனுண்டாக் குபோர்
பூண்டபூந் தடஞ்சனைப் புனலின் மூழ்கினான் (27)

காண்டீபமாகிய தனுசிலே பாணம தொடுத்து விடாமல் பாண்டுமகா ராஜன் புத்திரனாகிய அர்ச்சுனன் ஆயுதம கையிலெடுத்ததைப பரமசிவன் பார்த்து முன் ராமர் உண்டாக்கிய ராகவதீர்த்தமாகிய சுனையின் தீர்த்தத்துக் குள்ளே பதுங்கினார்.

கேழலுங் தனைத்தொடர் கிரீடி தன்முனே
மூழ்கிடச் சினத்தொடு முனிவு மீறினு
ழும்புன லிறங்கின னருட்பைஞ் ஞீலியார்
வாழிய லிலிங்கமாய் வடக்கிற் றோன்றினர் (28)

வராகத்தைப் பின்தொடர்ந்துபோன அர்ச்சுனன் காணும்படி முன்னதாக தீர்த்தத்திலே மூழ்கி ஒளித்ததைக்கண்டு கோபங்கொண்டு ஜலத்திலே ஆழத் தில் இறங்கினான் அப்போது கிருபா நிதியாய்த் திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளிய சிவபெருமான் வடபாரிசத்திலே சிவலிங்க ரூபமாய் எழுந் தருளினா

கண்ணகன் மகன்மலர்க் கண்ணன் மைத்துனன்
கண்ணுத லிடைவிடாக் காத லாயினன்
விண்ணின்மண் ணுலகினில் விசைய பூபதி
பண்ணுமா தவத்தையார் பண்ணத் தக்கதே (29)

அகண்ட கண்கள் ஆயிரம் படைத்த தேவேந்திரனைப் பிதாவாகவும் செந் தாமரைக் கண்ணனாகிய கிருஷ்ணனை மைத்துனனாகவும் படைத்த அர்ச்சுனன், நெற்றியிலே கண்படைத்த பரமசிவன் பேரில் இடைவிடாமல் அன்பு பூண் டான். ஆதலால் தேவலோகத்திலோ பூலோகத்திலோ இந்த அர்ச்சுனன செய்த தவத்தைப்போல் யாவர் செய்ய முடியும?

சுனையினுத் தரத்திலே தோன்று நின்மலன்
றனையிரு விழிகளாற் றகவி னோக்கிய

கலைகழ லருச்சுனன் காண வந்தன
ரிலையபேர் வசிட்டர்தாற் பியரென் போர்களே (30)

கலைக்கு வடபாரிசமாக எழுந்தருளின சிவலிங்க ரூபமான சிவலை இரண்டு கண்களினாலேயும் கண்ட வீரகண்டாமணி தரித்த பாதனை அர்ச்சுனராஜனைக் காணும்படி வந்தார்கள், வசிஷ்டர் தாற்பியரென்று பெயர் படைத்த ரிஷிகள்

வசிட்டர்தாற பியரெனு மாத வததிறை
றிசைபுகழ் முனிவரர் செய்ய தாளிணமே
லிசைப்புறு துதியெடுத் தினிதி றைஞ்சினான்
முசிப்பிலாய வாழ்கென முனிவர் கூறினார் (31)

வசிஷ்டர் தாற்பியரென்று மகாதபசினாலே நாலு திசையும் புகழ்படைத்த ரிஷிகளுடைய பாதம் பணிந்து துதித்தான், அநேக காலம் வாழ்வா யென்று அர்ச்சுனனுக்கு அவர்கள் ஆசீர்வாதம் பண்ணினார்கள்.

மிகுத்தியாத திரைசெய்கா விரியின வந்தமை
பகுத்திடா வடிவொடு பனறி வந்தமை
வகுத்திடு சிவலிங்க மயமுளு செம்மைமேய
தொகுததனன் முனிவர்நெஞ் சுருகிக் கேட்டனா (32)

இப்படி வணங்கி அர்ச்சுனராஜன் சொல்வான். தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுக் காவேரி நதிக்கு வந்ததும் சொல்லுதற்கியலாத ரூபத்துடனே வராக ரூபமாய் வந்ததும் பின்பு சீராததகரையிலே சிவலிங்கமாகத் தோன்றினதும் சொன்னான். ரிஷிகள் மனங்கனிவாகி உருககததுடன் கேட்டார்கள்.

கேட்டலு முனிவரர் கிளத்து வார்திறல்
வாட்டடம் புயாசல மன்ன வெள்வரை
நாட்டுபைஞ் ஞீலியி னுதனார்விளை
யாட்டெவர் கண்டுதோந் தறிய வலலரே (33)

இதுகேட்ட வசிஷ்டர் தாற்பியர் இருவரும், பலத்துடனேகூடி புஜவி சாலம்படைத்த அர்ச்சுனராஜனே, முத்துமலையாகிய திருப்பைஞ்ஞீலி நாதர் திருவிளையாடலை ஒருவர்தெரிந்து அறியவல்லவரோ.

பொன்னைவாய்த் துறுகலைப் பூவை யாகிய
மின்னைவாய்த்த திருப்பவா விணணில வாசவன்
றன்னையாட படைத்தமுத தசலச செல்வனு
முன்னையாட கொளபபடைத துடைய கோலமே (34)

லக்ஷ்மி நாயகனாகிய மகாவிஷ்ணுவையும், சரஸ்வதி நாயகனாகிய பிரமதேவனையும், தெய்வலோக நாதனான தேவேந்திரனையும், ஆட்கொண்டருளிய முத்தமலை வாசனான பரமசிவன் உன்னை யாட்கொள்ளவேண்டி இப்படிவாக ரூபமெடுத்தது.

இயம்பிய விதிமுறை யீசர் பாதபங்
கயங்களை யிறைஞ்சியார் கருத்து மேவுசின்
மயன்றனை நீலிகா வனத்தில் வாழ்சிவ
சயம்புவைத் தனஞ்சயா சரண்பு காவென்றார் (35)

அப்படிச் சொல்லிய பின்னும் விதிமுறைதப்பாமல் விஷ்ணுவினுடைய பாதாரவிந்தங்களை வணங்குகின்ற பெரியோர்கள் மனதிலே அகலாமலிருக்கின்ற சின்மயரூபனை நீலிகாவனத்திலே வாழும் சுயம்புமூர்த்தியை அர்ச்சனை பூஜைசெய்து போற்றுவாய் என்றார்.

அம்முறை பூசைசெய் தவர்க டம்மொடு
நின்மலன் மருவிரி நீலி காவனத்
தெம்மையா ளுடையவ னிருக்கை சேர்ந்தனன்
மெய்ம்மைசேர் கவுரவ விசய ராசனே (36)

அந்தப் பிரகாரம் சுவாமியருகே எழுந்தருளிய சிவலிங்கத்தைப் பூஜைசெய்த பின் அந்த ரிஷிகளோடுங்கூடி வாசனைபொருந்திய நீலிகாவனத்திலே எங்களை யாட்கொண்டருளிய நிமலன் எழுந்தருளிய ஸந்நிதானத்துக்கு வந்தான் மெய்படைத்த கௌரவகோத்திர விஜயராஜன்

ஆங்குவந் திருந்தசுந் தரிய தத்திறை
றேங்கிய மங்கள தீர்த்த மாடினான்
பாங்குபெற் றிடுமகா பலவி நாயகர்
பூங்கழ லருச்சனை புரிந்து போற்றினன் (37)

அப்படி அவ்விடத்திற்கு முன்னாலே வந்திருந்த தூக்கை யானவன் தன்னுடைய பாதத்தினாலுண்டாக்கின மங்கள தீர்த்தத்திலே ஸ்நானமபண்ணிப் பாங்கு படைத்த மகா பலவிநாயகர் பாதாரவிந்தங்களை அர்ச்சனை பண்ணிப் போற்றினன்.

சேணொடு புவனமெண் டிசைக டாள்களை
வாணொடு முடியென வாய்த்த சோதியாங்
தாணுரத் தினம்பலத் தமலச் சோதியை
நீணொடுங் கணியுட னிருப்பக் கண்டனன் (38)

ஆகாசத்துடன் இருபத்துநான்கு புவனங்களையும் அஷ்டதிக்கும் கடந்து சந்திர கிரகணம்போல் நாதவிந்து முடிவிலே ஜோதி ரூபமாய் விளங்குகிறவனாகிய ரத்ன சபாபதியை நீள்நெடுங்கண் படைத்திருக்கின்ற விசாலாக்ஷியுடன் எழுந்தருளி யிருப்பதைக் கண்டான்.

கண்ணனூர் மலர்விழிக் கமல பாதமுந்
திண்ணனார் விழிதரித் திருந்த கண்களுந்
தண்ணநாண் மதியணிச சடையுஞ் செக்கர்வான்
வண்ணமா மேனியார் வடிவுங் கண்டனன் (39)

செந்தாமரைக் கண்ணனான மகாவிஷ்ணுவானவர் தமது கண்மலரைத் தாமரைப் பூவாகப் பாவித்து அணிந்த பாதமும் திண்ணனாராகிய கண்ணப்பர் தம் கண்ணை வாங்கித் தரித்த விழியையும் குளிர்ந்த சந்திரனைத் தரித்த சடையையும் செவ்வானத்தைப் போன்ற மேனியையுமுடைய பரமசிவ ரூபத்தையும் கண்டான்.

மருச்சரு வியமலர் மஞ்சனங் கள்கொணா
டருச்சனை யருச்சுன னருச்சித் தேத்தினன்
றிருச்சர ணம்புயந் தெரிசித் தோர்களுக்
குருச்சனி யாதருளு மையை யீசனை (40)

வாசனைபொருந்திய புஷ்பங்களும், திருமஞ்சனமும் கொண்டுவந்து அர்ச்சுனராஜன் அர்ச்சனைசெய்து பணிந்தான், இரண்டு பாதாரவிந்தங்களையும் தரிசித்தவர்களுக்குப் பிறவியை நீக்கி அருளுகின்ற பார்வதி பரமேச்வரர்களை

பொன்னிநீர் படிந்துமுன் பொருவ ராகமாய்
மன்னிய கடவுளை வணங்கி மாளிகைச
சென்னிவா னளாவிய திருப்பைஞ் ஞீலிவாழ்
மின்னொரு பாகனை விரும்பிப் போற்றியே (41)

காவேரியில் ஸ்நானம்பண்ணி சண்டை செய்யும் வராகரூபமெடுத்துப் பின்பு ராகவதீர்த்தத்திலே மறைந்த வடபாரிசத்திலே லிங்கரூபமான சிவனை அனுதினமும் பூஜைசெய்து வணங்கி மாடகூட சிகரமானது மேகமண்டலமளாவிய திருப்பைஞ்ஞீலியில் பார்வதி பாகனையும் பூஜைசெய்து போற்றினான் அர்ச்சுனன்.

புனஞ்சரித் துடலிளைப் பொடுவெ றுப்பிலே
மனஞ்சகித் திருந்தவர் வாசம் போற்றியுந்

தினஞ்சகத் திரந்தரந் திருவி ருப்பினைத்
தனஞ்சயன் வலஞ்செய்தர்ச்ச னையுஞ் செய்குவான் (42)

புனங்களிலே சஞ்சரித்து உடலிளைப்பொடு வெறுப்பினால் மனஞ்சலித்திருக்கும் முனிகளை வணங்கி அனுதினமும் ஆயிரம் பிரதக்ஷணம் விருப்பத்துடனே அர்ச்சுன ராஜன் செய்துகொண்டு அர்ச்சனையும் தவறாமல் செய்து வந்தான்.

புரிந்துறை நாளிலே புயல்பெ யாதுபுற்
கரிந்துயர் தருக்களுங் கமல வாவியும்
பொரிந்தரு நதிகுளிர் புனலி லாவகை
யெரிந்தது மேடசூ ரியன கோரமே (43)

இப்படிப் பிரதக்ஷணம் செய்து பூஜைசெய்து வருகிற நாளிலே மேகங்களானது மழை வருஷியாமல் புல் பூண்டுகளெல்லாம் தீய்ந்து தடாக முதலியன ஜலமில்லாமல் வற்றிக் கமர்விட்டுப் பானம் பண்ணத் தீர்த்தமில்லாமல் போயிற்று மேஷத்திலே சூரியன் வந்த சித்திரை மாதமாகையால்

தவர்களும் புவிபுகழ் தலத்தில் வாழ்பவ
ரெவர்களும் வருந்தினு ரிரங்கி யர்ச்சுன
னவமில்லைபைஞ் ஞீலியுத் தரத்தில் வாளெறிந்
துவரிபோற் கொணர்ந்தன னுதக நீததமே (44)

தவஞானியாகளும பூலோகததார முதலான போகளும வருந்துவதைக கண்டிரங்கி அர்ச்சுனன் குற்றமில்லாத திருப்பைஞ்ஞீலிககு வடபாரிசத்தில் ஆயுதத்தை எறிந்து பாதாள சமுத்திரததை அழைப்பித்தான் நன்மை பொருந்திய ஜலத்துடனே.

திண்மைசேர் வயிரவாள் செலசசெ லுத்தியே
மண்மிசைக் கயங்கொணர் வதுவி சித்ரமோ
தண்முகி லூர்திபா ற சரந்தொட் டாதினுள
விண்மிசைக் கயங்கொணர் விசய ராசற்கே (45)

திறமை பொருந்திய வயிரவாளைச் செலுத்தி சமுத்திரம்போலும் தடாகம் கொண்டு வந்தது விசித்திரமோ, முன்னாளிலே மேகத்தின்மீது பாணம் விட்டு ஆகாச கங்கையாகிய தடாகத்தைக் கொண்டுவந்த விஜயராஜனுக்கு,

இவ்வண மருச்சுன னிருக்கு நாளினி
னவ்வினீ ணயனியு நாத னரும்பவர்

தெவ்வமில் வரங்கொடுத் தினிது நோக்கிமற்
றவ்வர சனுக்கிவை யருளிச செய்குவார் (46)

இபபடி அர்ச்சுனன் பூஜை செய்துகொண்டிருக்கிற நாளிலே செவ்வரி யோடுகூடிய நீண்டுநெடுங்கண்ணுமமையும் நீலிவன நாதரும பிரத்தியக்ஷமாய் எழுந்தருளி வேண்டிய வரங்களும அருளி அன்பாயப பார்த்துப பின்னுமருளு வார்.

வசைதவிர பூசையால் வராக மாகிமீண்
டிசைபுனல் குளித்திட மிராகவப பெயர்ச
சுசிதரு கரைபுக்க துறையென் றாகவே
பொசிவுறு தலஞ்சுனைப் புகுநல் லூரதே (47)

இகழ்ச்சியில்லாத பூஜை கொண்டருளவேண்டி வராக ரூபமாக அலை பொருந்திய ஜலத்தில் புகுந்த ஸ்ரீராம தீர்த்தமானது, சுசிபொருந்திய புக்கதுறை என்றாயது. அவ்விடத்தில் கரையினருகாக விளங்கிய பதியானது சுனைபுகு நல்லூரென்றாயது.

உனதுகை வாளெறிந் துதவு நன்னதி
யனுதினம் பெருகலின் னமுமு னேருநின
னனுசரும் படிகுவ ராத லானுல
கினியபஞ் சவர்நதி யென றுகூறவே (48)

உன்னுடைய கை வஜராயுதத்தை எறிந்து அழைப்பித்த நன்னதி அனு தினமும் வற்றாத தீர்த்தப பிரவாகமாகி இன்னும உன்னுடைய தமையனும தமபிமாரும் வந்து தீர்த்தமாடுவார்கள் ஆதலால் உலகங்களெல்லாம பஞ்ச பாண்டவா நதி என்று பிரசித்தமாகச் சொல்லககடவதென்று சிவன் திருவுளம பற்றினா

அன்பொடு சகத்திர மாகச செய்திடு
முன்பிர தக்கண முவந்த பான்மையான்
மன்பதை பரவியவ் வலம்வந் தோர்களுக்
கின்பவாழ் வுகளுமுத் திகளு நல்குவோம் (49)

பின்னும திருவுளம பற்றுவாா நீ அன்பினலே ஆயிரம பிரதக்ஷணம் நித்தியம் செய்தபடியினலே அபபடி ஆயிரம பிரதக்ஷணம் அன்புடனே யாதொருவர் செய்வாரோ அவர்களுக்கு இன்பமாகிய வாழ்வும் முத்தியும கொடுப்போ மென்றார்

என்றுபல் வரங்கொடுத் திறைவன் மாதொடு
நின்றுவா னகத்தினமின் னெனம றைந்தனன்
மன்றுசேர் நீலிகா வனம்விட் டன்பொடு
சென்றனன் கவுரவஞ் செழித்த பார்த்தனே (50)

இப்படி பலவிதமாகிய வரபிரஸாதங்கள் கட்டளையிட்டு பரமேசுவரன் பார்வதியோடுகூடி அந்தரத்தானமாக மின்னல் போல் மறைந்தருளினார். ரத்ன சபை பொருந்திய நீலிகாவனம் விட்டு அன்புடனே கௌரவ தேசத்துக்கு அர்ச்சுனராஜன் போனான்.

## வேறு

மேகாரூ டனுக்கினிய சுதனெழின்மன் மதனைநிகர்
விசையன் மேன்மை
லோகாலோ கமுந்தாவிப் படர்ந்தபுகழ்க் குடந்தைமன்னற
குரைத்தா னன்றே
யாகாயம் பூமிபுடை புடைக்கநின்றார்ப் பரித்துவரிக்
கரசைச சாரப்
போகாதே காவிரிநீ யதோகதியே கதியெனப்போ
போவென் றானே (51)

மேகவாகனனான தேவேந்திரனுக்கு இனிய புத்திரனாகிய மன்மதனுக்கு நிகரான அர்ச்சுன ராஜனுடைய சரித்திர மிதுவென்று பதினாலுலோகமும கீர்த்திக் கொடியானது பரந்து விளங்கிய கும்பகோண சந்திரபீட சோழராஜனுக்குத் திருவுளம பற்றினார், பூமி ஆகாச மெல்லாம அதிரும்படி கர்ச்சிக்கின்ற சமுத்திர ராஜனுக்குச் சாரவாகப போகாதே யென்று காவேரியை அதோகதியாய்ப போகக் கட்டளையிட்டுத் திருமபவும கைஜசகை காட்டி போகச் சொன்ன அகஸ்திய மகாரிஷி.

---

## இருபத்தொன்றாவது—சிவமித்திரன் பூஜையின் மகிமை

இணைச்செவிக்கின் னமுதமென வினவியமன் றிணைச்செவிகட்
கினிமை கூரப்
பணப்புயங்கக் குழையணிபைஞ் ஞீலியண்ணல் சரிதையின்னம்
பகர்நீ யென்னத்

தணப்பரிய மலமாயை யிருட்போக வருபோதந்
 தருதல வேண்டிக்
குணக்குதித்த கதிரெனத்தெக் கணத்தினிலவந் துதித்தமுனி
 கூறு கின்றான் (1)

சர்பபத்தைத குழையா யணிந்த செவிபடைத்த திருபபைஞ்ஞீலி நாத குடைய சரிததிரஙகளை இன்னும திருவுளம பறற வேணடுமெனறு கேட்க நீஙகுதற்கரிதாகிய மாயையாகிய இருளைப போககி ஞானப பிரகாசம அருள வேண்டிக் கீழ்திசையிலே உதித்த சூரியனைப போல் தக்ஷிணத்திலே வந்தெழுந் தருளிய அகஸ்திய ரிஷி அவ்வரசனுடைய இரண்டு செவிகளுக்கும அமிர்த மெனுமபடி கூறுகிறா

எதுபிறருக் கிதமின்றித் தனக்குமறு மையிலிதந்தந்
 திடும காத்மிய
மெதுபாவ வினைதீர்த்து நல்வினையின் பயன்கொடுக்கு
 மின்ப நீதி
யெதுமோட்ச விததாகி யதிகவுண்மை யாகுமிதி
 காச காவய
மெதுவோமற் றதுவுனக்குச சொல்வோங்கே ளெனமுனிவ
 னிசைக்க லுற்றான் (2)

பிறருககுத் தீமை தராததும தனககு மறுமையில் பலததைக கொடுபபது மாகிய மகாத்மியம எதுவோ அதனை யாவது, ஜனமாநதிர பாபவினைத தொடர்ச்சி யெல்லாம தீரத்து நல்வினையாகிய புண்ணியததைக் கொடுபபதுமாகிய இன்ப நீதி எதுவோ அதையாவது மோக்ஷஙகளுககு விததாய அதிக ஞானங்களைக் கொடுபபதாகிய இதிகாச காவிய புராண முதலியவைகளில் எதையாவது கேட்பாய்; உனக்கு எது வேணடுமோ அதைககேள், சொல்வோம் என்று அகஸ்திய மகாரிஷி சொல்லத் தொடஙகினா.

ஈசனுறைந் திருக்கும்விருத்த காசியிலோர் வேதியனோ
 டியநால் வேதன்
பேசுறுசாத் திரபுராண சத்தமுத னிபுணவிதயாப்
 பிரபல சீலன்
மாசகலுத் தூளனநெற் றியிற்றிரிபுண் டரனுருத்திர
 மாலா லோலன்

றேசுதிகழ் பஞ்சயஞ்ஞ மித்திரனவன் பெயர்சிவமித
திரனென் போனே (3)

பரமேச்வரன் எழுந்தருளியுள்ள விருத்தா ஜலத்திலே ஒரு பிராமமணன நான்கு வேதம ஆறு சாஸதிரம பதினெண் புராணஙகள் முதலிய சகல வித்தைகளிலேயும் நிபுண வித்தியாப பிரபல சீலனுயும தாவள்ளியமான விபூதி நெற்றியில் திரிபுண்டரமாகத தரிபபவனுயும ருததிர விஷ்ணுவிலும அதிக கோலாகல நிலை படைததவனுயும பஞ்ச யகஞயஙகளைச செயபவனுயு மிருந தான். அவன் பெயர் சிவ மித்திரன்.

வசைதவிர்ந்த ஞாயவழி வந்தநிதி கொண்டுபல
மகங்கள் செய்தா

னசைவறவே வெகுகோடி யந்தணருக் கன்னசொன்னம்
வாரி யீய்ந்துந்

திசைபுகழ வுசிதகுண குசலரொடு முத்தநதித்
தீர மீதில்

விசுவசிதநென் ஞெருயாக முடிததான்பூ ரிகள்கொடுததான்
வேதத் தோர்க்கே (4)

சிவமித்திரன் என்னும பிராமமணன குற்றந்தவிர்நத நீதி வழியில் திரவியங் கொண்டு பலவித யாகங்களைச் செயது வெகு கோடி அநதணாகளுககு அன்னங்களையும சொாணங்களையும அளவில்லாமல் தானமாகக கொடுததான் பின் அஷ்ட திசையும புகழுமபடி உசித குணம படைதத மநதிராலோசனைக குரிய புததிசாலியான போகரோடுங் கூடி முததா நதி தீர்த்தம பொருநதிய விருத்தா ஜலத்திலே விஸ்வசிதநென்று பெயா படைதத ஒரு யாகம பண்ணி முடித்தான்; அபபோது பூரிதானஙகளும அளவில்லாமல் கொடுத்தான் வேத வல்லவாானபேர்களுக்கு.

வரிசைதிகழ் காசியிலே தனதுபிதா மகன்முடித்த
மகங்கள் போலே

யுரியதப வொடுபூசித் தறுசுவையூ ணிருநிதிவேண்
டுவன வீய்ந்தான்

புரிமகத்தி னிதிகள்செல வாதியதென் றவன்புதல்வன்
பொருந்தா ஞகி

யரியபொருள் போனதினி யாங்கள்பிழைத் திடும்வகையே
தய்யா வென்றான் (5)

வளமை பிரகாசிக்கின்ற காசியிலே தன்னுடைய பாட்டன் நிறை வேற்றின யாகங்களைப்போல் அதிக பக்தியோடும் கூடத் தன்னுடைய யாகத் திலே வந்த போகளுக்கெல்லாம் உபசாரத்துடனே அறுசுவையுடன் போஜனம் பண்ணிவைத்து அவர்கள் விரும்பியபடி தக்ஷிணைகளும் கொடுத்தான். இந்தப் படி யாகங்களிலே திரவிய மெல்லாம் செலவாவது அவன் பின்னையான அங்கமித்திரனுக்குச் சம்மதமில்லாமல் அரிதாகிய திரவிய மெல்லாம் செலவாயப் போயவிடுகிறதே இனி நாங்கள் பிழைக்கிறதற்கு வகை எப்படி அப்பனே என்று கேட்டான்.

அவ்வார்த்தை சொலக்கேட்ட வந்தணனே துரைத்தானென்
றரசன் கேட்ப
வெவ்வமுரைத திடுவதுனக் கடைவோகல வியினறிவி
னியறகை யானே
ரொவவாத கொடையாய்மிக் குடையானே யெனத்தயவி
னுணர்த்தி னுனென்
றிவ்வாறு வியந்துரைத்தா னவவேழுேன் பதுபணிரண்
டெனசசெய் தோனே (6)

அவ்வசனம் கேட்டபோது சிவமித்திரன் என்ன சொன்னுனென்று சந்திர பீட சோழராஜன் கேட்க அதற்குத் திருவுளம் பற்றுவார். இப்படி குற்றமான வார்த்தை சொல்வது உனக்கு நன்றோ, வித்தை, புத்தி, நடத்தைகளுடைய வனே, நிகரில்லாத தானங்களைக் கொடுக்கின்றவனென்று மிகுந்த பெயர் படைத்தவனே யென்று தயவாகச் சொல்லிப் பின்னுமிந்தப் பிரகாரம் போதிப் பான் சிவமித்திரனென்று இருபத்தெட்டு ஆகமங்களும் தெரிந்து தமிழிலுலே உண்டாக்கின அகஸ்தியமகரிஷி

சீரான வேளவிதனக் கிடையூறு நினைத்துமகன்
சினத்தாற சொன்ன
வேறுத வுரைகேட்ட வொருசிவமித திரனவெகுண்டா
னில்லை யன்றே
தேறுத சிறியர்முன்பின் பாராத வார்த்தை தங்கள
செவிப்பட் டாலு
நேராகப் பொறுப்பதுநன் றென்பதுபண் புளபெரியோர்
நீதி தானே (7)

சிறப்பான யாகத்துக்கு இடர் நினைத்து அங்கமித்திரன் சொன்ன ஏற்காத வார்த்தை கேட்ட சிவமித்திரன் அறிந்து கோபித்துக் கொள்ளாமல் பொறுத்திருந்தான் அப்படி பொறுமையாயிருந்தது ஏனென்றால் சிறியவர் புத்தியில்லாமல் முன் பின் பாராமல் தூக்குணம் படைத்த வார்த்தைகளைப் பேசினால் நற்குணம் படைத்த புத்திசாலியாகிய பெரியோர்கள் தங்கள் காதிலே கேட்டாலும், அறியாத புத்தியீனன் சொன்னானென்று பொறுப்பதே நல்லதென்றிருப்பார்கள் என்று மனதிலெண்ணி யிருந்தான்

தன்மகனுக் கறிவுறுத்தி நன்மகங்கண் முடித்திருந்த
தந்தை யாரை
வன்மனத்தோ டெதிர்ந்தழன்று கொதித்தெழுந்து மதிப்பகன்ற
வசனத் தாலே
சொன்முறைதப் பினனிதிக ளணிகள்கைக்கொண் டனையல்வைத
தொளித்தா னந்த
துன்மதிப்புத் திரப்பகைவ னபகரித்தா னுபகரணத்
தொகுதி யெல்லாம் (8)

இப்படி மனதிலெண்ணி யோசித்துத் தன்னுடைய குமாரனுக்குப் புத்திகளைப் போதித்து நன்மையாகிய யாகங்கள் நிறைவேற்றிய தகப்பனை மேற் கோபங்கொண்டு மதியாமல் வார்த்தை சொல்லி, இருக்கிற திரவிய ஆபரணங்களை யெல்லாம் கைப்பற்றினான்; அந்தத் துஷ்ட புத்திரனாகிய பகைவன் யாகத்துக்குச் சம்பாதித்த உபகரண திரவியங்களையெல்லாம் கைக்கொண்டான.

ஓங்குசிவ மித்திரன்மற் றிவைகண்டா னவைகொண்டா
னுவகை யிண்டான்
தீங்குணர்மைந் தனுக்குநன்மை யாங்குணமெப் படிவருமென்
செய்வே னென்பான்
பாங்கறியா ருதிப்பிடமும் பூங்கரும்பு நிகரன்றோ
பார்க்கி லென்பான்
ஏங்குவன்மைந் தனையீன்றும் வளர்த்துநமக் கிகபரங்க
ளிலையோ வென்பான் (9)

சிவமித்திரன் இதை யறிந்து மனதிலே குற்ற மெண்ணிச் சந்தோஷமொழிந்து பொல்லாத குணம் படைத்த பிள்ளைக்கு நல்ல அறிவு எப்படி வரும என் செய்வேனென்று பாங்கில்லாதபேர் ஜனித்த இடமும் கரும்பு பூத்ததற்கு

நிகரல்லவா என்று ஏங்கிப் பிள்ளையைப் பெற்று வளர்த்தும் இகலோக பரலோக சாதகமில்லாமல் போயிற்றே என்று வருந்தினான்

துன்பமுறு திலங்கையர்கோன் வரமும்வளங் களுந்திறமுந்
தொலைவில் சீரும்
பின்புதித்து வருவதொரு கொம்பினா லழிந்தொழியப்
பிழைவந் தாற்போ
லின்பமொடு பொருளறம்வீ டெனப்புகன்ற நால்வகைய
விலாபந் தானும்
வன்பினொடு முன்பொருகொம் புதித்துநிலைக் கொளாதவகை
மாய்க்குந் தானே (10)

துன்பத்துக்கிட மில்லாத லங்காபுரி வேந்தனாகிய ராவணன் பெற்ற வரங்களும் வளமைகளும் பலன்களும் தொலைவிலாத சிறப்பும் இவை யெல்லாம் அவனுக்குப் பின்னாலே பிறந்த சூர்ப்பணகையாலே யழிந்து அவன் பிராணனுக்கும் அழிவு வந்ததுபோல, தர்மார்த்த காமிய மோக்ஷ மென்னப்பட்ட நால்வகை லாபங்களும் புத்திரனாகிய அங்கமித்திரன் ஜனித்தபடியினாலே நமக்கு நிலை கொள்ளாதபடி யழிந்தன

பாபமீ றினுந்தீரும் பூசனையா லதிகநமன்
பகைத்து மூண்ட
கோபமீ றினுந்தீருந் தபோபலத்தி னன்முனிவோர்
குறித்துச் சொன்ன
சாபமீ றினுந்தீருங் குரவரருட் டெரிசனத்தாற்
சகிக்கொ ணாத
ரூபமாய் மைந்தனுக்குச் சத்துருவாய் வந்ததிந்த
லோபந் தானே (11)

ஜன்மாந்திர பாபங்களானது உயர்ந்தால் சிவபூஜை பலத்தினாலே தீர்ந்து போகும். நமன் பகைத்து மூண்ட கோபமானது உயர்ந்தால் தபோ பலத்தினாலே தீர்ந்து போகும். மகரிஷிகளாகிய பெரியோர்களின் சாபம் உயர்ந்தால் அது குரு ஸந்நிதான தரிசனத்தினாலே தீர்ந்துபோகும். அடங்காத கோர ரூபங்கொண்டு நமக்குப் பிள்ளையாக வந்தவனுக்குச் சத்துருவாய் வந்தடுத்தது தீராதலோபம்.

சீருடைமை குலமினிய நலம்வடிவு திறமைமிகு
செல்வங் கல்வி

பேருணர்வு பூசைதவ மானமர சாட்சிவலி
பெருமை யாண்மை
சாருமனு கூலம்வெற்றி பொறைநிறைசத் தியநியமந்
தரும மெல்லாஞ்
சேரவிருக் கினுமுமன் கண்டகன வுதாரமிலா
திருக்கிற் றனே (12)

சிறப்புகள், ஆபரணங்கள், குலம், நல்லரூபம், சௌரியமிருந்த செல்வம், வித்தை, பேருணர்வு, பூஜை, தவம், மானம், ராஜரீகம், அதிக பலம், பெருமை, பராக்கிரமம், சாரவாகிய அனுகூலம், ஜயம், பொறுமை, தவறுதநெறி, சொல் பிறழாத சத்தியம், சந்திவந்தனை, அனுஷ்டானம், தாமம இவைகளெல்லாம ஒன்றுகூடி ஒருவனிடத்திலே சதா காலமும சேர்ந்திருந்தாலும் அவனிடத்திலே உதாரகுண மில்லையானல் முன் சொன்னவைக ளெல்லாம் ஊமை கண்ட கனவுக்குச் சமானமாகுமென்று".

விருப்பிலான் மனைப்புசிப்பு நீதியிலான் றருமம்விளை
விலாத நாடு
மருப்பிலா மதயானை யுபதேச மிலானறிவு
வலிய சூர
ரிருப்பிலா வரசுகன தனமிலாத தெரிவையிசை
யில்லான் பாட
லுருப்பிலா னணிகலன்க ளுதாரமிலான் விதரணமே
ரொக்குந் தானே (13)

விருப்பமில்லாத பேருடைய மனையில் போஜனம், திரவியமில்லாதவன தர்மம, விளைவில்லாத நாடு, கொம்பில்லாத மதயானை, உபதேச மில்லாதவன் அறிவு, பலமான தீரசூர ரில்லாத துரைத்தனம், கனமான ஸ்தன் னியமில்லாத ஸ்திரி ஜாதி, இசை யில்லாத பாடல், ரூப பங்கமானவர்கள் அணிந்த ஆபரணம இவைகளுக்குச சமானமாகும உதார குணமில்லாத விதரணை படைத்தவனிடத்தி லிருக்கின்ற ஐசுவரியம்.

இனையபல புகன்றசிவ மித்திரன்வேற் றோரிடஞ்சென்
றிரந்து சேர்த்த
கனகமுந்தா னியமுமறப் பொருள்களுங்கொண் டினிமைதரு
காதல் கூர

மனமகிழ்வி னொடுமனைவி யுடனிருப்ப நிறைந்துபல
    மறையோர் சூழத்
தனதுமக முடித்தனன்கண் டடுத்தனன்றீ வினையுண்ட
    தனையன் றானே (14)

இப்படி பலபல விதமாய்ச் சொல்லி, சிவமித்திரன் விசாரப்பட்டு வேறே அன்னிய னிடத்திற்போய் பிச்சை வாங்கிச் சேர்த்த தன் தானியங்களினாலே யாகத்துக்கு வேண்டிய திரவியங்களெல்லாம் சம்பாதித்துக்கொண்டு, இன்பமாகிய ஆசையுடனும் கூடிச் சந்தோஷமடைந்து பெண்சாதியுடனே பக்கத்திலே நிறைந்திருக்கின்ற அநேக பிராமணர் சூழ யாகம் செய்தான். இதைக் கண்டு அடுத்தான் பாபமெல்லாம் ஒரு ரூபமாகப் பிறந்த பிள்ளையான அங்கமித்திரன்

தடுத்திடினு மகமுடித்த தந்தையைவந் தனக்குரிய
    தாயைத் தானும்
கடுத்தவசை கூறிவெகு வெடுத்திழுத்துத் தள்ளியுப
    கரண மெல்லா
மெடுத்தெறிந்து தந்துபுனை கும்பமுடைத் தந்தவழ
    லெரிமேற் றண்ணீர்
மடுத்தவித்துப் பசுக்களைவிட் டோட்டிமறை யவன்மனத்தை
    வாட்டஞ் செய்தான் (15)

தான் தடுத்தாலும் நிறுத்தாமல் யாகம் முடித்த தகப்பனையும் வந்தனத்துக்குரிய தாயாரையும் சீறி வசை வார்த்தைபேசிச் சரீரங்கள் துடிக்க இழுத்துத் தள்ளி யாகத்துக்கு வந்திருக்கிற திரவியங்களையெல்லாம் வாரி இறைத்து நூல் சுற்றியிருக்கிற கும்பங்களையெல்லாம் உடைத்து, அக்கினி குண்டத்திலே தண்ணீரைவிட்டு அணைத்துக் கட்டியிருந்த பசுவை அவிழ்த்துவிட்டு ஓட்டிச் சிவமித்திரனுடைய மனதை வாடும்படி செய்தான், அங்கமித்திரன்.

கேடனையு டெதிர்த்துமுன்னங் கவுசிகன்செய் யாகமெல்லாங்
    கேடு சூழ்ந்த
தாடகைபோல் வருவேத தூடணனை வீடணன்வா
    சகங் கேளாத
மூடனைப்போ லறிவிழந்த வசடனைப்போ ராடவரு
    முகடி மானு
ரூடனையுண் ணயனமிலாக் குருடனைச்சொற் பதடனைப்பார்த்
    தொருசொற் சொல்வான் (16)

கேடுபொருந்திய அங்கமித்திரனை, முன்னுளிலே கௌசிகன் செய்த யாகத்தை அழிவுசெய்த தாடகையைப போல்வந்த வேததூஷணனை, விபீஷணன் வார்த்தைகேளாத மூடனுன ராவணனைபபோல் அறிவுக்கட்டவனை, அசடனை, எதிர்த்துப போராடிவருகிற மூகமபடைத்த ஸ்திரீஜாதிகளுடனே கூடிப புணரபபட்டவனை, ஞானக்கண்கெட்ட குருடனை, பதரான வார்த்தை படைத்தவனைப பார்த்து ஒரு வசனம சொல்வான் சிவமித்திரன்.

வெறுத்தாலிங் கிவன்றனக்கு வேறுகதி யில்லையென்று
மிகையெண் ணுமற்

பொறுத்தாலு முனதுகெடு புத்தியினு லித்தனைவெம்
புலைநீ செய்தாய்

மறுத்தாய்தாய் தந்தையென்னு நேயமெந்தன் மகங்கெடுத்தாய்
வலிதுன் சீவ

னிறுத்தாது கவர்ந்திடமூத தினத்தில்வந்து மிருத்துவுன்னை
நேரு மென்றான் (17)

வெறுத்தத தள்ளிவிட்டாலும இவனுககு வேறுகதியில்லை, அல்ல என்று குற்றமபாராமல் பொறுததாலும உனனுடைய கேடுகால புததியினுலே இததனை பிழைகளை நீ செய்தாய்! தாய தநதையென்கிற நேயததை மறுத் தாய! எனக்கு ஆத்மார்த்தமான யாகததையும கெடுததாய! உன்னுடைய பலமும ஜீவனுங்குறையும்படி மூன்றுநாளிலே அபமிருதயு வநது பிடிககும என்று சபிததான் சிவமித்திரன்

மனந்துடித்திப் படிசிவமித திரன்சபிததான் சபித்தகொடு
வசனந் தீப்போற

கனன்றிடித்த வசனியொதத தசனிவிழு பொருப்பதெனக்
கலங்கி யேங்கிச

சினம்படைத்த முரனுமுரன் களுங்கருத்து மனவலியுந்
திறமுந் தீர்ந்து

தினங்கதித்து வருமெழிலு மலைவுகொணடா னிலைபெயர்ந்தான்
சிறுவன் ருனே (18)

இபபடி மனதுபொருமல் துடிபபாய்ச் சிவமித்திரன் சாபமிட்டான கொடுமையான அந்தச் சாப வசனமானது அகனிபோல் எழுமபி இடிதத இடியை ஒத்தது. அவன் இடி விழுநத மலைபோலானுன்; கலஙகி ஏங்கினுன் கோபமும, பலமும, கருததும, மனவன்மையும், ஆண்மையும

தொலைந்து, நாள்தோறும உயர்ந்து, வருகின்ற மேனியும குறைந்து அலைந்து கொண்டிருக்கிற நிலைவிட்டுப பெயர்ந்தான் சிறியவனுகிய அக்கமித்திரன.

கருத்தார நினைத்தாலு மிதித்தாலு மதிப்பகன்ற
கடையாஞ் சென்மத்
தருத்தான்வந் தெடுத்தாலும விடுத்தாலும் பரமகதி
யுதவு மோட்சத்
திருத்தானம் பிரிந்திடவிட டகற்றியதன் ஞேசிவமித்
திரன்சொல சாபம
விருத்தாச லேசர்தம தன்பருரை பழுதாகா
விதங்காத் தாரே (19)

மனதிலே நினைததாலும், கணணினுலேகண்டு ஆச்சரியப்பட்டாலும எண்ணமற்ற கடையான ஜனபருப்பெடுததுப பிறந்தாலும, இறந்தாலும பரமமோக்ஷத்தைக கொடுக்கின்ற திருப்பொருந்திய ஸ்தலமவிட்டு நீககப பண்ணியதல்லவோ சிவமித்திரனுடைய வாக்கினுல இட்டபட்ட சாபம? விருத்தா ஜலேசவரரானவர தமமுடைய பக்தா உரை பழுதாகாமல காத்தார.

மாமேருப் புயசிவமித திரமறையோ னியல்பிதென
வருளிச் செய்தான
பூமேற்செய் தவரும்விண்ணுடை டவருமனை வருமிரப்ப
புவியின் பாரந்
தாமேற்கு மன்னர்முடித தலைவீழ்ந்தா லலதுசடை
தலையே வீழ்ந்தா
னீமேற்கொ ளென்றுபொன்னி நதிககடைந்த வகோதகதிக்கு
நிவிர்த்தி சொன்னுன் (20)

மகமேருகிரிபோன்ற புயவிலாசமடைநத சந்திரபீடசோழராஜனே, சிவமித்திரன் கதை இது என்று சொன்னுா, பூலோகத்தாரும தெயவலோகத்தாரும வந்து வேண்டும்போது, பூபாரந்தாங்கும மன்னா முடித்தலைவீழ்ந்தாலும சுழலுக்குள்ளே அல்லது சடைத்தலையாவது வீழ்நதாலும நீ சுழல்விட்டு மிதந்து மேற்கொள்வாயென்று சொலலிக காவேரிநதி அகோகதியடைந்து போகும்போது நிவர்த்திசொல்லி எழுப்புமபடி திருவுளம பற்றிய அகஸதியர.

## இருபத்திரண்டாவது—பதுமகர்ப்பன் உபதேச மகிமை

தலைமேலொன் றுடையபழ மலையானைத் திருமணிமுத்
தாறு ளானைத்
தொலையானை யடியர்பவந் தொலைப்பானைச் சிலைபோலத
தோன்றுஞ் சோம
கலையானைப் பணிசிவமித் திரன்புதல்வன் றனதுவரு
காலச் செய்தி
நிலையானுற் றறியநவி லெனமலையா சலமுனிவ
னிகழ்த்து கின்றான் (1)

சிரசிலே கங்கையைத் தரித்த பழமலை யானை, திருமணி முத்தாறுள்ள வனை, அளவில்லாத அடியாருடைய பாபங்களைத் தீர்ப்பவனை, விற்போலும், வளைந்த சந்திரனைத் தரித்தவனை, வணங்கப்பட்ட சிவமித்திரன் புத்திரனை அங்கமித்திரனுடைய வருகாலச்சேதிகளை நன்றாய நான் அறியும்படி திருவுளம் பற்றவேண்டுமென்று சந்திரபீட சோழராஜன் கேட்கப் பொதியமாமலை வாசனான அகஸ்தியர் திருவுளம் பற்றுவார்.

கிடையாது கிடைத்தவிர்த்த கிரியிருப்பை யகன்றுமனக்
கிலேச னாகி
யடையாத தளர்வடைந்து வருத்தமுற்று மிருத்து வினா
லருண பானுக்
கொடையான்மெய் துடித்தழல்வெந் நிலத்திலுறு புழுப்போனெக்
குடைந்து சோர்ந்த
நடையாலு நடந்தெமையா ளுடையான் முற் கீசவள
நகரஞ் சேர்ந்தான் (2)

கிடைக்கத்தகாதது கிடைத்ததுபோல் தோன்றிய விருத்தாசல வாசத்தை விட்டு மனக்கிலேசமும் தளர்ச்சியுமடைந்து அபமிருத்யுவினாலே அகோர சூரியகாந்தி தங்கின பூமியில் அகப்பட்ட புழுவின் உடல் துடிப்பதுபோல் தன்னுடைய சரீரமுடைந்து கலங்கித் துவண்ட நடையுடனே கூடி எம்மை யாளும் சிவன்வாஸமான உறையூர் என்ற ஸ்தலத்தில் வந்து சேர்ந்தான் அங்கமித்திரன்.

புதுமையொளி திகழ்ந்தநதை மதின்மீது மணிமாடப்
பொருப்பின் மீது
மதிதவழ்தென னுறந்தையதி பதிவளவ னனுதினமும்
வழிபட டேத்தச
சதுமறையா றங்கமுங்கற றதிகமகங் களுமுடி த்துத்த
தகைமை பூண்ட
பதுமகர்ப்ப னெனுமொருசற் குணநிதியை யடைந்துபதம்
பணிந்தா னன்றே (3)

புதிய பிரகாசமாய் விளங்கிய சாந்தணிந்த மதிலினும் நவரத்தின கசித மாகிய பாவத்தமபோன்ற மாடமாளிகைச் சிகரத்திலும் சந்திரன் தவழும் வளம் பொருந்திய உறையூரென்னும் பட்டணத்துக்கு அதிபதியாகிய சோழராஜன் அனுதினமும் வழிபாடுசெய்து வினங்குமடிக்கு நாலு வேதமும் ஆறு சாஸ்திர மும் கற்றுணர்ந்து யாகங்கள் அநேகம் முடித்துப் பொறுமையடைந்த பதும கர்ப்பனென்னும் ஒரு சற்குண நிதியை யடைந்து இரண்டு பாதங்களையும் வணங்கினன் அங்கமித்திரன்

துத்தியஞ்செய தடிபணிந்த சிறமறையோற காசிபல
சொன்ன ளின்னா
ரெத்தலமுன் பிதாவினது பெயரேதுன் பெயர்தானே
தென்று கேட்கச
சித்தமகிழ்ந் தமலனுறை விருத்தகிரி வருசிவமித்
திரனென நூதை
யுத்தமனே யெனையஞ்ஞ மித்திரனென் றுரைப்பாரென்
றுரைத்தா னன்றே (4)

இப்படி பாதமபணிந்து ஸதோத்திரம் செய்தவனைப் பார்த்து அநேக ஆசீ வாதம்செய்து நீ எப்போதுமிருக்கிற பதியினுடைய பெயரென்ன? உன் னுடைய தகப்பன் பெயரென்ன? உன் பெயர் தானென்ன வென்று பதும காப்பன கேட்க, "மனமகிழ்ச்சியுடன சிவபெருமான எழுந்தருளியுள்ள விருத் தாஜலம் என்னுடைய ஊா என்னுடைய தந்தையின் பெயர் சிவமித்திரன். உத்தம புருஷனே என் பெயர் அங்கமித்திரனென்று சொல்வார்கள்" என்று சொன்னன்

அந்தவுரை சொலக்கேட்ட பதுமகாப்பன் மனமகிழ்ச்சி
யதிக ஞகி
யுந்தனது தந்தையுநன் றிருந்தனனோ வெனதிடத்தி
லுவந்து நீயும்

வந்தவர வேதுசொல்லென் றந்தணனும் வினவிடத்தன்
வரலா றெல்லா
மிந்தவித மெனத்தனது சிந்தையுறு தளர்ச்சியொடு
மியம்பு கின்றான் (5)

அந்த வார்த்தை சொல்லக் கேட்ட பதுமகாபபன் மனது சந்தோஷமாகி உன் தகப்பன் நன்றாயிருக்கிறாரோவென்று கேட்டு அதன் பிறகு நீ என்னிடத்திலே பக்ஷமாக வந்த வரலாறு என்ன சொல்லென்று கேட்க, தன்னுடைய வரலாறெல்லாம இப்படியென்று தன் மனதிலடைந்த தளர்ச்சியுடன் சொல்வான்.

அடுத்தவிதிப் படிவேள்வி முடித்தனனென் றுதைநிதி
யழிந்த தென்று
தடுத்துரைத்தே னெனக்கினிய புத்திசொல்லி மகத்தைமுன்போற்
றந்தை செய்தான
தொடுத்ததுதாழ் விலாதுமக முடிக்குமுப கரணநிதித்
தொகைமற் றெல்லா [பொறுத்தா
மெடுத்தொளித்து மகத்தொழிலைத தடுததனனன் பொடு
னெனைத்தந் தோனே (6)

வேதத்திலே சொன்ன பிரகாரம யாகாதி பண்ணிமுடிததார என் தகபபனார். அந்தயாகங்கள்தோறும திரவியங்களெல்லாம் செலவாயப போகிறதென்று நான் அதைத தடுத்தேன் அதற்கேற்ற புததிமதிகளைச் சொல்லி யாகததை முன்போல் அவா நடத்தினார. தொடுத்த யாகததைத் தாழ்வில்லாமல முடிப பதற்குரிய உபகரண திரவியஙகளை எடுத்து ஒளிததுககொண்டு அந்த யாகம நிறைவேற வொட்டாமல் நான் தடைபண்ணினேன். அதையும அன்பினாலே பொறுததார் என்னைப பெற்றவர்.

தாபித்தான் றனங்களுந்தா னியங்களுங்கொண் டொளித்திடவுந்
தயவாய் நோக்கி
லோபித்தா னென்றுசென்றி யாசித்தா சவதரித்தா
னுவந்தான் வேள்வி
கோபித்தாற் கொடியனென்றெ னுமன்மகங் கெடுததல்கண்டு
கொடூர வாக்காற்
சாபித்தான் மிருத்துவுமுத் தினத்திலுனைத் தெறுமெனவிச்
சபித்தா னன்றே (7)

ஸ்தாபிதம் பண்ணியிருந்த தன தான்னியங்களைக் கொண்டுபோய் ஒளித்ததைக் கண்டு தயவாய்ப்பார்த்து லோபகுணத்தினாலே இது செய்தானென்று எண்ணிப் பின்னும் எங்கும்போய் யாசகமெடுத்துத் திரவியம் சம்பாதித்துச் சந்தோஷமாக யாகங்கள் செய்யும்போது கோபியான பொல்லாத குணத்தினாலே நான் அதை எண்ணிப் பாராமல் அதையும் அழித்தேன். அது கண்டு கோபமே பொருந்திய தம்முடைய வாக்கினாலே அவர் சபித்தார். மூன்று நாளையிலே அம்மிருத்யு உன்னைப் பிடிக்குமென்று கணிதப்படுத்தினாரென்று பின்னும் சொல்வான்.

தாதையுமோ சபித்தனனென் றாயுமனம் வெறுத்தனளென்
றலமுநீத்தேன்
பேதையே னறியாத பிழையாலே மிருத்துவரப்
பெற்றேன் பொல்லா
வாதையா லெனதுளங்கள் குறைந்தது னைச் சரண்புகுந்தேன்
வழியேற் குற்ற
தீதைநீக் கிடநினையென் றயனையா மெனப்பணிந்தான்
சிறுவன் றானே (8)

இப்படித் தகப்பனார் சபித்தார். என்னுடைய தாயார் மனதும் வெறுத்தாள். நானிருந்த ஸ்தலத்தையும் விட்டு விட்டேன்; புத்தியில்லாமையால் செய்த குற்றத்தினாலே அம்மிருத்யு வந்து அடையப் பெற்றேன். அந்த அம்மிருத்யுவினாலே பொல்லாத அவதிப்பட்டுப் பலமுங் குறையலானேன்; இப்பால் உன்னுடைய பாதத்தில் வந்து சேர்ந்தேன். அறியாத அடியேனுக்கு வந்த தீமை தீரத் திருவுளம் வைத்துக் காப்பாற்ற வேண்டும். என்னைப் பெற்ற தகப்பன் நீயே—என்று தண்டம் பண்ணினான் சிறு பிள்ளையாகிய அக்கமித்திரன்.

இனையவா சகங்கேட்ட பதுமகர்ப்பன் றனதுமனந்
திரக்க மெய்தி
யனையசிவ மித்திரன்சொல் சாபமுமவெந் திறன்மிருத்து
வடையச் சேர்ந்த
தனையனுயிர் குன்றியதுந் தீர்ந்திடவே தோர்ந்துதனைச்
சார்ந்தோற் கமைபாய்
அனையனைய னுதலின்மலவ வினைதவிர வினியவையொன்
றருள்வ தானான் (9)

இந்த வசனங்களை யெல்லாம் கேட்ட பதும காபபன் மனதிரக்கமுற்று நினைப்பார். அப்படி யாகம் பண்ணுகிற சிவமித்திரன் சாபம் பண்ணினதும அதினாலே அபமிருத்யு வந்து பிடிக்கப் பிள்ளையினுயிர் குன்றியதும் இருமபடி யோசனைசெய்து தன்னை யடுத்தபேருக்குத் தாயபோல் அனபுகாட்டுங் குண முடையவனுகையினால் கடிதாகிய வினைநீங்கும்படி அதற்கேற்ற வார்த்தை யொன்று சொல்வான்.

மகத்துக்கு நீயிழைத்த விக்கினத்தி னலதிக
வாழ்வு தாழ்வாய்ச
சுகத்துக்கு நீங்கியதி துக்கநர கடைந்துபிறந்
துழன்று தீர்வாய்
மகத்துக்கள் சபித்ததுதீ தனைத்தினுக்கு மேதுவொன்றின்
மாற்றொ ணுதா
யிகத்துக்கும் பரத்துக்கு மனேகசென்மாந் தரததினுந்தீர்ந்
திடவோ ணுதே (10)

யாகாதி காமத்துககு நீசெய்த விகனத்தினாலே, அதிகமான வாழ்வு தாழ் வாகிச் சுகத்தைவிட்டுப பெரிதாகிய துகசத்தினாலே பொல்லாத நரகம அடைந்து பின்னும பிறந்து அலைந்துழன்று அந்தப பாபம நீஙகப்பெறுவாய மகத்துவம பொருந்திய பெரியோாகள சபித்த பொல்லாபபெல்லாம ஒரு ஹேது வினாலே விலகாது. இகத்திலேயும் பரத்திலேயும் அநேக ஜனமஙகளை எடுத் தாலும அது தீராது.

ஆகினுமிவ் வுயிர்கள்செய்த தீவினைக ணீங்கும்வகை
யமல காசிக்
கேகினுநன் னதிமூன்று கூடிவரு பிரயாகைக்
கினிது நாடிப்
போகினுநல் லறம்பூசை முடிக்கினுமெய்த் தவங்கணித்தம்
புரிந்து மேனி
நோகினுந்தீ ராவினையுண் டதுதவிரும் வகையுமுண்டு
நுவலக் கேண்மோ (11)

ஆனாலும் இந்த மக்கள்செய்த பாபங்கள் நீருமபடி சிவரூபமான காசிக்குப போனாலும் நன்மையாகிய கஙகை, யமுனை, பிரயாகை மூன்றும கூடி வரு கின்ற தீர்த்தத்தில் ஸநாநம பண்ணினாலும நல்ல தர்மமாகிய சிவபூஜைகளை செய்தாலும் மெய்யாகிய யாகங்கள் தபசுகள் தேகம வருந்தும்படி பண்ணினு

லும் வினைகள் தீரா. அப்படிப்பட்ட வினைதீர வழியுமுண்டு; சொல்வோம் கேளாய் என்று பின்னும் சொல்வார்.

மருந்தினுன் மந்திரத்தா லியற்றியதந் திரத்தாலு
மாற்றொ ணாதாய்
வருந்துநோய் பொருந்துடம்பைச் சிதைத்துயிரைக் கவர்ந்தாலு
மறித்து மீளத்
திருந்துமுயி ருடம்பினைத்தந் தருளியசஞ் சீவியைப்போற்
றீர்க்கொ ணாத
வருந்துயர்தீர்த் திடுதிருப்பைஞ் ஞீலிமருந் தானளித்தா
னகிலத தோர்க்கே (12)

மருந்தினாலும் மந்திரத்தினாலும், செய்கிற தந்திரத்தினாலும், தீர்க்க முடியாததாய்ச் சரீரத்திலே பொருந்தி வருத்தப்படுத்தித் தேகத்தைப் போக்கடித்துப் பின்னுமந்த உயிரைப் பிடித்துக்கொண்டு திரும்பவும் அந்த உயிரைக் கொண்டு ஒரு சரீரத்தை எடுக்கப் பண்ணுகின்ற சஞ்சிதமாகிய வினையைப் போல் தீர்க்கப்படாமல் வந்த துயரம் தீரும்படி திருப்பைஞ்ஞீலி வாஸனாகிய பரம சிவன் லோகத்தாருக்கு ஒரு மருந்து கட்டளை யிட்டிருக்கிறார்.

ஆதிநா ளுமைதவஞ்செய் தலம்விமலா ரணியமதி
லனந்த கோடி
சோதிபெறு சிவகலைக ளொடுங்கியுதித் திடுமொருசிற
சொரூபந் தானே
பேதமகல பரமசம்பு வெனுமொருபேர் படைத்துமகா
லிங்க மாகி
நீதிநிலைத் திருக்குமரி யயனறிதற் கரியததி
னிலைமை தானே (13)

ஆதிநாளிலே பார்வதி தபசுபண்ணின ஸ்தலமாகையால் விமலாரணியத்தில் அனந்தகோடி சோதிப்பிரகாசமான சிவகலைகள் ஒடுங்கி உதித்திடும். ஒரு சிற்சொரூபமானது குற்றமில்லாத பரம சுயம்புவென்று பெயரெடுத்துத் திவ்விய லிங்கரூபமாய், எந்நாளும் நிலைத்திருக்கும் அதினுடைய மகத்துவம் பிரம்மா விஷ்ணு முதலான பேர்களாலும் அறிவதற்கரிதாகும்.

சங்கரிநீ ணெடுங்கணுமை விதித்துளது விசாலமெனுந்
தடத்தின் மேன்மை

சங்கரனே விரித்துரைப்ப தல்லான்மற் றேவர்களுந்
தகைமை தேரார்
பைங்கொடியம் பிகையயன்மால் வாணிதிரு முதலோர்க்கும்
பலித்தல் கேட்டுக்
கங்கைவிரும் புவள்கபில காவிரிசென் றுடுவடெக்
கணத்திற நானே (14)

சிவசங்கரியாகிய நீள் நெடுங்கண்ணமமன் உண்டாக்கின விசால புஷ்கரணியென்று ஒரு தீர்த்தமுண்டு. அதினுடைய மகிமையைப் பரமசிவனே விரித்துச் சொல்வதல்லாமல் பின்னே ஒருவராலும் அறிய முடியாது. ஆகையால் அந்த விசால புஷ்கரணியிலே பசுங் கொடியாகிய பார்வதியும் ஸரஸ்வதியும் லக்ஷ்மி முதலாகிய பேர்களும் வந்து தீர்த்தமாடி அவர்கள் மனதின் படி நினைத்ததெல்லாம் பலிதமானது கேட்டு வடபாரசத்திலே கங்கை வந்து ஸ்நானம் பண்ணுவாள். கபில முனியினால் வருகின்ற காவேரியானவள் தென் பார்சம வந்து ஸ்நானம பண்ணுவாள்

கயிலைமால் வரைமீதி லுயர்ந்தமுத்துச சிகரமரன்
கருணை யாலே
யுயிர்கொடுவந் ததுபரம சம்புவைச் சூழ்ந் தோங்கார
வுருவ மாகிப்
பயிலுமுருத் திரகலைகள் பலசூட்சந் திகழ்ந்திருக்கும்
பணிந்தெந் நாளும்
பெயராமன் மகாமுனிவ ரொடுமிருப்பர் வசிட்டருந்தாற்
பெயருந் தானே (15)

வட கைலாசத்திலும் உயர்ந்ததாகிய முத்து மலையிலே வசிக்கும பரதியினுடைய திருவருளினாலே உயிர படைத்து வந்த சிவ சமபுவைச் சுற்றி பிரணவ ரூபமாய்ப பயிலும ருத்திரகலைகள் பலவிதமான சூட்சமம திகழுந்திருக்கும அதைத தெரிசித்து எந்நாளும ரிஷிகளுடனே கூடி யிருபபார்கள் வசிஷ்டரென்னும தாற்பிய ரென்னும் பெயர் படைத்த ரிஷிகள்

மைதிரட்கொண் டுறைசிகர நரளகிரி மகாதேவர்
வாழ்பொற் கோயி
லெய்திரட்டைக் கோபுரங்கண் டிறைஞ்சிலிங்க நாயகருக்
கியன்ற பூசை

செய்திரத்தினம் பலத்தினடித் தெடுத்தபங்கே ருகப்பாதத்
தெரிசித் தோர்கள்
பெய்திரைக்கங் கையுமதியு முடியில்வைப்பா விடைநடத்தப
பெறுவர் தாமே (16)

மையானது திரண்டதுபோலும் காரமேகமானது தவழ்கின்ற முத்துமலை மகாதேவா வசிக்கும் பொற்பிரகாசமான திருக்கோவிலிலே இரட்டைக கோபுரத்தைக் கண்டு வணங்கி நடுவிலே இருக்கின்ற லிங்கரூபனுக்கு இயன்றபடி பூஜைசெய்து ரத்தினமயலத்திலே நடனமபண்ண எடுத்த பாத பங்கய தரிசனங்கண்ட போகள அலைபொருந்திய கங்கைபவானியும் ஆரத சந்திரனையும முடியில்வைபபா ; ரிஷபவாகனத்திலேறி நடத்துகின்ற சிவ சொரூபம பெறுவார்கள்

அவந்தவிர்த்துச சகத்தைாட்சிப் பதுவிடுத்துக் கிரகுணமே
யதிக மாகச்
சிவன்கரத்தி லுறைபிரம கபாலம்விழத் தொலைத்துளதோா
தீர்த்த மென்று
லுவந்துனது சாபமொடு பாபமுத லிருவினைதீர்த்
துலப்பி லாத
பவந்துடைப்ப தரிதோபைஞ் ஞீலிவளம் பதிமகிமை
பார்க்குங் காலே (17)

அவகுணத்தை தவிர்த்து ஜகங்களையெல்லாம ரக்ஷிக்கின்ற தொழிலைவிட்டு உக்கிர குணமேயதிகமாகச சிவன கையிலே விடாதுபற்றிய பிரமகபாலம விழும்படி செய்தது ஒரு தீர்த்த மென்றால், உனக்கு வந்த சாபமும பாப மும இருவினையும தீர்த்துப பிறவியை ஒழிப்பதும அரிதோ! திருப்பைஞ்ஞீலி யாகிய ஸ்தலத்தின வளமபொருந்திய மகத்துவங்களைப பார்க்கிறபோது என்றார்.

புனிதமதி தரித்தருள்பைஞ் ஞீலிரதன சபாபதிதான்
போற்றி வாழ
வனசபைஞ் மித்திரருப் புகல்பதும கர்ப்பனியல
பருளிச் செய்தான
பனிமலர்மே லுதித்தசது முகக்கடவு ளிதையமகிழ்
பரிவி னாலே

பிணியகும்ப மீதில்வரு முனிவர்கும்ப கோணமடன்னற்
கிசைத்தா ரன்றே (18)

களங்கமில்லாத சந்திரனைத் தரித்த திருப்பைஞ்ஞீலி வாஸனான சத்தன சபாபதி பாதாரவிந்தத்தை வணங்கி வாழ்வாயென்று பிரத்தியக்ஷமாக அகஸ்திருனுக்குப பதுமகாபபன் சொன்னகதை இதுவென்று திருவுளமபற்றினா தாமரைமலரில் பிறந்த பிரமமதேவரின் ஹிருதய சந்தோஷ தயவினாலே கும்பத திலே ஜனித்தருளிய அகஸதியா கும்பகோணத்துக்கு அதிபதியாகிய சந்திர பீட சோழராஜனுக்கு

---

## இருபத்துமூன்றாவது அத்தியாயம்

## சுதர்மன் பதவியடைந்த மகிமை

தப்பார்செவ் விதழ்க்களபப் பூண்முலைநீ ணெடுங்கண்மலைத்
தோகை பாக
னொப்பார்மற் றொருவரிலான் மலைவிலா னிலிவனத
தண்மை யெல்லாந்
தப்பாமற் புகல்பதும கர்ப்பனுரை கேட்டசிறு
தனயன் செய்தி
யப்பாலே தென்னவிரித் தப்பான்மைத் தென்னமுனி
யருள்வ தானன் (1)

பவளம் போன்ற இதழும் சாந்தணிந்த ஸ்தனமும படைத்த நீள் நெடுங் கண்ணமமனான கிரிராஜ குமாரியாகிய பாாவதிபாகனுக்கு ஒப்புவமை யில்லாத முத்து மலைக்குக் காந்தனான பரமசிவன் வசிக்கும் நீலிவன ஸ்தல மகிமை யெல்லாம ஒன்றும தப்பாமல் பதுமகாப்பன் சொன்னது கேட்ட அகஸ்திதி ரன் சரித்திரத்தைபபற்றி அப்பால் நடந்த தென்னவென்று சந்திர பீட சோழ ராஜன கேட்க, கன்ருய விவரித்து இந்தப பிரகாரம நடந்ததென்று அகஸதிய ரிஷி திருவுளம பற்றுவார.

இக்கிலைமை பெறுதிருப்பைஞ் ஞீலியின்முன் னடந்தசரித
திரங்கால் வேதஞ்
சொன்னதிலு;மதிசயமா மொருகதையுண் டவனியெங்குந்
துதிக்குஞ் சீர்த்தி

நன்னிலைமை தருக்கிவளர் திருக்காஞ்சிப் பதிதனிலே
நவைதீர் வேதத

துன்னரிய வியாதனுக்கு நிகர்படைத்த சுதாமனுமென்
றுரைக்கும் பேரோன் (2)

இந்த மகிமை படைத்த திருபவைஞ்சீவியில முனனுளிலே நாலு வேதஙகளிலும் அதிசயமாகச் சொனன பிரகாரம் தப்பாமல் ஒரு கதை நடநததுணடு அதெனனவெனறல பூலோக முழுதும கொண்டாடுகின்ற கீர்த்திபடைதத நன்மையாகிய நிலைமையோடெ கூடிய திருககாஞ்சிபுரததிலே குறறமகற்றும வேதபாரயணஞன வியாசருககுச சமானமான சுதர்மனென்று பெயாகொண்ட பிராமணனொருவ னிருநதான.

கல்விகேள விகணீதி நியமசதா சாரதர்ம
காமம் வேள்வி

மலகுசிவ பூசையதி தியர்பூசை செபதபங்கள
வழுவி லாது

சொலவகையி னடததியொன றுங குறையாம லினிதுடன்வீற
றுறையு நாளி

னல்குரவு வந்தடுதத தலலுழுங் திரபபிடும்மை
நலியச சோர்வான் (3)

இபபடியான சுதாமன் கல்வியிலேயும், வேள்வியிலேயும, நியாயங்களிலே யும, சதாகாலமும, கதாபிரஸஙகளிலேயும, தாமஙகளிலேயும, நித்திய கர்மங் களிலேயும யாகாதிகளிலேயும், விடாத சிவபூஜைகளிலேயும, அதிதியர் பூஜை களிலேயும், ஜெப தபஙகளிலேயும யோகநிஷ்டையான சமாதிகளிலேயும, வழுவாமல சாஸதிரவிதியினபடி நடநது ஒரு காரியததிலும குறைவில்லாமல் அதிக திரவிய சமபனனனுக அனபுடனே இருக்கிற நாளிலே நாளுக்குநாள் செலவம குறைநது தரித்திரமானது வந்துபிடிதது அலைல்பண்ணியது; அத னல தளாசசியுறற அவன மெலிநதான.

அவனிருக்கு மனையகததுக் கயன்மனையி லொருமறையோ
னுடசி யாகக்

குவிநிதியம் படைததவனெந நாளுமறை யவர்க்கமுதங்
கொடுததல வேண்டித

தவசபணட பதார்த்தமெலலாஞ் சவதரித்து நிரந்தரமுந்
தரும மேசெய்

துவகையொடு மிருப்பனவன் றனதுபெயர் சொரூபனென வு
　　லகந் தானே (4)

இப்படி தரித்திரமடைந்த சுதாமனிருக்கிற மனைக்குப் பக்கத்தில் ஒரு மனையில் செல்வ வந்தனான பிராமணன் ஒருவனிருந்தான். அவன் எந்த நாளும் பிராமணபோஜனம் கொடுக்கிறதின்பேரில் இச்சையாகி தவசதான் னியங்களெல்லாம் சம்பாதித்து தினியம் அன்னதான முதலாகிய தாமம்செய்து சந்தோஷத்துடனே இருந்தான் அவனுடைய பெயர் சொரூபனென்று உலகத்தார் சொல்லுவார்கள்

சசிதோய்புத் தமுதனைய சாலியன்ன மப்புநெய்தேன்
　　றயிர்பால் வாய்த்த
சுசிபாகத் தொடுருசிக்கும் ருசிபேதத் துடனுமனச்
　　சுசியி னோடு
நிசியான தகற்றகதி ரெனமறையோர் நிரைநிரையாய்
　　நிறைந்தெப் போதும்
பசியாறச் சொரூபனன்ன தானநிரந் தரங்கொடுப்பன்
　　பரிந்து தானே (5)

சந்திரகிரணம்போன்ற புத்தமிருதமயமான சால்லியான்னம், அதற்கேற்ற வர்க்கவகையுடனே நெய் தயிர் பால் முதலியவை, சுசியான பாகத்துடனே அறுவகை ருசி பேதாபேதம் தப்பாமல் மனசசுசியுடன், இருள்களை நீக்குகின்ற சூரியன்போல் நிகற நிறையாக வருகின்ற பிராமணர்களுக்குப் பசியாறும் படி நிறைய அன்னதானம் அனுதினம் உபசாரத்துடனே கொடுப்பான்

விருந்தினு னிலத்துறவோர் குலத்துறவோ ருடனமர
　　விருந்துண் ணென்ன
வருந்திகா டாறுங்கொடுப்ப வருந்தினு னரவினுக்கு
　　வார்த்த பால்போன்
மருந்தினுற் கபகரித்த புலிபோலச் சொரூபனுக்கு
　　வஞ்சனு செய்யப்
பொருந்தினன் மனகதுணிந்தான் சுதாமனெத் தவர்வாழப்
　　பொருந்தி லானே (6)

விருந்தினவதுபோல், நாலு பக்கத்திலுமிருந்து வந்த அதிதியருக்கும் தன்னுடைய பந்துவான ஜனங்களுக்கும் பதறுமல போஜனம பண்ணுங்க

னென்று வருநதி உபசாரஞ்செய்து நாள்தோறும் தப்பாமல் அன்னங்கொடுத்தான். அவர்களுடனே கூட சாப்பிட்ட சுதாமனென்பவன் அன்னங்கொடுத்த சொரூபனுக்கு வஞ்சனைசெய்ய மனந்துணிந்தான். அது எதைப்போலவெனில் சர்ப்பத்திற்குப் பால்வார்த்து வளர்த்தால் அவனுக்கு அது விஷத்தைக் கொடுப்பதுபோலவும், புலியானது ஔஷதங்கொடுத்து நோய்தீர்த்தால வைத்தியனைக் கொல்வதுபோலவும், அடுத்தவன் வாழ மனம்பொறுத்ததுபோல் சுதாமன் நினைத்தான

அரசர்மரு வலர்சோரர் ஞாதியராற் றமதுயிருக்
கழிவுண் டாக்கும்
விரகமே தனைதனைவெகு சினத்தினைவஞ் சனைதனைவெவ
வினையை யீட்டுங்
குரவரைமே லோரையன்னை பிதாவைநிந்தித் திடச்செயுந்தூர்க்
குணமே நல்கு
மிரணியத்தைப் போன்மனிதாக் கனுகூல சத்துருவே
யில்லை தானே (7)

ராஜாக்களாலும், சத்துருக்களாலும், சோரராலும், ஞாதிபங்காளிகளாலும் தன்னுடைய உயிருக்குச் சேதமுண்டாக்கி வைப்பதுமல்லாமல் காமவிகார வியாதியையும், அகங்காரமான கோபத்தையும் பிறரைக்கெடுக்க உபாய வஞ்சனையையும் செய்வித்துப் பாபங்களாக்கும். பின்னும் குருவான பேரையும் மேலான பெரியோர்களையும் தாய் தகப்பனையும் நிந்தனை செய்யும்படியான அநேக மதமாச்சரியங்களை உண்டாக்கி நற்குணமெல்லாம் நீக்கித் துர்க்குணங்களைக் கொடுக்குமாகையால் இரணியமான திரவியத்தைப்போல் பூலோகத்திலே அநுகூல சத்துருவாயிருப்பது மற்றொன்றுமில்லை

பண்டிருந்து பழகியினி தளவளா வியுமகிழ்ந்தும்
பசித்து வாடா
துண்டிருந்துஞ் சொரூபனுயிர் செகுத்திருந்த தனம்பறித்தற்
குபாய நாடிக்
கண்டிருந்த கோக்குநவக் கிரகபலா பலத்தொருசங்
கற்பம் பூமேல்
வண்டிருந்த தெனவமுதின விடமிருந்த தெனமனத்தோர்
வடிவைத் தானே (8)

நெடு நாட்களாகப் பழகி பேதமில்லாத மனத்துடனே ஸ்நேகஞ்செய்து மகிழ்ந்து பசியினாலே தாழ்வில்லாத போஜனம் அவன் வீட்டிலே சாப்பிட்டு

வந்த சுதர்மனென்பவன், அன்னதானங் கொடுக்கின்ற சொரூபனைக்கொன்று அவன் கையிலே இருந்த திரவியம் பறிக்கிறதற்கு உபாயம் எண்ணினன். இந்தச் சொரூபனுக்கு நவக்கிரகங்களில நல்லதிசை நீங்கித் தீயதிசை பிரவேசித்தது. நல்ல புஷ்பங்களிலே வண்டுகளிருப்பதுபோலவும் முன்னுளிலே தேவாமிருதத்துடனே விஷங்கூடியிருந்தது போலவும், பிராமணசுதாமனுடைய மனதிலே சொரூபனைக் கொல்லவேண்டுமென்கிற வடிவுண்டாயிற்று.

சார்வுறுதீக் கோளரிட்டந் திருமா றெதுவெனவந்
தணனுங் கேட்பக்
கார்தவழ்பூந் தருத்திகழ்கோ தாவரியென் றுரைக்குநதிக்
கரையின் மேவித்
தாரணிமேல் விரித்துமறை புகழ்பிர ணியகருப்ப
தான மீய்ந்தாற்
றீருமெனச் சொன்னனவ் வுரைகேட்ட சொரூபனுநன்
றெனச்சொன் னனே (9)

தன்னையடுத்து வாதைசெய்கிற தீக்கோளான அரிஷ்டம் என்ன புண்ணியங்கள் செய்தால் விமோசனமாகுமென்று பிராமணனை கேட்க, மேகங்கள் தவழாநின்ற சோலையோடுங்கூடிய பிரவாகமான கோதாவரி என்று சொல்லப்பட்ட நதியின் கரையிலேபோய் பூலோகத்திலே வேதங்கள் விரித்துப் புகழ்ந்து சொல்லுகின்ற இரண்ணியகர்ப்ப தானம்பண்ணினால நவக்கிரகதோஷங்களெல்லாம் தீருமென்று சொன்னார்கள். அதைக் கேட்ட சொரூபன் நல்லதென்றான்.

சொன்னவிர ணியகருப்ப தானமுடித் திடத்தொகுத்த
தொகைதப் பாமற்
சொன்னமெடுத் தனன்மறையோர்க் கியாத்திரா தானமவைத்துத்
தொழுது போற்றிப்
பொன்னனைய மனைவிமைந்தர் கிளைஞருடன் பிடக்காஞ்சி
புரத்தை நீங்கிப்
பன்னுபுகழ்ச சொரூபன்வரு சுதாமனுடனேசிறிது
பயணம் போனன் (10)

வேதத்திலே சொன்ன இரண்ணிய கர்ப்பதானம் பண்ணவேண்டுமென்று சொன்னதினம் பிசகாமல் அநேக திரவியங்களை எடுத்துப் பிராமணர் பெரியோர்களுக்கு யாத்திராதானம்பண்ணி நமஸ்கரித்தான் அப்பால்

லக்ஷிமியையப போன்ற பெண்சாதி பிள்ளைகளும் சுற்றத்தாரும மற்றுமுள்ள பேரும் தன்னை நமஸ்காரம் பண்ணி யனுபபக் காஞ்சீபுரத்தைவிட்டுச் சொரு பன் சுதர்மனுடனே கூடிப் பயணம் போனான்.

தொல்வினைதீர்த் திடுநதியே நினைப்பானங் கவன்றனது
தோளி லேற்ற
செல்வமுத லியநிதியே கதியென்பா னவனிடத்திற்
றீமை யெல்லாம்
வெல்வதெப்போ தெனநினைப்பா னவனிவனை நலியாமன்
பிருததுப் போனான்
கொல்வதெப்போ தெனவுமதற் கெதுநலமோ வெனவிவனுங்
குறித்துச் செல்வான் (11)

பூர்வ காமங்களைத் தீர்க்கின்ற கோதாவரி தீர்த்தத்தை அடிக்கடி நினைப் பான்; பின்னும தன்னுடைய தோளிலே யிருக்கிற திரவியச்சுமையே கதி என்பான்; அரிஷ்டமான பொல்லாங்கெல்லாம வெல்வது எபபோதென்று நினைப்பான் சொரூபன் இபபடி நினைக்கும்போது சொரூபனைச் சிரம நலியா மல் கொல்லுகிறதெபபோதென்றும் அதற்கேற்ற இடம எங்கே வாய்த்திருக்கு மென்றும் போவான் சுதாமன்

கனமடுத்தோர் துளிதுளிக்கா தறவழன்ற சுரங்கள்பல
கடந்து சென்றார்
வனமடுக்க னதிபலகண் டகன்றார்பட் டினமடுக்கா
வனத்து ளாங்கோர்
புனன்மடுத்த தடாகமொடு குளிர்நிழலைக் கினன்றனையெப்
போது நீங்கா
தினமடுத்தோ ரெனநினைப்பா னுயிர்தொலைக்குந் தலமிதுவென்
றெண்ணிச் சொல்வான் (12)

மேகங்களானது ஒரு துளியாகிலும வருஷியாமல் உலர்ந்த ஆரண்ணியங் களைக் கடந்துபோய் அபபால் குளிர்ந்த சோலையும நதிகளும அநேகம் கண்டு அவைகளெல்லாம கடநது போனார்கள். அபபால் பட்டணங்கள் அடுக் காத விடத்தில் ஒரு வனத்திலே நல்ல ஜலம் பொருந்திய தடாகத்தினருகே குளிர்நத நிழலிருக்கக்கண்டு, தன்னை நம்பி எபபோதும சூழ்ந்திருக்கின்ற இனங்களை அடுத்ததுபோல் நினைத்திருக்கின்ற சொரூபனை உயிர்வாங்குகிற இடமிதுவென்று மனதிலே எண்ணிக்கொண்டு சொல்வான் சுதர்மன்,

வேதத்தான் மிகுத்தசொரூ பகரேயிங் குமதுசெம்பொன்
மேனி யெல்லாம்
போதத்தான் மெலிந்ததுவெம் பசியால்வெய் யிலினாலும்
புலர்ந்தீ ரங்தோ
வேதத்தா கமுமிளைபபுந் தீரருசி பதார்த்தா
லினிமை யான
சாதத்தாற் குளிரவுண்டு நடப்போமிங் கிருப்பிரெனச்
சமையல் செய்வான் (13)

வேதத்தினாலே மிகுந்த சொரூபகரே, இவ்விடத்திலே உமமுடைய சிவப பாக்கிய சரீரம் கிரமப மெலிந்து பசியினாலும் வெயிலினாலும வாடி இளைத தீரன்றோ? அதிக தாகமும இளைபபும தீருமபடி ருசியான பதாரத்தத்துடனே சமயல்பண்ணி :போஜனஞ்செயது களையாறியபின புறபபட்டு நடபபோம; இநத நிழலில் இருமென்றுசொலலி சமயல செய்வான் சுதாமன

சுமைப்பார மிறக்கியரை நாழிகைக்குள் மூழ்கிமறு
துகிலுஞ் சூழ்ந்தா
னமைப்பாலென் றரைநாழி யமுதுபடி சிறபருப்பிட்
டழலை மூட்டிச்
சமைபபா ஞழிகைதனிலொ விருநாழிப் பாரமெல்லாந்
தகரக் கூழ்போற
குமைப்பானென றறியாது துயில்கொண்டா னமுதுநித்தங்
கொடுத்தண் டானே (14)

தான் கொண்டுவந்த பாரமாகிய சுமையை இறக்கிவைத்து அரை நாழிகை யில் தீர்த்தமாடி மடி எடுத்து உடுத்து, ஒன்றரைபபடி அமுதுபடியுடன் சிறு பயத்தமபருபபுக் கூடக்கலந்து பாத்திரத்திலே போட்டு ஜலமவிட்டுக் களைந்து அடுபபிலே அக்னியை மூட்டி அதின்பேரிலே வைதது சமயல் பண்ணுவான் சுதாமன். எட்டுபபடிகொண்ட குறுணிபாரமான தன்னுடைய தலைதகருமபடி கூழுபோலும குமைததுப போடுவான் என்று தெரியாமல் நித்திரை பண்ணினான அனுதினமும அன்னதானம கொடுத்துச் சாப்பிட்ட சொரூபன்

குடிகுடிக்கும் பழிவடுச்சொற் கொடுத்தசுதாம னுந்துயின்ற
குணத்தின் மேலோன்

முடிமுடிப்பின மீதிருக்கக் கடிதொருகற் சுமந்துவந்து
முடிமே லோங்கி

யிடியிடித்த தெனவிடுபபப பொடிபொடித்து விசைததகைகா
லெறிந்துள் ளாவி

முடிமுடித்தத துடித்திறந்து கிடந்ததந்த சொரூபனது
சொரூபந் தானே (15)

பின்னை பின்னை தலைமுறைக்கும் பழிசெயதவமகனென்று வழங்காகிய சொல
பிரசித்தமாகும்படி சுதாமனனவன பத்திரைபண்ணுகின்ற சற்குணமபடைதத
மேலோனுகிய சொரூபனுடைய தலையினமேல அதி சீக்கிரமாக ஒரு கல்லைத்
தூக்கி வந்து ஓங்கி இடி இடிதது விழுவதுபோல போட்டான. அபபோது
தலையானது பொடிப பொடியாயிற்று. கை கால் விசையாய எழும்பி படபட
வென்று அடித்துதைததுக கொண்டன. சரீரமானது துடித்தது

பதிக்கோதன் னுயிரனைய மனைவியையுமைந் தரைத்தனது
பதியை நீங்கி

நதிக்கோதா வரியாடச சென்றதுதன் றியதனுவா
னவிலும் வாக்கான

மதிக்கோதால வரும்வினைதீர்த தருளகதிக்கோ விடைநடுவே
வந்து மூண்ட

விதிக்கோதா ரணிமீதி லொன்றுநினைத தொன்றுவந்து
விளைந்த வாறே (16)

தன் உயிரான பெண்சாதி பிள்ளைகளையும தனனுடைய ஸதலததையும
விட்டு நதியாகிய கோதாவரி தீரததமாட வநத தோஷமோ, மனோவாக்காயங
களினலே வந்த தோஷமோ, பூர்வஜன்மாநதிரததில விட்டகுறை நீங்கிக் கதி
யடையும் பொருட்டோ, அலலவென்று இடைநடுவே கவர்நதுமூண்ட தலை
விதியோ இபபடி பூலோகத்திலே ஒன்று நினைகக ஒன்று வந்து முடிநதது.

காட்டினுடல சிதைந்தழியப் போட்டுகிடந் திடுமறைபோன்
ககன லோக

நாட்டிலடைந் தொருதேவ வடிவுபடைத் துறவெனவா
னவர்க்கு ளானேன்

வேட்டமுது பொசிக்காத பசிதாபந் தீரவிண்ணோர்
விருந்து கூறி

பூட்டமுது மரம்பையர்செவ் விதழமுது மருந்திமனத்
துவகை கூர்ந்தான (17)

காட்டிலே சரீரமழிந்துபோகக் கூட்டைப பூலோகத்திலே போட்டுவிட்டு சொரூபன், தேவலோகத்திலே போய ஒரு தேவரூபமெடுத்துத் தேவர்களுக குள்ளே உறவானான். சமைத்த அமுது சாபபிடாமலிருந்த பசியெல்லாம நீருமபடி தேவலோகத்திலே தேவர்கள் விருந்துசொல்லி எதிர்கொண்டழைத துப்போய் படைத்த தேவாமிருதமும தேவரமபையர் அதராமிர்தமும புசித்துப பரம சந்தோஷத்தை யடைந்தான்.

கருத்தனுறை திருக்காஞ்சி புரத்துழன்ற நாய்க்குமொரு
கவள மீய்ந்தான்
மருத்திகழ்பூங் கடுக்கையணி திருததனுல கடைவரொரு
மறைகள் கூறு
மருத்திபொடத் தலததிலெந்த நாளினுமந் தணர்முதலோர்க்
கமுத மீய்ந்தோ
ருருத்திகழ்வின் ணவரெனவீற் றிருபபதுமற றதிசயமோ
வுரைக்குங் காலே (18)

பரமசிவன் வாஸமாகிய திருக்காஞ்சிபுர ஸதலததிலே அலைகின்ற சுவானத துக்கு ஒரு கவளமன்னங் கொடுத்தால் பிரகாசமாகிய கொன்றைமாலை யணிநத சிவனுடைய லோகததிலே சாயுஜ்யபதவி பெறுவார்களென்று வேதஙகள் முதலியவெல்லாம சொல்லும் அபபடிபபட்ட ஸ்தலத்திலே வருந்தி உப சாரததுடன் எந்த நாளும பிராமணா பெரியோர்கள் முதலான சகல ஜனங் களுக்கும் அன்னம கொடுத்த பேர்கள் தேவ சொரூப மடைநது தேவர்களாய வீற்றிருப்பது அதிசயமோ ?

பாளிகைப்பட் டிறந்தமத கரிபோலந் தணன்கிடப்ப
விருந்த சொன்ன
சாளிகையுந் தலவாடங் களுமெடுததா னுடுத்திகழ்மண
டலத்தைத தாவு
மாளிகைமண் டபமாட மடாரங்கு கோபுரங்கண
மதில்கள் வாய்த்த
குளிகைசேர் திருக்காஞ்சி புரத்தினில்வந் தினிதிருந்தான்
சுதர்மன் றானே (19)

யாளியினுடைய கையினால் அறைப்பட்டிறந்த மதயானை போல் சொரூப னுடைய கூடானது காட்டிலே கிடக்க அவனிடத்திலிருந்த திரவியங்களையும் மற்றுமுள்ள பாத்திர முதலாகிய தளவாடங்களையும் எடுத்துக் கொண்டு நக்ஷத் திர மண்டல மளவாக உயர்ந்த மாட கோபுர உப்பரிகை மதில்கள் படைத்த காஞ்சிபுரத்திலே எப்போதும் போல் வந்திருந்தான் சுதாமன்

மணையகத்தந் தணன்வரக்கண் டனையதொரு சொரூபனுடன்
வந்தோர் பெண்டீர் [வரைத்
தணையபந்து சனங்களும்வந் தமைத்துணைகொண் டடைந்த
தணந்து மீண்டீர்
வினைதவிர்நன் னதியாடச் சென்றவரவ் விடமலதேவ
விடநின் றீரோ
வினையபரி ணமமெங்கட் கினிதியம்ப வேண்டுமென
விறைஞ்சிக் கேட்டார் (20)

பக்கத்து வீட்டிலிருந்த சுதாமன் வந்தது கண்டு சொரூபருடன் பிறந்தவர், மனைவி, பிள்ளை, உறவின் முறையார்கள் வந்து உம்மைத் துணையாகக் கூட்டிக் கொண்டு போனவரை விட்டுத் திரும்பினீர். பாபங்களை நிவர்த்திபண்ணக் கோதாவரி தீர்த்தமாடப் போனவர் அவ்விடத்திலே தானே இருக்கிறாரோ அல்லது மற்ற எவ்விடங்களுக்கேனும் போனாரோ வென்று அவருடைய பரிணமங்கள் எங்களுக்குத் தெரியச் சொல்லவேண்டு மென்று கேட்டார்கள்.

தீதினார்க் கணுகரிய நதியெனுங்கோ தாவரிசென
றினிது மூழ்கி
நீதிநான் மறைவிரித்துப் புகழுமிர ணியகருப்ப
னெறியே செய்தா
னாதிநா யகன்மருவு பகீரதிக்கே கினனெமர்கடீ
தன்பாய்ச் சொல்கென்
றோதினு னென்றுசொரூ பகன்செய்தி வினவினவாக
கோதி னுனே (21)

தீமையான பாபிகளுக்குப் போவதற்கரிதாகிய தீர்த்தமான கோதாவரிக் குப்போய்த் தீர்த்தமாடி நீதி பொருந்திய நாலு வேதமும் விவரித்துச் சொல்லு கின்ற விதியின் பிரகாரம் இரண்ணிய கர்ப்ப தானம் செய்து, அப்பால் ஆதி நாதனுன விசுவனாதர் வாசமாகிய கங்கா தீர்த்த யாத்திரைக்குப் போனார்.

இது சேதி உங்களுக்குத் தெரிவிக்கும்படி சொல்லச் சொன்னுரென்று சொருபன், சேதி கேட்ட பேருக்கெல்லாம் தப்பாமல் சொன்னுன்.

வெற்பனைய திணிகொள்புய புத்திரர்மித் திரர்மடவார்
மிக்கோர் தக்கோ
ரற்பனைய வுரைசொலக்கேட் டன்றென்பா ராமென்பா
ரறிகி லேந்தோ
கற்பனையா யிருக்குதென்பா ரெப்படியோ பரமசிவன்
கடாட்ச மென்பார்
சற்பனையே நடந்ததென்பா ரிப்படிசந் தேகமுற்றா
சனங்க டானே (22)

பர்வதம் போன்ற புஜவிசாலத்தையுடைய புத்திர மித்திர களத்திராதிகளும் அற்ப விசேஷமாகிய வார்த்தை சொல்லக் கேட்டு இவ்வார்த்தை இப்படியிருக்கு மென்றும் இல்லை யென்றும் தீர விசாரித்தால் தெரியுமென்றும் கற்பனை வார்த்தையாய்க் காணப்படுகிறதென்றும் எப்படியோ ஒன்றும் தெரியாது பரமசிவன் கடாட்ச மென்றும் இப்படிப் பல விதமாகிய சந்தேகங் கொண்டார்கள் ஜனங்கள்.

நன்றாய்ந்தோர் பெருமைநிச குணங்காட்டும் வணங்கரிய
நண்ணா லாரை
வென்றுரைத திசைபுகழ்ந்து சொலிக்காட்டு நிலைதருகற்பின்
மின்னார் தம்மைக்
குன்றுத மனைவாழ்க்கைத திறங்காட்டு மிரங்காமற்
கொலைக்கஞ் சாமற்
கொன்றுரைத தொழில்காட்டு மொழிகாட்டு விழிகாட்டிக்
கொடுக்குந் தானே (23)

தெளிவான பெரியோர்களுடைய மகத்துவத்தை அவர்களுடைய குணமே காண்பிக்கும். வணக்கமில்லாத சத்ருக்களை ஜயித்த போகத்தை திசைபுகழ்ந்து சொல்லிக் காட்டும். நிலையான கற்புடைய ஸ்திரீகளை அவர்கள் குறைவுறுமல் குடிவாழ்க்கை செய்கிற திறந்தானே காண்பிக்கும். மனது இரங்காமல் பழிக்குப் பயப்படாமல் உயிர்வதை செய்து கொன்ற பேரை அவர்கள் தொழிலும் பேசுகிற பேச்சும் பார்க்கிற விழியும் காண்பித்துக் கொடுக்குமென்றார்

தாராளத் துடனிதிகொ டதிகவிர ணியகருப்ப
தானம் வேட்டு
நீராழப் பெருகியகோ தாவரிக்கு நடந்தவாதன்
னிலைமை காண
வோராள்விட் டனரவன்செல் வழிவருவொ ருரைத்திடக்கேட்
டுயர் சொரூபப்
பேராள னிறந்தமைகண் டழன்மடுத்துத் தழன்மடுத்துப்
பெயர்ந்து மீண்டான் (24)

இப்படி இவன் மனக்குறிப்பறிந்து தாராளமாகத் திரவியத்தை எடுத்துக்கொண்டு புண்ணியமான இரணிய கர்ப்பதானஞ் செய்ய இச்சை கொண்டு கோதாவரிக்குப் போனவனுடைய நிலைவர மறியும்படி ஒரு ஆளை அனுப்பினார்கள். அவன் போகிறபோது எதிராக வழியிலிருந்து வந்தவர் சொல்லக் கேட்டுச் சொரூபன் இறந்த விடத்திலேயும் போய்க் கண்டு அஸ்திகளை எடுத்து அக்னி தகனம் பண்ணிவிட்டு அவ்விடம் விட்டுத் திரும்பவும் காஞ்சிபுரத்துக்கு வந்தான்.

மீண்டமறை யோனடந்த செய்திமொழிந் திடக்கேட்டு
வெறிதே காட்டின
மாண்டமறை யோன்மனைவி மைந்தருங்கண் கலுழ்ந்தரற்றி
வாடிச் சோர்ந்தார்
பாண்டமறை களிற்புகுந்து திருடியுண்ணக் கண்டுகொல்லும்
பருவம் பார்த்துத்
தாண்டிமறைந் தோடுமொரு சுணங்கனிற்போ யினன்வதைத்துத்
தனங்கொண் டேனே (25)

அப்படி நிலைவர மறிந்துவந்த பிராமணன் நடந்த சேதி சொல்லக்கேட்டு விருதாவில் காட்டிலே மாண்டுபோன சொரூபனுடைய பெண்சாதி பிள்ளை மற்றுமுள்ள பேர்களும் கண்ணீர் சொரியப்படி அலறியழுது வாடித் தக்கங் கொண்டாடினார்கள். பண்டமிருக்கும் அறையிலே மறைவாய்ப் புகுந்து பாண்டங்களையுருட்டித் திருடித் தின்னும்போது அதைக் கண்டு கொல்லப்போகும் சமயம் பார்த்து அடிக்கிற பேரைத் தாண்டித் தப்பி மறைந்தோடுகிற சுணங்கனைப்போல் ஓடிப்போனான் உயிர்வதை பண்ணித் தனத்தைக் கைக்கொண்ட சுதர்மன்.

தனத்துக்கா ருயிர்வதைத்த கொடியோனுந் திருக்காஞ்சித்
தலம்விட் டேகி
யினத்துக்கா காதவனு யிகழ்ச்சிபெற்றுப் பரததையர்க்கிட்
டியற்கை தாழ்ந்து
மனத்துக்கா னதுமுலகுக் காகாது நடத்தியுநன்
மரபு நீங்கிச்
சினத்துக்கா னகத்துழன்று வெறித்தவிடைக் காளையென்னத
திரிகின் ருனே (26)

திரவியத்தினிமித்தம உயிர்வதை செயத கொடியோனுகிய சுதர்மன் திருக்காஞ்சி ஸ்தலததை விட்டுப போய இனததுககு ஆகாதவனுய இகழ்ச்சியடைந்து, தாசிகளுககுத் தனங்களைக் கொடுதது இயற்கை தாழ்நது தன் மனதுகணக் காரியமெல்லாம உலகததுக்காகாமல நடததி வநது தன் குலாசாரம தப்பிக் கோபத்துடனே காட்டிலே யலைந்து பைததியம பிடிதது வெறிகொடுத்த காட்டு மாடுபோல் எஙகும திரிநதான சுதாமன்.

கச்சித்தா னகதொடுத்து வடதிசையிற் சிலதுதென்கீழ்
கடல்மேல் பூமிக்
கொச்சித்தா னமுந்திரிந்தான் பறித்தபொரு ளழித்தபொருள்
குணிப்பார் யாரோ
நச்சித்தா னுவந்தமது வருந்துதசை மணந்தபின்னுர்
நலத்தான் மானம்
வர்ச்சித்தா னொருபுலைசசிக் கிச்சித்தான் மனதின்மெத்த
வாஞ்சித் தானே (27)

காஞ்சிபுரம் தொடுத்து வடக்கே எட்டின மட்டும தென் சமுத்திரம் கீழ் சமுத்திரம் சமீபமான கொச்சி முதலான ஸ்தானஙகளெல்லாம, அலைந்து சஞ்சரித்துத் தனியே வரும பேரையடித்துப பறிதத பொருள்களும அழித்த திரவியங்களும இவ்வளவென்று யாவராலும சொல்லலாகாது இச்சையுடன் சாராயத்தைக் குடிதது மாமசங்களைப புசித்து அந்த மதத்தினுலே ஸ்திரிகளிடம மோகங்கொண்டிருநதும் தன்னுடைய மானமெல்லாமிழநதும ஒரு பறை ஸ்திரியை விருமபி மனதிலே மெத்தவும் வாஞ்சை கொண்டான்.

போவெடுத்து வாவெனவே புலைச்சிசொன்ன சிவதலத்திற்
பொருளுங் கொண்டா

றுவெடுத்துப் புகலரிய பாதகங்கள் புரிந்தனன்மன்
னவர்சிங் காரக்
காவெடுத்தேந் தியமலருஞ் சிவனுடுமே சவன்மகிழ்ச்சி
கனியச சாத்தும்
பூவெடுத்துங் கொடுப்பனற நிலையெலாங் கெடுத்தகுணப்
புலையன் றானே (28)

சிவ திரவியத்தைத் திருடிவாச சொல்லி பறைச்சி சொல்ல, அந்தப் பிர காரம் சிவ திரவியங்களைத் திருடினான், நாவினாலே சொல்லுதற் கரிதாகிய பாபங்களைப் பண்ணினான்; ராஜாக்களுடைய சிங்கார தோட்டமாகிய பூங்கா வனங்களிலே மலர்ந்த புஷ்பங்களையும் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சந்தோஷ மாகச் சாற்றிவைக்கிற மலரையும் எடுத்துவந்து பறைச்சிக்குக் கொடுப்பான்; இப்படி தர்ம நிலையெல்லாம் கெடுத்தான தீய குணமுடைத்த சண்டாளன்.

சூடினன் மகிழ்ச்சியைக்கண் டுறந்தைமன்னற கமைந்தநறுந்
துணர்ப்பூங் காவி
னுடினு னிசியினமல ரெடுத்தல்கண்டு பிடித்தவர்கை
நழுவி யப்பா
லோடினு னடைந்துளபைஞ் ஞீலியினுந் தொடர்ந்திடக்கண்
டொளித்தான் மீண்டு
தேடினர் மலர்ச்சுமைவிட் டெறிந்துதலத் தவர்போலத்
திரிகின றானே (29)

இப்படிக்கு நாடோறும் கொண்டுவந்து பறைச்சிக்கு மலர்சூட்டிச் சந் தோஷமடைந்து உறையூருக்கதிபதியான சோழராஜன் வைத்த பூங்காவனத் தில் பாதிராத்திரியிலே போய் மலரெல்லாம் எடுத்தான்; அது கண்டு காவலாளி கள் கைப்பிடியாகப் பிடிக்க அந்தப் பிடி நழுவி அப்பாலே ஓடினான்; அவர் கள் பின்னாலே தொடர்ந்து திருப்பைஞ்ஞீலி வரைக்கும் துரத்தி வருவதைக் கண்டு ஒளித்துக் கொண்டான்; திரும்பவும் தேடினார்கள். சுமையாகக் கொண்டுவந்த மலரை அப்பாலே விட்டெறிந்து போட்டு அந்த ஸ்தலத்திலே இருப்பவரைப் போல் அவன் திரிந்தான்.

ஆர்த்தெறிந்த விசையதனு லிருக்கியகட் டவிழ்ந்ததுகன்
றருளகல் யாண

தீர்த்தமுயர் கரையிலொரு முனிவனர்ச்சித் தயலமைக்கச்
செங்கை யேற்ற
பார்த்திபமூர்த் தியின்மீதே காற்றடிக்கப் பறந்துவரு
பல்போ தெல்லாந்
தூர்த்ததிமை யோர்வணங்கிப் போற்றிநின்று மலர்மாரி
சொரிந்த தேபோல் (30)

அப்படி எறிந்த விசையினாலே இறுக்கிக் கட்டின மலரின் சுமை கட்டவிழ்ந்து, கல்யாண தீர்த்தக்கரையிலே ஒரு ரிஷி அர்ச்சிப்பதற்காகக் கையிலேற்ற பார்த்திப லிங்கத்தின் திருமுடியிலே, காற்றடிக்கப் பறந்து பலவிதமாகிய புஷ்பங்களெல்லாம் தூற்றிவிட்டது, முப்பத்து முக்கோடி தேவர்களும் வணங்கித் துதிசெய்து பாரிஜாத புஷ்பமாரி சொரிந்ததுபோல்

புரத்திலுந்தே டினககாரர் போயினர்சேர்த் தனனெடுத்தப்
பூவை நீசப்
பரத்தைகையிற் கொடுத்தனனிப் படிசிலநா ளுழன்றலைந்து
பார்மேல் யார்க்கும்
வரத்தகா நோயுகெடு மூப்பினொடு தரித்திரமும்
வலிந்து வாட்டித
துரப்பவுரங் களுந்தொலைந்து முரண்களுங்கெட் டுயிர்மடிந்தான்
சுதர்மன் றானே (31)

அப்போது பின் தொடர்ந்து தேடிவந்த காவலாளர் அவனைக் காணாமையால் போய்விட்டார்கள். அந்த மலர்ச் சுமையிலே காற்றடித்துப் பறந்து போன புஷ்பம்போக மற்ற மலரைச் சேர்த்தெடுத்து அவன் பறைச்சி கையில் கொடுத்தான். இந்தப் பிரகாரம் சில நாள் அலைந்து பூலோகத்திலே எவர்களு மடையாத வியாதியை அடைந்து முதிர்ந்த கிழமாகித் தரித்திரத்தினால் வாதைப்பட்டுக் கர்வமும் கெட்டு உயிர் விட்டிறந்தான் சுதாமன்.

நீசரிடத் திறந்தகுண நீசனுயிர் தனைக்கவர
நெடிய சூல
பாசதண்டத் துடனியம தூதர்கள்வந் தனர்சகத்திர
பானு வீசு

தேசுதிகழ் விமானமுங்கொண் டளவிறந்த பூதகணஞ்
சேவித் தேத்த
மாசில்சிவ கணத்தவரந் தரத்தினின்றுந் தலத்தின்மிசை
வந்தா ரன்றே (32)

அளவில்லாத புன்குணம் படைத்த பறையன் உயிரைக் கவர நீண்ட சூலமும் பாசக்கயிறும் தெண்டாயுதமும் எடுத்துக் கொண்டு யமதூதர்கள் வந்தார்கள். ஆயிரம் கோடி சூரிய பிரகாசம் போன்ற நவரத்ன விமானங் கொண்டு அளவிறந்த பூத கணங்கள் சேவிக்கும்படி குற்றமில்லாத சிவகண நாதர் ஆகாச மார்க்கமாய்ப் பூலோகத்திலே வந்தார்கள்

தவறிழைத்தல் கடைப்பிடித்த படிறனைக்கட் டினர்பிடித்தார்
சமன்றூ தாள
சிவனையிந்தக் கணமழைத்து வருவீரென் றனரிறைவ
ரினிமே னீங்கள்
கவர்வதுநன் றல்லவென மறுத்தார்நிக் கிரகபூத
கணத்தான் மீட்டுச்
சிவகணத்தர் விமானத்தே சுதர்மனைவைத் திறையுலகஞ்
சேர்த்தி னாரே (33)

பஞ்சபாதகமும் தொழிலாகச் செய்த சண்டாளனைப் பிடித்துக் கட்டினார்கள் யமதூதர்கள். அந்த வேளையிலே "இவனை இத்தக்ஷணம் அழைத்து வரச் சொல்லிப் பரமசிவன் கட்டளை யிட்டிருக்கிறார். இனிமேல் நீங்கள் இவனைப் பிடிப்பது நல்லதல்ல" என்று மறுத்துச் சொல்லிப் பூதகணங்களைக் கொண்டு தடுத்துச் சிவகண நாதர்கள் பிரகாசம் பொருந்திய விமானத்தில் சுதர மனை வைத்துக் கொண்டு சிவலோகம் போகும்படி செய்தார்.

பூதகணந் துரந்தடிக்கச் சுதர்மனைவிட் டுயிர்பிழைத்துப்
போன கால
தூதகணந் தபனமகிழ் பாலனுடன் சொலக்கேட்டுத்
துடித்தான் பார்த்தான்
காதகணத் தினின்மயிட மிவர்ந்தானன் பதிபெயர்ந்தா
னக ரீக

மேதகணங் குடையார்வீற் றினிதிருந்த கைலாய
விலங்கற் சேர்ந்தான் (34)

பூத கணாநாதர் தூதத்தியடிக்கச் சுதர்மனை விட்டுத தவகள் உயிர்தபபிப பிழைததுப போன காலனுதாகள் சூரிய குமாரனுன யமதாமனுடனே சொல்லகேட்டு அவன் மனாநடுநடுதது பாரத்தத தனனுடைய கணஙகள் சூழுமபடி எருமைக் கடாவின் பேரிலேறி எம பட்டணம விட்டு மேன்மை பொருந்திய பாாவதி பாகாளன் வீறறிருநதருளும கைலாச பாவததிலே வந்து சேர்ந்தான்.

மின்படர்செஞ் சடையின்மதி முடிததாரசே வடிததலத்தின்
வீழ்ந்து போறறி
வன்படர்ந்த பாதகனை நிலையகலவெம் புலையனைத்தன்
மனத்தி னானை
யென்படர்பற் றினர்கடிந்து தணடனைசெய் தவன்றனைக்கொண்
டேகி னார்க
ளென்படர்க ணமன்பதவி யென்பதொரு நிலையேதென்
றுணர்வின் வாழ்வே (35)

மினனல படாநத சடா மகுடத்திலே ஆாதத சநதிரனைத தரித்த சிவன் பாததலிலே வணஙகி ஸதோத்திரம செயத, கொடிய பாதகனைத தனனிலையகன்ற சுததா பறையனுகிய சுதாமனை, என்னுடைய தூதாள பிடிததுக கட்டியபோது அவாகளைத தணடிததுப பாவியை விமானததிலேறறி உமமுடைய பதவியிலே சோத்தாாகள உமது கணஙகள. இபபடியானுல எம பட்டண மென்னுமொரு நிலையுணடோ எனககு அறிவுதாபபட்ட வாழவே என்றான்.

என்றுரைத்த மொழிகைலைக் குன்றுடையார் கேட்டியமற
கிசைந்து சொலவார்
கன்றியவெவ் வினையேசெய் சுதர்மனுறைந் தையின்மலர்கள
ளவி லேற்று
மன்றமர்பைஞ் ஞீலிதனில் வரும்பொழுதோர் சிவலிஙக
வடிவ மீதே
துன்றமலர் களிற்சிலது வீழ்ந்ததுதீ வினையனைத்துந்
தொலைந்த தன்றே (36)

இப்படி யமன் சொன்ன வார்த்தையைக் கேட்ட கைலாச பர்வத ராஜன் எமதன்மனுக்குத் திருவுளம் பற்றுவார் கொடிதாகிய பாபம் செய்த சுதர்மன் உறையூரிலே களவு செய்து வந்த புஷ்பங்கள் ரத்ன சபை பொருந்திய திருப் பஞ்ஞீலி என்னும் ஸ்தலத்திலே வரும்பொழுது ஒரு சிவலிங்க ரூபத்தின் பேரிலே சில புஷ்பம் அணுகும்படி விழுந்தது ஆனபடியினாலே அவன் செய்த பாபங்களெல்லாம் தொலைந்தன.

ஆகலா லெமதுதன்ம ரகசியமு ஞ்ஞீலிவனந்
தடைவு தானும்
வேதபுரா ணாதிகட்கு முகுந்தனயன் மகபதிக்கும்
விண்ணோ ராதி
மாதவர்க்குந் தெரிவரிதென் றோதினர்போ தவும்வெருண்ட
மறலி யீசா
பாதமலர் பணிந்தெனது பிழைபொறுத்தி யெனச்சொலித்தன்
பதியிற் போனான் (37)

ஆகையினாலே நம்முடைய சிவதர்ம ரகசியமும் ஞ்ஞீலி வன மகத்துவமும் வேதாகம புராணாதிகளுக்கும் பிரமா விஷ்ணு தேவேந்திரன் தேவர்கள் முதலாகிய ரிஷிகளுக்கும் தெரிவது அரிதென்று திருவுளம் பற்றினார். மிகவும் பயந்து யமதர்மன் சிவனுடைய பாதார விந்தங்களைப் பணிந்து நான் சொன்ன பிழை பொறுத்தருள வேண்டுமென்று விண்ணப்பம் செய்து தன்னுடைய பட்டணத்துக்குப் போனான்.

இதுமகிமை படைத்ததிருப் ஞ்ஞீலியையுணர்ந்தோர்கண்
ணெதிர்கண் டோர்க
ளத்தலத்தி லொருகணந்தா னிருந்தோர்வீ றிருந்தோர்நல்
லறஞ்செய் தோர்கட்
கெதுபவங்க ளுநீங்கு நீயும்போய்ச் சிவனையாசரித்
திடர்தீர் கென்று
பதுமகர்ப்ப னுபயனுக் கிதத்திலும் பணிந்துபுத்திரன்
பலத்தைச் சார்ந்தான் (38)

இந்த மகிமைபடைத்தது திருப்பைஞ்ஞீலி இதையாணதிலே நினைத்தபோ கள், கண்ணினாலே கண்டபோகள் அந்த ஸ்தலத்திலே ஒரு நாழிகை தரித்தது

தாபரித்தபேர்கள், என்றைக்கும வாசமாயிருந்த போகள், நல்ல தர்மங்களைச் செயத போகள் இவர்களெல்லாம என்ன பாபங்களைச் செயதாலும் உடனே நிவர்த்தியாகும. ஆகையால் நீயும அந்த ஸ்தலத்துககுபபோய் பரமசிவனைப பூஜைசெய்து அபமிருத்துவாகிய இடரைத் தீரபபாயெனறு பத்மகர்ப்பன் விடை கொடுத்தனுபப அஙகமித்திரனும அவரைப பணிநது ரத்ன சபையிலே வந்தான்.

அறிவான்மிக் குடையசந்திர பீடனுக்குச் சதர்மனியல்
பருளிச் செய்தான்
குறியான வாதாவி தம்பியுட னிருந்துசுவைச
குணங்குன் றுத
கறியாகச் சமைத்தருந்தச செய்துவரு கெனமொழிந்த
கணத்திலே தீப்
பொறிதாவு பஞ்செனவில் வலனையனு சனைச்செயித்த
புகழி னுனே (39)

அறிவுனுலேயும மிகுநத கொடையினுலேயும உயாநத கீர்த்திபடைத்த சந்திர பீட சோழராஜனுககுச சுதாமனுடைய சரிதகிரம இபபடியென்று திருவுளம் பற்றினா, முன்னுளிலே வாதாவியானவன ஆட்டுருபமான தம்பி சரீரத்தை அறுதது ருசிகுன்றுதபடி கறிசமைதுச் சாபபிடுபபடி செயது பின்பு தமபி வெளிபபடுமபடி அவன் மந்திரம ஜபிககுமபோது அந்தக்ஷணத்திலே தீப்பட்ட பஞ்சானது சாமபலாவதுபோல் அவனுககுத தமபியான இல்வலனை ஜெயித்து கீர்த்தி படைதத அகஸ்திய ரிஷி

---

## இருபத்து நான்காவது அத்தியாயம்

## அங்கமித்திரன் சாப விமோசனம்பெற்ற மகிமை

காமடைந்தை பதிபடைபபுந் தனதுபதி திதிகடப்பு
நடத்தல் வேண்டிப்
பூமடநதை யுறைந்தினிய தவநடதது நீலிவனப
புனிதர் மேன்மை

சோமசிங்கா தனனெனும்பேர் பூமியெங்கும் புகழ்குடந்தைச்
சோழன் கேட்பத்
தாமதும கிழ்ந்துவகை தழைக்கமொழிந் தனன்றமிழ்மாற்
றவத்தான் மிக்கோன் (1)

சரஸ்வதிக்கு நாயகனாகிய பிரமதேவன் உலகமுண்டாக்கின தொழிலும் தனக்கு நாயகனான விஷ்ணுவானவர் இந்த உலகத்தை இரக்ஷிக்கிற தொழிலுமுண்டாகும்படி யமனில்லாதபோது பூமாதேவியானவள் வந்து தபசு புண்ணிய நீலிவனநாதர மகத்துவங்களை, சந்திர சிங்காதனென்னும் பெயரோடு பூலோகமெங்கும் புகழக் கும்பகோணமென்னும் பட்டணத்துக்கதிபதியாய் விளங்கிய சந்திர பீட சோழராஜன் கேட்க, சந்தோஷத்துடனும் கிருபையுடனும் மொழியும்படி திருவுளம் பற்றினார், தபசிலேயும் தமிழிலேயும் வல்லவரான அகஸ்தியர்

அந்தணன்சொல வியவுறுதி மொழிக்கொடுசிந் தனைத்துயர
மனைத்துந் தீர்ந்து
பந்தவினைத் தொடர்பவங்க ணீக்கியபைஞ் ஞீலிவளம்
பதியைச் சார
வந்தடைந்து நலிந்தகொடு மிருத்துவொரு குறட்பூத
வடிவ மாகிச
சந்தமறை தேர்விடலை யடிகள்பணிந் தெழுந்திதுசொற்
சாற்றிற் றன்றே (2)

பதுமகர்ப்பன் உறுதியாகச் சொன்னதைக் கேட்டு மனத்துயரங்களெல்லாம் தீர்ந்து கட்டுப்பட்டிருக்கின்ற இருவினைச் தொடர்ச்சியாகிய பாபங்களை நிவர்த்தி பண்ணுகின்ற திருப்பைஞ்ஞீலி ஸ்தலத்திலே வரும்போது கொடிய மிருத்யு ஒரு குறட் பூதவடிவமாய்ப் பிராமணன் முன்னே தோன்றி அடி பணிந்து எழுந்து கூறுகிறது.

வேலையுல கிறைஞ்சியதண் டரளகிரி யடைந்தயஞ்ஞ
மித்திரப் பேரோ
னாலயமண் டபங்கூட கோபுரங்க ளாவணங்க
ளன்னத் தியாகச்

சாலையுங்கண் டனன்முனிவோர் சனங்கள்பணி வசிட்டமுனி
சரணம் போற்றிக்
காலையிளங் கதிரெனவீற் றிருந்திடுதாற் பியன்றனைத்தாட்
கமலந் தாழ்ந்தான் (3)

சமுத்திரம் சூழ்ந்த பூமி யெல்லாம் தொழும் முத்து மலை என்னும் திருப் பைஞ்ஞீலியை வந்தடைந்த யஞ்ஞ மித்திரன் ஆலயங்கள் மண்டபங்கள், மாட கூட கோபுரங்கள், தண்ணீர்ப் பந்தல், அன்னசத்திர சாலை முதலியன கண்டு ரிஷிகள் முதலாகிய ஜனங்கள் வணங்குகின்ற வசிஷ்ட ரிஷி பாதத்திலே வணங்கிக் காலையில் உதித்து எழுந்தருளும் பால சூரியப் பிரகாசம் போலிருக் கும் தார்ப்பிய மகரிஷி பாதார விந்தங்களையும் பணிந்து சொல்வான.

அந்தவிருத் தாசலத்தி லிருந்ததுவுந் தந்தையர்செய்
யாகந் தன்னில்
வந்தவருத் தமுஞ்சபித்த வாறுஞ்சு ளாபுரியில்
வரவுஞ் சார்ந்த
பந்தவிருத் திகளினிது பணித்தமையுஞ் சொலியிருந்துப்
பயமும் பாப
முந்தவிருத் தமயம மெனக்கருள்செய் யெனமுனிவ
னுவந்து சொல்வான் (4)

அந்த விருத்தா ஜலத்திலே தான் இருந்ததும் தகப்பன் செய்த யாகத் திற்கு விக்கினம் பண்ணினதும, அது கண்டு தகப்பன் சபித்த வரலாறும், உறையூரில் வந்ததும, பதுமகாபபன் பாசபந்த தொடர்ச்சி விருத்திகளுடைய ஞாயங்கள் கட்டளையிட்டது முதலிய வெல்லாம சொல்லி, அபமிருத்யுவி னுடைய முன் ஜன்மாந்திர பாபமும் நீங்குமபடி உத்தமமாகிய நேமங்களை அடி யேனுக்குச் சொலலவேண்டுமென தாற்பிய முனி சந்தோஷத்துடனே சொல் வார்.

விருத்தகிரி மேவுமெஞ்ஞ மித்திரனே யுனதுதந்தை
விளம்பு சாபம்
உருத்தரித்து வருகொடிய மிருத்துவினை னீவிவனத்
துயிர்க ளெல்லாம்

வருத்தியெமைத் தெறுகால மிருத்துவென்று புகல்வதற்கு
 வசன மன்றோ
கருத்தன்முத்தா சலக்கடவு ளுனதுதெய்வம் யாங்கள்பணி
 கடவு ணீயே (5)

விருத்தாஜல வாஸனான அங்கமித்திரனே உன்னுடைய தகப்பன் சொன்ன சாபமானது அபமிருத்து ரூபமெடுத்து வந்த படியினாலே நீலி வனத்து ஜீவனங்களெல்லாம் எங்களை வருத்தி உயிர் பிடிக்கிற காலமிருந்து ஒரு காலமும் இந்த ஸ்தலத்திலே வரக் கூடாதென்றும் சொல்லுமல்லவோ? நீ பரிசுத்தனான படியினாலே காத்தருளிய முத்தமலை வாஸனான பரமசிவன் உன்னுடைய தெய்வம். நாங்கள் பணியப்பட்ட தெய்வம் நீ என்றார்.

வரிவேங்கைப் புலிபிடித்து விடுபசுவின் சிறியகன்று
 வாய்விட் டார்த்துப
பரிவுளநற் றாயிருக்கு மிடந்தேடி யோடிவரு
 பான்மை போலக்
கருணைரத்தின சபாபதியே யுமாபதியே யடைந்தவர்சற்
 கதியே மாறு
தருண்ஞான பயோததியே யெனநீலி வனத்தரன்சந்
 நிதியைச் சார்ந்தான் (6)

வரி பொருந்திய வேங்கைப் புலியானது பிடிக்கத் தப்பி வந்த பசுவின் கன்றானது கதறிக் கொண்டு ஆசையுடனே தன்னுடைய தாயிருக்கிற இடம் ஒடி வருவதுபோல், கருணை பொருந்திய ரத்ன சபாபதியே உமாபதியே அடைந்தவர்களின் கதியே மாறாமல் இருக்கின்ற கடவுளே என்று ஸ்துதி பண்ணிக் கொண்டு நீலிவன நாதனுடைய ஸந்நிதியை அடைந்தான்.

கொன்மதலை விடுத்தேன்செல் கெனவருத்து மிருத்துருவங்
 கொடுவிட் டேகப்
பொன்மதலைச் சடிலர்திரு வருளாலவெங் கூற்றதனைப்
 புடைத்து நீத்துச
சொன்மதலை முனிவனுந்தாழ் கடலிலாழ்ந் திடவமணத்
 துரோகர் சேர்த்த
வன்மதலை மிதப்பவரு மொருகடவுட் புலமைமுனி
 வரனும் போன்றான் (7)

பிள்ளையை உன்பால் ஒப்புவித்தேன் ; நீ அப்பிள்ளையைக் கொல்லக் கடவாய் என்று ஏவ, (அதற்கிணங்கி) உருவெடுத்து வந்த கொடிய அபமிருத்துவும் (அவ்வாறு கொல்லாமல்) விலகியது போலும். இளஞ் சந்திரனை யணிந்த பொன்னிறம் பொருந்திய சடா பாரத்தையுடைய சிவபெருமானது திருவருளால், (தன்னை நாடிவந்த) குரூரத் தன்மை வாய்ந்த எமனை யுதைப்பித்து நீக்கிய யாவரும் புகழும் படியான சிறுபிராய முள்ள மார்க்கண்டேயரைப் போலும், ஆழமுள்ள கடலில் வஞ்சகரான அவுணர்கள், ஒரு பெருங் கற்பாறையோடு சேர்த்துக் கட்டி எறிய அவ்வாறு அமிழாமல் அப்பாறையையே ஒரு தெப்பமாகக் கொண்டு மிதந்து வந்து கரை சேர்ந்த தெய்வப் புலமை பொருந்திய அப்பர் சுவாமியைப் போலும், அந்த மித்திரனும் தனக்கு நேர்ந்த அபமிருத்துவினின்றும் தப்பி யுய்ந்தான்.

மிருத்தினால் வருபயமு மிருத்துவும்பைஞ் ஞீலியென
விருப்பாய் நெஞ்சு
ளிருத்தினுற் கிலேயிதுமுத் தினத்திலுன துயிர்கவர
விறுதி சூழ்ந்த
மிருத்துவே யகன்றதிந்தத் தினத்திலொழிந் தததுயர
மெனினு ஞான
நிருததனைவந் தனைசெயுமா றுரைத்திடக்கேள் விருத்தகிரி
நிலேயி ஞனே (8)

அபமிருத்துவினாலே வரும்பயமும் மிருத்யுவும் திருப்பைஞ்ஞீலி யென்று ஆசையுடனே நெஞ்சிலே பக்தியாய் நினைத்தபேருக்கு இல்லை. மூன்று நாளிலே உன்னுடைய ஜீவனை வாங்கவந்து பிடித்த அபமிருத்துவானது இன்றைக்கு விட்டு விலகிப் போயிற்று. ஞான நடராஜனை வந்தனை செய்கின்ற வரலாறு சொல்லுவோம் கேளப்பா விருத்தாஜல வாசனான அங்கமித்திரனே! என்றார் தாற்பிய மகரிஷி.

வாட்டிநமன் றனைவதைசெய்த வந்நாளில் விண்ணோர்கண்
மண்ணோர் வேண்ட
மீட்டவனைத் தருபிலத்தின்வழியுதித்த தொருதீர்த்த
மியமன்பேராற்
சூட்டியம தீர்த்தமென விளங்குமதிற் படிந்தவரோர்
துளியுட் கொண்டோர்

காட்டுமெனை சொன்னமங்க ளுதவினர்மேன் மிருத்துவந்து
நணுகி டாதே (9)

யமனை உதைத்துக் கொன்ற அந்த நாளிலே தேவலோகத்தார், பூலோகத்தார் முதலான போகள் எல்லோரும் சிவனை மன்றாடி வேண்டியழைக்கச் சொல்லி விண்ணப்பம் செய்யத் திரும்ப யமனை வர வழைத்த பிலத்து வாரத்திலே அவன் பெயரால் தீர்த்தமென்று விளங்கும் அதிலே தீர்த்தமாடின போகள், ஒரு துளி உட்கொண்ட போகள் அந்தத் தீர்த்தத்தினிடத்திலே அன்னதானம் சொர்ணதானம் செய்த போகள் இவாகள் போரிலே மிருத்துவானது அணுகா தென்றார்.

விதிமாலவா சவனிமை போர முனிவராகின் னரரியக்கா
மிக்கோர் போற்றச்

சதுரான வருணதிசை முகமாயநா யகவுருவந்
தாங்கி நீங்கா

தெதிராயந் தகன்வரசசெய துபதேச போற்கரா
மிருந்த காட்சி

யதிகார வல்லபரைத் தரிசித்தோா தமைமிருத்து
வணுகி டாதே (10)

பிரமமா, விஷ்ணு, தேவேந்திரன், முதலான போகள் ரிஷிகள், கின்னர முதலியோா போற்றும் படி மேற்கு முகமாய நாயக ரூபமெடுத்து எழுந்தருளிய யமனுக்கு எதிராக அவன் வருகிறபோது உபதேச காத்தாயிருந்து காட்சி தந்த அதிகார வல்லபரைத் தரிசனம் பண்ணினபோகளை மிருத்துவானது அண்டாது.

கேத்திரமுந் தீர்த்தமொடு மூர்த்தியெனு மூன றுமொன றிற்
கிடைத்திட் டாலும்

கோத்தணிவே டமுநீறு மந்திரமு மலாதுமனை
கொடுத்தி டாது

சோதருமொரு கடவுளாக்கு நிகராகப புகலரிய
சிவனே யலலாற

சாத்திபெற வணிதிருவெண ணீ றறிணுண்மை விரித்தெவர்க
டெரிகு வாரே (11)

சொற்ச சேஷத்திரமும் தீர்த்தமும் மூர்த்தியும் இந்த மூன்றும் ஒருங்கே கிடைத்தாலும் கோத்து அணியப்பட்ட ருத்திராக்ஷ மாலையும் விபூதியும்

பஞ்சாக்ஷர மந்திரமும இந்த மூன்று மில்லாமல் போனால் பலன கொடாது. சொற்ற சிவபெருமானே அறிவானல்லது சிறப்பு பெறும்படி தரிக்கின்ற விபூதி மகுத்துவத்தை எவர்கள் அறிவார்கள் ?

புகலரிய பலகோடி யரியயன்மாண டகிலாணட
புவன மெல்லாம்
யுகமுடிவி லுருத்தெழுந்த வடவையன லெரிததிடவெந்
தொடுங்கு காலிற்
ககனமுக டளவும்வடி வொடுசகல சஙகார
கர்த்த னாகி
நிகரிலுருத் திரக்கடவுள் விளக்கொளியு மருக்கனுமபோ
னிற்பர் தாமே (12)

எண்ணிக்கை யல்லாது பலகோடி பிரமமா விஷ்ணு இறநது அகிலாண்ட புவனங்களெல்லாம யுகாந்த முடிவிலே சீறியெழும வடவாமுகாக்கினியானது எரித்திட வெந்து சகலமும ஒடுங்கிப போகிற காலததிலே ஆகாச முகடளவாக விசுவ ரூபங்கொணடு சகலத்தையும ஸமஹாரம செயகின்ற காததனாகிய ருத்திர மூாத்தியானவா சூரியன் ஒளிபோலும எஙகும பரநது நிற்பார்.

ஓங்கியெழு மகாக்கினியாய்த் தேங்கியெங்கு நிறைந்தசிவ
னுருவ மீதிற
ருங்கரிய புவனசரா சரமனைததூ மெரிந்துவிழு
சாம்பற ருனே
யாங்கவருக் கயிசுவரிய மாகியக லாதிருக்கு
மாத லாலே
பாங்கான விபூதியென்ப ரதுவலா திலவேறு
பாக்கியந் தானே (13)

ஓங்கியெழும மகா அகனி சொரூபததுடனே தாவி எஙகும நிறைந் திருக்கின்ற சிவபெருமானுடைய ரூபாக்கினி தாஙகாமல புவனமும சராசரங கள் ஆகியவைகளும எரிந்துவிழுகிற சாமபலே அநத ருததிர மூாததியின திரு மேனியிலே ஐசுவரியமாய வாஙகாமலிருக்கு மாகையினாலே பாஙகு பெற்ற விபூதியென்று சொல்லுவார்கள். அதுவே பாககிய மல்லாமல் வேறு ஒரு பாக்கியமுமில்லை

புத்திரமித் திராகணிதி பதியதிக செயங்களும்வெண
பொடியே நல்கும்

வித்தையொடு புத்தியுஙன் முத்தியுந்தந் தருளியது
விபூதி தானே
சித்திபெற வணிமாதி யட்டசித்தி கொடுப்பதுவுந்
திருவெண் ணீறே
நித்தன்வடி வினைமறவார்க் குரியதுமற் றவார்க்கரிது
நீறு தானே (14)

குணமான சற்புத்திரர்களையும், மித்திரர்களையும், திரவியங்களையும், இருக்கிறதற்கு நல்ல தலங்களும் வெற்றியும் வெண்மையாகிய பொடியே கொடுக்கும் வித்தை, புத்தி, மோக்ஷம், முதலியவைகளையும் விபூதிதானே கொடுக்கும். பின்னும் காயசித்திபெறும்படி அஷ்டமா சித்திகளைக் கொடுப்பதும் திரு வெண்ணீறே யாகும் நித்தனாகிய பரமசிவன் ரூபத்தை மறவாத பேருக்கு உரியதாகும் திருநீறு மற்ற பேர்களுக்கு அது அரிதாகுமென்றார்

மறமிகுத்த தொழிற்குரிய விழிபுலைய னொருவன்விந்த
வரையின் வாழ்வோன்
குறைவில்கங்கைக் கெனப்போவோர் வருவோர்க ளனைவருயிர்
கொன்ற பாவி
பிறுதியின்மெய் புழுத்தழிந்து கிடந்ததுயிர் தொலைநுமந்தி
விருந்த கூகை
சிறகுதர விழுசுடலை யடலைதெறித் தயாபதவி
சேர்ந்தா னன்றே (15)

அக்கிரமமிகுந்த தொழிற்குரிய இழிவான பறையனொருவன் விந்த கிரியிலே வாஸமாயிருந்து கொண்டு குறைவிலலாமல் கங்கா யாத்திரை போகிற போகளையும் கங்கா யாத்திரைக்குப் போய்த் திரும்பி வருகிறபோகளையும் கொல்லும் மகா பாபியா யிருந்தான் அவனுக்குச் சாதுக்காலம் வந்து வியாதியினாலே சரீரம் புழுத்து அழிந்து ஒரு விருக்ஷத்தின் கீழே உயிர் போகிற சமயத்திலிருக்கையில், கூகை யொன்று ஸமசானச் சாம்பலிலேபுரண்டு அந்தத்தில் வந்தமர்ந்து சிறகுகளை உதறியது சிறகில ஒட்டியிருந்த சாம்பல் இந்தப் பறையன் பேரில உதிர்ந்தது அதினாலே அவன் சாயுஜ்ய பதவியடைந்தான.

தவளகிற மாயுறப்பிற் குறைவறச்சித திரைமாதரு
சாவித தாண்மேய்ந்

தவமகல்கோ விடுத்திடுசா ணகமண்மேல் விழாதொருதட்
டதனி லேந்தி
யுவமைதவி ரைந்தெழுத்தைச் செபித்துருட்டி யுலர்த்திநதி
யோரந் தன்னிற்
சிவதலத்திற் கொட்டகத்திற் புடமிடுதல் கற்பமென்பர்
தெரிந்து ளோரே (16)

வெள்ளை நிறமாய் அவயவங்கள் குறை விலலாததாயச சித்திரை மாதம் நெல்லரிந்த தாள் மேயந்த குற்றமிலலாத பசுவிட்ட சாணத்தைப் பூமியிலே விழாமல் ஒரு தட்டிலே ஏந்தி யுவமையிலலாத பஞ்சாக்ஷரத்தை ஜபித்து உண்டைசெயது உலர்த்தித் தீர்த்தக் கரையோரத்திலேனும் சிவாலயங்களிலேனும் கொட்டகத்திலேனும் புடமிட்டு எடுப்பதைக் கற்பமான விபூதி என்று பெரியோர்கள் சொல்வார்கள்.

ஈசர்திரு விருப்பிடுகை மண்ணீறு வனத்தினிலா
னிடுசா ணகந்
தேசுறவெந் திடுநீறு வேளவிந் நிவையிலொன்றைச
சிறப்பிற் சேர்த்து
மாசகற்றிச செபத்தினொடு குழைத்துருட்டி யுலர்த்தியழன்
மடுத்திட் டப்பா
லாசையனபோ டினிதெடுத்து வைப்பதனு கற்பமெனப
ரறிந்து ளோரே (17)

பரமேசுவரன ஆலய மடப்பள்ளிச சாம்பல், பெரியோர்கள் வீட்டில் சமயல் மடப்பள்ளிச் சாம்பல், வனங்களிலே காட்டுமுட்டைகள் சுட்ட சாம்பல், யாகம் பண்ணின ஹோம குண்டத்துச் சாம்பல், இவைகளிலேதாகிலும் ஒன்று கிடைத்ததைக் கொண்டு வந்து அதிலிருக்கிற குற்றங்களை நீக்கிப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக் குழைத்து உண்டைசெயது உலர்த்தி அக்கினியிலே புடம் பண்ணிப் பக்தி யனபுடனே எடுத்து வைத்துக் கொள்வது அனுகல்பமான விபூதி என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்

விடுத்தகலா தணைத்துநிறை பரத்தினிறசென றுறைபவரே
விபூதி யள்ளிக்
கொடுக்கவுரி யவரவரைச சிவனாக நினைத்திருகை
குவித்துப் போற்றி

வடுத்தவிரன் பொடும்வாங்கித தரிப்பர்பத்தி மார்க்கிர்த
வாறு நீங்கிக்

கொடுப்பவரு மேற்பவரு மிருப்பர்நர கினில்யுகங்க ள
கோடி தானே (18)

எத்தேச காலமும் எங்கும் விட்டகலாமல் ஸதாவா ஜங்கமஸ்தாவர சகலத்தி லும நிறைந்திருக்கிற பாதத்திலே மனதை வைத்திருக்கிற பெரியோர்கள் விபூதியள்ளிக் கொடுக்கிறதற்குரியவர்கள், அவர்களை சிவனாக பாவித்து வாங்குகிறபோர்கள், இரண்டு கைகளினாலும் கும்பிட்டுத் தங்கள் பாபங்களெல்லாம் தீரும்படி அன்புடனே வாங்கித் தரிப்பார்கள் பக்திமார்க்கமான போர்கள் இந்த முறைமை தப்பி கொடுக்கிறபேரும் வாங்கித் தரிக்கிறபேரும் நரகமே கதியாக கோடியுகம கிடந்தழுந்துவார்கள்.

உதையங்கப் பகலசாயங் காலமுனனுமம பூசைபொசிப்
புறங்கன் முன்பின்

சிதையுமல சலங்கழித்தா சமனுதி முடித்தபின்னுங்
தீக்கை யில்லோர்

விதியிகந்தா சாரகெறி பிழைத்தோர்கொக் கெலிகழுகு
வெருகு காக்கை

பிதுதொடினுங் கழுதைபன்றி சோதொடின் மூழ்கியபின்
னிடுவர் நீறே (19)

உதயகாலம், மத்தியான காலம், சாயங்காலம் பூஜைபண்ணுகிற சமயம் சாப்பிடுகிற சமயம், நித்திரை பண்ணுகிற சமயம், இச்சமயம் மூன்றுக்கும் முன்னும் பின்னும் விபூதி தரிக்கவேண்டும் மல ஜலங்களை விட்டதினால் கை கால் சுத்திசெய்து கொண்டு ஆசமனம் பண்ணியதற்குப் பின தரிக்க வேண்டும் இதுவுமல்லாமல் தீக்ஷையில்லாத பேர்கள் அவரவர்கள் ஆசாரந் தவறி நடக்கிற போர்கள், கொக்கு, எலி, கழுகு, பூனை, காக்கை இவைகள் தொட்டாலும நாய கழுதை பன்றி நீசன தொட்டாலும ஸ்நானம்பண்ணிப் பிறகு விபூதி தரிக்கவேண்டும

உச்சிநெற்றி கழுத்தடிமார் புந்தியிரு காதத்தினிலா
றுடைய மான

வச்செவிகீழ் முதுகுபிடர் கழுத்தெனச்சார் றிடுவார்
றுறு தான

மெச்சுநெற்றி மார்பிருதோள் கழுத்தெனவைந் திடுந்தரிப்பர்
மெய்ம்மீ தெல்லா

நிச்சயமாய்த் தரிப்பரதன் மீதுமுன்போற் குழைத்தணிவர்
நீறைத் தாமே (20)

விபூதி குழைத்துத் தரிப்பது எப்படி யெனில், உச்சி, நெற்றி கழுத்தடி, உந்தி, இரண்டு கரங்களில் ஆறிடம் உபய பார்சமிரண்டு, சாது, பின் முதுகு, பிடரி, கழுத்து இந்தப் பதினாறு ஸ்தானங்களிலேயும் தரிப்பார்கள் இதுவு மன்றி நெற்றி, மார்பு, இரண்டு தோள், கழுத்து இந்த ஐந்து ஸ்தானங்களி லேயும் தரிப்பார்கள். இப்படிக் குழைத்துத் தரிப்பதற்கு முன்னே சரீர மெல் லாம் உத்தூளனமாய்த் தரிப்பார்கள் பின்பு முன்சொன்ன பிரகாரம ஸ்தானங் கள் தப்பாமல் தரிப்பார்கள் குழைத்து ஏகமாய்ச் சர்வாங்கமும் தரிப்பார்கள். ஆக ஐந்து விதமும் விபூதி தரிப்பார்கள்.

தொடங்குவிதத்தை யழல்சிவன்சற் குருமுனணி வதுநீலைத
தோகை மூதின

முடிந்துதரிப் பதுநீசர் முன்புதரிப் பதுபுவனி
முகத்தில் வீழ

வடர்ந்துதரிப் பதுநிலையாய் நின்றுதரிப் பதுவொருகை
யதனி லேற்று

நடந்துதரிப் பதுவிலைக்குக் கொண்டுதரிப் பதுநகொடுக்கு
நரகந்தானே (21)

புராண சபையிலும், யாக சாலையிலும், சிவ சந்நிதியிலும், குரு சந்நிதி யிலும் விபூதி வாங்கி இவர்கள் முன்னே நின்று தரிக்கிறதும், விபூதியைச் சிலை முன்தானையிலே முடிந்து தரிப்பதும், சண்டாளன் பார்க்கத்தரிப்பதும் பூமி யெல்லாம் விழும்படி தரிக்கிறதும், ஒன்றுமே லொன்று சேரும்படி தரிப் பதும், நிலையாய் நின்று தரிக்கிறதும் விபூதி பெரியோர்கள் கொடுக்கும் போது ஒரு கையினாலே வாங்கி நடந்து கொண்டு தரிப்பதும், கிரயத்துக்கு விபூதி வாங்கித் தரிப்பதும், பலன் கொடாமல் நரகத்தைக் கொடுக்கும்.

இந்தவியல் புடையதுவெண் ணீறுகண்டி மணிமகிமை
யிசைப்போ நீல

கந்தரன மெய்ஞ் ஞானநடம் புரிந்தநா ளானந்தக்
கண்ணீ ரூய்

வந்ததுசந் திரமவுலி செங்கைநகங் கொதித்தெறிக்க
மணமேலா வீழ்ந்து
முந்துமுப்பத் தெட்டுவித மரமாகி யுருக்கொடவை
முளைத்த தன்றே (22)

இந்த லக்ஷணத்துடனே கூடியிருக்கின்றது விபூதி. இனிமேல் கண்மணியாகிய ருத்திராக்ஷ மாத்துவம் சொல்லவேணும். முன்னொருநாளிலே நீலகண்டரான பரமசிவனை மெய்ஞ்ஞான நடனம் பண்ணுகின்ற நாளிலே ஆனந்தக் கண்ணீரானது ஆறு போலும் வந்தது. அதை ஆத்த சந்திரானவா கை நகங்கொண்டு வழித்தது தெறித்த அந்தப் பூமியிலே வீழ்ந்து முப்பத்தெட்டு வித விருக்ஷ உருக்கொண்டு முளைத்தது.

துளங்கியசா கரத்தீவின் மேருகிரி நாலுதிக்குஞ்
சூழ்ந்த தீவி
லௌந்துவகைச சுழலருண கிரணமொரு காதிருட்சே
ரகில மீதிற்
களங்கமில்லா மணிமூன்று முகங்களில்லா மணிபூசைக்
கருக மாகும்
விளங்கனிக்குப பருத்ததுவு நெல்லிக்குச் சிறுத்ததுவு
மிலவே தானே (23)

பிரசித்தமாகிய சமுத்திரஞ்சூழ்ந்த தீவிலும் மகமேருவுக்கு நாலு திக்கிலும் சூழ்ந்த தீவிலும் உலகத்தைப் பிரதக்ஷணமாய் வருகின்ற சூரிய கிரண மணுகாமல இருள் பொருந்தியிருக்கிற லோகத்திலே களங்கமில்லாத ருத்திராக்ஷ மணி யுண்டாகும். முகங்களில்லாமல் சில மணிகளிருக்கும். அவை பூஜைக்காகா. விளாம்பழத்துக்குப் பெரிதானதும் மிளகுக்குச் சிறிதானதுமில்லை.

ஆறுமுக மனாபமொரு பதின்மூன்று முகத்தளவு
மாதி யாகக்
கூறுமொரு முகமணியும் யோகியானோ ரியாதரித்தற
குரிய தாகு
மாறுமைமந்து நாலுமொரு மூன்றாமிரண் டெனுமுகமு
மரண்பா லன்பு
மாறாத சரிதையாக்குங் கிரியையர்க்குந் தரிப்பதெனை
வைத்த தன்றே (24)

ஆறுமுக மணி யல்லாமல் பதின்மூன்று முகம் வரைக்கு முண்டு. இவைகட்கெல்லாம் ஆதியாகச் சொல்வது ஒரு முக மணி. அந்த மணி யோகீசுவரரும் ஞானவான்களும் தரிப்பதற் குரியதாகும். ஆறுமுகம் ஐந்து முகம், மூன்றுமுகம் இரண்டுமுகம் ஆக. இந்த ஐந்துவித மணியும் இதற்கு மேலான மணியும் சிவனிடத்திலே அன்பு தவறாத சரிதையர்க்கும் கிரியை யர்க்கும் தரித்தற்காகும்.

தூயதொரு கோசலசுத் தோதகத்தா லன்போடு
 சுத்தி செய்து
தேயாம லிடைக்கிடைபொன் னரும்புநவ மணிமுடிப்புத்
 திகழச் சேர்த்து
கேயமொடு முகமுகமொன் றுறக்கோத்தர்ச் சனையினொடு
 நிவேத னுதி
வாய்மைபெறு குரவரைக்கொண் டியற்றிநல்கப புனைவர்கண்டி
 மாலை தானே (25)

சுத்தமாகிய கோ ஜலத்திலும் சுத்த ஜலத்திலும் மணிகளை அபிஷேகம் பண்ணிச சுத்திசெய்து முகங்கள தேயாமல் மணிகளின நடுவில் பொன் னருமபு, நவரத்தினங்கள், பிரமம முடிசசுககளையும சேர்த்து மாலைாகக் கோத்துச் சிவரூபமாக ஆர்ச்சித்து நைவேத்தியா செய்து சத்தியம் தவறாத ஆசாரியரைக் கொண்டு முன் சொன்னவை யெல்லாம செய்வித்து அவர் கொடுக்கப் பக்திமான்கள் அணிவாாகள ருத்திராக்ஷ மாலை

பதினொன்று பதினைந்து பதினாறு மூவேழுன்
 பதனிற் பாதி
யதிகமொன்று மேலுமொன்றெண் ணான்குமுப்பத் தாறிரண்டெட்
 டைம்பத் தொன்று
வெதிருமெட்டெட் டொன்பதுக்கொன் பது நூற்றெட்
 டிதினமுதன்மூன் றிப்பா னுன்கு
மதினான்கு மூன்று மெய்ஞ்ஞா னியர்முதலோர் செபமாலைக்
 கடைவு தானே (26)

பதினொன்று, பதினைந்து, பதினாறு, இந்தக் கணக்குள் சரியைக் காரருக்கு ஜபமாலை; இருபத்தொன்று, இருபத்தைந்து, இருபத்தாறு, இருபத்தேழு, இந்த வகையான ஜபமாலை யோககாரருக்கு; முப்பத்திரண்டு, முப்பத்தாறு, முப்பத்தெட்டு, ஐம்பத்தொன்று இவை நான்கும் கிரியைக்காரருக்கு; அது

பத்து நானகு எண்பத்தொன்று நூறறெட்டு இந்த மூன்று வகையும் ஞானவான் களுக்கு உரிய ஜபமாலைகளாம, ஆகப பதினாறு வகை ஜபமாலை ஞானவான் முதலாகிய நால்வருககுமுண்டு

சிரத்திலே பதினாறு கழுததின்முப் பத்திரண்டு
முழுஙகைக் கெட்டு
கரத்திலோ ரேழுவளா காதிலே யாறுவைப்பா
கங்கை யாறறைச
சிரததிலே தாபரிபபார் புரததிலே நீயைவைப்பார்
சிலைபோல் வாம
கரத்திலே கிரியைவைததுந் நரததிலே யரியைவைப்பார
கரித்தோல் போாபபார் (27)

சிரசிலே பதினொரு மணியும கழுததிலே முபபததிரணடும முழஙகை யிலே எட்டும முனகையிலே எழு காதிலே ஆறுமாக ருததிராக்ஷம தரிததவர் கள் சிரசிலே கஙகைவைததுத திரிபுரதகனம பண்ணி, என்னைக்கு மசையாமல் இடது பாரிசததிலே பசச மரகதமலை போன்ற பாாவதியை வைததுக கை யிலே மான் மழு தரிதது ஆனைததோல போாதத பாமசிவனுககுச சமான மாவாா.

மண்ணின்மணி களை ததமககா தனமாக்கிப பணிபூட்டி
மவுலி சூட்டிப
புண்ணின்மணிப் புழுகேனிமெய்க் கிடுமதுறை பாலுளதோ
புராரி ஞானக்
கணணின்மணி யொனறணிநதால் விண்ணின்மணி பலரொளியுங்
காத னீங்காப
பெண்ணின்மணி யிடமுமணி வணணமணி வலமும்வரப
பெறுவா தாமே (28)

பூலோகஙகளிலே யுணடாகும நவரதன மணிகளிலே சிஙகாதனமும் ஆபரணமும கிரீடமும, ரோமதுவாரஙகள தோறும மணிபோனற இருமி னெனியும் சரீரத்திற் கிடுவதாற் பிரயோஜன முண்டோ? பரமசிவன் ஞானக கண்ணிலே ஜனிதத ருத்திராக்ஷ மணி ஒன்று தரிததால, ஆகாசததி லிருக்கின்ற பலவித நக்ஷத்திரப பிரகாசம போனற மேனியும பெணகள் சிரோமணியாகிய பார்வதி தேவியாா இடமும செவவான மேனி படைதத பரமசிவன் வலது பாரிசமும் வரப பெறுவா

ஒப்போதப் படாதகண்டி மணியுடன்மீ திருக்கணிழி
யுடைத்தாய் மேன்மை
தப்போத கங்களிற்போய்ப் படிகினுங்கங் காநதியாந்
தப்பா தன்றே
முப்போது பூசையக்க மணிகளாயன்னீ ராயிரமெய்
முழுது நீற
மெய்ப்போதுந் தரிப்பவாக ளப்போதே சிவரூப
மெய் தினரே (29)

ஒப்பில்லாத ருத்திராக்ஷமணி சரீரத்திலே தரித்துக் கொண்டு மேன்மை தப்பி இருக்கும் தீர்த்தங்களிலே போய் ஸ்நானம் பண்ணினாலும் அந்தத் தீர்த்தத்தினுடைய குற்றங்களெல்லாம் நீங்கிக் கங்கா நதிக்குச் சமானமாகும். இது தப்பாது. மூன்று காலமும் பூஜை பண்ணும் போது பன்னீராயிர மணிதரித்து சரீரமாத்திரமும் விபூதியும் வாங்காமல் தரிப்பார்கள், அப்போதே சிவ ரூப மடைவார்கள்.

நீதிமேல் கண்ணிருந்து புலையர் தரிக்கினுமற்றகிற
பிராணிநாய் பூனை
யாதிமேல் சிவவேடங் கண்டாற்சென் றவ்வுயிர்ப்பா
லியமனுஞ் சாரான்
காதிமேல் கண்ணின்மணி தரித்துமற்றொன் றினைத்தரிக்கக்
கருதார் தம்மைக்
காதிமேல் கண்ணின்மணி தரித்தவரைத் தரித்தவராய்க்
காணலாமே (30)

பொல்லாத காரியங்களிலே கண் செலுத்தும் சண்டாளர் தரித்தாலும் நாய் பூனை முதலாகிய மிருகங்கள் தரித்தாலும் சிவ வேடம் கண்ட மாத்திரத்திலே அந்த உயிரிடத்திலே யமன் அணுகான். காதிலே கண்மணியாகிய ருத்திராக்ஷம் தரிப்பதல்லாமல் மற்றொன்றும் தரிப்பதில்லையென்று நினைத்திருக்கிற பேர்கள் காதையே கண்மணியாகப் படைத்த சாபாபாணம் தரித்த பரமசிவன் வடிவாகக் காணலாம்.

மண்ணகமேல் வடபுலத்து விதேகநாட் டோரெயினனா
வச்ர தேக
னென்ணிலாக் களவுகொண்டோன மிதிலைநக ரதிபதிபொக்
கிசத்திற சோரம்

பண்ணினன்கண் டுயர்கழுவி லேற்றினாரவந் தவன்றனைத
பாரத்துச சோாந்தென்
கண்மணியே யெனக்கேட்டா னுயிர்மடிந்தா னக்கணமே
கைலை சேர்ந்தான் (31)

பூலோகத்தில் வட தேசத்திலே விதேக நாட்டிலே வஜ்ரதேகன் கொண்ட ஒரு வேடன் அளவில்லாத கொலை களவு செய்து கொண்டிருந்தான அவன் ஒரு நாள் மிதிலையில் ராஜாவின பொக்கிஷத்தைச் கன்னமிட்டுக களவு செய்தான் அப்போது காவலாளா அவனைக கண்டு பிடித்து உயிரககழுவிலேற்றினா. பிராணன் போகின்ற சமயத்திலே அவனுடைய தகப்பன வந்து பாாதது அவனிடம இரககங்கொண்டு "என கண்மணியே" என்று கேட்டான அந்தச் சப்தம காதிலே பட்டபோது அவன உயிா விட்டானுகையினுல கைலாச பதவி யடைந்தான். அதென்னவென்றால ருத்திராக்ஷத்துககுக கண்மணியென்று பெயருண்டல்லவா?

நாட்டத்தாற கண்டுணாந் தறியான்கண் மணியெனவே
நவின்ற நாமங்
கேட்டவுவே யவனபுரிந் வினையகன்று கைலையுறக்
கிடைத்த தென்றுற
மீட்டமொடு கண்ணுமைக்ீற தூடினவா மகிமையெவா
தெரிக்க வல்லாா
வாட்டமுறு தனக்குவிரித தனைத்திட்டக்கேளா மந்திரத்தின
வளமை தானே (32)

கண்ணினலும காணாமல சரீரங்களிலும அணியாமல ருத்திராக்ஷத்தினுடைய பெயரான கண்மணியென்று சொன்ன பெயரைக் கேட்ட மாத்திரத்திலுலே அவன்செய்த பாபங்களெல்லாம நீங்கிக் கைலாசபதவி கிடைத்ததானுல் மனதிலே ஆசையுடனே ருத்திராக்ஷத்தைச சரீரத்தில தரிக்கிற பேர்களுடைய மகத்துவங்களை எவரேனும தெரிந்து சொல்ல வல்லவருமுண்டோ? அங்கமித்திரனே உனக்குப் பஞ்சாக்ஷர மந்திர மகிமையைக கூறுகிறேம நீ வாட்டமுறாமல் கேள

தோறறுமற் றூறறியெங்கு நிறைந்தபா பரத்தினது
சுயம்பிர காசம்
வேறறுமைகொள் ளாததனுட கலந்தபரா பரையெனவே
மேவி நிறகு

மாற்றிய பராபரையில் வந்துதிக்கு நாதவிந்து
வதனிற் றோன்றுஞ்
சாற்றியவிந் துவிலபர நாதமதிற் பரவிந்துத்
தானுண் டாமே (33)

காணுதற்கரிதாகவும் பரமாகும் படியாகவும் எங்கும் நிறைந்துள்ள பராபரத்தினுடைய சுயம்பிரகாசம் வேறு படாமல் பராபரத்திலே கலந்து பராபரை யென வந்துதிக்கும் அந்தப் பராபரையிலே நாதமுதிக்கும். நாதத்திலே விந்து உதிக்கும் விந்துவில் பரநாதமும் அதிற் பரவிந்துவுமுண்டாகும்.

முந்துறுவிந் துவும்பரநா தமுஞ்சேர்ந்து காரமதாய்
முளைத்துப் பின்னே
வந்துதிகழ் விந்துவொரு பீடமாய் முதலெழுத்தின்
வடிவைக் காட்டு
மிந்தவெழுத் தினைச்சூழச் சுழித்தத்தோங் காரமிந்த
வெழுத்தின் கீழே
யந்தமுற்ற சுழிமகர மோரெழுத்தி லாறெழுத்தி
னடைவு தானே (34)

முந்தின விந்துவும் பரநாதமும் இரண்டுஞ்சேர்ந்து உகாரமாய் முளைத்துப் பின்னும் பிரகாசமாகிய விந்து உகாரத்துக்குப் பீடமாகி முந்தின எழுத்தினுடைய ரூபத்தைக் காண்பிக்கும். அந்த எழுத்தின் கீழ் அந்தத்திலே சுத்தியாகிய அகார ரூபமான ஓரெழுத்தில் ஆறு எழுத்தினுடைய லக்ஷணமும் தோன்றும்.

இவ்வெழுத்தின் வடிவிலிங்க மிவ்வெழுத்தே சிவனுடன
மெடுத்த லீலை
இவ்வெழுத்தே யண்டபிண்டத் தாதார மிவ்வெழுத்தி
லெல்லாந் தோற்ற
மிவ்வெழுத்தே யனைத்துமொடுங் கியவொடுக்க மிவ்வெழுத்தே
யெவர்க்கு முண்மை
யிவ்வெழுத்தே யைந்தெழுத்து மெழுகோடி மந்திரமு
மிருக்குந் தானே (35)

இவ்வெழுத்தினுடைய ரூபந்தானே சிவலிங்கமாகும். இந்த எழுத்துத் தானே சிவன் நடனம் தொடுத்து எடுத்த லீலையாகும். இந்த எழுத்தே யண்ட பிண்டங்களுக்கு ஆதாரமாகும. மற்றும் இந்த எழுத்திலே எல்லா முண்டாகும். இந்த எழுத்திலே அனைத்து மொடுங்கி ஒடுக்கமாகும. இந்த எழுத்தை எவாகளுக்கும உண்மையாம இந்த எழுத்திலே பஞ்சாக்ஷர முதலா கிய சபத கோடி மகா மந்திரமும உண்டாகும

மற்றுமிவற றினினுதை விந்துமுத லெழுத்துகா
மகரந் தன்னிற்
பற்றியெழு சிகாமுதன மகரமீ ருமெழுததுற
பத்தி யாகு
முற்றிதுவே பரமசிவனு சத்திபுயிர் திரோதைமல
வுருவ மாகு
முறறுமிதி னடைவறிந்து செபஞ்செய்வோர்க் கரியதல
மோக்கந் தானே (36)

பின்னுமிந்த நாதபிந்துவினிடமாக முதலெழுததாகிய உகார மகாரந்தன் னில் பற்றியெழும சிகார முதல் மகார மீறுகிய எழுததுற்பததியாகும இதுவே பரமசிவமும சததியும உயிரும திரோதான மலமாகிய ரூபமாயிருக்கும்- இந்த மந்திரத்தைக் குறைவில்லாமலறிந்து ஜபிககபபட்ட போகளுக்கு மோக்ஷமடைவ தரிதல்ல

சரிதையோர் செபமாலை தர்ச்சனிகொண் டைந்தெழுத் துச
சரிப்பர் சொல்லாற
றெரிவுறசெய் கிரியையற்கு மபபடியே செபவடமத்
திமைமேற் றுங்கி
விரிவுபெறு நமவகன்மூன் றெழுததைமந்தத் தொடுஞ்செபிபபா
விளங்கும் யோகா
அரியசிவ மனுமிகையில் வடத்தைவைத்து மனத்திலுச்ச
ரிப்பன் ஞானி (37)

சரிதையாளா ஜபமாலையைத தரிச்சனி விரல்கொண்டு ஐந்தெழுத்தை வாயி னாலே சொல்லி ஜபிபபாாகள் கிரியைககாரரும அநதப படி ஜபிபபார்கள். யோகக்காரா விஸ்தாரமாய நகார மகாரம தன்னி மற்ற மூன்று எழுத்தையும

அந்த ரூபமாய் மனதிலே உச்சரித்து மத்திம விரலினாலே ஜபிப்பார்கள். ஞானவான்கள் மூன்றிலே ஒன்று தள்ளி இரண்டு எழுத்தையும் மனதிலே தியானித்து அனுமிகை விரலினாலே ருபமாலையை வைத்து ஜபிப்பார்கள்.

தக்கணதே சத்திலொரு கம்மியன்மற றொருதேவ
தலத்து ளோர்கண்
முக்கணற்குக் கனகமுடி சமைக்கவெனக் கொடுத்த நிதி
முழுதுந் தானே
கைக்கொண்டான் றவறிழைத்தா னவர்கண்ட திவனகண்டு
கவற்சி கூர்ந்து
மிக்கசிவத் துரோகமென்பா லில்லையென்றான் வீடுறவே
வினைக மேர்ந்தான் (38)

தெக்ஷிண தேசத்திலே ஒரு கம்மியனிடத்திலே ஒரு சிவஸ்தலத்தார் எல்லாரும் கூடிச் சிவனுக்குச் சொர்ணகிரீடம் பண்ணச்சொல்லிக் கொடுத்த திரவியத்தையெல்லாம் அபகரித்துக் கொண்டான். அதைக் கண்டு கேட்டனர், அவன் நான் அபகரித்துக் கொண்டேனென்று ஆத்திரப்பட்டுச் சிவத் துரோகம் என்னிடத்தில் இல்லை என்று சொன்னான். அப்போலே அவனைப் பிடித்த பாபமெல்லாம் போயின. மோக்ஷமடைகிற பாக்கிய காலம் வந்தது.

இழக்கத்தாங் கோமெங்கே முடியெனவே சினந்துமன
மீய்ந்தோர் கேட்க
வழக்கத்தாற சொன்னசொல்லிற சிவவெனுஞ்சொல் லிருந்ததந்த
மகிமை யாலே
பழக்கததாற றவத்திலுயர் மாதவரு மீதவரும்
பரிந்து போற்றித்
தொழக்கறறூா கனுந்துதிக்கப் பதவிபெற் றான்கனக
சோரன் றானே (39)

கிரீடத்துக்குத் திரவியம் கொடுத்த போகள நாங்கள் இழந்துபோகத் தக்கதில்லை என்று கேட்டனர் உலக வழக்கப்படி என்னிடத்தில் சிவத் துரோகமில்லை என்று இரண்டெழுத்து அவன் உச்சரித்தபடியினாலே, தபசில் உயர்ந்த ரிஷிகளும் தேவதைகளும் அன்புடனே பணிந்து போற்ற நாரதர் தும்புரு கீதங்கள் பாடிப் பணிய சாயுஜ்ஜிய பதவியடைந்தான் பொன்களவு செய்த தட்டான்.

இப்பான்மைத் தென்னவெழுத் தைந்தினொரு மகிமையினி
　　தெடுத்துக் கூறி
யப்பான்மை நந் தனுக்குமுனி யுபதேசித் தனன்மகத்தி
　　லடாது செய்த [கூழ்
தப்பான்மைக் கடல்விடம்போல் வருந்துயாதீர்ந் தொடுங்குபைங்
　　தழைக்குங் கால
வொப்பான்மை சொரியவளர்ந் திடல்போலங் கவற்குறுதி
　　வுதிக்கத் தானே (40)

இந்தப பிரகாரமென்று பஞ்சாக்ஷர மந்திர மகிமையை எடுத்துச் சொல்லி யப்பால அங்கமித்திரனுகிய பிள்ளைக்குத் தாற்பரியா உபதேசம் செய்தார். கடலில உதித்த விஷம தேவாகளை வருத்தியது போல் அவன் செய்த பாபத்தினுல் மூண்ட துயரத்தினுல் விளைந்த வருத்தந்தீா்ந்து, ஒடுங்கிய பயிரானது மழை வருஷிக்க வளாவது போல் அவன் மனதில் உறுதிவளாந்தது

முன்னருரைத் திடுமியம தடமூழ்கி விபூதியுடன்
　　முழுதுஞ் சோதிப்
பன்னருமந் திரசலத்தாற குழைத்தீரெட டெனுங்குறிப்பிற்
　　பரிந்து சாத்தி
துனனருத்தி ராக்கமணிந் தைந்தெழுத்தை யுருவேற்றித்
　　துதிகள கூறிப
பின்னருசசி சிவனையென்று பினனருங்கூ றினனிகரில
　　பெருமை யோனே (41)

பின்னும சொலவாா முனனுலே சொன்ன யம தீர்த்தத்திலே தீர்த்தமாடி சரீரமாத்தியந்தமும விபூதி துளன மாயணிந்து, அந்த ஜலத்திலே குழைத்து பதினறிடத்தில தரித்து ருத்திராக்ஷ மணிகளையணிந்து பஞ்சாக்ஷர மந்திரம உறுதியாய ஜபித்துக கொண்டு ஸ்தோத்திரம பண்ணிப பின்பு சிவனே அாசிப யெனறு பினனும சொனனா நிகரில்லாத பெருமை படைத்த தாற்பரிய மகா ரிஷி.

தேசிகன்சொல் லியமதட மூழ்கிவெண்ணீ றக்கணிந்து
　　செபித்த னுகி

மாசுதவிர் மனதொன்று யிரண்டறப் போதிஞான்
மறைகொண் டாடிப்
பேசியபைஞ் ஞீலிரத்தின சபைக்கரசைக் கிரிக்கரசன
பெற்ற செந்தேன்
வாசகியை நீணெடுங்கண் விசாலாட்சி நாயகியை
வழுத்திப் போற்றி (42)

குருவானவர் சொன்ன பிரகாரம யம தீர்த்தத்திலே மூழ்கி விபூதியணிந்து ருத்திராக்ஷங்களைத் தரித்து பஞ்சாக்ஷர மந்திர ஜபம்செய்து குற்றமில்லாத மனது ஒன்றுபட இருவினையறும்படி மூன்று தேச காலமும் வேதங்களையும் சொல்லி ஸ்தோத்திரம பண்ணிக்கொண்டு திருபைஞ்ஞீலியில் ரத்ன சபைக்கு ராஜனை சிவனையும் கிரிராஜன் பெற்ற பெண்ணாகித தேன்போன்ற வார்த்தை யுடையவளை நீள் நெடுங்கண் படைத்த விசாலாக்ஷியம்மையையும் ஆசசனை பண்ணிநமஸ்கரித்தான்

மருததுத்திங் கினிலிருண்டு திரண்டெசுரங் தெழுமேக
மகன்றாற் போல
வுருத்துத்திச் சுடுவதையொத் திடர்செய்வினைத் தொடரொழிய
வொளிரு ஞானக்
கருத்துத்தி வகன்றிமில்வெள் ளேருத்துத்தா பரன்கருணை
கடாட்சத தாலே
மிருததுத்திர்க் தனன்பெருத்த வருத்தத்தாற் றளர்ந்தயஞ்ஞ
மிததிரன் றானே (43)

ஒன்றாய்த் திரண்டு சூழ்கொண்டிருண்டு எழும்பிய மேகம பனிசென்று விலகினது போல், வடவாமுகாக்னி எழுந்து சுடுவது போல் இடர் செய்யும் வினைத் தொடரானது நீங்கும படி பிரகாசமாகிய ஞானக்கருத்திலே விளங்கு கின்ற ரிஷபவாகன ரூடரான சிவனுடைய கிருபா கடாக்ஷத்தினாலே தன்னைபிடித்த அபமிருத்து விட்டு நீங்கபெற்றான், பெரிதாகிய வருத தத்தினாலே தளர்ச்சியடைந்த அங்கமித்திரன்.

செபித்துப்பா வனைநேயத் தொடுபுரிபூ சனைக்குவந்த
சிவன்க டாட்சம்

லபித்துத்தி ராமிருத்துத் தீர்க்கபஞ்ஞு மித்ரனிய
லீனத்துங் கேட்டுத

தபிததுத்தித் தாவியபைங் தனிரெனத்தன் னுயிர்சோரத்
தளர்ச்சி கூரச்

சபிததுச்சீ றியசிவமித் திரமறையோ னீலிவனத்
தடைந்தா னன்றே (44)

பஞ்சாக்ஷர மந்திரங்களை ஜபித்த பாவனை பகதியினலே செய்த பூஜைக்கு மகிழ்ந்த பரமசிவன் கடாக்ஷங்கிடைக்கப்பெற்றுத தீராத அபமிருததுதோஷங்க ளெல்லாம தீர்ந்து சுத்தனுகிய அங்கமித்திரனுடைய விருததாந்தங்களைக் கேட்டுத, தவித்துத் தாவி யெழும அக்கினியில் அகப்பட்ட பசுந்தளிரானது சோாவது போல் உயிர சோாநது தளாச்சியடைந்து, சோருமபடி சபித்த அவன் தகப பனுகிய சிவமித்திரன் நீலி வனததிலே வந்து சோந்தான்

## வேறு

அத்தா சலனட்படா தெளியேனருஞ் சேய்க்கிடர் தீர்த்
தாண்டபரி

சுத்தா சலசேகர வெனப்பூர்துணை ராற்சரணத
துணைபோற்றி

முததா சலத்த ரருள்பெறு னான்முதல் வன்புதல்வ
னெடுங் தனது

வ்ருத்தா சலஞ்சோந் தினிதிருந் தானமிகத்தான்
முடித்த மகத்தானே (45)

சலனபபடாமல் எளியேனுடைய புததிரன் இடர்களைத்தீாதது அடிமை கொண்ட ஆண்டவனே கஙகாதா சடாதரனே என்று ஸதோத்திரம செயது பததிர புஷ்பங்களினுலே சிவனுடைய பாதார விந்தங்களை ஆர்ச்சித் துத் தொழுது மூததமலை நாயகனுன ரதன சபாபதி அனுமதிகளைப பெறறு தன் புத்திரனுடன் எபபோதுமபோல் விருததாசலம போயிருநதான் முன் னுலாகிய வேதங்களுக்கு முதல்வனும் மிகுநத யாகங்களைப பண்ணி முடித்தவனுமாகிய சிவமித்திரன்.

## வேறு

விளிவார்போ லயர்ந்துசக்கிரத தியாகராருள் பெற்றயஞ்ஞ
மித்திரன் மேன்மை
யொளிதார்வேற் புயன்குடந்தைச சமுகசந்திர பீடமனனாற்க்
குமரத்தா னன்றே
யளிகூர்வா சவன்பகைவ ரொளித்திருப்ப வெளிப்படக்கண்
டமரின் மாய்க்க
வெளிதாயேழ் சாகரமோர் துளிபோலா போசனஞ்
ரெனக்கொண டோனே (46)

இறப்பவர் போல் அயர்ந்த அஙகமித்திரன் சககிரததியாகருடைய சாடாக்ஷம பெற்று மகிமை யடைந்த மகததுவங்களைப் பிரகாசயான ஆததி தரித்த புயமுடைய சந்திரபீட சோழராஜனுககுத திருவுளம பற்றினா, சமுத திரத்திலே ஒளிந்து கொண்ட தேவேந்திரனுடைய பகைவராகிய இராக்ஷதா களை வெளிபபடுத்தித தேவேந்திரனைககொண்டு அவாகளைச சமரில மாயபபதன் பொருட்டுச சமுத்திரத்தை உள்ளங்கையில் ஒரு துளியாகக் கொண்டு ஆபோ சன தீாத்தமாக உடகொண்ட அகஸ்திய மகா ரிஷி.

முத்துமலை நாயகரோங் காரகிரி மகாதேவா
முசுகுந் தேசா
ரத்தினசபா பதிவசிட்டே சுரர்பசுப தீசுவராவ
ராக நாதர்
உத்தரகை லாயர்சக்கிரத் தியாகரா யகரகத்தீ
சுரரக்கி னீசர்
உததமநெல வேலியுடை யார்விசையே சுரர்கமலே
சுரர்சந்த ரேசர் (47)

முத்துமலை நாயகா, ஓங்காரகிரி மகாதேவா, முசுகுநதேசவரா ரத்னசபா பதி, வசிஷ்டேசவரா, பசுபதீச்வரா, வராகநாதா, வடகைலாசா, சககிரதயாகா, அகஸதீசவரா, அகனீசவரா, நெல்வேலிநாதா, விசுவேசவரா, தமலேசவரா, சநதிரேசவரா.

நீலிகா வனநாத ரெழுத்தறிய பெருமானைப்
ஞ்ஞீலி நாதா
நீலகண்டே சுரா பரம சம்புலிங்கா விமலார
ணியசர் வேசர்
காலனதி காரவிங்கா தரறபியலிங் காதார
கலாருத் ரேசர்
காலவியா க்ரபுரீசர் தேவநாதப பெருமானத
க்ஷிணகை லாயா (48)

நீலிகாவன நாதரென்றும, எழுதறியும பெருமானென்றும, திருபபைஞ்ஞீலி நாதரென்றும, நீலகண்டேசுவரரென்றும, பரம சம்புலிங்கரென்றும, சர்வேசுவரரென்றும், அதிகாரவல்லவரென்றும், வியாகரபுரீசுவரரென்றும், தேவேந்திரப பெருமானென்றும், தக்ஷிணகைலாசபதி என்றும பெயர்

கோனேரி நமைகொண்டார் சோறிடுநா யகர்கதலி
வசந்த லிங்கா
வாளுயர்வெள் ளவரையாரநாற பதறெண்ணா யிரமலையார்
சுதாம மூர்த்தி
கற்பகப பெருமா னரசிங்க வல்லவர்கோ
சலப்ர சாதா
ஞானகவு மாரிலிங்கா யஞ்ஞலிங்க மாரணிய
விடங்கா தாமே (49)

கோனேரி பாண்டவரென்றும, சோறிடு நாயகரென்றும கதலிவசந்தரென்றும், உயர்ந்த திருவெள்வரையாரென்றும், நாற்பதறெண்ணாயிரம மலையாரென்றும், சுதாம மூர்த்தியென்றும, கற்பகப பெருமானென்றும, நரசிங்கேசுவரர் என்றும கோசலப பிரஸாதரென்றும, ஞானமாரி லிங்கரென்றும, அங்க லிங்கரென்றும், ஆரண்ணிய விடங்கரென்றும பெயர்.

மேலைச்சிற றம்பலத்தா ரமிர்தலிங்கா பாண்டியலிங்கா
மகாப லேசர்
நாலுபத்து மேலுமொரு மூன்றுவித மானதிரு
நாமந் தன்னைச

மிகவும் மேன்மையுடைய திருப்பைஞ்ஞீலி வாசமான பரமசிவனுடைய சரித்திரமாகிய இந்தப் புராணத்தை நன்றாய்ச் சொல்லுகிற பேர்களும் விருப்பமாய்க் கேட்கிற பேர்களும் அஷ்ட ஐசுவரியமும் பெற்று இந்தப் பூலோகத்திலே அனந்த காலமிருந்து பின் அந்திய காலத்தில் தேவ லோகம் போய்ச் சிற் சொரூபமாகிய பராபர ரூபத்தை அடுத்து என்றைக்கும் அழியாமல் ஆரணியவிடங்காகிய ஜகஜ்ஜோதி பாதத்திலே வாழ்ந்திருப்பார்கள்.

பேரான பைஞ்ஞீலி புராணமதை யுரைசெய்யப் பிரிய மாகக்
காரா குலதேவ ராயபூ பாலனிதம் கருததாய்க் கூற
சீரான விசுவகுல வீரபத்ர மகிபாலன் சிந்தை வைத்துத்
தாராள மாயெழுத இருவர்களும் புழ்கபெற்றார் தரணி மீதே (56)

புகழ்பெற்ற திருப்பைஞ்ஞீலி யென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின் புராணத்தை விருத்தப்பாவில் பாடித்தருமாறு, காராள குலத்தில் வந்த தேவராய பூபாலன் நிதமும் கருத்தோடும் பிரியத்தோடும் கேட்க, சீர்பெற்ற விச்வகுல திலகரான மகிபாலனென்னும் நாம காரணத்தையுடைய வீரபத்திரோன்மணி தானும் அதில் தனது சிந்தையைச் செலுத்தி, விஸ்தாரமாகப் பாடினன் அதனால் உலகத்திற்குப் பரோபகாரிகளாக ஏற்பட்ட இந்த இருவரும் இந்நிலவுலகத்தில் கீர்த்தியுடன் வாழ்வார்களாக.

தரணிபுகழ் மதுரைசிவப் பிரகாசகுரு சந்ததியின
முதல்வனாய
அரவணிந்தா ராகமசாஸ் திரங்கள்வல்லோ னுவுடையன்
அவனி யெங்கும்
பரவுதிருப் பைஞ்ஞீலிப புராணமதைத் பார்த்தறிந்தாங்
குரைசெய் செய்தான்
குரவர்கள்தம் புதல்வர்சொலைக் கொண்டாட மகிழ்வதெனக்
குறிக்கத் தானே (57)

உலகம் புகழும் திருமதுரை வாசியான சிவப்பிரகாச குருவின் சந்ததியில் முதல்வராக வந்து, அரவாபரணரான சிவபிரானுக்குரிய ஆகமங்களில் தேர்ச்சி பெற்றவராயும், வாக்கு வல்லமை வாய்ந்தவராயுமிருந்த சிரோன், பூமி முழுவதும் துதி செய்யும் படியான திருப்பைஞ்ஞீலியின் புராண மதை நேரிற்கண்டது போலவே உரை செய்தான் பெரியோர்கள் தங்கள் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்வது போல் இப்புராணத்தை யாவரும் கையாண்டு சிவபெருமானுடைய திருவருளுக்கு பாத்திரராய் வாழ்வாராக

PRINTED AT THE TATA PRESS, 5, THAMBU CHETTY ST., MADRAS

# 25-வது அப்பருக்குக் கட்டமுதளித்த மகிமை

---

நதியெலா வறந்திடினுந் துதிபெறுவ கெடிலநன் னதியும்
விதிவிலக் கறிந்தவர்செய் தீவினையினை விலக்கு
மதிகைவீ ரட்டா னந்தொடு பலதல மனைந்து
நிதியங் கல்விபுண் ணியம்புக ழுறுநடு நிறைந்தே (1)

சகல நதிகளையும்விட அதிகமாகச் சிறப்பித்துப் பேசப்படும் கெடில நதியும் (கொள்ளத்தகுந்தது இன்னது, தள்ளத்தகுந்தது இன்னது என்னும்) விதி விலக்குகளை அறிந்தவர்கள் (தங்களை அறியாமல்) செய்துகொண்ட தீவினைகளை நீக்கத்தக்க திருவதிகை வீரட்டானம் முதலிய பலதலங்களுமுடையதாய், பொருள், கல்வி, புண்ணியம், கீர்த்தி [illegible] முதலிய நிறைந்துள்ளதாய்

வேத மாகமம் விரிக்கும்வன் றொண்டரைத் தடுத்தா
ளைத் துறைந்த திருமுனைப் பாடிநன் னாட்டில்
கோதி லாத்திரு வாமூர் வேளாளர்கள் குலத்தி
லேதமில் குணப் புகழனார் மனைவிமா தினியார் (2)

நான்கு வேதங்களையும் இருபத்தெட்டு ஆகமங்களையும் (தமிழ்ப்பாசுரங்களாகப்) பாடிச்செய்த வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை (விவாக காலத்தில் தாமுன் கேட்டுக்கொண்டபடி) தடுத்தாட்கொண்டவரான பரமேசுவரர் திருக்கோயில்கொண்ட திருமுனைப்பாடியென்னும் சிறந்த நாட்டில் (ஒரு பகுதியாயுள்ள) குறைவில்லாத (பலவளங்களோடு கூடிய) திருவாமூரில், வேளாளர்களுடைய மரபில், குற்றமில்லாத குணத்தினையுடைய புகழனென்பவ ரொருவரிருந்தார் (அவருடைய) மனைவியார் (திருநாமம்) மாதினியார் என்பதாம்.

இருவர் மெய்த்தவந் தன்னிலொப் பிலாத் திலகவ தியாரும்
பொருவ ருந்திலத் தவதியாம் புதல்வியும் புதல்வ
ரொருவ ராமரு ணீக்கியா ரெனும்பெய ருடையார்
சருவ ரேதத் துறத்தக்கர் சின்னாள்செல்ல தான (3)

(இவர்கள்) இருவருடைய (சிவபிரானை வழிபடும்) உண்மைத்தவத்தால் ஒருவரையும் ஒப்புச்சொல்ல முடியாத கற்பிற்சிறந்த திலகவதியென்னும் புத்திரியாரும் மருணீக்கியாரென்னும் பெயருடைய புத்திரரும் உதித்தனர்.

சகலரும் துதிக்கும் தன்மையுள்ள இவ்விருவரும் திருவவதரித்துச் சிலநாள் கழிந்தபின்னர்

தாயார் தந்தையா ரிம்மைவிட் டரனடி சாரச்
சேயர் செயகடன் செய்துற வினர்களாற் றேறி
யாய மாமரு ணீக்கியார் கல்விமுற் றுய்ந்து
தூய தாம்புரு டார்த்தமியா தெனத்தரு வினராய் (4)

(இம்மக்களுடைய) தாய்தந்தையரிருவரும் இவ்வுலகத்தினின்றும் நீங்கிச் சிவபதமடையவும், திலகவதியாரும் மருணீக்கியாரும் (பெரிதும் துக்கித்து) சுற்றத்தவர்கள் தேற்றத் துயரொழிந்து, மக்கள் செய்யவேண்டிய (ஈமக்)கடன் களையெல்லாம் செய்துமுடித்துப் பெருமைபொருந்திய மருணீக்கியாரானவர் கல்விகேள்விகளில் வல்லவராகி, பரிசுத்தமான புருஷார்த்தம் எதுவென்று ஆராய்ந்தவராய்

குறிப்பு:—புருடார்த்தம் - புருஷ - அர்த்தம் (புருஷனால் அடையவேண்டிய செல்வம்.

அறிய லுற்றம ணெறியொரு வாறுணர்ந் ததுவே
நெறியெ னக்கொடு வழியடைந் தநெறி நோக்கங்
குறுவ தைச்சகோ தரிவிழை யுளங்குலைந் தயர்ந்து
மறுகி யீசனை வருந்தலும் பின்னவா மாழ்க (5)

(இங்ஙனம்) ஆராய்ந்து, சமணமதத்தினை ஒருவாறு (தன் ஆராய்ச்சியில்) தெரிந்து அதுவே (தான் அடைய எண்ணிய புருஷார்த்தத்தின்) வழியெனக் (தன்னுளத்தில்) கொண்டு (சமணமதயான) அந்தச்சோர்ந்து (பாடலிபுரம் சமணப்பள்ளியில்) சேர்ந்துகொண்டிருப்பதை (திருவதிகையில் திருமடத்தில் திருப்பணி செய்துகொண்டிருந்த) சகோதரியார் கேள்விப்பட்டு, உள்ளம் நிலை குலைந்து சோர்ந்து, (தம்தம்பியினுடைய வகையைக் குறிப்பிட்டு) சிவபிரானிடம் முறையிட்டு வருந்தலும், (அவர் அநுக்கிரகத்தால்) இளையவரான மருணீக்கியார் வருந்தும்படி.

மருவு தற்கரி தாகிய சூலைநோய் வயிற்றில
வெருவு றப்புக வதனையெவ் வாற்றினும் விலக்கற்
கொருவ கைத்தினு முடிவுறு தாற்றிரு வதிகை
தருமடத்தடைந் தான்பணி புரிசகோ தரியாம் (6)

பொருந்துவதற்கரியதான சூலைநோயானது பயங்கொள்ளும் தன்மையாக அவருடைய வயிற்றில வந்தடைய, அந்நோயை (மருந்துமுதலியவற்றால்) எவ்வழியினாலேனும் நீக்கப்பாததும் ஒருவகையாலும் முடியாமையினால், திருவதிகையிலுள்ள மடத்தையடைந்து, பரமனுக்குத் திருப்பணி செய்துகொண்டிருக்கும் தம் சகோதரியான-

முன்பிறந் தவர் தமைப்பணிந் தவமொடு முறையா
லென்ப ரற்பணிந் தீசகூற் றாயின வாறென்
றன்பொ டுந்திரு முறைதனைப் பாடநோ யகன்றங்
கின்பவீ ரட்டா னேசரைப் பணிந்தவ ணிருந்தார். (7)

தம்முடன்பிறந்த திலகவதியாரை(கண்டு) அடிபணிந்து (தம்குறை கூறி) அவரோடும் (ஆலயத்துக்குச் சென்று) எம்மையாட்கொள்ளும் பரம்பொருளைப் பணிந்து (அவரால் ஞானவுணர்ச்சி யெய்தப்பெற்று) ஈசர், "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" (என்னும் பதிகத்தை அன்புடன் பாடினார், (அதனால்) உடனே நோய் நீங்கப்பெற்று அன்புடையரான திருவீரட்டானேசுரரை வணங்கி அவ்விடத்திலேயே இருந்தார்

ஆயகா லையிற் பாடலி புத்தமன் னரசன்
நேய தூதரா லழைத்துநீற் றறையினும் வெய்தாக
காயு மாலகா லத்தினும் விடுத்துயர் கற்றூண்
ஓடாயு மாழ்கட லிக்கடன் மடுவினுந் தாண்ட (8)

அத்தன்மையாக அவரிருந்த காலத்தில் பாடலிபுத்திரத்திலிருந்த சமண அரசன் (சூலைநோயினை நீக்கிச் சென்று சைவமதத்தைத் தழுவினார் என்பதைக் கேள்வியுற்று) பொருந்திய தூதுவர்களால் நாயனாரை அழைப்பித்து நீற்றறையிலிட்டும், கொடிய கோபத்தையும் மதம்பாய்ந்ததையுமுடைய யானைக் காலில் இடறச்செய்தும், நீண்ட கல் தூணில் பொருந்துமாறு கட்டிக் கடல் மத்தியில் தள்ளவும்

மாசில் வண்ணமென சொற்றுணை யென்றபா வழுத்தி
வீரர்வாழ் பாதிரிப் புலியூர்க்கரை யேறி
நேசமோ டிமையவ ரீசனைப் பணிந்துதின ந்தோறுந்
தேசுறும்பல சிவத்தலந் தொழுந்துதித் திறைஞ்சா. (9)

"மாசில்வீணையும்" "சுண்ணவெண்சந்தனச்சாந்தும்" "சொற்றுணைவேதியன்" என்றமுதலடிகளையுடைய பதிகங்களைப்பாடி (முடிவில் கடலிட்டபோது) ("சொற்றுணை" என்னும் பதிகப்பெருமையால் கல்லே தெப்பமாக மிதந்துவரச் சிவபிரான் திருக்கோயில்கொண்ட திருப்பாதிரிப்புலியூரில் கரையேறி, மிகுந்த வாத்ஸல்யத்தோடு எம்மையாட்கொள்ளும் சிவபிரானைத்தொழுது நின்று பதிகம் பாடி திருவருட்பிரகாசம் நிறைந்த பல சிவக்ஷேத்திரங்களையுமடைந்து பதிகத்தினால் துதித்து வணங்கி

மால யற்கரி யாரெளி யாரடி யவர்க்கா
வாலம் வைத்தவர் தனைத்தொழுப் பணிந்துமே லருமைப

பால ரானசம பந்தரைக் கலந்துபின் படிககா
சேல வீழியி லேற்றுமா மறைக்கத விகாதும் (10)

பிரமவிஷ்ணுக்களாலறிய முடியாதவரும், அன்பாகளெளியவரும் ஸ்ரீ கண்டத்தில் விடத்தைவைத்து நீலகண்டரெனப் பெயருடையவருமான சிவபிரான எழுந்தருளியுள்ள பலதலங்களையும பணிந்து, பிறகு (அமமையார்க்கும எந தைக்கும்) அருமைப்பாலராய விளங்கிய திருஞானசமபந்தமூர்த்தி சுவாமிகளைத (சீகாழியில் இருப்பதாகக கேள்வியுற்று, அவரிடம் சென்று அவரைததரிசிததுத்) தழுவிககொண்டு பின திருவீழிமிழலைககுச் சென்று (பஞ்சததால வருந்திய சிவனடியாா நீலகண்டபதிகமபாடிச சிவபெருமானுல) படிககாசுபெறறும்,(பிறகு திருமறைக்காடுசென்று சிறந்த வேதங்களால சாததப்பட்டிறந்த, திருககோயிற் கதவினைப் (பதிகமபாடித்)திறநதும்,

திங்க ளூரிலப் பூதி சேய் விடநதனைத் தீர்த்து
மெங்கு மப்பர்செரல் லிறைவரென் றியற்பெய ரிசைநது
மங்கை பஙகர்வா ழருட்டுறை தொறுநதமிழ் வழுததிச
சஙகை யின்றியற் புதம்பல நிகழ்வுறச் சரித்து (11)

(சோழநாட்டிலுளள) திங்களூரில (வசித்துவந்த) அப்பூதிநாயனுருடைய குமானை (பாமபுசுடிதது விடம தலைகேறியிறநதவனை) "ஒன்றுகொலாமவா சிநதையுயாவரை" எனும பதிகமபாடி விடநதனைநீககி (உயிாபபிததும) அபபா சுவாமிகள, நாவுககரசராகும என று யாவரும கூறுமபடியான இயறபெயரை யடைநதும, பாாவதிபாகா எழுந்தருளியுள்ள திருவருட்டுறை முதலிய பல தலஙகளையடைநது தமிழ்ப்பதிகமபாடி, ஒருசஙகையுமில்லாமல பல அறபுதஙகள தோன்றுமாறு செய்தும

சீத மேவுகா விரியிரு கரையினுஞ் சிறநத
மாது பாதிய ரெழுநதருள் பதிதொறு மன்னி
யோது செந்தமிழ் வேதமாந திருமுறை யுரைததங
காத ரத்துழ வாரமும் புரியுநா வரையர். (12)

பாாவதிபாகா எழுந்தருளியுள்ள குளிாச்சிபொருந்திய காவிரிநதியின் இருகரையோாஙகளிலிருககும க்ஷேததிாஙகள்தோறும சென்று யாவரும் ஓதத்தகுநத செந்தமிழ்வேதமாம திருமுறையைத திருவாய்மலாநது, அவ்வாலயங்கள் தோறும அன்புடன் உழவாரபபணியையும் செயதுகொண்டிருநதாா நாவுககரசா

வேறு.

ஆச்சரிய வாணைக்கா வதினுஞ் சிராமலையி
னீச்சரையு மேததி யெவரும் புகழ்தெய்வ

பாசசிலாச சிரமஞ்சென் றங்கடியார் பரவுமணா
கேச்சுரத்தைச் சூழ்ந்தங் கிறைஞ்சித் தமிழ்பாடி. (13)

ஆச்சாய ஸ்தலமான திருவானைக்காவிலும் திரிசிராப்பள்ளியிலும் எழுந்தருளியுள்ள பெருமானைத் தரிசித்துப் பதிகம்பாடி, யாவரும் புகழ்ந்துபேசும் திருப்பாசசிலாச்சிராமத்திற்குச் சென்று சிவனடியார் ஸ்தோத்திரிக்கும் பெருமானைப் பணிந்து பதிகம்பாடி (பிறகு)

தேவர்திரு மாலயனிந் திரனண்டர் முதலோர்
யாவரையு முணர்வந்த வாலமுண்ட தேவுமையும்
கோயிலுறும் பைஞ்ஞீலி கூடியிறைஞ் சுதற்கா
யாவலுட னுடிவடக் காகிநடந் தேகினரால் (14)

பிரமவிஷ்ணுக்கள், இந்திராதிதேவர்கள், அஷ்டதிக்குப் பாலகர் முதலிய யாவரையும் ஒருசேரக் கொல்லப்புகுந்த ஆலகால விஷத்தை அவர்கள் வேண்டுகோளிரங்கி) பானஞ்செய்து (அவர்களைக் காப்பாற்றிய) மகாதேவன் திருக்கோயில் கொண்ட திருப்பைஞ்ஞீலியடைந்து வணங்குவதற்கு ஆவலுடையவராய் வடதிசைநோக்கி நடப்பாராயினார்

சொல்லிறைவ ரன்பு துணையாய் நடப்பச்செல்லிற்
கல்லதர்சென் றெய்த்து வருங்காரின வழிபருக்கி
மொல்லைத்தரு நீழற்ட பூண்டாக்கிக் கட்டமுந்தேந்தி
வல்லவராய்ச் செஞ்சடையு மாறுமழு வுகைந்து (15)

நாவுக்கரசர், பகல் உச்சிப்போதில் சிறுபாறைகள் நிறைந்தவழியில் நடந்து சென்றமையாலும், (சூரியனது கிரணம் தாங்கமுடியாமையாலும்,) மிகவும் சோர்வடைந்து, திருப்பைஞ்ஞீலி (பெருமானிடம் தானகொண்டுள்ள) அன்பையே துணையாகக்கொண்டு (தேகம் சோரினும் உளச்சோர்வின்றி) வருகின்ற காட்டுவழியில் (அன்பர்க்கிரங்குதம்மண்ணல்) அதிவிரைவில் நிழலைத்தரும் சோலையும், தடாகமொன்றினையும் உண்டாக்கி, மானும் மழுவையும் மறைத்து (எப்போதும் தமடியவர் பசிப்பிணிதீர்ப்பதில்) வல்லவரான பெருமான் பொதிசோற்றைத் தோளிலே தாங்கி

பூதி யணிந்துக ண்டி பூண்டுமுந்நூல் மார்பிலங்க
வாதிசிவ வேதியரா யாங்குற்றவ வன்பரைப்பார்த்
தோதுசிவ வேடமுடை யீரவருந்தி யெங்குப்
போதிரென்ற வேதியர்க்கப் போதிலன்ப ரீதுசொல்வார் (16)

விபூதியணிந்தும், உருத்திராக்கம் பூண்டும், முப்புரிநூல் மார்பில விளங்கவும், பிராமணராயத் திருக்கோலங்கொண்டு, அவ்விடத்தடைந்து அப்பரை நோக்கி, (வேதாகமங்களிற் சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற

சிவவேடமுடையவரே! இவ்வளவு வருந்தி யெங்கு செல்கின்றீர்? என்று கேட்க வேதியராக வந்த சிவபெருமானை நோக்கி அன்பரான அப்பர் பின்வருமாறு கூறினார்.

விண்பரவு பைஞ்ஞீலி மேவலென்று ரிப்போதிச்சோ
றுண்பிரிதி னீர்அருந்தி யுற்றிளைப்பா றிச்செலுவீ
ரெண்பெருமைப் பைஞ்ஞீலி யிராக்கருச்சகாயாம
வொண்பொடியீ ரென்றுரைசொல் லேவந்தரவை செய்துவந்தார். ()

தேவர்களெல்லாம் துதிக்கின்ற பைஞ்ஞீலிக்குச் செல்கின்றேன் என்றார் (அதுகேட்ட பரமர்) பரிசுத்தமான திருவெண்ணீறணிந்துள்ள அப்பரே, யாம் யாவரும் மதித்துப் போற்றத்தக்க திருப்பைஞ்ஞீலியில் (திருக்கோயில் கொண்ட) பெருமானைப் பூஜிக்கும் அர்ச்சகரும் (நீர் பைஞ்ஞீலி செல்வதாயின்) இக்கட்டமுதையுண்டு ஜலம் அருந்திச் சற்று உட்கார்ந்து இளைப்பாறிவிட்டுச் செல்லும் என்றார் (அங்ஙனமே) நாவுக்கரசர் செய்து, (இளைப்பு நீங்கி) ஆனந்த பரிதரானார்.

வேறு.

உண்டுவந்தெழுந் துடன்கொடங் கார்ச்சகர் முன்பாகக்
கொண்டுசெல்லவு மன்பர்பின் போதவே குவடாய்க்
கண்டகோபுர வாயிலைக் கண்டனர் காணு
மண்டர் நாயக னருச்சக ராய பிஞ்ஞகனை (18)

(அவ்வண்ணம் அன்னம்) உண்டு களித்தெழுந்தபின் அப்பரை யழைத்துக்கொண்டு (வழிகாட்டியாக) அர்ச்சகர் (பரமர்) முன்செல்லவும், அன்பர் பின் சென்று (திருப்பைஞ்ஞீலியை யடைந்து) மலைச்சிகரம் போன்றுள்ள கோபுர வாயிலைக் கண்டார் (அக்கணத்தே) அருச்சகவடிவத்துடன் முன்சென்ற தேவர்களுக்கெல்லாம் நாயகராயபிரானைக் (திருவுருக்கரந்திட) கண்டு

ஆதி யந்தமத் தியுமிலா னரியபைஞ் ஞீலி
நாத னேபுர நகைத்தெரி செய்தவா நாயேன்
மீது வெம்பிழை மேவுற வேதனமா லறியாப்
பாத நோவவந் திவ்வண்ம புரிவதோ பரம (19)

(வந்தவர் நீவ்வனேசா என்பதை யுணர்ந்து கம்பித்ததுடன் திருவருளை வியந்து) ஆதியந்தமியாந்தாகிதலுய, யாவராலும் அறிதற்கரிய திருப்பைஞ்ஞீலியில் எழுந்தருளியிருக்கும் நாதா, (நீயாகளது) முப்புரத்தைச் சிரித்த புண்ணிய சிறியேன்மீது கொடிய குற்றம் பொருந்துமபடி பிரம விஷ்ணுக்களாலும் அறியவொண்ணாத (ஒப்பற்ற) திருவடிகள் நோக எழுந்தருளிவந்து (இத்தகைய அற்புதங்களைச்) செய்யத்தகுமோ பரமேச?

என்னைநின் றுணர்த்தி யும்பினை யீறிலா தவநின்
றன்னைக் காணுறத் தரிசனந் தந்தனை தரியாப்
பொன்னைப் பூமியைப் பூவையர்ச் சாரவோ வடியேற்
கன்னை யப்பனீ யன்றியா ரெளிந்தனை யையா (20)

என் எதிரில் எழுந்தருளி நின்று ஞானமூட்டி, தேவரீரைத் தரிசிக்கும்படி காக்ஷியளித்தீர் (இவ்வுலகத்தி லின்பங்களையோ) மண், பெண், பொன் என்னும் அழியும் பொருள்களை அடையவும் விரும்புவேனோ? அடியேனுக்குத் தாயும் தந்தையும் தேவரீரேயன்றி வேறு யாருளர் ஐயனே! (அங்ஙனம் இருக்க, என்னைத் தனியே விட்டு) இவ்வாறு இருக்கவைத்தல் (நியாயமோ)!

என்றி றைஞ்சியாங் கெழுந்தடி யார்குழா நீண்டக்
குன்ற வில்லிவாழ் சினகரம் வலங்கொண்டு குறுகி
நின்று மத்தமா மலர்புனை திருமுடி யிருக்கின்
மன்று ளாடிய வாணுதற் கண்ணியை வாழ்த்தி (21)

என்று இவ்வாறு ஸ்தோத்திரித்து, சிவனடியார் புடை சூழ்ந்துவர மேருமலையை வில்லாகவுடைய பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்தைப் பிரதக்ஷிணம் செய்து (இறைவனது சந்நிதானம்) அடைந்து (எதிர்) நின்று "மத்த மாமலர் சூடியமைந்தனே" என்னும் திருப்பதிகத்தால் ஊர்த்தின சபையில் (பஞ்ச கிருத்திய) தாண்டவம் புரியும் ஊர்த்தின சபாபதியையும் வாணுதற் கண்ணியையும் துதித்து

ஈறி லாதவ வெளியவர்க் கருள்பவ வொற்கா
யாற டைந்தடி யோர்வரல் லணைபொடுங் கடிசோ
சோறு தந்தவ தொன்முனிக் காடலைத் தொழுதார்
நீறு கண்டவ நீலகண் டாவென நிகழ்த்தி (22)

(முதலும்) முடிவுமில்லாதவனே, (பயமின்றி) எளியவர்களுக்கருள் செய்பவனே, அடியேன் பொருட்டு (உலகும் முளரும் நிறைந்த) இவ்வழியில் பாதம் நோக நடந்துவந்து (யான் பசித்தபோது நோக்கி) தலையணியினோடு பொதி சோறளித்த பெருங்கருணை யுடையவரோ? (துறையிரந்து வேண்டிய) மிகப் பெரியவரான பதஞ்சலிமுனிவர் தரிசிப்பதற்காகத் தாண்டவம் புரியும் தயாபர (திருவருளுக்கு மாறுபட்டு) வணங்காதவர்களை (மறக்கருணையால்) பஸ்பமாக்கும் (மாதேவரே) திருநீலகண்டரே எனத் துதித்து

சேவை செய்தவண் சிலபகல் திருப்பணி புரிந்தங்
காவி நாதனை விடைகொடன் புறங்கடந் தகலா
வாவ லோடுமுந் தூரடந் தழற்கிரி காஞ்சி
மேவி யொற்றிகா ளத்திகே தாரமு மேய (23)

(சதா இறைவனை) சேவைசெய்து திருப்பைஞ்ஞீலியிலேயே சிலநாள் உழவாரத் தொண்டுசெய்து கொண்டிருந்தார். (பின் சிலநாள்பொறுத்து மற்றுமுள்ள க்ஷேத்திரங்களைத் தெரிசிக்கவிரும்பி) தனதுயிர்க் குயிராயுள்ள பரமபதியினிடம், கொண்ட அன்பின் மிகுதியால் பிரியாவிடைகொண்டு, திருவண்ணாமலை, திருக்காஞ்சி முதலிய க்ஷேத்திரங்களை யடைந்து, திருவொற்றியூர், திருக்காளத்தி, திருக்கேதாரம் முதலிய க்ஷேத்திரங்களில் எழுந்தருளியுள்ள

மங்கை பங்கரைப் பணிந்துசெந் தமிழ்முறை வழுத்தி
யங்கை கால்வருந் துறமலை வனங்கடந் தரிய
கங்கை வேணிய ரெழுந்தருள் கைலையை நாடி
யெங்க ளப்பர்சென் றேத்துற வன்பினை யினரால் (24)

பார்வதி பாகரான பரமபதியைப்பணிந்து செந்தமிழ்ப் பாக்களான தேவாரத் திருமுறைகளால் துதித்து அருமையான கங்கையணிந்த சடாமுடியுடைய பெருமான் எழுந்தருளியகைலையைக்கண்டு தெரிசிக்கவிரும்பி (பலகாதம் நடந்து பாலைவனம் குறுக்கிடவும்) நடந்து செல்வதால், பாதங்கள் தேய்ந்து உதிரப்பிரவாகமாகவும், (கைகளால் ஊன்றிச்சென்று) கைகளும் (மேற்கூறிய நிலைமையடைய) மார்பினால் நகர்ந்து மார்பும் தேய்ந்து வருந்திப்பின் பாலைவனத்தையுங்கடந்து, சோர்வின்றி அன்பொன்றையே துணையாகக் கொண்டு சென்றார்.

## வேறு.

அன்னைநிகர் தாண்டகவேந் தாயினமெய் யன்பருக்கா யருளுந்
தீர்த்த, முண்ணவிம்மை நோயகலு மறுமைநோ யேழ்கினர்க்கங்
கோடு மென்று, மண்ணுறுசித் திரைசதையத் தவிணைமூர்செய்
தவ்வுரிமை நடாத்தியன்போ, டெண்ணுறுநம் பரம்பரடி யிறைஞ்சு
வோர் பெறும்பயனிங் கிசைப்பார் யாரே (25)

பக்தியிற்சிறந்த திருத்தாண்டகவேந்தரான உண்மைத் தொண்டருக்காக அருளப்பட்ட தீர்த்த முண்ணுவோர்கட்கு இம்மையிலேவரும் பிறவிநோய் முதலியன நீங்கும் இதில ஸ்நானஞ்செய்தவர்கள் மறுமையிலவரும் அழியும் பதவிகளான சொர்க்கம் முதலியனவின்றிச் சிவசொரூபத்தில் இரண்டறக்கலப்பர் சித்திரைமாதத்தில் வரும் சதையநக்ஷத்திரத்தில் நமஅப்பரை எழுந்தருளச்செய்து திருவிழா நடாத்தி அன்புடன் வணங்குவாரானால், அவர்கள் அடையப்பெறும் பெரும்பயனை யாவரெடுத்துக் கூறவல்லவர்கள்

திருச்சிற்றம்பலம்.

அப்பரை நினைந்து அருள் பெறுவோமே. பாக்கள் வெகு சுருக்கமாயிருப்பதனால் கூடியமட்டில் உரையெழுதநேர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்திற் காண்க

திருப்பைஞ்ஞீலி ஸ்தல புராணம் முற்றிற்று.